294

தஃலீமுல் இஸ்லாம்

ஹானபிய்யா

(பல புண்ணியஸ்தலப் படங்களுடன் அடங்கியது)

இதனை

சென்னை திருவல்லிக்கேணி

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது சாஹிபு குமாரர்

ஹாஜி M. S. A. மீரான் சாஹிபு அவர்களால்

உத்தமபாளையம், ஹாஜி மௌலவி

S. S. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு

பாக்கவி அவர்களைக்கொண்டு எழுதுவித்து,

தனது சொந்தப் பொருளைக்கொண்டு

ஹாஜி மீரான் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

முதற் பதிப்பு

1949 [ரூ. 3—12—0

Registered Copy-Right.

Q7
ல49
77914

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUL 1949
MADRAS

تعليم الإسلام

தஃலீமுல் இஸ்லாம்

ஹனபிய்யா

(பல புண்ணியஸ்தலப் படங்களுடன் அடங்கியது)

இதனை

சென்னை திருவல்லிக்கேணி

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது சாஹிபு குமாரர்

ஹாஜி M. S. A. மீரூன் சாஹிபு அவர்களால்

உத்தமபாளையம், ஹாஜி மௌலவி

S. S. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு

பாக்கவி அவர்களைக்கொண்டு எழுதுவித்து,

தனது சொந்தப் பொருளைக்கொண்டு

ஹாஜி மீரூன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

முதற் பதிப்பு

இதன் விலை] 1949 [ரூ. 3—12—0

Registered Copy-Right.

PRINTED AT
THE HAJEE MEERAN PRESS,
TRIPLICANE, MADRAS.

மஸ்ஜித் குபா—மதீனு முனவ்வரா

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

முகவுரை

—o—

சகோதரர்களே!

இஸ்லாம் மதம் உலகுக்குப் பொதுவான மதம். குறிப்பிட்ட தேசத்துக்கோ, வர்க்கத்துக்கோ, ஜாதிக்கோ சொந்தமல்ல, மனுஜின் ஆகிய இரு வர்க்கத்தினரும் இம்மதத்தை விசுவாசித்து இம்மை மறுமைப்பேற்றை அடையும் பொருட்டு நபிமார்கள் மூலமாக இறைவனு லருளப்பட்ட மதம் இது ஒன்றுதான். ஆனால், இம்மதம் அந்தந்த நபிமார்களது காலத்தில் இருந்த நிலைக்குத் தக்கவாறு சட்டதிட்டங்களிலும் அனுஷ்டானங்களிலும் சுருக்கமாக இருந்தது, ஆதலால், இது ஷரீஅத் என்ற மாற்றுப் பெயரால், அழைக்கப்பட்டு வந்தது. இம் மாற்றுப் பெயாதான் இற்றை நாளில் நபிமவரால் கிறிஸ்து மதம், முஹம்மதிய மதம், யூத மதம் என்று சொல்லப் படுபவை. இவைகளில் யூத மதம், கிறிஸ்து மதம் போன்றவைகளைப் பற்றி இங்கு எழுதவேண்டிய அவசிய மிலலை யாதலால், அதனை விட்டுவிட்டு முஹம்மதிய மதத்தைப் பற்றி சிறிது குறிப்பிடுவாம். இம்முஹம்மதிய மதத்துக்கு "ஷரீஅத்தே முஹம்மதிய்யா" என்று அறபியில் பெயர். இஸ்லாம் மதம் என்பது ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் முதற்கொண்டு ஹஜ்றத் முஹம்

மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈருகவுள்ள எல்லா நபிமார்களாலும் போதிக்கப் பட்ட தொன்மைவாய்ந்த மதம் என்றாலும், ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் காலத்தில் போதிக்கப்பட்ட இஸ்லாம் மதமும், ஹஜ்றத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் போதித்த இஸ்லாம் மதமும் அஸ்திபாரக் கொள்கையில் ஒன்றாக இருப்பினும், அனுஷ்டான முறை யிலும் ஏவல் விலக்கல்களிலும் மிகவும் வித்தியாசப் பட்டிருக்கின்றன. இவ்வித்தியாசத்தை அனுசரித்தே முஹம்மதிய மதம் புதிய மதம் என்றும், கடைசி மதம் என்றும் சிலர் கூறுவர். இஸ்லாம் ஒன்றாயினும் ஷரீஅத்து கள் வெவ்வேறாக இருப்பதால் இச்சிலர் கூறுவதை குற்றம் என்று கூறுவதற்கில்லை.

நிற்க, ஷரீஅத்தே முஹம்மதியா என்னும் முஹம் மதிய மார்க்கம் இவ்வுலகுக்கு வேண்டிய கொள்கை, சட்டம், திட்டம், தொழில், வர்த்தகம், விவசாயம், விஞ்ஞானம் சகல துறைகளிலும் மனிதர்களுக்கு வழி காட்டக் கூடிய சம்பூரண மதம், இனியில்லா வண்ணம் அது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டது.

இம்மதத்துக்கு அஸ்திபாரம் திருகுர்ஆனும் ஹதீதும், இஜ்மாஉ உம்மாவும், கியாஸும்தான். என்றாலும், இவைகளை யாவரும் உணர்ந்துகொள்ள முடியாதாகையால், முற்காலத்திலிருந்த பேரறிஞர்கள் இதன் சட்ட திட்டங் களை தொகை வகையாக அமைத்தனர். இவைகளுக்கு பிக்ஹுமஸ் அலாக்கள் என்று பெயர். இவ்வாறு அமைத்த பெரியார்கள் பலர். என்றாலும், அவர்களில்

தலை சிறந்தவர்கள் இமாம் அபூஹனிபத்த நுஃமானுப்னு தாபித் (றஹ்), இமாம் மாலிக் (றஹ்), இமாம் முஹம்மதுப்னு இத்ரீஸ்ஷாபிஈ (றஹ்), இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் (றஹ்) ஆகியவர்களாவார்கள்.

இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் மேற் கூறப்பட்ட நால்வரில் முதலாமவரான இமாம் அபூ ஹனீபத்த நுஃமானுப்னு தாபித் (றஹ்) அவர்களும், அவரது சிஷ்யர்களும், இயற்றிய சட்ட திட்டங்களைச் சேர்ந்தவை. நம் நாட்டு முஸ்லிம்களில் பெரும்பாலர் இவ்விமாம் அவர்களைப் பின்பற்றும் ஹனபீ மதுஹபினராதலால், இந்த நூலுக்கு "தஃலீமுல் இஸ்லாம்" ஹனபிய்யா என்று பெயரிட்டுள்ளோம். இமாம் மாலிக் (றஹ்) அவர்களது மாலிக் மதுஹபையும், இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் (றஹ்) அவர்களது ஹன்பலி மதுஹபையும் பின்பற்றுபவர்கள் இந்நாட்டில் இல்லை. ஆதலால், அவர்களியற்றிய சட்ட திட்டங்களைக் குறித்து புத்தகங்கள் எழுதினாலும், அதனை வாங்கிப் படிப்போர் இருக்க மாட்டார்களாதலால், அவர்களது சட்ட திட்டங்களை இங்கு கூறவில்லை.

இமாம் முஹம்மதுப்னு இத்ரீஸ்ஷாபிஈ (றஹ்) அவர்களது ஷாபிஈ மதுஹபை பின்பற்றும் நம்மவர் இந்நாட்டில் இருக்கின்றனர். அவர்களுக்கு அம்மத்ஹபின் சட்ட திட்டங்கள் தேவைதான். ஆதலின், அவைகளையும் இக்கிரந்தத்தில் சேர்த்து அச்சிடலாமென்றாலும், புத்தகம் மிகப் பெரிதாகிவிடும். ஆதலால், ஷாபிஈ மதுஹபின் சட்ட திட்டங்களைத் தனி நூலாகப் பிரித்து வெளியிட முன் வந்துள்ளோம்.

இக்கிரந்தத்தில் ஹனபி மதுஹபுக்குள்ள பிக்ஹுமஸ் அலாக்கள் மட்டிலும் தான் எழுதப்பட்டுள்ளன, என்றாலும், இஸ்லாம் மதத்திலுள்ள ஐம் பெருங் கடமைகளான தவ்ஹீத், தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு ஆகியவை சம்பந்தமான சட்டங்கள் மட்டுமே சுருக்கமாக இதில் விரிக்கப்பட்டிருக்கின்றன. வர்த்தகம், தொழில், விவசாயம்போன்ற இதர விஷயங்கள் சம்பந்தமான சட்டங் களை நாம் இங்கெழுதவில்லை. அன்பர்களது ஆதரவு இருந்தால், அவைகளை தனிப் புத்தகமாகவோ அல்லது இதன் இரண்டாம் பதிப்பை விரிவாக்கியோ எழுதலாம்.

இக்கிரந்தத்தின் ஆரம்பத்தில் தவ்ஹீதைக் குறித்து அதாவது இஸ்லாமிய கொள்கையைக் குறித்து எழுதப் பட்டிருக்கிறது. கொள்கை சம்பந்தமாக அறிஞர்களுக் கிடையில் எத்தனையோ விதமான சர்ச்சைகள் நிகழ்ந் திருக்கின்றன. அவை யத்தனையும் எழுதுவது சாத்தியமு மில்லை. எழுதினாலும் பொது ஜனங்களுக்கு உபயோக மாகவுமில்லை என நாம் கருதி சர்ச்சைகளை விடுத்து அசல் மஸ்அலாக்களை மட்டிலும் இக்காலத்துக்கேற்ற முறையில் எழுதியுள்ளோம்.

அப்புறம் முறையே தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு ஆகிய கிரியைகள் சம்பந்தமான மஸ்அலாக்கள் எழுதப்பட்டுள்ளன. இடை யிடையே இவ்வணக்கங்களி லுள்ள இம்மை மறுமைப் பிரயோஜனங்களும், தத்துவங் களும், ஆத்மார்த்த உன்னதங்களும் ஓரளவு விளக்கப் பட்டுள்ளன.

இறுதியாக ஹஜ்ஜுக்குச் சொல்வோர் அங்கு தவாபு ஜியாரத்து முதலியவைகளைச் செய்யும்போதும் ஓதுகிற துஆக்கள் முதலியவைகளை அறபியிலும் தமிழிலும் எழுதி அதன் மொழி பெயர்ப்பையும் சேர்த்து அனுபந்தமாக இணைக்கப்பட்டது. தொழுகையில் திரு குர்ஆனை ஓத வேண்டிய அவசியமிருப்பதால், பெரும்பாலும் முஸ்லிம் கள் தொழுகையில் ஓதுகிற திரு குர்ஆனின் சில ஸூறத்து கள் அறபியிலும் தமிழிலுமாக எழுதி, அதன் மொழி பெயர்ப்பும் கருத்துரையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து 'இஸ்லாமிய வணக்கம் சம்பந்தமானவைகள் இந்த நூலில் போதியளவு, யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன.

எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தபோதினும் மனிதன் தவறுவது இயற்கையே. ஆதலால், எம்மையறியாமலே இந்நூலில் எத்தனையோ விதமான தவறுகளும் குறைபாடு களும் இருக்கலாம், இவைகளைக் கண்ணுறும் அன்பர்கள் இக்கிரந்தத்தை வெளியிடுவோர்களான ஹாஜி மீரான் பிரஸ் சொந்தக்காரர் ஹாஜீ M. S. A. மீரான் சாஹிப் அவர்களுக்கு எழுதினால் அடுத்த பதிப்பில் அவைகளைக் கவனித்து திருத்திக் கொள்வார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அன்றியும் அச்சுப் பிழைகளும் இதில் இருக்கக் கூடும். அவைகளையும் அன்பர்கள் அறிவித்தால் திருத்திக்கொள்ள சித்தமாக இருக்கிறோம்.

இந்நூலை எழுத எனக்குதவி புரிந்த அறிஞர்களுக்கும் அன்பர்களுக்கும், இந்நூலை வெளியிடுவதன் மூலம் சமூக

சேவை செய்ய எமக்கு சந்தர்ப்பமளித்த நண்பர் ஹாஜீ M. S. A. மீரான் சாஹிப் அவர்களுக்கும் எமது நன்றி உரித்ததாகுக. இந்நூல் எங்கும் பரவி, யாவருக்கும் பிரயோஜனமாக இருக்க இறைவன் அருபாலிக்கவும், அவனது சன்மார்க்கத்துக்கு யாம் செய்த இத்திருப் பணியை அங்கீகரிக்கவும் அவ்வல்லோனை இரைஞ்சு கின்றோம்.

ஊழியன்,

S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ

உத்தம பாளையம்
10—6—49

ஆசிரியன்.

பதிப்புரை

—o—

சோதரீர் !

எனது தந்தை சென்னை திருவல்லிக்கேணி, பிரபல புத்தக வியாபாரியான ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது லெப்பை(மர்ஹூம்) அவர்கள் காலந்தொடுத்து நீண்டகால மாக நாங்கள் புத்தக வியாபாரம் செய்துகொண்டிருந்தோம் என்பது தெரிந்த விஷயம். மதிப்புக்குரிய எங்கள் தந்தை அவர்கள் வபாத்தான பின்னர், நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டதுடன் ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது அண்டு சன்ஸ் என்ற விலாசத்தில் நடந்துவந்த புஸ்தக வியாபாரத்தை எமது சகோதரர்கள் ஏற்றுக்கொண்டதால், அந்த விலாசத்தில் நாம் புத்தக வியாபாரம் செய்வதற் கில்லை. என்றாலும், இத்தொழிலில் எமக்கு நீண்டகால அனுபோக மிருப்பதை முன்னிட்டு, எமது சொந்த விலா சத்தில் புத்தக வியாபாரத்தைத் தொடங்கி, "ஹாஜி மீரான் பிரஸ்" என்ற பெயரால் ஒரு அச்சகத்தையும் ஸ்தாபித்து, பல இஸ்லாமிய கிரந்தங்களை தமிழ் நாட்டு பிரபல நூலாசிரியரான உத்தமபாளையம் ஹாஜி மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு பாக்கவீ அவர் களைக்கொண்டு எழுதுவித்து, அவைகளை எமது சொந்த அச்சகத்திலேயே பிரின்ட் செய்து வெளியிட முன்வந்து முதலாவதாக, "தஃலீமுல் இஸ்லாம்" என்ற இக்கிரந் தத்தை வெளியிடுகிறோம்.

இக்காலத்துக்கேற்றவாறு நவீன முறையில் இஸ்லாமிய கிரந்தங்களை அச்சிட்டு, முடிந்தவரை சரசமான விலைக்கு விற்கவேண்டும் என்பதும் பொது ஜனங்கள் அதிகமாக பிரயோஜனம் அடையவேண்டும் என்பதும் எமது நோக்கம். இக்கிரந்தத்தையும் கூட இன்னும் குறைந்த விலையில் வினியோகிப்பதே எமது எண்ணமாயினும் அகவிலையும், தொழிலாளர் கூலியும் அதிகமாகவுள்ள இக்காலத்தில் இதனைப் பார்க்கினும் குறைந்த விலை ஏற்படுத்த இடம் கிடைக்கவில்லை. ஆகையால் எல்லா வியாபாரிகளும், ஆலிம் உலமாக்களும், பொதுஜனங்களும் எம்மை ஆதரித்து, நம் சமூகத்துக்கு பணி செய்ய முன் வந்துள்ள எமக்கு உற்சாகமூட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம். இக்கிரந்தத்தை வெளியிட எமக்கு ஆலோசனைகள் பல கூறிய நண்பர்களுக்கும், எமது வேண்டுகோளுக்கு இணங்கி இக்கிரந்தத்தை எழுதித் தந்த பேராசிரியர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி. இக்கிரந்தத்தில் குறைகள் பல இருக்கலாம். அவைகளைக் கண்ணுறும் அன்பர்கள் எமக்கறிவித்தால் இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் அவைகளைத் திருத்தி வெளியிட சித்தமாக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்:

ஹாஜி M. S. A. மீரான்

S/o, ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது லெப்பை.

பொருளடக்கம்

நெ.	விஷயம்	பக்கம்
1	சர்வ புகழும் அல்லாஹ்விற்கே தகும் ...	1
2	சிருஷ்டிப் பொருள்கள் கடமை	2
3	இறைவனை வணங்குவ தெங்ஙனம்?	4
4	இஸ்லாம் மதம்	5
5	சம்பூர்ண மதம்	9
6	இஸ்லாமின் பார்லுகள்	12
7	இஸ்லாம் மதக்கொள்கைகள்	13
8	ஈமான் முஜ்மல்	13
9	ஈமான் முபஸ்ஸல்	14
10	அல்லாஹுத் தஆலா	15
11	மலக்குகள்	16
12	நபிமார்கள்	18
13	ஹஜ்ரத் ஆதம் (அலை)	19
14	இப்லீஸ்	20
15	இப்லீஸ் கலைத்தல்	21
16	மனித வர்க்கத்தின் முதல் நபி....	23
17	ஹஜ்ரத் நூஹு (அலை) அவர்கள்	23
18	ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள்	24
19	ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள்	26
20	பனீ இஸ்ராயீல்	28
21	ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள்	29
22	ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்கள்	31
23	ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள்	31
24	ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள்	33
25	வேதங்கள்	35
26	கியாமத்து நாள்	36
27	தக்தீர்	37
28	மனிதன்	38

நே.	விஷயம்	பக்கம்
	அர்க்கானுல் இஸ்லாம்	
29	இஸ்லாமின் வாஜிபுகள்	40
30	இஸ்லாமின் ஸுன்னத்துகள்....	40
	முதலாவது ருக்னு	
31	கலிமாக்கள்	41
	இரண்டாவது ருக்னு	
32	சுத்தம்	44
33	ஜலம்	46
34	எச்சல்	48
35	கிணறு	49
36	இஸ்தின்ஜா செய்தல்	52
37	அசங்கிதங்கள்	56
38	ஒலுச் செய்யும் விதம்	57
	அஹ்காமுல் ஒலு	
39	ஒலுவின் பர்லுகள்	61
40	ஒலுவின் ஷர்த்துகள்	62
41	ஒலு நிறைவேறுதற்குரிய ஷர்த்துகள்	63
42	சில முக்கிய கடமைகள்	64
43	ஒலுவின் ஸுன்னத்துகள்	64
44	ஒலுவின் அதபுகள்	66
45	ஒலுவின் மக்றாஹுகள்	67
46	ஒலுவின் முறிச்சல்கள்	68
47	ஒலுவை முறிக்காத காரியங்கள்	71
48	ஒலுவின் வகைகள்	72
49	ஸுனம்	73
50	ஸுனம் செய்யக்கடமையாகும் சந்தர்ப்பங்கள்	74
51	ஸுனத்தின் பர்லுகள்	76
52	ஸுனத்தின் ஸுன்னத்துகள்	77
53	சில பொது விதிகள்	78
54	ஸுன்னத்தான ஸுனங்கள்	79
55	முஸ்தஹப்பான ஸுனங்கள்	79

நெ.	விஷயம்	டக்கம்
56	ஜனுபாளிகள்மீது ஹறுமான காரியங்கள்	80
57	தயம்மும்	80
58	தயம்மும் செய்யும் முறை	81
59	தயம்முமின் பர்லுகள்	82
60	தயம்முமின் ருக்னுகள்	83
61	தயம்முமின் ஸுன்னத்துகள்....	83
62	தயம்முமை முரிக்கும் காரியங்கள்	83
63	தொடர்ந்த வியாதியஸ்தர்கள்	84
64	மாதாந்த ருது (ஹைலு)	84
65	பிரசவ ருது	85
66	ஜனுபத்துக்காரர்கள், ஹைலு நிபாஸுக் காரர்கள் ஒலுவில்லாதவர்கள் செய்யக் கூடாத காரியங்கள்	86
67	தொழுகை	87
68	அசங்கிதம் (நஜீஸ்)	101
69	தொழுகையின் வகைகள்	103
70	தொழுகையின் நேரங்களும் ரக்க அத்துகளும்	103
71	வெறுக்கத்தக்க நேரங்கள்	119
72	விலக்கலான நேரங்கள்	120
73	பாங்கு சொல்லல்	121
74	பாங்கு சொல்லும் முறை	124
75	பாங்குக்கு பதில் கூறல்	128
76	இகாமத்துச் சொல்லல்	129
77	தொழுகும் முறை	130
78	ருக்கூஉ செய்யும் விதம்	134
79	தொழுகையின் ஷர்த்துகள்	148
80	தொழுகையின் ருக்னுகள்	152
81	தொழுகையின் வாஜிபுகள்	156
82	தொழுகையின் ஸுன்னத்துகள்	159
83	தொழுகையின் அதபுகள்	164
84	தொழுகையின் மக்றாஹுகள்	165
85	தொழுகையின் முறிச்சல்கள்	168

நெ.	விஷயம்	பக்கம்
86	நோயாளிகள் தொழுதல்	170
87	பிரயாணிகள் தொழுகை	171
88	ஸஜ்தா ஸஹ்வு	173
89	ஸஜ்தா திலாவத்	174
90	இமாம் ஜமாஅத்து	175
91	இமாமாக நிற்பவருக்கு இருக்கவேண்டிய அம்சங்கள்	176
92	இமாமைப் பின்பற்றுவதற்குரிய ஷர்த்துகள்	177
93	மக்றூஹான இமாம்கள	178
94	வித்றுத் தொழுகை	182
95	ஜும்ஆத் தொழுகையின் நிய்யத்துகள்	185
96	ஜும்ஆ பர்லாவதற்குரிய ஷர்த்துகள்	190
97	ஜும்ஆ நிறைவேறுதற்குரிய ஷர்த்துகள்....	191
98	ஜும்ஆவின் ஸுன்னத்துகள்....	192
99	ஜும்ஆத் தொழுகையின் ரக்க அத்துகள்	192
100	தராவீஹ் தொழுகையின் நிய்யத்து	193
101	ஜனாஸா	194
102	மையித்தை குளிப்பாட்டுதல்	195
103	கபனிடுதல்	197
104	ஜனாஸாத் தொழுகை	198
105	ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றும்முறை	200
106	ஜனாஸா தொழுவிக்க அருகதையுள்ளவர்கள்	204
107	பெரு நாள்கள்	205
108	நோன்புப் பெருநாள்	206
109	பக்ரீத் பெருநாள்	207
110	பெருநாள் தொழுகை	210
111	பெருநாள் தொழுகையின் காலம்	211
112	பெருநாள் தொழுகைகளின் ஷர்த்துகள்	212
113	பெருநாள் தொழுகைகளின் முஸ்தஹப்புகள்	212
114	பெருநாள் தொழுகையின் மக்றூஹுகள்	213
115	பித்று ஸதக்கா	213
116	தக்பீறுத் தஷ்ரீக்	214

நெ.	விஷயம்	பக்கம்
117	தக்பீறுத் தஷ்ரீக் ஓதும் விதம்	215
118	குர்பானி	215
119	கலாத் தொழுகை	219
120	சூரிய சந்திர கிரணங்கள்	221
121	திடுக்கமான நேரங்களின் தொழுகைகள்	223
122	மழைத் தொழுகை	224
123	தஹிய்யத்துல் மஸ்ஜித்	224
124	ஒலுவு நபில்	225
125	ஸலாத்துல் இஸ்திகாராவின் துஆ	226
126	ஜியாரத்துல் குபூர்	231
127	கப்ராளிகளுக்கு ஓதும் துஆ	235
128	நோன்பு	238
129	நோன்பு ஈமானின் கேடயமாகும்	239
130	நோன்பின் வகைகள்	243
131	நோன்புவைக்க கடமைப்பட்டவர்கள்	244
132	நோன்பின் ஷர்த்துகள்	245
133	நோன்பை நிறைவேற்றுவது கடமையாவ தற்குரிய ஷர்த்துகள்	245
134	நோன்பு நிவைவேறுவதற்குள்ள ஷர்த்துகள்	245
135	நோன்பின் ருக்னுகள்	246
136	நிய்யத்துச் செய்யவேண்டிய நேரங்கள்	246
137	றமலான் பிறையும், சந்தேக நோன்பும்	248
138	பிறை கண்டதாக சாக்ஷியம் கூறல் ...	250
139	நோன்பின் ஸுன்னத்துகள்	252
140	நோன்பின் முஸ்தஹப்புகள்	253
141	நோன்பை முறிக்கும் காரியங்கள்	253
142	கப்பாரா என்னும் பரிகார தண்டனையை வாஜிபாக்கும் காரியங்கள்....	255
143	நோன்பின் மக்றூஹுகள்	255
144	நோன்பை முறிக்காத காரியங்கள்	256
145	நோன்பு நிறைவேறுவதற்குரிய ஷர்த்துகள்	257
146	கப்பாரா என்னும் பரிகார தண்டனைகள்	257

நெ.	விஷயம்	பக்கம்
147	இஃதிகாப்	260
148	இஃதிகாபு மூன்று வகைப்படும்	260
149	இஃதிகாபின் மகத்துவம்	262
150	ஜக்காத்து	264
151	ஜக்காத்து என்பதென்ன?	268
152	ஜக்காத்துக்கொடுக்க கடமைப்பட்டவர்	268
153	ஜக்காத்து பர்லாவதற்கு ஷர்த்து	269
154	ஜக்காத்து நிறைவேறுதற்குரிய ஷர்த்து	270
155	ஜக்காத்தின் விகிதம்	271
156	ஆடு, மாடு முதலியவைகளின் ஜக்காத்து விகிதம்	271
157	நஞ்செய் புஞ்செய்	273
158	ஜக்காத்து வாங்க அருகதையுள்ளவர்கள்	273
159	ஜக்காத்து வாங்க அருகதையில்லாதவர்கள்	275
160	ஹஜ்ஜு	279
161	ஹஜ்ஜு கடமையாக்கப்படல்	279
162	விதியாகுவதற்குள்ள ஷர்த்துகள்	282
163	ஹஜ்ஜை நிறைவேற்றுவது கடமை யாவதற்குரிய ஷர்த்துகள்	283
164	பர்லான ஹஜ்ஜு நிறைவேறுவதற் குரிய காரியங்கள்	284
165	ஹஜ்ஜின் வாஜிபுகள்	284
166	ஹஜ்ஜுடைய ஸுன்னத்துகள்	286
167	ஹஜ்ஜுல் அக்பர்	290
168	ஹஜ்ஜு கிரான்	290
169	ஹஜ்ஜு தமத்துஃ	291
170	ஹஜ்ஜு முப்ரித்	191
171	உம்ரூச் செய்தல்	291
172	குற்றப் பரிகாரங்கள்	292
173	தம் கொடுப்பதை வாஜிபாக்கும் காரியங்கள்	293
174	ஒன்றேகாலடி மணிக்கோதுமை ஸதக்காக் கொடுப்பதை வாஜிபாக்கும் காரியங்கள்	293

நெ.	விஷயம்	பக்கம்
175	ஒன்றேகால்படி மணிக்கோதுமையைப் பார்க்கினும் குறைவானதை தர்மங் கொடுப்பதை வாஜிபாக்கும் காரியங்கள்	294
176	கிரயத்தை வாஜிபாக்கும் காரியங்கள்	294
177	இஹ்ரும் கட்டியவர் விலக்கவேண்டிய காரியங்கள்	295
178	இஹ்ராம்கட்டவேண்டிய மீக்காத்து இடங்கள்	296
179	ஹஜ்ஜுச் செய்யும் விதம்	297
180	தவாபு செய்யும் விதம்	305
181	ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய்யும்விதம்	306
182	அறபாவில் தங்குதல்	307
183	முஸ்தலிபாவில் தங்குதல்	308
184	ஹஜ்ஜின் தத்துவம்	309
185	இஹ்ரமின் தத்துவம்	310
186	ஹஜ்ஜுக் கிரியைகளின் தத்துவம்	312
187	அறபாத் மைதானத்தில் தங்குவதன் கருத்து	317
188	சில சமாதானங்கள்	321
189	கிப்லாவை குறித்து	326
190	ஜீவ காருண்ய மதம்	329
191	திருமக்காவின் சரித்திரம்	340
192	ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களது குடியேறுகை	341
193	திருமக்காவின் உற்பத்தி	343
194	திருகஃபாவின் வரலாறு	345

அனுபந்தம் நெ. 1.

1	ஹஜ்ஜில் ஓதவேண்டிய துஆக்கள்	1
2	திரு மக்காவில் பிரவேசிக்கும்போது ஓதும் துஆ	2
3	கஃபா ஷரீபைக் கண்ணால் காணும்போது ஓதும் துஆ	4
4	தவாபு செய்வதன் நிய்யத்து	6


நெ.	விஷயம்	பக்கம்
5	முதலாவது ஷௌளத்தில் ஓதும் துஆ	7
6	இரண்டாவது ஷௌளத்தில் ஓதும் துஆ	9
7	மூன்றுவது ஷௌளத்தில் ஓதும் துஆ	10
8	நான்காவது ஷௌளத்தில் ஓதும் துஆ	11
9	ஐந்தாவது ஷௌளத்தில் ஓதும் துஆ	13
10	ஆறுவது ஷௌளத்தில் ஓதும் துஆ	15
11	ஏழாவது ஷௌளத்தில் ஓதும் துஆ	16
12	மக்காமு இப்ராஹிமில் தவாபுடைய தொழு கையை நிறைவேற்றிவிட்டு ஓதும் துஆ	18
13	ஜம்ஜம் ஜலத்தை அருந்தும்போது ஓதும்துஆ	20
14	ஸபா மர்வாவிற் கிடையில் ஸயீ செய்யும் போது ஓதுகிற துஆக்களும் திக்ருகளும் ஸபாவில் ஓதும் துஆ	20
15	ஸயீசெய்யும்போது ஓதும் நிய்யத்து	21
16	ஸயீயுடைய துஆ	22
17	ஸயீசெய்து முடிந்தவுடன் ஓதும் துஆ	35
18	உம்ராவின் நிய்யத்து	36
19	ஹஜ்ஜுக்கு நிய்யத்துச் செய்தல்	36
20	ஹஜ்ஜு உம்ரா ஆகிய இரண்டிற்கும்நிய்யத்து	37
21	தல்பியா ஓதி இஹ்ராம் கட்டுவதன் நிய்யத்து	37
22	மதீனாவின் ஜியாரத்து	38
23	ஹித்தீக் (றலி) அவர்களுக்கு ஸலாம்	42
24	பாரூக் (றலி) அவர்களுக்கு ஸலாம்	43

அனுபந்தம் நெ. 2

(சில ஸிறத்துகள் அடங்கியது)

ஸிறத்துல் பாத்திஹா முதல் ஸிறத்துல் ஹல் வரை ஒருவரி அரபியும் ஒருவரி தமிழும் அதன் அர்த்தமும் - தாத்பரியமும் எழுதப்பட்டுள்ளது.

ரௌதுன்னபி (ஸல்)—மதீனு முனவ்வரா



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

تعليم الإسلام

தமிழ் இஸ்லாம்

ஹனபிய்யா

الحمد لله نحمده ونستعينه ونؤمن به ونتوكل عليه ونعوذ بالله
من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله فلا مضل له
ومن يضلله فلا هادي له ونشهد ان لا اله الا الله وحده لا
شريك له ونشهد ان سيدنا محمدا عبده ورسوله

சர்வ புகழும் அல்லாஹ¨ தஆலாவிற்கே ததும். அவன் மனித வர்க்கத்தினர் இம்மையில் சன்மார்க்கர்களாகத் திக ழும்பொருட்டு ஷரீஅத்துகளை அருளி, அவைகளை மார்க்கச் சட்டங்களாக்கி இருக்கிறான். அந்த ஷரீஅத்துகளில்

இறுதியான ஷரீஅத்தே முஹம்மதிய்யாவை இனியில்லா வண்ணம் நமக்குப் போதித்து, இறுதி நாள்வரை அது உலகில் அனுஷ்டான மதமாக இருக்கத் தக்க விதமாக மக்களின் மனதில் பதியச் செய்த எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அவர்களைக் கண்டு களித்த ஸஹாபிகள், குடும்பத்தினர் யாவர் மீதும், இவர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் இறைவனின் ஸலாத் என்னும் கருணையும், ஸலாம் என்னும் ஈடேற்றமும் இறுதிநாள் வரை உண்டாவதாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

சிருஷ்டிப் பொருள்கள் கடமை

இவ்வுலகையும், இதிலுள்ள சகல பொருள்களையும், பிறவையும் குறித்து சிந்தித்துப் பார்ப்போமாயின், இவைகளில் எதுவும் தானாக சுயமே உண்டாகி விடவில்லை என்பதும், இவைகள் வேறு ஒருவனின் கட்டளையின் படியே உற்பத்தியானவை என்பதும் விளங்கும். வேறு ஒருவரால் உண்டுபண்ணைபட்ட பொருள்கள் யாவற்றிற்கும் சிருஷ்டிப் பொருள்கள் என்றும், இவைகளை உண்டு பண்ணியவனை சிருஷ்டிகர்த்தன் என்றும் நாம் அழைக்கிறோம். சிருஷ்டிக் கர்த்தனை அல்லாஹு ஸுப்ஹானஹு வ தஆலா சிருஷ்டிப் பொருள்களை அகாரணமாக சிருஷ்டித்தான் என்று நாம் கருதுவதற்கில்லை. அறிவிலும் ஆற்றலிலும் சக்தியிலும் வல்லமையிலும் மிகக்குறைவாகவுள்ள நாமே எக்காரியத்தையும் வீணாகச் செய்ய விரும்புவதில்லை. அங்ஙனமிருக்க சர்வ சக்தனை, அளவற்ற ஆற்றலுள்ளவனை அல்லாஹு

ஸுப்ஹானஹு வ தஆலா நம்மை வீணாக, ஒரு காரியமு மில்லாமல் சிருஷ்டித்தான் என்று கருத இடமே இல்லை. இவ்வாறான தப்பெண்ணம் நமக்குண்டாகக் கூடாது என்பதை முன்னிட்டே, அவன் தனது திரு மறையின்கண்,

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا

உங்களை வீணாக நாம் சிருஷ்டித்திருக்கிறோம் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்களா? என்ற வினவின் மூலமாக, நம்மை அவன் காரியார்த்தமாகவே சிருஷ்டித்திருக்கிறான் என்பதை அறிவித்துள்ளான்.

இறைவன் அறிவித்துள்ள இவ்விஷயத்திற்கேற்ப சிருஷ்டிப்பொருள்களை அவன் சிருஷ்டித்த கருத்து யாது என்பதைக் குறித்து சிந்தித்துப் பார்ப்போமாக. மனிதர் களாகிய நாம் நமது நோக்கங்களைப் பிறரிடம் கூறுமல் இருந்தால் அவைகளைப் பிறர் அறிய முடிவதில்லை. மற்ற வர்கள் தங்களது நோக்கங்களை நமக் கறிவிக்காவிடில் அவைகளை நாம் அறியமுடிவதில்லை. மனிதர்களாகிய நாம் நமது இனத்தைச் சேர்ந்தவர்களது நோக்கங்களை அறியாதிருக்கும்போது, சர்வ சிருஷ்டிகளுக்கும் கர்த்த னை அவ்வல்லோனின் கருத்தை உணர யாரே வல்லார்? அவன் அறிவிக்காத எக்காரியத்தையும் நாம் அறிந்து கொள்ள முடியாது. ஆதலால், இவ்விஷயங்களைக் குறித்து அவன் நமக்கறிவித்திருக்கிற வேதத்திலிருந்தும், அவனது அறிக்கைகளை நமக்கறிவித்த நபிமார்கள் மூலமான ஹதீது களிலிருந்துமே நாம் தெரிந்து கொள்வது அவசிய மாகும். திருக்குர்ஆனையும் ஹதீது ஷரீபுகளையும் நாம்

ஆராய்ந்த மட்டில், மனிதனுக்காகவே யாவற்றையும் சிருஷ்டித்தான் என்பதும், தன்னை வணங்குவதற்காகவே அவன் மனிதரைச் சிருஷ்டித்தான் என்பதும் தெரிய வருகிறது. இதைக் குறித்து "படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று ஒரு பெரியாரும் கூறிப் போந்தார். தவிரவும்,

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

மேலும், மனிதனையும் ஜின்னையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவே அல்லாமல் நான் சிருஷ்டிக்கவில்லை என்பது திருக் குர்ஆனின் வாக்கு. இதற்கேற்ப நாம்இவ் வுலகிலுள்ள சகல பொருள்களையும் அனுபவிக்க அருகதை யும் தகுதியும் யோக்கியமும் உள்ளவர்களாவதுடன் அவனை வணங்கக் கடமைப்பட்டவர்களாகவு மிருக்கிறோம்.

இறைவனை வணங்குவ தெங்ஙனம்?

இறைவனை வணங்குவதுதான் மனிதனது கடமை என்பதை நாம் அறிந்து கொண்டோம். ஆயினும், அவனை வணங்குவ தெப்படி? அவனுக்குத் திருப்தியான வணக்கம் யாது? என்ற விபரங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதனைத் தெரிவிப்பதற்காகத்தான் இறைவன் உலகம் தோன்றிய கால முதல் நபிமார்களையும் வேதங்களையும் அனுப்பியுள்ளான். இவ்வேதங்களில் மனிதர் கடமை என்ன? மற்றைய சிருஷ்டிகள் கடமை என்ன? என்ற விபரங்கள் தெள்ளத் தெளியக் கூறப் பட்டுள்ளன. இவைகளை நாம் நன்கு துருவி ஆராய்ந்து, இவ்வேதங்களில் கூறப்பட்டுள்ள சட்ட திட்டங்களின்படி சிருஷ்டிப் பொருள்களை நாம் உபயோகப் படுத்திக்

கொண்டு இறைவனை வணங்க வேண்டும். இச் சட்ட திட்டங்களுக்கும், முறைகளுக்கும்தான் பிக்ஹ் அதாவது மார்க்கச்சட்டம் என்று பெயர். இச்சிறு நூலும் இச் சட்டதிட்டங்களையே விளக்குகின்றது.

இஸ்லாம் மதம்

மனிதர்களாகிய நாம் நம்மைச் சிருஷ்டித்தவனுக் காற்ற வேண்டிய பணிகள் யாவை? அவனது சிருஷ்டிப் பொருள்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் யாவை? என்பதை விளக்குபவை தான் மதம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

இவ்வுலகில் தற்போது நூற்றுக் கணக்கான மதங் களிருந்து வருகின்றன. கோடிக் கணக்கான ஜனங்க ளால் பின்பற்றப்படுபவைகளும் பிரபல மானவைகளும் அவைகளில் வெகு சிலவேயாகும். கிறிஸ்துமதம், யூதமதம், புத்தமதம், கன்பூஷியமதம், ஹிந்துமதம், இஸ்லாம்மதம் போன்றைவைகளே பிரதானமானவை. இம்மதங்களைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் தங்கள் மதம் தான் தெய்வ சம்மதம் உள்ளது என்று கூறுகின்றனர்.

இங்கு பல மதங்களைப்பற்றிய சர்ச்சையில் இறங்காமல் இஸ்லாம் மதத்தைப்பற்றி மட்டிலும் சிறிது ஆராய்வோம்.

இஸ்லாம் மதத்தை இத்தரணியிலுள்ள மாந்தரில் ஐந்தில் இரண்டு பாகத்தினர் தழுவி இருக்கிறார்கள். இம்மதம் பிரசங்கிக்கப்பட்டு மிகச் சொற்ப காலமே யாயிற்று. உலகிலுள்ள மதங்கள் யாவற்றிலும் மிகப்புதிய மதம் என்றுங்கூடக் கூறலாம். இம்மதத்திற்கு திரு குர்ஆன் என்ற பெயரால் ஒரு வேதம் இருந்து வருகிறது.

இவ்வேதம் திருநபி (ஸல்) அவர்களது 40-வதுவயதிலிருந்து 63-வது வயது வரை அதாவது திருநபி (ஸல்) அவர்கள் இக்குவலயத்தை விட்டு மறைவதற்குச் சின்னட்கட்கு முன்பு வரை இறைவனலருளப்பட்டது. அன்று இவ் வேதம் அருளப்பட்ட மாதிரியிலேயே இன்னும் இருந்து வருகிறது. மற்றைய வேதங்கள் இடைக்காலத்தில் காணமற் போனதுபோல் இது காணமற் போகவு மில்லை. சில வேதகிரந்தங்கள், அந்த நபிமார்கள் காலத் திலேயே எழுதி பத்திரப் படுத்தப்படாமல், பிற்காலத்தி லுள்ளவர்கள் அவ்வேதத்தின் பெயரால் கிரந்தங்களை எழுதியது போல திருகுர்ஆன் பிற்காலத்தில் எழுதப்பட் டது மில்லை.

சில வேதங்கள் பொது ஜனங்களது பார்வைக்குக் கொடுக்கப் படாமலும், பொது ஜனங்களால் படித்துப் பார்க்கப்படாமலும் இருப்பது போல், திருகுர்ஆன் பொது ஜனங்களை விட்டு மறைக்கப்படவில்லை. இவை களுக்கு நேர்மாறாக இவ்வேதம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே, அவர்களது கட்டளைப்படி வெகு ஜாக்கிரதையாக எழுதி வைக்கப் பட்டது. முற்காலத்திலிருந்த சில வேதங்கள் தவறியது போல, இதுவும் தவறிப் போகாமல் இருப்பதற்காக, ஆரம்ப கால முதற்கொண்டே இவ்வேதத்தைச் சிலர் ஆரம்ப முதற் கடைசி வரை மனனஞ் செய்திருந்தனர். அநேகர் இவ்வேதத்திலுள்ள பெரும் பகுதிகளைப் பாட மிட்டிருக்கின்றனர். இதில் சிலவற்றையாவது பாட மிடாத முஸ்லிம் - ஆண்களிலும் பெண்களிலும்-எவரும் இல்லை என்பது நிச்சயம்.

இவ்வேதத்தை முஸ்லிம் ஆண் பெண் இரு பாலரும் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என கட்டளை யிடப்பட்டிருப்பதால், முஸ்லிம்கள் எத்தேசத்தினராயினும், அவர்கள் எப்பாஷையைப் பேசினாலும், முதன் முதலாக திருகுர்ஆனை ஓதக் கற்றுக் கொடுக்கப் படுகின்றனர். திருகுர்ஆனை ஓதக்கற்றுக் கொடுத்த பிறகு தான் வேறு கல்விகளை கற்க முஸ்லிம் சிறுர்கள் பள்ளிக்கு அனுப்பப் படுகிறார்கள். சுருங்கக் கூறுமிடத்து திருகுர்ஆனை ஓதக் கற்றுக்கொள்வது முஸ்லிம் உலகில் ஆண் பெண இரு பாலருக்கும் கட்டாயப் பாடமாக, அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது.

வருஷந்தோறும் ரமலான் மாதத்தில் தராவீஹ் தொழுகையில் பெரும்பாலான இடங்களில் திருகுர்ஆன் முழுவதும் ஓதித் தொழுக வைக்கப்படுவதால், முஸ்லிம் ஆண் பெண் இருபாலரும், குறைந்த பக்ஷம் ஒரு முறை யேனும் ஓதியோ அல்லது பிறரால் ஓதக்கேட்டோ வரு கின்றனர். தொழுகையிலேயே இதனை ஓதுவதால், இதனை லக்ஷக்கணக்கானவர்கள் பாடமிட்டு இருக்கின்றனர். திருகுர்ஆன் முழுவதையும் பாட மிட்டவர்களுக்கு மறுமை பயன் இருப்பது மட்டுமின்றி, இப்புற உலகிலேயே மற்றவர்களால் அவர்கள் கொண்டாடப் படுவதால் இதனைப் பாடம் பண்ணி வைப்பதற்கென்றே பிரத்தியேகமாக வேத பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ஆதலால், மற்றைய வேதங்கள் மறைக்கப்பட்டது போல, இவ்வேதம் மறைக்கப் படாமல் உலக மக்களுக்கு வலுக்கட்டாயமாக கற்பிக்கப்படுகிறது.

மனிதர்கள் யாவரும் அல்லாஹ் தஆலாவின் அடியார்களாக இருந்த போதிலும், அவர்கள் தங்கள் ஆத்ம

சக்திகளை சரியான முறையில் வளர்த்துக் கொள்ளாத தாலும், பாவச் செய்கைகளில் ஈடுபடுவதாலும், தங்களை சிருஷ்டித்தவனின் பேச்சுக்களை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், ஆத்ம சக்தியில் முன்னேற்ற மடைந்த நபிமார்கள் மூல மாகவே வேதங்கள் பொதுஜனங்களுக்கு அருளப்பட்டன. அவ்வாறு அருளப்பட்ட சில வேதங்கள் பிற்காலத்தில் அந்த நபிமார்களது சொந்த வாக்குகளுடன் கலந்து குழம்பி விட்டன. அந்த நபிமார்களது போதனைகளை இப்பொழுது பயில விரும்பி ஆராய்வோர், அந்த நபிமார் களது சொந்த வாக்கியங்கள் இன்னவை, அவர்களுக்கு இறைவ னருளிய வேத வாக்கியங்கள் இன்னவை என்று பிரித் தறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர். இவ்வித மான குழப்ப நிலைமையும் நம் வேதத்திற்கில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சொந்தவாக்கினுல் உபதேசிக்கப் பட்டவைகள் வேறாகவும், நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதக்கட்டளை என்ற முறையில் இறைவன் அறிவித்த வாக்குகள் வேறாகவும், ஆதி முதற் கொண்டே பிரித்தெழு தப் பட்டுவந்தன. இவ்வாறு பிரித்தெழுதப்பட்ட வாக்கு கள் திருகுர்ஆன் என்ற பெயராலும், மற்றவை ஹதீதுகள் என்ற பெயராலும் உலகில் போதிக்கப்படுகின்றன. எனவே, சரித்திர பூர்வமாகவோ, வேறு ஆதாரங்கள் மூலமாகவோ, வேறு எவ்விதமாகவோ, இஸ்லாம் மதத்தின் திருவேதத்தை நாம் பரிசோதித்தாலும், அது தெய்வ வாக்கு என்ற அந் தஸ்திலிருந்து அணுவளவுகூடக் குறைவதற்கில்லாத முறை யிலும், பிறரால் தோஷங் கூறப்படுவதற்கு இடமில்லாத விதத்திலும் இருந்து வருகிறது.

சம்பூர்ண மதம்

இஸ்லாம் மதம் எல்லா மதங்களுக்கும் வயதில் இளைய மதம் என்றும், ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், சுமார் 1350 வருஷங்களுக்கு முன் போதித்த மதம் என்றும் கருதப்பட்டு வருகிறது. இக்கருத்து ஒரு விதத்தில் உண்மையே யாகும். என்றாலும், இஸ்லாம் மதம் புதிய மதமன்று. ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் காலமுதல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம்வரை, தோன்றிய நபிமார்கள் யாவரும் இஸ்லாம் மதத்தையே போதித்தனர். உலகிலுதித்த நபிமார்களுக்கு அருளப் பட்ட வேதங்கள் யாவும் இஸ்லாம் மதத்தையே போதித்தன. ஆதலால், இஸ்லாம் மதம் உலகிற்றோன்றிய சகல மதங்களிலும் முதன்மையானதும், பழமையானதுமாகும். என்றாலும், புறத்தோற்றத்தில் இம்முதன்மையும் பழமையும் பிரசித்த மில்லை. ஏனெனில், ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் இஸ்லாம் மதத்தை போதித்தாலும், அக்காலத்திலுள்ள ஜனப் பெருக்கத்திற்கும் நாகரிகத்திற்கும் ஏற்றவாறு கிரியை சம்பந்தமான காரியங்களில் சில குறிப்பிட்ட சட்ட திட்டங்களையும், விதி விலக்குகளையும் அனுஷ்டிக்க வேண்டியதிருந்தது.

அப்புறம் ஹஜ்ரத் ஷீத் (அலை), இத்ரீஸ் (அலை) ஆகிய நபிமார்கள் காலத்தில் இன்னும் சில விதி விலக்குகள் ஏற்பட்டன. பின்னர் ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் காலத்தில் வேறுபல சட்ட திட்டங்கள் அமல் நடத்தப்பட்டன. பிறகு, ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் காலத்தில் தௌராத் என்ற ஒரு வேதமும், புதிய தொரு

ஷரீஅத்தும் அதாவது கிரியா மார்க்கமும் அருளப் பட்டன. இவ்விதமாகவே ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர் களுக்கும் ஒரு புதிய வேதமும், ஷரீஅத்தும் அருளப் பட்டன. ஆதலால், இந்த ஷரீஅத்துகள் யூதமதம். கிறிஸ்து மதம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன, இந்த ஷரீஅத்துகளில் அனுஷ்டிக்கப் பட்டுவந்த கிரியா மார்க்கச் சட்டங்கள் தற்காலிகமானவைகளாகவும், சம் பூரண மல்லாதனவாகவு மிருந்தன. ஏனெனில், இவைகள் அருளப்பட்ட காலத்தில் நாகரிக மூன்னேற்றம் அதிக மில்லா மலிருந்தது. போக்கு வரத்துக்குரிய சாதனங்களு மிருக்கவில்லை. உலகிலுள்ள பல்வேறு ஜனங்களும் ஒரு தேசத்தி லிருந்து இன்னொரு தேசத்திற்குச் செல் லவோ, அங்குள்ள பாஷைகளை கற்றுக்கொண்டு, தங்கள் அபிப்பிராயங்களை அவர்களுக்குக் கூறவோ வேண்டிய சாதனங்களும் இல்லாமல் இருந்து வந்தது. இதனால், ஒவ்வொரு தேசத்திற்கும் அந்தந்த தேசத்துப் பாஷை களைப் பேசக்கூடிய நபிமார்கள் பிரத்தியேகமாக இருக்க வேண்டிய தாகவும், அந்தந்த தேசத்திலுள்ள ஜனங்களின் நடத்தைக்கும் ஒழுக்கத்திற்கும் தக்கவாறு, அவர்கள் சன்மார்க்க கிரியைகளைப் போதிக்க வேண்டியதாகவு மிருந் தது. இதனால், ஏககாலத்தில் பலநபிமார்கள் உலகிற்றோன்றி, பலவித முறையில் கிரியா மார்க்கங்களை போதித்தனர்.

இறுதியாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி னர்கள். அக்காலத்தில் உலகெங்கும் அஞ்ஞானம் என்ற இருள் சூழ்ந்திருந்தாலும், வியாபார முறையில் ஒரு தேசத்து ஜனங்கள் இன்னொரு தேசத்திற்குச் செல்லவும், அங்குள்ள ஜனங்களின் ஒழுக்கம் ஆசாரம் முதலியவை

களைக் கற்றுத்தெரிந்து கொள்ளவும் வசதியாக இருந்தது. பற்பல தேசாதிபதிகளும் கூட பிற நாடுகளின் மீது படை யெடுத்துச் சென்று, அந்நாட்டார்களைக் கீழ்ப்படுத்தி அவர்களை அடக்கி ஆளும் நிலைமையில் இருந்தனர். இதனால், அதிகாரத் தோரணையிலும் கூட ஒரு நாகரிகம் இன்னொரு நாட்டில் பரவி வந்தது. ஆதலால், ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனியே நபிமார்கள் தோன்ற வேண்டிய அவசியமேற்படவுமில்லை. பொது ஜனங்களுக்கு வெவ்வேறு விதமான கிரியாமார்க்கங்களை உபதேசிக்க வேண்டியது மிருக்கவில்லை. எனவே, அல்லாஹ் தஆலா உலகிற்கு பொதுவான நபியை அனுப்பி அவருக்குத் தனது சன்மார்க்கத்தின் சட்ட திட்டங்கள் யாவையும் அறிவித்தான். இப்பொது நபி தான் பதின் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் அறப் நாட்டில் பிறந்த ஹஜ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள். இவருக் கருளப்பட்ட பொது வேதம்தான் திருகுர்ஆன். இவர் போதித்த கிரியாமார்க்கம் தான் அதாவது ஷரீஅத்தே முஹம்மதீதான் சம்பூரண இஸ்லாம். இவைகளைக் குறித்து திருகுர்ஆனில்,

وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا كَآفَّةً لِّلنَّاسِ

மேலும், (நபியே) உம்மை ஜனங்கள் யாவருக்கு மல்லாமல் நாம் (நபியாக) அனுப்பவில்லை என்றும்,

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்காகப் பூர்த்தி செய்தேன். இன்னும் உங்களுக்கு எனது அருட்

கோடையை நிறப்ப மாக்கினேன். இஸ்லாமை உங்களுக்கு மதமாக நான் பொருந்திக்கொண்டேன் என்றும் கூறியுள்ளான்.

இது சம்பூரண மதமாக இருப்பதால், இதில் கூறப்பட்டுள்ள கிரியா மார்க்கம் உலகிலுள்ள ஜனங்கள் யாவரும் எக்காலத்திலும் கடைபிடித் தொழுகுவதற்கும், யுக்திக்கும், புத்திக்கும் ஏற்றவாறு அமைந்திருக்கிறது. இன்றைய தினம் இஸ்லாம் மதத்தின் சில திட்டங்களைக் குறித்துக் குறை கூறுபவர்கள், நாளைய தினம் அதே திட்டத்தைப் பின்பற்றுவதை, கடந்த 13 நூற்றாண்டுகளாக உலகம் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறது. இஸ்லாம் மதத்தின் திட்டத்தை அநாகரிகமானது என்று அன்று முதல் இன்றுவரை சிலர் கூறிக்கொண்டுதானிருக்கின்றனர். ஆனாலும், அவரவர்கள் தங்களுள் செய்துகொள்ளும் சீர்திருத்தங்களுக்கெல்லாம் இஸ்லாம் மதத்தின் பிரகாசம் தேவையாக இருந்துகொண்டே இருக்கிறது. எனவே, நவநாகரிகம் பரவிவரும் இக்காலத்திலும் கூட, மேனாட்டினர் இஸ்லாம் மதத்தைக் கூட்டங்கூட்டமாகத் தழுவிவருகின்றனர். (இன்-ஷா அல்லாஹ்) இனி ஒரு காலத்தில் உலகம் முழுதும் இஸ்லாம் மதத்தைத் தழுவிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்லாமின் பர்லுகள்

இஸ்லாம் மதம் என்பது சிலர் கருதுவதுபோல் கொள்கைகள் மட்டும் நிறைந்த மதமல்ல; கொள்கையுடன் கிரியைகளும் நிறைந்த மதம். எனவே, அகாயிது அதாவது கொள்கை என்றும், அஃமால் அதாவது கிரியைகள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இச்சிறு நூலில்

அகாயித் என்னும் கொள்கை சம்பந்தமாக மிகச் சுருக்கமாகவே எழுதி இருக்கிறோம். இந்நூலில் கிரியை சம்பந்தமான சட்டங்களும் விதி விலக்குகளும் ஓரளவு எழுதப்படுகின்றன. விரிவான கிரந்தங்களில் இவ் விதிவிலக்குகளால் ஏற்படும் பலா பலன்களும், பிறவும் விளக்கமாகக் கூறப்படும். இந்நூலைச் சுருக்கமாகவே எழுத உத்தேசித்திருப்பதால், அவைகளை இங்கு கூறுவற் கில்லை. வேண்டுவோர் விரிவான கிரந்தங்களில் அவைகளைப் படித்துக்கொள்வார்களாக.

இஸ்லாம் மதக்கோள்கைகள்

இஸ்லாம் மதத்தின் கொள்கைகள் மிகச்சுருக்கமாயி னும், அவைகளைப் பற்றிய வியாக்யானம் மிக விரிவானது. ஆதலால், இச்சிறு கிரந்தத்தில் அவ்விரிவுரைகளை எல்லாம் எழுத முடியாது. அவைகளில் ஒரு பகுதியை மட்டிலும் எழுதவுங்கூட இடமில்லை: என்றாலும், இஸ்லாம் மதத்தின் பெருங் கடமைகளை அறிந்துகொள்ளுமிடத்து, அதன் கொள்கைகளில் முக்கியமான அம்சங்களை மட்டிலும் சுருக்க மாகவேனும் கூறுமல் விட்டுவிடில், இச்சிறு கிரந்தத்தில் அஃதொரு குறையாகவே வாசகர்கள் கருத நேரிடும் என்றஞ்சி மிகச் சுருக்கமாகவே எழுதத்துணிந்தனம். விரி வான விபரங்களையும், இக்கொள்கைகளின் கருத்துகளையும், இதர மதக் கொள்கைகளுக்கும் இஸ்லாம் மதக்கொள்கை களுக்கு மிடையிலுள்ள தாரதன்மியங்களையும் அறிய விரும்புவோர் விரிவான கிரந்தங்களை ஆராய்வார்களாக.

ஈமான் முஜ்மல்

ஈமான் கொள்வது இருவகை. அல்லாஹ் தஆலாவை யும் அவனது சகல கட்டளைகளையும் விசுவாசிப்பதாக மன

தில் உறுதிகொண்டு, அதனைப் பிறர் அறிய அறிக்கை செய்வதால் ஒருவர் முஸ்லிமாகி விடுவார். இதனை ஈமான் முஜ்மல் என்று கூறுவர். இதன் விபரம் வருமாறு:—

اٰمَنْتُ بِاللّٰهِ كَمَا هُوَ بِاَسْمَآئِهٖ وَصِفَاتِهٖ وَقَبِلْتُ جَمِيْعَ اَحْكَامِهٖ

ஆமன்து பில்லாஹி கமா ஹுவ பிஅஸ்மாஇஹி வ ஸிபாத்திஹி வ கபில்து ஜமீஅ அஹ்காமிஹி.

" அல்லாஹுதஆலாவை அவனது திருநாமங்களுடனும், அவனது லக்ஷணங்களுடனும், அவன் எவ்வாறிருக்கிறானோ அவ்வாறே விசுவாசித்து, அவனது சகல கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டேன் " என்பது இதன்பொருள்.

ஈமான் முபஸ்ஸல்

மேற்கண்டவாறு விசுவாசம் கொள்வதை, இன்னும் சொற்ப விரிவான முறையில் விசுவாசம் கொள்வதாயின் அடியிற்கண்ட முறைப்படி விசுவாசம் கொள்ளலாம். இதற்கு ஈமான் முபஸ்ஸல் என்று பெயர்:

اٰمَنْتُ بِاللّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْقَدْرِ خَيْرِهٖ

وَشَرِّهٖ مِنَ اللّٰهِ تَعَالٰى وَالْبَعْثِ بَعْدَ الْمَوْتِ

ஆமன்து பில்லாஹி வ மலாஇகதிஹி வ குத்துபிஹி வ ருஸுலிஹி வல்யவ்மில் ஆகிரி வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல் லாஹி தஆலா வல்பஅதி பஃதல் மவ்த்.

" அல்லாஹ்வையும், அவனது அமரர்களென்னும் மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்

களென்னும் நபிமார்களையும், கடைசி நாளையும், நன்மை தீமைகள் ஆகியவைகளின் தக்தீர் அல்லாஹ்த் தஆலாவின் புறத்திலிருக்கிறதென்பதையும், மரணத்திற்குப் பிறகு எழுப்பப்படுவதையும் விசுவாசித்தேன்'' என்பது இதன் பொருள்.

எனவே, இங்கு கூறப்பட்டுள்ள அல்லாஹ், மலக்குகள், வேதம், நபிமார்கள், தக்தீர், மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கப்படல் ஆகியவைகளைக் குறித்து சிறிது கூறுவோம்.

அல்லாஹ் தஆலா

அல்லாஹ் ஒருவன். அவனுக்கு இணை யாருமில்லை. அவன் எப்பொழுதுமே இருக்கிறான். இனிமேல் எப்பொழுதுமே இருப்பான். சர்வசக்தன், அவன் இவ்வுலகம் முழுவதையும் சிருஷ்டித்தான். பூமி, சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், கடல்திடல், மலைமடு ஆகியயாவும் அவனாலேயே சிருஷ்டிக்கப்பட்டவை. உயிருள்ள சகல பிராணிகளையும் மனிதனையும் சிருஷ்டித்தவன் அவனே. அவன்தான் மழையை வர்ஷிக்கச்செய்கிறான், பூமியிலிருந்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறான். அவன்தான் ஜீவிக்கச் செய்கிறான். அவன்தான் மரிக்கச்செய்கிறான். அவன்தான் இவ்வுலகம் முழுவதையும் நிர்வகிக்கிறான்.

அல்லாஹ் மகா கிருபையாளன். அவனது கிருபையை அளவிட முடியாது. அவன்தான் கண், காது, மூக்கு முதலிய சகல அவயவங்களையும் கொடுப்பவன். அவன் எங்கும் நிறைந்தவன். அவனில்லாத இடமில்லை. அவன் நமது சகல காரியங்களையும் அறிகிறான். அவனை நாம் பார்க்க முடியாவிடினும், அவன் நம்மைப்பார்க்

கிறான். அவன் அரூபி. அவன் நமது பிரார்த்தனைகளை அங்கீகரித்து, நமக்கு வேண்டியவைகளைச் செய்கிறான். அவனைத்தான் நாம் வணங்க வேண்டும். அவன்தான் நாம் வணங்கப்படத் தகுந்த தெய்வம். நாம் அவனுக்கே அடிமைகள். வேறு யாருக்கும் நாம் அடிமைகளல்ல.

மலக்குகள்

மனிதர்களாகிய நாம் மண்ணால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதுபோல, மலக்குகள் பிரகாசத்தினால் சிருஷ்டிக்கட்டவர்கள். நாம் உணவுகளை உட்கொள்வதுபோல் அவர்கள் உண்பது மில்லை. உறங்குவதுமில்லை. அல்லாஹ¤ தஆலாவின் கட்டளையை நிறைவேற்றுவதும், அவனை ஸ்தோத்திரம் செய்வதும்தான் அவர்களது வேலையாகும். அவர்களுக்கு மனைவி மக்கள் இல்லை. அவர்கள் அல்லாஹ¤ தஆலாவின் பரிசுத்தமான நல்லடியார்கள்.

அவர்கள் எத்தனை பேர் என்பதை அல்லாஹ¤ தஆலாதான் அறிவான். வேறு யாருக்கும் அவர்களது சங்கியை தெரியாது. அல்லாஹ¤ தஆலாவின் கட்டளைக்கு மாறுக அவர்கள் நடக்கவு மாட்டார்கள், பாபமான காரியங்களைச் செய்யவுமாட்டார்கள். மனிதனைப் பாதுகாத்தல், மனிதன் செய்யும் நன்மை தீமைகளை எழுதிவைத்தல் முதலிய காரியங்களை அவர்கள் செய்கின்றனர். மனிதர் முதல் மற்ற ஜீவராசிகள் மரிக்கும்போது அவர்களது ஜீவன்களைக் கைப்பற்றும்வேலை, மழை பொழிவித்தல் விவசாய உற்பத்தி முதலிய வேலைகளைச்செய்தல், காற்று வீசுதல் ஆகியவைகளெல்லாம் இவர்கள் மூலமாகவே நிகழுகின்றன. இவ்வேலைகளைச் செய்ய அல்லாஹ¤ தஆலா இவர்களையே

நியமித்திருக்கிறான். மரித்த பிறகு கப்றுகளில் வந்து மரித்தவர்களிடம் கேள்வி கணக்குக்கேட்பதும் இவர்களது வேலைதான்.

இவர்களில் ஜிப்ரயீல் (அலை) ஒருவர். நபிமார்களுக்கு இறைவனது வேத வசனங்களை அறிவித்தல், அவனது வஹியை நபிமார்களுக்குச் சொல்லுதல் முதலிய வேலைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மீக்காயில் (அலை) மழை பொழிவித்தல், அதனால் தாவர வர்க்கங்களை உற்பத்தியாக்குதல் உணவுப் பொருள்களை விளைவித்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார். இஸ்ராயீல் (அலை) மரிப்பவரின் ஆன்மாவை கைப்பற்றும் வேலையைச் செய்கிறார். இஸ்ராபீல் (அலை) என்பவர் இவ்வுலகம் முடிவடையும் தருவாயில் எக்காளம் ஊதுவார். உடனே உலகம் அழிந்து விடும். அப்புறம் மறுபடியும் எக்காளம் ஊதுவார். அப்பொழுது மரித்தவர்கள் யாவரும் உயிர் பெற்றெழும்பி விடுவர். மனிதர் செய்யும் நன்மை தீமைகளை எழுதி வைப்பவர்களுக்கு கிராமன், காத்திபீன் என்று பெயர். கப்ரில் வைக்கப்பட்டமையித்துகளிடம் கேள்வி கணக்குக் கேட்பவர்களுக்கு முன்கர், நக்கீர் என்று பெயர். இவர்களது பெயர்களை கண்ணியமாக நாம் கூறவேண்டும். இவர்களது பெயருடன் அலைஹிஸ்ஸலாம் என்னும் பதத்தையும் சேர்த்துக் கூறவேண்டும். இவர்கள் பாப மற்றவர்கள். இவர்கள் பாபம் செய்வதைவிட்டு, இவர்களை அல்லாஹ் தஆலா காப்பாற்றி இருப்பதால், இவர்களை

معصوم

மஃஸூம்கள் என்று நாம் கூறுகிறோம்.

நபிமார்கள்

இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய நாம் அல்லாஹ¤ தஆலாவை வணங்குவதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டோம். அவனது கட்டளைப்படி நடப்பதுதான் நமது கடமை. ஆனால், இவ்வுலகிலுள்ள மாய்கைகளில் நமது கவனத்தைச் செலுத்தி, அவன் நமக்கு இட்ட கட்டளைகளை நாம் நிறைவேற்றாமல் இருக்கும் காலத்தில், நமது கடமைகளை நமக்கு நினைவூட்டவும், இறைவனுக்குத் திருப்தியான காரியம் எது? அதிருப்தியான காரியம் எது? - என்பதை நமக்கு அறிவிக்கவும் அல்லாஹ¤ தஆலா நபிமார்களை நியமித்திருக்கிறான்.

இவர்கள் நம்மைப்போல் மனித இனத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் நமது மத்தியில் பிறந்தவர்கள். இவர்கள் இறைவனுக்கு மாறுக நடக்க மாட்டார்கள். பாப மற்றவர்கள். இவர்களும் மலக்குகளைப்போல் பாவம் செய்வதைவிட்டு இறைவனல் ரக்ஷித்துக்காக்கப்பட்ட மஃஸூம்களே. இவர்கள் எத்தனை பேர் என்பதை திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால், இறைவன் தனது கட்டளைகளைப்போதித்து, ஜனங்களை சீர்திருத்துவதற்காக உலகிலுள்ள சகல வர்க்கத்தாரிடமும் பஷீர்களையும், நதீர்களையும் அனுப்பி இருக்கிறான். ஒரு லக்ஷத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் இவ்வுலகில் தோன்றினர்கள் என்றும் இரண்டு லக்ஷத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் என்றும் சில ரிவாயத்துகள் கூறுகின்றன. ஆயினும், இவர்களை, இத்தனை பேர் என்று வரையறுத்துக் கூறாமலிருப்பது நல்லது.

இந்நபிமார்கள் யாவரும் ஒரே விதமாக இல்லை. இவர்களில் சிலருக்கு வேதங்களும், ஸ¤ஹ¤புகளும் அருளப்

பட்டன. இவர்கள் யாவரிலும் முதலானவர் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள். எல்லாருக்கும் பிந்தி வந்தவர் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள். இவர்களுக்கிடையில்தான் ஏனைய நபிமார்கள் வந்தனர்.

ஹஜ்ரத் ஆதம் (அலை)

"நான் பூமியில் எனது பிரதி நிதியை ஏற்படுத்தப் போகிறேன்" என்பதாக அல்லாஹு தஆலா மலக்கு களுக்கு அறிவித்தான். அதற்கு அவர்கள் "பூமியில் விஷமம் செய்து, ரத்தம் சிந்துபவர்களையா? நீ பூமியில் ஏற்படுத்தப்போகின்றாய். நாங்கள் உனது புகழைக்கொண்டு உன்னை ஸ்தோத்திரம் செய்கிறோம். உன்னைத் துதிக் கிறோம்" என்று கூறினர். அதற்கவன் "நீங்கள் அறியாத வைகளை நான் மிகவும் அறிந்தவன்" என்று கூறிவிட்டு, ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களை சிருஷ்டித்து, அவருக்கு சகலவிதமான பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். பிறகு மலக்குகளை நோக்கி "நீங்கள் கூறியதில் உண்மையாளர் களாக இருந்தால், இவைகளின் பெயர்களை எனக்குச் சொல்லுங்கள்" என்பதாகக் கூறினான். அவன் அறிவித்த வைகளை அல்லாமல், மற்றவைகளை அவர்கள் அறியமாட் டார்களாதலால், அவர்களுக்கு அவைகள் தெரியவில்லை. ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களை அவ்வாறு சொல்லும்படி கூறினான். அவர் அவைகளின் பெயர்களை அவர்களறியச் சொன்னார். அப்பொழுது அல்லாஹு தஆலா அவர் களை நோக்கி "நீங்களறியாததை நான் மிக அறிவேன் என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா" என்று அறிவித்தான்.

இப்லீஸ்

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள், மலக்குகளுக்கு அவைகளை அறிவித்ததால், அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு அவருக்கு ஸுஜூது செய்யும்படி இறைவன் மலக்குகளுக்குக் கட்டளை யிட்டான். மலக்குகள் அவருக்கு ஸுஜூது செய்தனர். ஆனால், இப்லீஸ் என்பவன் மட்டிலும் ஸுஜூது செய்யவில்லை.

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு அவன் ஸுஜூது செய்யாமலிருந்ததன் காரணத்தைக் குறித்து, இப்லீஸிடம் ஆண்டவன் வினவியபோது, அவன் "அவரைப் பார்க்கிலும் நான் சிறந்தவன். அவர் மண்ணால் சிருஷ்டிக்கப்பட்டவர். நான் நெருப்பால் சிருஷ்டிக்கப்பட்டவன்" என்று கூறினான். இப்லீஸ் மண்ணையும் நெருப்பையும் கவனித்து, மேல் கீழ் என்ற வித்தியாசத்தை நினைத்தானேயன்றி, சிருஷ்டி கர்த்தனின் கட்டளைக்கு மாறு செய்யக் கூடாது என்பதை கவனித்தானில்லை.

தன்னுடைய கட்டளையை அவன் பகிரங்கமாக மீறியதுடன், அதனைக் குறித்து விசாரித்தபோதும் அவன், உயர்வு தாழ்வு என்று பெருமை பேசியதால், அல்லாஹ் தஆலாவினது கோபம் அவன்மீது ஏற்பட்டது. அவனது கருணைக்கு அவன் தூரமானவனாகி மல்ஊனானான்.

அப்பொழுது இப்லீஸ் மல்ஊன், அல்லாஹ் தஆலாவினிடம் "நாயனே! எனக்குத் தவணை கொடு. ஆதமுடைய மக்களை நான் வழி கெடுக்கிறேன்" என்று கேட்டுக் கொண்டான். அதற்கிறைவன் அவனுக்குத் தவணை கொடுத்து "என்னுடைய நல்லடியார்களை நீ வழி கெடுக்க முடியாது" என்று கூறி அனுப்பிவிட்டான்.

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களையும், அவரது மனைவி ஹவ்வா அவர்களையும் சுவர்க்கத்தில் வசிக்கும்படி செய்து "நீங்களிருவரும் சுவர்க்கத்தில் நன்றாக வசியுங்கள். ஆனால், இந்த மரத்தை மட்டிலும் நெருங்காதீர்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் அக்கிரமஸ்தர்களாகிவிடுவீர்கள்" என்று கட்டளை யிட்டான். இறைவனது கட்டளைப்படி அவ்விருவரும் சுவர்க்கத்தில் இருந்து வருகையில், அவர்களை எவ்விதமாவது கலைத்து விட வேண்டும் என இப்லீஸ் முடிவு செய்து, அதற்கான முயற்சியைச்செய்தான்.

இப்லீஸ் கலைத்தல்

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தடுக்கப்பட்ட மரத்தின் கனியை அவன் பறித்து; ஹஜ்றத் ஹவ்வா உம்மாவிடம் கொடுத்து, இக்கனியைப் புசித்தவர்கள் சுவர்க்கத்தில் என்றென்றைக்கும் நிலைத்து விடுவார்கள்; நீங்களும் மலக்குகளுடன் சேர்ந்து விடுவீர்கள்; நான் உங்களது உண்மை அபிமானி; உங்களது நன்மைக்காகவே நான் இவ்விரகசியத்தைக் கூறுகிறேன்" என்று கூறினான்.

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா உம்மா அவர்களும் இப்லீஸ் கூறிய இவ்வார்த்தைகளை உண்மை என்று நம்பி அக்கனியைப் புசித்தனர். அதனை அருந்தியவுடன் அவ்விருவரும் நிர்வாணமாக இருப்பதை உணர்ந்தனர். வெட்கினர். சுவர்க்கத்தின் விருக்ஷங்களிலுள்ள இலைகளைப் பறித்துத் தங்கள் வெட்க ஸ்தலங்களை மறைக்கத் தொடங்கினர்.

அப்பொழுது, அல்லாஹ் தஆலா அவ்விருவரையும் நோக்கி "நான் உங்களை இம்மரத்திற்கு நெருங்காதீர்கள் என்று விலக்க வில்லையா? ஷைத்தான் உங்களுக்

குப் பகிரங்க விரோதி என்று நான் அறிவிக்கவில்லையா?" என்று வினவினான். அவ்விருவரும் தங்கள் தவறை உணர்ந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டனர்.

இறைவனது தடை உத்தரவு ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்குத் தெரியும். ஆனாலும், இப்லீஸ் குயுக்தி சொல்லி அவரை ஏமாற்றி விட்டான். அதாவது அம்மரத்தினண்டையிற் செல்ல வேண்டாம் என்றுதான் அல்லாஹ் தஆலா விலக்கினான். அம்மரத்துக் கனியைப் புசிக்க வேண்டாமென அவன் விலக்க வில்லை. ஆதலால், அதனைப் புசிப்பது குற்றமல்ல" என்று கூறினான். "அம்மரத்தினண்டையில் நெருங்காதீர்கள்" என்ற கட்டளையில் அதிலுள்ள கனிகளையும் புசிக்கலாகாது என்ற விபரம் தொக்கி இருந்தாயினும், இப்லீஸுடைய ஏமாற்றுதல்களை அவர்கள் மெய்யென நம்பிவிட்டார்கள். அதில் தொக்கி இருந்த கருத்தை அவர்கள் உணரவில்லை. ஆதலால், அம்மரத்துக் கனியைப்புசித்து விட்டார்கள். அப்புறம் இறைவன் அவர்களைக் கண்டித்தபோதுதான் அவ்விலக்கலில் தொக்கி இருந்த உட்கருத்தை உணர்ந்து, தாங்கள் தவறி விட்டதை ஒப்புக் கொண்டு, மன்னிப்புக் கேட்டார்கள். இவர்கள் குற்றம் செய்தும் கூட, தங்களது குற்றத்தை நியாயமென ருஜுப் படுத்த முயலாததால், அவர்களை இறைவன் மன்னித்தான். ஆயினும், அவர்களைச் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றி நீங்கள் உலகில் சென்று வாழுங்கள்; அப்புறம் மரித்து, அங்கேயே அடக்கமாகி அங்கிருந்து எழுப்பப் படுவீர்களென்று அனுப்பிவிட்டான். இதன் பயனாக இவர்கள் இவ்வுலகுக்கு வந்தார்கள்.

எனவே, ஷைத்தானும் இவ்வுலகுக்கு வந்து ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களது மக்களாகிய மனித வர்க்கத்

தினரை தனது தன்மார்க்கத்தின்பால் இழுப்பதற்காகப் பல விதத்திலும் முயன்று வருகிறான். ஆனால், அல்லாஹ் தஆலாவின் நல்லடியார்களிடம் அவனது முயற்சி பலிதமடைவதில்லை; மற்றவர்கள் வழி விலகிச்சென்று விடுகின்றனர்.

மனித வர்க்கத்தின் முதல் நபி

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களிலிருந்துதான்மனிதர் வர்க்கம் இவ்வுலகிலுண்டாயிற்று. அவர்கள்தான் மனித வர்க்கத்திற்கு முதல் பிதா. அல்லாமலும், அவர் அல்லாஹ் தஆலாவினது நபியாக இருந்து, அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளைத் தமது மக்களுக்கு அறிவித்து, சன்மார்க்கத்தைப் போதித்து வந்தார்கள். ஆதலால், ஆதம் (அலை) அவர்கள் மனித வர்க்கத்திற்கு முதல் நபியாக இருப்பதுபோல முதலாவது மனிதராகவும், மூல பிதாவாகவும் இருக்கிறார்கள்.

ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்கள்

உலகில் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களது சந்ததியினர் பெருகினர். ஷைத்தான் அவர்களை வழி கெடுத்தான். அவர்களிற் பெரும்பாலோர் வழி விலகி விக்கிரக ஆராதனை செய்ய வாரம்பித்தனர். இவர்களை நேர் வழியில் திருப்புவதற்காக, இவர்களிலேயே ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்களை நபியாக ஆக்கினான். அவர் தமது சமூகத்தாரிடம் இறைவனது சன்மார்க்கத்தை போதித்து, அவனது கட்டளையை அறிவித்து, அவனுக்கு இணைவைத்து வணங்க வேண்டாமென ஜனங்களிடம் பிரசாரம் செய்தார்கள்.

ஜனங்கள் அவரது உபதேசங்களை நம்பவுமில்லை. அவரை நபியெனஏற்றுக்கொள்ளவுமில்லை. அவரதுபிரசாரத்தைத்தடுத்து, பல விதத்திலும் அவருக்குக் கஷ்டங்களையும் தொந்தரவுகளையும் விளைவித்தனர். நூற்றுக் கணக்கான வருஷங்கள் பிரசாரம் செய்தும் வெகு சொற்ப ஜனங்கள் மட்டிலுமே சன்மார்க்கத்தைத் தழுவினர். இறுதியாக ஹஜ்ரத் நூஹ¤ (அலை) அவர்கள், காபிர்களைக் குறித்து இறைவனிடம் முறையிட்டார்கள். அவரது முறையீட்டை இறைவன் அங்கீகரித்து, ஒரு பெரிய கப்பல் செய்துகொள்ளும்படி ஹஜ்ரத் நூஹ¤ (அலை) அவர்களுக்கு கட்டளையிட்டான். கப்பல் தயாரான பிறகு மழை பொழிந்தது. எங்கும் ஜலப் பிரளய மேற்பட்டது. ஹஜ்ரத் நூஹ¤ (அலை) அவர்களும் சன்மார்க்கத்தைத் தழுவிய மற்றவர்களும் அக் கப்பலில் ஏறிக்கொண்டனர். காபிர்கள் யாவரும் ஜலத்தில் மூழ்கி மரித்தனர். அப்புறம் ஜலம் வற்றிய பிறகு இவர்களில் அல்லாஹ¤ தஆலா பரக்கத்தை அருளினான்.

ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள்

அப்புறம் வெகு காலத்திற்குப் பிறகு, ஜனங்களிடம் மறுபடியும் துன்மார்க்கம் பரவிற்று. பாபில் என்ற இடத்தில் அரசாட்சி செய்து கொண்டிருந்த நம்றூத் என்ற அரசன் தன்னைப்போல விக்கிரகம் செய்து வைத்து, அதனை வணங்க வேண்டும் என தனது பிரஜைகளுக்குக் கட்டளையிட்டான். அரசனது கட்டளைக் கிணங்கிப் பிரஜைகளும் நடந்து வந்தனர். இங்கு ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை இறைவன் நபியாக அனுப்பினான். இவர்கள விக்கிரக ஆராதனை தெய்வ சம்மதமில்லையென்பதை விளக்கி பொது ஜனங்களிடம் பிரசங்கித்தார். ஒருவரும் கேட்க

வில்லை. ஒரு முறை எல்லாரும் ஒரு விசேஷ தினத்தைக் கொண்டாடும் நிமித்தமாக ஊருக்கு வெளியிற் சென்றிருந்த போது, அங்குள்ள பெரிய கோவிலிலிருந்த சிறிய விக்கிரகங்களை எல்லாம் உடைத்து விட்டு, பெரிய விக்கிரகத்தின் கழுத்தில் ஒரு கோடறியை மாட்டி வைத்து விட்டார்.

வெளியிற் சென்ற ஜனங்கள் வந்து பார்த்தபோது, இவ்வேலை செய்தவர் இப்ராஹீம் (அலை) அவர்களாகத் தானிருக்கவேண்டும் எனத் தீர்மானித்து, அவரை விசாரித்தனர். அவர் கோவிலுக்குட் சென்று, சிறிய விக்கிரகங்கள் உடைந்திருப்பதையும், பெரிய விக்கிரகத்தின் கழுத்தில் கோடறி இருப்பதையும் பார்த்தால், நீங்கள் இல்லாதபோது பெரிய சாமிதான் சின்னச் சாமிகளை உடைத்து விட்டது போல் தோன்றுகிறது, அந்தச் சாமியைக் கேட்டுப் பாருங்கள் என்று கூறி, அதனை அறிவிக்கச் சக்தி இல்லாத விக்கிரகத்தை ஏன் வணங்குகிறீர்கள் என்று உபதேசம் செய்தார்.

இவ்விஷயம் அரசனுக்கு எட்டிற்று. அரசனுக்கும் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் வாக்கு வாதம் நடந்தது. "எனது றப்பு ஜீவிக்கச் செய்வான், மரிக்கவும் செய்வான்" என்று இப்ராஹீம் (அலை) கூறினர். உடனே, அவ்வரசன் "நானும் ஜீவிக்கச் செய்வேன்; மரிக்கச் செய்வேன்" என்று கூறி, சிறைச்சாலையிலிருந்து இரு கைதிகளைக் கொண்டு வந்து அவர்களிலொருவரை விடுதலை செய்து, மற்றொருவரைத் தூக்கிலிட்டான். உடனே இப்ராஹீம் (அலை) அவர்கள் "எனது றப்பு சூரியனைக் கீழ் திசையில் உதயமாகச் செய்கிறான். அதை நீ மேற்குத் திசையில் உதயமாகச் செய், பார்க்கலாம்" என்றார். அவன் இவ் வாக்குவாதங்களில் தோல்வியடைந்தான்.

பிறகு, அரசன், இவரை சும்மா விட்டால் தனது தெய்வீகத்தன்மைக்கும் அரசாங்கத்திற்கும் ஆபத்து வந்து விடும் என நினைத்து, அவரை நெருப்புக்குன்றத்தில் தள்ளி விட முடிவு செய்து, பெரிய நெருப்புக் குன்றத்தை உண்டு பண்ணி அதில் தள்ளினான். அந்த நெருப்பு, இறைவன் கட்டளைப்படி அவரைக் கரிக்கவில்லை. அது அவரைப் பொறுத்த வரையில் பூங்காவாக இருந்தது. அப்புறம், இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் தமது மனைவி ஸாராவுடனும், சகோதரரின் புதல்வர் லூத் (அலை) அவர்களுடனும் அந்த நாட்டைவிட்டு ஹிஜ்றத்துச் செய்து வெளியேறி எகிப்துவரை வந்தார். அங்கு அவருக்கு, ஹாஜரா என்ற இரண்டாவது மனைவியை விவாகம் செய்ய சந்தர்ப்பம் வாய்த்தது. இவ்விரண்டாவது மனைவியினிடத்தில் அவரது முதலாவது புதல்வர் இஸ்மாயீல் (அலை) பிறந்தார்கள். அப்புறம் பதினொன்று வருஷங்கள் கழித்து, முதல் மனைவி ஸாராவின் வயிற்றில் இஸ்ஹாக் (அலை) அவர்கள் இரண்டாவது புதல்வராகப் பிறந்தார்கள்.

இஸ்மாயீல் (அலை) அவர்களை இறைவன் கட்டளைப்படி அறபு நாட்டில் இப்ராஹீம் (அலை) அவர்கள் குடியேற்றினார்கள். இவரது சந்ததியில்தான் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள்

இவர், இப்ராஹீம் (அலை) அவர்களால் இறைவன் கட்டளைப்படி அறப் நாட்டில் குடியேற்றப்பட்ட பிறகு இவரது உணவிற்கும் பானத்திற்குமாக இறைவன், அந்நாட்டிலுள்ள பாரான் வனத்தில் ஜம் ஜம் என்ற கிணற்றை அற்புதமாக உற்பத்தி செய்தான். அங்கு திருமக்கா என்

னும் பட்டணத்தையும் உண்டாக்கினான். கஃபா என்ற பெயருள்ள தேவாலயத்தைப் புதுப்பித்துக் கட்டும்படி இறைவன், இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கட்டளை யிட்டான். அவர் கட்டிய இவ்வாலயத்திற்கு ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் துணையாக இருந்து, கட்டிட வேலையை நிறை வேற்றினார்கள்.

கட்டிட வேலையை முடித்த பிறகு இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடும்படி இறைவன் கட்டளை யிட்டான். தமக்குக் கிடைத்த கட்டளையை இப்ராஹீம் (அலை) தமது புதல்வரிடம் கூறி, அவரது மன உணர்ச்சியைச் சோதித்தபோது, அவர் மிகச் சந்தோஷமாக அதற்கிசைந்து, இறைவன் கட்டளைப்படி தம்மை பலி யிட்டு விடுமாறு தமது தந்தையை வேண்டியதுடன், "அல்லாஹ் தஆலா நாடினால் தம்மைப் பொறுமையாளர்களில் ஒருவராகக் கண்டு கொள்வீர்கள்" என்றும் கூறினார்.

அப்புறம், அவர் அறுக்கப்பட்டார். ஆயினும், இறைவனுக்கு நர பலி பிரிய மில்லாததால், ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவரது தியாக உணர்ச்சியை இறைவன் அங்கீகரித்து, அவர் அறுக்கப்படாமல் காப்பாற்றியதுடன், அவருக்குப் பதிலாக ஒரு ஆட்டைப் பலியிடுமாறு கட்டளை யிட்டான். அன்று முதல் உலகில் நர பலி தெய்வ சம்மத மில்லாத காரியம் என ஏற்பட்டது. அதன் ஞாபகார்த்தமாக முஸ்லிம்கள் வருஷந்தோறும் குர்பானி செய்து வருகின்றனர். இவரையும் இறைவன் நபியாக ஆக்கினான். இவர் திருமக்காவில் சன்மார்க்கத்தை போதித்துக் கொண்டும், திரு கஃபாவில் வணங்க வருபவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டு மிருந்தார்கள்.

பனூ இஸ்ராயீல்

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களது இரண்டாவது புதல்வரான இஸ்ஹாக் நபி (அலை) அவர்களுக்கு யஃகூப் என ஒரு புதல்வர் இருந்தார். இவருக்கு இஸ்ராயீல் என்று ஒரு பெயர் இருந்தது. இவரும் நபியாக இருந்தார். இவருக்கு இறைவன் பன்னிரண்டு புதல்வர்களை அளித்தான். இவர்களில் யூஸுப் (அலை) அவர்களும் ஒருவர். இவர்மீது மற்றைய சகோதரர்கள் பொறுமை கொண்டு, இவரைத் தந்திரமாக அழைத்துச் சென்று, ஒரு பாழும் கிணற்றில் தள்ளிவிட்டனர். ஒரு வியாபாரக் கூட்டத்தினர் அவரை அக்கிணற்றிலிருந்து வெளிப்படுத்தினர். ஆயினும், அச்சோதரர்கள் அவரைத் தங்கள் அடிமை என்று கூறி சொற்ப கிரயத்திற்கு அவர்களிடம் விற்பனை செய்து விட்டனர். அவ்வியாபாரக் கூட்டத்தினர் அவரை எகிப்து தேசத்திற் கழைத்துச் சென்று, அங்குள்ள "அஜீஸ்" என்ற அதிகாரிக்குக் கிரயம் செய்து விட்டனர்.

அவருக்கு ஆண் சந்ததி இல்லாததால், அவர் நபி யூஸுப் (அலை) அவர்களைப் புதல்வராக வளர்த்து வந்தார். அப்புறம் சில கஷ்டங்களெல்லாம் யூஸுப் (அலை) அவர்களுக்கேற்பட்டு, சில வருஷங்கள் வரை காராக்கிரக வாசமும் செய்ய நேர்ந்தது. இறுதியாக இறைவன் கிருபையால், அரசனது உத்தரவுப்படி சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்து எகிப்துக்கு "அஜீஸ்" என்ற அதிகாரப் பதவியை வகித்தார்கள்.

அக்காலத்தில் பெரும் பஞ்சம் வந்தது. எகிப்தியர்களை யூஸுப் (அலை) அவர்கள், பஞ்சத்திலிருந்து வெகு ஜாக்

இரதையாகக் காப்பாற்றினர்கள். அவரது சகோதரர்களும் கூட அவரிடம் வந்து, பஞ்ச நிவாரண உதவி பெற்றனர். அப்பொழுது அவரை இன்னார் என அவர்கள் உணரவில்லை. ஆயினும், யூஸுப் (அலை) அவர்கள் தம்மை இன்னார் என அவர்களுக்கு வெளிப்படுத்தி, தமது மாதா பிதா ஆகிய இருவரையும் அழைத்து எகிப்து தேசத்திற்கு குடி வரும் படிச் செய்தார். இவ்விதமாக ஹஜ்ரத் யஃகூப் (அலை) அவர்களும் அவரது புத்திரர்களும் எகிப்தில் குடியேறினர். இவர்களுக்கு இறைவன் அபிவிருத்தியை அளித்தான். ஆதலால், இவர்கள் லக்ஷக்கணக்கில் பெருகி விட்டனர். இவர்கள் இஸ்ராயீல் நபி அவர்களது சந்ததியினராக இருந்ததால் இவர்களுக்கு பனூ இஸ்ராயீல் என்ற பெயர் வந்தது.

இவர்களில் அநேக நபிமார்கள் தோன்றினர்கள். அநேகர் அரசர்களாகவும் ஆனர்கள். இவர்கள் ஹஜ்ரத் யஃகூப் (அலை) அவர்களது பன்னிரண்டு புதல்வர்களது சந்ததியினரானதால் இவர்கள் பன்னிரண்டு கோத்திரக் காரர்களானர்கள்.

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள்.

எகிப்து தேசத்தில் குடியேறிய பனூ இஸ்ராயீல் களது ஜனப் பெருக்கத்தைக் கண்ட எகிப்தரசனுக்குப் பயமுண்டாயிற்று. இவர்கள் தனது ராஜ்யத்தை பிடுங்கிக்கொள்வார்களோ என்றஞ்சினான். ஆதலால், இவர்களை அழித்துவிட வேண்டும் என மனத்தில் எண்ணிக்கொண்டு, இவர்களைக் கேவலமாக நடத்த வாரம்பித்தான். இவர்களில் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்து விடும்படி கட்டளை பிறப்பித்தான். இக்காலத்தில் இவர்களில் ஹஜ்ரத்

மூஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள். இவர் நபியாக இருந்ததால், இவர் பிறந்தவுடன் கொல்லப்படாமல் இவரை அற்புதமாகக் காப்பாற்றி, அரசனது அரண்மனையிலேயே இவர் வளருவதற்கான சந்தர்ப்பத்தையும் இறைவன் ஏற்படுத்தினான்.

அப்புறம் நபிப் பதவியை அடைந்த ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள், தமது சகோதரர் ஹாரூன் (அலை) அவர்களுடன் பிர்ஔனிடம் சென்று, பனூ இஸ்ராயீல்களை அக்கிரமம் செய்யலாகாது, அவர்களைத் தம்மிடம் ஒப்புவித்து விட வேண்டும் எனக் கூறி, தம்மை இறைவன் நபியாக அனுப்பி இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவ்வரசன் இவரை சூனியக்காரர் என்று கூறி எதிர்த்தான். அநேக அற்புதங்களையும் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் பிர்ஔன் அரசனுக்குச் செய்து காட்டினார்கள். அவன் அவைகளை அங்கீகரிக்காமல், நாளுக்கு நாள் அதிகமாக எதிர்த்து வந்தான். இறுதியாக பனூ இஸ்ராயீல்களை ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் அழைத்துக்கொண்டு அத்தேசத்தை விட்டு வெளியேறினார்கள். இவர்களைக் கைது செய்ய, எகிப்தரசன் பெரும்படையுடன் வந்தான். இறைவனது கட்டளைப்படி பனூ இஸ்ராயீல்களுக்கு சமுத்திரம் வழி விட்டது. அவர்கள் அதில் நடந்து அக்கரை சேர்ந்தனர். எகிப்தரசன் தனது படைகளுடன் அக் கடல் வழியில் வரும்போது, கடல் ஜலம் அவர்களைச் சூழ்ந்தது. எகிப்தரசனும் அவனது சேனைகளும் ஜலத்தில் மூழ்கி மடிந்தனர்.

பின்னர், பனூ இஸ்ராயீல்கள் ஷாம் தேசத்தில் குடியேறி வசித்தனர். ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் தௌராத் என்ற வேதத்தை அருளினான்.

ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்கள்

ஷாம் தேசத்தில் பனூ இஸ்ராயீல்கள் மிகவும் கௌரவமாக வாழ்ந்தனர். ஆனாலும், இவர்கள் அடிக்கடி வேதக் கட்டளையை மீறி வந்ததால், இவர்களில் அநேக நபிமார்களை இறைவன் உற்பத்திசெய்து, சன்மார்க்க உபதேசத்தை செய்யும்படி கட்டளை யிட்டான். இவ்வாறு வந்த நபிமார்களில் ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்கள் முக்கியமானவர்கள். இவர் பனூ இஸ்ராயீல்களுக்கு விரோதியாக இருந்தவர்களை எதிர்த்து யுத்தம் செய்தார். இவர் நபியாக இருந்ததுடன், அரசராகவும் ஆனார்கள். இவருக்கு இறைவன் ஜபூர் என்ற ஒரு வேதத்தை அருளினான். இவர் புதல்வர்தான் ஹஜ்ரத் ஸுலைமான் (அலை) அவர்கள். இவர் அரசராகவும் நபியாகவு மிருந்தார். ஹஜ்ரத் தாவூத் (அலை) அவர்கள் எருஸலேம் என்ற நகரில் பைத்துல் முகத்தஸ் என்ற மஸ்ஜிதைக் கட்ட அஸ்திபார மிட்டார். ஹஜ்ரத் ஸுலைமான் (அலை) அவர்கள் அதனைக் கட்டி முடித்தார். இம்மஸ்ஜிதுக்கு மஸ்ஜிதுல் அக்ஸா என்றும் ஒரு பெயருண்டு.

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள்

பனூ இஸ்ராயீல்கள் அடிக்கடி வேதக் கட்டளைகளை மீறி வந்தனர். இவர்களைத் திருத்துவதற்காக ஆயிரக்கணக்கான நபிமார்கள் இவர்களில் தோன்றினர். இவர்கள் யாவரிலும் கடைசியாக வந்த நபி ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள். இவர் தகப்பன் இல்லாமல் தெய்வீகமாய் பிறந்தார். இவரது தாயார் பெயர் ஹஜ்ரத் மர்யம். இவர் நபிப் பதவியை அடைந்து சன்மார்க்கத்தைப் பிரசங்கித்தார். பிறவிக் குரு

டன், குஷ்டரோகி முதலியவர்களை எல்லாம் குணப்படுத்தினார். மரித்தவர்களை உயிர்ப்பித்தார். இவைபோன்ற வேறு பல அற்புதங்களையும் செய்தார். ஆயினும், பனூ இஸ்ராயீல்கள் இவர்மீது துவேஷம் கொண்டு பகைவர்களாயினர். இவர்களிலுள்ள அரசனிடம் இவர்மீது புகார்களைக் கூறினர். இறுதியாக இவரைக் கொன்றுவிட முயற்சி செய்து, கைது செய்து சிலுவையில் விட உத்தரவிட்டனர்.

இறைவன் இவரை நபியாக அனுப்பியதால் இவரை அற்புதமாகக் காப்பாற்றினான். இவரது முகத் தோற்றத்தைப்போலுள்ள வேறொருவரைக் கைது செய்து, அவரைச் சிலுவையில் அறைந்தனர். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் தன்பால் உயர்த்திக்கொண்டான்.

பனூ இஸ்ராயீல்களுக்கு இவர்பால் அதிக துவேஷமிருந்ததால் பல அவதூறுகளைக் கூறினர். மிகக் கேவலமான முறையில் தூஷணை செய்தனர்.

இவரைப் பின் பற்றியவர்களுக்கு "நாஸாரா" என்று பெயர். இவர்கள் இவரை அளவிற் கதிகமாக உயர்த்தி "கடவுள்" என்றும், "கடவுளுடைய புதல்வர்" என்றும் கூறினர். இறுதியாக திரியேக தத்துவம் என்று ஒரு மதக் கொள்கையை ஏற்படுத்தி, பிதா-குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்றும் ஒன்று என ஒன்றுக் கொன்று முரண்பட்ட கொள்கையை நிர்மாணித்திருக்கின்றனர் என்று கருதப்படுகிறது. இவருக்கு வேதம் அருளப்பட்டது. பனூ இஸ்ராயீல்களுக்கு யூதர் என்றும் ஒரு பெயருண்டு. இவர்களது சூழ்ச்சியால் நஸாராக்கள் எழுபத்திரண்டு கூட்டங்களாகப் பிரிந்து விட்டனர். நஸாராக்கள் யாவருக்கும் கிறிஸ்துவர்கள் என்று பெயர்.

ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்

உலக நாகரீகத்திற்கும் ஜனப் பெருக்கத்திற்கும் தக்க வாறு நபிமார்களைப் பற்பல தேசங்களிலும் இறைவன் தோற்றுவித்து, அவ்வவ்விடங்களில் வாழும் ஜனங்களுடைய தன்மைகளையும் ஒழுக்கங்களையும் திருத்துவதற்கேற்ற சட்ட திட்டங்களையும், ஏவல் விலக்கல்களையும் அருளினான். இம்முறையில்தான் மேற்கண்ட நபிமார்கள் தோன்றினர் கள். இனி உலக நாகரீகம், உச்சஸ்தானத்தை அடைபக் கூடிய நிலைமைக்கு வந்தது. ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் போக்கு வரவு ஏற்பட்டு அதற்குரிய சாதனங்களு முண்டாயின. ஆதலின், இனி ஒவ்வொரு தேசத்திற்கும தனித்தனியே நபிமார்கள் தேவை இல்லை; ஒரு மத்திய இடத்தில் ஒரு பொது நபியை அனுப்பி, அவருக்கு உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு வேதத்தை அருளுவது போதுமானதாக இருந்தது. எனவே, யாவருக்கும் கடைசியில் திரு மக்காவில் முஹம் மது (ஸல்) அவர்களை இறைவன் நபியாக அனுப்பினான். திருக்குர்ஆன் என்ற வேதத்தையும் அருளினான். அவர் கள் திரு மக்காவில் 40 வது வயதில் நபிப் பதவியைப் பெற்று,பதின் மூன்று ஆண்டுகள் வரை சன்மார்க்கப் பிரசா ரம் புரிந்தார்கள்.

இங்கு வசிப்பவர்களில் சிலர் சன்மார்க்கத்தைத் தழுவி னர். பெரும்பாலர் சன்மார்க்கத்திற்கு விரோதிகளானர்கள். இஸ்லாம் மதப் பிரசாரத்தைப் பலமாக எதிர்த்தனர். ஆத லால், திரு மக்காவை விட்டு, ஹிஜ்றத்துச் செய்து திருமதீ

ஞவில் குடியேறும்படியாக இறைவன் கட்டளையிட்டான். இக்கட்டளைக் கேற்ப 53-ம் வயதில் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற் குடியேறினார்கள். அப்புறம் திரு மக்கா வாசிகளுடனும், இதர மத வாதிகளுடனும் யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. இறுதியாக திரு மக்கா 8-வது வருஷத்தில் வீழ்ச்சியடைந்தது. இதர மத வாதிகளும் அடங்கினர். ஜனங்கள் கூட்டங் கூட்டமாக இஸ்லாமிய சன் மார்க்கத்தைத் தழுவினர். அறப் நாடு முழுவதிலும் இஸ்லாம் பரவிற்று.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபியாகவும் அவர்களுக் கருளப்பட்ட வேதம் இறுதி வேதமாகவும், இஸ்லாமிய சன்மார்க்கம் உலகத்தின் பொது வேதமாகவும் இருப்பதால், உலகமெங்கும் இது பரவ வேண்டியதாக இருந்தது. ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உலகத்திலுள்ள அரசர்களுக்குக் கடிதங்களை எழுதி சன்மார்க்க போதனை செய்ததுடன், இம்மதத்தை உலக மக்களிடம் பரவச் செய்ய வேண்டும் என தமது சிஷ்யர்களான ஸஹாபிகளுக்குக் கட்டளையு மிட்டார்கள்.

அந்த ஸஹாபிகளும், அவர்களுக்குப் பின் வந்த முஸ்லிம் பெரியோர்களும் தங்களுக்கு கட்டளையிடப்பட்ட பிரகாரம் உலகில் பல பாகங்களுக்கும் சென்று, இஸ்லாம் மதத்தைப் பிரசங்கித்தார்கள். இதன் பலனாக உலகத்திலுள்ள எல்லா சமூகத்திலும் இஸ்லாம் மதம் பரவி, கோடிக் கணக்கான ஜனங்கள் இப்பொழுது முஸ்லிம்களாக இருக்கிறார்கள். இனி ஒரு காலத்தில் உலகம் முழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களும் முஸ்லிம்களாவார்கள்.

வேதங்கள்

அல்லாஹ் தஆலா உலக மக்களிடம் தனது நபிமார்களை அனுப்பி, தனது கட்டளைகளையும் அருளினான். இவை ஸுஹுபுகள் என்றும் வேதங்கள் என்றும் இரண்டு வகையாக இருக்கின்றன. நாகரீக மில்லாத காலத்தில் ஜனங்களது நடத்தைகளில் சில வற்றைத்திருத்த அருளப்பட்டவைகளுக்கு ஸுஹுபுகள் என்று பெயர். இவை மொத்தம் 100 ஸுஹுபுகள். ஒரு சொற்படி 110 ஸுஹுபுகள் என்றுஞ் சொல்லப்படுகிறது. இவை ஹஜ்ரத் ஆதம் (அலை), ஹஜ்ரத் இத்ரீஸ் (அலை), ஹஜ்ரத் நூஹ் (அலை) ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) ஆகிய நபிமார்களுக்கு அருளப்பட்டன.

ஹஜ்ரத் மூஸா (அலை), ஹஜ்ரத் தாவூத் (அலை), ஹஜ்ரத் ஈஸா (அலை), ஹஜ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகிய நபிமார்களுக்கு முறையே தௌராத், ஜபூர், இன்ஜீல், புர்க்கான் ஆகிய நான்கு வேதங்களும் அருளப்பட்டன.

இவைகளில் முந்திய வேதங்கள் யாவும் தனித்தனியே பற்பல சமூகத்தாருக்கு மட்டிலும் அருளப்பட்டன. அவைகள் ஜனங்களால் பாதுகாக்கப்படாமல் தவறிப்போய் விட்டன. அவ்வேதங்களின் பெயர்களால் இக்காலத்தில் சில கிரந்தங்களிருக்கின்றன. ஆயினும், அவைகள் அந்தந்த நபிமார்களுக்கு இறைவன் அருளிய உண்மை வேதங்களல்ல என்பது முஸ்லிம்களது நம்பிக்கை.

இறுதியான குர்ஆன் வேதம் உலகத்திற்குப் பொது வேதமாகவும், உலக முடியும்வரை அமலில் இருக்கவேண்டிய வேதமாகவுமிருப்பதால், இது கெட்டுப் போகாதிருக்கத் தக்கவசதிகளை இறைவன் ஆரம்பமுதற்கொண்டே ஏற்படுத்தி

னன். இதனைச் சுலபமாக ஜனங்கள் பாடமிட்டுக் கொள்ளும் பொருட்டு 23 வருஷ காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அருளினன். முஸ்லிம்கள் இதனைப் பாடமிட்டனர். இறுதியாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை எழுதி வைக்கவும் ஏற்பாடு செய்தார்கள். ஆதலால், அவர்கள் காலத்திலேயே அது சம்பூரணமாக எழுதி வைக்கப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானவர்கள் அதனை ஆரம்ப முதல் கடைசிவரை வரிசைக் கிரமமாக, பார்க்காமல் ஒப்புவிக்கக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. அன்று முதல் இன்று வரை அது எழுத்து மூலம் அச்சியற்றப் படுவதுடன், ஆயிரக்கணக்கானவர்களால் பாட மிடப்பட்டும் வருகிறது. ஆதலால், சன்மார்க்க விரோதிகள் அதனைத் திருத்தவோ புரட்டவே முடியவில்லை. எனவே, திரு குர்ஆன் என்ற புர்க்கான் வேதம் அன்று இறைவனருளிய பிரகாரம் இன்றும் இருந்து வருகிறது. இவ்வுலகம் முடிவடையும்வரை இது இருந்து வரும்.

கியாமத்து நாள்

இவ்வுலகம் ஒரு நாளில் அழியும். அது அழியும் தினம் எது என்பதைக் குறிப்பாக ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. அதனை அல்லாஹ் தஆலாதான் அறிவான். ஆனல், உலக முடிவுக்காண காலம் நெருங்கும் சமயத்தில், சில அறிகுறிகள் வெளியாகும். அவ்வறி குறிகளால் உலகம் இனி சீக்கிரத்தில் அழிந்துவிடும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உலகம் முடிவடையும் காலத்தில் மலைகளெல்லாம் தவிடு பொடியாகிவிடும். பூமி அதிரும். சமுத்திரம் பொங்கும். ஜீவனுள்ள பிராணிகள் யாவும் இறந்துபோம்.

அப்புறம் சிறிது காலத்திற்குப் பிறகு, இறைவன் மறுபடியும் இவ்வுலகை உற்பத்தி செய்வான். மரித்தவர்கள் யாவரும் உயிர் பெற்றெழும்புவார்கள். ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த நன்மை தீமைகளைக் குறித்து இறைவனிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டியதேற் படும். நன்மை செய்தோர் சுவர்க்கத்திற் கனுப்பப்படுவர். தீமை செய்தோர் நரகம் புகுவர். ஆனால், இவ்வுலகில் ஈமான் கொண்டு, அவனது சன்மார்க்கத்தை தழுவாதிருந்தவர்கள் செய்த நற்காரியங்களை இறைவன் அங்கீகரிக்க மாட்டான். அவர்களை இறைவன் மன்னிக்கவு மாட்டான். ஆதலால், அவர்கள் நரகில் பிரவேசிப்பர். அவர்களுக்கு மீட்சி இல்லை. மூமின்களாக இருந்து பாவங்களைச் செய்தோர் தங்கள் பாவங்களுக்குத் தக்கவாறு வேதனையை அடைந்து, நரகத்தைவிட்டு மீட்சி பெறுவர்.

அக்காலத்தில் இறைவனது தண்டனையைவிட்டு எவரையும் யாரும் காப்பாற்ற முடியாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனது உத்தரவுப்படி பாபிகளுக்காக மன்றாடி, அல்லாஹ்விடம் மன்னிப்பு வாங்குவார்கள். இதற்கு ஷபா அத்தே குப்ரா என்று பெயர். அப்புறம் மற்றைய நபிமார்கள் தங்கள் தங்கள் உம்மத்துமார்களுக்கு இறைவன் கட்டளைப்படி ஷபாஅத்துச் செய்வார்கள். ஒலிமார்களும் மற்றைய பெரியார்களும் கூட இறைவன் கட்டளைப்படி தங்கள் சிஷ்யர்களுக்கு மன்றாடுவார்கள்.

தக்தீர்

இவ்வுலகையும் அதிலுள்ள சகலத்தையும் சிருஷ்டித்த நாயன், அதன் நன்மை தீமைகளையும் அறிவான். மனிதர்களாகிய நாம் இவ்வுலக ஜீவியத்தில் என்னென்ன காரியங்

களைச் செய்வோம் என்பதையும் அறிவான். இவைகளெல் லாம் முன்னதாகவே எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. அன்று இறைவன் அமைத்த இவ்வேற்பாட்டிற்குமாறுக எதுவும் நிகழாது. இதற்கு தக்தீர் என்று பெயர். இறை வனது அறிவிற்குமாறுக எதுவும் நிகழாது என்பதுதான் இதன் கருத்து. ஆனால், சிலர் அறிவின்மையால் அனர்த் தம் செய்து கொண்டு தங்கள் அக்கிரமச் செய்கைகளுக்கும், சோம்பலுக்கும் "தக்தீரை" ஒரு திரையாக ஏற்படுத்திக் கொள்ள முயலுவதுடன், இதனைக் குறித்து வீண் வாதங்களும் செய்வர். இது முற்றிலும் தவறு. தக்தீரை எல்லாரும் நம்ப வேண்டும்.

மனிதன்

உலகிலுள்ள மனிதர்கள் யாவரும் அல்லாஹ¨ தஆலாவின் அடியார்களே. ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர் களது மக்களாவார்கள். அவரவர் தொழிலுக்குத் தக்கவாறு பிரிந்திருக்கின்றனர். உலகில் பல தேசங்களிலும் வாழ் வதால், நாட்டிற்குத் தக்கவாறு பாஷைகளைப் பேசுவதுடன் நிறத்திலும் வித்தியாச மடைந்திருக்கிறார்கள். ஆதலால், எல்லாரும் சமமே. எல்லாரும் சகோதரர்கள். அவர் களில் உயர்வு தாழ்வு இல்லை. ஆனால், சன்மார்க்கத்தை தழுவி, இறைவனுக்குப் பயபக்தி செய்து, நற்கிரியைகளைப் புரிவோர்தான் இறைவனிடம் கணணியம் பெற்றவர்கள். பொருள் இருப்பதால் மட்டிலுமோ, நிறத்தினால் மட்டி லுமோ, தொழிலால் மட்டிலுமோ இறைவனிடம் கண்ணி யத்தை அடைய முடியாது. பிறப்பால் உயர்வு தாழ்வில்லை. குணத்தாலும் தக்வாவினாலுமே மனிதனது கண்ணியமும் மேன்மையும் பெருகும். ஆதலால், முஸ்லிம்கள் யாவரும்

இஸ்லாமிய சன்மார்க்கத்தை கடைப்பிடித்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தங்கள் முன் மாதிரியாகக் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து வருவார்களாயின், உலக மக்களின் நன் மதிப்பை அடைவது மட்டுமில்லாமல், மறு உலகிலும் இறைவனது திருப்தியையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஷபாஅத்தையும் அடைய முடியும்.

கிரியா மார்க்கம் அதாவது இஸ்லாம் மதத்திலுள்ள கிரியை சம்பந்தமான காரியங்கள் யாவற்றிற்கும் ஐம்பெருங் காரியங்கள் அடிப்படையாக இருக்கின்றன. அவ்வைந்து காரியங்களுக்கும்,

أَرْكَانُ الْإِسْلَام

அர்க்கானுல் இஸ்லாம் என்று பெயர். அவை வருமாறு :—

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

முதலாவது அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ றஸூலுஹு என்ற கலிமாவை ஓதி, அதன் கருத்துகளை, உறுதி கொள்ளல்.

இரண்டாவது தினந்தோறும் ஐங்காலத் தொகைகளை நிறைவேற்றல்.

மூன்றுவது வருஷந்தோறும் தனவந்தர்கள் ஜக்காத் என்னும் மார்க்க வரி கொடுத்தல்.

நான்காவது வருஷந்தோறும் றமலான் மாதம் முழுவதும் பகல் காலங்களில் நோன்பு நோற்றல்.

ஐந்தாவது திரு மக்கா செல்ல, தகுதியுள்ளவர்கள் வயதில் ஒரு முறை திரு மக்கா சென்று ஹஜ்ஜுச் செய்தல்.

இவ்வைந்து காரியங்களுக்கும் இஸ்லாத்தின் பர்லுகள் என்றும், ருக்னுகள் என்றும் பெயர். இவைகளில் ஏதேதனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டதையோ ஒருவர் நிராகரிப்பாராயின் அவர் முஸ்லிமாகக் கருதப்படமாட்டார்.

இஸ்லாமின் வாஜிபுகள்

1. உம்றுச் செய்தல்.
2. மாதா பிதாக்களுக்கு, பணிவிடை செய்தல்.
3. கணவனுக்கு மனைவி ஊழியம் செய்தல்.
4. பித்ரு ஸதக்காக் கொடுத்தல்.
5. குர்பானி செய்தல்.
6. வித்றுத் தொழுகையை நிறை வேற்றுதல்.
7. பந்துக்களுக்குச் செலவுக்குக் கொடுத்தல்.

ஆகிய இவ்வேழு காரியங்களுக்கும் இஸ்லாமின் வாஜிபுகள் என்று பெயர்.

இஸ்லாமின் ஸுன்னத்துகள்

1. விருத்த சேதனம் செய்தல்.
2. தலை கூவரம் செய்தல்.
3. நாசி மயிரை அகற்றல்.
4. உதட்டு மயிரை சிறைத்தல்.

5. கம்முகட்டு மயிரைக் களைதல்.
6. கொப்புகளுக்குக் கீழுள்ள மயிரை அகற்றல்.
7. நகம் வெட்டல்.

ஆக இவ்வேழு காரியங்களுக்கும் இஸ்லாமின் ஸுன்னத்துகள் என்று பெயர். இவைகளை ஷரீஅத்தின் பர்லுகள், ஷரீஅத்தின் வாஜிபுகள், ஷரீஅத்தின் ஸுன்னத்துகள் என்றும் கூறுவர்.

முதலாவது ருக்னு

கலிமாக்கள்

இஸ்லாம் மதத்தில் முதலாவது ருக்ஞாக இருப்பது அல்லாஹுத ஆலாவை விசுவாசிப்பதுதான். இது இருதயத்திற்குச் சம்பந்தமானது. ஆதலால், இவ் விசுவாசம் உறுதியாக இருப்பதை அறிவிப்பதற்காக ஒரு முறையேனும் நாவால் அதனைக் கூற வேண்டும். இவ்விசுவாசப் பிரமாணம் ஐந்து கலிமாக்களாக வகுத் தெழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் வருமாறு :—

1. முதலாவது கலிமா தையிபா :—

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

லா இலாஹ இல்லல்லாஹுத முஹம்மதுர் ரஸூலுல்லாஹி.

"வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது (ஸல்) என்பவர் அல்லாஹ்வின் திருத் தூதர்" என்பது இதன் பொருள்.

2. இரண்டாம் கலிமா ஷஹாதத் :—

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ றஸூலுஹு.

"வனக்கத்திற் குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாறுமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு யாரும் இணையில்லை." என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன். இன்னும் "நிச்சயமாக முஹம்மது (ஸல்) என்பவர் அவனது அடியாராகவும் திரு தூதராகவும் இருக்கிறார்" என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன்" என்பது இதன் பொருள்.

3. மூன்றாங் கலிமா தம்ஜீது

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَاللّٰهُ أَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வ லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், வ லா ஹௌல வ லா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

"அல்லாஹ் தூயவன், இன்னும் சர்வ புகழும் அல்லாஹ்விற்கே தகும். இன்னும் வனக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. மேலும், அல்

லாஹ் பெரியவன் இன்னும், மகத்தான உயர்வான அல் லாஹ்வைக் கொண்டல்லாமல் நன்மையான காரியங்களைச் செய்வதற்குச் சக்தியுமில்லை, பாபமான காரியங்களை விட்டுத் திரும்புவதற்குமில்லை." என்பது இதன் பொருள்.

4. நான்காம் கலீமா தெளஹீது.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَ
يُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து பியதிஹில் கைர் வ ஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்.

"வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரு மில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. அவனுக்குத்தான் அரசுரிமை இருக்கிறது. இன்னும் அவனுக்குத்தான் சர்வ புகழும் தகும். அவன் ஜீவிக்கச் செய்கிறான். இன்னும் மரிக்கச் செய்கிறான். அவனது கையிலேயே நன்மை யனைத்துமிருக்கின்றன. இன்னும் அவன் சகல வஸ்துவின்மீது பேராற்றலுள்ளவன்" என்பது இதன் பொருள்.

5. ஐந்தாம் கலீமா ரத்துல் குப்ர்

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ اَنْ اُشْرِكَ بِكَ شَيْئًا وَّاَنَا اَعْلَمُ وَاَسْتَغْفِرُكَ
لِمَا لَا اَعْلَمُ اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ تُبْتُ عَنْهُ وَتَبَرَّأْتُ عَنْ كُلِّ
دِيْنٍ سِوٰى دِيْنِ الْاِسْلَامِ وَاَسْلَمْتُ وَاَقُوْلُ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் அன் உஷ்ரிக்க பிக்க ஷையன் வ அன அஃலமு. வ அஸ்தஃபிறுக்க லிமா லா அஃலமு. இன்னக்க அன்த அல்லாமுல் குயூப். துப்து அன்ஹு; வ தபர்ரஉது அன் குல்லி தீனின் ஸிவா தீனில் இஸ்லாமி; வ அஸ்லம்து வ அக்கூலு லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி.

"நாயனே, நான் அறிந்து கொண்டே உனக்கு எவ் வஸ்துவையும் நான் இணைவைப்பதைவிட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். இன்னும், நான் அறியாததைக் குறித்து உன்னிடம் நிச்சயமாக மன்னிப்புக் கேட்கிறேன். நிச்சயமாக நீ தான் மறைவானவற்றை மிக அறிந்தவன். அதனைவிட்டு மீண்டேன். தீனுல் இஸ்லாமைத் தவிர்த்து ஏனைய சகல மார்க்கங்களையும் விட்டு நான் நீங்கி விட்டேன். இன்னும் நான் இஸ்லாமைத் தழுவிவிட்டேன். இன்னும், 'வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரு மில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதர்' என்று நான் கூறுகிறேன்" என்பது இதன்பொருள்.

இரண்டாவது ருக்னு

சுத்தம்

இரண்டாவது ருக்னுகிய தொழுகையைப் பற்றிக்கூறு முன், தொழுவதற்கு முன் நிறைவேற்ற வேண்டிய சில காரியங்களிருக்கின்றன. அவைகளை அறிந்து கொள்வது ஒவ் வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும். நம்மிலுள்ள ஒரு பெரியார் அல்லது ஒரு அதிகாரியை நாம் காணச் செல்

வோமாயின், நமது உடைகளை மாற்றி சுத்தமான உடைகளை அணிந்து கொள்கிறோம். அவசிய மேற்படின் உடலையும் சுத்தப்படுத்திக் கொள்கிறோம். பெரியவர்கள் முன்னிலையில் அவர்களது மனம் வெறுக்கத்தக்க முறையில் அழுக்காகவோ, அசங்கிதமாகவோ நாம் இருக்கக் கூடாது என்பதற்காக நம்மில் மனமும் பூசிக்கொள்கிறோம்.

அவ்வதிகாரியோ அல்லது பெரியார்களோ நமதூருக்கோ அல்லது நமதில்லத்திற்கோ விஜயம் செய்வதாக இருந்தால், அவர்கள் தங்குவதற்கு நல்ல வசதியுள்ள இடத்தைத் தெரிந்தெடுத்து, சுத்தம் செய்து, அதனை அலங்காரமும் செய்கிறோம். இதுபோல, நம்மைப் படைத்தாழும் ரட்சகனை நாம் சந்திக்கப் போகும்போது இதிலும் அதிகமான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியதிருக்கிறது. இம் முன்னேற் பாடுகளைத் தான் தொழுகையின் வெளி பர்லுகள் என்றும், ஷர்த்துகள் என்றும் கூறுகிறார்கள்.

இவ்வாறுன ஷர்த்துகளில் சுத்தம் என்பதும் ஒன்று. சுத்தம் என்பது இரண்டுவகை. ஒன்று அகச்சுத்தம், மற்றொன்று புறச் சுத்தம். ஒருவர் தன் தேகத்திலோ அல்லது உடையிலோ அழுக்கில்லாமல் இருப்பது மட்டிலும் போதாது. இஸ்லாம் மதத்தில் சுத்தம் என்பதற்கு அழுக்கில்லாமை என்பது பொருளல்ல, இஸ்லாம் மதத்தில் எந்தெந்த வஸ்துக்களை அசங்கிதமானவை எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவ்வசங்கிதங்களை விட்டு நீங்கி இருப்பதுவே இஸ்லாம் மதப்படி சுத்தமாகும். மனித உடம்பில் அழுக்கில்லாமல் தேய்த்து குளித்துவிட முடியாது. ஜலத்தினுள் நன்றாக மூழ்கி, அழுக்குத் தேய்த்து குளித்துக் கரை ஏறிய

பின்னரும் கூட உடம்பைத் தேய்த்தால் மறுபடியும் அழுக்குத் திரண்டு வருவதை ஒவ்வொருவரும் அனுபோகத்தில் தெரிந்திருக்கிறார்கள். ஆதலால், இஸ்லாம் மதம் அழுக்கிருப்பதையும், அழுக்கில்லாதிருப்பதையும் சுத்தத்திற்கு மாத்திரைக் கோலாக நிர்ணயிக்காமல், இயற்கையிலேயே மனிதனது தேக சுகத்தையோ ஆத்ம சுகத்தையோ கெடுக்கக்கூடியவைகளை அசங்கிதம் என்பதாக நிர்ணயித்து அவைகளை அகற்றவேண்டும் எனக்கட்டளையிட்டுள்ளது. ஆகவே, ஒருவர் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமாயின் நாம் மேலே கூறிய அகம், புறம் ஆகிய இரண்டு வகையிலும் சுத்தமாக இருக்கவேண்டும். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றில்லா விடினும், அவரது தொழுகை நிறைவேறாது.

மலம், சிறு நீர், உதிரம் போன்றவைகளைப் புற அசுத்தமாகக் கூறலாம். இவ்வாறான அசுத்தங்களை நீக்குவதற்கு ஜலம்தான் பிரதானமானது. ஜலம் அகப்படாவிடில், ஜலத்திற்குப் பதிலாக சுத்தமான மண்ணை உபயோகிக்கலாம். ஆதலின், முலலாவது ஜலத்தையும், அப்புறம் அதற்கு பதிலாக உபயோகிக்கத்தக்க மண்ணையும், அம்மண்ணை உபயோகிக்கும் விதத்தையும் குறித்து விபரிப்போம்.

ஜலம்

இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ளவாறு சுத்தப்படுத்தக்கூடிய ஜலம் ஏழு வகைப்படும்.

1. வானிலிருந்து இறங்கும்படியான ஜலம் அதாவது மழைத் தண்ணீர்.

2. சமுத்திர ஜலம்.

3. ஆற்று நீர்.
4. கிணற்று ஜலம்.
5. பனிக்கட்டி உருகிய ஜலம்.
6. ஊற்று ஜலம்.
7. பனி நீர்.

மேற் கூறப்பட்ட ஏழுவகை ஜலங்களையும் ஐந்து விதமாகப் பிரிக்கலாம்.

1. தானும் சுத்தமாக இருந்து கொண்டு, மற்றதைச் சுத்தப்படுத்தக் கூடியது.

2. தானும் சுத்தமாக இருப்பதுடன் மற்றதையும் சுத்தப்படுத்துமாயினும், இவைகளைக்கொண்டு சுத்தம் செய்வது மக்ரூஹாக அதாவது வெறுக்கத் தக்கதாக இருப்பவைகள். வீட்டில் வளர்கிற பூனை, கோழி, எலி, ஸர்ப்பம், மாமிச பக்ஷிணியான பறவைகள் போன்ற மிருகங்கள் வாய் வைத்த ஜலம் போன்றவைகளை இவ்வினத்திற் சேர்க்கலாம்.

3. சுத்தமாக இருந்தாலும், மற்றதைச்சுத்தப்படுத்தக் கூடாத ஜலம். ஒலுச்செய்வதற்கு உபயோகித்த ஜலம், விருக்ஷத்தின் ஜலம், பழ ரசம், இள நீர், கடலை பருப்பு கொள்ளு போன்றவைகளை வேக வைத்த ஜலம், கெட்டியான வஸ்துக்கள் கலந்ததால் திரவத்தன்மை மாறிய ஜலம், பால்போன்ற திரவ பதார்த்தம் கலந்து அதில் நிறமாவது ருசியாவது மாறிய ஜலம், நிறம் ருசி வாடை ஆகிய மூவகைக் குணமுள்ள காடிபோன்றவைகள் கலந்து இவைகளில் ஏதேனும் இரண்டு தன்மைகள் மிகைத்துள்ள ஜலம், நிறம் ருசி வாடை ஆகிய மூவகைக் குணங்களில் எதுவுமே இல்லாத திரவ பதார்த்தம் அல்லது உபயோகித்த ஜலம்

போன்றவைகள் அதிகமாகக் கலந்த ஜலம், வாடை நீக்கப் பன்னீர் அதிகமாகக் கலந்த ஜலம் போன்றவைகள் இவ் வினத்தைச் சேர்ந்தவைகள்.

4. பத்து முழ நீளமும் பத்து முழ அகலமுமுள்ள தொட்டிக்கும் குறைவாகவுள்ள, ஓட்டமில்லாத ஜலத்தில், இஸ்லாமிய ஷரீஅத்தில் அசங்கிதமாகக் கருதப்படும் வஸ்து கலந்து, அசங்கிதமாகி விட்ட ஜலம். அசங்கிதமான பொருளின் ருசியாவது வாடையாவது வெளியான ஜலம் போன்றவைகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

5. கழுதை, கோவேறு கழுதை குடித்து மிஞ்சிய ஜலம். இவைகள் அருந்திய ஜலம் சுத்தப்படுத்தக் கூடியனவா என்பதில் சந்தேக மிருப்பதால் இவ்வாறான சந்தேகாஸ்பதமான ஜலங்களும் ஒரு வகையாகப் பிரிக்கப் பட்டன.

மேற்கண்ட ஐந்து விதமான ஜலங்களில் முதலாவது வகை ஜலம்தான் மிக ஏற்றது. அது இல்லா விட்டால் இரண்டாம் வகையான ஜலத்தை உபயோகிக்கலாம். மூன்றாவது நான்காவது வகையான ஜலம் சுத்தப்படுத்துவதற்குத் தகுதியில்லை. ஐந்தாவதுவகையான ஜலத்தை உபயோகப்படுத்தலாம். ஆனால், அத்துவதுடன் தயமமும் செய்யவேண்டும்.

எச்சல்

நூறு சதுர முழத்திற்கு குறைவாகவுள்ள தடாகம் அல்லது நீர் நிலையம் அல்லது தொட்டிகளில் தேங்கி நிற்கும் ஜலத்தில் மனிதன் வாய் வைத்துக் குடித்து எஞ்சிய ஜலம் அசங்கிதமான ஜலமாகாது. ஆனால், அம்மனிதனின்

வாயில் அசங்கிதமிருந்து, அது ஜலத்தில் கலந்திருக்கக் கூடாது. முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார், ஜுனுபாளி, ஜுனு பல்லாதார், மாதவிடாய், பேற்றுதிரம் போன்றவை களுள்ள ஸ்திரீ அவையல்லாத ஸ்திரீ என்ற பாகு பாடு இல்லை. இவர்களது வாயில் அசங்கிதமிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி மட்டிலும்தான் கவனிக்கவேண்டும். அசங்கித மில்லாதிருந்தால் அந்த ஜலத்தில் ஒலுச் செய்து தொழலாம்.

நாய், பன்றி, புலி, ஓநாய் போன்ற மிருகங்கள் வாய் வைத்தருந்தி, எஞ்சிய ஜலம் அசுத்தமானது. அவைகளில் ஒலுச் செய்யலாகாது.

வீட்டுப் பூனை போன்றவைகள் வாய் வைத்தருந் திய ஜலத்தைத் தவிர வேறு சுத்தமான ஜலம அகப்படாவிடில் இதனுல் ஒலுச் செய்யலாம். வேறு சுத்தமான ஜலம் இருக்கும்போது இவ்விதமான ஜலத்தால் ஒலுச் செய்வது மக்றூஹ் தன்ஜீஹ். வீட் டுக் கழுதை போன்ற மிருகங்கள் வாய்வைத்தருந்தி எஞ்சிய ஜலம் சுத்தப்படுத்தக் கூடியதா என்பதில் சந்தேகமிருப்ப தால், அத்தகைய ஜலத்தைத் தவிர வேறு ஜலம் இல்லா விடில், அந்த ஜலத்தில் முதலாவதாக ஒலுச் செய்துவிட்டு, அப்புறம் தயம்மமும் செய்ய வேண்டும். முதலாவதாக ஒலுச் செய்வதுதான்மேல்.

கிணறு

பத்து முழ நீளம் பத்து முழ அகலமும் அதாவது நூறு சதுர முழ விஸ்தீரணமில்லாத கிணறு, நீர் நிலையம், தொட்டி முதலியவைகளிலுள்ள ஜலத்தில் அசங்கிதங்கள்

விழுந்தால் அல்லது மனிதன், நாய், எலி போன்ற மிருகங்கள் விழுந்தால் அந்த ஜலம் சுத்தமாகவே இருக்குமா? அல்லது அசுத்தமாகி விடுமா? என்பதைக் குறித்து இங்கு விவரிக்கப்படும்.

மேற் கூறப்பட்ட கிணறு முதலியவைகளில் மனிதன் விழுந்து இறந்துபோனாலும், ஆடு, நாய் போன்ற மிருகங்கள் விழுந்து செத்துப்போனாலும், பன்றி விழுந்தாலும்—இது சாக வேண்டும் என்ற அவசியமில்லை—உதிரம், சாராயம் ஆகிய அசுத்தமான திரவம் ஒரு துளி விழுந்தாலும், ஜலத்தில் விழுந்து மரித்து ஊதி உடைந்து விட்டாலும், சிறிய பிராணியாக இருந்தாலும்கூட, கிணற்று ஜலம் முழுவதையும் இறைத்துவிட வேண்டும். ஜலம் முழுவதையும் இறைக்க முடியாதென்றிருந்தால், அக்கிணற்றில் ஜலம் எடுப்பதற்கு உபயோகப்படுத்துகிற கடகால் அல்லது வாளிகளில் நடுத்தரமான தோப்பரையால் 200 இருநூறு கடகால் ஜலத்தை இறைத்துவிடவேண்டும். இரு நூறுக்குமேல் அதிகமாக ஒரு நூறு தோப்பரை ஜலம் இறைப்பது முஸ்தஹப்பு அதாவது விரும்பத்தக்கது. எவ்வாறாயினும் 200இரு நூறு தோப்பரைக்குக் குறையக் கூடாது. அல்லது அந்தக் கிணற்றிலுள்ள ஜலம் முழுவதையும் மதிப்பிட்டு அம் மதிப்பின் பிரகாரம் அதனை இறைத்துவிடவேண்டும்.

கோழி, பூனை அல்லது இதன் பரிமாண அளவுள்ள வேறு பிராணி விழுந்து மரித்து விட்டால், நாற்பது தோப்பரைக்குக் குறையால் ஜலத்தை இறைத்துவிட வேண்டும். 60 அறுபது தோப்பரைவரை இறைப்பது முஸ்தஹப்பு.

எலி, சிட்டுக் குருவிபோன்ற பருமனுள்ள பிராணிகள் விழுந்து இறந்துபோனால், இருபது (20) தோப்பரை

ஜலத்தை இறைத்துவிடவேண்டும். முப்பது (30) தோப் பரை ஜலம் இறைப்பது முஸ்தஹப்பு. மேற் கண்டவாறு ஜலத்தை இறைப்பதற்கு முன்னதாக அக்கிணற்றினுள் விழுந்த பிராணியை அப்புறப்படுத்திவிட வேண்டும்.

ஒட்டகை, ஆடு போன்ற பிராணிகளது புழுக்கை, குதிரை கழுதைபோன்ற பிராணிகளது லத்தி, மாடு போன்ற பிராணிகளின் சாணம் ஆகியவைகள் விழுவதால் மேற் கூறப்பட்ட கிணறு முதலியவைகள் அசுத்தமாகி விடாது. ஆயினும் உடனே அவைகளை அகற்றி விட வேண்டும். ஆனல், மேற் கூறப்பட்ட புளுக்கை, லத்தி, சாணம் முதலியவைகள் ஏராளமாக விழுந்து விட்டால், அப் பொழுது ஜலம் முழுவதையும் இறைத்துவிடவேண்டும்.

புறு, சிட்டுக் குருவி ஆகிய பறவைகள் எச்சமிடுவதா லும், மனிதர் புசிப்பதற்கு விலக்கப்படாத பறவைகள் எச்சமிடுவதாலும் கிணற்று ஜலம் அசுத்தமாகி விடாது.

மீன், தவளைபோன்ற ஓடும்படியான உதிரமற்ற ஜந்துக் கள் ஜலத்தில் மரித்து விடுவதால் ஜலம் அசுத்தமாகாது. தேள், ஈ, கொசு, குழவிபோன்றவைகள் ஜலத்தில் விழுந்து மரிப்பதால் ஜலம் அசுத்தமாகாது. மனிதன் ஜலத்தில் இறங்குவதால், அல்லது புசிக்க அனுமதிக்கப்பட்ட பிராணி கள் ஜலத்தில் இறங்குவதால், ஜலம் அசுத்தமாகாது. ஆனல், மனிதன் அல்லது இப்பிராணிகளின் தேகத்தில் அசங்கித மான பொருள்களிருந்து அவைகள் ஜலத்தில் கலந்து விட்டால், ஜலம் அசுத்தமாகிவிடும். இராஜாளி, பருந்து போன்ற புசிக்கக்கூடாத பக்ஷிகளும், கழுதை, கோவேறு கழுதைபோன்ற மிருகங்களும் ஜலத்தில் இறங்கிவிடுவதால், ஜலம் அசுத்தமாகாது. ஆனல், அவைகளது உமிழ் நீர்

ஜலத்துடன் கலந்தால், அவ்வுமிழ்நீர் சுத்தமானதா? அசுத்தமானதா? என்ற விதிக்கேற்ப அந்த ஜலத்தை சுத்தமானது அல்லது அசுத்தமானது என்று நிர்ணயிக்க வேண்டும்.

மேற் கண்ட கிணற்றில் அல்லது நீர் நிலையத்தில் ஒரு பிராணி விழுந்து செத்துக் கிடக்கக் கண்டால், அதாவது அப்பிராணி விழுந்த நேரம் அறியப்படாமல் இருந்தால், அந்தக் கிணற்று ஜலத்தை ஒலுச் செய்ய உபயோகித்திருப்பின், ஒரு இரவும், பகலும் கூடிய ஒரு நாள் தொழுகையைத்திரும்பித் தொழவேண்டும். மேற் கண்ட பிராணி ஊதி உடைந்து போயிருந்தால், மூன்று இரவு பகல் ஆகிய மூன்று நாட்களின் தொழுகைகளைத் திரும்பத் தொழ வேண்டும். ஜுனுபாளிகள் இத்தகைய ஜலத்தில் ஸ்நானம் செய்திருந்தாலும் மேற் கண்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.

இஸ்தின்ஜா செய்தல்

மனிதனது மல ஜலம் உடலில் அல்லது உடையில் படுவதால், அது பிறருக்கு அருவருப்பை யுண்டாக்குவது மட்டுமின்றி தேக சுகத்தையும் கெடுத்துவிடுவதால், ஸ்திரீ புருஷர் ஆகிய இருபாலரும் மல ஜல உபாதைகளைக் கழிக்கும்போது சில விதிகளை அனுசரிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தொழுகையை நிறைவேற்றுகிற முஸ்லிம்கள் மட்டிலும்தான் இவ்விதிகளை அனுசரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எல்லா முஸ்லிம்களுமே பொதுவாக இவ்விதிகளை அனுசரிப்பது இன்றியமையாததாகும்.

ஒருவர் சிறு நீருக்கிருக்கச் சென்றால், மண் கட்டியையாவது அல்லது சிறு நீரை உலர்த்தக் கூடிய வேறு சுத்த

மான வஸ்துவையாவது, எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும். சிறு நீருக்கிருந்த பின் அம்மண் கட்டியை ஆண் குறியின் முகத்துவாரத்தில் இடக்கையால் ஒத்தி வைத்து, சிறிது நேரம்வரை வைத்திருக்க வேண்டும். ஆண் குறியிலுள்ள நீர் அம்மண்கட்டியில் நன்றாய் இறங்கி, ஆண் குறியின் முகத்துவாரம் நன்றாய் உலர்ந்த பின் அம்மண்கட்டியை உடைத்துப்போடவேண்டும்; அல்லது இத்தகைய கட்டிகளைப் போடுவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள பெட்டியில் அல்லது இடத்தில், அதனைப் போட்டுவிடவேண்டும். சிலருக்கு நோயின் காரணமாகவோ அல்லது வயதின் காரணமாகவோ அல்லது பழக்கத்தின் காரணமாகவோ சிறு நீருக்கிருந்தால், எல்லா நீர்களும் வடிந்து விடாமல் சொற்ப நேரம்வரை ஒவ்வொரு துளியாக சிறு நீர் வருவதுண்டு. இது சில சமயங்களில் கொஞ்சம் தாமதித்தும் வரும். இவ்விதமான தொந்து நீருள்ளவர்கள் இரு துடைகளைகளையும் நெருக்குவதாலோ அல்லது கனைப்பதாலோ அந் நீர்களை வெளிப்படுத்தும் பழக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். எனவே, அவரவருடைய பழக்கத்திற்குத் தக்கவாறு அத்தொந்து நீரை அகற்றிய பின் அம்மண்கட்டியை உடைத்து, ஜலத்தால் ஆண் குறியைக் கழுவிவிட வேண்டும்.

மண் கட்டியைப் பிடித்துக் கொண்டிருக்கும் சமயம் உலாவவேண்டிய திருந்தால், ஜனங்கள் நடமாட்டமுள்ள இடத்திற்கு வராமல் மறைவான இடத்திலேயே உலாவிச்சிறு நீரை வெளிப்படுத்துவது உத்தமம்.

மலங்கழிக்கச் சென்றால் மேற் கூறப்பட்ட மாதிரி மண் கட்டிகளை மூன்று அல்லது அதற்குமேல் ஒற்றைப்

படவுள்ள எண்ணிக்கையாக எடுத்துச் செல்ல வேண்டும். மலங்கழித்து முடிந்த பின், அம் மண் கட்டிகளால் பின் துவாரத்தில் மல மில்லாமல் நன்றாகத் துடைத்துவிட வேண்டும். வெய்யில் காலங்களில் கோசம் தளர்ந்திருக்குமாதலால், முதலாவது மண்கட்டியை முன்னிலிருந்து பின் பக்கம் இழுத்துத் துடைக்கவேண்டும். அப்புறம் பின்னிலிருந்து முன் பக்கம் இழுத்து இரண்டாவது கட்டியால் துடைக்க வேண்டும். மழை காலங்களில் முதலாவது கட்டியைப் பின் பக்கமிருந்து முன் பக்கம் இழுத்துத் துடைக்க வேண்டும். இரண்டாவது கட்டியை முன் பக்கமிருந்து பின் பக்கம் இழுத்துத் துடைக்க வேண்டும். இவ்விதமாக நன்றாக மலத்தைத்துடைத்த பிறகு, வேறொரு கட்டியால் ஆண் குறியிலுள்ள சிறு நீரை மேற் கூறப்பட்ட விதமாக உலர்த்தி, அப்புறம் ஜலத்தால் நன்றாகக் கழுவி விடவேண்டும். ஸ்திரீகள் சிறு நீருக்கிருந்தால் மண் கட்டியை உபயோகிக்காமல், சிறு நீருக்கிருந்த இடத்தை விட்டுக் கொஞ்சம் விலகி இருந்து ஜலத்தால் சுத்தம் செய்ய வேண்டும். மல உபாதைக்குச் சென்றால், மண் கட்டியை உபயோகிக்கலாம். ஆனால், முதலாவது கட்டியை முன் பக்கத்திலிருந்து பின் பக்கமாக இழுத்துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

மண் கட்டியால் சுத்தம் செய்து அப்புறம் ஜலத்தாலும் சுத்தம்செய்வது மேலாகும். (அப்ஜல்) இரண்டில் ஒன்றைக் கொண்டுமட்டிலும் சுத்தம் செய்வது போதுமானது. ஆயினும், ஜலத்தால் சுத்தம் செய்வது மண் கட்டியால் சுத்தம் செய்வதைப் பார்க்கினும் சிறந்தது.

மல ஜல உபாதைகளுக்குச் செல்பவர்கள் ஆணாயினும் பெண்ணாயிலும் அவசியமாகத் தங்களை நிர்வாணமாக்

கிக் கொள்ளக்கூடாது. அவசியத்திற்கதிகமாக நிர்வாண மாக்குவது ஹறும்.

எலும்பு, மனிதருக்கோ மிருகங்களுக்கோ உணவாக இருக்கிற பொருள்கள், சுட்ட செங்கல், பொடிக்கற்கள், அடுப்புகரி, பளிங்கு, காரை, பட்டு, பஞ்சு ஆகியவைகளி லான துணிகள் ஆகியவைகளைக்கொண்டு சுத்தம் செய்யலா காது. வலக்கரத்தால் சுத்தம் செய்வது மக்றூஹ்.

மல பாதைக்குச் செல்பவர்கள் இடப்புறம் சார்ந்து உட்கார வேண்டும். மல ஜல உபாதைகளுக்குச் செல்வோர் கிப்லாவை முன்னோக்கி இருத்தலும், பின்னோக்கி இருத்த லும் கூடாது. சந்திரன், சூரியன் ஆகியவைகளை முன் னோக்கி இருத்தலும், காற்று வீசும் திசையை முன்னோக்கிச் சிறு நீருக்கிருத்தலும், கிணறு, ஆறு, நீர்த்தொட்டி ஆகிய வைகளுக்குச் சமீபத்திலும், ஜனங்கள் உட்காரக் கூடிய நிழலிலும், பூமியிலுள்ள துவாரங்களிலும், ரஸ்தாவிலும், கப்றுஸ்தானிலும், கனிவர்க்கங்களுள்ள மரத்தினடியிலும், ஓலுச் செய்யுமிடங்களிலும் மல ஜல உபாதைகளைக் கழிப் பது கூடாது (மக்றூஹ்). அகாரணமாக நின்று கொண்டு சிறு நீருக்கிருத்தல் மக்றூஹ். அல்லாஹ்வின் திரு நாமம் அல்லது திரு குர்ஆன் எழுதப்பட்ட வஸ்துவை வைத்துக்கொண்டு மல ஜல உபாதைகளுக்குச் செல்வது மக்றூஹ்.

மல ஜல உபாதைகளுக்கிருக்கும்போது தனது மர்ம ஸ்தானங்களை அனாவஸ்யமாகப் பார்ப்பதும், ஒருவருக் கொருவர் சம்பாஷணை செய்து கொள்வதும், பாங்குக்கு பதில் கூறுவதும், பிறர் ஸலாம் சொன்னால் அதற்கு பதில் ஸலாம் சொல்வதும், தும்மலுக்கு மறு மொழி கூறுவதும்

கூடா. குந்தி இருக்கும்போது பற்றுலக்கல், பல் குத்துதல், எச்சல் துப்பல், உண்ணல், குடித்தல், மூக்குச் சிந்தல், முதலிய செய்கைகளைச் செய்யக்கூடாது.

அசங்கிதங்கள்

புசிக்க அனுமதிக்கப்படாத மிருகங்கள், மனிதன் ஆகியவைகளின் மலம் ஜலம், புசிக்க அனுமதிக்கப்பட்ட பிராணிகளது மலம், கோழியின் எச்சம், ஒட்டமுள்ள உதிரம், சாராயம் முதலியவைகள் கெட்டியான அசங்கிதங்கள். இவை ஒரு வஸ்துவில் ஒரு திர்ஹம் அளவிற்கு அதிகம் பட்டுவிட்டால், அவ்விடத்தைச் சுத்தம் செய்வது பர்லு. ஒரு திர்ஹம் அளவிற்குச் சரியாக இருந்தால், அதனைச் சுத்தி செய்வது வாஜிபு அதாவது அவசியம். ஒரு திர்ஹம் அளவிற்குக் குறைவாக இருந்தால், அதனைச் சுத்தி செய்வது ஸுன்னத்து அதாவது நபி பிரான் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய செய்கையாகும். ஒரு திர்ஹம் என்பது அறப் நாட்டிலுள்ள வெள்ளி நாணயம். இது சற்றேறக் குறைய நம் நாட்டு வெள்ளிக் கால் ரூபாய் நாணயத்தின் பிரமாணமிருக்கும். ஆனால், இளகலான மேற்கண்ட அசுத்தம் ஒரு திர்ஹம் அளவு என்பதற்கு மனிதனின் உள்ளங்கையின் பள்ளத்தை அளவாகக் கொள்ளலாம்.

புசிக்க விலக்கப்படாத பிராணிகள், குதிரை ஆகிய மிருகங்களின் மூத்திரம், புசிக்கக்கூடாத பறவைகளின் எச்சம் ஆகியவை இலேசான அசங்கிதங்களாகும். இவைகள் மனித அவயவங்களில் அல்லது உடையில் கால் பங்குக்குச் சரியாக அல்லது அதற்கதிகமாகப் பட்டு விட்டால், அதனைச் சுத்தம் செய்வது பர்லு. அந்த அளவிற்குக் குறைவாக இருந்தால் அதனைச் சுத்தி செய்வது ஸுன்னத்து.

வஸ்திரம் அல்லது ஏதேனும் ஒரு பொருளில் மேற் கண்ட கெட்டியான அசங்கிதம் பட்டு விட்டால், அதனை ஜலத்தால் அல்லது காடி, பன்னீர்போன்ற திரவ பதார்த் தத்தால் கழுவவேண்டும். அவ்வசங்கிதத்தின் நிறம், நாற் றம் ஆகிய இரண்டும் நீங்கும்வரை சுத்தம் செய்ய வேண் டும். இவ்விரண்டையும் நீக்க முடியாதென்றிருந்தால், அசங்கிதத்தைமட்டுமேனும் நன்றாய் நீக்கிவிட வேண்டும். ஆனால், மேற்கண்ட கெட்டியான அசங்கிதங்களைச் சேர்ந்த இளகலான அசங்கிதங்கள் மெல்லினமான வஸ்துவிற்பட் டால் மூன்று முறை கழுவவேண்டும். கடினமான வஸ்து விற் பட்டால் ஒரு முறை கழுவி அத்தண்ணீர் சொட்டுவது நின்ற பிறகு, மறு முறை கழுவ வேண்டும். இரண்டாம் முறையும் நீர் சொட்டுவது நின்ற பிறகு மூன்றும் முறை கழுவி உலர்த்த வேண்டும்.

ஒலுச் செய்யும் விதம்

மேற் கண்டவாறு மல ஜல உபாதைகளைக் கழித்துக் கொண்டு ஒலுச் செய்ய ஆரம்பிப்பது நல்லது. இவ்வு பாதைகளில் எதுவும் இல்லாதவர்கள் இவைகளைக் கழிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே, ஒருவர் ஒலுச் செய்யவிரும்புவாராயின், முதலாவது மூன்று முறை தன திருகரங்களையும் மணிக்கட்டுவரை கழுவ வேண்டும். பிறகு, மூன்று முறை வாய் கொப்பளிக்க வேண்டும். அவசிய மானால் பற்றுலக்கலாம் அதாவது மிஸ்வாக்கு என்னும் பற்குச்சியாலோ அல்லது தனது விரலாலோ பற்களை நன் றாய் துலக்கித் தேய்த்துச் சுத்தம் செய்யலாம். மேல் வரிசைப்பற்கள், கீழ் வரிசைப்பற்கள், நா, அண்ணம் ஆகிய யாவையும் நன்றாய்த் தேய்த்து அவைகளில் ஊத்தை

இல்லாமல் நன்றாய்க் கழுவுதல் ஸுன்னத்து. மிஸ்வாக்குக் குச்சியை உபயோகிப்பது இதினும் ஸுன்னத்து. வாய் கொப்பளிக்கும்போது நன்றாக அண்ணாந்து தொண்டை வரை ஜலம் போகும்படிச் செய்து, கர் கர் என்று சப்தம் உண்டாகும்படிச் செய்து, அதனைத் துப்பிவிட வேண்டும். இப்படிச் செய்வதற்கு கர் கரா என்று பெயர். நோன்பு நோற்காதவர்கள் இவ்விதமாகச் செய்யலாம். நோன்பாளிகள் இவ்விதம் செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு மூன்று முறை வாய்கொப்பளிக்க வேண்டும்.

பிறகு, நாசிக்கு மூன்று முறை நீர் செலுத்தி அதன் இருதுவாரங்களையும் நன்றாய்ச் சுத்தி செய்ய வேண்டும். நாசியில் சளி முதலியவைகள் இல்லா வண்ணம் அதனைச் சிந்துவதுடன் இடக்கையின் விரலால் நாசித் துவாரத்தில் ஒட்டியிருக்கும் வஸ்துக்களையும் அகற்றவேண்டும்.

அப்புறம் மூன்று முறை முகத்தைக்கழுவ வேண்டும். அதாவது நெற்றி ரோமத்திலிருந்து நாடிக்குழி வரையிலுமுள்ள இடங்களை நன்றாய் ஜலம் வார்த்துக் கழுவவேண்டும். கண் இமை, புருவம் ஆகியவைகளை நன்றாய்த் தேய்த்து அவைகளின் மயிர் துவாரங்களில் தண்ணீர் செல்லும்படி தேய்த்துக் கழுவவேண்டும். தாடியுள்ளவர்கள் அதனைக் கோதி விட்டுக் கழுவவேண்டும். சிலர் முகங்களைக் கழுவும்போது கையிலெடுத்த ஜலத்தைக் கீழே விட்டு விட்டு ஈரக்கையை மட்டிலும் முகத்தில் தடவுவார்கள். அவ்வாறு செய்யாமல் முகத்திலிருந்து ஜலம் வடியக்கூடிய விதமாக முகத்தை நன்றாகக் கழுவ வேண்டும்.

பிறகு, முழங்கையுட்பட இருகரங்களையும் தனித் தனியே மூன்று முறை கழுவ வேண்டும். அதினும் வலக்

கரத்தை முதலிலும், இடக்கரத்தை இரண்டாவதாகவும் கழுவ வேண்டும். பின்னர், இரண்டு கைகளிலும் ஜலத்தை எடுத்து அதனை விட்டு விட்டு ஈரக்கையினுல் தலையை ஒரு முறை மஸகு செய்ய வேண்டும். அதாவது நெற்றி உரோமத்திலிருந்து பிடரிவரை கையை எடுக்காமல் இரண்டு கை விரல்களால் அதாவது பெரு விரல், கலிமா விரல் ஆகிய இரண்டையும் தவிர்த்து பாக்கியுள்ள விரல்களால் தடவவேண்டும். அப்புறம் பிடரியிலிருந்து இரண்டு உள்ளங்கைகளால் தலையின் இரு மருங்குகளையும் நெற்றிப் பொட்டுவரை தடவவேண்டும். பிறகு, இடக்கரத்தின் கலிமா விரலை வலக்கரத்தின் நடு விரல்மீது வைத்து முழங்கைவரை இழுத்து, இடக்கரத்தின் பெரு விரலின் அடிப்பாகத்தை வலக்கரத்தின் மொழியுடன் சேர்த்து வலக்கரத்தின் உட்புறமாக நுனிவரை இழுக்க வேண்டும். இறுதியில் வலக்கரத்தின் பெரு விரலின் முதுகு வழியாக மஸகுசெய்யவேண்டும். இவ்விதமாக இடக்கையை வலக்கையால் மஸகு செய்த பிறகு, பிடரியை இரு கரங்களின் விரல்களின் முதுகுப் புறத்தால் ஒரு முறை மஸகு செய்ய வேண்டும். இவ்விதம் மஸகு செய்வதால் தலை முழுவதும், பிடரியும் மஸகு செய்யப்படுகிறது. பின்னர், இரு கால்களையும் கரண்டையுட்பட தனித்தனியே மூன்று முறை கழுவ வேண்டும். கால் விரல்களையும் கோதி விட்டுக் கழுவ வேண்டும். முதலில் வலக்காலையும், அப்புறம் இடக்காலையும் கழுவ வேண்டும்.

கடைசியில் ஒலுச்செய்து எஞ்சிய ஜலத்தில் ஒரு மூடக்கு ஜலத்தை கிப்லாவை நோக்கி நின்று கொண்டு குடிக்க வேண்டும்.

பிறகு, வானை நோக்கிய வண்ணம், கிப்லாவை முன் னோக்கி நின்று கொண்டு,

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا
عَبْدُهٗ وَرَسُوْلُهٗ سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ
اِلَّا اَنْتَ عَمِلْتُ سُوْٓءًا وَّظَلَمْتُ نَفْسِيْ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ
فَاغْفِرْلِيْ وَتُبْ عَلَيَّ اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ اَللّٰهُمَّ اجْعَلْنِيْ
مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ وَاجْعَلْنِيْ صَبُوْرًا
شَكُوْرًا وَّاجْعَلْنِيْ اَذْكُرُكَ ذِكْرًا كَثِيْرًا وَّاُسَبِّحُكَ بُكْرَةً وَّاَصِيْلًا

அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப் துஹு வ றஸூலுஹு ஸுப்ஹானக்கல்லாஹும்ம வ பி ஹம்திக அஷ்ஹது அன் லா இலாஹ இல்லா அன்த அமில்து ஸூஅன் வ லலம்து நப்ஸீ அஸ்தஃபிருக வ அத்தூபு இலைக்க பஃபிர்லீ வ துப் அலய்ய இன்னக அன்தத் தவ்வா புர் ரஹீம். அல்லாஹும்மஜ்அல்னீ மினத்தவ்வாபீன வஜ் அல்னீ மின் இபாதிகஸ்ஸாலிஹீன வஜ்அல்னீ ஸபூரன் ஷக்கூரன். வஜ் அல்னீ அதுகுறுக திக்ரன் கதீரன் வ உஸப்பி ஹுக புக்ரதன் வ அஸீலா.

(வணக்கத்திற்குரியவன் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு யாரும் இணை இல்லை என்று நான் சாக்ஷி கூறுகிறேன். நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவனது அடியாராகவும் திரு தூதராகவும் இருக்

கிறார்கள், நாயனே! உன்னைத் துதிக்கிறேன். இன்னும் உனது புகழைக்கொண்டு 'வணக்கத்திற்கு உரியவன் உன்னை அல்லாது வேறு யாருமில்லை' என்று சாக்ஷியங் கூறுகிறேன். நான் தீமையைச் செய்து எனது நப்ஸுக்கு அநீதி செய்து விட்டேன். உன்னிடத்தில் பாப மன்னிப் புக் கேட்கிறேன். உன்பால் தௌபாச்செய்து மீளுகிறேன். ஆகவே, என்னை நீ மன்னிப்பாயாக. இன்னும் எனது தௌபாவை அங்கீகரிப்பாயாக. நிச்சயமாக நீ தான் தௌபாவை அங்கீகரித்துக் கிருபை செய்பவன். நாயனே! தௌபாச் செய்தவர்களில் என்னை ஒருவனாக்குவாயாக. இன்னும் உனது ஸாலிஹான நல்லடியார்களில் ஒருவனாக்கு வாயாக. இன்னும் பொறுமையாளனாகவும் நன்றி செலுத் துபவனாகவும் என்னை ஆக்குவாயாக. உன்னை அதிகமாக நான் ஜபிக்கவும், காலையிலும் மாலையிலும் உன்னை நான் துதிக்கவும் என்னை ஏற்படுத்துவாயாக) என்ற துஆவை யும் ஓதவேண்டும். அறபியில் ஓதத் தெரிந்தவர்கள் அற பியிலேயே ஓதுவது நல்லது.

அஹ்காமுல் ஒலு

ஒலுவின் பர்லுகள்

ஒலுவில் நான்கு பர்லுகளுண்டு. இவைகளை ஒலுவின் ருக்னுகள் என்றுங் கூறுவர்.

முதலாவது :—முகங்கழுவுதல். அதாவது நெற்றியின் ரோமக்களிலிருந்து நாடிக் குழிவரையிலும், இரண்டு காது களின் சிறு சோணைவரையிலும் ஒரு முறை கழுவுதல்.

இரண்டாவது :—முழங்கை மொழியுட்பட இரண்டு கைகளையும் ஒரு முறை கழுவுதல்.

மூன்றுவது :—இரண்டு கால்களையும் கரண்டை மொழியுட்படக் கழுவுதல்.

நான்காவது :—சிரசில் நான்கில் ஒரு பாகத்தை ஈரக் கையால் மஸகு செய்தல். ஆனல், மழையினுலோ அல்லது ஜலத்தினுலோ தலையில் நாலில் ஒரு பாகம் நனைந்து விட்டாலும் போதுமானது.

ஒலுவின் ஷர்த்துகள்

ஒலுச் செய்யக்கடமை ஏற்படுவதற்கு எட்டு ஷர்த்துகளுண்டு. அவை வருமாறு :—

1. சித்த சுவாதீன மிருக்கவேண்டும். பைத்தியம் பிடித்தவர்கள், போதை அல்லது நித்திரைபோன்றவைகளால் சித்த சுவாதீனத்தை இழந்தவர்கள்மீது இது கடமையல்ல.

2. யுக்த வயதையடைதல். சிறு பையன்கள், பருவத்தை யடையாத சிறு பெண் குழந்தைகள் ஆகியவர் மீது இது கடமையல்ல.

3. முஸ்லிம் அல்லாதார்கள் இத்தகைய காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டவர்களல்லர். முஸ்லிம் அல்லாதார் முதலாவதாகச் செய்ய வேண்டிய கடமை அவர்கள் ஈமான்கொண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவுவதுதான். இஸ்லாம் மதத்தைத் தழுவிய பிறகுதான் அவர்கள் மீது இஸ்லாம் மதத்திலுள்ள ஏனைய கடமைகள் விதியாகும்.

4. போதியளவு ஜலத்தை உபயோகப்படுத்தச் சக்தி இருக்கவேண்டும். அதாவது ஒலுவின் பர்லான உறுப்புகளை ஒருமுறையேனும் கழுவுவதற்குப் போதியளவு ஜலம் இருப்பதுடன், அதனைப்பார்க்கினும் அதிகத் தேவையுள்ள வேறு காரியமுமிருக்கக்கூடாது.

5. சிறு தொடக்கு இருக்கவேண்டும். ஒலுவிருக்கும்போது ஒலுச்செய்ய வேண்டிய அவசியமில்லை.

6. ஸ்திரீயாக இருந்தால், மாதாந்த ருது இல்லாதிருக்கவேண்டும்.

7. ஸ்திரீகள் பிரசவ ருது இல்லாமல் இருக்க வேண்டும்.

8. தொழுகையின் நேரம் பிந்தி, கடைசி நேரமாக இருக்கவேண்டும். தொழுகையின் முதல் நேரமாக இருந்தால், கொஞ்சம் தாமதித்துத் தொழுகவும் இடமிருப்பதால் இவைகள் கடமையாக ஏற்படுவதில்லை.

மேற் கண்ட எட்டுவிதமான காரியங்களுமிருந்தால் தான் ஒலுச்செய்வது கடமையாக ஏற்படும்.

ஒலு நிறைவேறுதற்குரிய ஷர்த்துகள்

ஒலுச்செய்தாலும் அது நிறைவேறுவதற்குரிய ஷர்த்துகள் மூன்றுண்டு. அவை வருமாறு :—

1. சுத்தப்படுத்தக் கூடிய ஜலத்தால், ஒலுச்செய்ய வேண்டிய பர்லான உறுப்புகள் ஒரு மயிரிழை கூட தவறி விடாமல் கழுவப்பட வேண்டும்.

2. ஒலுச்செய்யும்போது ஒலுவை முறிக்கக்கூடிய காரியங்களான மாதாந்த ருது (ஹைலு), பிரசவ ருது (நிபாஸ்), சிறு நீர் போன்ற காரியங்கள் நிகழலாகாது.

3. ஜலத்தை தேகத்தில் படாமல் தடுக்கக்கூடிய மெழுகு, மாவுபோன்ற வஸ்துக்கள் ஒலுவின் உறுப்புகளில் ஒட்டி இருக்கக்கூடாது.

மேற் கண்ட மூவகைத் தடைகளில் ஏதேனும் ஒன்றிருந்தாலும் கூட ஒலு நிறைவேறாது.

சில முக்கிய கடமைகள்

தாடி மயிர்களுக்குள் உள்ள ஸ்தூலம் தெரியாபடி தாடி மயிர் மிக அடர்ந்திருந்தால், அவ்வடர்த்தியான தாடியின் மேற்புறத்தைக் கழுவ வேண்டும்.

அடர்த்தி இல்லாத தாடியாக இருந்தால் தாடி மயிர்களுக்கிடையிலுள்ள ஸ்தூலத்திலும் ஜலம் சேரும் விதமாகக் கழுவவேண்டும். முகத்திலிருந்து வெளியாகிக் கீழே தொங்கிக்கொண்டிருக்கிற மயிர்களின்மீது ஜலத்தை ஊற்றி அவைகளையும் கழுவ வேண்டும் என்ற அவசியமில்லை. இரண்டு உதடுகளையும் மூடினால் மறைந்து போகக் கூடிய பாகங்களையும் உதடுகளில் கழுவவேண்டும் என்ற அவசியமில்லை. கண் இமைக்கு உட்புறத்திலும், காயத்தின் உட்புறத்திலும் ஜலத்தை ஊற்றிக் கழுவ வேண்டிய அவசியமில்லை.

விரலில் இருக்கமான மோதிரங்களை அணிந்திருந்தால், அம்மோதிரங்களை அசைத்துவிட வேண்டும்.

ஒலுவின் ஸுன்னத்துகள்

ஒலுவில் 18 பதினெட்டு ஸுன்னத்துகளிருக்கின்றன. அவை வருமாறு :—

1. மணிக்கட்டு உட்பட இரண்டு கைகளையும் கழுவுதல்,

2. முதலில் பிஸ்மில்லாஹ் ஓதுதல்,

3. மிஸ்வாக்குச் செய்தல், பற்குச்சி இல்லாவிடில், விரல்களைக் கொண்டேனும் பற்றுலக்கவேண்டும்.

4. மும்முறை வாய் கொப்பளித்தல்,

5. மும்முறை நாசிக்கு நீர் செலுத்தல்,

6. நோன்பாளியாக இல்லாதவர் வாயில் விட்ட ஜலம் தொண்டைவரை செல்லக்கூடியவாறு வாய் கொப்பளிப்பதில் கடப்புச் செய்தல்,

7. நோன்பில்லாதவர் நாசியின் தண்டெலும்புவரை ஜலம் செல்லும் விதமாகக் கடப்புச் செய்தல்.

8. அடர்ந்த தாடியுள்ளவர்கள் ஒரு சிரங்கை ஜலத்தால் தாடியின் அடிப்புறத்திலிருந்து தாடி மயிரைக்கோதி விடுதல்,

9. கை விரல்களைக் கோதி விடுதல்,

10. ஒவ்வொரு உறுப்புகளையும் மூன்று முறை கழுவுதல்,

11. தலை முழுவதையும் ஒரு முறை மஸகு செய்தல் அதாவது ஈரக்கையால் தடவுதல்,

12. இரண்டு காதுகளையும் மஸகு செய்தல்,

13. உறுப்புகளைத் தேய்த்துக் கழுவுதல்,

14. ஒரு உறுப்பின் ஈரம் காய்வதற்குள் அடுத்த உறுப்பைத் தொடர்ந்து கழுவுதல்,

15. ஒலுச் செய்வதாக நிய்யத்துச் செய்தல் (நிர்ணயம் செய்தல்),

16. வரிசைக் கிரமமாகச் செய்தல்,

17. வலப்புறமிருந்து ஆரம்பம் செய்தல்,

18. பிடறிக்கு மஸகு செய்தல்,

ஒலுவின் அதபுகள்

1. உயரமான இடத்தில் உட்காருதல்,

2. கிப்லாவை முன்னோக்கி இருந்து ஒலுச் செய்தல்,

3. பிறர் உதவியைத் தேடாமல் ஒலுச் செய்தல்,

4. மனிதர்களுடன் உலக சம்பந்தமான சம்பாஷணைகள் செய்யாதிருத்தல்,

5. மனதில் நிய்யத்துச் செய்வதையும், அந்த நிய்யத்தை நாவால் மொழிவதையும் ஒன்று சேர்த்தல்,

6. ஒலுச் செய்யும்போது ஓத வேண்டிய துஆயே மாதூராக்களை ஓதுதல் அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, ஸஹாபிகளோ அல்லது தாபியீன்களோ ஒலுச் செய்யும்போது ஓதியதாக ஹதீது ஷரீபில் வந்த துஆக்களை ஓதுதல்,

7. ஒவ்வொரு உறுப்பையும் கழுவும்போது பிஸ்மில்லாஹ் ஓதுதல்,

8. காதை மஸ்கு செய்யும்போது காது துவாரத்தில் சுண்டு விரலை நுழையச் செய்தல்,

9. விசாலமான மோதிரம் அணிந்திருந்தால் அதனையும் அசைத்தல்,

10. வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்துதல், ஆகியவைகளை வலக்கரத்தால் செய்தல்,

11. தொழுகைக்கு நேரம் வருவதற்கு முதலிலேயே ஒலுச் செய்து கொள்ளல்,

12. ஒலுச் செய்த பிறகு ஷஹாதத்து கலிமாவை ஓதுதல்,

13. ஒலுச் செய்து மிஞ்சிய ஜலத்திலிருந்து கொஞ்சத்தை நின்ற வண்ணம் அருந்தி ஹதீதில் வந்துள்ள துஆ அவை ஓதுதல்.

அதபுகள் என்பது ஒழுங்குகள். இவைகளைச்செய்தால் புண்ணிய முண்டு. செய்யத் தவறினுல் குற்றமில்லை.

ஒலுவின் மக்றாஹ¤கள்

1. அளவிற்கதிகமாக ஜலத்தை வீண் செலவு செய்தல்,

2. மஸகு செய்வதுபோல ஜலத்தை மிகவும் குறைத்து உபயோகித்தல்,

3. ஜலத்தைக்கொண்டு முகத்திலடித்தல்,

4. ஜனங்களுடன் வீணாகச் சம்பாஷித்தல்,

5. அகாரணமாகப் பிறரிடம் ஒலுச் செய்வதில் உதவி தேடுதல்,

6. அசுத்தமான அதாவது நஜிஸான இடத்திலிருந்து ஒலுச் செய்தல்,

7. ஸ்திரீகள் ஒலுச் செய்து மிஞ்சிய தண்ணீரால் ஆடவர்கள் ஒலுச்செய்தல்,

8. ஜலத்தில் காரல், சளி முதலியவைகளை எறிதல்,

9. மஸ்ஜிதுக்குள் ஜலம் சிந்துகிற விதமாக ஒலுச் செய்தல்,

10. இடக்கையால் வாய்க்கும், நாசிக்கும் தண்ணீர் செலுத்துதல்,

11. வலக்கையால் நாசியைச் சுத்தம் செய்தல்,

ஸுன்னத்துகள்போன்ற காரியங்களைச் செய்யாமல் விட்டு விடுதல் முதலிய அநேக காரியங்கள் மக்றூஹ் அதாவது விரும்பத் தகாத காரியங்களாகும். ஒலுவின் அதபுகளிற் சிலவற்றை விட்டு விடுவதும் கூட மக்றூஹாக இருப்பதால், இவை அனந்த முண்டு. ஆதலால், மேற் கூறப்பட்ட பதினொரு காரியங்கள் மட்டிலும்தான் மக்றூஹ், மற்றவைகள் மக்றூஹல்ல என்பதில்லை.

ஒலுவின் முறித்தல்கள்

1. முன் துவாரம் அல்லது பின் துவாரத்திலிருந்து சிறு நீர், மலம், புளு, கல், இந்திரியம், மதி, வதி, காற்று முதலியவைகள் வெளிப்படுதல்.

முன் துவாரத்திலிருந்து காற்று வெளிப்படுவதால் ஒலு முறிந்துவிடாது என்பதுதான் அஸஹ்ஹானசொல் அதாவது மிகவும் சரியான சொல். ஏனெனில், காற்று இயற்கையில் அசுயை அல்ல. இருந்தாலும் அது பின் துவாரத்தில் மலத்தின் வழியாக வருவதால், அது அசுயையாகி விடுகின்றது. முன் துவாரத்தில் அத்தகைய அசங்கிதங்கள் இல்லாததால் முன் துவாரத்தின் வழியாக அதாவது ஆண் குறி அல்லது பெண் குறியின் வழியாக காற்று வெளிப்பட்டால், ஒலு முறியாது. ஆனல், சில ஸ்திரீகளுக்கு முன் துவாரமும் பின் துவாரமும் ஒன்றுகிவிடும். இவ்விதமான ஸ்திரீகளுக்கு முன் துவாரத்தின் வழியாகக் காற்று வந்தாலும் ஒலு முறிந்து விடும்.

சிறு நீர் வெளியான பிறகு, சிலருக்கு ஒரு விதமான வெண்மையான நீர் வெளிப்படும். இவ்வாறு வெளிப்படும் வெண்மையான திரவத்திற்கு வதி என்று பெயர். காம

உணர்ச்சி ஏற்படும்போது முற் கூட்டியே ஒருவிதமான திரவம் அதாவது இளகலான இந்திரியம் வெளிப்படுவ துண்டு. இவ்வாறான திரவத்திற்கு மதி என்று பெயர். இது வெளிப்படுவதால் காம உணர்ச்சி இன்னமும் அதி கரிக்கும். காம உணர்ச்சி மிஞ்சிய பிறகு, ஸ்கலிதமாகும் ஒருவகைத் திரவத்திற்கு மனி அதாவது இந்திரியம் என்று பெயர். இது வெளியாலல் காம உணர்ச்சி குன்றும்.

2. பிரசவித்தல், பிரசவத்துடன் பிரசவ ருது (நிபாஸ்) வந்தால், ஒலு முறிவதுடன் ஸ்நானம் செய்வதும் கடமையாகும். பிரசவ ருது வருவதற்கு முன்னதாகவே, பிரசவத்தால் மட்டிலும் ஒலு முறிந்துவிடும் என்பதாக இமாம் அபூயூஸுப் (றஹ்), இமாம் முஹம்மது (றஹ்) ஆகிய இருவரும் கூறி இருக்கிறார்கள். பிரசவித்தால் ஸ்நானம் செய்வது கடமையாகிவிடும் என்பதாக இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

3. முன் துவாரம் பின் துவாரம் ஆகியவைகளிலல் லாமல், வேறுவிதமாக ஓடும்படியான அசுத்தம் வெளி யாகுவதால் ஒலு முறிந்துவிடும். இதன்படி புண்களிலி ருந்து ஜலம் வடிவதாலும், தேகத்திலிருந்து உதிரம் வடிவ தாலும், காதில் சீ வடிவதாலும் ஒலு முறிந்து விடும். ஆனல், கண்ணில் ஒரு புறத்தில் உதிரம் வெளிப்பட்டு மறு புறத்தில் அது படர்ந்தால் ஒலு முறியாது. கண்ணை விட்டு வெளியில் வந்தால் ஒலு முறிந்துவிடும். சில்லி மூக்கு உடைந்து ரத்தம் வந்தால் ஒலு முறிந்துவிடும்.

4. தண்ணீரை அல்லது உணவை அல்லது பித் தத்தை அல்லது உதிரத்தை வாய் நிறம்ப வாந்தி செய்தல்.

5. வாயிலிருந்து உதிரம் வடிதல் அதாவது எச்சலுடன் உதிரம் கலந்து வருவதில் உமிழ் நீர் மஞ்சள் நிறமாக இருந்தால் உதிரம் குறைவாகவும், உமிழ் நீர் அதிகமாகவும் இருக்கும். இவ்விதமிருந்தால் ஒலு முறியாது. ரத்தமும் உமிழ் நீரும் சமமாக இருந்தாலும் அல்லது உமிழ் நீரைப் பார்க்கினும் ரத்தம் அதிகமாக இருந்தாலும் ஒலு முறிந்து விடும்.

6. மெய் மறந்து நித்திரை செய்தல். பக்கத்திலிருப்பவர்கள் பேசுவது தெரியும்படியான விதமாக இலேசான அரைத்தூக்கம் ஒலுவை முறிக்காது.

7. உட்கார்ந்து கொண்டே பிஷ்ட பாகம் பூமியில் செம்மையாய் படியாமல் ஒன்றன்மீது சாய்ந்து தூங்குவதும், உட்கார்ந்து கொண்டே தூங்குவதால் பிஷ்டபாகம் பூமியைவிட்டு உயர்ந்துவிட்டாலும் ஒலு முறிந்துவிடும்.

8. புத்தி நீங்கும் விதமாக மயக்கங் கொள்ளல்,

9. பைத்தியங் கொள்ளல்,

10. தனது செய்கைகளில் தடுமாற்றம் உண்டாகும் விதமாக லாகிரி வஸ்துக்களை அருந்தி போதையாகுதல்,

11. ருக்கூஉ, ஸுஜூதுள்ள தொழுகையில் வெடி சிரிப்புச் சிரித்தல், ஜனாஸாத் தொழுகையில் ருக்கூஉ ஸுஜூது இல்லாததால், ஒருவர் அத்தொழுகையில் வெடி சிரிப்புச்சிரித்தால் அவரது அத்தொழுகை மட்டிலும்தான் முறிந்துபோம், அவரது ஒலு முறியாது. புன் சிறிப்பினால் ஒலு முறியாது. பிறருக்குக் கேட்கும்படியாக சப்தமிட்டுச் சிரிப்பதற்கு வெடி சிரிப்பு என்று பெயர். இவ்விதமாகச் சிரித்தால்தான் தொழுகையும் ஒலுவும் முறியும்.

பிறருக்குக் கேட்காமல் தனக்கு மட்டிலும் கேட்கும் விதமாகச் சிரிப்பதற்கு அறபிப்பாஷையில் லிஹ்க் என்று கூறுவர். இவ்விதமான சிரிப்பு தொழுகையை மட்டிலும் முறிக்கும். ஒலுவை முறிக்காது. புன் சிரிப்பிலும் தொழுகையும் முறியாது ஒலுவும் முறியாது.

12. இரண்டு மர்மஸ்தானங்களை எழுச்சியுடன் ஒன்றோடொன்று ஸ்பரிசிக்கச் செய்தல், ஆணுடன் ஆணும், பெண்ணுடன் பெண்ணும் தங்கள் மர்ம ஸ்தானங்களை எழுச்சியுடன் ஸ்பரிக்கச் செய்தாலும்கூட முறிந்து விடும். இவ்வுறுப்புகள் ஒன்றுக்குள் ஒன்று மறையவேண்டுமென்பதோ அல்லது இந்திரிய ஸ்கலிதமாக வேண்டுமென்பதோ அவசியமில்லை. இவ்விதமாக நேர்ந்தால் ஒலு முறிவது மட்டுமில்லாமல் ஸ்நானம் செய்வதும் கடமையாகிவிடும்.

ஒலுவை முறிக்காத காரியங்கள்

1. உதிரம் அதற்குரிய ஸ்தானத்தை விட்டு வடியாமல், அந்த ஸ்தானத்தில் வெளிப்படுவதால் மட்டிலும் ஒலு முறிந்து விடாது.

2. உதிரம் ஓடாமல் உடம்பிலிருந்து தசை மட்டிலும் விழுவதால் ஒலு முறிந்துவிடாது. ஏனெனில், தசை அசுத்தமான வஸ்துவல்ல. அது சுத்தமானதே. சுத்தமான வஸ்து உடம்பிலிருந்து நீங்கினால் ஒலு முறியாது.

3. புண்ணிலிருந்து அல்லது காதிலிருந்து அல்லது நாசியிலிருந்து புழு வெளிப்படுவது ஒலுவை முறிக்காது. ஆனால், பின் துவாரத்திலிருந்து புழு வெளியானால் ஒலு முறிந்து விடும்.

4. ஆண்குறியை அல்லது பெண்குறியை அல்லது பின் துவாரத்தைக் கையால் தொடுவது ஒலுவை முறிக்காது.

5. ஸ்திரீயை தொடுவது ஒலுவை முறிக்காது.

6. வாய் நிறம்ப இல்லாத வாந்தி செய்வதும், கோளையை வாந்தி செய்வதும் ஒலுவை முறிக்காது.

7. உட்கார்ந்து கொண்டே தூங்குவதால் ஒலு முறியாது. பீஷ்டபாகம் செவ்வையாய் பூமியில் படிந் திருக்கிற நிலமையில் சுவரின்மீதோ அல்லது தூணின் மீதோ அல்லது வேறு ஒன்றின்மீதோ சாய்ந்து கொண்டு தூங்கினலுங்கூட ஒலு முறியாது.

தொழுகையாளிகள் ருக்கூவில் அல்லது ஸுஜூதில் ஸுன்னத்தான முறை பிசகாவண்ணம் தூங்கினல் ஒலு முறியாது. ஸுன்னத்தான முறை பிசகிவிட்டால் ஒலு முறிந்து போகும்.

ஒலுவின் வகைகள்

ஒலு மூன்று வகைப்படும். அவைவருமாறு :—

1. தொழுகைக்காக, ஜனஸாத் தொழுகைக்காக திருகுர்ஆனில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதியதற்காக அல்லது செவியேற்றதற்காக ஸஜ்தா திலாவத் செய்வதற்காக, திருகுர்ஆனைத் தொடுவதற்காக ஒலுச்செய்வது பர்லு (கடமை).

2. கஃபாஷரீபை தவாபு செய்வதற்காக ஒலுச் செய்வது வாஜிபு.

3. எப்பொழுதும் ஒலுவின் மீதே இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் நித்திரைக்குச் செல்லும் போதும், நித்திரை தெளிந்து எழுந்தவுடனும், ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் சென்றாலும், புறம் பேசிய பிறகும், பொய்யுரைத்த பிறகும், கோள் சொல்லிய பிறகும், தவறான காரியங்களைச் செய்த பிறகும், தொழுகைக்கு வெளியில் சிரித்தாலும், மரித்தவர்களை ஸ்நானம் செய்வித்தாலும், மரித்தவரைத் தூக்கிச் சென்றாலும், ஜுனுபாளியாக இருப்பவர் உணவருந்த அல்லது ஜல மருந்த அல்லது நித்திரை செய்ய விரும்பினாலும் ஸ்ம சர்க்கம் செய்ய விரும்பினாலும், கோபமடைந்தாலும், திருகுர்ஆன் ஹதீதுகளை ஓதுவதற்காக, ஹதீதுகளை ரிவாயத்துச் செய்வதற்காக, கல்வி கற்பிப்பதற்காக, பாங்கு சொல்வதற்காக, இக்காமத்துச் சொல்வதற்காக, குத்பா ஓதுவதற்காக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஜியாரத்துச் செய்வதற்காக, அறபாவில் தங்குவதற்காக, ஒட்டகை மாமிசத்தைப் புசித்த பிறகு, மஹ்ரமல்லாத ஸ்திரீயைத் தொட்ட பிறகு ஒலுச் செய்து கொள்வது முஸ்தஹப்பு. இது போன்ற முஸ்தஹப்பான ஒலுவுகள் அனந்தமுண்டு. விரிவஞ்சி விடுத்தனம்.

ஸ்ஞனம்

மனிதனின்தேகசுகம்திருப்திகரமாக இருக்க வேண்டு மாயின் அவனது தேகம் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். தேகாரோக்கியத்தை முன்னிட்டே ஸ்ஞனம் செய்வதை சகல தேசத்தினரும் பிரதானமாகக் கருது கின்றனர். கூழானாலும் குளித்துக்குடி என ஆன்றோர் அறைந்த அமுத வாக்கும் இச்சுகாதாரத்தையே பிரதான

மாகத் தழுவி இருக்கிறது. ஆயினும், ஸ்ஞனம் செய்வது எப்பொழுது? எவ்விதமாக ஸ்ஞனம் செய்ய வேண்டும்? என்ற முறைகளை ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு விதமாக நிர்ணயித்துளனர். ஆனல், உலகிலுள்ள பல வேறு மதங்களும் இவ்விஷயத்தை வற்புறுத்துவது போல இஸ்லாம் மதமும் வற்புறுத்துகிறது. என்ருலும், இஸ்லாம் மதம் இதனை வற்புறுத்துவதுடன் ஸ்ஞனம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம், ஸ்ஞனம் செய்யும் ஒழுங்கு முறை ஆகியவைகளை விபரித்துக்கூறி இருப்பது போல அவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் வேறெந்த சமூகமும் கூறவில்லை என்பது பின்வரும் விஷயங்களால் நன்கு புலனகும்.

ஸ்ஞனம் செய்யக் கடமையாகும் சந்தர்ப்பங்கள்.

1. இந்திரியம் வெளியாகுதல்.

2. சம்ஸர்க்கத்திற்கு தகுதியானவர்களின் இரு துவாரங்களிலொன்றில் ஆண்குறியின் வரை மறையும் படியாகச் சம்ஸர்க்கம் செய்தல்,

3. ஆண்குறி தரிக்கப்பட்டிருந்தால் மேற் கண்ட வரை அளவிற்கு அவ்வாண் குறியின் எஞ்சிய பாகம் பெண்குறியில் மறைதல்,

4. மிருகங்கள் அல்லது இறந்து போனவர்களுடன் சம்ஸர்க்கம் செய்து இந்திரிய ஸ்கலிதமாகுதல்,

5. நித்திரைக்குச் செல்வதற்கு முன் ஆண் குறி உசும்பாதிருக்கிற நிலைமையில், நித்திரைக்குச் சென்றவர்

தூங்கி எழும்போது இளகலான திரவத்தை ஆண்குறியில் காணல்,

6. போதை தெளிந்தவர் அல்லது மயக்கம் தெளிந்தவர் இந்திரியத்தின் ஈரத்தை தனது மர்மஸ்தானத்தில் காணல்,

7. மாதாந்த ருது வரல் அல்லது பிரசவ ருது வரல் இவ்வேழுவகைக் காரியங்களில் ஏதேனும் ஒன்றேற் பட்டாலும் ஸ்ஞனம் செய்வது கடமையாகி விடும் (பர்து).

ஆடவர்களுக்கு முதுகுத் தண்டிலும், ஸ்திரீகளுக்கு நெஞ்சுக் கொளுந்திலும் இந்திரியமிருப்பதாகச் சொல்லப் படுகிறது. இவ்விரு இடங்களிலிருந்தும் காம உணர்ச்சி யுடன் இந்திரியம் வெளிப்பட்டு விட்டால், ஸ்ஞனம் செய்வது கடமை. இவ்வாறு வெளிப்படுவது சொர்ப் பனத்தின் மூலமாக நிகழுமாயின் அதற்கு சொர்ப்பனஸ் கலிதம் என்று பெயர். இது ஸ்திரீ புருஷர் ஆகிய இரு பாலருக்கும் நிகழும். முஷ்டிப் பிரயோகத்திலும் இந்திரியஸ்கலிதமாகும். இவ்வித முறைகளில் ஸ்கலித மானால் ஸ்ஞனம் செய்வது கடமை. பலுவான சுமையைச் சும்பதாலோ முதுகுத்தண்டின் மீது அடிப்பதாலோ சில சமயங்களில் ஸ்கலிதமாகுவது முண்டு. அவ்வாறு வெளியானால் ஸ்ஞனம் செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் இந்திரியம் வெளிப்படும் போது காம உணர்ச்சியும் இருக்க வேண்டும். காம உணர்ச்சி இல்லாமல் இந்திரியம் வெளியானால் ஸ்ஞனம் செய்வது கடமை இல்லை.

சிலர் நித்திரையில் சொர்ப்பனத்தை காண்பர். ஆனால், இந்திரிய ஸ்கலிதமில்லாமலு மிருக்கலாம்.

இவ்விதமாக வெறும் சொர்ப்பனம் காண்பதற்காக ஸ்ஞனம் செய்ய வேண்டியதில்லை. சிலருக்கு சொர்ப்பனங் கண்டது நினைவிருக்கமாட்டாது. ஆனல், இந்திரியஸ் கலிதமானதற்குரிய ஈரமோ, வேறு அடையாளமோ தேகத்திலாவது உடையிலாவது காணப்படும். அவ்வாறு அடையாளம் கண்டால் ஸ்ஞனம் செய்ய வேண்டும். சொர்ப்பனம் நினைவிலிருக்க வேண்டும் என்ற அவசிய மில்லை.

ஸ்திரீ புருஷர் ஆகிய இரு பாலரும் ஸம்ஸர்க்கம் செய்தால், ஸ்கலிதமாகா விடினும் அவ்விருவரும் ஸ்ஞனம் செய்ய வேண்டும்.

மதி, வதி ஆகியவைகள் வெளியாகுவதால் ஸ்ஞனம் அவசியமில்லை. முன் துவாரம் அல்லது பின்துவாரத்தில் பீச்சாங்குழல் வைத்து உள்ளிலுள்ள மலஜலங்களை வெளிப் படுத்துவதாலோ அல்லது விரல்களை நுளைத் தலாலோ ஸ்ஞனம் விதியாகாது. மிருகங்களை அல்லது உயிரற்றவர்களை சம்ஸர்க்கம் செய்தால் ஸ்கலிதமாகாவிடில் ஸ்ஞனம் செய்ய வேண்டியதில்லை.

ஸ்ஞனத்தின் பர்லுகள்

1. வாய் கொப்பளித்தல்,
2. நாசிக்கு நீர் செலுத்துதல்,
3. தேகம் முழுவதையும் நனைத்தல்

ஆகிய மூன்றும் ஸ்ஞனம் செய்வதில் முக்கயமாகக் கவனிக்க வேண்டிய பர்லுகளாகும். இவைகளில் ஏதேனும்

ஒன்று தவறிவிட்டால் ஸ்னானம் சட்டப்படி நிறைவேறாது. அவ்வாறு தவறிவிட்ட காரியத்தை மட்டிலும் அப்புறம் செய்தால் போதுமானது. திரும்ப ஸ்னானம் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. தேகத்தில் ரோமக்காலளவு நனையாமலிருந்தாலும் தேகமுழுவதையும் நனைத்ததாக ஆகாது. ஆனால், நனைக்காமல் விடப்பட்டுள்ள பாகத்தை மட்டிலும் தண்ணீரால் கழுவி விடுவது போதுமானது. சாதாரணமாக ஜலம் செல்லக்கூடாத இடங்களாகிய கட்கம், கொப்புள், காதின் உட்புறம், தலை ரோமங்கள், தாடி ரோமங்கள் முதலியவைகளை எல்லாம் நன்றுய்த் தேய்த்துக் கழுவவேண்டும்.

ஸ்திரீகள் தங்கள் தலைமயிரில், பின்னல் நன்றுகப் போட்டு அவைகளை அவிழ்க்க முடியாமலிருந்தால், தலையின் ரோமக்காலில் தண்ணீரைச் செலுத்திக் கொள்வது போதுமானது. அதனை அவிழ்த்து விடவேண்டிய அவசியமோ, அம்மயிர்களை நனைக்கவேண்டிய அவசியமோ இல்லை. இச்சலுகை ஸ்திரீகளுக்கு மட்டிலும் தான். ஏனெனில், ஸ்திரீகளுக்கு தலைமயிர் அழகைக் கொடுக்கக் கூடியது. ஆடவர்களுக்கு இது அழகைக் கொடுக்கக் கூடியதாக இல்லாததால், ஆடவர்கள் தங்கள் தலைமயிர்களை அடிமுதல் நுனி வரை நன்றுய் நனைக்க வேண்டும்.

ஸ்னானத்தின் ஸுன்னத்துக்கள்

1. தன்மீது விதியாகவுள்ள பெருந் தொடக்கை நீக்குவதாக நிய்யத்துச் செய்தல்.

2. பிஸ்மில்லா ஓதுதல்,

3. மணிக்கட்டுவரை இரு கரங்களையும் கழுவுதல்,

4. தேகத்தில் பட்டுள்ள அசங்கிதத்தைப் பிரத்தி யேகமாகக் கழுவுதல்,

5. முன், பின் துவாரங்களைக் கழுவுதல்;

6. தொழுகைக்கு ஒலுச்செய்வது போல ஒலுச் செய்து கொள்ளல், ஜலம் தேங்கக்கூடிய இடத்தில் நின்று ஸ்ஞனம் செய்தால் கால்களைக் கழுவதை மட்டிலும் பிற்படுத்தி வைக்க வேண்டும்.

7. மூன்று முறை தேகத்தின் மீது ஜலம் வார்த்துக் கொள்ளல். ஓடுகிற ஜலமத்திலோ, அல்லது 100 சதுர முழ முள்ள கிணற்றிலோ, ஜலத் தேக்கமுள்ள இடத்திலே ஸ்ஞனம் செய்தால் ஜலத்தினுள் மூழ்கிவிடுவது போது மானது. ஜலத்தை வார்த்துக் கொள்வதாக இருந்தால் முதலாவதாகத் தலையிலும், அப்புறம் வலப் புஜத்திலும் இறுதியாக இடப்புஜத்திலும் ஜலத்தை வார்த்துக் கொள்ள வேண்டும்.

8. தேகம் முழுவதையும் முதல் முறையிலேயே நன்றாகத் தேய்த்துக் கொள்ள வேண்டும்.

சில போது விதிகள்

ஒலுச் செய்யும் போது அனுஷ்டிக்க வேண்டிய அதபுகளை ஸ்ஞனம் செய்யும் போதும் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், கிப்லாவை முன்னோக்க வேண்டிய தில்லை. வேறு யாரும் பார்க்கக் கூடாத இடத்தில் ஸ்ஞனம் செய்வது முஸ்தஹப்பு.

ஒலுவுக்குள்ள மக்றாஹ்களெல்லாம் ஸ்ஞனம் செய் வதில் இருக்கின்றன. தவிரவும் ஸ்ஞனம் செய்யும் போது தாஆஒதுவத்துப் மக்றாஹ்.

ஸுன்னத்தான ஸ்ஞனங்கள்

1. ஜும் ஆத் தொழுகைக்காக,
2. பெரு நாள்களின் தொழுகை களுக்காக,
3. ஹஜ்ஜு அல்லது உம்ரூவிற்காக இஹ்ரும் கட்டும் போது,
4. ஹாஜிகள் அறபா மைதானில் தங்குவதற்காக துல்ஹஜ்ஜு மாதம் 9-ம்தேதி யன்று அடித்திரும்பிய பிறகு, ஸ்ஞனம் செய்வது ஸுன்னத்தாகும்.

முஸ்தஹப்பான ஸ்ஞனங்கள்

1. ஸ்ஞனம் செய்யக் கடமைப் படாதவர் இஸ்லாம் மதத்தை தழுவும் போது,
2. பயித்தியம் பிடித்தவர் பயித்தியத்தை விட்டுத் தெளிந்த உடன்,
3. சிறுவர் சிறுமிகள் வயதின் மூலமாக பாலிகான வுடன், அதாவது யுக்த வயதை அடைந்தவுடன்,
4. இரத்தங் குத்தி வாங்கிய பிறகு,
5. ஷஅபான் மாதம் பரா அத் இரவில்,
6. போதை யுள்ளவர் தெளிந்தவுடன்,
7. லைத்துல் கத்ரி இரவில்,
8. அறபா இரவில்,
9. திருமக்காவில் பிரவேசிப்பதற்காக,
10. சந்திர சூரிய கிரணங்கள் தோன்றிய காலத்தில் நிறைவேற்ற வேண்டிய தொழுகைக்காக,

11. மழை பெய்ய வேண்டு மென்று பிரார்த்திப் பதற்காக தொழும் போது,

12. பயம் உண்டான போது,

13. கடிய இருள் நீங்கத் தொழுவதற்காக,

14. கடுங்காற்று மாறப் பிராத்திப்பதற்குத் தொழும் போது,

15. திருமதீனுவில் பிரவேசிப்பதற்காக,

16. முஸ்தலிபாவில் தங்குவதற்காக,

17. தவாபு ஜியாராவிற்காக திருமக்காவில் பிரவேசிப் பதற்காக, ஸ்னானம் செய்வது முஸ்தஹப்பு.

ஜனுபாளிகள் மீது ஹராமான காரியங்கள்

1. தொழுகை,

2. மஸ்ஜிதினுள் செல்லல்,

3. கஃபாவை தவாபு செய்தல்,

4. திருகுர்ஆனை ஓதுதல்,

5. திருகுர்ஆனைத் தொடுதல்,

ஆகிய இவ்வைந்து காரியங்கள் ஜனுபாளிகளுக்கு தடுக்கப்பட்டிருக்கின்றன.

தயம்மும்

தண்ணீர் கிடைக்காதிருந்தாலும், தண்ணீர் ஒரு கோஸ் தூரத்திற்கப்பாலிருந்தாலும், தண்ணீரை உபயோகிப்பதால் வியாதி அதிகப்படும் என்றிருந்தாலும், தண்ணீர் இருக்குமிடத்தில் துன்பந்தரக் கூடிய மிருகங்கள்

இருப்பதால் அங்கு செல்ல முடியாமற் போனாலும், தண்ணீரால் ஒலுச் செய்து கொண்டிருந்தால் ஜனாஸாத் தொழுகை அல்லது பெருநாள் தொழுகை தவறி போகக் கூடிய சமயமாயிருந்தாலும், ஆழமான கிணற்றில் ஜல மிருந்தும் அதனை எடுப்பதற் குரிய வசதி இல்லா விட்டாலும், பிறரிடமிருக்கிற தண்ணீரை விலை கொடுத்து வாங்கத் தக்க தொகை இல்லாமலிருந்தாலும், தணணீ ருக்கு நியாயமான விலையைக் கேட்காமல் அதிகமான விலையைக் கேட்டாலும், கடமையான ஸ்னானம் செய் தாலும் அல்லது ஒலுச் செய்தாலும், தாகசாந்திக்கு ஜலம் இல்லாமல் துன்பமடையவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும் என்றிருந்தாலும் ஜலத்தால் ஒலுச் செய்வதற்கும், ஸ்னானம் செய்வதற்கும் பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம்.

தயம்மும் செய்யும் முறை

"அசுத்தத்திலிருந்து நீங்கும் பொருட்டு தயம்மும் செய்கிறேன்" என்று நிர்ணயம் செய்து கொண்டு கை விரல்களைச் சற்று திறந்த வண்ணமாக வைத்துக் கொண்டு, இரண்டு கரங்களையும் சுத்தமான மண்ணின் மீது அடித்து மண்ணின் மீது கையை வைத்த வண்ணம் சற்று முன்னும் பின்னுமாக இழுத்து, பிறகு இரண்டு கைகளையும் அவை களின் முதுகுப் புறத்தின் மூலமாகச் சற்று தட்டி கையை உதறி முகம் முழுவதையும் தடவிக்கொள்ள வேண்டும்.

பின்னர், மண்ணின் மீது இரண்டு கரங்களையும் முன் போல் அடித்து, இடக்கையின் நான்கு விரல்களையும் வலக்கையின் பின் புறத்தின் மீது வைத்துக் கையை எடுக்காமல் முழங்கை வரை தடவி, முழங்கையின்

மொழியிலிருந்து இடக்கையின் உள்ளங்கையை வைத்து அதனை எடுக்காமல் வலக்கையின் உட்புறத்தை அதன் நுனி வரை தடவி, இடக்கரத்தின் பெரு விரலின் உட் புறத்தை வலக்கையின் பெருவிரலின் முதுகுப் புறத்தின் மீது தடவ வேண்டும். இவ்விதமே இடக்கையின் பின்புறத் தின்மீது வலக்கையின் நான்கு விரல்களை வைத்து முழங் கைவரை தடவி, முழங்கையின் மொழியிலிருந்து இடக் கையின் உட்புறத்தை வலக்கையின் உள்ளங்கையால் தடவி, பெருவிரலின் முதுகுப்புறத்தில் தடவ வேண்டும்.

தயம்மும்மின் பர்லுகள்

1. தொழுகைக்காக தயம்மும் செய்கிறேன் என்று நிய்யத்து (நிர்ணயம்) செய்தல்,

2. கொஞ்சங்கூட இடை விடாதவாறு முகத்தையும் இரண்டு கரங்களையும் முழங்கையுட்பட தடவுதல்,

3. விரலால் அல்லது மிகுதியான விரல்களால் தடவுதல்;

4. மண் சுத்தமாக இருத்தல்,

5. மண் இனத்தைச்சேர்ந்தவைகளை உபயோகித்தல்,

6. ஜலமில்லாமல் அல்லது ஜலத்தை உபயோகிக்க இயலாமல் இருத்தல்.

மண், கல், மணல், கரை, சுண்ணாம்பு, செம்மண், சுருமாக்கல், காக்காப் பொன் போன்றவைகள் அதாவது நெருப்பிலிட்டால் உருகாததும் சாம்பலாகாததுமான பொருள் மண் இனத்தைச் சேர்ந்தவை.

தயம்முமின் ருக்னுகள்

1. முகத்தையும், முழங்கையுட்பட இரண்டு கைகளையும் தடவுவதற்காக பூமியில் அல்லது அதன் இனத்தின் மீது இருகரங்களையும் இருமுறை அடித்தல்,

2. முகத்தையும் முழங்கையுட்பட இருகரங்களையும் கொஞ்சம் கூட விட்டுப் போகாமல் அடைய வளைந்து தடவுதல்.

தயம்முமின் ஸுன்னத்துக்கள்

1. இரண்டு முன் கைகளின் உட்புறத்தால் மண்ணின் மீது அல்லது மண்ணின் இனத்தின் மீது அடித்தல்,

2. மண்ணின் மீது அடித்த கையை எடுக்காமல் அதன் மீது வைத்த வண்ணம் முன்னும் பின்னுமாக இழுத்தல்,

3. இரண்டு கைகளையும் உதறுதல்,

4. பூமியில் அடிக்கும் போது இரண்டு கைவிரல்களையும் விவரித்து வைத்திருத்தல்,

5. அஊதும், பிஸ்மில்லாவும் ஓதுதல்,

6. வரிசைக் கிரமமாகச் செய்தல்,

7. தொடர்ச்சியாகச் செய்தல்.

தயம்முமை முறிக்கும் காரியங்கள்

1. ஒலுவை முறிக்கக் கூடிய காரியங்கள் யாவும் தயம்முமை முறித்து விடும்.

2. தன் தேவைக் கதிகமாக ஒலுச் செய்யும் அளவிற்கு ஜலத்தை உபயோகிக்க சக்தி பெறல்,

3. தயம்மும் செய்ய நேரிட்ட காரணம் நீங்குதல் ஆகிய இக்காரியங்களால் தயம்மும் முறிந்து விடும்.

தொடர்ந்த வியாதியஸ்தர்கள்

பெரும்பாடுபோன்ற வியாதியஸ்தர்கள், காயத்திலிந்து அல்லது புண்ணிலிருந்து அல்லது சிரங்கிலிருந்து எப்பொழுதும் உதிரம் கசிந்து கொண்டே இருப்பவர்கள், எப்பொழுதும் மூத்திரம் சொட்டிக்கொண்டே இருப்பவர்கள், மூக்கிலிருந்து எப்பொழுதும் இரத்தம் வடிந்து கொண்டே இருப்பவர்கள், மூலவியாதியினல் பின் துவாரத்திலிருந்து எப்பொழுதும் உதிரம் வந்து கொண்டே இருப்பவர்கள், எப்பொழுதும் காற்றுப் பறிந்து கொண்டே இருப்பவர்கள் அதாவது ஒலுவை முறித்து விடக் கூடிய வியாதிகளுள்ளவர்கள் ஒவ்வொரு நேரத்திலும் ஒலுச் செய்து கொள்ள வேண்டும். ஒருவேளைசெய்த ஒலுவினல் மறு வேளைத் தொழுகையை நிறைவேற்றக் கூடாது. இவ்விதமான ரோகிகளின் ஒலுவை தொழுகையின் நேரம் பூர்த்தியாகுவது முறித்து விடும். மேலும், ஒலுவை முறித்து விடக்கூடிய இதர காரியங்களும் முறித்து விடும்.

மாதாந்த ருது (ஹைலு)

ஸ்திரீகள் யுக்த வயதை அடைந்த காலத்தில் அவர்களது பெண் குறி வழியாக மாதந்தோறும் உதிரம் வெளிப்படும். இதற்கு மாதாந்த ருது என்றும் ஹைலு என்றும் பெயர். இவ்வுதிரம் வருவது பிரசவத்திற்குத் தக்க பருவத்தை அடைந்ததற்குத்தக்க அடையாளம். பெண்

குழந்தைகளுக்கு ஒன்பது வயதானதிலிருந்து இவ்வுதிரம் வருவதற்கு இடமுண்டு. ஐந்து வயதுக்கு முன்னதாக இந்த உதிரம் வரமாட்டாது. ஐந்து முதல் ஒன்பது வயதுக்குள்ளாகவும் இவ்வுதிரம் வருவதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். ஐம்பத்தைந்து வயதுவரை இவ்வுதிரம் ஸ்திரீகளுக்கு வரும். அப்புறம் இது வருவதில்லை.

இவ்வுதிரம் குறைந்த பக்ஷம் மூன்று நாட்கள் வரும். பத்து நாட்களுக்கு அதிகமாக வராது. மேலும், இவ்வுதிரம் மூன்றுநாட்களுக்கு இடைவிடாமல் வந்து கொண்டே இருக்கும் என்பது அர்த்தமில்லை. இரவு பகல்களில் இடைவிட்டு சில சமயம் உதிரம் வந்தும் சில சமயம் உதிரம் வராமலும் இருக்கும்.

மாதந்தோறும் குறித்த காலத்தில் இவ்வுதிரம் வரும் என்ற நிச்சயமில்லை. ஒரு முறை இவ்வுதிரம் வந்து நின்று விட்டால், அப்புறம் குறைந்த பக்ஷம் 15 தினங்களேனும் சுத்தமாக இருக்கவேண்டும். அதற்கப்புறம் இவ்வுதிரம் வந்து விடலாம்.

மாதாந்த ருது பத்து தினங்களுக்கு அதிகமாக வருமாயின் அது நிற்கட்டும் என்று காத்திருக்காமல் ஸ்நானஞ் செய்துவிட்டு பதினென்றுவது தினத்திலிருந்து தொழுகை நோன்பு முதலிய கிரியைகளைச்செய்யத் தொடங்கிவிடவேண்டும். மாதாந்த ருது வெண்ணிறத்தைத் தவிர்த்து வேறெவ்வித நிறத்திலும் வரலாம்.

பிரசவ ருது

பிரசவமானவுடன் அந்த ஸ்திரீயின் கற்ப கோளறையிலிருந்து வெளிப்படும் உதிரத்திற்கு நிபாஸ் அல்லது

பிரசவ ருது என்று பெயர். இதற்கு குறைந்த காலத்தவணை இல்லை. ஒரு நிமிஷத்தில் அது நின்று விடவும் கூடும். நாற்பது நாட்கள்தான் அதற்கு அதிகப்படியான தவணை. எல்லா ஸ்திரீகளுக்கும் அது நாற்பது நாட்கள் வரை வரும் என்ற நியதியுமில்லை. அவரவருடைய தேகக்கூறுக்குத் தக்கவாறு 10 நாள், 15 நாள், 20 நாள், ஒரு மாதம் என்று பலவாறாக வரும். ஒரு ஸ்திரீக்கு ஒரு பிரசவத்தில் பத்து நாட்கள் வந்தால், மறு பிரசவத்திலும் இதே மாதிரி பத்து தினங்கள்தான் இந்த ருது வரவேண்டுமென்ற அவசியமில்லை. பத்து நாட்களுக் கதிகமாகவோ அல்லது குறைவாகவோ இந்த ருது வரக்கூடும். எவ்வாறாயினும் நாற்பது நாட்களுக்கு அதிகமாக இந்த ருது வராது. இதற்கதிகமாக ருது வருமாயின் அது நிற்க வேண்டும் எனக்கவனிக்காமல் ஸ்னானஞ் செய்துவிட்டு தொழுகை நோன்புபோன்ற காரியங்களை நிறைவேற்றலாம்.

ஜனபத்துக்காரர்கள், ஹைலு நிபாஸ்காரர்கள் ஒலுவில்லாதவர்கள் செய்யக்கூடாத காரியங்கள்

ஜனபத்துக்காரர்கள், ஹைலு, நிபாஸ்காரர்கள் ஸ்னானஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தொழவும் கூடாது. திருகுர்ஆனைத் தொடவும் கூடாது, அதனை ஓதவும் கூடாது, மஸ்ஜிதினுட் செல்லவும் கூடாது, கஃபாஷரீபைத் தவாபு செய்யவும் கூடாது.

ஹைலு நிபாஸ்கார ஸ்திரீகள் மேற் கண்ட ஐந்து காரியங்களைச் செய்யத் தடுக்கப்பட்டிருப்பதுடன் நோன்பு நோற்றல், ஸம்ஸர்க்கம் செய்தல் ஆகிய இரண்டு காரியங்களையும் விட்டுத் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள்

தொழுகையைக் கலாச்செய்யவேண்டிதில்லை. இவர்களுக்கு இது மன்னிக்கப்பட்டிருக்கிறது. றமலான் மாத நோன்பை மட்டிலும் கலாச் செய்யவேண்டும்.

ஒலு இல்லாதவர்கள் தொழுகையை நிறை வேற்றக் கூடாது. திருகுர்ஆனைத் திரையின்றித் தொடக்கூடாது. கஃபாஷரீபைத் தவாபு செய்யக்கூடாது. அவ்வாறு தவாபு செய்வதால் சட்டப்படியுள்ள பரிகாரங்களைச் செய்யவேண்டும். இப்பரிகாரங்களைப் பற்றியவிபரம் ஹஜ்ஜுடைய பாடத்தில் கூறப்படும்.

தொழுகை

அல்லாஹுத ஆலா தன்னை வணங்குவதற்காகவே மனிதரையும் ஜின்வர்க்கத்தாரையும் சிருஷ்டித்தான் என்ற விபரம் திருகுர்ஆனிலேயே கூறப்பட்டிருக்கிறதென்பது இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அவனை எவ்விதம் வணங்கவேண்டும் என்பதை அறிவிப்பதற்காகவே நபிமார்கள் இவ்வுலகில் தோன்றினார்கள். வேதங்களும் இதனை விவரிப்பதற்காகவே அருளப்பட்டன. அல்லாஹுத ஆலாவின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடப்பதே அவனை வணங்குவதாகும். என்றாலும், இவ்வணக்கங்களை இமாம்களான பேரறிஞர்கள் பல்வேறு வகையாகப் பிரித்து வைத்திருக்கின்றனர். அவ்வகைகளில் தொழுகையும் ஒன்று.

தொழுகையை முஸ்லிம்கள் மட்டுமில்லாமல் எல்லா ஜனங்களுமே நிறைவேற்றுகின்றனர். அல்லாஹுத ஆலா ஒருவன் இருக்கிறான், மரித்த பிறகு நம்முடைய இவ்வுலக வாழ்க்கையில் நாம் செய்த நன்மை தீமைகளுக்குரிய பயன்களை நாம் அனுபவிக்கவேண்டும் என்ற கொள்

கையை ஏற்றுக்கொள்ளாத நாஸ்திகர்களும், இவர்களைப் போன்றவர்களும்தான் தொழுகை தங்களது கடமை என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். என்றாலும், முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாதாருக்கும் இதனை நிறை வேற்றும் முறையில் பெருத்த வித்தியாசமுண்டு. இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ள தொழுகை இறைவனது கட்டளைப் படி, இறைவன் காட்டியுள்ள முறைப்படி அமைந்திருப்ப தால் முஸ்லிம்களது தொழுகை தெய்வ சம்மதமானது. தெய்வத்தால் அங்கீகரிக்கப்படத்தகுந்தது என்பது முஸ் லிம்களது விசுவாசம். முஸ்லிம் அல்லாதார் நிறைவேற்றும் தொழுகையும், அதன் முறைகளும் மனிதர்களாக ஏற்படுத் தியதால் அவை இறைவனால் அங்கீகரிக்கப்படத் தகுந்த தல்ல என்பதும் முஸ்லிம்களது நம்பிக்கை.

எனவே, தொழுகை இறைவனது கட்டளைப்படி, அவன் காண்பித்த முறைப்படி நிறை வேற்றப்படுவதால் அது இறைவனால் அங்கீகரிக்கப்படுகிறது. இதனால் முஸ் லிம்கள் மறுமையில் நன்மைப் பயனை அடைகின்றனர். இவ்வுலகிலும்கூட எண்ணற்ற நற்பயன்களுண்டாகின்றன. இதனைக் குறித்து இறைவன் தனது திருமறையில்,

اُتْلُ مَآ اُوْحِيَ اِلَيْكَ مِنَ الْكِتَابِ وَاَقِمِ الصَّلٰوةَ اِنَّ الصَّلٰوةَ

تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ

(நபியே) வேதத்தில் நின்றும் உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் ஓதுவீராக. இன்னும் தொழுகையை நீலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை மானக்கேடானவைகளையும் வெறுக் கத் தக்கதையும் விலக்கும். என்று கூறியுள்ளான்.

திருமறையிற் கூறப்பட்டுள்ள இக்கட்டளைக்கேற்ப தொழுகையை உண்மையாகவே நிறைவேற்றுபவர் இவ்வுலகிலும்கூட மகா மேன்மையானவர்களாக விளங்குகின்றனர். தொழுகையைக் கடைப்பிடித்தொழுகிய சிலர் தங்களிடமிருந்த துற் குணங்களையும் துற் செய்கைகளையும் அகற்றி மிக உன்னத ஸ்தானத்திற்கு வந்த விபரத்தைக் குறித்த சரித்திர சம்பந்தமான கதைகளும் சமபவங்களும் அனந்த முண்டு. இக்காலத்திலுங்கூட தொழுகையை உண்மையாகவே கடைப்பிடித்தவர்கள் கிரியாம்மையில் இதன் இம்மைப் பயனை நன்குணர்வர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ள ஹதீதுகளும் தொழுகையின் இம்மை மறுமைப் பயன்களை மிகத்தெளிவாகக் கூறுகின்றன.

திருகுர் ஆன் ஹதீதுகளில் கூறப்பட்டுள்ள இம்மை மறுமைப் பயன்களைப் பரிபூரணமாக அடைய வேண்டுமாயின் அதனை உண்மையாகவும், அந்தரங்க சுத்தியாகவும், பக்தியாகவும் நிறை வேற்ற வேண்டும். வெளியுலகில் பலர் தன்னை நல்லவரென நினைத்துக் கொள்ளட்டும் என்பதற்காகவோ, வேறு சுயநலத்திற்காகவோ அல்லது விளையாட்டாகவோ, வழக்கத்தை அனுசரித்தோ தொழுகையை நிறைவேற்றுபவர் அதன் இம்மை மறுமைப்பயன்களைப் பூரண்மாக அடைய முடியாது. அவரவருடைய எண்ணத்திற்கும் பக்திக்கும் தக்கவாறே அதன் பயனை அடைவர்.

தொழுகையை நிறைவேற்ற மன மில்லாதவர்களும் தொழுகையினுலேற்படும் இம்மை மறுமைப் பயன்களை உணராதவரும், சோம்பேறிகளும், இஸ்லாம் மதவிரோதிகளும் முஸ்லிம்களது தொழுகையைக் குறித்துப் பல

வாருகப் பேசுவதுண்டு. தினசரி ஐந்து வேளைகள் மட்டிலும் ஏன் தொழவேண்டும்? அவனை எப்பொழுதும் சதா ஞாபகம்செய்து கொண்டிருப்பது தான் சரியான தொழுகை, குனியவும், நிமிரவும், நிற்கவும், சாஷ்டாங்கம் செய்யவும், உட்காரவும் வேண்டுமா? இதனால் பக்தி அதிகரிக்கமாட்டாது என்பது போன்ற பலவித வாதங் களைக்கூறி முஸ்லிம்களது தொழுகையை ஏளனம் செய் பவர்கள் முஸ்லிம் அல்லாதாரில் மட்டுமில்லாமல், முஸ்லிம் என்று தன்னைக் கூறிக்கொள்வோரிலும் சிலர் இருக் கின்றனர்.

தொழுகையின் அமைப்பு முறையை நன்கு கவனிப் பவர்கள் மேற்கண்டவிதமான ஆக்ஷேபனைகளையும் வாதங் களையும் அறியாமை என்று ஐயமற உணர்வர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அல்லது அவர்களுக்குப் பின்னுள்ள வேறுமனிதர்களோ தொழுகையின் முறையை நிர்ணயிக்கவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபிப்பதவி அருளப்பட்ட போது ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் இமாமாக இருந்து தொழுது காட்டிய முறையிலேயே இப்பொழுது முஸ்லிம்கள் தொழுது வருகி றார்கள். ஆதலின், தொழுகையை நிறைவேற்றும் முறை மனிதரால் ஏற்படுத்தப்படாமல் இறைவன் கட்டளைப்படி ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்களால் கற்பிக்கப்பட்ட முறை என்பதை உணர வேண்டும்.

தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிப்பத வியை அடைந்த சில வருஷங்களுக்குப் பிறகு இறைவனது கட்டளையால் ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களுடன் வான லக யாத்திரை சென்றார்கள். இதனை மிஅராஜ் என்று

கூறுவர். இச்சமயத்தில்தான் ஐங்காலத்தொழுகை இறைவனால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிர்ணயத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அப்புறம் திருகுர்ஆனிலும் பற்பல இடங்களில் இவ்வைங்காலத் தொழுகையைப்பற்றிய கட்டளை தனித்தனியே கூறப்பட்டுமிருக்கின்றன. எனவே, ஐங்காலத் தொழுகையைப்பற்றிய நிர்ணயமும் கூட இறைவனது நேரடியான கட்டளையாலும், வேதவாக்காலுமே இருந்து வருகின்றன.

இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் எல்லாவற்றிலும் தொழுகையைப் பற்றிய கட்டளைகள் இருக்கின்றன. எல்லா நபிமார்களும் தொழுகையை நிறைவேற்றி வந்திருக்கின்றனர். ஆதலால், எல்லா ஷரீஅத்துகளிலும் தொழுகையைப் பற்றிய விதி இருந்தாலும், முஹம்மதிய ஷரீஅத்தில் தினந்தோறும் ஐங்காலத்தொழுகைகள் ஏற்படுத்திய பாங்கு வேறு ஷரீஅத்தில் இல்லை. இறைவன் கூறிய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற முறையில் நாம் இத்தொழுகையைக் குறித்துச் சிந்தித்தால், ஐங்காலத் தொழுகையின் இரகசியத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை என்பது புலனாகும். ஆனால், தொழுகையின் மாண்பைத் தெரிந்து கொள்ளவும் அதில் பக்தி வைக்கவும் வேண்டி, அவைகளைக் குறித்து நாம் ஓரளவேனும் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

தொழுகையை நிறைவேற்றும்படி இறைவன் நமக்குக் கட்டளையிட்டதில் அவனுக்குச் சுய நலம் ஒன்றுமில்லை. மனித வர்க்கத்தினராகிய நாம் அவனைத் தொழுதாலும், தொழாதிருந்தாலும் அவனது மகத்துவம் குன்றப்போவது

மில்லை. அவனது சக்தியில் குறைவு வரப்போவதுமில்லை. அவனது தெய்வாம்சத்திற்குக் குந்தகம் வரப்போவது மில்லை. நாம் யாவரும் தொழுவதால் அவனுக்குப் புதிதான மகத்துவமோ, பெருமையோ, சக்தியோ, தெய்வாம்சமோ பெருகி விடுவதுமில்லை. இவ்வுலகை சிருஷ்டிப்பதற்கு முன்னர் அவன் எவ்வித மிருந்தானோ அவ்விதமாகத்தான் இப்பொழுமிருக்கிறான். இனிமேல் இவ்வுலகம் முடிந்த பிறகும் இவ்விதமாகத் தானிருப்பான்.

எனவே, தொழுகையை நிறைவேற்றுவதால் நன்மைப்பயனை அடைபவர்கள் நாம்தான். நாம் தொழுதால் நன்மையை அடைவோம், தொழாதிருந்தால் அதனை இழந்து விடுவோம். லாபமும் நஷ்டமும் நமக்குத்தான். தொழுகையை நிறைவேற்றுபவருக்கு இம்மையிலும் மறுமையிலும் அளிப்பதாக இறைவன் கூறி இருப்பதும், அவன் கூறியவாறு அளிப்பதும் கூட அவன் நம் மாட்டுள்ள அளவற்ற அன்பினாலும் கருணையினாலுமேயாம். தொழுதவருக்கு நன்மைப் பயன் அளிக்காவிடில் என் நன்மைப் பயன் அளிக்கவில்லை? என்று அவனைக் கேட்க நமக்கு உரிமை இல்லை. ஏனெனில், நாம் நிறைவேற்றும் தொழுகை, அவன் நமக்கு இதுவரை செய்துள்ள கணக்கற்ற அரும் கொடைகளுக்கு நன்றி செலுத்தும் முறையிலேயே இருந்து வருவதால் நாம் நிறைவேற்றும் தொழுகைகளுக்கு மேல் அதிகமான பிரதி பலனுக்கு கூலியை நாம் எதிர் பார்ப்பதற்கு நியாயமில்லை. அவ்வாறிருந்தும் அவன் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்பயன்களைத் தருவது அவனது கருணையேயாகும்.

மனிதரில் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம் புலன்களிருக்கின்றன. இவைகளின் மூலமாகத்தான்

மனிதன் தனக்குரிய சகல காரியங்களையும் சாதித்துக் கொள்கிறான். எனவே, இவ்வைம்புலன்களுக்கு நாம் அவனுக்கு நன்றி செலுத்தும் முறையிலேயே ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுகிறோம்.

தினந்தோறும் ஐங்காலம் தொழவேண்டு மென்றேற் பட்டதிலும் பஜ்று, லுஹர், அஸர், மகுரிபு, இஷா என இவ்வைந்து வேளைகளைக் குறிப்பாய் ஏற்படுத்தியதிலும் விசேஷ மில்லாமலில்லை. அவைகளைக் குறித்து சிறிது ஆராய்வோம். ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் இறைவன் கட்டளைக்கு மாறுக நடந்து சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு, அவர் செய்த தௌபா வை இறைவன் ஏற்று, அவரை மன்னித்த நேரம் பஜ் றுடைய வேளையாகும். தனது தௌபாவை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தும் முறையில் உடனே அவர் இரண்டு ரக்க அத்துகள் தொழுது தனது பணிவை யும் நன்றியையும் இறைவனுக்குச் செலுத்திக் கொண்டார். ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது ஏகசுதனை அறுத்து பலியிடுவது போல சொர்ப்பனம் கண்டு, அக் கனவின் பிரகாரம் தமது புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுப்பதற்காக அழைத்துச் சென்றார் கள். அப்பொழுது அவருக்கு நான்கு விதமான கவலை இருந்தது. தமது ஏகப்புதல்வரை இறைவனுக்காக அறுப்பதை அவன் அங்கீகரிப்பானா? என்பது ஒன்று. ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தாம் அறுத்துப் பலியிடப்பட சம்மதிப்பாரோ? என்பது மற்றொன்று. தமது மனைவியும் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களது தாயுமான ஹஜ்றத் ஹாஜராவுக்கு யாதுபதில் கூறுவோம்? என்பது இன்னொன்று, தமது புதல்வரை அறுத்து

விட்டால் அப்புறம் அவரது அன்னையும் தமது மனைவியுமான ஹாஜரா பாரான் வனத்தில் தனித்திருக்க வேண்டிய தேற்படுமே என்பது ஒன்று. இந்நான்கு வகைக் கவலையால் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் குழப்பமடைந்திருந்தார்கள்.

இறைவன் கட்டளையை நிறைவேற்றுமலிருப்பதில்லை என்ற துணிவுடன் தமது ஏகசுதனும் நேசகுமாரருமான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களை குர்பானி செய்தார்களென்றாலும், இறைவனது நாட்டப்படி கத்தி அறுக்கவில்லை, அவர்களது தியாக உணர்ச்சியையும் பக்தியையும் இறைவன் ஏற்றுக்கொண்டு, அவரை அறுக்க வேண்டாம் எனக் கட்டளையிட்டதுடன், அவருக்கு பதிலாக ஆட்டை அறுக்குமபடி கூறினன். அதன்படி அவர் அறுத்துக் குர்பானி கொடுத்தார். இவ்வாறு செய்ததில் முற்கூறப்பட்ட நான்கு வகைக் கவலைகளும் தீர்ந்தன.

இறைவன் இவரது குர்பானியை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தான், ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் பலியாவதற்கு உடன் பட்டார். தமது மனைவிக்கு பதில் கூறவேண்டி சிரமம் தீர்ந்ததுடன், அவர் தனிமையில் வனத்திலிருக்க வேண்டிய அவசியம் நேரவில்லை. இந்நான்கு வகைக் கவலைகளும் நீங்கியதற்கு நன்றியாக ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நான்கு ரக்அத்துகள் தொழுதார்கள். இது லுஹருடைய நேரத்தில் நிகழ்ந்தது.

மஜூஸியர்கள் படையெடுத்து வந்து யூதர்களை ஜெயித்து அடிமைப்படுத்தி, பைத்துல் முகத்தஸ் நகரையும்

பாழாக்கி விட்டனர். இக்காலத்தில் ஹஜ்றத் உஜைர் (அலை) அவர்கள் அவ்வழியே வந்து இவ்வூர் அழிந்த பிறகு, இதனை அல்லாஹ்த் தஆலா எங்கே வளம்படச் செய்யப் போகிறான் என்று அவ்வூரைக் குறித்துக் கூறினார்கள்.

அப்பொழுது அல்லாஹ்த் தஆலா அவரை மரிக்கச் செய்தான் அதாவது அவர் சவாராகி வந்த கழுதையை ஒருமரத்தடியிற் கட்டி விட்டு, கொண்டு வந்த கட்டுச் சாதத்தை மரத்தில் தொங்க விட்டு விட்டு அம்மரத்தினடியில் நித்திரைக்குச் சென்றார். அப்படியே அவர் அவ்விடத்தில் மரித்தவரே போல் நூறு வருஷங்கள் தூங்கினர், அவரது கழுதை அவர் கட்டிவைத்த இடத்திலேயே மரித்தது. அதன் எலும்புகளெம்லாம் உக்கிப் போயின.

பிறகு, அவர் நித்திரையிலிருந்து எழும்பியபோது அல்லாஹ்த் தஆலா "எவ்வளவு நேரம் தாமதத்தீர்?" என்பதாக அவரை வினவினான். அதற்கவர் ஒருநாள் அல்லது அதற்குக் குறைவாகத் தூங்கி இருப்பேன் எனப் பதில் கூறினார். அதற்கிறைவன் "இல்லை, நூறு வருஷம். உனது கழுதையைப்பார். அதன் எலும்புகள்கூட இத்துப் போயின. உனது உணவைப்பார் அது வைத்தது போல இருக்கிறது என்று கூறி, அக்கழுதையை உயிர்ப்பித்தான். அவர் முன்னிலையிலேயே உக்கிப்போயிருந்த அதன் எலும்புகள் கெட்டிப்பட்டன. அவைகளில் தசை, நரம்பு களுண்டாகி, தோலும், மயிரும் உண்டாயின, அப்புறம் அது உயிர் பெற்றெழும்பிற்று. இதனை அவர் பார்த்த பிறகு இவ்விதமாகத்தான் உயிர்ப்பிப்பேன் என்று இறை

வன் அவருக்கு அறிவித்தான். அப்பொழுதவர் இறைவனுக்கு நன்றி செலுத்தி நான்கு ரக்கஅத்துகள் தொழுதார். இது அஸருடைய நேரத்தில் நிகழ்ந்தது.

ஹஜ்றத் தாவூத் (அலை) அவர்கள் அரசபதவியை அடைந்து அரசாட்சி புரிந்தாலும், தமது நித்திய ஜீவனத்திற்கு உறுக்குச் சட்டை தயார் செய்து அதனை விற்று தனக்கும் தன்குடும்பத்திற்கும் சிலவுக்கு கொடுத்து வந்தார். இவ்வாறிருக்க ஒரு நாள் உறுக்குச் சட்டை விற்பனையாகவில்லை. வீட்டில வந்தபோது தம் குடும்பத்தாரிடம் இன்று விற்பனையாக வில்லை. நாளைக்கு வாங்கிக் கொள்வார்கள் என்று கூறி அவர்களைத் தேற்றினர். மறு நாளும் விற்பனையாக வில்லை. இவ்விதமாகப் பல நாள் தொடர்ச்சியாக விற்பனை செய்ய முடியவில்லை. அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து பணம் எடுக்கக் கூடாது. தமது சுயசம்பாத்தியத்தால் ஹலாலான உணவை உட்கொள்ள வேண்டும் என்ற சங்கல்பத்துடனிருப்பதாலும், தங்களது உணவிற்கு உறுக்குச் சட்டை விற்பனையைத் தொழிலாக வைத்திருந்ததாலும் பலநாட்கள் வரை அவைகள் தொடர்ச்சியாக விற்பனை யாகாதிருந்தது கவலையைக் கொடுத்தது.

இதனைக் குறித்து ஹஜ்றத் தாவூத் (அலை) அவர்கள் இறைவனிடம் துஆக்கேட்டார்கள். அப்பொழுது இறைவன் ஹஜ்றத் தாவூத் (அலை) அவர்களிடம் "அன்று; உமது குடும்பத்தாரிடம் நீர் கூறியபோது, நாளைக்கு வாங்கிக் கொள்வார்கள். விற்றுவருகிறேன் என்று கூறினீர், நாளைக்கு நாயன் கொடுப்பான் என்று கூறவில்லை. உமக்கு உணவளிப்பது நாமல்லவா? மனிதர்களில்லையே. அவர்களை அல்லவா? நீர் நம்பினீர். இதனை அறிவுறுத்து

வதற்காகப் பல நாள் தொடர்ச்சியாக நாம் சட்டையை விற்பனையாக விடவில்லை. இப்பொழுது மேலே பார்" என்று கூறினான். வானை நோக்கிய போது அர்ஷில் அவர் விற்பனை செய்த உறுக்குச் சட்டைகளிருப்பதைக் கண்டார். அப்பொழுது "உமக்குனை வளிப்பதற்காக இவைகளைக் கிரயங் கொடுத்து வாங்கச் செய்தோம்" என்று இறைவன் கூறினர்.

ஹஜ்றத் தாவுத் (அலை) அவர்கள் தமது தவறை யுணர்ந்து அழத் தொடங்கி, அவனிடம் தௌபா இஸ்திஃபார் செய்தார். இதற்காக நான்கு ரக்கஅத்துகள் தொழுதார். மூன்று ரக்கஅத்திற்குப் பிறகு நான்காவது ரக்கஅத்துத் தொழ அவரிடம் சக்தியும் கூட இல்லாம லாகிவிட்டது. அவரது வினனமும் அழுகையும் நான்காவது ரக்கஅதைத் தொழ அவரை இயலாமலாக்கி விட்டன. அவரது இந்த தௌபாவை அல்லாஹ்த் தஆலா அங்கீகரித்தான். இது மகுரிபுடயை நேரத்தில் நிகழ்ந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷாவுடைய தொழுகையை நிறைவேற்றியதுடன் தமது ஸஹாபிகளை யும் நிறைவேற்றும்படி கட்டளையிட்டிருந்தார்கள். முற் காலத்து நபிமார்கள் இதனை நிறைவேற்றினர்களாயினும் அவர்களது உம்மத்துகள் நிறைவேற்றவில்லை. நமது நாய கம் (ஸல்) அவர்களது உம்மத்துகளாகிய ஸஹாபிகள் நாய கம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து இந்தத் தொழுகையை நிறைவேற்றினர்கள். இது இறைவனுக்கு விருப்பமாக இருந்தது. இந்த நேரத்தையும் இறைவன் நம்மீது விதி யாக்கி விட்டான்.

எனவே, ஐங்காலத் தொழுகையில் மேற் கூறப்பட்ட விசேஷங்கள்மட்டும்தான் இருக்கின்றன என்பதில்லை. இவைகளுக்கு இன்னும் அனேக விசேஷங்களும் மகத்துவங்களுமிருக்கின்றன. அவையாவையும் இங்கு எடுத்தெழுத இடமில்லாததால் விடப்பட்டது. இவ்வாறு நாம் கவனிப்போமாயின் நமது தொழுகையிலுள்ள ஒவ்வொரு செய்கைக்கும் காரணமில்லாமல் இல்லை. இறைவன் அகாரணமாக நமக்குக் கட்டளையிடமாட்டான். ஆதலால், தொழுகையைக் குறித்து ஏளனம் செய்வதோ, குறை கூறுவதோ உண்மையில் இறைவன் செய்கையைக் குற்றங் கூறுவதாக இருக்கிறதென்பதை உணருவார்களாக.

மேலும், சிருஷ்டிப்பொருளிற் சில நின்ற வண்ணமாகவும் சில குனிந்த வண்ணமாகவும், சில உட்கார்ந்த வண்ணமாகவும், சில சாஷ்டாங்கம் செய்த வண்ணமாகவும் அவனை வணங்குகின்றன. தொழுகையில் இவ்வகைகள் யாவும் ஒருங்கே அமைந்திருப்பதால், இது சிருஷ்டிப் பொருள்கள் யாவும் செய்யும் சகலவிதமான வணக்கங்களையும் புரிந்ததுபோலாகிறது.

தவிரவும், தொழுகையில் திருகுர்ஆனை ஓத வேண்டியதுமிருக்கிறது. இப்படிச் செய்வது இறைவனிடம் மனிதர்கள் தங்களது கோரிக்கைகளை விண்ணப்பித்துக் கொள்வதற்குச் சமமாகும். எவ்வாறெனில், மனிதர்களாகிய நாம் நம்முடைய மேலதிகாரிகளிடம் ஏதேனும் ஒரு காரியத்தைக் குறித்து விண்ணப்பித்துக் கொண்டால், அவ்வதிகாரியின் அந்தஸ்திற்குத் தக்கவாறு, அவருக்கு அளிக்கவேண்டிய கௌரவப்பதங்களை உபயோகித்து, நமமைக் கீழ்ப்படிந்தவர்கள் என்ற முறையில் மனு எழுதி

கிறோம். அப்புறம் நமக்குள்ள குறைகளைக் கூறுகிறோம். அவ்வதிகாரி அதனைப் படித்துப் பார்த்து தனக்கு உசித மாகத் தோன்றுகிற முறையில் உத்தரவு பிறப்பிக்கிறார்.

இதே முறையில்தான் நாம் முதலாவதாக ஸூறத்துல் பாத்திஹாவை ஓதி அவ்வல்லோனின் உயர்ந்த அந்தஸ்திற் குத் தக்கவாறு முதல் மூன்று ஆயத்துகளின் மூலமாக அவனைப் புகழ்கின்றோம். நான்காவது ஆயத்தில் நமது பணிவைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்புறம் மனித பிறவியின் லக்ஷியத்திற்குரிய விஷயத்தைக்குறித்து விண் ணப்பித்துக் கொள்கிறோம். ஸூறத்துல் பாத்திஹாவிற் குப் பிறகு நாம் ஓதும் ஸூறத்து அவ்வல்லோன் நமது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து நமக்கு உத்தரவு பிறப் பிப்பதைப் போலிருக்கிறது.

மனிதர்களாகிய நாம் இயற்கையாகவே நன்றியறித லுள்ளவர்களாகவும், பிறர் செய்த உபகாரத்திற்குத் தக்க பிரதி செய்யும் குணமுள்ளவர்களாகவுமிருந்து வருகிறோம். அல்லாஹ்¤ தஆலா நமக்களித்துள்ள அருட்கொடைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே நாம் குறிப்பிட்டு அவ னுக்கு நன்றி செலுத்தவோ பிரதி செய்யவோ நாம் முற் படுவோமாயின், அவ்வாறு செய்து முடித்துவிட நம்மால் இயலாது. இவ்வுண்மையை மனிதர் ஒவ்வொருவரும் நன் கறிவர். ஆதலால், நாம் அவன் கூறிய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவே நமது நன்றி மற வாமையை நாம் காண்பித்துக் கொள்ளமுடியும். ஏனெனில், நமது வணக்கத்தின் பாலிலோ, நம்பாலிலோ அவன் தேவை யுள்ளவனல்ல. நாம்தான் அவனிடம் எப்பொழுதும் தேவையுள்ளவர்களாக இருந்து வருகிறோம். ஆத

லின், நமது நன்றி மறவாமையை அவனது கட்டளைக்குக் கீழ்படியும் முறையில் வெளியிடுவோமாயின், நாம் அவனது அருட்கொடைக்கு நன்றி செலுத்தியவர்களாகவும், அவனது அன்பிற்குரியவர்களாகவும் ஆகிவிடுகின்றோம். அவனது அன்பிற்குரியவர்களாக ஆகும்போது இம்மையிலும் மறுமையிலும் நாம் அனேக உயர் பதவிகளையடைவோம். இதனற்றுன் ஒலிமார்கள் நபில் தொழுகைகள் மூலமாக நாயன் சமூகத்தை நண்ணுங்கள் என்று கூறி இருப்பதுடன், அவன் கடமையாக ஏற்படுத்திய காரியங்களைச் செய்வதோடில்லாமல் தொழுகை, நோன்பு முதலிய வணக்கங்களில் நபிலானவைகளையும் அதிகம் புரிந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களிலும் கூடச்சிலர் "அல்லாஹ¤ தஆவை ஞாபகிப்பதுதான் தொழுகையின் முக்கிய நோக்கம், நாங்கள் எப்பொழுதும் அவனை ஞாபகித்துக் கொண்டே இருக்கிறோம். ஆதலால், எங்களைப்போன்றவர்களுக்குத் தொழுகை அவசியமில்லை" என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது தவறு மட்டுமில்லாமல் குப்ரையும் கூட உண்டு பண்ணுகிறது. எவ்வாறெனில், தொழுகையை நிறைவேற்றுபவர் அல்லாஹ¤ தஆலாவின் கட்டளையை, அவன் தனது திரு நபியவர்கள் மூலம் காண்பித்த முறைப்படி நிறைவேற்றுகின்றனர். மேற் கண்ட கூட்டத்தார் அல்லாஹ¤ தஆலாவின் கட்டளையை நிறைவேற்றுமலிருப்பதுடன், அவன் காண்பித்த முறையை விட்டுவிட்டுத் தாங்களாக புதிய ஒரு முறையை ஏற்படுத்துகின்றனர். இவ்வாறு செய்வதால் அல்லாஹ¤ தஆலாவினது கோபம் அதிகமாகுமேயன்றி வேறல்ல. அவனது கட்டளைக்குப் போட்டியாக வேறு வழியையுண்டு பண்ணுவது குப்ரான

காரியமாகும். ஆதலால், முஸ்லிம்கள் தொழுகை சம்பந்தமாக அசட்டையாயிருக்காமல் அதிசிரத்தையுடனும் பக்தியுடனும் அந்தரங்க சுத்தியுடனும் நிறைவேற்றுவதுடன் நபில் ஸுன்னத்து முதலிய தொழுகைகளையும் நிறைவேற்றி அவனது அன்பிற்கும் கருணைக்கும் உரியவர்களாவார்களாக.

அசங்கிதம் (நஜஸ்)

அசங்கிதம் இரண்டு வகை. இயற்கையாகவேயுள்ள அசங்கிதம் ஒரு வகை. இதற்கு ஹக்கீக்கியான நஜஸ் என்று பெயர். மற்றொன்று சட்டப்படியுள்ள அசங்கிதம் இதற்கு ஹுக்மியான நஜஸ் என்று பெயர்.

ஒலுவில்லாதிருத்தல், ஸ்நானம் செய்யக் கடமைப்பட்டிருத்தல் ஆகிய இரண்டும் ஹுக்மிய்யான அசுத்தத்தைக் சேர்ந்தவை. இவைகளைப்பற்றிய விபரம் மேலே கூறப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் ஹக்கீக்கியான நஜஸ் அதாவது இயற்கையான அசங்கிதத்தைப்பற்றிக் கூறப்படுகிறது.

நஜாஸத்தே ஹக்கீக்கி :—இயற்கையான அசங்கிதம் இரண்டு வகை. ஒன்று நஜாஸத்தே முகல்லளா அதாவது கடுமையான அசங்கிதம். மலம், சிறு நீர், உதிரம், சீ, சலம், சாராயம், அறுக்காமல் செத்த பிராணியின் மாமிசம், ஆடு மாடு முதலியவைகளது சாணம், புளுக்கை, கோழி தாராபோன்றவைகளின் எச்சம், புசிக்கக் கூடாதென விலக்கப்பட்டுள்ள பிராணிகளின் சாணம், லத்தி, மூத்திரம், பன்றி ஆகியவைகள் இவ்வினத்தைச் சேர்ந்தவைகளாகும். பன்றி ஐன் நஜிஸ் என்று கூறுவர். அதாவது அசுத்தமே உருவாக அமைந்த பிராணி. அதன்

77914

மயிர், எலும்பு, தோல், பல், உமிழ் நீர், மூத்திரம், மலம், மாமிசம் சகலமும அசங்கிதமாகும்.

மேற் கண்ட கடுமையான அசங்கிதங்களில் திரவமாக இருப்பவைகள் உள்ளங்கையின் பள்ளத்தளவிற்கும், திரவமாக இல்லாமல் கெட்டியாக இருப்பவைகள் ஒரு களஞ்சி எடையளவிற்கும் தேகத்திலாவது உடையிலாவது பட்டிருந்தால் அது மன்னிக்கப்படும். ஆனல், அதனை அகற்றுமல் அப்படியே வைத்துக்கொண்டு தொழுவது மக்றூஹ் தஹ்ரீமீ. ஞாபகப் பிசகாகவோ அல்லது தக்க காரணத்தாலோ அதனை அகற்றுமல் தொழுதால் குற்றமில்லை. ஆயினும், அதனை அகற்றுதல் வாஜிபு. அதற்குக் குறைவான அளவிலிருந்தால் அதனை அகற்றிச் சுத்தப்படுத்துதல் ஸுன்னத்து. அந்த அளவிற்கு அதிகமாக இருந்தால் அதனை அகற்றிச் சுத்தப்படுத்துதல் பர்லு.

நஜாஸத்தே முகப்பபா அதாவது இலேசான அசங்கிதம் என்பது மற்றொருவகை. புசிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பிராணிகளது மூத்திரம், குதிரையின் மூத்திரம், புசிக்க அனுமதிக்கப்படாத பறவைகளின் எச்சம் முதலியவைகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை. எந்த அவயவத்தில் இவை படுகிறதோ அந்த அவயவத்தில் நாலிலொரு பங்குக்குக் குறைந்திருந்தாலும், உடையில் தொழுகையில் மறைக்கக் கூடிய அளவிற்குள்ள துணியில் நாலிலொரு பங்குக்குக்குறைவாக இருந்தாலும், ஊசி நுனியளவு சிறு துளிகளாகத் தெரித்த மூத்திரமும், கழுதையின் எச்சிலும் மன்னிக்கப்படும்.

தொழுகையின் வகைகள்

பர்லான தொழுகை, வாஜிபான தொழுகை, ஸுன்னத்தான தொழுகை, நபில் தொழுகை, பர்லுகிபாயாவான தொழுகை, ஸுன்னத்துக் கிபாயாவான தொழுகை என தொழுகைகள் ஆறுவகைப்படும்.

பர்லுத் தொழுகைகள்:—தினசரி ஐங்காலத் தொழுகைகளும், ஜும்ஆத் தொழுகையும்.

பர்லுகிபாயா :—ஜனஸாத் தொழுகை.

வாஜிபுத் தொழுகை :—வித்று வாஜிபுத் தொழுகை, இரண்டு பெரு நாள்களின் தொழுகை. ஸுன்னத்து முஅக்கதா வென்றும் சொல்லப்படுகிறது. இதனைப் பற்றிய விபரம் இத்தொழுகைகளைப்பற்றி விபரித்தெழுதும் பாடத்தில் கூறப்படும்.

ஸுன்னத்துத் தொழுகை :—ஐங்காலத் தொழுகைகளுக்கு முந்தியும் பிந்தியும் நிறைவேற்றப்படும் தொழுகைகள். இவைகளைப்பற்றிய விபரம் ஐங்காலத் தொழுகைகளைப்பற்றிக் கூறுகிற இடத்தில் சொல்லப்படும். தஹஜ்ஜுத்துத்தொழுகை, இஷ்ராக் தொழுகை, தராவீஹ் தொழுகை.

ஸுன்னத்து முஅக்கதா கிபாயா :—இமாம் ஜமா அத்துடன் நிறைவேற்றப்படும் தராவீஹ் தொழுகை.

நபில் தொழுகை :—ஸலாத்துல் அவ்வாபீன், ஸலாத்துல் கதிர் முதலிய தொழுகைகள்.

தொழுகையின் நேரங்களும் ரக்க அத்துகளும்

தினந்தோறும் ஐங்காலம் தொழுகவேண்டிய பர்லான தொழுகைகளின் பெயர்களும், காலங்களும் வருமாறு:—

பஜ்றுத் தொழுகையின் நிய்யத்துகள்

ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ سُنَّةَ الْفَجْرِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸுன்னதல் பஜ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(பஜ்ருடைய இரண்டு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை ஆண்டவனுக்காக நிறைவேற்றும்பொருட்டு கஃபாவை முன்னோக்கியவனாக நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ فَرْضَ هٰذَا الْفَجْرِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

பர்லு தொழுகையின் நியயத்து

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி பர்ல ஹாதல் பஜ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(பஜ்ருடைய இரண்டு ரக்கஅத்துகள் பர்லான தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றும் பொருட்டு, கஃபாவை முன்னோக்கியவண்ணமாக நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

1. பஜ்றுத் தொழுகை :—இதனை ஸுப்ஹு தொழுகை என்றுங் கூறுவர். விடியற் காலத்தில் கிழக்கே மெய் வெள்ளை தோன்றியதிலிருந்து அதாவது கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரிய உதயத்திற்குள் பஜ்றுத் தொழுகையை நிறைவேற்றலாம். புருஷர்கள் பஜ்றுடைய பர்லுத் தொழுகையை நிலந்தெளிந்த பிறகு, கைரேகை தெரியும் சமயத்தில் நிறைவேற்றுவது முஸ்தஹப்பு அதாவது விரும்பத்தக்க செய்கை. ஸ்திரீகள் நிலந்தெளிவதற்கு முன்பே, இருளிருக்கும்போதே தொழுது விடுவது நல்லது.

பஜ்ரில் பர்லு தொழுவதற்கு முன் ஸுன்னத்து மூஅக்கதா இரண்டு ரக்கஅத்துகள் தொழவேண்டும். பர்லுத்தொழுத பிறகு, இதனை நிறைவேற்றக் கூடாது. இத் தொழுகையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடாமல் தொழுததால், இமாம் ஜமாஅத்தாக பர்லுத் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்தாலும், இதனைத் தொழுது விட்டு இமாம் ஜமாஅத்தில் சேர்ந்து கொள்ளலாம். இதனை நிறைவேற்றுவதற்குள் இமாம் ஜமாஅத்து முந்திவிடும், அப்புறம் தனித்துத் தொழவேண்டும் என்றிருந்தால், இதனை விட்டு விட்டு இமாம் ஜமாஅத்தில் சேர்ந்து கொள்ளலாம். பஜ்றுடைய பர்லு இரண்டு ரக்கஅத்துகள்.

லுஹர்த் தொழுகைகளின் நிய்யத்துகள்

ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ سُنَّةً قَبْلَ
الظُّهْرِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ،

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரகஆதின் ஸுன்னதன் கப்லல் லுஹரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(லுஹருடைய முந்தின நான்கு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை ஆண்டவனுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கி நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

பர்லுத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ فَرْضَ هٰذَا الظُّهْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரக்கஆதின் பர்ல ஹாதல்லுஹரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(லுஹருடைய நான்கு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை ஆண்டவனுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கியவண்ணம் நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

லுஹருத் தொழுகையின்
பிந்திய ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ سُنَّةَ بَعْدَ الظُّهْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸுன்னதன் பஅதல்லுஹரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(லுஹருடைய பிந்தின இரண்டு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை ஆண்டவனுக்காக நிறைவேற்றுவதற்காக கஃபாவை முன்னோக்கியவண்ணம் நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

குறிப்பு :—இதற்குப்பின் இரண்டு ரக்கஅத்துகள் நபில் கொழுகை தொழவேண்டும். அதற்கு மேற்படி ஸுன்னத்துத் தொழுகையில் நிய்யத்து செய்வதுபோலவே செய்து "ஸுன்னத்தன்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "நபிலன்" என்று மாற்றி சொல்லவும்.

2. லுஹர்த் தொழுகை :—அடித்திரும்பியதிலிருந்து அதாவது சூரியன் மேற்கே சாய்ந்ததிலிருந்து தன்னிழலைச் சேர்க்காமல் தன்னைப்போல் இரண்டு மடங்கு நிழல் வரும் வரை லுஹர்த் தொழுகலாம். ஆனல், தன்னிழல் நீங்கலாக தன்னைப்போல் ஒரு பங்கு நிழல் வருவதற்குள்ளாக லுஹர்த்தொழுகையை நிறைவேற்றி விடுவதுதான் சிலாக்கியம். இவ்வாறு தொழுவதால் எந்த இமாமுடைய மதஹபுக்கும் விரோதமில்லாமல் தொழுகையை நிறைவேற்றி விடலாம்.

தவிர, வெய்யற்காலமாக இருந்தால் கொஞ்சம் தாமதித்துத் தொழுவது அதாவது தன்னைப்போல் ஒரு பங்கு நிழல் வருவதற்கு முன்னதாகவே தொழுது விடுவது முஸ்தஹப்பு. மாரிகாலத்திலும் பனி காலத்திலும் வானில் மப்பு மந்தாரமில்லாதிருக்கும் பட்சத்தில் லுஹர்த் தொழுகையை

முற்படுத்தித் தொழுவது முஸ்தஹப்பு. மப்பு மந்தாரமிருந்தால் பிற்படுத்தி, ஆனால், தன்னைப்போல் ஒரு பங்கு நிழல் வருவதற்கு முன்னதாகத் தொழுதுவிடுவது முஸ்தஹப்பு. வெய்யற் காலமானாலும் மாரிகாலமானாலும், பனி காலமானாலும் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதற்கு குறிப்பிட்ட ஒரு நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அந்த நேரத்தில் இமாம் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுதுவிட வேண்டும். மேல் கூறப்பட்ட முஸ்தஹப்பான நேரங்களெல்லாம் இமாம் ஜமாஅத்தாகத் தொழாமல் தனித்துத் தொழுபவருக்குத் தான். முஸ்தஹப்பான நேரத்தில் 'தொழவேண்டும் என்பதற்காக இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதை விட்டுவிடக் கூடாது.

தன்னிழல் என்பது சூரியன் சரியாக உச்சியில் வரும் போது சில சமயங்களில் நிழல் கொஞ்சங்கூட இல்லாமலிருக்கும்; சிற்சில சமயங்களில் வடக்குப் பக்கத்திலோ அல்லது தெற்குப்பக்கத்திலோ சார்ந்து கொஞ்சம் நிழல் இருக்கும்; அதற்கு தன்னிழல் என்று பெயர். இந்த நிழலை இவ்வளவென்று வரை யறுத்துக் கூற முடியாது. ஏனெனில், சூரியன் உத்தராயணத்திற்கும் தக்ஷிணாயணத்திற்கும் செல்வதால், தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமிலகியே உதயமாகுகிறது. ஆதலின், இந் நிழல் தினசரி அதிகப்பட்டுக்கொண்டோ அல்லது குறைந்து கொண்டோ இருக்கும். ஆதலால், அதனை அன்றுடம் கண்டு பிடித்து அந்த நிழலைச் சேர்க்காமல் அப்புறம் ஏற்படும் நிழலைத்தான் கணிக்கவேண்டும்.

லுஹறுடைய நேரத்தில் முதலாவதாக நான்கு ரக்அத்துகள் ஸுன்னத்து தொழவேண்டும். இரண்டாவதாக

நான்கு ரக்கஅத்துகள் பர்லுத் தொழவேண்டும். மூன்று வதாக இரண்டு ரக்கஅத்துகள் ஸுன்னத்துத் தொழவேண்டும். நான்காவதாக இரண்டு ரக்கஅத்துகள் நபில் தொழ வேண்டும்.

மேற் கண்ட ஸுன்னத்துகளிரண்டும் ஸுன்னத்தே மூஅக்கதாவாக இருப்பதால், இவைகளை விட்டு விடக் கூடாது. நபில் தொழுகையை வேண்டுமானல் விட்டு விடலாம். ஆனல், ஒலுச்செய்து விட்டு வரும்போது பர்லான தொழுகையை இமாம் ஜமாஅத்தாக ஜனங்கள் நிறை வேற்றிக் கொண்டிருந்தால், ஸுன்னத்துத் தொழுகையை நிறைவேற்றாமல் இமாம் ஜமாஅத்துடன் சேர்ந்து பர்லுத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு, அப்புறம் மேற் கண்ட ஸுன்னத்தான நான்கு ரக்கஅத்துகளையும் நிறைவேற்ற வேண்டும். அதனை நிறைவேற்றாமல் விட்டுவிடக் கூடாது.

அஸர் தொழுகையின் நிய்யத்துகள்

ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

(இதை இஷ்டப்பட்டால் தொழலாம், இல்லாவிடில் குற்றமில்லை)

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ سُنَّةَ الْعَصْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரக ஆதின் ஸுன்னதல் அஸ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃ பதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்,

(அஸருடைய நான்கு ரக்அத்து ஸுன்னத்துத் தொழுகையை அல்லாஹ்வுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

பர்லு தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ فَرْضِ هٰذَا الْعَصْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரகஆதின் பர்ல ஹாதல் அஸ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(அஸருடைய நான்கு ரகஅத்து பர்லுத் தொழுகையை ஆண்டவனுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கி நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

அஸர்த் தொழுகை :—லுஹருடைய நேரம் முடிவடைந்தவுடனேயே அதாவது தன்னிழலும் தன்னைப் போன்ற இரண்டு மடங்கு நிழலும் தீர்ந்த பிறகு, அஸருடைய வேளை ஆரம்பமாகிறது. சூரியாஸ்தமனம் தான் இதன் கடைசி வேளை என்று கூறலாம். ஆனால், சூரியாஸ்தமனத்திற்குக் கொஞ்சம் முன்னதாகவே வெய்யலின் நிறம் மாறுதலடையும். அதாவது மஞ்சள் வெய்யல் தோன்றும். இவ்விதமாக வெய்யலின் நிழல் மாறுவதற்குள் அஸர்த் தொழுகையை நிறைவேற்றிவிடுவது முஸ்தஹப்பு. மப்புமந்தாரமுள்ள காலத்தில் அஸர்த் தொழுகைக்கு நேரம் வந்தவுடன் தாமதிக்காமல் முதல் நேரத்திலேயே தொழுது விடுவது முஸ்தஹப்பு.

மஞ்சள் வெய்யல் போடும்போது அஸருடைய பர்லான தொழுகையை நிறைவேற்றலாமாயினும் அன்றைய அஸர் ஒன்றைத்தவிர வேறு தொழுகைகளை நிறைவேற்றக்கூடாது.

அஸரில் பர்லுத் தொழுகைக்கு முன் நான்கு ரக்க அத்துகள் தொழுவது ஸுன்னத்து ஜவாயித். அதாவது பலமான ஸுன்னத்தல்ல; வேண்டுமானால் தொழலாம்; தொழாமலும் விட்டு விடலாம். இந்தத் தொழுகையை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இடையிடையே விட்டு விட்டுத் தொழுது வந்தார்கள். ஆதலால், இதனைத் தொழுவது நல்லது. தொழாமல் விட்டு விடுவதால் குற்றமில்லை. அப்புறம் நான்கு ரக்கஅத்துகள் பர்லு தொழுகவேண்டும்.

மகுரிபு தொழுகைகளின் நிய்யத்துகள்

பர்லுத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى ثَلٰثَ رَكَعَاتِ فَرْضَ هٰذَا
الْمَغْرِبِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா தலாத ரக ஆதின் பர்ல ஹாதல் மகுரிபி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(மகுரிபு நேரத்துடைய மூன்று ரக்க அத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவெற்று பவுனுக்கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன், அல்லாஹு அக்பர்.)

ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ سُنَّةَ الْمَغْرِبِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸுன்னதல் மகுரிபி முதவஜ்ஜிஹன் இலா ஜி ஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(மகுரிபு நேரத்துடைய இரண்டு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுகாக நிறைவேற்றுபவனுக கஃபாவை முன்னேக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.)

மகுரிபுத் தொழுகை:—சூரியாஸ்தமனத்திலிருந்து செம்மேகம் மறையும்வரை மகுரிபு தொழுகையை நிறைவேற்றலாம். இத்தொழுகையைப் பிற்படுத்தாமல் முதல்வேளையிலேயே தொழுது விடுவது முஸ்தஹப்பு.

மகுரிபில் முதலாவதாக மூன்று ரக்கஅத்துகள் பர்லு தொழுக வேண்டும். பர்லுக்கு முன் ஸுன்னத்து, நபில் முதலிய எத்தொழுகையும் இவ்வேளையில்மட்டுமில்லை. இரண்டாவதாக ஸுன்னத்து இரண்டு ரக்கஅத்துகள் தொழுகவேண்டும். அப்புறம் நபில் இரண்டு ரக்கஅத்துகள் தொழுகவேண்டும். இவ்வேளையில் தொழும் ஸுன்னத்தான தொழுகை ஸுன்னத்தே முஅக்கதா. ஆதலால், இதனை விட்டு விடலாகாது.

இஷா தொழுகையின் நிய்யத்துகள்

ஸுன்னத்து தொழுகையின் நிய்யத்துகள்

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ سُنَّةً قَبْلَ
الْعِشَآءِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரக ஆதின் ஸுன்னதன் கப்லல் இஷாஇ முதவஜ்ஜிஹன் இலா ஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஷா நேரத்துடைய முந்திய நான்கு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன்; அல்லாஹு அக்பர்.)

பர்லுடைய நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتِ فَرْضَ هٰذَا الْعِشَآءِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லியலில்லாஹிதஆலா அர்பஅ ரக ஆதின் பர்ல ஹாதல் இஷாஇ முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஷாவினுடைய நான்கு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.)

ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ سُنَّةً بَعْدَ الْعِشَاءِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸுன்னத்தன் பஅதல் இஷாஇ முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஷாவினுடைய பிந்தின நான்கு ரக்கஅத்து ஸுன்னத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனாக கஃபாவை முன்னோக்கி நின்றவண்ணம் தொழுகிறேன்.)

5. இஷாத் தொழுகை :—சூரியாஸ்தமன வேளையில் காணப்படும் செம்மேகம் மறைந்து வெள்ளை மேகம் தோன்றும். இவ்வெள்ளை மேகம் தோன்றியதிலிருந்து கிழக்கு வெளுக்கும்வரை இஷாத் தொழுகையை நிறைவேற்றலாம். மாரி காலங்களில் இரவில் மூன்றிலொரு பங்கு நேரம்வரை பிற்படுத்துவதும், வெய்யற் காலங்களிலும் மப்பு மந்தாரமுள்ள காலங்களிலும் இஷாவுடைய நேரம் வந்தவுடன் முதல் நேரத்திலேயே தொழுகையை நிறைவேற்றுவதும் மூஸ்தஹப்பு.

நடு ஜாமம் கழியும் வரை அகாரணமாகப் பிற்படுத்துவது மக்றூஹு. முதலாவதாக நான்கு ரக்கஅத்துகள் ஸுன்னத்து. அப்புறம் பர்லு நான்கு ரக்கஅத்துகள். மறுபடியும் ஸுன்னத்து இரண்டு ரக்கஅத்துகள். பிறகு,

இரண்டு ரக்கஅத்து நபில். இறுதியாக மூன்று ரக்கஅத்துகள் வித்று வாஜிபு. அப்புறம் தஷ்பீஹ் நபில் இரண்டு ரக்கஅத்து.

மேற் கூறப்பட்ட ஸுன்னத்துத் தொழுகைகளில் முதலாவது நிறைவேற்றப்படும் நான்கு ரக்கஅத்துகள் ஸுன்னத்தே ஜவாயிதைச் சேர்ந்தவை. பர்லுக்குப் பிறகு, நிறைவேற்றப்படும் ஸுன்னத்துத் தொழுகை ஸுன்னத்தே முஅக்கதாவைச் சேர்ந்தவை.

வித்றுத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى ثَلٰثَ رَكَعَاتِ وِتْرِ هٰذَا اللَّيْلِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா தலாத ரக ஆதின் வித்ர ஹாதலலிலி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(வித்ரு வாஜிபுடைய மூன்று ரக்கஅத்து வாஜிபு தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்று பவனுக கஃபாவை முன்னோக்கி நின்ற வண்ணம் தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

தஷ்பீஉல் வித்ரு தொழுகை ரக்கஅத்து இரண்டு. நிய்யத்து வாஜிபுல் வித்ருடையதே. இருந்த வண்ணம் தொழவேண்டும்.

வித்றுத்தொழுகை :—கிழக்கு வெளுப்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்புவரை இதனை நிறைவேற்றலாம். கிழக்கு

வெளுப்பதற்குக் கொஞ்சம் முன்னதாகவுள்ள விடியற் காலம்தான் இதற்கேற்பட்ட முக்கியமான நேரம். ஆனால், அவ்வேளை நித்திரை செய்யக்கூடிய நேரமாக இருப்பதாலும், அச்சமயத்தில் எல்லாரும் எழுந்திருக்க முடியாததாலும் இஷாத் தொழுதவுடன் இதனையும் நிறைவேற்றுகின்றனர். இஷாவின் பர்லுத் தொழுகையை நிறைவேற்றிய பிறகிருந்து இத்தொழுகையை நிறைவேற்றுவதற்குரிய காலம் வந்து விடுகிறது.

இஷாவின் பர்லை நிறைவேற்றிய பிறகுதான் இது வாஜிபாக ஏற்படுவதால், இஷாவின் பர்லை நிறைவேற்றுவதற்கு முன்னர் இதனை நிறைவேற்றக்கூடாது. இஷாத் தொழுகாதவர்கள் பர்லுத் தொழுகையை நிறைவேற்றுமல், இதனை நிறைவேற்றக்கூடாது. இதனைக் குறித்து பின்னர் விபரிக்கப்படும். வித்றுத் தொழுகைதான் கடைசியான தொழுகையாக இருப்பதால் வித்றுக்குப் பிறகு, தஷ்பீஹ் நபில் தொழக்கூடாதென்று கூறுவோரும் உண்டு.

தஹஜ்ஜுத்துத் தொழுகையின் நிய்யத்துகள்

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ التَّهَجُّدِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லியலில்லாஹி தஆலா ரகஅதைனி ஸலாத்தத் தஹஜ்ஜுதி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(தஹஜ்ஜுத்துடைய இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனுக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.)

தஹஜ்ஜுத்துத் தொழுகை :—இரவில் நடு ஜாமத்திற்குப் பிறகிருந்து பஜ்றுடைய நேரம்வரை இதனை நிறைவேற்றலாம். இரண்டு அல்லது நான்கு அல்லது ஆறு ரக்கஅத்துகள் தொழுவது ஸுன்னத்து. இதனை இரண்டிரண்டு ரக்கஅத்துகளாக நிறைவேற்றுவதுதான் மேல். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இத்தொழுகை பர்லாக இருந்தது. உம்மத்துமார்களாகிய நமக்கு இது பர்லாக்கப்படவில்லை.

இஷ்ராக் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْاِشْرَاقِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸலாதல் இஷ்ராகி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஷ்ராக் உடைய இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை அல்லாஹ்வுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனுக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன்.)

இஷ்ராக் தொழுகை :—சூரியோதயமான பிறகு, அது ஒரு வல்லயப் பிரமாணம் வந்ததன் பின்னர், இரண்டு அல்லது நான்கு அல்லது ஆறு ரக்கஅத்துகள் இரண்டிரண்டு ரக்கஅத்துகளாகத் தொழுவேண்டும். ஸுன்னத்து.

லுஹர்த் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الضُّحٰى مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸலாதல்லுஹரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(லுஹறுடைய இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவுக்காக நிறைவேற்றுபவனுக கஃபாவை முன்னோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.

லுஹாத் தொழுகை :—இஷ்ராக் தொழுகைக்குப்பிறகு, சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன் அதாவது மந்தை மாட்டுப்பொழுதில் இரண்டு அல்லது நான்கு அல்லது ஆறு ரக்கஅத்துகள் இரண்டிரண்டு ரக்கஅத்துகளாகத் தொழ வேண்டும். இந்த வேளைக்கு லுஹாவுடைய வேளை என்று பெயர். ஆதலால், இத்தொழுகைக்கும் லுஹாத் தொழுகை என்ற பெயர் வந்தது. இது ஸுன்னத்து.

ஸலாத்துல் அவ்வாபீன் :—மகுரிபுத் தொழுகைக்குப் பிறகு, ஆறு ரக்கஅத்துகள் இரண்டிரண்டு ரக்கஅத்துகளாகத் தொழுவது முஸ்தஹப்பு. இத் தொழுகையை நிறைவேற்றுவதால் ஏற்படும் நன்மைப்பயனைக் குறித்து அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது. விரிவஞ்சி விடுத்தனம். இவைகளைத் தவிர, இன்னும் அநேகவிதமான தொழுகை

களெல்லாம் உண்டு. அத்தொழுகைகளை நிறைவேற்றுவதற்குரிய நன்மைப் பயன்களும் அனந்த முண்டு. அவைகளை விரிவான கிரந்தங்களில் காண்க.

வெறுக்கத்தக்க நேரங்கள்

பஜ்றுடைய பர்லுக்குப் பிறகும், அஸருடைய பர்லுக்குப் பிறகும் நபில் போன்ற தொழுகைகளை நிறைவேற்றுவது மக்றூஹ். ஆனால், கலாத்தொழுகைகளிருந்தால், அவைகளை நிறைவேற்றலாம். ஜும்ஆவில் குத்பா ஓதுவதற்காக இமாம் மின்பரின்மீது ஏறிய பிறகு, ஜும்ஆத் தொழுகை முடியுமவரை நபில் ஸுன்னத்து முதலிய தொழுகைகளை நிறைவேற்றக்கூடாது. ஆனால், தொழுது கொண்டிருக்கும்போது குத்பா ஓதுவதற்காக இமாம் மின்பரின்மீது ஏறிவிட்டால், அத்தொழுகையை பூர்த்தி செய்ய வேண்டும். ஜும்ஆத் தொழுகையின் பாடத்தில் இதனைப் பற்றிய இதர விபரங்கள் கூறப்படும். மகுரிபுத்தொழுகைக்கு முன் நபில் தொழுவதும், நேரிச்சைத் தொழுகைகளை நிறைவேற்றுவதும் மக்றூஹ்.

பர்லான தொழுகைகளுக்கு இக்காமத்துச் சொன்ன பிறகு பர்லுத் தொழுகையுடன் சேராமல் ஸுன்னத்துத் தொழுகையை ஆரம்பிப்பது மக்றூஹ். ஆனால், பஜ்றுடைய பர்லுக்கு இக்காமத்துச் சொல்லி விட்டாலுங் கூட பஜ்றுடைய ஸுன்னத்தை ஆரம்பித்துத்தொழலாம். ஸுன்னத்தை நிறை வேற்றுவதற்குள் பர்லுத்தொழுது முடிந்து விடும் என்றிருந்தால் ஸுன்னத்தை ஆரம்பிக்கக் கூடாது. பெரு நாள்களில் அத்தினத்திற்குரிய தொழுகைகளை நிறை வேற்று வதற்குமுன் ஸுன்னத்துத் தொழுவது மக்றூஹ்.

பார்லுத் தொழுவதற்குப் போதிய நேரமில்லா திருக்கையில் பர்லை ஆரம்பிக்கலாம். ஸுன்னத்தைத் தொழுவதும், சாப்பாட்டின் மீது இச்சையும் பசியும் இருந்து, சாப்பாடும் தயாராக இருக்கும் போது அதனை அருந்தாமல் தொழுகையை நிறைவேற்றுவது மக்றூஹ். ஏனெனில், தொழுகையில் மனம் ஒர்மைப்படாமல்சாப்பாட்டின் மீதே செல்லுமாதலால் இது மக்றூஹாயிற்று.

விலக்கலான நேரங்கள்.

சூரியன் உதயமானதிலிருந்து அது ஒரு வல்லயப் பிரமாணம் உயருவதற்குள்ளும், உச்சிப் பொழுதிலும், சூரியாஸ்தமன மாகும் தருவாயில் மஞ்சள் வெய்யல் போடும் போதும் தொழுகையை நிறை வேற்றக்கூடாது. இது போலவே கலாத் தொழுகை, திருகுர்ஆனிலுள்ள ஸஜ்தாவின் ஆயத்துகளை ஒதியதற்காக ஏற்பட்ட திலாவத்தின் ஸஜ்தா ஆகியவைகளையும் நிறை வேற்றக்கூடாது.

அஸருடைய நேரத்துத் தொழுகையை நிறை வேற்றாமல் இருந்தால், மஞ்சள் வெய்யற் போடும் போதும் அதனை நிறை வேற்றலாம். இந்த நேரங்களில் ஜனாஸாவைக் கொண்டு வந்துவிட்டால் அதனைத் தாமதப் படுத்தாமல் அந்த ஜனாஸாவின் தொழுகையை மட்டிலும் நிறை வேற்றலாம். இம்மூன்று காலங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்துகளை ஒதிவிட்டால் அதற்குரிய ஸஜ்தாவை மட்டிலும் நிறை வேற்றலாம். ஏனெனில் இவைகள் தாமதப்படுத்தக் கூடாதனவாகவும் உடனுக்குடன் செய்யக் கூடியனவாகவும் இருப்பதாலென்க.

பாங்கு சொல்லல்

பாங்கு சொல்லல் என்பதற்கு சப்தமிடல் என்பது பொருள். இது பாரசிகப் பாஷையைச் சேர்ந்தது. அறபிப் பாஷையில் அதான் என்று கூறுவர். இதற்கு அறிக்கை யிடல் என்பது பொருள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமக்காவை விட்டு திருமதீனாவிற் குடியேறிய சில காலம் வரை இது ஏற்படுத்தப் படவில்லை. திருமதினாவில் இஸ்லாம் மதத்திற்கு இடைஞ்சல் செய்வோரிருந்தாலும், அவர்களைக் குறித்த பயம் முஸ்லிம்களுக்கு இல்லாம லிருந்தது. ஆதலால், ஒவ்வொரு வேளையிலும் முஸ்லிம்கள் ஒன்று கூடி திருநபியவர்களைப் பின்பற்றித் தொழுகையை நிறைவேற்றி வந்தனர். ஆயினும், தொழுகைக்குரிய நேரம் சரியாகத் தெரியாததால், எல்லாரும் ஒன்று போல் வந்து ஒன்று சேருவதற்குச் சிறிது சிரமமிருந்தது. ஆதலால், இச்சிரமத்தை அகற்றுவதற்கு ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டும் என எல்லோரும் கருதினர். இதனைக் குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எண்ணமிருந்தது.

தொழுகைக்குரிய நேரம் வந்தவுடன் ஒரு ஆளை வீடு களுக்கனுப்பிச் சொல்லி வரச் செய்யலாமா? கிறிஸ்து வர்கள் மணியடிப்பது போல மணியடிக்கச் செய்யலாமா? யூதர்கள் கொம்பு ஊதுவது போல கொம்பு ஊதச் செய்யலாமா? என்பது போன்ற பலவித ஆலோசனைகள் இருந்து வந்தன. இவ்வித நிலைமையில் ஒவ்வொரு வேளைக்கும் பாங்கு சொல்வது போல ஹஜ்றத் ஜைதுப்னு தாபித் (றலி) அவர்கள் சொற்பனம் கண்டு, நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார்கள். இதைப் போலவேறு பல ஸஹாபிகளும் சொற்பனம் கண்டார்கள். ஆகவே, சொற்

பனத்தில் கண்ட பிரகாரம் பாங்கு சொல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

முதல் முதலாக ஹஜ்றத் பிலால் (றலி) அவர்கள் தான் பாங்கு சொல்வற்காக நியமிக்கப் பட்டார்கள். ஆதலால், அவருக்கு 'முஅத்தின் பிலால்' என்ற சிறப்புப் பெயரேற்பட்டது. பாங்கு சொல்வதில் மிகப் புண்ணிய முண்டு. பயபக்தியுடனும், விசுவாசத்துடனும் ஏழு வருஷ காலத்திற்கு எவர் பாங்கு சொல்கிறாரோ, அவர் சுவர்க்க வாதி என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. இது போன்ற அநேக ஹதீதுகளுமிருக்கின்றன. மேலும், இதர மதங்களில் பூஜாகாலத்தை அறிவிப்பதற்கு அனுஷ்டிக்கும் வழக்கக்களைப் பின் பற்றுமல் மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாங்கில், அநேக அரும்பெருங்காரி யங்களும் சேர்ந்திருக்கின்றன.

இதில் இஸ்லாம் மதத்தின் உண்மைக் கொள்கைகள் அறிக்கை செய்யப்படுவதுடன், தொழுகையின் மகத்துவ மும் அறிவிக்கப்படுகிறது. ஆதலால், பாங்கு சொல்வதைக் கவனமாகக் கேட்ட அந்நிய மதவாதிகள் பலருக்கு இஸ்லாம் மதத்தின் கொள்கைகளையறிய வேண்டு மென்ற அவா வுண்டாகி, இறுதியாகச் சிலர் இஸ்லாம் மதத்திலும் சேர்ந் திருக்கின்றனர். ஆதலால், பாங்கு சொல்ல நியமிக்கப் படுவர் இனிய குரலுள்ளவராகவும், கேட்போரைப் பரவசப் படுத்தத் தக்க விதமான இசையுடன் சொல்பவராகவும் இருப்பது நல்லது.

அதானும், இக்காமத்தும் ஸுன்னத்து முஅக்கதா. பர்லான தொழுகைக்கு மட்டிலும்தான் இதனைக் கூற

வேண்டும். தனித்துத் தொழுதாலும், இமாம் ஜமா அத்தாகத் தொழுதாலும், உள்ளூரில் தொழுதாலும், பிரயாணத்திலிருந்தாலும், கலாவான தொழுகைக்கும், அதாவான தொழுகைக்கும் ஆடவர்கள் பாங்கும், இக் காமத்தும் சொல்ல வேண்டும்.

ஸ்திரீகள் ஜமா அத்தாகத் தொழுதாலும், அடிமைகள் ஜமா அத்தாகத் தொழுதாலும், நிர்வாணஸ்தர்கள் ஜமா அத்தாகத் தொழுதாலும் பாங்கு இக்காமத்துச் சொல்வது மக்றூஹ். ஸ்திரீகள் தனித்துத் தொழுதாலும் கூட அவர் களுக்கு இவை இரண்டும் தேவை இல்லை. மக்றூஹ்.

அறபியில்லாத பார்ஸி முதலிய பாஷையில் பாங்கும் இக்காமத்தும் சொல்லக்கூடாது.

பாங்குசொல்பவர் ஸாலிஹான நல்ல மனிதராக இருப்ப தும், பாங்கு சொல்வதிலுள்ள ஸுன்னத்தான காரியங்களைத் தெரிந்தவராகவும், தொழுகையின் நேரத்தை தெரிந்தவ ராகவும், ஒலுச்செய்தவராகவும், கிப்லாவை முன்னோக்கியவ ராகவும், தன்னிரு செவிகளிலும் விரல் வைத்தவராகவும், இருக்க வேண்டும் முஸ்தஹப்பு.

நல்ல இசையுடன் பாங்கு சொல்வதாக நினைத்துக் கொண்டு உச்சரிப்பு பேதம்வரக்கூடிய முறையில் கூறுவது மக்றூஹ். ஜுனுபாளி அதாவது ஸ்னனஞ் செய்யக்கட மைப்பட்டவர், பாங்கு சொல்வது மக்றூஹ். அறிவில்லாத சிறு பிள்ளைகள், பயித்தியக்காரன், சித்த சுவாதினமில்லாத வன் ஸ்திரீ ஆகியவர்கள் பாங்கு சொல்வது கூடாது. இவர்கள் பாங்கு சொன்னாலும் மறுமுறை திரும்பக் கூற வேண்டும்.

பாங்கு சொல்லும் முறை

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ

1. அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்.

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ

2. அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்.

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

3. அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்.

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

4. அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்.

اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

5. அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்.

اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

6. அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்.

حَيَّ عَلَى الصَّلٰوةِ

7. ஹய அலஸ்ஸலாத்.

حَيَّ عَلَى الصَّلٰوة

8. ஹைய அலஸ்ஸலாத்.

حَيَّ عَلَى الْفَلَاح

9, ஹைய அலல்பலாஹ்.

حَيَّ عَلَى الْفَلَاح

10. ஹைய அலல்பலாஹ்.

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ

11. அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்.

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

12. லா இலாஹ இல்லல்லாஹு.

இவ்வாறு லுஹர், அஸர், மகுரிபு, இஷா, ஜும்ஆ ஆகிய நான்கு நேரங்களுக்கும் பாங்கு சொல்லவேண்டும். பஜ்றுடைய நேரத்தில் மட்டிலும் ஹைய அலல்பலாஹுக்குப் பிறகு,

اَلصَّلٰوةُ خَيْرٌ مِّنَ النَّوْمِ

அஸ்ஸலாத்து கைரும் மினன் னவ்ம்.

என்று இரண்டு முறை கூறி அப்புறம் எஞ்சியுள்ளதைக் கூற வேண்டும்.

ஹைய அலஸ்ஸலாத் என்று கூறும்போது வலப்புற மும், ஹைய அலல்பலாஹ் என்று கூறும்போது இடப் புறமும் திரும்புவது முஸ்தஹப்பு.

பாங்கின் பொருள் :—

1. அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்.

2. அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்.

3. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்று நான் சாக்ஷி கூறுகிறேன்.

4. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர, வேறுயாருமில்லை என்று நான் சாக்ஷி கூறுகிறேன்.

5. நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல் லாஹ்வின் தூதர் என்று நான் சாக்ஷி கூறுகிறேன்.

6. நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ் வின் தூதர் என்று நான் சாக்ஷி கூறுகிறேன்.

7. தொழுகைக்கு வாருங்கள்.

8. தொழுகைக்கு வாருங்கள்.

9. வெற்றிக்கு வாருங்கள்.

10. வெற்றிக்கு வாருங்கள்.

11. அல்லாமிகப்பெரியவன் அல்லாமிகப்பெரியவன்.

12. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர, வேறுயாருமில்லை.

பஜ்றுடைய பாங்கில் அதிகப்படியாகக் கூறுகிற அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம் என்ற வாக்கியத்திற்கு "நித்திரையைப் பார்க்கினும் தொழுகை சிறந்தது" என்பது பொருள்.

பாங்கு சொல்லி முடிந்த பிறகு, கலிமா ஷஹாதத்தையும் ஸலவாத்தையும் ஓதி,

اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلٰوةِ الْقَائِمَةِ اٰتِ سَيِّدَنَا مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَالدَّرَجَةَ الرَّفِيْعَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدَانِ الَّذِيْ وَعَدْتَّهُ وَارْزُقْنَا شَفَاعَتَهُ يَوْمَ الْقِيٰمَةِ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادِ

அல்லாஹும்ம றப்ப ஹாதிஹித்தஃவத்தித்தாம்மா வஸ்ஸலாத்தில் காயிமா, ஆதி ஸெய்யிதனு முஹம்மதனில் வஸீலத்த வல் பலீலத்த வந்தரஜத்தர் ரபீஅத்த வப் அதுஹு மக்காமன் மஹ்மூதனில்லதீ வ அத்தஹு வர் ஜுக்னு ஷபா அத்தஹு யௌமல் கியாமா இன்னக்க லா துக்லிபுல் மீஆத் என்ற துஆவை ஓதவேண்டும்.

"நாயனே! இந்த துஆவிற்கும் தொழுகைக்கும் றப்பானவனே, எங்களது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வஸீலாவையும், மேன்மையையும், உயர்ந்த அந்தஸ்தையும் அளிப்பாயாக! இன்னும் நீ வாக்குறுதி செய்திருக்கிற மக்காமே மஹ்மூதில் அவர்களை எழுப்புவாயாக! நியா

யத்தீர்ப்பு நாளில் அவர்களது மன்றாட்டத்தை எங்களுக்குத் தந்தருளுவாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதிக்கு மாறு செய்யாதவன்'' என்பது இதன் பொருள்.

பாங்குக்கு பதில் கூறல்

பாங்கு சொல்லும் சப்தத்தைக்கேட்டவுடன் இதர பேச்சுக்களை நிறுத்திவிட்டு பாங்கு சொல்பவர் கூறும் வார்த்தைகளை கேட்போரும் மடக்கிக் கூறவேண்டும். ஆனால், ஹையஅலஸ்ஸலாத், ஹையஅலல்டலாஹ்ற என்ற வாக்கியங்களைக் கூறும்போதுமட்டிலும்

لَاحَوْلَ وَلَاقُوَّةَ اِلَّابِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

லாஹௌல வலாகுவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீம் என்று கூற வேண்டும். பஜ்றுடைய பாங்கில் அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம் என்று கூறும்போது

صَدَقْتَ وَبَرَرْتَ وَبِالْحَقِّ نَطَقْتَ

ஸதக்த வபரார்த்த வபில் ஹக்கி நதக்த என்று கூறவேண்டும். இவ்வாறு பதிற் கூறிய பிறகு, மேற்கூறப்பட்ட துஆவையும் ஓதவேண்டும்.

மஸ்ஜிதுக்குத் தூரத்திலுள்ளவர்கள் பாங்குச் சப்தம் கேட்டதும் உடனே மஸ்ஜிதுக்கு வருவதுதான் சரியான பதில். பல மஸ்ஜிதுகளில் பாங்கு சொல்லும் சப்தம் கேட்டால் முதலாவது பாங்குக்கு பதில் கூறவேண்டும்.

தொழுது கொண்டிருக்கும்போதும், ஜனாஸாத்தொழுகையை நிறைவேற்றும்போதும், குத்பா ஓதும்போதும்,

குத்பாவைக் கேட்கும் போதும், கல்வி கற்றுக்கொடுக்கும் போதும், கல்விகற்கும்போதும் உணவருந்தும் போதும், மலஜல உபாதைகளைக் கழிக்கும்போதும் பதில் கூற வேண்டியதில்லை. ஜுனுபாளி பதில் கூற வேண்டும். ஆனல், ஹைலு, நிபாஸுக்கார ஸ்திரீகள் பதிற்கூறவேண்டியதில்லை.

லாஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்பதற்கு வல்லபமும் உயர்வுமுள்ள அல்லாஹ்வை யல்லாமல் பாபத்தை விட்டுத் திரும்பவுமுடியாது, நன்மை செய்யச் சக்தியுமில்லை" என்பது பொருள்.

இக்காமத்துச் சொல்லல்

இக்காமத்துச் சொல்வதும் லுஹர், அஸர் போன்ற நேரங்களில் பாங்கு சொல்வதைப்போல்தான். ஆனல், ஹைய அலல் பலாஹ் என்ற வாக்கியத்திற்குப் பிறகு, கத காமத்திஸ்ஸலாத்

قَدْ قَامَتِ الصَّلٰوةُ

என்று இருமுறை கூறி பாக்கியுள்ளவைகளைக் கூறவேண்டும்.

பாங்கு சொல்வதுபோல் நிறுத்தி நிறுத்திச் சாவதான இக்காமத்துச் சொல்லக்கூடாது. சற்று துரிதமாக அதாவது வார்த்தைகள் கெட்டுப்போகக்கூடியவாறு அவ்வளவு வேகமில்லாமல், இக்காமத்துச் சொல்லவேண்டும். ஹைய அலஸ்ஸலாத், ஹைய அலல்பலாஹ் ஆகியவைகளைக் கூறும்போது வலப்புறமும் இடப்புறமும் திரும்புவதுபோல இக்காமத்துச் சொல்லும்போது திரும்பவேண்டியதில்லை. இக்காமத்திற்கும் பாங்குக்கு பதிற் கூறுவதுபோலவே பதில் கூறுவதுடன் கத காமத்திஸ்ஸலாத் என்று கூறும் போது அதாமஹல்லாஹு வஅகாமஹல்லாஹு மாதாமத்

திஸ்ஸமா வாத்து வல்அர்லு (வான்களும் பூமியும் இருக்குங் காலமெல்லாம் தொழுகையாகிய அதனை அல்லாஹ் நிலைக் கச்செய்து நித்தியமாக்கிவைப்பானாக) என்று கூற வேண்டும்.

தொழுகும் முறை

தொழுகையை நிறைவேற்ற விரும்புகிற ஒருவர் தனது உடை, உடல், தொழுமிடம் ஆகியவைகளைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, இஸ்லாமிய சன்மார்க்கத்தில் விலக்கப் பட்ட பார்வை, கேள்வி முதலியவைகளை விட்டு தனது அங்கங்களை விலக்கிக்கொண்டு, வஞ்சகம், சூது, பொறுமை முதலிய துற்குணங்களை விட்டுத்தனது மனதைத் தூய்மைப் படுத்திக்கொள்வதுடன், உலக சம்பந்தமான காரியங்களில் தனது கருத்தையும் ஞாபகத்தையும் செல்லவிடாமல் திருப்பிக் கொள்ள வேண்டும். மேற் கூறப்பட்ட காரி யங்களைப் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாவிடினும் இயன்றவரை செய்ய வேண்டும். பிறகு, அல்லாஹ¤ தஆலாவிற்காகவே தொழுவதாக அந்தரங்கசுத்தியாக நிர்ணயஞ்செய்துகொண்டு, கிப்லாவிற்கு நேராக நின்ற வண்ணம் தொளஜீஹ் ஓத வேண்டும். அது வருமாறு :—

إِنِّي وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ

இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ பதரஸ்ஸமா வாத்தி வல் அர்ல ஹனீபன் வமா அனமினல் அஷ்ரிக்கீன்

"வான்களையும் பூமியையும் சிருஷ்டித்தவனிடம் எனது முகத்தை நேராகத்திருப்பினேன். நான் முஷ்ரிக்கு களில் ஒரு வனுயில்லை" என்பது இதன் பொருள்.

அப்புறம், எந்தத் தொழுகையை நிறைவேற்ற நாடி இருக்கிறோமோ அந்தத்தொழுகைக்குரிய நிய்யத்தைக்கூறி **தக்பீர்** கட்டிக் கொள்ளவேண்டும். இத்தக்பீருக்கு தக்பீர் தஹ்ரீமா என்று பெயர்.

தக்பீர் கட்டும் விதம் :—இரண்டு கைகளின் சட்டைக் கைகளை முன் கைகளுக்கு மேலில் ஒதுக்கிவிட்டு, இருகைகளையும் காதுகளுக்கு நேராக உயர்த்தி, இரண்டு காதுகளின் கீழ் சோணைகளின் பின் புறத்தில் இரண்டு கைப்பெரு விரல்களின் உட்புறம்படும்படியாகச் செய்து, அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு, இரண்டு கைகளையும் காதை விட்டகற்றி தொப்புளின்மீது இடக்கையை முதலில் வைத்து, அதற்குமேல் வலக்கையை வைத்துப்பிடித்துக் கொள்ளவேண்டும். அதாவது இடக்கையின் மணிக்கட்டை வலக்கையின் பெரு விரலாலும், சுண்டு விரலாலும்பிடிக்க வேண்டும். வலக்கையின் ஏனைய மூன்று விரல்களும் இடக்கையின் முதுகின்மீது இருக்கவேண்டும். இவ்விரல்களை நெருக்கிவைத்துப் பொத்திக்கொள்ளவும் கூடாது. மிக விசாலமாக விரித்துவைத்துக் கொள்ளவும் கூடாது இரண்டிற்கும் பொதுவாக விரல்கள் சற்று விரிந்திருக்க வேண்டும். காதின் பின்புறத்தில் சோணைமீது கைப்பெரு விரலை வைத்திருக்கும்போது உள்ளங்கைகளிரண்டும் கிப்லாவிற்கு நேராக விரிந்திருக்கவேண்டும். ஏனைய நான்கு விரல்களும் ஒன்றோடொன்று சேராமலும், மிகவும் விசாலமாக விரிக்கப்படாமலும் சற்று விலகி இருக்கவேண்டும்.

அப்பொழுது இரண்டு முழங்கைகளையும் கூட கிப்லாவிற்கு நேராக இருக்கும்படிச் செய்யவேண்டும். அக்கம்பக்கத்திலுள்ளவர்களைமுட்டும்படியாக இடப்புறம் வலப்புறமும்

அவைகளை அகற்றிவைக்கக்கூடாது. விலாவுடன் அவை களை ஒட்டிவைக்கவும் கூடாது. இவ்வாறு கட்டிக் கொள் வதற்கு தக்பீர் கட்டுதல் என்று பெயர். இது ஆடவர்கள் தக்பீர் கட்டும் முறை.

ஸ்திரீகள் இவ்விதமாகத் தக்பீர் கட்டலாகாது. அவர் கள் தங்கள் முன் கையின் மீதிருக்கிற சட்டைக்கையையோ அல்லது துணியையோ அகற்றக்கூடாது. தங்களது கொடுங் கைகளை விலாவில் உரையும் வண்ணமாக வைத்துக்கொண்டு, தங்களிரு முன்கைகளையும் தங்கள் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்தி நெஞ்சுக்குக் கொஞ்சம் கீழில் இடக்கையை வைத்து அதற்கு மேலில் வலக்கையை வைத்து. தக்பீர் கட்டிக் கொள்ளவேண்டும்.

தக்பீர் கட்டிய பிறகு :—மேற் கண்டவாறு தக்பீர் கட் டிய பின்னர் தனு ஓதவேண்டும். அது வருமாறு :—

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى جَدُّكَ

وَلَا إِلٰهَ غَيْرُكَ

ஸுப்ஹானக அல்லாஹும்ம வ பிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக.

(‘நாயனே! நீ தூயவன். இன்னும் உனது புகழைக் கொண்டு ஆரம்பிக்கிறேன். உனது திருநாமம் முபாரக்காக இருக்கிறது. உனது தலைமைத்தனம் உன்னதமாகிவிட்டது. இன்னும் உன்னை யல்லாது வேறு நாயனில்லை” என்பது இதன் பொருள்). என்று அறபியில் தனுவை ஓதி,

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்,

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்,

அப்புறம் திருகுர்ஆனில் தனக்குத்தெரிந்த ஒரு ஸூறத்தை ஓதவேண்டும். (ஸூறத்துல் பாத்திஹாவும் வேறு பல சிறு ஸூறத்துகளும், அறபியிலும், தமிழிலும் எழுதப்பட்டு, அதன் மொழிபெயர்ப்புகளும் கருத்துரைகளும் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. திருகுர் ஆனை ஓதத் தெரியாதவர்கள் அவைகளைப் பார்த்துப் படித்து உச்சரிப்பு பேதமில்லாமல் ஓதக் கற்றுக்கொள்ள வேண்டும்).

ஒரு ஸூறத்து முழுவதையும் ஓத வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு பெரிய ஸூறத்தில் ஒரு பகுதியை ஓதலாம்; அல்லது பெரிய ஆயத்துகளாயிருந்தால் ஒரு ஆயத்தை ஓதலாம். இதற்கு லம்மூ ஸூறத்து அதாவது அத்தியாயத்தை இணைத்தல்" என்று பெயர்.

ஸூறத்துல் பாத்திஹாவையும் லம்மூ ஸூறத்தையும் சேர்த்து கிராஅத் என்று பொதுப்படக் கூறுவார்கள். இமாம் ஜமா அத்தாகத் தொழுவதால் இமாம் மட்டிலும் இவைகளை ஓதுவார். மற்றவர்கள் அவ்வாறு; பிஸ்மில் ஆகியவைகளை ஓதாமல், தலையை மட்டிலும் ஓதிவிட்டுமௌனமாக நிற்க வேண்டும். அதிலும் லுஹர், அஸர் ஆகிய இருநேரங்களிலும்இமாம் இவைகளைச்சப்தமில்லாமல் ஓதுவார். மற்றபமூன்று வேளைகளில் பிறருக்கும் கேட்கும்படி சப்தமிட்டு ஓதுவார். இமாம் சப்தமிட்டு ஓதினாலும், சப்தமிடாமல் ஓதினாலும் அவரைப் பின்பற்றித் தொழுபவர்களுக்கு அவர் ஓதுவது காதில் விழுந்தாலும், அல்லது காதில் விழாமலிருந்தாலும் அந்த

இமாமைப் பின்பற்றித் தொழுபவர்கள் மௌனமாகவே நிற்க வேண்டும்.

இவ்விதம் கிராஅத் ஓதியபின் அல்லாஹு அக்பர்

اَللّٰهُ اَكْبَرُ

என்று சொன்ன வண்ணம் இமாம் ருக்கூஉ செய்வார். முக்ததீகளும் அவரைப் பின்பற்றி ருக்கூஉ செய்யவேண்டும். இமாமுக்கு முதலில் ருக்கூஉ செய்யக்கூடாது.

ருக்கூஉ செய்யும் விதம்

ருக்கூஉ செய்ய ஆரம்பிக்கும்போதே அல்லாஹு அக்பர் என்ற பதத்தையும் ஆரம்பித்துவிடவேண்டும். ருக்கூஉவில் சரியாய் அமரும்போது மேற் கண்ட தக்பீர் முடிந்துவிடவேண்டும். தனது இரு முழங்கால்களையும் இரு கரங்களால் பிடித்துக் கொள்ளவேண்டும். அதாவது முன் கைப்படங்களால் முழங்காலைப் பிடித்துக் கொள்வதுடன் விரல்கள் விரிந்து விருக்கவேண்டும். அச்சமயம் விலாவுடன் கை சேர்ந்திருக்கவும் கூடாது, அவைகள் வளைந்திருக்கவும் கூடாது. இடுப்பும் தலையும் நேராக இருக்க வேண்டும், தலையைத் தொங்கவிட்டுக் குப்புறக் கவிழ்த்திக் கொள்ளவும் கூடாது. பார்வை கால் பாதங்களை நோக்கி இருக்கவேண்டும். இரண்டு கால்களும் ஒன்றொடொன்று சேராமல் விலகி கிப்லாவிற்கு நோக இருக்கவேண்டும். சுமார் நான்கு விரல் அகலத்திற்கு இருகால்களும் விலகி இருந்தால்போதுமானது. மிகவும் அகலமாகக்கால்களை அகற்றிவைக்கவும் கூடாது. கால்களும் வில்லைப்போல் வளைந்திருக்கவும் கூடாது. ஸ்திரீகள் விரல்களை விரித்து வைக்கக்கூடாது.

தங்கள் கைகளைத் தங்கள் விலாவுடன் சேர்த்துவைக்கவேண்டும். முட்டுக்கால்களையும் கூடக் கொஞ்சம் விலத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் ருக்கூஉ செய்துகொண்டு ஸுப்ஹான றப்பியல் அளீம்

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

மகத்துவமுள்ள எனது றப்பு தூயவன் என்பது இத்தஸ்பீஹின் அர்த்தம்.

இதனை மூன்று முறை ஓதவேண்டும். இது குறைந்த அளவு ஐந்து அல்லது ஏழு முறையும் ஓதலாம். எவ்வாறாயினும் ஒற்றைப்பட ஓதவேண்டும். இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் இமாம் மிகவும் அதிகநேரம் ருக்கூஉவில் இருக்கலாகாது. வயோதிகர்கள் நோயாளிகள்போன்ற இயலாதவர்களும் இமாமைப் பின் தொடர்ந்து தொழுவார்களாதலின் அவர்களுக்குச் சிரமம் ஏற்பட்டுவிடும். அவசரம் அவசரமாக மூன்று தஸ்பீஹ் நேரத்திற்கும் குறைவாக ருக்கூஉ செய்யவும் கூடாது.

மேற்கண்ட தஸ்பீஹுக்கு பதிலாக குர்ஆன் ஷரீபை ஓதக்கூடாது.

தொழுதால் இமாமும், அவரைப்பின்பற்றித் தொழுகிற மற்றவர்களும் இத்தஸ்பீஹை ஓதவேண்டும்.

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

அப்புறம், ஸமி அல்லஹு லிமன் ஹமிதஹ் என்று கூறியவண்ணம் நிலைக்குவரவேண்டும். இதற்கு தஸ்மீஉ

என்று பெயர். "அல்லாஹ், தன்னைப் புகழ்பவனுக்குச் செவியேற்கிறான்" என்பது இதன் கருத்து. செவியேற்றல் என்பதற்குக் காது தாழ்த்திக்கேட்குதல் என்பது கருத்தல்ல. அங்கீகரித்துக்கொண்டான் என்பது கருத்து. நிமிர ஆரம்பிக்கும்போது இந்த தஸ்மீஇ ஆரம்பித்து, நிமிர்ந்தவுடன் முடித்துவிடவேண்டும். தனித்துத் தொழுதால் மேற் கண்ட தஸ்மீஇ ஓதுவதுடன், சிறு நிலையில் நின்று கொண்டு

اَللّٰهُمَّ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

அல்லாஹும்ம றப்பனா வலகல் ஹம்து என்று ஓத வேண்டும். இதற்கு தஹ்மீது என்று பெயர். "அல்லாஹ்வே, எங்கள் றப்பே, உன்னைப் புகழ்ந்தோம். இன்னும் உனக்கே சர்வ புகழும்தகும்" என்பது இதன் அர்த்தம். இவ்வாறு ருக்கூவிலிருந்து நிமிர்ந்து நிற்பதற்கு கௌமா என்று பெயர். சிறு நிலை என்றுங்கூறுவர். இமாம் ஜமா அத்தாகத் தொழுதால் இமாம தஸ்மீஇ மட்டிலும் சப்தமிட்டுக் கூறுவார். அவரைப் பின்பற்றித் தொழுபவர்கள் தஹ்மீதை மட்டிலும் சப்தமில்லாமல் கூறுவர், அல்லாஹும்ம என்ற பதத்தைச் சேர்க்காமல்

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

றப்பனா வலகல் ஹம்து என்றும் கூறலாம். ஆனால், வாவு என்ற அக்ஷரமில்லாமல்

اَللّٰهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

அல்லாஹும்ம றப்பனா லகல் ஹம்து

என்று கூறுவதுதான் சிறந்தது. பின்னர், அல்லாஹு அக்பர் என்று கூறியவண்ணம் ஸுஜூது செய்யவேண்டும்.

ஸுஜூது செய்யும் விதம் :—முதலாவதாகப் பூமியில் இரண்டுக்கால்களையும் வைக்கவேண்டும். பிறகு, இரண்டு கைகளையும் வைத்து அக்கைகளுக்கிடையில் தலையைவைக்க வேண்டும். அதிலும் முதலாவதாக மூக்கையும் அப்புறம் நெற்றியையும் வைக்கவேண்டும். கைகளின் இரண்டு பெரு விரல்களும் காதுகளுக்கு நேராக இருக்கவேண்டும். கை விரல்கள் சேர்ந்து இருக்கவுங்கூடாது. மிகவும் அகலமாக விரிந்திருக்கவுங் கூடாது. சாதாரணமாக விரிந்திருக்கிற அளவிற்கு அவைகள் கிப்லாவிற்கு நேராக விரிந்திருக்க வேண்டும், முழங்கைகளைப் பூமியில் படுக்கவைக்கவும் கூடாது, விலாவுடனும் அவைகளைச் சேர்க்கவுங் கூடாது. ரொம்பவும் விசாலமாக அகற்றிவைத்து பக்கத்தில் தொழு பவர்க்கு இடைஞ்சலை உண்டு பண்ணவும் கூடாது.

கால் விரல்களைப் பூமியின்மீது ஊன்றி இரண்டு பாதங் களையும் நேராக நிற்கும்படி நட்டுவைக்கவேண்டும். கெண் டைக்காலையும், துடையையும் ஒன்றொடொன்று ஒட்டி இருக்கும்படிச் செய்யக்கூடாது. துடையும் வயிறும் ஒட்டி இருக்கவுங் கூடாது.

மேற் கூறப்பட்ட விபரம் ஆடவர்களுக்கு மட்டிலும் தான். ஸ்திரீகள் மேற்கண்டவாறு செய்யாமல் கைகளைப் பூமியில் படுக்கவைத்து அவைகளை விலாவுடன் சேர்ந்திருக் குமாறு செய்யவேண்டும். அவர்களது வயிறு துடையுடன் சேர்ந்து ஒட்டி இருக்கவேண்டும். இப்படிச் செய்வதற்கு ஸஜ்தா என்று பெயர். ஸுஜூது என்றுஞ் சொல்வர். ஸுஜூதில் இருக்கும்போது இமாம் ஜமாஅத்தாகத் தொழுதாலும் அல்லது தனித்தனியே தொழுதாலும் இமா மும் மற்றவர்களும்

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَىٰ

ஸுப்ஹான றப்பியல் அஃலா (அதாவது மிகவும் உயர்வுள்ள எனது றப்பு தூயவன்) என்ற தஸ்பீஹை மெதுவாகத் தனக்கு மட்டிலும் கேட்கத்தக்கவாறு ஓத வேண்டும். குறைந்த பக்ஷம் ஒரு முறை ஓதுவதுகூட ஸுஜூதுக்குப் போதுமானதுயினும் மூன்று முறையேனும் ஓதவேண்டும். ஐந்து அல்லது ஏழு முறையும் ஓதலாம். இமாம் ஜமா அத்தாகத் தொழுதால் இமாம் தனக்குப் பின்னால தொழுகிறவர்களைக்கவனித்து, அவர்களுக்கு இடைஞ்சல் வராதபடி அதிக நேரம் ஸுஜூது செய்யாமலும், மிக அவசரப்படாமலும் நடுத்தரமாக ஸுஜூது செய்ய வேண்டும்.

சிறு இருப்பு :—இப்படி ஸுஜூது செய்த பிறகு, அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு தலையை உயர்த்தி சிறு இருப்பில் இருக்கவேண்டும். முதலாவதாக நெற்றியையும், அப்புறம் மூக்கையும் பூமியிலிருந்து உயர்த்த வேண்டும். இரண்டு கைகளையும் தடையின்மீது வைத்து, இடதுகாலின் படத்தின்மீது பித்தட்டைவைத்து, வலது கால்களை நட்டி வைத்தபடியே அதன் விரல்கள் கிப்லாவிற்கு நேராக இருக்கும்படிச் செய்யவேண்டும்.

இவ்வாறு ஒரு தஸ்பீஹ் நேரமேனும் உட்கார்ந்திருந்து அப்புறம் இரண்டாவது முறையும் ஸுஜூது செய்ய வேண்டும். முதலாவது ஸுஜூதில் அல்லாஹு அக்பர் என்று கூறிய வண்ணம் கை, கால், நெற்றி, மூக்கு, விலா, வயறு, தடை முதலியவைகளை வைத்ததுபோல் இரண்

டாவது ஸஜ்தாவிலும் வைக்கவேண்டும். இவ்வாறு இரண்டாவது ஸஜ்தாவையும் செய்து முடித்து அதில் ஓத வேண்டிய தஸ்பீஹையும் ஓதி அல்லாஹு அக்பர் என்று கூறிய வண்ணம் எழுந்து நிற்க வேண்டும். இவ்வாறு இரண்டு ஸுஜூதுகள் செய்து முடிப்பதற்கு ஒரு ரக்கஅத் என்று பெயர்.

இரண்டாவது ரக்கஅத் :—முதலாவது ரக்கஅத்தில் செய்ததுபோலவே இரண்டாவது ரக்கஅத்திலும் செய்ய வேண்டும். ஆனால், முதலாவது ரக்கஅத்தில் தக்பீர் தஹ்ரீமா கட்டியதுபோல கைகளை காதுக்கு நேராக உயர்த்தி தக்பீர் கட்ட வேண்டியதில்லை. காது களுக்கு நேராகக்கைகளை உயர்த்தாமல் தக்பீர் கட்டிக் கொள்ள வேண்டும். இப்பொழுது கட்டும் தக் பீருக்குப் பிரத்தியேகமாக அல்லாஹு அக்பர் என்று கூற வேண்டியதில்லை. முதலாவது ரக்கஅத்து முடிந்து எழுந்திருக் கும்போது அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கூறுவது ஒன்றே போதுமானது. முதலாவது ரக்கஅத்தில் தனு ஓதியதுபோல இரண்டாவது ரக்க அத்தில் தனு ஓதவும் வேண்டியதில்லை. அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம் என்ற வாக்கியத்தைக் கூறவும் வேண்டியதில்லை. பிஸ் மில்லாவை மட்டிலும் ஓதி ஸூறத்துல் பாத்திஹாவும் லம்மு ஸூறத்தும் ஓதவேண்டும். இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் இவைகளை இமாம் ஓதிக்கொள்வார். அவரைப் பின் பற்றித் தொழுபவர்கள் ஒன்றையும் ஓதாமல் மௌன மாக இருக்கவேண்டும். ருக்கூஉ, கௌமா, ஸுஜூது, சிறு இருப்பு ஆகியவைகள் முதலாவது ரக்கஅத்தில் செய்தது போலவே செய்யப்படவேண்டும்.

ஜல்ஸா :—இரண்டாவது ரக்கஅத்து முடிந்த பிறகு, நிலைக்கு வராமல் இருப்பில் இருக்கவேண்டும். அதாவது ஸுஜூதிலிருந்து அல்லாஹுஅக்பர் என்ற தக்பீரை ஓதிக் கொண்டு நிமிர்ந்து இடக்காலின் பாதத்தின்மீது பித் தட்டை வைத்து, வலக்காலின் விரல்களை கிப்லாவிற்கு நேராக இருக்கச்செய்து, பாதத்தை நட்டுவைக்கவேண்டும். இரண்டு கைகளையும் இரு தொடைகளின்மீது வைத்துக் கொண்டு, அத்தஹிய்யாத்து ஓத வேண்டும். தனித்துத் தொழுதாலும் சரி அல்லது இமாம் ஜமாஅத்தாகத் தொழு தாலும் சரி, யாவரும் அத்தஹிய்யாத்தை ஓத வேண்டும். அது வருமாறு :—

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا
النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ
الصَّالِحِيْنَ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا
عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தையி பாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வ றஹ்மத் துல்லாஹி வ பரகாத்துஹு அஸ்ஸலாமு அலைன வ அலா இபாதில்லா ஹிஸ்ஸாலிஹீன். அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ றஸூலுஹு.

("ஸ்தூலம், பொருள், சொல் முதலியவைகள் சம்பந்த மான சகல வணக்கங்களும் அல்லாஹுத் தஆலாவிற்கே

உரியன. ஸலாம் என்னும் ஈடேற்றமும், அல்லாஹ்வின் கிருபையும் அவனது கடாக்ஷங்களும் நபியே உமக்கு உண்டாவதாக. ஸலாம் என்னும் ஈடேற்றம் எங்களுக்கும், ஸாலிஹான அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக. அல்லாஹ¤த் தஆலாவைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறுயாருமில்லை என்று நான் சாக்ஷி கூறுகிறேன். இன்னும் நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாராகவும், அவனது தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாக்ஷியங் கூறுகிறேன்" என்பது இதன் பொருள்.)

"அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தையிபாத்து,' என்று ஓதும்போது அல்லாஹ¤த் தஆலாவிற்குக் காணிக்கை செலுத்துவதாகவும். அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வ றஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹ¤ என்று ஓதும் போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்வதாகவும், அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் என்று ஓதும்போது தனக்கும் ஸாலிஹான நல்லடியார்கள் யாவருக்கும் ஸலாம் சொல்வதாகவும், அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ¤ வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹ¤ வறஸ¥லுஹ¤ என்று ஓதும் போது அல்லாஹ¤த் தஆலா ஏக நாயன் என்பதையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபித்துவத்தையும் குறித்துச் சாக்ஷி சொல்வதாகவும் நிய்யத்துச் செய்வதுடன் ஏகநாயன் என்பதை அறிவிக்கும் தோரணையில் லாஇலாஹ என்று கூறும் போது வலக்கை கலிமா விரலை உயர்த்தி இல்லல்லாஹ¤ என்று கூறும்போது அவ்விரலை முன்போல் வைத்துக் கொள்ள வேண்டும்.

அத்தஹிய்யாத்தின் பூர்வ விசேஷங்களையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஅராஜ் சென்றிருந்த போது நிகழ்ந்த விசேஷங்களையும் குறித்து இவ்விடத்தில் எழுதுவ தாயின் அது மிக விரிவாகி விடுமென்றஞ்சி விடுத்தனம். விரிவான நூல்களில் இவைகளைக் குறித்துத் தெரிந்து கொள்க.

இரண்டு ரக்க அத்துக்கு மேற்பட்ட தொழுகையா யிருந்தால் மேற்கண்ட அளவு அத்தஹிய்யாது ஓதிய பிறகு, அல்லாஹு அக்பர் என்று கூறிய வண்ணம் நிலைக்கு வந்து இதற்கு முந்திய இரண்டாவது ரக்கஅத்தில் ஓதியது போலவும், செய்ததுபோலவும் செய்யவேண்டும், நான்காவது ரக்க அத்திற்கும் இது போலவே செய்து அதன் இறுதியில் அத்தஹிய்யாத்தை முன் போலவே ஓதவேண்டும். இவை பல்லாத ஸுன்னத்து, நபில் போன்ற தொழுகை களுக்குத்தான் மேற்கண்ட மாதிரி செய்ய வேண்டும். பர்லுத் தொழுகையாக அதாவது லுஹர், அஸர், இஷா ஆகிய மூன்று நேரத்து பர்லுதொழுகையாக இருந்தால், மூன்றுவது நான்காவது ரக்க அத்துகளில் ஸுறத்துல் பாத்திஹா விற்குப் பிறகு லம்முஸுறத்து ஓதாமல் ருக்கூ உக்குச் சென்று விடவேண்டும். மகுரிபுடைய பர்லுத் தொழுகையாக இருந்தால், மூன்றுவது ரக்க அத்தை மட்டிலும் தொழுதுவிட்டு அத்தஹிய்யாத்து ஓதவேண்டும்.

எனவே, பஜ்றுடைய இரண்டாவது ரக்க அத்துக்குப் பிறகும், லுஹர், அஸர், இஷா ஆகிய நேரங்களின் பர்லுத் தொழுகைகளில் நான்காவது ரக்க அத்திற்குப் பிறகும், மகுரிபில் மூன்றுவது ரக்க அத்திற்குப் பிறகும் அத்த ஹிய்யாத்து ஓத இருப்பதற்குக் கடைசி இருப்பு என்று

பெயர். ஏனெனில், அவ்விருப்பிற்குப் பிறகு ஸலாம் கொடுக்க வேண்டிய திருப்பதால் அதற்கு அப்பெயர் வந்தது.

ஆகவே கடைசி இருப்பில் அத்தஹிய்யாத்து ஓதி முடிந்த பிறகு தரூதே இப்ராஹீமையும், துஆயே மாதூரா வையும் ஓதிமுடித்து இறுதியாக ஸலாம் கொடுக்கவேண்டும்.

தரூதே இப்ராஹீம் வருமாறு :—

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ۝ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ۝

அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதீன் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன்மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜித்.

(நாயனே ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர் களுக்கும், இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்பத் தாருக்கும் நீ கருணை செய்தது போல, ஹஜ்றத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், முஹம்மது (ஸல்) அவர்களது குடும்பத்தாருக்கும் நீ கருணை புரிவாயாக. நாயனே, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும், இப்ராஹீம்

(அலை) அவர்களது குடும்பத்தாருக்கும் நீ பரக்கத்துச் செய்தது போல, ஹஜ்றத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், முஹம்மது (ஸல்) அவர்களது குடும்பத்தாருக்கும் நீ பரக்கத்துச் செய்வாயாக" என்பது இதன் பொருள்.)

துஆயே மாதூரா வருமாறு :—

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِاُسْتَاذِيْ وَلِجَمِيْعِ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ اَلْاَحْيَاءِ مِنْهُمْ وَالْاَمْوَاتِ اِنَّكَ مُجِيْبُ الدَّعَوَاتِ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ۝

அல்லாஹும்ம குபிர்லீ வலி வாலிதைய வலிஉஸ் தாதி வலி ஜமீஇல் முமினீன வல்முமிணாத்தி வல் முஸ்லிமீன வல்முஸ்லிமாத். அல்அஹ்யாயிமின்ஹும் வல்அம்வாத்தி இன்னக்க முஜீபுத்தஅவாத்தி பிறஹ்மத்திக யா அர்ஹமர் ராஹிமீன்.

(நாயனே! எனக்கும், என் பெற்றோர்களுக்கும், என்குருவிற்கும், மூமினான ஆடவர்கள், மூமினான ஸ்திரீகள், முஸ்லிமான ஆடவர்கள், முஸ்லிமான ஸ்திரீகள், இவர்களில் ஜீவித்திருப்போருக்கும் மரித்தோருக்கும் யாவருக்கும் பிழை பொறுப்பாயாக. நிச்சயமாக நீ பிரார்த்தனைகளை அங்கீகரிப்பவன். கிருபையை செய்வோர்கள் யாவரிலும் அதிகக் கிருபையுள்ளோனே உனது கிருபையைக் கொண்டு உன்னைப் பிரார்த்திக்கிறோம்"—என்பது இதன் பொருள்). அடியிற் கண்ட துஆவையும் சேர்த்து ஓதுவது நல்லது :—

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

அல்லாஹு ம்ம றப்பனு ஆத்தீனு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினு அதாபன்னர்.

(நாயனே! எங்கள் றப்பே! இம்மையில் நல்லதையும், மறுமையில் நல்லதையும் எங்களுக்குத் தந்தருள்வாயாக. இன்னும் நகரத்தின் வேதனையை விட்டு எங்களை காப்பாயாக"—என்பது இதன் பொருள்).

இவ்விரு துஆக்களையும் ஓதிய பிறகு ஸலாம் கொடுக்க வேண்டும். ஸலாம் கொடுக்கும் விபரம் வறுமாறு —

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

அஸ்ஸலாமு அலைக்கும் வ றஹ்மத்துல்லாஹி

(உங்களுக்கு ஈடேற்றமும் அல்லாஹ்வின் கிருபையும் உண்டாவதாக" என்பது இதன் பொருள்) என்று கூறிக் கொண்டு வலப்புறம், முகத்தைத் திருப்பவேண்டும். அப்புறம், அதேமாதிரி ஸலாம் சொல்லிக் கொண்டு இடப் புறம் திரும்பவேண்டும். பின்னாலுள்ள வரிசையில் தொழு பவர்களுக்குக் கன்னம் தெரியும் விதமாக நன்றாய் முகத்தைத் திருப்பவேண்டும். அப்பொழுது பார்வை தோளை நோக்கியதாக இருக்க வேண்டும்.

இமாம் ஜமா அத்தாகத் தொழுபவர்கள் ஸலாம் கொடுக்கும் போது மலக்குகளையும், தன்னுடன் தொழு பவர்களையும் இமாம் நிய்யத்துச் செய்யவேண்டும். அவரைப் பின் றொடர்ந்து தொழுபவர் இமாமையும், தன்னுடன்

சேர்ந்து தொழுபவர்களையும், மலக்குகளையும் நிய்யத்துச் செய்ய வேண்டும். தனித்துத் தொழுபவர்கள் தனது வலப் புறத்திலும், இடப்புறத்திலும் இருக்கும் மலக்குகளை நிய்யத்துச் செய்ய வேண்டும்.

இவ்வாறு தொழுகையை முடித்த பிறகு ஸுன்னத்துத் தொழவேண்டியதிருந்தால் ஒரு சிறு துஆவை மட்டிலும் ஓதிவிட்டு மற்றைய ஜனங்களுடன் பேசாமல், தொழுத இடத்தை விட்டுக் கொஞ்சம் விலகி ஸுன்னத்து, நபில் போன்ற தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும். அப்புறம் இஸ்திஃபார், ஆயத்துல் குர்ஸீ, தஸ்பீஹ் முதலியவைகளை ஓதிக் கடைசியில் தனக்கு வேண்டியவை களைக் குறித்து இறைவனிடம் பிரார்த்தனை புரிய வேண்டும். எந்தப்பிரார்த்தனை புரிந்தாலும் முதலில் பிஸ்மில்லாவும் அப்புறம் ஸலவாத்தும் ஓதி பிறகு தனது ஹாஜத்துகளைக் கூறி இறுதியாகவும் ஸலவாத்து ஓதவேண்டும்.

பர்லுத் தொழுத பிறகு, ஓதக்கூடிய சிறிய துஆக்கள் வருமாறு :—

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ وَاِلَيْكَ يَرْجِعُ السَّلَامُ
حَيِّنَا رَبَّنَا بِالسَّلَامِ وَاَدْخِلْنَا دَارَ السَّلَامِ تَبَارَكْتَ وَتَعَالَيْتَ
يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ

அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம் வ மின்கஸ்ஸலாம் இலைக்க யர்ஜிஉஸ்ஸலாம் ஹையினா றப்பனா பிஸ்ஸலாம் வஅத்கில்னாதாரஸ்ஸலாம் தபாரக்த றப்பனா வதஆலைத்த யாதல் ஜலாலி வல் இக்ராம்.

(நாயனே! நீதான் ஈடேற்ற மளிப்பவன். இன்னும் ஈடேற்றம் உன்னிலேயே இருக்கிறது. இன்னும் ஈடேற்றம் உன் பாலிலேயே மீளுகிறது. எங்கள் றப்பே ஈடற்றத்தைக் கொண்டு ஜீவிக்கச் செய்வாயாக. இன்னும் சுவர்க்கத்தின் வீட்டில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக. எங்கள் றப்பே நீ புனிதனுகிவிட்டாய். இன்னும் உயர்வுள்ளவனுக இருக்கிறாய். இன்னும் மகத்துவமுள்ளவனுக இருக்கிறாய். வல்லபமும் கண்ணியமும் உள்ளவனே!" என்பது இதன் பொருள்).

رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ

றப்பனு லலம்னு அன்புஸனு வ இன்லம் தகுபிர்லனு வதர்ஹம்னு லநக்கூனன்ன மினல்காஸிரீன்

(எங்கள் றப்பே! எங்களுக்கே நாங்கள் அநீதி செய்து கொண்டோம். எங்களுக்கு நீ மன்னிப்புச் செய்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில் நாங்கள் திண்ணமாக நஷ்டவாளர்களாகி விடுவோம்" என்பது இதன் பொருள்).

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ وَتُبْ عَلَيْنَا يَا رَبَّنَا

إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ

றப்பனு தகப்பல் மின்னு இன்னக அன்தஸ்ஸமீஉல் அளீம். வதுப் அலைனு யாறப்பனு இன்னக அன்தத்தவ்வாபுர் ரஹீம்.

(எங்கள் றப்பே எங்களிலிருந்து நீ அங்கீகரிப்பாயாக; நிச்சயமாக நீதான் மிகச்செவியேற்பவன்; மிக அறிந்தவன். இன்னும் எங்களது தௌபாவை அங்கீகரிப்பாயாக. நிச்

சயமாக நீதான் தௌபாவை மிக அங்கீகரிப்பவன் மிகக் கிருபை செய்பவன்'' என்பது இதன் பொருள்.)

இவ்விதமாகச் சிறு சிறு துஆக்களை ஓதவேண்டும். மிக நீண்ட துஆக்களை ஓதவேண்டியதில்லை. இம்மூன்று துஆக்களை மட்டிலும்தான் ஓதவேண்டும் என்ற கட்டாயமில்லை. திருகுர்ஆன் ஹதீது ஆகியவைகளில் கூறப்பட்டுள்ள இவைபோன்ற வேறு துஆக்களையும் ஓதலாம். இம்மூன்று துஆக்களையும் சேர்த்து ஓத வேண்டியது மில்லை. இவைகளில் ஏதேனும் ஒன்றை ஓதினாலும் போதுமானது. ஆனால், இவைகளை ஓதும்போது முன்னும் பின்னும் ஸலவாத்து ஓதவேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. பெரிய துஆக்கள் ஓதுவதைக்குறித்து பிரத்தியேகமாக ஒரு பாடத்தில் கூறப்படும். இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் இமாம் மேற் கண்ட துஆக்களை ஓதுவார். மற்றவர்கள் ஆமீன் (அங்கீகரிப்பாயாக) என்று கூறிக்கொண்டிருந்தால் போதுமானது.

தொழுகையின் ஷர்த்துகள்

மேற் கண்ட விதமாகத் தொழுகைகளை நிறைவேற்றினாலும் அச்செய்கைகள் யாவும் ஒரே விதத்தன்மை வாய்ந்தனவல்ல. அவைகளிற் சில ஷர்த்துகளாகவும், சில ருக்னுகளாகவும், சில ஸுன்னத்துகளாகவும், சில முஸ்தஹப்புகளாகவும் இருக்கின்றன. அவைகளைத் தனித்தனியே விபரிப்போம். தொழுகையின் ஷர்த்துகளுக்கும் ருக்னுகளுக்கும் பர்லுகள் என்று பொதுப் பெயரும் உண்டு. அன்றியும் ஷர்த்துகளுக்கு வெளிப்பர்லுகள் என்றும் ருக்னுகளுக்கு உள் பர்லுகள் என்றும் பெயர் சொல்வதுண்டு. தொழுகையின் ஷர்த்துகளென்னும் வெளி பர்லுகள் ஏழு அவை வருமாறு :—

1. தொழுகைக்குரிய காலத்தை அறிதல். தொழுகைக்குறிய காலத்தை அறியாமல் அலருடைய நேரத்தில் லுஹரையும், லுஹருடைய நேரத்தில் அலரையும் நிய்யத்துச் செய்து தாறுமாறுகத் தொழுதால் தொழுகை நிறைவேறாது. ஆதலால், அந்தந்த நேரத்தை அறிந்து, அந்த நேரத்திற்குரிய தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

2. உடற் சுத்தம். சிறு தொடக்கு பெரும் தொடக்குகளை அதாவது ஒலு வில்லாதிருத்தல், ஸ்னனஞ் செய்யக் கடமைப்பட்டிருத்தல் ஆகியவைகளை விட்டுச் சுத்தமாக இருந்தல். தேகத்தில் அசங்கிதங்களிருந்து, அவைகளை நீக்கவேண்டிய அவசியமிருப்பின் அவைகளையும் நீக்கி விடல். இவைகளை உடற் சுத்தம் என்று பொதுப்படக் கூறலாம்.

3. உடைச்சுத்தம். அசங்கிதத்தைக் குறித்த பாடத்தில் முன்னர் கூறப்பட்டுள்ள கெட்டியான அல்லது இளகலான அசங்கிதங்களைவிட்டு உடையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

4. இடச்சுத்தம். அதாவது தொழுமிடம் கெட்டியான அல்லது இளகலான அசங்கிதங்களை விட்டுச் சுத்தமாக இருத்தல். தொழுகையை நிறைவேற்றுபவர் நிற்குமிடம், ஸுஜூதில் கையைவைக்குமிடம், நெற்றி மூட்டுக்கால்கள் இவைகளை வைக்குமிடங்களேனும் குறைந்த பக்ஷம் சுத்தமாக இருக்கவேண்டும்.

5. மறைக்க வேண்டிய இடங்களை மறைத்தல். அதாவது ஆடவர்கள் தொப்புளின் கீழ்அருகு முதல் முட்டுக்கால்களுக்குக் கீழ்வரை மறைக்க வேண்டும். ஸ்திரீகள்

முகம், இரு முன்கைகள், கால்களின் இரு பாதங்கள் ஆகிய வைகளைத் தவிர்த்து மற்றைய எல்லாவற்றையும் மறைக்க வேண்டும். இருட்டில் தொழுதாலும் கூட தேகத்தில் மறைக்கவேண்டிய இடங்களை மறைக்க வேண்டும். ஆடையே இல்லாமல் நிர்வாணமாகவே இருக்கவேண்டிய நிர்ப்பந்த முள்ளவர்கள் நிர்வாணமாகத் தொழலாம். ஆனால், அவர் கள் உட்கார்ந்த வண்ணம் தொழுவது உத்தமம். ஆடை கிடைக்க வசதி இருந்து நிர்வாணமாகத் தொழுதால் தொழுகை நிறைவேறுது. தேகத்தை மறைக்கவேண்டும் என்பதில் மறைக்க வேண்டிய இடத்தைப் பிறர் பார்த்து விடுவதால் குற்றமொன்றுமில்லை.

6. கிப்லாவை முன்னோக்குதல். கிப்லா என்பது திருமக்காவிலுள்ள கஃபா என்ற ஆலயத்தை நோக்கித் தொழவேண்டும் என திருகுர்ஆன், ஹதீது, இஜ்மாஉ ஆகிய வைகள் தீர்மானித்திருக்கின்றன. அத்தேவாலயத்திற்குக் கிப்லா என்று பெயர். ஹறமிலுள்ளவர்கள் அதனைப் பார்த்துத் தொழவேண்டும். வெளியூர்களிலுள்ளவர்கள் அதன் திசையை நோக்கித் தொழவேண்டும். உலகிலுள்ள முஸ்லிம்கள் யாவரும் அதனைத்தான் முன்னோக்கித்தொழ வேண்டிய திருப்பதால் கஃபாவிற்குக் கிழக்கிலுள்ளவர்கள் மேற்கு முகமாகவும், மேற்கிலுள்ளவர்கள் கிழக்கு முகமாக வும், வடக்கிலுள்ளவர்கள் தெற்கு முகமாகவும், தெற்கிலுள் ளவர்கள் வடக்கு முகமாகவும். தொழுவார்கள். திருமக்கா விலுள்ளவர்கள் கஃபாவைச் சுற்றிலுமிருந்து தொழுவார்கள்.

திரு கஃபாவில் அல்லாஹ்த் தஆலா இருக்கிறான்; ஆதலால், அதனை முன்னோக்கவேண்டும் என்ற கருத்தில் ஜனங்கள் அதனை முன்னோக்குவதில்லை. எத்திசையிலும்

திரும்பித் தொழலாம். எங்கும் அல்லாஹ்த் தஆலா நிறைந்திருக்கிறான். ஆதலால், குறிப்பிட்ட ஒரு திசையில் மட்டும் அவனை முன்னோக்கித் தொழுகவேண்டும் என்பதில்லை. ஆயினும், முஸ்லிம்களுக்குள் கட்டுப்பாடும் ஒற்றுமையுமிருக்க வேண்டுமென்பதற்காக குறிப்பிட்ட ஒரு இடம் கிப்லாவாக ஏற்படுத்தப்பட்டது. திருகஃபா இறைவனை வணங்குவதற்காக இவ்வுலகில் முதல் முதலாக ஏற்படுத்தப்பட்ட தேவாலயமாக இருப்பதால், அதனை முன்னோக்கித் தொழவேண்டும் என்றேற்படுத்தப் பட்டது. மேலும், அந்த இடத்தில் இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பதற்கு அறிகுறியாக கஃபாவிற்கு வெளியில் உள்ளவர்கள் அதனைச் சுற்றிலும் தொழுவதால் ஏககாலத்தில் சில ஜனக்கள் வடக்கிலும், வேறு சிலர் தெற்கிலும், இன்னும் சிலர் மேற்கிலும், மற்றவர்கள் கிழக்கிலும் முன்னோக்கித் தொழுவதையும் காணலாம். திருகஃபா என்ற ஆலயத்தினுள் தொழுபவர்களும் தாங்கள் நினைத்த திசையை முன்னோக்கித் தொழுவர். அதற்குள் தொழுபவர்கள் குறிப்பிட்ட ஒரு திசையையே நோக்கித் தொழவேண்டிய அவசியமில்லை.

திசை அறியப்படாத வெட்ட வெளியில் அல்லது வனாந்தரங்களில் தொழுபவர்கள் திசையை அறிந்தவர்களிடம் கேட்டு, கஃபாவின் திசையை நோக்கித் தொழ வேண்டும். திசையை அறிந்தவர்கள் கிடைக்காவிடில் தாங்களாகயூகம்செய்து ஏதேனும், ஒரு திசையை முன்னோக்கவேண்டும். அவ்வாறு யூகித்துப் பார்த்துத் தொழுது முடிந்த பிறகு, அந்தத்திசை கஃபாவின் திசையல்ல வென்று வெளியானால், அந்தத் தொழுகையைத் திரும்பத்தொழவேண்டிய அவசியமில்லை.

7. நிய்யத்துச் செய்தல் அதாவது தொழுவதற்கு ஆயத்தமாகுபவர், நான் இன்ன தொழுகையை தொழுகிறேன் என்பதாக நிர்ணயம்செய்யவேண்டும். பர்லான தொழுகையை நிறைவேற்றுபவர் இன்ன நேரத்திற்குரிய பர்லான தொழுகையை நிறைவேற்றுகிறேன் என்பதாக நிர்ணஞ் செய்ய வேண்டும். ஸுன்னத்து நபில், போன்ற தொழுகையை நிறைவேற்றுபவர்கள் அவ்வாறு குறிப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை. அல்லாஹ்வுதஆலாவிற்காகத் தொழுகிறேன் என்று பொதுப்படக் கூறினாலும் போதுமானது. ஆனால், ஸுன்னத்து என்றும், நபில் என்றும் குறிப்பிட்டுத்தொழுவதும் நல்லதுதான். எவ்விதமான நிர்ணயமுமில்லாமல் தொழுதால் தொழுகை கூடாது. மனத்தில் எத்தொழுகையை நிர்ணயஞ் செய்கிறோமோ அந்த நிர்ணயத்தை நாவால் சொல்ல வேண்டும் என்ற கடமை இல்லை. மனத்தில் நிர்ணயஞ் செய்ததை நாவாலுரைப்பது ஸுன்னத்து.

இமாம் ஜமாஅத்தாகத் தொழுபவர்கள் இமாமைப் பின்பற்றித் தொழுவதாக முக்ததீகள் நிர்ணயஞ் செய்ய வேண்டும். ஜனங்களுக்கு இமாமத்துச் செய்வதாக இமாம் நிய்யத்துச்செய்ய வேண்டும் என்ற விதி இல்லை.

தொழுகையின் ருக்னுகள்

தொழுகைக்கு ஆறு ருக்னுகள் இருக்கின்றன. அவைகளை உள்பர்லுகள் என்றுங் கூறுவர். அவை வருமாறு:—

1. தக்பீர் தஹ்ரீமா. மேற் கூறப்பட்டுள்ள ஷர்த்துகளை நிறை வேற்றி நிய்யத்துச் செய்தவுடன் தக்பீர் கட்டிக் கொள்ளவேண்டும். தக்பீர் கட்டுவதன்மூலம் உலக சம்பந்தமான சகல காரியங்களையும் நிறைவேற்ற முடியாமல் அவன்

விலக்கிவைத்து விடுவதால் தொழுகையின் கிரியைகளைத் தவிர மற்றைய கிரியைகளை தன்மீது ஹராமாக்கிக் கொண்டான் என்ற கருத்தில் இந்த தக்பீருக்கு தக்பீரே தஹ்ரீமா என்ற பெயர் வந்தது.

நிய்யத்துச் செய்தவுடன் வேறு அலுவல்களைக் கவனிக்காமல் தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும். நிய்யத்துச்செய்த பிறகு உண்ணல், பருகல், பிறருடன் பேசல் போன்ற காரியங்களைச் செய்தால் மறுபடியும் நிய்யத்துச் செய்யவேண்டும். ஆனல், ஒலுச் செய்தாலும், ஒலுச்செய்து கொண்டு தொழுமிடத்திற்கு வந்தாலும் புதிதாக நிய்யத்துச் செய்ய வேண்டிய அவசியமில்லை. அல்லாஹு அக்பர் என்ற தக்பீருக்குரிய வாக்கியத்தைக் கூறவேண்டும். ஒருவர் ஆல்லாஹு அக்பர் என்றோ, அல்லாஹு ஆக்பர் என்றோ அகரத்தை ஆகாரமாக நீட்டிக் கூறினல் தொழுகை நிறைவேறுது. ஆனல், அல்லாஹ் அஜல்லு, அல்லாஹு அஃலமு என்றோ, ஸுப்ஹானல்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹு என்றோ கூறி தக்பீர் கட்டினலும் தக்பீர் தஹ்ரீமா நிறைவேறி விடும். ஆயினும், மக்றூஹு ஏற்படும். இப்பதங்களை அறபியிற் தான் கூற வேண்டும்.

2. நிலை. பர்லு வாஜிபு ஆகிய தொழுகைகளில் நின்று தொழ வேண்டும். நபில் தொழுகைகளில் நிற்க வேண்டும் என்ற அவசியமில்லை. நிற்பதற்கு இயலாதவர்கள் உட்கார்ந்து தொழலாம். உட்காரு வதற்கும் கூடச் சக்தி இல்லாதவர்கள் படுத்துக்கொண்டும் தொழலாம். ஸுன்னத்துத் தொழுகையில் பஜ்றுடைய ஸுன்னத்தை உட்கார்ந்து தொழக்கூடாது. மற்றைய ஸுன்னத்துகளை உட்கார்ந்தும் தொழலாம். ஆனல், ஒரு நபிலை அல்லது ஸுன்னத்தைத்

தொழ ஆரம்பித்து அது முறிந்து விட்டால், அப்புறம் அதனை நிறைவேற்றுவது வாஜிபாகி விடுவதால், அவ்வாறு முறிந்து போன தொழுகைகளைத் திரும்ப நிறை வேற்றும் போது நின்று தொழவேண்டும்.

3. கிராஅத். திருகுர்ஆனிலுள்ள பெரிய ஆயத்தாவது ஒரு ஆயத்தையாவது, சிறிய ஆயத்தாவது மூன்று ஆயத்துகளையாவது குறைந்த பக்ஷம் ஓதவேண்டும். ஒரு முழு ஸூறத்தை ஓதுவதாலும் ஓதலாம். ஸூறத்துல் பாத்திஹாவை ஓதுவதும், லம்மு ஸூறத்தை ஓதுவதும் பர்லல்ல. இவைகள் வாஜிபுகளைச் சேர்ந்தவை. அதற்குரிய இடத்தில் அவைகளைக் குறித்து விபரிக்கப்படும். திருகுர்ஆனிலிருந்து ஏதேனும், ஓதவேண்டும் என்பது மட்டும்தான் பர்லு. இமாமைப் பின்பற்றித்தொழுபவர்கள் கிராஅத் ஓத வேண்டியதில்லை. இமாம் ஓதுகிற கிராஅத்து இவர்களுக்குப் போதுமானது.

தவிர, பர்லுத் தொழுகையில் இரண்டு ரக்அத்துகளுக்குமட்டிலும் கிராஅத் ஓதவேண்டும்.

4. ருக்கூஉ. தொழுபவரின் இரு உள்ளங்கைகளும் அவருடைய இருமுட்டுக் கால்வரை வருமளவும் குனிய வேண்டும். ஆனால், தலை, முதுகு, பிர்தட்டு ஆகியவைகள் சமமாக இருக்கும்படி குனிதல் மேல். ருக்கூஉ செய்ய வேண்டிய முறை எவ்வாறு என்பதைக் குறித்து மேலே கூறப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஸுன்னத்து, முஸ்தஹப்பான காரியங்களைக் குறித்து அவைகளுக்குரிய இடத்தில் கூறப்படும்.

5. ஸஜ்தாச் செய்தல். நெற்றியைப் பூமியின்மீது வைத்துச் சிரவணக்கம் செய்யவேண்டும். எவ்விதம் சிர

வணக்கம் செய்ய வேண்டுமென்பதைக் குறித்த விபரம் தொழும் விதம் என்ற பாடத்தில் மேலே கூறப்பட்டிருக்கிறது. நெற்றி பூமியில்படவேண்டும். நெற்றிபடாமல் மூக்குமட்டிலும் பூமியில்பட்டால் ஸஜ்தா நிறைவேறுது. பூமியின்மீது அல்லது பூமியின்மீது விரிக்கப்பட்ட பாய், துணி, கம்பளம் போன்றவைகளின்மீது ஸுஜூது செய்யலாம். பள்ளமான இடத்தில் நின்றுகொண்டு ஒரு முழ உயரமுள்ள இடத்தின்மீது ஸுஜூது செய்தால், அந்த ஸுஜூது கூடாது. அரை முழத்திற்கு அதிகப்படாத உயரமாக இருந்தால் குற்றமில்லை. அதற்கும் அதிகமாக இருக்கக்கூடாது. ஜனங்கள் அதிக நெருக்கமாகத் தொழுவதால் நெற்றியை வைக்க இடமில்லாதிருக்கும் பக்ஷத்தில் முந்தின வரிசையில் தொழும் ஜனங்களது முதுகின்மீது நெற்றியைவைத்து ஸுஜூது செய்யலாம். ஆனால், முந்தின வரிசையில் தொழுபவர் இவர் தொழுகும் தொழுகையையே நிறைவேற்ற வேண்டும். வேறு தொழுகையை நிறைவேற்றினாலும் அல்லது தொழுகாமலிருந்தாலும் அவரது முதுகின்மீது ஸுஜூது செய்யக்கூடாது.

ஒரு ஸுஜூதுமட்டும் செய்வதுபோதாது. மற்றொரு ஸுஜூதும் செய்ய வேண்டும். ருக்கூஉ செய்த பிறகு, ஸுஜூது செய்யவேண்டும். ருக்கூஉ செய்வதற்கு முன் ஸுஜூது செய்துவிட்டால், மறுபடியும் ருக்கூஉ செய்து அப்புறம் ஸுஜூதும் செய்ய வேண்டும்.

6. கடைசி இருப்பு. அத்தஹிய்யாத்தில் அப்துஹூ வ றஸூலுஹூ ஓதும் நேரம்வரை இருக்கவேண்டும். தவிர, இந்த ருக்னுகள் யாவற்றையும் விழித்துக்கொண்டிருக்கிற நிலைமையில் நிறைவேற்றவேண்டும். நித்திரை

செய்துகொண்டு நிறைவேற்றினால், அவை நிறைவேறும். மேற்கூறிய ருக்னுகள் ஷர்த்துகள் ஆகியவைகளில் ஏதேனும் ஒன்று தவறி விட்டாலும், தொழுகை நிறைவேறுது. திரும்பத் தொழுகவேண்டும். தன் செய்கையைக் கொண்டு தொழுகையிலிருந்து வெளியேற வேண்டியது பர்லெனச் சிலர் கூறி இருக்கின்றனர்.

தொழுகையின் வாஜிபுகள்

பர்லுக்கும் வாஜிபுக்கும் அவ்வளவு வித்தியாசமில்லை. கிட்டத்தட்ட இரண்டும் சமமேயாகும். வாஜிபுகளை பர்லை அமலி அதாவது கிரியாம்சையில் செய்யும் கடமைகள் என்றே கூறுகின்றனர். ஆனல், ஒருவர் பர்லை நிராகரித்தால் காபிராகி விடுவார். வாஜிபை நிராகரித்தால் காபிராகமாட்டார். இதுதான் இவை இரண்டிலுமுள்ள வித்தியாசம். தொழுகையில் வாஜிபுகள் பதினெட்டு அவை வருமாறு :—

1. கிராஅத் ஓதுவதில் முதலாவதாக ஸிறத்தில் பாத்திஹா ஓதவேண்டும். அதாவது அதிலுள்ள ஆயத்துகளில் ஏதனும் ஒன்று தவறினாலும் ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும்.

2. ஸிறத்தில் பாத்திஹாவிற்குப் பிறகு, லம்மு ஸிறத்து ஓதுதல். பூர்த்தியான ஒரு ஸிறத்தை ஓத வேண்டும் என்ற அவசியமில்லை. ஒரு ஸிறத்தை ஓதுவதானாலும் ஓதலாம். அதில் ஒரு பகுதியை ஓதுவதானாலும் ஓதலாம். ஆனல், சிறு ஆயத்தாக இருந்தால் மூன்று ஆயத்துகள், பெரிய ஆயத்தாக இருந்தால் ஒரு ஆயத்தேனும் ஓதவேண்டும், பர்லான தொழுகையில் இரண்டு

ரக்க அத்துகளுக்கு மட்டிலும் ஓதவேண்டும். அதாவது மூன்று அல்லது நான்கு ரக்க அத்துகளுள்ள தொழுகையில் ஏதேனும் இரண்டு ரக்க அத்துகளில் லம்மு ஸூறத்து ஓத வேண்டும். இரண்டு ரக்க அத்துகளுள்ள பஜ்றுடைய பர்லு அல்லது ஜும்ஆவின் பர்லுகளாயிருந்தால், எல்லா ரக்க அத் துகளிலும் ஓதவேண்டும். பர்லல்லாத வாஜிபு, நபில்போன்ற தொழுகைகளாக இருந்தால், எல்லா ரக்க அத்துகளிலும் ஓதவேண்டும் வாஜிபு.

3. பர்லுத் தொழுகையில் முந்தின இரண்டு ரக்க அத் துகளில் குறிப்பாக கிராஅத் ஓத வேண்டும்.

4. லம்மு ஸூறத்தைப் பார்க்கினும் ஸூறத்துல் பாத்திஹாவை முதலாவதாக ஓதவேண்டும்.

5. ஸுஜூது செய்யும்போது மூக்கையும் பூமியில் படும்படி செல்தல். நெற்றி பூமியில் படுவது பர்லு. மூக்கு பூமியில் படுவது வாஜிபு.

6. ஒவ்வொரு இரண்டு ஸுஜூதுகளுக்கு மிடை யில் வரிசைக் கிரமத்தைப் பேணுதல். அதாவது ஒவ்வொரு ரக்க அத்திலும் இரண்டாவது ஸுஜூதாவைச்செய்து முடித்து விட்டு அப்புறம் அடுத்த ரக்க அத்தைத் தொழவேண்டும் அல்லது வேறு கிரியைகளைப்புரியவேண்டும்.

7. ஒவ்வொரு ருக்னுகளையும் சாவதானமாகச் செய்தல்.

8. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ரக்க அத்து களுள்ள தொழுகைகளாயிருந்தால், முதலாவது குஊது (இருப்பு) வாஜிபு.

9. அதில் அத்தஹிய்யாத்தை அப்துஹு வ றஸூலுஹு வரை ஓதுதல்.

10. கடைசி இருப்பில் அப்துஹு வ றஸூலுஹு வரை அத்தஹிய்யாத்து ஓதுதல்.

11. முதலாவது இருப்பில் அப்துஹு வ றஸூலுஹு வரை ஓதி முடித்துவிட்டால் தாமதமின்றி உடனே நிலைக்கு அதாவது மூன்றுவது ரக்கஅத்தை ஆரம்பித்து விடவேண்டும்.

12. அஸ்ஸலாமுஅலைக்கும் என்றபதத்தைக்கூறுதல்.

13. வித்று தொழுகையில் குனூத்து ஓதுதல்.

14. இரு பெருநாள் தொழுகைகளிலும் அதிகப்படியாகக் கூறுகிற தக்பீருகள்.

15. ஒவ்வொரு தொழுகையின் ஆரம்பத்திலும் தக்பீருக்குரிய பதத்தைக் கூறுதல் அதாவது அல்லாஹ் வுடன் அக்பர் என்ற பதத்தைச் சேர்த்துக் கூறல்.

16. பெருநாள் தொழுகையில் இரண்டாவது ரக்க அத்தில் ருக்கூஉக்குப் போகும்போது தக்பீர் சொல்லுதல்.

17. மகுரிபு இஷா ஆகிய தொழுகைகளில் முதல் இரண்டு ரக்கஅத்துகளிலும் பஜ்று, ஜும்ஆ பெருநாள் தொழுகைகள், தராவீஹ், றமலான் மாதத்தில் வித்று தொழுகைகளில் இமாம் கிராஅத்தை சப்தமிட்டு ஓதுதல்.

18. லுஹர், அஸர், மகுரிபு, இஷா ஆகியவைகளில் பிந்திய இரண்டு ரக்கஅத்துகள் ஆகியவைகளில் இமாம் சப்தமில்லாமல் கிராஅத் ஓதுதல்.

தொழுகையின் ஸுன்னத்துகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து வந்த காரியங்களுக்கு ஸுன்னத்து என்று பெயர். இவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டால் தொழுகை நிறைவேறிவிடும். ஆனால், மக்றூஹ். திரும்பத் தொழுகவேண்டும் என்ற அவசியமுமில்லை, ஸஜ்தாஸஹ்வு செய்யவேண்டுமென்ற அவசியமுமில்லை. இவை வருமாறு :—

1. தக்பீர் தஹ்ரீமா கட்டும்போது ஆடவர்கள் காதுக்கு நேராகக் கையை உயர்த்துதல்.

2. அடிமைப் பெண்கள் காதுக்கு நேராக உயர்த்துதல்.

3. அடிமையல்லாத பெண்கள் தக்பீர் கட்டும்போது புஜத்திற்கு நேராக உயர்த்துதல்.

4. தக்பீர் கட்டும்போது விரல்களை ஒன்றுடன் ஒன்று சேரும்படி இணைக்காமலும் அதிகமாக விரிக்காமலும் நடுத்தரமான முறையில் விரல்களை விரித்து வைத்திருத்தல்.

5. இமாமைப் பின்தொடர்ந்து முக்ததீகளும் தக்பீர் கட்டுதல்.

6. ஆடவர்கள் தொப்புளுக்குக் கீழில் இடக்கைக்கு மேலாக வலக்கையை வைத்தல். தக்பீர் கட்டும் முறையைக் குறித்து தொழும் விதம் என்ற பாடத்தில் கூறப்பட்டிருக்கிறது. அங்கு பார்த்துத் தெளிந்து கொள்ளவும்.

7. ஸ்திரீகள் தங்கள் நெஞ்சின்மீது கையை வைத்துத் தக்பீர் கட்டுதல்.

8. தனு ஓதுதல். தனுவை எவ்வாறு ஓதவேண்டும் என்பதைக் குறித்த விபரம் மேலே கூறப்பட்டிருக்கிறது.

9. கிராஅத் ஓதுவதற்காக அஊதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்ற வாக்கியத்தைக் கூறல்.

10. ஒவ்வொரு ரக்க அத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவிற்கு முன்னர் பிஸ்மில்லா ஓதுதல்.

11. அல்ஹம்து ஸூறத்து ஓதி முடிந்ததும் ஆமீன் கூறல்.

12. ருக்கூஉவிலிருந்து சிறு நிலைக்கு வந்த பிறகு அல்லாஹும்ம றப்பனு லக்கல் ஹம்து என்று கூறல். இதனை எவ்வெவ் விதமாகக் கூறலாம் என்ற விபரம் மேலே கூறப்பட்டிருக்கிறது.

13. இதனை மெதுவாக ஓதுதல்,

14. தக்பீர்களையும் தஸ்மீஇயும் இமாம் இரைந்து சொல்லல்.

15. நிலையிலிருக்கும்போது நான்கு விரல் அகலத்திற்குக் கால்களை அகற்றிவைத்தல்.

16. பஜ்ருக்கும் லுஹருக்கும் திவாலுல் முபஸ்ஸலையும், அஸருக்கும் இஷாவுக்கும் ஒளஸாத் முபஸ்ஸலையும், மகிரிபுக்கு கிஸார் முபஸ்ஸலையும் இமாம் ஓதுதல்.

17. பஜ்றுத் தொழுகையில் முந்தின ரக்க அத்தில் கிரஅத்தை அதிகமாக ஓதுதல்.

18. ருக்கூஉவின் தக்பீர்.

19. மூன்று முறை ருக்கூஉவின் தஸ்பீஹை ஓதுதல்.

20. ருக்கூவில் இரண்டு கைகளாலும் இரண்டு முட்டுக்கால்களையும் பிடித்தல்.

21. முட்டுக் கால்களைப் பிடித்திருக்கும்போது விரல்களை விரித்திருத்தல். ஸ்திரீகள் விரல்களை விரிக்கக்கூடாது.

22. ருக்கூவுவில் கெண்டைக்கால்களை வளைக்காமல் நேராக வைத்தல்.

23. ருக்கூவில் முதுகை நன்கு விரித்து வைத்தல்.

24. ருக்கூவில் தலையை கவிழ்த்து கொண்டிருக்காமல் நேராக வைத்திருத்தல்.

25. ருக்கூவிலிருந்து நிமிருதல்.

26. ருக்கூவிலிருந்து நிமிர்ந்த பிறகு, சாவதானமாக நிற்குதல்.

27. ஸுஜூதுக்குச் செல்லும்போது இரண்டு முட்டுக்கால்களையும் முதலில் பூமியில் வைத்தல். அப்புறம் இரண்டு கைகளையும், பின்னர் முகத்தையும் பூமியில் வைத்தல்.

28. ஸுஜூதிலிருந்து எழுந்திருக்கும்போது முதலாவதாக முகத்தையும் அப்புறம் கைகளையும் பின்னர் முட்டுக்கால்களையும் உயர்த்துதல்.

29. ஸுஜூதின் தக்பீர்.

30. ஸுஜூதிலிருந்து எழும்பொழுது கூறும் தக்பீர்.

31. இரண்டு முன் கைகளுக்கு மிடையில் ஸுஜூது செய்தல்.

32. ஸுஜூதுடைய தஸ்பீஹ் மூன்று முறை கூறல்.

33. ஸுஜூதில் ஆடவர்கள் தங்கள் துடைகளை வயிற்றுடன் சேராமல் விலக்கி வைப்பதும், முழங்கைகளை விலாவுடன் சேர்க்காமல் விலக்கி வைத்தலும், பூமியில் கைகளைப் படுக்க வைக்காமலிருத்தலும்.

34. ஸ்திரீகள் தங்கள் துடைகளை வயிற்றுடன் சேர்த்து வைத்தலும், கைகளை பூமியில் படுக்க வைத்து விலாவுடன் சேர்த்தலும்.

35. ஸுஜூதுக்குப் பிறகு நிற்குதல்.

36. இரண்டு ஸஜ்தாக்களுக்குக் கிடையில் உட்காருதல்.

37. இரண்டு ஸஜ்தாக்களுக் கிடையில் இருக்கும் போது அத்தஹிய்யாத்து ஓதும்போது இருப்பதுபோல் இருந்து இரண்டு கைகளையும் இரு துடைகளின் மீது வைத்தல்.

38. இருப்பில் ஆடவர்கள் இடது காலைப்படுக்க வைத்து வலக்காலை நட்டு வைத்தல்,

39. ஸ்திரீகள் தங்கள் பித்தட்டுகளைப் பூமியில் வைத்து துடையுடன் துடையைச் சேர்த்து வலப்புறத்தில் அவளது கால்களை வைத்தல்.

40. அத்தஹிய்யாத்தில் ஷஹாதத்துக் கலிமா ஓதும் போது வலக்கை கலிமா விரலால் சமிக்ஞை செய்தல்.

41. லாஇலாஹ என்னும் வார்த்தையில் விரலை உயர்த்தி இல்லல்லாஹ் என்னும் வார்த்தையில் விரலை விட்டு விடல்.

42. முந்தின இரண்டு ரக்கஅத்துகளுக்குப் பின்னு ளுள்ள ரக்கஅத்துகளில் பாளுத் தொழுகைகளில் ஸிறத் தல் பாத்திஹாவை ஓதுதல்.

43. கடைசி இருப்பில் தஷஹ்ஹுதுக்குப் பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுதல்.

44. மேற் கண்ட ஸலவாத்துக்குப் பிறகு குர்ஆன் ஷரீபுக்கும் ஸுன்னத்துக்கும் இணக்கமான துஆ ஓதுதல். ஆனல், தொழுகையில் மனிதரின் பேச்சுகளுக்கு நிகரான வைகளை துஆவாக ஓதக்கூடாது.

45. ஸலாமைக்கொண்டு வலப்புறமும் இடப்புறமும் திரும்புதல்.

46. இமாம் ஸலாம் கொடுக்கும்போது அவரைப் பின்பற்றித் தொழுகும் முக்ததீகளையும், ஜின்களையும் மலக்குகளையும் நிய்யத்துச் செய்தல்.

47. இமாமுடன் சேர்ந்து தொழுபவர் தனக்கு எந் தப்பக்கத்தில் இமாம் இருக்கிருரோ அந்தப் பக்கம் ஸலாம் சொல்லும்போது இமாமையும், தன்னுடன் சேர்ந்து தொழுபவர்களையும் ஸாலிஹான ஜின்களையும் மலக்குகளை யும் நிய்யத்துச் செய்தல். இமாமுக்கு நேராக இருந்தால் இரண்டு ஸலாமிலும் இமாமை நிய்யத்துச் செய்தல். தனித் துத் தொழுபவர் ஸலாம் கொடுக்கும்போது மலக்குகளை மட்டிலும் நிய்யத்துச் செய்தல்.

48. முதல் முறை ஸலாம் சொல்வதைப் பார்க்கினும் இரண்டாவது முறை ஸலாம் சொல்லும்போது சப்தத் தைத் தாழ்த்துதல்.

49. இமாமுடைய ஸலாமுடன் சேர்ந்து முக்ததீயும் ஸலாம் சொல்லல்.

50. வலப்புறம் முதலாவதாக ஸலாம் சொல்லல்.

51. இமாம் ஸலாம் கொடுத்து முடிப்பதை மஸ்பூக் கானவன் அதாவது இடையில் வந்து சேர்ந்தவன் எதிர் பார்த்தல்.

தொழுகையின் அதபுகள்

1. தக்பீர் தஹ்ரீமாகட்டுவதற்காகத் தனது சட் டைக்கையை நீக்கி இரண்டு முன் கைகளையும் துணியை விட்டு வெளிப்படுத்துதல்,

2. நிலையிலிருக்கும்போது தொழுபவர் ஆணையாயி னும் பெண்ணையாயினும் ஸுஜூது செய்யும் தானத்தைப் பார்த்தல்,

3. ருக்கூஉ செய்யும்போது தன்னுடைய இரு கால் பாதங்களையும் பார்த்தல்,

4. ஸுஜூது செய்யும்போது தனது மூக்குத்தண் டினைப்பார்த்தல்,

5. இருப்பில் இருக்கும்போது தனது மடியைப் பார்த்தல்,

6. ஸலாம் கொடுக்கும்போது தனது தோள் புஜங் களைப் பார்த்தல்,

7. தும்மல் வந்தால் இயன்றவரை அதனைத் தடுத்தல்,

8. கொட்டாவி வந்தால் இயன்றவரை அ த னை அடக்குதல்,

9. இகாமத்துச் சொல்கையில் ஹய அலல் பலாஹ் என்று கூறும்போது ஜனங்கள் தொழுகைக்காக எழுந்திருத்தல்,

10. கதுகாமத்திஸ்ஸலாத் என்று கூறியதிலிருந்து இமாம் தொழுகையை ஆரம்பித்துவிடல், இக்காமத்துச் சொல்லி முடியும்வரை இமாம் தொழுகையை ஆரம்பிக்காமலிருந்தாலும் குற்றமில்லை.

தொழுகையின் மக்றூஹ்கள்

தொழுகையிலுள்ள வாஜிபுகளையோ ஸுன்னத்துகளையோ விட்டுவிடுவது மக்றூஹாகும். மேலும், மக்றூஹ் தஹ்ரீமியுடன் தொழுகையை நிறைவேற்றினால் தொழுகை நிறைவேறி விடுமாயினும் அதனைத் திரும்பத் தொழுதுவிட வேண்டும். வாஜிபான காரியத்தை விட்டு விட்டுத் தொழுதால் திரும்பத் தொழுவது வாஜிபு. அதல்லாத காரியங்களை விட்டுவிட்டால் திரும்பத் தொழுவது முஸ்தஹப்பு.

தொழுகையில் ஏறக்குறைய எழுபத்தேழு மக்றூஹ்கள் இருப்பதாக மராக்கில் பலாஹ் போன்ற கிரந்தங்களில் கூறி இருக்கிறார்கள். வேறு சில கிரந்தங்களில் இதற்கதிகமாகவும், குறைவாகவும் கூட எழுதப்பட்டிருக்கிறது. என்றாலும், மக்றூஹ்கள் யாவையும் ஒன்றுகூட விடாமல் எழுதி முடித்துவிட வேண்டும் என்பது அந்த நூலாசிரியர்களது கருத்தல்ல. அவர்கள் தங்கள் நூல்களில் கூறி இருக்கிறவைகள் இத்தனைதான் என்பதையே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதலால், அக்கிரந்தங்களில் கூறப்பட்டுள்ள எண்ணிக்கைகள் வித்தியாசப்பட்டிருப்பதால் அவர்களுள் அபிப்பிராய பேதங்கள் பலமாக இருப்பதாகக் கருதிவிட

வேண்டாம். இச்சிறிய கிரந்தமும் எல்லா மக்றாஹுகளையும் விபரிப்பதற்கு இடந்தரவில்லையாதலால் சில முக்கிய விஷயங்களையே இங்கு குறிப்பிடுகிறோம்.

1. தொழுகையிலுள்ள ஒரு செய்கையில் தொழுகையல்லாத ஒன்று அல்லது இரண்டு செய்கைகளைச் செய்தல்.

2. நெற்றி மூக்கு முதலியவைகளிலொட்டிய மண்ணைத் துடைத்தல்,

3. தலையில் ஒன்றுந் தரிக்காமல் அதனை திறந்த வண்ணம் தொழுதல்.

4. தலைமயிர் வைத்திருப்பவர்கள் உச்சிக்கொண்டை போட்டுக்கொள்ளல்.

5. ஸுஜூதாச்செய்யும் இடத்தில் இருக்கும் கற்களையோ மண்ணையோ துடைத்தல். ஆனால், ஸுஜூது செய்வதற்கு இயலாதவாறு அவ்வளவு அதிகமாக இருந்தால் அதனை மட்டிலும் துடைத்துக்கொள்வது குற்றமல்ல.

6. விரல்களை நெட்டி முறித்தல்,

7. ஸுஜூதில் முழங்கைகளைப் படுக்க வைத்தல்,

8. அலைசியமாக அசைவதும், அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தலும்.

9. தொழுமிடத்திற்கு நேர் எதிரில் அல்லது மேலில், அல்லது இரு மருங்குகளில் உயிருள்ள ஜந்துக்களின் உருவப்படங்களை வைத்தல்,

17. தொழும்போது கண்களை மூடிக்கொள்ளல்

18. கொட்டாவி விடும்போது வாயை மூடாதிருத்தல். இயன்றவரை கொட்டாவி விடாமலிருக்க முயல வேண்டும்.

19. மோப்பம் பிடித்தல்.

20. பிறர் ஸலாம் சொன்னால் அதற்கு சமிக்ஞையின் மூலம் பதில் கூறுதல்,

21. சப்தமின்றி புன்சிரிப்புச் செய்தல்,

22. முதல் ரக்கஅத்தில் ஓதிய ஸூரூவிற்குமேலி லுள்ள ஸூரூவை இரண்டாவது ரக்கஅத்தில் ஓதுதல்,

23. திர்ஹம் அளவிற்குக் குறைவாக அசங்கிதம்பட்டிருப்பதாகத் தெரிந்து கொண்டு அதனை அகற்றுமல் தொழுதல்,

24. மனிதருக்கு எதிரில் தொழுதல்,

25. இமாம் ஒரு முழ உயரத்திலும், முக்கதிகள் பள்ளத்திலும் அகாரணமாகத் தொழுதல்,

26. நாய் குந்துவதுபோல் குந்தி இருத்தல்,

27. அங்க வஸ்திரத்தைப் போர்த்திக் கொள்ளாமல் தலைமீது அல்லது தோளின்மீது போட்டுத் தொங்கவிடல்,

28. இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நிற்குதல்,

29. சோம்பல் முறித்தல்,

30. முந்தின ரக்கஅத்தில் சின்ன ஸூரூவையும் பிந்தின ரக்கஅத்தில் பெரிய ஸூரூவையும் ஓதுதல்.

தொழுகையின் முறிச்சல்கள்

தொழுகையை முறிக்கும் காரியங்கள் வருமாறு :—

1. தொழும்போது வேண்டுமென்றே அல்லது ஞாபகப் பிசகாகவோ தின்னுதல், குடித்தல், பேசுதல். ஆனால், பற்களுக்கிடையில் சிக்கியுள்ள பதார்த்தம் ஒரு கடலைப் பிரமாணத்திற்கு அதிகமில்லாமலிருந்து, அதனை விழுங்கிவிட்டால் குற்றமில்லை, அதாவது தொழுகை முறியாது.

2. அனுவசியமாகக் கனைத்தல், தும்முதல், இருமல் ஆகியவைகளில் இரண்டு எழுத்துக்களின் சப்த முண்டானால் தொழுகை முறிந்துவிடும். ஆனால், அனுவசியமாக இல்லாமல் நிர்ப்பந்தமாக தும்மல் அல்லது இருமல் அல்லது கனைத்தல் ஏற்பட்டு இரு எழுத்துக்களின் சப்த முண்டானால் முறியாது.

3. தொழுகையில் நிறைவேற்ற வேண்டிய செய்கையல்லாத காரியங்களை அதாவது தொழுகைக்குப் புறம்பான காரியங்களை அதிகமாகச் செய்தல். வெளியிலிருந்து பார்க்கிற ஒருவர் இவரைத் தொழுது கொண்டிருப்பதாகக் கருத வேண்டும். அவ்வாறு கருதுவதற்கிடமில்லாமல் தொழுகைக்குப் புறம்பான காரியங்கள் செய்யப்படுமாயின், அவைகளை அதிகமான காரியங்களாக மதிக்கவேண்டும்.

4. வேறொருவர் தும்மிய சப்தத்தைக் கேட்டு யற்ஹமுகல்லாஹ் என்று ஜவாபு சொல்லுதல், யற்ஹமுகல்லாஹ் என்பதற்கு உனக்கு அல்லாஹ்த் தஆலா கிருபை செய்வானாக என்பது பொருள்.

5. தன்னுடைய இமாமல்லாத வேறொருவர் பிசகாக ஓதுவதைத் திருத்திச் சொல்லிக்கொடுத்தல்,

6. தன்னைப் பின்பற்றித் தொழுபவர்களைத் தவிர்த்து வேறொருவர் திருத்திச் சொல்லிக்கொடுப்பதைக் கேட்டு ஓதுதல்,

7. திருகுர்ஆனைப் பார்த்து ஓதுதல்,

8. திருகுர்ஆனை அர்த்தம் பிசகும்படி தப்பாக ஓதுதல்,

9. வெடி சிரிப்பு அதாவது பிறருக்குக் கேட்கும்படி சிரித்தல், இதனால் தொழுகையும் ஒலுவும் முறிந்துவிடும். தனக்குமட்டிலும் கேட்கக்கூடியவாறு சப்தமிட்டுச் சிரித்தலால் தொழுகைமட்டிலும் முறியும். இது புன்சிறிப்புக்கும் வெடிசிறிப்பிற்கும் மத்தியிலுள்ளது.

10. தக்பீரை இரைந்து கூறும்படி ஒருவர் கூற, அதனைக் கேட்டு இரைந்து கூறல்,

11. உலகின் தின்கை நினைத்துச் சப்தமிட்டழுதல்,

12. ஸலாமுக்குப் பதில் கூறல்,

13. சந்தோஷம், துக்கம், ஆச்சரியகரமான சமாச்சாரங்களைக் கேட்டு அதற்கு மறு மொழியாக, இன்னலில்லாஹி, அல்ஹம்துலில்லாஹி, ஸுப்ஹானல்லாஹ் போன்ற வாக்கியங்களைக் கூறல்,

14. ஸுஜூது செய்யும்போது நெற்றி பூமியில் படாமல் தொப்பி அல்லது தலைப்பாகை தடுத்துவிடல்,

15. இமாமுக்கு முந்தி நிற்குதல்,

16. அகாரணமாகத் தனது நெஞ்சைக் கிப்லாவை விட்டுத்திருப்புதல்,

17. மனிதர் பேச்சுக்களுக்கு ஒப்பான துஆக்களைத் தொழுகையில் கூறுதல்,

18. ஜலம் அகப்படாத காரணத்தால் தயம்மும் செய்தவர் ஜலத்தைப் பெற்றுக் கொள்ளுதல்,

19. தொழுதுகொண்டிருக்கும்போதே சூரியன் உதயமாகிவிட்ட தென்பதை அறிவிக்கிற சூரிய கிரணங்கள் வீசுவதைப் பார்த்தல்,

20. தொழுது கொண்டிருக்கும்போதே போதையாகுதல் அல்லது பயித்தியம்பிடித்தல், அல்லது சித்த சுவாதினமில்லாமலாகுதல், ஒலு முறிந்து விடல்,

21. பர்லான காரியங்களைச் செய்யத் தவறுதல்,

நோயாளிகள் தொழுதல்

ஒருவர் நோய் வாய்ப்பட்டு, நின்று தொழ அவரால் இயலவில்லையானால், அவர் உட்கார்ந்து தொழலாம். அதாவது உட்கார்ந்து கொண்டே ருக்கூஉ செய்வதற்கு தலையைச் சாய்த்துக் குனியவேண்டும். நெற்றி பூமியில் படும்படி அவ்வளவு அதிகமாகக் குனிய வேண்டியதில்லை, ஸுஜூது செய்வது வழக்கமாக ஸுஜூது செய்வதைப் போல் செய்ய வேண்டும்.

உட்கார்ந்து கொண்டு ருக்கூஉ ஸுஜூது செய்ய முடியாவிடில் ருக்கூஉவிற்குக் கொஞ்சமாகவும், ஸுஜூதிற்கு அதிகமாகவும் தலையைக் கவிழ்த்தி சமிக்ஞையின் மூலம் ருக்கூஉ, ஸுஜூதுகளை நிறைவேற்ற வேண்டும்.

உட்காருவதற்கே இயலவில்லையானால், படுத்துக் கொண்டு தொழ வேண்டும். அதாவது கிப்லாவிற்கு நேராகக் கால்களை நீட்டி கிப்லாவை நோக்கிப் படுத்துக் கொள்ள வேண்டும். அல்லது வேறு திசைகளில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டால் கிப்லாவை பார்க்க முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும். அப்புறம் ருக்கூஉ ஸுஜூதுகளைச் சமிக்ஞை செய்து தொழ வேண்டும்.

இதற்கும் இயல வில்லையானால் தொழுகையை பிற்படுத்திக் கொள்ளலாம். அதாவது ஐந்து நேரத்துத் தொழுகைகளைப் பிற்படுத்திக் கொண்டு அப்புறம் கலாச் செய்யலாம். அதற்கு மேலும் அதிகமாக இயலாதிருப்பின் அவர் அவைகளை கலாச் செய்ய வேண்டியதில்லை. அதாவது அக்காலங்களில் அவர் உணர்வற்றவராக இருக்கவேண்டும்.

பிரயாணிகள் தொழுகை

பிரயாண எண்ணத்துடன் தன் ஊரை விட்டுப் புறப்பட்டு மூன்று மன்ஜில்களுக்குக் குறையாத தூரத்திலுள்ள இடங்களுக்குச் சென்றால், தன் ஊரின் எல்லையைக் கடந்ததிலிருந்து பிரயாணிகளுக்குரிய தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பிரயாணி தான் நாடிச் சென்ற ஊரில் பதினைந்து நாட்களுக்குக் குறைவான காலம் தங்கி இருக்க எண்ணி இருந்தால் பிரயாணிகளது தொழுகையைத் தான் தொழ வேண்டும். நாளைப் போகலாம் அல்லது மறு தினம் போகலாம் என்று நினைத்துக் கொண்டே பதினைந்து நாட்களுக்கு அதிகமாக அவ்வூரில் தங்கி இருந்தாலும் பிரயாணி தான். பிரயாணிகளுக்குரிய தொழுகையையே நிறைவேற்ற வேண்டும்.

பிரயாணிகள் பலர் கூடி இமாம் ஜமா அத்தாகத் தொழுதால் பிரயாணிகளுக் குரிய தொழுகையையே நிறை வேற்ற வேண்டும். பிரயாணிகளும் உள்ளூர்காரர்களும் சேர்ந்து இமாம் ஜமாஅத்தாகத் தொழுக நேரிட்டு, இமாம் உள்ளூர்க்காரராக அதாவது பிரயாணி யல்லாத வராக இருந்தால் அவரைப் பின்பற்றித் தொழுகும் பிரயாணிகள் மற்றவர்களைப் போல் தொழுகையைப் பூர்த்தி யாகத் தொழவேண்டும். இமாமாக நிற்பவர் பிரயாணியாக இருந்தால் பிரயாணிகளுக் குரிய தொழுகையை நிறை வேற்றி விடவேண்டும், அவரைப் பின்பற்றிய உள்ளூர்க் காரர்களும் பிரயாணி அல்லாதவர்களும் பாக்கியுள்ள தொழுகைகளை கிராஅத் ஓதாமல் நிறைவேற்ற வேண்டும்.

பிரயாணியாக இருக்கும்போது லுஹர், அஸர், இஷா ஆகிய மூன்று நேரத்து பர்லான தொழுகைகளை இரண்டு ரக்க அத்துகளாகத் தொழ வேண்டும். பஜ்ரையும், மகுரி பையும் பூர்த்தியாகத் தொழவேண்டும், இப்படித் தொழு வதற்கு கஸர்த் தொழுகை என்றும், பிரயாணிகள் தொழுகை என்றும் பெயர்.

பிரயாணியாக இருக்கும் போது பர்லமட்டிலும் சுருக்கித் தொழுது விட்டு வாஜிபு போன்ற தொழுகை களையும் நிறைவேற்ற வேண்டும். ஸுன்னத்துத் தொழுகைகளை இஷ்டம்போல் நிறைவேற்றலாம். மூன்று மன்ஜில் தூரமென்பதற்கு மூன்று நாள் பிரயாணம் என்பது கருத்து. அதாவது வருஷத்தில் பகல் இரவுகள் அதிகமாகவும் குறைவாகவும் மாறிமாறி வந்து கொண் டிருக்கின்றன. இதில் குறைந்த காலமாகவுள்ள பகல் களில் மூன்று பகல் காலத்தில் ஒரு மனிதன் நடுத்தரமாக

நடந்து, நடைக்கு வேண்டிய வசதிகளுடனும் சௌகரியங்களுடனும் சென்றால் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரத்திற்கப்பால் சென்றால் கஸர்த் தொழ வேண்டும்.

ஸஜ்தா ஸஹ்வு

தொழுகையிலுள்ள வாஜிபுகளை ஞாபகப் பிசகாக விட்டு விட்டாலும், பர்லு அல்லது வாஜிபை திரும்பச் செய்தாலும், அவைகளைத் தாமதப்படுத்தினாலும் ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும்.

மேற்கண்டவாறு ஸஜ்தா ஸஹ்வு செய்யக் கடமைப் பட்டவர் பிந்தின இருப்பில் அத்தஹிய்யாத்தை அப்துஹு வறஸூலுஹு வரை ஓதி முடித்துவிட்டு வலப்புறம் மட்டிலும் திரும்பி ஸலாம் சொல்லி இரு முறை ஸஜ்தா செய்ய வேண்டும். அப்புறம் இருப்பிலிருந்து வழக்கம் போல் அத்தஹிய்யாத்தை ஆரம்பத்திலிருந்து ஓதி, ஸலவாத்து, துஆ ஆகியவைகளை ஓதி இருபுறங்களிலும் ஸலாம் கொடுக்க வேண்டும்.

இமாம் ஜமா அத்தாகத் தொழுதால் இமாமின் மீது ஸஜ்தா ஸஹ்வு ஏற்பட்டு அவர் அதனை நிறை வேற்றினால் அவரைப் பின்றொடர்ந்து தொழுகிற யாவரும் ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும். இமாமைப் பின்பற்றித் தொழுகிற ஒருவர் ஒரு வாஜிபை மறதியாக விட்டு விட்டு அதனால் அவர்மீது ஸஜ்தா ஸஹ்வு இருந்தால் இமாமத்துடன் சேர்ந்து தொழுவதால் அவர்மட்டிலும் அதனை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

இமாமைப் பின்றொடர்ந்த மஸ்பூக்கானவர் அதாவது இமாம் ஸலாம் கொடுத்த பின் எழுந்து நின்று தனக்குத்

தவறிப்போன ஒன்றிரண்டு ரக்க அத்துகளை நிறைவேற்ற வேண்டியவர், இமாம் ஸஜ்தா ஸஹ்வு செய்தால் அவருடன் சேர்ந்து ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும்.

ஸஜ்தா ஸஹ்வு செய்பவர் ஒரு பக்கம் ஸலாம் கொடுக்க மறந்து விட்டு ஸஜ்தா ஸஹ்வைச் செய்தால் மக்றூஹ் தன்ஜீஹியுடன் நிறைவேறிவிடும். பல வாஜிபுகள் தவறிப்போயிருந்தாலும் அவை ஒவ்வொன்றிற்கும் பல முறை ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டியதில்லை. ஒரு முறை ஸஜ்தா ஸஹ்வு செய்வதே போதுமானது.

ஸஜ்தா திலாவத்

திருகுர்ஆனில் பதினொன்று ஆயத்துகளிருக்கின்றன. அவ்வாயத்துகளில் ஒன்றை ஓதினாலும் ஸஜ்தா திலாவத் செய்யவேண்டும். "ஸஜ்தா திலாவத்" என்பதற்கு ஓதிய தால் விதியான ஸஜ்தா என்பது பொருள். இவ்வாயத்துகளைத் தொழுகையில் ஓதினாலும், அதற்கு வெளியில் ஓதினாலும் ஸுஜூது செய்யவேண்டும். தொழுகைக்கு வெளியில் ஓதினாலும் உடனே அவசரமாக ஸுஜூது செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. ஆயின், அதனைத் தாமதம் செய்வது மக்றூஹ் தன்ஜீஹ்

மேற் கண்ட ஆயத்தை ஓதுபவரும், அதனைச் செவியேற்பவரும் ஸஜ்தாச் செய்வது வாஜிபு. திருகுர்ஆனை பார்ஸீ பாஷையில் ஓதினாலும் கூட, அதனை ஓதியவரும் ஓதக்கேட்போரும் ஸுஜூது செய்வது வாஜிபு. சிலர் ஸஜ்தா திலாவத் செய்ய சங்கடப்பட்டுக்கொண்டு திருகுர்ஆனை ஓதிவரும்போது அந்த ஆயத்தை ஓதி அதற்குரிய வார்த்தையை மட்டிலும் உச்சரிக்காமல், அவ்வார்த்தை

யின் அக்ஷரங்களை ஒவ்வொன்றுகக் கூறுகின்றனர். அவ்வாறு கூறினாலும் ஸஜ்தா திலாவத் செய்வது கடமையாகி விடுகிறது (வாஜிபு).

மாதாந்த ருது, பிரசவ ருது உள்ள ஸ்திரீகள்மீது ஸஜ்தா திலாவத் வாஜிபில்லை. ஆனால், அவர்கள் ஓதுவதை மற்றவர்கள் செவியேற்றால், செவியேற்றவர்கள் ஸஜ்தா தீலாவத் செய்யவேண்டும். ஸஜ்தாவுடைய ஆயத்தை எழுதுவதாலோ அல்லது அதனைப் பார்ப்பதாலோ ஸஜ்தா திலாவத் செய்வது கடமையாகாது.

இமாம் ஜமாஅத்து

நன்மைப்பயன் என்ற விஷயத்தில் பாங்கு சொல்வதைப்பார்க்கினும் இமாமத்துச்செய்வதுமேல். பலர் ஒன்றுகச் சேர்ந்து, ஒருவரை இமாமாக நிறுத்தி மற்றவர்கள் அவரைப்பின்பற்றித் தொழுவதற்கு இமாம் ஜமாஅத் என்று பெயர். இப்படித்தொழுவது ஸுன்னத்து முஅக்கதா. ஆனால், ஆடவர்களாகவும் அடிமையல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். தனித்துத் தொழுவதைப் பார்க்கினும் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது இருபத்தைந்து மடக்கு மேல் என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதாலுண்டாகும் நன்மைகள் அனந்த முண்டு. முஸ்லிம்களுக்குள் சகோதரத்துவத்தை வளர்க்கவும், அந்நியோன்யத்தையுண்டு பண்ணவும், தெரியாத விஷயங்களைம் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் இதனால் அநேக வசதிகளிருக்கின்றன. இதனால்தான் இது வாஜிபு என்றுங் கூடச்சட்டமியற்றப்பட்டிருக்கிறது.

இமாம் ஜமாஅத்திற்கு குறைந்தது இரண்டுபேர் இருந்தாலும்போதுமானது. இருவரில் ஒருவர் இமாமாக நின்று மற்றொருவர் அவரைப் பின்பற்றித்தொழுதாலும் இமாம் ஜமாஅத்திற்குரிய புண்ணிய பயனை அடைவர்.

இமாமாக நிற்பவருக்கு இருக்க வேண்டிய அம்சங்கள்

1. இஸ்லாமாக இருக்க வேண்டும்.

2. பாலிகாக இருக்க வேண்டும்; அதாவது யுக்த வயதை யடைந்திருக்க வேண்டும்.

3. சித்த சுவாதீனமுள்ளவராக இருக்கவேண்டும்.

4. ஆடவராக இருக்க வேண்டும்.

5. தொழுகையை நிறைவேற்ற வேண்டிய அளவிற்கு திருகுர்ஆனில் மனஞ்செய்தவராகவும், எழுத்துப்பிழை இல்லாமல் திருத்தமாக ஓதும் திறமையுள்ளவராகவும்வேண்டும்.

6. வயிற்றோட்டம் போகுதல், சதா அபான வாய்வு பிரிந்து கொண்டிருத்தல், சொட்டு நீர் சொட்டிக் கொண்டிருத்தல் போன்ற நோய்களில்லாதிருக்க வேண்டும்.

மேற் கண்ட அம்சங்களுள்ள பலர் இருந்தால், இவர்களில் அதிகம் தெரிந்த மார்க்க அறிஞர் மிகவும் ஏற்றமானவர். இவ்விஷயத்தில் சம அந்தஸ்துள்ள பலர் இருந்தால் திருகுர்ஆனை மிக அழகாக நன்கு ஓதத் தெரிந்தவர் மிக அருகதையுள்ளவர். இதிலும் சமமாக உள்ள பலர் இருந்தால் இவர்களில் அதிகம் பேணுதலுள்ளவர் நல்லது. இதிலும் பலர் சமமாக இருந்தால் அவர்களுள் முதிர்ந்த வயதுள்ளவர் மிகவும் ஏற்றமும் யோக்கியமுமுள்ளவராவார்.

இமாமைப் பின்பற்றுவதற்குரிய ஷர்த்துகள்.

1. இமாமைப் பின்பற்றித் தொழுவதாக முக்ததீ யானவர் நிர்ணயஞ் செய்தல் (நிய்யத்துச் செய்தல்).

2. இமாம், முக்ததீ ஆகிய இரு சாரரும் ஓரிடத்தில் இருக்க வேண்டும் அதாவது இமாமுக்கும் முக்ததீக்கு மிடையில் பிரிவினை இருக்கக்கூடாது. இமாமுக்கும் முக்ததீயான ஆடவர்களுக்குமிடையில் ஸ்திரீகளின் வரிசை இருக்கக்கூடாது. இமாமுக்கும் முக்ததீகளுக்கு மிடையில் ரஸ்தா, அல்லது ஆறு போன்ற தடைகள் இருக்கக் கூடாது.

3. இமாம் முக்ததீ ஆகிய இருவருடைய தொழுகை யும் ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது இமாம் ஒரு பர்லையும் முக்ததீ மற்றொரு பர்லையும் தொழக்கூடாது. ஆனல், இமாம் பர்லையும் முக்ததீ நபிலையும் தொழலாம்.

4. இமாமுடைய தொழுகை நிறைவேறிவிட்டதாக முக்ததீ நம்பவேண்டும்.

5. தொழுகையில் ஸ்திரீகளுடைய பாதம் அவனு டைய எந்த உருப்புக்கும் முன்னலோ அல்லது வலம் இடம் ஆகிய பக்கங்களிலோ திரை இல்லாமல் நேர்படக் கூடாது.

6. தொழுகையில் இமாமுடைய குதிக்காலைப் பார்க் கினும் முக்ததீயினுடைய குதிக்கால் முந்தாமலிருக்க வேண்டும்.

7. இமாமுடைய செய்கையை அறியவேண்டும். அதாவது இமாம் நிலையிலிருந்து ருக்கூவுக்குச் செல்லல்,

ருக்கூஉவிருந்து சிறு நிலைக்கு வரல், சிறு நிலையிலிருந்து ஸஜ்தாவிற்குச் செல்லல் போன்ற கிரியைகளை அதாவது இமாம் ஒரு கிரியையிலிருந்து மற்றொரு கிரியைக்குச் செல்வதை முக்ததீ அறியவேண்டும். இமாம் தக்பீர் சொல்வதைக் கேட்பதன் மூலமாகவோ அல்லது பக்கத்தில் தொழுகிற முக்ததீகள் செய்வதை யுணர்வதன் மூலமாகவோ அல்லது இமாமின் செய்கையைப் பார்ப்பதன் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

8. இமாமத்துச் செய்தவர் முக்கீமா அல்லது முஸாபிரா என்பதைத் தொழுவதற்கு முன்னதாகவோ அல்லது தொழுத பிறகோ அறிந்துகொள்ள வேண்டும்.

9. இமாம் தொழுகையிலுள்ள பர்லுகளை நிறைவேற்றும்போது அவரைப் பின்தொடர்ந்து அல்லது அவருக்குச் சமமாக அவைகளைச் செய்ய வேண்டும். இமாமுக்கு முன் அவைகளைச் செய்யக்கூடாது.

10. ஸ்திரீகளும் இமாமத்துச் செய்தால், அவர்களுக்கு இமாமத்துச் செய்வதாக இமாம் நிய்யத்துச் செய்யவேண்டும்.

மக்றூஹான இமாம்கள்

வியபிசாரம் செய்தல், மதுபானமருந்தல், வட்டித் தொழில் புரிதல் போன்ற பெரும் பாவங்களைப் பகிரங்கமாகச் செய்பவர்கள் இமாமாக நின்று தொழுவிப்பது மக்றூஹ் தஹ்ரீமி.

குருடர், அடிமை, கல்வியறிவில்லாத பட்டிக் காட்டு மனிதர், வியபிசாரப் புதல்வர், அற்பமிறங்காத அழகிய

வாலிபர், பக்கவாத நோயுள்ளவர், வெண்குஷ்டம் ஆகிய ரோகமுள்ளவர். நொண்டி, ஆண் குறி அறுந்தவர் மலம் ஜலம் ஆகிய உபாதைகளை அடக்கிக்கொண்டு தொழுபவர், போன்றவர்களை இமாமாக நிறுத்துவதும், இத்தகையோர் இமாமாக நிற்பதும் மக்றூஹ். இவர்களைப் பார்க்கினும் சிறந்தவர் இல்லாமல் இருந்தால், இவர்களிலொருவரை இமாமாக நிறுத்துவது மக்றூஹல்ல. இவ்வாறான மக்றூஹ்களால் இமாம் ஜமாஅத்தின் பயன் இல்லாமற் போய் விடாது. தனித்துத் தொழுவதை பார்க்கினும் இவர்களைப் பின்பற்றித் தொழுவதுமேல்.

ஸ்திரீகளுக்கு ஸ்திரீகள் இமாமத்துச் செய்வது மக்றூஹ். இவர்கள் இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் இமாமத்துச் செய்யும் ஸ்திரீ ஆடவர்களைப்போல் ஸப்பின் முன்னே வந்து நிற்காமல் ஸப்பின் மத்தியிலேயே நிற்க வேண்டும்.

ஆடவர்கள் ஸ்திரீகளையும், பேடிகளையும், முகவரை ரோத அதாவது அம்ரத்களையும் இமாமாக நிறுத்தித்தொழுக்கூடாது. எப்பொழுதும் அபான வாய்வு பிரிதல், சொட்டு நீர் வடிதல்போன்ற வியாதியஸ்தர்கள் இத்தகைய வியாதியில்லாதவர்களுக்கு இமாமத்துச் செய்யக்கூடாது.

இமாம் ஜமாஅத்து நடக்கும்போது ஒன்றிரண்டு ரக்அத்துக்குப் பிறகு, வந்து சேருபவர்களுக்கு மஸ்பூக் என்று பெயர். இத்தகையோர் இமாம் ஸலாம் கொடுத்த பிறகு, எழுந்து தங்களுக்குத் தவறிப்போன தொழுகைகளை நிறைவேற்றவேண்டும். தவிரவும், அத்தஹிய்யாத்தைமட்டிலும் ஓதி விட்டு, ஸலவாத்து துஆ ஆகியவைகளை ஓதாமல் இமாம்

ஸலாம் கொடுப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். இமாம் ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டிய திருந்தால் மஸ்பூக்குகள் அவரைப் பின்பற்றி ஸலாம் கொடுக்காமல், ஸஜ்தாவை மட்டிலும் இமாமுடன் சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். அப்பால் இமாம் ஸலாம் கொடுத்த பிறகு, எழுந்து தங்களுக்குப் பாக்கியுள்ள தொழுகைகளை நிறை வேற்ற வேண்டும்.

இமாம் ருக்கூஉவில் இருக்கும்போது ஒருவர் வந்து தக்பீர் கட்டி, அப்புறம் அல்லாஹு அக்பர் என்று கூறி இமாமுடைய ருக்கூஉவில் சேர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சேர்ந்தால் அந்த ரக்அத்து முழுவதிலும் இமாமைச் சேர்ந்தது போலாகும். எனவே, முதலாவது ரக்அத்திலேயே மேற் கண்டவாறு சேர்ந்தால் அவர் இமாமுடன் சேர்ந்து ஸலாம் கொடுத்துவிட வேண்டியதுதான். ஒரு ரக்அத்தை இமாமை விட்டுத் தனியாக நிறைவேற்ற வேண்டியதில்லை.

தக்பீர் கட்டும்போதே ருக்கூஉவில் போய்ச் சேர்ந்தால் அத்தொழுகை நிறைவேறாது. இமாம் ஸஜ்தாவிலிருக்கும்போது ஒருவர் வந்து இமாமத்துடன் சேர்ந்தால் முதலில் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டிக்கொண்டு, இரண்டாவதாக அல்லாஹு அக்பர் என்று கூறி ஸஜ்தாவுக்கு நேரடியாகப் போகவேண்டும். ருக்கூஉ செய்யக் கூடாது. மேற் கண்டவாறு ருக்கூஉ செய்யாமல் ஸஜ்தாவுடன் சேர்ந்து கொண்டாலும் அந்த ரக்அத்தை இமாமத்துடன் கணிக்காமல், இமாம் ஸலாம் கொடுத்த பிறகு நிறைவேற்ற வேண்டும்.

இமாமுடைய தொழுகை பஸாதாகப்போய்விடுமாயின் முக்ததீகளுடைய தொழுகையும் பஸாதாகிவிடும். இமாம் ஞாபகப் பிசகாக இறுதி இருப்புக்குப்பின் எழுந்தால் மற்றவர்களும் எழுந்திருக்கவேண்டும்என்ற அவசியமில்லை. அவர்கள் அப்படியே உட்கார்ந்திருக்கவேண்டும். முக்ததீகளின் சமிக்ஞையை யறிந்து இமாம் மீண்டும் உட்கார்ந்து ஸலாம் கொடுத்தால் அவருடன் மற்றவர்களும் ஸலாம் கொடுக்க வேண்டும். அவ்வாறின்றி அடுத்த ரக்கஅத்தின் ஸுஜூதாவை இமாம் செய்துவிட்டால் மற்றையோர் அவருடன் சேராமல் ஸலாம்கொடுத்துவிடலாம். ஆனால், இறுதி இருப்பில் இமாம் இருக்காமல் எழுந்து, முக்ததீகளது சமிக்ஞையையும் உணராவிடில் இமாம் அதிகப்படியாக இரண்டு ரக்கஅத்துத் தொழுது ஸுஜூதா ஸஹ்வு செய்ய வேண்டும்.

இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதற்குப் பலர் இருந்தால் ஒருவர் அவர்கள் யாவருக்கும் முன்னால் நிற்க வேண்டும். அவருக்குப் பின் புறத்தில் மற்றவர்கள் வரிசை வரிசையாகத் தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டும். இடையில் சந்து விட்டு நிற்கலாகாது. இவ்வாறு சந்து விட்டு நிற்பது அவ்வூரிலுள்ள ஜனங்களில் ஒற்றுமையில்லை என்பதை அறிவிக்கிறதாக இருக்கிறது. தவிரவும், ஸப்பு நேராக இல்லாமல் கோணலாக இருந்தால், அவ்வூர் ஜனங்களில் கோணலான எண்ணத்தை அது அறிவிக்கிறதென கித்தாபுகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால், ஸப்புகள் நேராகவும், கோணலில்லாமலும், இடையில் சந்தில்லாமலும் இருக்கவேண்டும்.

ஒருவர் மட்டிலும் முக்ததீயாக இருந்தால் இமாமுக்கு வலப்புறத்தில் அவரை விட்டு அதிகம் பிரியாமலும்,

அவருக்கு முன் செல்லாமலும் கொஞ்சம் பின் வாங்கி இமாமின் குதிக்காலுக்கு நேராக நிற்க வேண்டும்,

வித்றுத் தொழுகை

இஷாவுடைய பர்லான தொழுகையை நிறைவேற்றிய பிறகு, வித்றுத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இது வாஜிபு. இஷாத் தொழுகையை நிறைவேற்றாமல் கலாவிட்டவர்கள் பர்லுத்தொழுகையை கலாச் செய்வதுடன் வித்றுத் தொழுகையையும் கலாச்செய்ய வேண்டும்.

றமலான் மாதத்தில் தராவீஹ் தொழுகைக்குப் பிறகு, இதனை இமாம் ஜமாஅத்தாகத் தொழுவார்கள். றமலான் மாதத்தில் இதனை இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது ஸுன்னத்து. மற்றைய காலங்களில் இதனை இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது மக்றூஹு. தவிரவும் றமலான் மாதத்தில் இஷாவின் பர்லை அல்லது தராவீஹ் தொழுகையை இமாம் ஜமாஅத்தாகத் தொழுதவர்கள் மட்டிலும்தான் வித்றுத் தொழுகையை இமாம் ஜமாஅத்தாகத் தொழலாம். இஷாவின் பர்லையும் தராவீஹ் தொழுகையையும் இமாம் ஜமாஅத்தாகத் தொழாதவர்கள் வித்றை மட்டிலும் இமாம் ஜமாஅத்தாகத் தொழலாகாது.

வித்றுத் தொழுகை மூன்று ரக்கஅத்துகளுள்ளது. இதில் ஒன்று அல்லது இரண்டு ரக்கஅத்துகளுக்குப் பின் இமாமத்தில் சேருபவர்கள் இமாமுடன் சேர்ந்து மூன்றாவது ரக்கஅத்தில் குனூத்தை ஓதிவிட்டு, இமாம் ஸலாம் கொடுத்த பிறகு, எழுந்து விட்டுப்போன ஒன்று அல்லது இரண்டு ரக்கஅத்துகளை நிறைவேற்ற வேண்டும். அப்பொழுது குனூத் ஓத வேண்டியதில்லை.

வித்றுத் தொழுகைக்கு கடைசி நேரம் பஜ்றுக்குக் கொஞ்சம் முந்தித்தான். ஆனல், அதன் முதலாவது வேளை இஷாத் தொழுகையை நிறைவேற்றிய பிறகு. எனவே இஷாத் தொழுகையை நிறைவேற்றியதிலிருந்து பஜ்று டைய நேரம் வருவதற்குள் வித்றுத் தொழுகையை நிறை வேற்றலாமாயினும் கடைசி வேளையாகிய விடியற் காலத்தில் எழுந்திருக்க முடியாது என்ற எண்ணமுள்ளவர்கள் இஷா விற்குப்பிறகு, படுக்கைக்கு முன்னதாகவே தொழுது விடலாம்.

இது மூன்று ரக்கஅத்துகளுள்ளது. ஒரே ஸலாமில் இம்மூன்றையும் நிறைவேற்ற வேண்டும். மற்றைய தொழு கைகளில் இரண்டு ரக்கஅத்துகளுக்குப் பிறகு, அத்தஹிய் யாத்து ஓதிய பிறகு, எழுந்து மூன்றுவது ரக்கஅத்தை நிறை வேற்றுவதுபோல வித்றுத் தொழுகையையும் நிறைவேற்ற வேண்டும். ஆனல், மூன்றுவது ரக்கஅத்தில் ஸிறத்துல் பாத்திஹாவிற்குப் பிறகு லம்மு ஸிறத்தையும் ஓதி தக்பீர் சொல்லி, தக்பீர் தஹ்ரீமா கட்டுவதுபோல தக்பீர் கட்ட வேண்டும். அப்புறம் தக்பீர் கட்டியவண்ணம் குனூத்தை ஓதவேண்டும். ஓதிய பிறகு, தக்பீர் சொல்லி ருக்கூஉக்குச் சென்று ஸுஜூது, கடைசி இருப்பு ஆகியவைகளை நிறை வேற்ற வேண்டும்.

இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் இமாம் மூன்று வது ரக்கஅத்தில் ஸிறத்துல் பாத்திஹாவையும் லம்மு ஸிறத்தையும் இரைந்து ஓதுவார். குனூத்தை மெது வாகச் சப்தமில்லாமல் ஓதுவார். முக்ததீகள் மூன்றுவது ரக்கஅத்தில் குனூத்தை மட்டிலும் சப்தமில்லாமல் ஓது

வார்கள். ஸிறத்துல் பாத்திஹா லம்மு ஸிறத்து ஆகியவைகளை முக்ததீகள் ஓதமாட்டார்கள். தனித்தனியே ஓதினால் எல்லாவற்றையும் மெதுவாக ஓத வேண்டும். குனூத்து ஓதுவது வாஜிபு. அது வருமாறு :—

اَللّٰهُمَّ اِنَّا نَسْتَعِيْنُكَ وَنَسْتَهْدِيْكَ وَنَسْتَغْفِرُكَ وَنَتُوْبُ
اِلَيْكَ وَنُؤْمِنُ بِكَ وَنَتَوَكَّلُ عَلَيْكَ وَنُثْنِيْ عَلَيْكَ الْخَيْرَ
وَنَشْكُرُكَ وَلَا نَكْفُرُكَ وَنَخْلَعُ وَنَتْرُكُ مَنْ يَفْجُرُكَ
اَللّٰهُمَّ اِيَّاكَ نَعْبُدُ وَلَكَ نُصَلِّيْ وَنَسْجُدُ وَاِلَيْكَ نَسْعٰى
وَنَحْفِدُ وَنَرْجُوْ رَحْمَتَكَ وَنَخْشٰى عَذَابَكَ اِنَّ عَذَابَكَ
الْجِدَّ بِالْكُفَّارِ مُلْحِقٌ

அல்லாஹும்ம இன்ன நஷ்தாஈனுக வ நஸ்தஹ்தீக்க வ நஸ்தகுபிருக்க வ நத்தூபு இலைக்க வ நூமினுபிக்க வ நத்த வக்கலு அலைக்க வ நுத்னீ அலைக்கல் கைர். வ நஷ்குருக்க வ லா நக்புருக்க வ நக்லஉ வ நத்றுக்க மன் யப்ஜுறுக்க அல்லாஹும்ம இய்யாக்க நஃபுது வலக்க நுஸல்லீ வ நஸ்ஜுது வ இலைக்க நஸ்ஆ வ நஹ்பிது வ நர்ஜு ரஹ்மத்தக்க வ நக்ஷா அதாபக்க இன்ன அதாபக்கல் ஜித்த பில்குப்பாரி முல்ஹிக்குன்.

"நாயனே, நிச்சயமாக நாங்கள் உன்னிடத்தில் உதவி தேடுகிறோம, இன்னும் உன்னிடம் நேர்வழியிற் சேருவதைத் தேடுகிறோம். இன்னும் உன்னிடம் பிழை பொறுக்கத் தேடுகிறோம். இன்னும் உன்னிடம் தெளபாச் செய்கி

றேம். இன்னும் உன்னை விசுவாசிக்கிறேம். இன்னும் உன்மீது தவக்குல்வைக்கிறேம். இன்னும் நன்மையைக் கொண்டு உன்னை ஸ்தோத்தரிக்கிறேம். இன்னும் உனக்கு நன்றி செலுத்துகிறேம். உனக்குக் கீழ்ப்படியாதவரை விட்டு நாங்கள் விலகிக்கொண்டு அவரை விட்டு விடுகிறேம்.

நாயனே, உன்னையே நாங்கள் வணங்குகிறேம். இன்னும் உன்னையே நாங்கள் தொழுது ஸுஜூது செய்கிறேம். இன்னும் உன்பாலிலேயே நாங்கள் முயலுகிறேம் இன்னும் நாங்கள் தீவரமாகிறேம். இன்னும் உனது கிருபையை நாங்கள் ஆதரவுவைக்கிறேம். இன்னும் உனது வேதனையை நாங்கள் பயப்படுகிறேம். நிச்சயமாக உனது வேதனையானது காபிர்களைத் திட்டமாகச் சேருகிறது". என்பது இதன் பொருள்.

ஜும்ஆத் தொழுகையின் நிய்யத்துகள்

நபில் உடைய நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ التَّحِيَّةِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்கதைனி ஸலாத்த ஹிய்யத்தி முதவஜ்ஜிஹன் இலாஹிஹதில் கஃபத்திஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(தஹியத்துல் மஸ்ஜிதுடைய இரண்டு ரக்கஅத்துகள் நபீல் தொழுகையை அல்லாஹுதஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன் நோக்கிய வண்ணம் தொழுகிறேன்.)

முந்திய ஸுன்னத்துத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكَعَاتٍ سُنَّةً قَبْلَ الْجُمُعَةِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரக்க ஆத்தின் ஸுன்னத்தன் கப்லல் ஜும்அத்தி முதவஜ்ஜிஹன் இலா ஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஜும்ஆவின் முந்திய நான்கு ரக்கஅத்து ஸுன்னத் துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறை வேற்றும்பொருட்டு கஃபா ஷரீபை முன்னோக்கிய வண் ணம் தொழுகிறேன்.)

பர்லுடைய தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُسْقِطَ صَلٰوةَ فَرْضِ هٰذَا الظُّهْرِ عَنْ ذِمَّتِيْ بِاَدَاءِ صَلٰوةِ الْجُمُعَةِ لِلّٰهِ تَعَالٰى اِقْتَدَيْتُ بِهٰذَا الْاِمَامِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸ்கித ஸலாத பர்லிஹாதல் லுஹ்ரி அன் திம்மத்தீ பிஅதாஇ ஸலாதில் ஜும்அத்தி லில்லாஹி தஆலா இக்ததைது பிஹாதல் இமாமி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபத்தி அல்லாஹு அக்பர்.

ஜும்ஆவுடைய தொழுகையை நிறைவேற்றுவது கொண்டு, என்பொறுப்பை விட்டு இந்த லுஹருடைய பர்லுத் தொழுகையை நீக்கிக்கொள்ள இந்த இமாமைப் பின் பற்றி கஃபா ஷரீபை முன்னோக்கிய வண்ணம் அல்லாஹு தஆலாவுக்காகத் தொழுகிறேன் அல்லாஹு அக்பர்.

பிந்திய ஸுன்னத்தின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى اَرْبَعَ رَكْعَاتِ سُنَّةَ بَعْدَ الْجُمُعَةِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா அர்பஅ ரக்கஆத்தின் ஸுன்னத்தன் பஅதல் ஜும்அத்தி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஜும்ஆவின் பிந்திய நான்கு ரக்கஅத்து ஸுன்னத் துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறை வேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன்னோக்கிய வண்ணம் தொழுகிறேன்.)

கடைசி ஸுன்னத்தின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ السُّنَّةِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ
الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்கதைனி ஸலாதஸ் ஸுன்னத்தி முதவஜ்ஜிஹன் இலாஜிஹாதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஜும்ஆவின் கடைசி இரண்டு ரக்கஅத்துகள் ஸுன்னத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற் காக நிறைவேற்றும் பொருட்டு கஃபாஷரீபை முன் நோக்கிய வண்ணம் தொழுகிறேன்.)

ஜும்ஆத் தொழுகை

வெள்ளிக்கிழமை யன்று லுஹரில் பர்லு நான்கு ரக்க அத்துகளைத் தொழாமல் இமாம் குத்பா ஓதி, இரண்டு ரக்க

அத்தத்தொழுவார். இத்தொழுகைக்கு ஜும்ஆத்தொழுகை என்றும், இந்த நாளுக்கு ஜும்ஆ என்றும் பெயர்.

"சூரியன் உதயமாகிற தினங்களில் மிக நல்ல நாள் ஜும்ஆ. இதில்தான் ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். இந்த தினத்தில் தான் பூமிக்கு அவர்கள் இறக்கப்பட்டார்கள். இதில்தான் அவர்களது தௌபா அங்கீகரிக்கப்பட்டது. இதில் தான் அவர்கள் மரித்தார்கள். அதில் ஒரு நேரம் வருகிறது. அந்த நேரத்தில் முஸ்லிமான அடியார் அல்லாஹ்வைத் தொழுது ஒரு வஸ்துவைக்குறித்து அவனைக் கேட்டால், அவருக்கு அதனை அவன் கொடுப்பான்" என்பதாக ஹதீதுகளில் கூறப்பட்டிருக்கிறது.

துஆ கபூல் செய்யப்படும் நேரம் ஜும்ஆவிலுள்ள கடைசி நாழிகை என்பதாக அப்துல்லா ஹிப்னு ஸலாம் (றலி) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இமாம் மின்பரின் மீது ஏறியதிலிருந்து தொழுது முடியும்வரையுள்ள நேரம் என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், இந்த நேரம் இன்னதுதான் என்று குறிப்பாக ஹதீதுகளில் சொல்லப்படாததால் பெரியோர்கள் ஜும்ஆவின் தினம் முழுவதிலுமே மஸ்ஜிதில் இஃதிகாபிருந்து அவனைத் தொழுது கொண்டும் தங்களுக்கு வேண்டிய பிரார்த்தனைகளைப் புரிந்து கொண்டுமிருப்பர்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا نُودِيَ لِلصَّلَاةِ مِن يَوْمِ الْجُمُعَةِ
فَاسْعَوْا إِلَىٰ ذِكْرِ اللَّهِ وَذَرُوا الْبَيْعَ ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُمْ
تَعْلَمُونَ ۝ فَإِذَا قُضِيَتِ الصَّلَاةُ فَانتَشِرُوا فِي الْأَرْضِ
وَابْتَغُوا مِن فَضْلِ اللَّهِ وَاذْكُرُوا اللَّهَ كَثِيرًا لَّعَلَّكُمْ تُفْلِحُونَ

விஸ்வாஸங் கொண்டவர்களே! ஜும்ஆவின் தினத்தில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால், அல்லாஹ்வை ஞாபகிப்பதற்கு தீவரமாகுங்கள். இன்னும் வியாபாரத்தை விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்தீர்களானால் உங்களுக்கு இது நன்மையாகும். எனவே, தொழுகை நிறைவேற்றப்பட்டால் பூமியில் நீங்கள் பரவிச்சென்று, அல்லாஹ்வின் நன்மையைத் தேடுங்கள். மேலும், நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமாக ஜபியுங்கள்.

"வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் தினத்தன்று ஜும்ஆத் தொழுகைக்காக பாங்கு சொல்லப்பட்டால், வியாபாரம் முதலிய அலுவல்களை விட்டுவிட்டு ஜும்ஆத் தொழுகைக்கு வரவேண்டும். தொழுகை முடிந்த பிறகு, வியாபாரம் முதலிய அலுவல்களின் நிமித்தம் வெளியிற் செல்லலாம்" என்பது இவ்வாயத்துகளின் கருத்து.

தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா ஓதிக்கொண்டிருக்கும்போது "என்னுடைய இந்த நாளில் என்னுடைய இம்மாதத்தில், என்னுடைய இவ்விடத்தில் ஜும்ஆவை உங்களின்மீது அல்லாஹ்த் தஆலா கடமையாக்கி வைத்திருக்கிறான். எனவே, அதனை அற்பமாக மதித்தும், அதன் கடமையை இலேசாக மதித்தும் ஒருவர் நீதிவான் அல்லாது அநீதிவானை இமாம் அவருக்கிருக்கிற நிலைமையில் விட்டு விடுவாராயின் அவனது கூட்டத்தை அல்லாஹ் சோர்க்கமாட்டான், இன்னும் அவனது காரியத்தில் அவனுக்கு பரக்கத்தை அளிக்கமாட்டான். அறிந்து கொள், அவர் தௌபாச் செய்யும்வரை அவருக்குத் தொழுகையுகில்லை, ஜக்காத்துமில்லை, நோன்புமில்லை. ஆனால், எவர் தௌபாச் செய்கிறாரோ அவருடைய தௌபாவை

அல்லாஹ்வுத் தஆலா அங்கீகரிக்கிறான்" என்று கூறியதாக ஹதீது ஷரீபில வந்திருக்கிறது.

மேற் கண்ட திருகுர்ஆனின் கட்டளைப்படியும், ஹதீதின்படியும் பர்லு ஐனாக இருக்கிறதுடன், இது பர்லு ஐன் என்பதைக் குறித்து இஜ்மாஉம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், லுஹருடைய பர்லைப்பார்க்கினும் ஜும்ஆ மிகவும் தாக்கீது செய்யப்பட்டதாகவுமிருக்கிறது. ஆனால், ஜும்ஆவை நிறைவேற்றுவதற்கும், ஜும்ஆ பர்லாவதற்கும் சில ஷர்த்துகளிருக்கின்றன. அவை வருமாறு :—

ஜும்ஆ பர்லாவதற்குரிய ஷர்த்துகள்

1. ஆடவனாக இருக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு இது கடமை இல்லை.

2. நகரத்தில் ஸ்திரமாக வசிக்கவேண்டும். மார்க்கச் சட்டப்படி பிரயாணியாக இருப்பவர்மீதும், பட்டிக்காடுகளில் ஸ்திர வாசம் செய்பவர் மீதும் இது கடமை இல்லை.

3. சுதந்திரனாக இருக்கவேண்டும். அடிமைகள் மீது இது கடமை இல்லை.

4. தேகாரோக்கிய முருக்கவேண்டும். நோயாளிகள் மீதும், மிகவும் பலஹீனமடைந்த விருத்தாப்பியர் மீதும் கடமை இல்லை.

5. அக்கிரமஸ்தர்களை விட்டு அச்சந் தீர்ந்திருக்க வேண்டும்.

6. நேத்திரங்கள் சரியாக இருக்கவேண்டும். அந்தகர்களுக்கு ஜும்ஆ கடமை இல்லை என்பது இமாம் அபூ

ஹனீபா (றஹ்) அவர்களது சொல். ஜும்ஆவிற்கு அழைத்து வருபவர்களிருந்தால் அந்தகர்கள்மீதும் அது கடமை என்பது இமாம் அபூயூஸுப் (றஹ்) இமாம் முஹம்மது (றஹ்) ஆகியவர்கள் சொல்.

7. கால்கள் சரியாக இருக்கவேண்டும். சப்பாணிகள் மீது இது கடமை இல்லை. பலமான மழை ஏற்பட்டு இருந்தாலும் இது கடமை இல்லை.

சித்த சுவாதீனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பாலிகாக அதாவது யுக்த வயதை யடைந்தவராக இருக்க, வேண்டும் என்பதும் இதன் ஷர்த்துகள் தாமாயினும் இவைகள் ஜும்ஆவிற்கு மட்டிலும் சொந்தமான ஷர்த்துகளாக இல்லாததால் அவைகளை இங்கு விசேஷமாகக் குறிப்பிடவில்லை.

ஜும்ஆ நிறைவேறுவதற்குரிய ஷர்த்துகள்

ஜும்ஆ நிறைவேறுவதற்கு ஆறு ஷர்த்துகளிருக்கின்றன. அவை வருமாறு :—

1. பட்டணமாக இருக்கவேண்டும். பட்டணங்களில் பல இடங்களிலும் ஜும்ஆத் தொழுகலாம். ஒரே இடத்தில்தான் தொழவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை.

2. ஸுல்தான் அல்லது அவரது பிரதிநிதி அதாவது அரசரிடம் அனுமதி பெற்றவர் இமாமத்துச் செய்ய வேண்டும்.

3. லுஹருடைய வேளையில் ஜும்ஆவை நிறைவேற்ற வேண்டும.

4. ஜும்ஆத் தொழுகைக்கு முன் குத்பா ஓதுதல்.

5. ஜும்ஆவை நிறைவேற்றுமிடம் யாவருக்கும் தொழ உரிமையளிக்கப்பட்ட இடமாக இருக்க வேண்டும்.

6. இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றப்பட வேண்டும். குறைந்த பக்ஷம் மூவராவது தொழவேண்டும். குத்பாவை இவர்கள் செவியேற்கவேண்டும் என்ற அவசியமில்லை. குத்பாவை ஒருவர் செவியேற்றாலும் போதுமானது. இவர்கள் அடிமைகளாகவோ அல்லது நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணிகளாகவோ இருந்தாலும் குற்றமில்லை.

7. ஜும்ஆவிற்கு வந்த ஜனங்களின் முன்னிலையில் குத்பாவை ஓதி முடிக்க வேண்டும்.

ஜும்ஆவின் ஸுன்னத்துகள்

ஜும்ஆவிற்காக குளித்தல், மணம் பூசுதல், சுத்தமான உடையணிதல், நகங்களை வெட்டிக்கொள்ளல், தலைக்ஷவரம் செய்வித்தல், ஊதுபத்தி முதலிய வாசனைப் பொருள்களை மஸ்ஜிதுக்குள் புகைத்தல், ஜும்ஆவிற்காக காலை நேரத்திலேயே மஸ்ஜிதுக்குச் சென்று கத்தீபு வரும்வரை இபாதத்துச் செய்து கொண்டிருத்தல் முதலியவைகள் ஜும்ஆவின் ஸுன்னத்துகளாகும்.

ஜும்ஆத் தொழுகையின் ரக்அத்துகள்

ஜும்ஆத் தொழுவதற்காக லுஹருடைய நேரத்திலேயே மஸ்ஜிதுக்குச் சென்று தஹிய்யத்துல் மஸ்ஜித் என்று இரண்டு ரக்அத் நபில் தொழவேண்டும்.

அப்புறம் ஸுன்னத்துஜ்ஜும்ஆ நான்கு ரக்கஅத்துகள் குத்பாவுக்குப் பிறகு, இண்டு ரக்கஅத்துகள் பர்லு. பிறகு, நான்கு ரக்கஅத்துகள் ஸுன்னத்து. இறுதியாக இரண்டு ரக்கஅத்துகள் ஸுன்னத்து.

தராவீஹ் தொழுகையின் நிய்யத்து

தராவீஹ் தொழுகை

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ التَّرَاوِيْحِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்கஅத் தைனி ஸலாதத் தாராவீஹி முதவஜ்ஜிஹன் இலஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(தராவீஹ் தொழுகையின் இரண்டு ரக்கஅத்து தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபாஷரீபை முன்னோக்கி நின்ற வண்ணம் தொழுகிறேன்.)

றமலான் மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் இருபது ரக்கஅத்துத் தொழுவது ஆண் பெண் இருபாலருக்கும் ஸுன்னத்து முஅக்கதா. இதனை இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது ஸுன்னத்து முஅக்கதா கிபாயா. அதாவது ஒரு ஊரில் சிலரேனும் இமாம் ஜமாம்அத்தாக இதனை நிறைவேற்ற வேண்டும். ஒரு சிலர் இவ்வாறு நிறைவேற்றி விட்டால் ஸுன்னத்து நிறைவேறி விடும். ஒருவரும் இமாம்

ஜமாஅத்தாகத் தொழுகவில்லையானால், ஸுன்னத்தைத் தவறவிட்ட குற்றம் எல்லாருக்கு மேற்படும்.

இவ்விருபது ரக்அத்துகளையும் இரண்டிரண்டு ரக்அத்துகளாக பத்து முறை தக்பீர் கட்டி பத்து முறை ஸலாம் கொடுத்துத் தொழுவது மிகவும் சிறந்தது. இஷாத் தொழுத பிறகு, கிழக்கு வெளுக்கும்வரை இதனை நிறைவேற்றலாம். இஷாத்தொழுகைக்கு முன் இதனை நிறைவேற்றக்கூடாது. றமலான் மாதம் முழுவதிலும் தராவீஹ் தொழுகையில் ஒரு முறை திருகுர்ஆன் முழுவதையும் ஓதி முடித்து கத்தம் செய்வது ஸுன்னத்து. ஒவ்வொரு நான்கு ரக்அத்துகளுக்கும் பிறகு, துஆச் செய்வர்.

ஜனாஸா

மனிதன் இறந்து பட்டால் அவரது பூத உடலத்திற்கு ஜனாஸா என்று பெயர். முஸ்லிமான ஒருவருக்கு மரணக் குறி தோன்றுமாயின் அவருக்குப் பக்கத்திலிருப்பவர்கள் நோயாளிக்குப் பக்கத்திலிருந்து கொண்டு ஸூறத்து யாஸீன், கலிமா தைஹீது முதலியவைகளை ஓதவேண்டும். கலிமாச் சொல்லும்படியாகவோ, வேறு பல திக்ருகளைச் சொல்லும்படியாகவோ கூறி நோயாளியைத் தொந்தரை செய்யலாகாது. நோயாளி மரித்த பிறகு, ஜனாஸாவிற்குப் பக்கத்திலிருந்துகொண்டு குர்ஆன் ஓதலாகாது. மாதாந்த ருது, பிரசவ ருது ஆகியவைகளுள்ள ஸ்திரீகளும் இருக்கக் கூடாது. ஆன்மா பிறிந்தவுடன் கண்களை மூடிவைக்க வேண்டும். நாடி நிறந்து கொள்ளாதிருக்கும் பொருட்டு நாடியையும் தலையையும் துணியால் இணைத்துக் கட்டிவிட வேண்டும். உயிர் பிறியும்போது அணிந்திருந்த துணியை-

அகற்றிவிட்டு, முன் துவாரம் பின் துவாரங்கள் வழியாக அசங்கிதம் வெளியாகி இருந்தால் சுத்தம் செய்து, வேறு துணிகளை அணிவித்து ஜனஸாவை நன்முகப் போர்த்தி மூடிவிட வேண்டும். சாம்பிராணி, ஊதிபத்தி முதலிய வாசனைப் பொருள்களைப் புகைக்கவேண்டும்.

மரணத்தருவாயிலிருக்கும் நோயாளி தனக்குக் கடன் களிருந்தால் அதனைக் கொடுத்துத் தீர்த்துவிடவேண்டும். அல்லது அதனைத் தீர்த்துவிடுவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்து விடவேண்டும். பிறருடன் பகை இருந்தால் அவரை அழைத்துப் பகையை நீக்கிக்கொள்ளவேண்டும். தன் மீதுள்ள பொருப்புகளனைத்தையும் அகற்றி, மீசை நகம் முதலியவைகளையும் வெட்டிக்கொண்டு, அல்லாஹ¤ தஆலா வினிடம் பாபமன்னிப்புக்கேட்டு, மரணமடைவதற்குத்தயா ராகிவிடவேண்டும்.

இவ்வாறுன நோயாளி கிப்லாவைப் பார்க்கச் சுலபமாக இருக்கும்பொருட்டு கிப்லாவிற்கு நேராகக் கால்களைக் கட்டி, தலைக்கடியில் சிறிது உபரத்தை வைத்து கிப்லாவைப் பார்ப் பதற்கு வசதி இருக்கும்படிச் செய்ய வேண்டும். இறந்து போன பிறகும்கூட அதேவிதமாகச் செய்யவேண்டும். கிப் லாவின் பக்கம் காலை நீட்டி வைக்காவிடில் வடக்கு தெற்குப்புரங்களில் படுக்க வைத்து கிப்லாவைப் பார்க்கும் படி முகத்தைத் திருப்பி வைக்கவேண்டும்.

மையித்தைக் குளிப்பாட்டுதல்

ஜனஸா என்னும் மையித்தைக் குளிப்பாட்டுவது பர்லுகிபாயா. ஒருவரும் குளிப்பாட்டாமல் விட்டு விட்டால் எல்லாரும் குற்றவாளியாவார்கள். எவரேனும் குளிப் பாட்டி விட்டால் எல்லார் மீதினு முள்ள கடமை நீங்கி

விடும். இறந்துபோன மையித்தை அதிக நேரம் போட்டு வைத்திருக்கக் கூடாது. கூடியவரை துரிதமாகவே அதனை நல்லடக்கம் செய்ய வேண்டும். நல்லடக்கம் செய்வதற்குமுன் மையித்தைக் குளிப்பாட்டி, கபனிட்டு, ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

மையித்தை சுத்தமான இள வென்னீராலும், குளிர்ந்த ஜலத்தாலும் குளிப்பாட்டலாம். முதலில் சுத்தமான பலகையில் மையித்தைக் கிடத்த வேண்டும். அகலமான பெஞ்ச் அல்லது கட்டிலையுங்கூட உபயோகப் படுத்தலாம். மையித்தைக் குளிப்பாட்டும் தண்ணீர் மையித்தின் மீது திரும்பவும் படாமலிருப்பதற்குத் தக்கவாறு உயரமிருந்தால் போதும். அப்பலகையில் மையித்தைக்கிடத்தி ஈரத் துணியினால் நாசித் துவாரம், பல் ஆகியவைகளிலுள்ள ஊத்தையை அகற்றவேண்டும். அப்புறம் முன் துவாரத்தைக் கழுவ வேண்டும்- ஆனால், வெட்கஸ்தலத்தைத் திறந்துபோடவும் கூடாது, பார்க்கவும் கூடாது. கையில் துணியைச் சுற்றிக்கொண்டுதான் முன் துவாரதத்தைக் கழுவ வேண்டும்.

பிறகு, மையித்திற்கு ஒலுச் செய்விக்க வேண்டும், நாசித் துவாரத்திற்குள்ளும் வாய்க்குள்ளும் நீர் செலுத்த வேண்டியதில்லை. ஈரத் துணியினால் நாசித்துவாரங்களையும் பற்களையும் சுத்தப்படுத்துவது போதுமானது- அப்புறம் மையித்தை இடப்புறம் ஒருக்கணித்துப் படுக்கவைத்து வலப்புறம் ஜலம் வார்க்கவேண்டும். பிறகு வலப்புறம் ஒருக்கணித்துப் படுக்கவைத்து இடப்புறம் ஜலம் வார்த்துக் கழுகவேண்டும். அப்புறம் மையித்தைத் தலைப்புறமாகக் கொஞ்சம் நிமிர்த்தி வயிற்றை மெதுவாக அழுத்திவிட

வேண்டும். வயிற்றினுள்ளிருந்து ஏதேதனும் வெளிப்பட்டிருந்தால் அதனையும் அகற்றிச் சுத்தப்படுத்த வேண்டும். பிறகு தலையிலிருந்து கால்வரையில் மூன்று முறையும், வலத் தோள்புஜத்திலிருந்து மூன்று முறையும், இடத்தோள் புஜத்திலிருந்து மூன்று முறையும் ஜலம் வார்த்துக்கழுக வேண்டும்.

உடலிலுள்ள அசுத்தம் நீங்குவதற்காக சீக்காய் முதலிய தூள்களைப்போட்டு மெதுவாகத் தேய்த்துக் குளிப்பாட்டிய பிறகு, இலந்தை, உகில், வாசனைப்பூண்டு முதலிய வைகளைப் போட்டுச் சுடவைத்த வெந்நீரால் அல்லது குளிர்ந்த ஜலத்தால் மேற்கண்ட்வாறு கழுவி சுத்தமான துணியினால் மையித்தைத் துடைத்து கபன் என்னும் உடையை அணிவிக்கவேண்டும்.

கபனிடுதல்

மையித்திற்கு கபன் உடை அணிவிப்பது பர்லுகிபாயா கோடித்துணியை உபயோகிக்கவேண்டும் என்ற கட்டாய மில்லை. வெளுத்ததாகவும் சுத்தமானதாகவுமிருந்தால் போதுமானது. ஆண்களுக்கு மூன்று துணிகளாலும், பெண்களுக்கு ஐந்து துணிகளாலும் கபனிடுவது ஸுன்னத்து. ஆண்களுக்கு, அடைபவளந்தான், கமீஸ், இஜார் ஆக மூன்று உடை. அடைய வளந்தான் என்பது தலைக்கு மேல் முக்கால் அல்லது ஒரு அடி நீளமும், காலுக்குக் கீழ் முக்கால் அல்லது ஒரு அடி நீளமும் மையித்தைச் சுற்றிக் கட்டத்தக்கவாறு அகலமுமுள்ளது. இதனை அடியில் விரித்துவைக்கவேண்டும். கமீஸ் என்பது மையித்தின் கழுத்திலிருந்து முழங்கால்வரை வரக்கூடிய சட்டை. இத

னைக் கழுத்தில் மட்டும் வெட்டி மார்பின் பக்கம் சட்டைக்குக் கிழிப்பதுபோல கிழித்துவிட வேண்டும். எனவே, இஜாரென்னும் உடுத்தாடையைக் கட்டியபின் கமீஸை அணிவித்து, அடைய வளந்தானைச்சுற்றி மைபித்தைக்கால் மாட்டிலும், தலைமாட்டிலும் இடுப்பிலும் மூன்று கட்டுக் கட்ட வேண்டும்.

பெண்களுக்கு சட்டை, உடுத்தாடை, தலைக்கட்டு, மார்க்கட்டு, அடை வளந்தான் ஆக ஐந்து வகை உடைகளை அணிவிக்க வேண்டும். முதல் முதலாக சட்டையை அணிவித்து தலை ரோமங்களை இருகூறுகவகுந்து இருசேதாள்களின் வழியாக மார்பின் மீது வைக்கவேண்டும். அப்பால் தலைக் கட்டை அணிவித்து, அப்பால் உடுத்தாயையும் பிறகு, மார்க்கட்டுத் துணியையும் அணிவித்து இறுதியாக அடைய வளந்தான அணிவிக்க வேண்டும்.

இறந்து போனவர் ஆலிமாக இருந்தால் அவருக்கு தலைப்பாகை கட்டுவது விசேஷம். இது போல ஸாலிஹான பெரியோர்களாக இருந்தாலும் தலைப்பாகை அணிவிக்கலாம். மேற் கூறப்பட்டவாறு கபனிடத் தக்க வசதி இருந்தால்தான் மேற் கண்ட முறை. அதற்கு வசதி இல்லாவிட்டால் இயன்றவரை வசதியுள்ள அளவிற்குக் கபனிடலாம்.

ஜனாஸா தொழுகை

ஜனாஸாவைத் தொழுவிப்பது பர்லுகிபாயா இறந்து போனவருக்காகப் பிரார்த்தனை புரிவதுதான் இத்தொழுகையின் முக்கிய நோக்கம். ஆதலால், இதற்கு ருக்கூஉ, ஸுஜூது களில்லை. ஜனாஸாத் தொழுவிப்பதற்கு

மையித்து முஸ்லிமாகவும், சுத்தமாகவும் இருப்பது ஷர்த்து. மையித்தைக் குளிப்பாட்டாவிட்டாலும், முஸ்லிமாக இவ்லாமலிருந்தாலும் ஜனஸாத் தொழுவிக்கக்கூடாது.

ஜனஸா எதிரில் இருக்க வேண்டும்.

ஜனஸா ஜனங்களுக்கு முன்னலிருக்கவேண்டும்.

ஜனஸா சந்தூக்குடன் (சவப் பேழை) பூமியின்மீது வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஜனஸா தொழுகைக்கு இமாமாக இருப்பவர் யுக்த வயதை அடைந்திருக்கவேண்டும் (பாலிகாகி இருக்க வேண்டும்).

ஜனஸாவின் அவயவங்களில் ஒன்றுக்கு நேராக இமாம் நிற்கவேண்டும்.

இமாமும், ஜனஸாவும், முக்ததீகளும் வெட்க ஸ்தலங்களை மறைத்திருத்தல வேண்டும்.

இவை ஜனஸாத் தொழுகைக்கு இருக்கவேண்டிய முக்கிய ஷர்த்துகள். இவைகளிலொன்று தவறினலும் தொழுகை நிறைவேறாது.

நான்கு முறை தக்பீர் சொல்வதும், நின்று தொழுவதும் ருக்னுகள்.

ஜனஸாவின் நெஞ்சுக்கு நேரில் இமாம் நிற்குதல், முந்தின தக்பீருக்குப் பிறகு, தனு ஓதுதல், இரண்டாவது தக்பீருக்குப் பிறகு ஸலாவாத்து ஓதுதல், மூன்றுவது தக்பீருக்குப்பிறகு, துஆஓதுதல் ஸுன்னத்துகளாகும்.

ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றும் முறை

மேற்குத் திசையில் கிப்லாவுள்ளவர்கள் வடக்கே தலையும் தெற்கே காலுமாக இருக்கக்கூடிய முறையில் ஜனாஸாப் பேழையை வைக்கவேண்டும். வேறு திசைகளில் கிப்லாவுள்ளவர்கள் அதற்குத் தக்கவாறு மாற்றி வைக்கவேண்டும். ஜனாஸாவின் நெஞ்சுக்கு நேராக இமாம் கிப்லாவை முன்னோக்கி நின்று,

أُصَلِّيْ لِلّٰهِ تَعَالٰى دَاعِيًا لِلْمَيِّتِ

உஸல்லீ லில்லாஹி தஆலா தாஇயன் லில்மையித்தி என்று கூறி நிய்யத்துச் செய்து தொழுகைக்கு தக்பீர் கட்டுவது போல தக்பீர் கட்டிக் கொள்ளவேண்டும். "இறந்துபோனவருக்காக பிரார்த்தனை புரிந்தவனாக அல்லாஹ்த் தஆலாவிற்காகத் தொழுகிறேன்" என்பது இதன் பொருள்.

மற்றைய ஜனங்கள் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதற்கு நிற்பதுபோல வரிசையாக நின்று இமாமைப்பின்தொடருவதாக நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டவேண்டும்.

أُصَلِّيْ لِلّٰهِ تَعَالٰى دَاعِيًا لِلْمَيِّتِ اِقْتَدَيْتُ بِهٰذَا الْاِمَامِ

உஸல்லீலில்லாஹி தஆலா தாஇயன் லில்மையித்தி இக்ததைத்து பி ஹாதல் இமாம்.

"இறந்துபோனவருக்காக பிரார்த்தனை புரிந்தவனாக இந்த இமாமைப் பின்தொடர்ந்து அல்லாஹ்விற்காகத் தொழுகிறேன்" என்பது இதன் பொருள்.

பிறகு, இமாம் முக்ததீ ஆகிய யாவரும் மௌனமாகவே ஓதவேண்டும். அது வருமாறு :—

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى
جَدُّكَ وَجَلَّ ثَنَائُكَ وَلَا اِلٰهَ غَيْرُكَ

ஸுப்ஹான கல்லாஹும்ம வ பிஹம்திக்க வதபார கஸ்முக்க வ தஆலா ஜத்துக வஜல்ல தனவுக்க வலா இலாஹ கைருக

"நாயனே நீ தூயவன். உனது புகழைக்கொண்டு (ஆரம்பிக்கிறேன்.) உனது திருநாமம் முபாரக்காகிவிட்டது. உனது தலைமைத்தனம் உயர்ந்தது. உனது ஸ்தோத்திரம் மகத்தானது. உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை" என்பது இதன் பொருள்.

பிறகு, இரண்டாம் முறையாக அல்லாஹு அக்பர் என்று இமாம் தக்பீர் சொல்லுவார். முக்ததீகளும் தக்பீர் சொல்லிக்கொள்ள வேண்டும். கைகளை உயர்த்தி தக்பீர் கட்ட வேண்டியதில்லை. இத்தக்பீருக்குப் பிறகு, இமாமும் முக்ததீகளும் ஸலவாத்து ஓதவேண்டும். அது வருமாறு:--

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ
وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ فِى الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ۝ اَللّٰهُمَّ
بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ
وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ فِى الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ۝

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமாஸல்லைத்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம பில்ஆலமீன இன்னக ஹமீதுன் மஜீத்.

அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த ஆலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம பில்ஆலமீன இன்னக ஹமீதுன் மஜீத்.

(இந்த ஸலவாத்து தொழுகையில் அத்தஹிய்யாத்துக்குப் பிறகு, ஓதுவதால் அதன் பொருளை, மேலே எழுதப் பட்டிருக்கிறது. அங்கு கண்டு கொள்க)

மூன்றுவது முறை முன்போல இமாம் தக்பீர் சொன்ன பிறகு கீழ்க்கண்ட துஆவை இமாம், முக்ததீ ஆகிய யாவரும் ஓதவேண்டும். அது வருமாறு :—

اَللّٰهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَشَاهِدِنَا وَغَائِبِنَا وَصَغِيْرِنَا وَكَبِيْرِنَا وَذَكَرِنَا وَاُنْثَانَا اَللّٰهُمَّ مَنْ اَحْيَيْتَهٗ مِنَّا فَاَحْيِهٖ عَلَى الْاِسْلَامِ وَمَنْ تَوَفَّيْتَهٗ مِنَّا فَتَوَفَّهٗ عَلَى الْاِيْمَانِ

அல்லாஹும்மஃபிர் லிஹையினா வ மையிதினா வ ஷாஹிதினா வ காயிபினா வஸகீரினா வகபீரினா வ தகரினா வ உன்தானா. அல்லாஹும்ம மன் அஹ்யைத்தஹு மின்னா பஅஹ்யிஹி அலல் இஸ்லாம் வ மன் தவப்பைத்தஹு மின்னா பதவப்பஹு அலல் ஈமான்.

"நாயனே! எங்களில் ஜீவித்திருப்பவருக்கும், எங்களில் மரித்தவருக்கும், எங்களில் முன்னிலிருப்பவருக்கும், எங்களில் மறைவிலிருப்பவருக்கும் எங்களில் சிறுவருக்கும். எங்களில் பெரியோருக்கும் ஆடவருக்கும், எங்களில் ஸ்திரீகளுக்கும் பிழை பொறுப்பாயாக.

"நாயனே! எங்களில் எவரை நீ ஜீவித்திருக்கச் செய்திருக்கிறாயோ அவரை இஸ்லாம் மதத்தின்மீது ஜீவித்திருக்கச்செய்வாயாக. இன்னும் எங்களில் எவரை நீ மரிக்கச் செய்கிறாயோ அவரை ஈமானுடன் மரிக்கச் செய்வாயாக" என்பது இதன் பொருள்.

இறந்து போனவர் சிறுபையனாக இருந்தால் அதாவது பாலிகாகுவதற்குள் மரித்திருந்தால் மேற்கண்ட துஆவுடன், அடியிற்கண்ட துஆவையும் சேர்த்து ஓதவேண்டும்.

اَللّٰهُمَّ اجْعَلْهُ فَرَطًا وَّاجْعَلْهُ لَنَا اَجْرًا وَّذُخْرًا وَّاجْعَلْهُ لَنَا

شَافِعًا وَّمُشَفَّعًا

அல்லாஹும்மஜ்அல்ஹு பரத்தன் வஜ்அல்ஹுலனா அஜ்ரன் வ துக்ரன் வஜ்அல்ஹு லனா ஷாபிஅன் முஷப்பஆ.

"நாயனே இவரை எங்களுக்கு முற்கூட்டி அனுப்பப்பட்ட பொருளாக ஆக்குவாயாக. இன்னும் எங்களுக்குக் கூலியாகவும் தங்கரிப்பாகவும் ஆக்குவாயாக. இன்னும் இவரை எங்களுக்கு ஷபா அத்துச் செய்பவராகவும், ஷபா அத்தை அங்கீகரிக்கப் பட்டவராகவும் ஆக்குவாயாக" என்பது இதன் பொருள்.

இறந்து போனவர் சிறு பெண்ணாக இருந்தால் மேற்கண்ட துஆவில் ஹு என்ற வார்த்தைகளை ஹா என்ற வார்த்தைகளாக மாற்றி திருத்தி ஓத வேண்டும். ஹு என்ற பதம் ஆண்பாலையும், ஹா என்ற பதம், பெண்பாலையும் அறிவிக்கும். அர்த்தத்தில் வித்தியாசமில்லை.

பின்னர், நான்காம் முறையாக அல்லாஹு அக்பர் என்று தகபீர் சொல்ல வேண்டும். முக்ததீகளும் தக்பீர் சொல்ல வேண்டும். பின்னர் அடியிற்கண்ட துஆவையும் ஓதவேண்டும்.

رَبَّنَا اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகி ரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார்.

"எங்கள் நாயனே எங்களுக்கு இவ்வுலகில் நல்லதையும், இன்னும் மறுமையில் நல்லதையும் தந்து நரக நெருப்பின் வேதனையைவிட்டு எங்களைக் காப்பாயாக" என்பது இதன் பொருள்.

ஜனஸா தொழுவிக்க அருகதையுள்ளவர்கள்

ஜனஸாத் தொழுகையை கலீபாவே அதாவது முஸ்லிம் அரசனே நேரடியாக இமாமாக நின்று தொழுவிக்க வேண்டும். முஸ்லிம் அரசனிலலாத இடங்களில் காஜீ இமாமாக நின்று தொழுவிக்க வேண்டும். காஜீயும் இல்லாவிடில் அந்த மையித் எந்த மஹல்லாவைச் சேர்ந்ததோ அந்த மஹல்லாவின் இமாம் தொழுவிக்க வேண்டும்.

இத்தொழுகையை வேறுயாரேனும் தொழுவிப்பதாயின் இறந்துபோனவரின் வலீகாரர் (பாத்தியஸ்தர்) அனுமதி கொடுக்கவேண்டும். அவரது உத்தரவின்றி ஒருவர் தொழுவித்தால், அவர் வேறு ஒருவருக்கு உத்தரவு கொடுத்து இரண்டாம் முறை தொழுவிக்கச் செய்யலாம்.

ஒரு முஸ்லிம் ஷி தொழுகையில்லாமல் அடக்கப்பட்டு விட்டால் அவரது ஸ்தூலம் ஊதி உடைவதற்குள்

அவரை அடக்கிய ஸ்தலத்தில் இந்தத் தொழுகையை நிறை வேற்ற வேண்டும்.

இஸ்லாம் மத யுத்தத்திற்குச் சென்று ஷஹீதானவர் களை குளிப்பாட்டவேண்டிய அவசியமில்லை. அவரது ரத்தம் தோய்ந்த உடையுடன் அடக்கம் செய்யவேண்டும். அவரது உடை கபனுக்குப் போதியதாக இருந்தால் அவ்வுடை யையே கபனாக உபயோகிக்கவேண்டும். அது போதிய தாக இல்லாவிடில் தேவைப்பட்ட அளவிற்கு வேறு துணி களைச் சேர்த்துக்கொள்ளலாம். கபனுக்குமேல் அதிகமாக இருந்தால் அதிகமாக இருப்பதை அகற்றிவிடவேண்டும்.

பெரு நாள்கள்

உலகிலுள்ள சகல மதங்களும் பெருநாள்களைக் கொண் டாடுகின்றனர். இஸ்லாமிய சன்மார்க்கத்திலும் மார்க்கச் சட்டப்படி இரண்டு பெரு நாள்கள் கொண்டாடப்படுகின் றன, இவ்விரு பெரு நாள்களைத் தவிர மற்றை பெரு நாள் களைக் கொண்டாட இஸ்லாமிய சன்மார்க்கம் விதி ஏற் படுத்தவில்லை. இதர மதஸ்தர்களிலுள்ள பெரு நாள்களின் பூர்வ விருத்தாந்தங்களைப் பார்த்தால் அப்பெரு நாள்களுக் கும் அம்மதத்திற்கும் சம்பந்தமில்லாத சம்பவங்களை அடிப் படையாகக்கொண்டிருக்கும் அல்லது அப்பெரு நாளுக்கு மதத்தில் சம்பந்தமிருந்தாலும் அத்திரு நாள்களைக் கொண் டாடும் முறை அந்த மதத்திற்கே விரோதமான முறையி லிருக்கும். இவ்விதமாக அப்பெரு நாள்கள் மதத்திற்கோ, உலகில் கௌரமான பொது விதிகளுக்கோ மாறுன பல அநாச்சாரமான சடங்குகளோ, மூடக் கொள்கை களோ கலந்தனவாக இருக்கும் இஸ்லாமிய திருநாள்

களில் இவ்விதமான குறைகளிருக்மாட்டா, அல்லாமலும், இத்திருநாள்களிலும்கூட தெய்வ வணக்கமும், தெய்வ பக்திகளும் மிளிர்வதைக் காணலாம்.

நோன்புப் பெருநாள் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ عِيْدِ الْفِطْرِ اِقْتَدَيْتُ
بِهٰذَا الْاِمَامِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்கஅத்தைனி ஸலாத்த ஈதில்பித்திரி இக்ததைது பிஹாதல் இமாமி முதவஜ் ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஈதுல் பித்ருடைய வாஜிபான இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன் நோக்கி நின்று, தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

நோன்புப் பெருநாள்

றமலான் மாதம் முழுவதிலும் நோன்பு நோற்ற பிறகு, ஷவ்வால் மாதம் முதல் தேதியில் இப்பெரு நாள் கொண்டாடப்படுகிறது. பூரணமாக ஒரு மாத காலம் பகற் பொழுதில் உண்ணலையும் பருகுதலையும் நீத்தவர்களுக்கு அத்திருநாளன்றுதான் பகற்பொழுதில் உண்ணல் பருகுதல் போன்ற காரியங்களைச் செய்ய அனுமதி கிடைக்கின்றது. இது ஒருவகையில் இறைவன் மனிதருக்கு அளித்துள்ள அருட்கொடைக்கு நன்றி செலுத்தும் தோரணையேயாகும். ஒரு மாத காலம்வரை இறைவனுக்காகப் பட்டினி விரதம் இருக்கவேண்டும் என இறைவன் விதித்துள்ள கட்டளையை

இனிது நிறைவேற்றியதும் அவனது அருட்கொடையே யாகும். அவ்வருட்கொடைக்கு நன்றி செலுத்தும் முறையிலேயே ஷவ்வால் மாதம் முதல் தேதியில் இறைவனை வணக்கி அவனுக்கு நன்றி செலுத்தி முஸ்லிம்கள் பகல் போஜனங்களை அருந்துகின்றனர்.

பக்ரீத் பெருநாள் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْعِيْدِ الْاَضْحٰى
اِقْتَدَيْتُ بِهٰذَا الْاِمَامِ مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரகஅதைனி ஸலாதல் ஈதில் அல்ஹா இக்ததைது பிஹாதல் இமாமி. முத வஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஈதுல் அல்ஹா உடைய இரண்டு ரக்க அத்து வாஜிபான தொழுகையை ஆறு தக்பீர்களுடன் அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன் நோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன்.)

பக்ரீத் பெருநாள் என்பது துல்ஹஜ்ஜு மாதம் 10உ கொண்டாடப்படுகிறது. இதற்கு ஹஜ்ஜு பெருநாள் என்றும், ஈதுல் அல்ஹா என்றும் பெயர் கூறுகின்றனர். இப் பெரு நாளன்றுதான் இறைவன் விதித்துள்ள ஹஜ்ஜுக் கடமை திருமக்காவில் நிறைவேற்றப்படுகிறது. திருமக்கா விலுள்ளவர்கள் இப்பெரு நாளைக் கொண்டாடும் முறை

வேறு. அதனைப்பற்றிய விபரம் ஹஜ்ஜுக் கடமையைக் குறித்த பாடத்தில் விபரிக்கப்படும். இவ்விடத்தில் திரு மக்காவில் ஹாஜிகளைத் தவிர்த்து பாக்கியுள்ள உலக மெங்கணும் வாழும் முஸ்லிம்கள் இத்திரு நாளை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்ற விபரத்தையே இங்கு குறிப்பிடப் படுகிறது.

இத்திருநாளும் உலக மக்களுக்கு ஏற்பட்ட ஒரு மகத்தான துர்அதிர்ஷ்டம் நீங்கி அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு ஜீவியத்திற்கு நன்றி செலுத்தும் முறையிலேயேயாம். முற்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் குடும்பத்திலுள்ள முதற் புதல்வனை இறைவனுக்காக தத்தம் செய்யும் வழக்க மிருந்தது. இவ்வழக்கம் பிற்காலத்தில் தப்பருத்தம் செய்துகொண்டதன் காரணமாக முதல் புதல்வனை வெட்டிக் கொலை செய்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதாக ஏற்பட்டுவிட்டது.

எல்லாம் வல்ல இறைவன் உலகையும் உலகிலுள்ள சகல பொருள்களையும் படைத்துக்காத்து வருகின்றான். நமக்குத் தேவையான சகலத்தையும் அவன் நமக்களிக்கின்றான். நம்மிலிருந்து அவனுக்கு எதுவும் தேவை இல்லை. ஆனால், அவன் நமக்களித்துவருகிற உபகாரங்களையும் அருட்கொடைகளையும் நாம் நினைவு கூர்ந்து அவனுக்கு நன்றி செலுத்தி, நமக்கு அவன் கடடளை இட்டதுபோல நாம் நடந்துகொண்டால், இதற்குபதிலாக அவன் இம்மையிலும், மறுமையிலும் இன்னும் அநேக நன்மைப் பயன்களை அளிக்கிறான். ஆதலால், அவன் நம்மிலிருந்து நரபலியை விரும்பவுமில்லை. இந்நர பலியினால் அவன் திருப்தியடைவதுமில்லை. இந்நர பலியை அவன் விரும்பவில்லை என்

பதைத்தான் இத்திரு நாள் நமக்கு விளக்குகிறது. இது ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் காலத்தில்தான் இறைவனால் அறிவிக்கப்பட்டது.

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது ஏகப் புதல்வரும் முதற்பேறுமான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்து இறைவனுக்காக பலியிடுவதுபோல சொர்ப்பனம் கண்டார்கள். இவ்விதமாகச் செய்யும்படி இறைவன் தமக்குக் கட்டளையிட்டிருக்கிறான் என நினைத்து தமது புதல்வரை பலியிட திருமக்காவைச் சேர்ந்த மினா என்ற ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அக்காலத்திலிருந்த வழக்கத்திற்கேற்ப ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் தம்மைப் பலியிடுவதை ஒப்புக்கொண்டார்கள். அவரைப்பெற்றெடுத்த மாதா ஹஜ்றத் பீபீ ஹாஜரா அம்மாள் அவர்களும்கூட இதற்குச் சம்மதித்தார்கள்.

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைவன் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு தமது ஏகப்புதல்வரான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்தார்கள். ஆயினும், இறைவனுக்கு இத்தகைய குர்பானி தேவையில்லாததால், இறைவன் கட்டளைப்படி கத்தி அறுக்கவில்லை. பிறகு, இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்களை அழைத்து 'இப்ராஹீமே! உமது சொர்ப்பனத்தை நீர் மெய்யாக்கி 'னீர்" என்று கூறி, ஒரு ஆட்டை அறுத்து பலியிடுமாறு கட்டளையிட்டான். அன்று முதல் இறைவனுக்காக நரபலி இடும் வழக்கம் தெய்வக் கட்டளையின்படி நிறுத்தப்பட்டது. இறைவனது இவ்வுதவிக்கு நன்றி செலுத்தும் பொருட்டு முஸ்லிம்கள் வருஷந்தோறும் ஆட்டை அறுத்து குர்பானி செய்வதுடன், அது நிறுத்தப்பட்ட தினத்தை

பெரு நாளாகக் கொண்டாடி வருகிறார்கள். இப்பெரு நாளி லும்கூட இறைவனைத் தொழுவதும் குர்பானி கொடுப்ப தும்தான் முக்கிய கிரியைகள், இதனைப்பற்றிய விபரம் குர்பானி என்ற தலைப்பின் கீழ் அறிவிக்கப்படும். நோன் புப் பெரு நாளிலும், பக்ரீத் பெரு நாளிலும் இறைவனைத் தொழுவது ஒன்றுபோலவே இருப்பதால் அத்தொழுகை யைப்பற்றி முதலில் விபரிப்பாம்.

பெரு நாள் தொழுகை

நோன்புப் பெரு நாளின் தொழுகை நிறைவேற்ற மஸ்ஜிதுக்கோ அல்லது பெரு நாள் தொழுகைக்கென்று கிர்ணயஞ் செய்யப்பட்ட இடத்திற்கோ செல்வதற்கு முன் ஸ்நானஞ் செய்து, சுத்தமான அழகிய உடைகளை அணிந்து மனம்பூசி, ஏதேனும் மதுரமான கனிகளைப் புசித்து பித்று ஸதக்கா என்னும் தர்மத்தைக் கொடுத்துவிட்டு, கால் நடையாகச் செல்லவேண்டும்.

அங்கு இமாம் குறித்த நேரத்தில் தொழுகையை நடத்தி வைப்பார். இமாம் ஜமாஅத்தாகத்தான் இத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். முதலில் தக்பீர் தஹ்ரீமா கட்டிய பிறகு, தனு ஓதி, தக்பீர் சொல்லித்தமது கைகளை இமாம் செவிவரை உயர்த்துவார். மற்றவர்களும் அவரைப் பின்றொடர்ந்து தக்பீர் கட்டுவதற்கு கைகளை உயர்த்துவதுபோல உயர்த்த வேண்டும். இவ்விதமாக மூன்று முறை தக்பீர் சொல்லி கைகளை உயர்த்துவார். முதல் இரண்டு முறைகளிலும் தக்பீர் சொல்லி கையைக் கட்டாமல் சோர விட்டு மூன்றுவது முறையில் கையைக் கட்டிக்கொள்வார். முக்ததீகளும் அப்படியே செய்ய வேண்டும்.

அப்புறம் இமாம் ஸிறத்துல் பாத்திஹா, லம்மு ஸிறத்து ஆகியவைகளை இரைந்து ஓதி ருக்கூஉ, ஸுஜூது முதலியவைகளைச் செய்வார். இரண்டாவது ரக்கஅத்தில் வழக்கம்போல் ஸிறத்துல் பாத்திஹா, லம்மு ஸிறத்து ஆகியவைகளை ஓதிய பிறகு மூன்றுமுறை தக்பீர்சொலலி நான்காவது முறை தக்பீர்சொல்லி ருக்கூஉ செய்வார். முந்தின ரக்கஅத்தில் தக்பீர் கட்டாமல் கையைச் சோரவிட்டதுபோல் இரண்டாவது ரக்கஅத்திலும் கையைச் சோரவிடுவார். பாக்கியுள்ள தொழுகைகளெல்லாம் வழக்கமான தொழுகைகளைப்போல்தான்.

தொழுகை முடிந்த பிறகு இமாம் குத்பா ஓதுவார். குத்பாவில் பெருநாளின் விசேஷங்களையும் பித்றுஸதக்கா கொடுப்பதின் புண்யபயன்களையும் குறித்து விபரிக்கப்படும். பக்ரீத் பெருநாள் தொழுகையும் இதுபோலவே. ஆனால், தொழுவதற்கு முன் ஒன்றையும் அருந்தாமல் தொழுகச் செல்வது முஸ்தஹப்பு. பக்ரீத் பெருநாள் குத்பாவில் குர்பானி கொடுப்பதைக் குறித்த விசேஷங்கள் கூறப்படும்.

பெருநாள் தொழுகையின் காலம்

சூரியன் உதயமாகி ஒரு வல்லயப் பிரமாணம் உயர்ந்ததிலிருந்து மதியம்வரை பெருநாள் தொழுகைகளை நிறைவேற்றலாம். தொழுதுகொண்டிருக்கும்போதே மதிய மாகிவிட்டால் தொழுகை நிறைவேறுது. ஷவ்வால் மாதம் முதல் தேதியில் தொழுகையை நிறைவேற்ற முடியாத தக்க காரணமிருந்தால் அடுத்த நாளில் தொழு கையை நிறைவேற்றலாம். அதற்கப்புறமும் பிற்படுத்தக் கூடாது. பக்ரீத் பெருநாள் தொழுகையை மூன்று நாள்வரை பிற்படுத்தலாம்.

பெருநாள் தொழுகைகளின் ஷர்த்துகள்

ஜும்ஆ தொழுகைக்குள்ள ஷர்த்துகளெல்லாம் பெருநாள் தொழுகைகளுக்கு முண்டு. ஆனால், குத்பா ஓதுவதுமட்டிலும் ஷர்த்தல்ல. பெருநாள் தொழுகைக்குப் பிறகு குத்பா ஓதுவது ஸுன்னத்து.

பெருநாள் தொழுகைகளின் முஸ்தஹப்புகள்

1. நோன்புப் பெருநாளன்று தொழுகைக்கு முன்னர் மதுரமான கனிகளை ஒற்றைப்பட புசித்தல்,

2. மிஸ்வாக்குச் செய்தல்,

3. ஸ்னானம் செய்தல்,

4. மணம் பூசுதல்,

5. தன்னிடத்திலுள்ள மிக அழகான உடையை அணிதல்,

6. தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்னதாக பித்றுலதக்காவைக் கொடுத்தல்,

7. ஈதுகாஹ் அதாவது பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இடத்திற்குக் காலையிலேயே கால் நடையாகச் செல்லல்.

8. வழியில் சப்தமில்லாமல் மெதுவாகத் தக்பீர் சொல்லல்.

9. தொழுகைக்குச் சென்ற வழியிலல்லாமல் வேறு வழியாகத் திரும்பிவரல்.

10. பக்ரீத் பெருநாளன்று தொழுத பிறகு புசித்தல்,

11. ஈதுகாவிற்குச் செல்லும்போது வழியில் தக்பீரை இரைந்து சொல்லல்,

பெருநாள் தொழுகையின் மக்றாஹ்கள்

1. பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன் ஈதுகாவில் நபில் தொழுவது மக்றாஹ். இதுபோல வீட்டில் தொழுவதும்கூட மக்றாஹ்தான்.

2. பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஈதுகாவில் நபில் தொழுவது மக்றாஹ். வீட்டிற்கு வந்த பிறகு வீட்டில் தொழுவது மக்றாஹல்ல.

3. பக்ரீத் பெருநாள் தொழுகையை அகாரணமாகப் பிற்படுத்துவது மக்றாஹ்.

பித்று ஸதக்கா

அடிமையாக இல்லாத முஸ்லிம் தனக்கு அவசியமான தேவைகளைப் பார்க்கிலும் அதிகமான சொத்துக்களை ஜக்காத்து கடமையாவதற்குள்ள அளவிற்கு வைத்திருந்தால் அதாவது ஜக்காத்துக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் தனக்காகவும், தன் சிறு குழந்தைகளுக்காகவும், தனது ஊழியத்திற்காக வைத்திருக்கிற அடிமைகளுக்காகவும் பித்று ஸதக்காகக் கொடுப்பது வாஜிபு.

தன் மனைவிக்காகவும், வியாபாரத்திற்காக வைத்திருக்கிற அடிமைகளுக்காகவும், தன் மக்களில் வயது வந்தவர்களுக்காகவும் பித்றுஸதக்கா கொடுக்கவேண்டியதில்லை. தன் சிறு குழந்தைகளுக்குச் சொந்தமான சொத்திருந்தால், அச்சொத்திலிருந்து அவர்கள் சார்பாக பித்ரு ஸதக்கா கொடுக்கலாம்.

மணிக்கோதுமை, பேரீத்தம்பழம், தொலிக்கோதுமை கொடி முந்திரிப்பழம் முதலியவைகளை பித்ருஸதக்காவாகக்

கொடுக்கலாம். இவைகளில்லாவிடில் இவைகளுக்குரிய கிரயத் தொகையையாவது இக் கிரயத்திற்குரிய தானியங் களையாவது கொடுக்கலாம். மணிக்கோதுமையாக இருந்தால் பட்டணம் படியில் ஒன்றே அரைக்கால் படியும், தொலிக்கோதுமை, பேரீத்தம்பழம், கொடி முந்திரிப் பழமாக இருந்தால் பட்டணம் படியில் இரண்டேகால் படியும் கொடுக்கவேண்டும். அறபி நாட்டில் அக்காலத்தில் வழங்கிய ஸாஉ என்னும் மரக்கால் இக்காலத்தில் நமது நாட்டிலுள்ள பட்டணம்படிக்கு இரண்டேகால்படி எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. இக்கணிப்புப் படிதான் மேற் கண்ட விகிதாசாரம் கூறப்பட்டது.

நோன்புப் பெருநாள் கிழக்கு வெளுத்தவுடன் பித்ரு ஸதக்கா வாஜிபாகிவிடும். தொழுகைக்குச் செல்வதற்குள் இதனைக் கொடுத்துவிடுவது முஸ்தஹப்பு. இதனைக் கொடுக்காமல் பிற்படுத்துவது மக்றூஹ். றமலான் மாதத்திலேயே இதனைக்கொடுப்பது அதாவது பித்ரு ஸதக்கா வாஜிபாகுவதற்குரிய நேரம் வருவதற்கு முன்ன தாகவே இதனைக் கொடுத்துவிடுவது ஆகும். ஒரு வருக்கும் கொடுக்கலாம், பலருக்கும் கொடுக்கலாம். பல பேருடைய பித்ருஸதக்காவை ஒருவருக்கும் கொடுக்கலாம்.

தக்பீறுத் தஷ்ரீக்

பக்ரீத் பெருநாளின் முதல் தினத்திலிருந்து அதாவது துல்ஹஜ்ஜு மீ 9ஆ காலை பஜ்ரிலிருந்து 23-நேரங்கள் அதாவது துல்ஹஜ்ஜு மீ 13ஆ மாலை அஸர் தொழுகைவரை ஒவ்வொரு பர்லான தொழுகைக்கும் பிறகு தக்பீர் சொல்வது வாஜிபு. இமாம் ஜமாஅத்தாக

தொழுகையை நிறைவேற்றியவர்கள்மீது தான் இந்தத் தக்பீர் சொல்வது வாஜிபு என்பதாக இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். தனிமையாகத் தொழுபவர்களாயினும், முஸாபிர்களாயினும், கிராமவாசியாயினும் சரியே எல்லோரும் இத்தக்பீரை ஒருமுறை கூறுவது வாஜிபு என்பதாக இமாம் அபூயூஸுப் (றஹ்), இமாம் முஹம்மது (றஹ்) ஆகிய இருவரும் கூறி இருக்கிறார்கள். ஒருமுறையைப் பார்க்கினும் அதிகமாக ஓதுவது முஸ்தஹப்பு.

தக்பீறுத் தஷ்ரீக் ஓதும் விதம்

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ
وَلِلّٰهِ الْحَمْدُ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர்; அல்லாஹு அக்பர் வ லில்லாஹில் ஹம்து.

"அல்லாஹுத் தஆலா மிகப் பெரியவன். அல்லாஹுத் தஆலா மிகப் பெரியவன். வணக்கத்திற்குரியநாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர்த்து வேறு யாருமில்லை. அல்லாஹுத் தஆலா மிகப் பெரியவன். அல்லாஹுத் தஆலா மிகப் பெரியவன். இன்னும் அல்லாஹுத் தஆலாவிற்கே சகல புகழும் தகும்" என்பது இதன் பொருள்.

குர்பானி

துல்ஹஜ்ஜு மாதம் 10ஆ பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பிறகிலிருந்து அம்மாதம் 12ஆ வரை

அதாவது மூன்று நாட்கள்வரை குர்பானி கொடுக்கலாம். இம்மூன்று நாட்களுக்கும் அய்யாமுன்னஹ்ர் என்று பெயர். குர்பானிக்கு ஆடு, மாடு, ஒட்டகை ஆகிய மூவகைப் பிராணிகளையும் அறுக்கலாம். ஒட்டகை, மாடு ஆகியவை களை அறுத்தால் 7 பேருக்கு ஒன்று அறுப்பது போது மானது. ஆடு அறுத்தால் நபர் ஒன்றுக்கு ஒரு ஆடு வீதம் அறுக்கவேண்டும். செம்மறி ஆடு வெள்ளாடு என்ற வித்தியாசமில்லை.

குர்பானி கொடுக்கப்படும் பிராணி ஒட்டகமாக இருந்தால் 5 வருஷம் சென்றதாக இருக்கவேண்டும். மாடாக இருந்தால் 2 வருஷம் சென்றதாக இருக்கவேண் டும். ஆடாக இருந்தால் ஒரு வருஷம் சென்றதாக இருக்க வேண்டும். தும்பை ஆடாக இருந்தால் ஆறுமாதம் சென்றதாக இருந்தால் போதுமானது. ஆனால், அது வேறு பெரிய ஆடுகளுடன் கலந்திருந்தால் பருமனில் அது மற்றைய ஆடுகளுக்கு வித்தியாசப்பட்டிருக்கக் கூடாது. 6 மாதக்குட்டியைப் பார்க்கினும் ஒரு வருஷம் சென்ற தும்பை ஆட்டை அறுப்பதுதான் விசேஷம்.

குர்பானிக்கு அறுக்கப்படும் பிராணி கொம்புள்ள தாகவும், உறுப்புகளில் குற்றங் குறையில்லாததாகவும், பெரியதாகவும், கொழுத்ததாகவும் இருக்கவேண்டும். கொம்பு அடியுடன் முறிந்துபோயிருந்தாலும், கால் முறிந்துபோயிருந்தாலும் குர்பானிக்கு அதனை அறுக்கக் கூடாது. காது, வால், பின் துடை இவைகளில் மூன்றிலொருபங்குக்குக்கு அதிகமாக அறுக்கப்பட்ட பிராணிகளைக் குர்பானி செய்யலாகாது. தீனி தின்னமுடி யாத பல்லில்லாத பிராணியையும் குர்பானி செய்யலாகாது.

ஆடு மாடு ஒட்டகங்களில் பைத்தியங்கொண்டவைகள், நொண்டியாயிருந்தாலும் அறுக்கிற இடம்வரை நடந்து வரக் கூடியவைகள், கிழ ஆடு, விதையடித்த ஆடு, இரை மேயக்கூடிய ஆடு, சொறிபிடித்த புஷ்டியான ஆடு, கொம்பு சொற்பமாக முறிந்த ஆடு ஆகியவைகளைக் குர்பானி கொடுக்கலாம்.

குர்பானி இரைச்சியை மூன்று பங்குசெய்து ஒரு பங்கை ஏழைகளுக்கு விநியோகஞ்செய்து விடவேண்டும். மற்றொரு பங்கை பந்துக்களுக்கும் சினேகிதர்களுக்கும் கொடுக்கவேண்டும். இன்னொரு பங்கைத் தன் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதுதான் மேல். குர்பானியின் தோலை இலம் கொடுக்கலாம். படுக்கை, விரிப்பு, தண்ணீர்ப் பை முதலியவைகளாகச்செய்து உபயோகிக்கலாம். ஆட்டை அறுத்தவருக்குக் கூலியாகக் கொடுக்கக்கூடாது. அல்லது கிரயத்திற்கு விற்றுச் சொந்த உபயோகத்தில் ஈடுபடுத்தலாகாது.

குர்பானிக்கென்று வாங்கிய ஆட்டை அறுக்க முடியாமல், குர்பானிகொடுக்கும் காலம் கழிந்துவிட்டால் அதனை அறுக்காமல் எவருக்கேனும் ஏழைக்கு தர்மம் செய்து விடவேண்டும். குர்பானிக்காக ஆட்டை வாங்காமலிருந்தால் அதன் கிரயத்தை தர்மம்செய்து விடவேண்டும்.

பித்ரு ஸதக்கா கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் குர்பானி கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். பருவமடையாத சிறுவர்களுக்காகவும் தன் ஊழியத்திற்காக வுள்ள அடிமைகளுக்காகவும் குர்பானி கொடுக்கவேண்டும் என்ற அவசியமில்லை. பருவமடையாத சிறுவர்களுக்குச் சொத்திருந்தால் அவர்கள் சார்பாக தந்தை அல்லது

போஷகன் அவர்களது சொத்திலிருந்து குர்பானி கொடுக்க வேண்டும். ஆனல், அந்தக் குர்பானியின் மாமிசத்தை அவனது சொந்த உபயோகத்திற்காகவும், அவனது மனைவி, பணிவிடைக்காரர்களுக்காகவும் உபயோகப்படுத்தலாம். அதனை தர்மங்கொடுக்கலாகாது.

கலாவான தொழுகைகளின் நிய்யத்துகள்

பஜ்ருடைய கலா

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ قَضَآءً فَرْضَ الْفَجْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹித் தஆலா ரக்க அத்தைனி கலாஅன் பர்லல் பஜ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(பஜ்ருடைய கலாவான இரண்டு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறை வேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன்நோக்கி நின்ற வண்ணம் தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

இதே பிரகாரம் ஒவ்வொரு வக்துடைய கலாத் தொழுகைகளுக்கும், அந்தந்த வக்துடைய பெயர்களைச் சேர்த்து நிய்யத்துச் சொல்லி தக்பீர் கட்டவேண்டும்.

உதாரணமாக, லுஹருடைய கலா தொழவேண்டுமாயின், மேலே எழுதியுள்ள நிய்யத்தில் "பர்லல் பஜ்ரி என்பதற்கு பதிலாக" பர்லல் லுஹரி என்று மாற்றிச் சொல்லவும்.

கலாத் தொழுகை

தொழுகவேண்டிய நேரத்தில் தொழுகையை நிறை வேற்ற முடியாமல் தவறிவிட்டால், அதனைக் கலாச் செய்யவேண்டும். இவ்வாறு கலாச்செய்வதால் தவறிப் போன அத்தொழுகையை ஈடுசெய்யமுடியும். ஆறு நேரத்துத் தொழுகைகளுக்குக் குறைவாக ஒருவருக்குக் கலா இருந்தாலும் அல்லது தொழுகை கலாவே இல்லா திருந்தாலும் அவருக்கு ஸாஹிபுத் தர்த்தீபு என்று பெயர்.

இவ்வாறுள்ளவர்கள் தங்கள்மீது கலா இருக்கிற தொழுகைகளை வரிசைக் கிரமமாக கலாச் செய்துவிட்டு அப்புறம் தன்மீது கடமையாகவுள்ள நேரத்துத் தொழு கையை நிறைவேற்றவேண்டும். தவறிப்போன தொழுகை களைக் கலாச்செய்து கொண்டிருந்தால் அந்த நேரத்துத் தொழுகையும் கலாவாகிவிடுமென்றிருந்தால் இயன்றவரை கலாத் தொழுகைகளைத் தொழுதுவிட்டு, நேரத்துத் தொழு கைகளை கலாவாகாமல் நிறைவேற்றிவிடவேண்டும்.

உதாரணமாக ஒருவருக்கு பஜ்றும் லுஹரும் கலாவாகிவிட்டதாக வைத்துக்கொள்வோம். இவ்வாறு இரண்டு நேரத்துத் தொழுகைகள் மட்டிலும் இவருக்கு கலாவாகி இருப்பதால் இவர் ஸாஹிபுத் தர்த்தீபுக்காரராக இருக்கிறார். இவர் அஸர் தொழுகப்போனால் தன்மீது கடகையாகித் தவறிவிட்ட மேற்கண்ட இரண்டு நேரத் தொழுகைகளையும் வரிசைக் கிரமமாக முதலில் பஜ்ரையும், அப்புறம் லுஹரையும் தொழவேண்டும். இறுதியாக அந்த நேரத்து அஸர்த் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ஆனால், மேற்கண்ட இரண்டு நேரத் தொழுகை களையும் கலாச்செய்த பிறகு, அஸர்த் தொழுகையை

நிறைவேற்ற நேரமில்லாதிருப்பின் முதலாவதாக பஜ்ரை மட்டிலும் கலாச்செய்துவிட்டு, அப்புறம் அஸர்த் தொழுகையை நிறைவேற்றலாம்.

ஐந்து நேரங்களுக்குமேல் அதிகமாகத் தொழுகைகள் கலாவாகிவிட்டால், முதலில் கலாவான தொழுகைகளை நிறைவேற்றவேண்டும்; அப்புறம்தான் நேரத்துத் தொழுகையை நிறைவேற்றவேண்டும் என்ற அவசியமில்லை. நேரத்துத் தொழுகையை முதலில் நிறைவேற்றிவிட்டு அப்புறம் கலாவான தொழுகைகளை வரிசைக் கிரமமாக கலாச் செய்யவேண்டும். கலாவான தொழுகைகள் இத்தனை என்று நிர்ணயஞ் செய்வதற்கில்லாமல் அதிகமான தொழுகைகளை கலாச் செய்யவேண்டியதிருந்தால் "என்மீது கலாவான லுஹர் தொழுகைகளில் கடைசியானதை கலாச் செய்கிறேன்" என்று நிய்யத்துச் செய்யவேண்டும். அல்லது "என்மீது கலாவான லுஹர் தொழுகைகளில் முதலாவதைக் கலாச் செய்கிறேன்" என்று நிய்யத்துச் செய்து கலாவான தொழுகைகளை நிறைவேற்றலாம். ஆனால், கலாவான தொழுகைகளை லுஹர், அஸர், இஷா என்று பெயர் குறிப்பிடவேண்டும்.

சூரிய கிரணத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْكُسُوْفِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி ஸலாதல் குஸூபி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(சூரிய கிரணத்துடைய இரண்டு ரக்க அத்து தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றுபவனாக கஃபாஷரீபை முன்னோக்கி நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

சந்திர கிரகணத் தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْخُسُوْفِ مُتَوَجِّهًا
اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ،

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி ஸலாதல் குஸூபி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(சந்திர கிரணத்துடைய இரண்டு ரக்க அத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபாஷரீபை முன்நோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

சூரிய சந்திர கிரணங்கள்

சூரிய கிரணம் தீண்டும்போது இறைவனைத் தொழுது துஆக்கேட்பது ஸுன்னத்து. சூரிய கிரணம் தீண்ட வாரம்பித்தவுடன் தொழுகைக்குவரும்படி ஜனங்களை அழைக்கவேண்டும். ஆனால், பாங்குசொல்லக் கூடாது. ஜனங்கள் ஒன்று சேர்ந்தவுடன் இமாம் ஜமாஅத்தாகத் தொழவேண்டும். முஸ்லிம் அரசன் அல்லது அவனது கட்டளையைப் பெற்றவர் இந்தத் தொழுகைக்கு இமாமாக

நிற்கவேண்டும். இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதால் இதற்கு இக்காமத்துச் சொல்லவேண்டியதில்லை.

கிரணம் தீண்டுதல் விடும்வரை தொழுகையும் துஆவும் இருக்கவேண்டியதால் தொழுகையை நீட்டித் தொழலாம். அதாவது கிரஅத் ஓதும்போது நீண்ட ஸூறத்தை ஓதி, அதற்குத் தக்கவேறு ருக்கூஉ, ஸுஜூதுகளை நீட்டித் தொழலாம். தொழுகையை நீட்டித் தொழமுடியாவிடில் துஆச் செய்வதையாவது கிரணம் விடும்வரை நீட்டி வைக்கலாம்.

துஆச் செய்யும்போது கிப்லாவை முன்னோக்கி உட்கார்ந்த வண்ணம் துஆச் செய்யலாம், அல்லது ஜனங்களை நோக்கி நின்றுகொண்டு துஆச் செய்யலாம் மற்றைய ஜனங்கள் ஆமீன் சொன்னல் போதுமானது. அரசன் அல்லது அவனது உத்திரவு பெற்றவர் இல்லாதிருந்தால் ஜனங்கள் தனித் தனியே தொழுது துஆச் செய்யவேண்டும்.

இந்தத் தொழுகையை நிறைவேற்றும்போது இமாம் கிரஅத்தை இரைந்து ஓதக்கூடாது என்று ஹஜ்றத் இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். இரைந்து ஓதவேண்டும் என்று ஹஜ்றத் இமாம் அபூயூஸுப், ஹஜ்றத் இமாம் முஹம்மது றஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஆகிய இருவரும் கூறி இருக்கிறார்கள். இந்தத் தொழுகைக்கு குத்பா முதலியவைகள் கிடையா.

சந்திர கிரணம் தீண்டும்போதும் இவ்வாறே தொழவேண்டும். ஆயினும், இமாம் ஜமாஅத்து இல்லை. தனித் தனியாகத்தான் நிறைவேற்றவேண்டும். அவரவர்

வீடுகளிலேயே இத்தொழுகையை நிறைவேற்றலாம். அரசன் அல்லது அவனது அனுமதிப் பெற்றவர் இருக்கவேண்டும் என்ற அவசியமுமில்லை.

திடுக்கமான நேரங்களின் தொழுகைகள்

பகல் காலத்தில் இருள் மூடிக்கொள்ளல், பலமான காற்றுவீசல், பூமியதிர்ச்சியுண்டாகுதல், பலத்த இடி முழக்கங்கள் உண்டாகுதல், இரவில் பயங்கரமான பிரகாசங்கள் தோன்றல், பனிப் பெய்தல், விடாமழை பொழிதல், தொத்து நோய்கள் ஏகமாகப் பரவுதல்போன்ற திடுக்கமான காரியங்கள் நிகழும்போது நபில் தொழுது இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும்.

"மனிதர்களே, திடுக்கங்களில் ஒன்றை நீங்கள் கண்டால் தொழுகையளவில் நீங்கள் மீளுங்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

மழைதேடுகிற தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْاِسْتِسْقَاءِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அதைனி ஸலாதல் இஸ்திஸ்காஇ முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(மழைதேடுகிற தொழுகையின் இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும்

பொருட்டு கஃபாஷரீபை முன்நோக்கி நின்ற வண்ணம் தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

மழைத் தொழுகை

மழை பெய்யாததால் நாட்டில் பஞ்சம் தோன்றுவ தாகத்தெரிந்தால் மழைக்காக இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். மூன்று தினங்கள்வரை நகருக்கு வெளிபில் ஊரி லுள்ள குழந்தைகள், வயோதிகர்கள், ஆடு மாடுகள் யாவும் செல்லவேண்டும். இமாம் ஜமாஅத்தாக ஈதுத் தொழு கையைத் தொழுவதுபோல தொழுது தெளபா இஸ்திஃபார் செய்து, இமாம் கிப்லாவின் பக்கமாக நின்றுகொண்டு இரண்டு கைகளையும் உயர்த்தி துஆச் செய்யவேண்டும்.

மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக இவ்விதம் செல்லவேண்டும். இடைவிடக் கூடாது. நடந்துதான் செல்லவேண்டும். ஒருவருக்கொருவர் அநீதி செய்திருந் தால் அவைகளைப் பரிகரித்துத் கொள்ளவேண்டும். இமாம் ஜமாஅத்தாகத் தொழக் கூடாதென ஹஜ்றத் இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்கள் கூறி இருக்கின்றார்கள். இப்படித் தொழுவது ஜாயிஸ்தான். ஸுன்னத்து அல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு தொழுததாக ஒரே ஒரு ரிவாயத்துதான் வந்திருக்கிறது. ஆனால், அவர்கள் மழைக்காக தொழுகையில்லாமல் துஆச் செய்த தாக பல ரிவாயத்துகள் வந்திருக்கின்றன.

தஹிய்யத்துல் மஸ்ஜித்

மஸ்ஜிதுக்குள் பிரவேசித்தவுடன், அங்கு அமரு வதற்கு முன் இரண்டு ரக்கஅத்துத் தொழுவது ஸுன் னத்து. ஏனெனில், "உங்களில் ஒருவர் மஸ்ஜிதினுட்

சென்றால் இரண்டு ரக்கஅத்துத் தொழாமல் உட்கார வேண்டாம்" என நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள். பர்லுத் தொழுகையை நிறை வேற்றுவதும் கூட இதற்குப் பகரமாகிவிடும். இது போலவே தஹிய்யத்துல் மஸ்ஜித் என்ற நிய்யத்தில்லாமல் தொழுகிற எந்தத் தொழுகையும் இதற்குப் பகரமாகும். மேலும், ஒருவர் மஸ்ஜிதுக்குள் சென்றவுடன் அமர்ந்து அப்புறம் தொழுதாலும் போதுமானது. ஆயினும், உட்காருவதற்கு முன்னதாகவே இதனை நிறைவேற்று வதுதான் மேல்.

ஒலுவு நபில்

ஒலுச் செய்தவுடன் அதன் ஈரம் காய்வதற்கு முன் இரண்டு ரக்கஅத்து நபில் தொழுவது முஸ்தஹப்பு.

இஸ்திகாரா தொழுகையின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ الْاِسْتِخَارَةِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி ஸலாதல் இஸ்திகாரதி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஸ்திகாரா தொழுகையின் இரண்டு ரக்கஅத்துகள் அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன் நோக்கி நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

இஸ்திகாரா தொழுகை தொழுவதின் நோக்கமாவது: ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்து தனக்கு அக் காரியம் சித்திக்குமாறு ஆண்டவனை வேண்டித் தொழுகும் தொழுகைக்கு இஸ்திகாரா தொழுகை என்று பெயர்.

இதற்கு இரண்டு ரக்கஅத்துகள் உளூ நிய்யத்து செய்து தக்பீர்கட்டி முந்தினரக்கஅத்தில் "குல்யா அய்யுஹல் காபிரூனு" ம், இரண்டாம் ரக்கஅத்தில் "குல்ஹூ வல்லாஹூ அஹது" ம் ஓதி தொழுது முடிந்த பின் தனது காட்டத்துக்கு தக்கவாறுள்ள துஆவை ஓதவும்.

ஸலாத்துல் இஸ்திகாராவின் துஆ

நமக்கு ஏற்படும் ஒவ்வொரு காரியத்தையும் ஆரம்பிப் பதற்கு முன்னதாக இரண்டு ரக்கஅத்து நபில் தொழுது அடியிற்கண்ட துஆவை ஓதுவது முஸ்தஹப்பு.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَاَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَ
اَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ فَاِنَّكَ تَقْدِرُ وَلَا اَقْدِرُ وَتَعْلَمُ
وَلَا اَعْلَمُ وَاَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ اَللّٰهُمَّ اِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ
هٰذَا الْاَمْرَ خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ اَمْرِيْ وَعَاجِلِهٖ
وَاٰجِلِهٖ فَاقْدُرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ وَاِنْ كُنْتَ
تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ شَرٌّ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ
اَمْرِيْ وَعَاجِلِهٖ وَاٰجِلِهٖ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِيْ عَنْهُ وَاقْدُرْ
لِيَ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ رَضِّنِيْ بِهٖ

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக்க பிஇல்மிக்க வ அஸ்தக்திருக்க பிகுத்ரத்திக வ அஸ்அலுக்கமின் பலுலிக்கல் அளீம். ப இன்னக தக்திரு வலாஅத்திரு. வ தஃலமு வலாஅஃலமு. வ அன்த அல்லாமுல் குயூப். அல்லாஹும்ம இன் குன்த தஃலமு, அன்ன ஹாதல் அம்ர கைருன் லீ பீதீனி வம ஆஷீ வ ஆக்கிபத்தி அம்ரீ வ ஆஜிலிஹி வ ஆஜிலிஹி பக்திர்ஹு லீ வ யஸ்ஸிர்ஹு லீ தும்ம பாரிக்லீ பீஹி. வ இன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன் லீதீனி வமஆஷி வ ஆக்கிபத்த அம்ரீ வஆஜிலிஹி வஆஜிலிஹி பஸ்ரிப்ஹு லீ அன்னீ வஸ்ரிப்னீ அன்ஹு வக்திர் ஹுலீயல் கைர ஹைதுகான தும்ம ரல்லினீ பிஹி.

எக்காரியத்தைச் செய்தாலும் அல்லாஹுத் தஆலாவினிடம் உதவிதேடி, அவனிடம் நன்மையை நாடிச் செய்வதில் எப்பொழுதும் நன்மையுண்டு. அவ்வாறு செய்யாமல் ஒரு காரியத்தை ஆரம்பிப்பது அவ்வளவு விசேஷமில்லை. "இஸ்திகாராச் செய்தவர் நஷ்டவாளராகார்" என்பதாக நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். "அல்லாஹுத் தஆலாவினிடம் இஸ்திகாராச் செய்வது ஆதமுடைய மக்களின் சீதேவித் தனத்தில் நின்றுமுள்ளது. அவனிடம் இஸ்திகாராச் செய்யாமலிருப்பது அவனது நிர்ப்பாக்கியத்தில் நின்று முள்ளது" என்பதாகவும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இவ்வாறு இஸ்திகாரா செய்தகாரியம் நன்மையானதாக இருந்தால் அதனை இனிது நிறைவேற்ற இறைவன் தெளபீக் செய்வான். அக்காரியத்தில் நன்மை இல்லாதிருப்பின் அக்காரியத்தைச் செய்வதற்கான சந்தர்ப்பம் விலகிவிடும்.

ஆதலால், இஸ்திகாராச் செய்வது முஸ்தஹப்பு. ஆனால், இவ்வாறு ஏழுமுறை இஸ்திகாராச் செய்யவேண்டும். செய்வதற்குப் பலமுறைகளிருக்கின்றன. மேலே கூறி இருப்பது ஒரே ஒருமுறைதான். மற்றவைகளை இங்கு விவரிப்பதாயின் அது மிக விரிவாக இருக்குமென்றஞ்சி விடுத்தனம். விரிவான நூல்களில் அவைகளைக் கண்டு தெளிக.

கஸ்ருத் தொழுகைகளின் நிய்யத்துகள்

லுஹரின் கஸ்ரு

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ قَصْرًا فَرْضَ الظُّهْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி கஸ்ரன் பர்லல் லுஹ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(லுஹருடைய கஸ்ரான இரண்டு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத்தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன்நோக்கி நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

அஸரின் கஸ்ரு

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ قَصْرًا فَرْضَ الْعَصْرِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி கஸ்ரன் பர்லல் அஸ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லஹு அக்பர்.

(அஸ்ருடைய கஸ்ரான இரண்டு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறை வேற்றும் பொருட்டு கஃபா ஷரீபை முன்நோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

இஷாவின் கஸ்ரு

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ قَصْرًا فَرْضَ الْعِشَاءِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி கஸ்ரன் பர்லல் இஷாயி முதவஜ்ஜிஹன் இலாஜி ஹதில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(இஷாவினுடைய கஸ்ரான இரண்டு ரக்கஅத்து பர்லுத் தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபாஷரீபை முன்நோக்கிய வண்ணம் நின்று தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

ஸுப்ஹுக்கும், மகுரிபுக்கும், மற்றுமுண்டான நவ்வாலு ரக்கஅத்து ஸுன்னத்துக்களுக்கும் கஸ்ரு இல்லை.

ஸலாதத் தஸ்பீஹின் நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ لِلّٰهِ تَعَالٰى رَكْعَتَيْنِ صَلٰوةَ التَّسْبِيْحِ
مُتَوَجِّهًا اِلٰى جِهَةِ الْكَعْبَةِ الشَّرِيْفَةِ اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய லில்லாஹி தஆலா ரக்க அத்தைனி ஸலாதத் தஸ்பீஹி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர்.

(ஸலாதத் தஸ்பீஹ் உடைய இரண்டு ரக்கஅத்துகள் ஆண்டவனுக்காக நிறைவேற்றும் பொருட்டு கஃபாஷரீபை முன்நோக்கி நின்ற வண்ணம் தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

இத்தொழுகையின் நோக்கங்கள் :—

இதில் நான்கு ரக்கஅத்துகள் முஸ்தஹப்பாகும். மக்ரூஹான வக்தைத் தவிர மற்ற நேரங்களடங்கலும், ஒரு இரவு பகலடங்கலும் ஒரு விடுத்தம் தொழவும். இயலாவிட்டால் கிழமையில் ஒரு விடுத்தம், அல்லது மாதத்தில் ஒரு விடுத்தம், அலலது வருடத்தில் ஒரு விடுத்தம், அல்லது வயதில் ஒரு விடுத்தம் தொழவும். இதில் மிகுதமான தவாபுண்டாயிருக்கிறதென்று ஹதீதில் வந்து இருக்கிறது.

எல்லா வக்துகளுக்கும் பொதுவான நிய்யத்து

نَوَيْتُ اَنْ اُصَلِّيَ فَرْضَ هٰذَا الْوَقْتِ لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

நவைது அன் உஸல்லிய பர்ய ஹாலல் வக்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

(இந்த வக்தின் பர்லு தொழுகையை அல்லாஹுத் தஆலாவிற்காக தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.)

அதாவது, இது எல்லாத் தொழுகைகளுக்கும் பொதுவான, சுருக்கமான நிய்யத்து ஆகும். இதில்

அந்தந்த வக்துடைய பெயரும், தொழுகையின் வகையையும், மேலே கூறியிருக்கும் நிய்யத்தில் "பர்லஹாதல் வக்தி" என்ற இடத்தில் அமைத்து நிய்யத்துச் செய்து கொள்ளவேண்டும்.

உதாரணம் :—வித்ரு தொழுகையானால் வித்ர ஹாதல் லெலி என்று ஓதவேண்டும். இதே பிரகாரம் மற்ற வக்துகளையும் தொழுகலாம்.

ஜியாரத்துல் குபூர்

"கப்ருகளை ஜியாரத்துச்செய்யுங்கள். அது உங்களுக்கு மரணத்தை ஞாபகப்படுத்தும்"

"கப்றுகளை ஜியாரத்துச் செய்யவேண்டாமென்று உங்களை நான் தடுத்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது அவைகளை ஜியாரத்துச் செய்யுங்கள். அவைகளை நீங்கள் ஜியாரத்துச் செய்வதை அவர்களுக்கு ஸலாத்தாக அதாவது கருணையாகவும், அவர்களுக்கு இஸ்திஃபாராகவும் நீங்கள் ஆக்குங்கள்"

"ஒவ்வொரு ஜும்ஆவிலும் தனது பெற்றோர்கள் அல்லது அவர்களிலொருவரது கப்ரை ஜியாரத்துச் செய்பவருக்குப் பிழை பொறுக்கப்படும். இன்னும் அவர் நன்றி செய்தவராக எழுதப்படுவார்"

"மரித்தவாகள் தங்களை ஜியாரத்துச் செய்பவர்களை ஜும்ஆவின் தினத்திலும் அதற்கு முன் ஒரு நாளிலும் அதற்குப் பின் ஒரு தினத்திலும் அறிகிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது" என்று முஹம்மது பின்னுவாஹிஃ (றலி) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஜியாரத்துச் செய்யப்படுபவர்கள் தங்களிடம் ஜியாரத் துச் செய்பவர்கள்வந்த உடனேயே அறிந்துகொள்கிறார்கள். இன்னும் அவர்கள் கூறும் ஸலாமைச் செவியேற்று அவர் களுக்கு பதில் கூறுகிறார்கள். இதனால் அவர்கள் மருகுத லடைகிறார்கள் என்ற விபரம் ஹதீதுகளிலும், அதர்களிலு மிருந்து தெரிகிறது என்பதாக இப்னுல் கய்யிம் (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே, கப்ருகளை ஜியாரத்துச் செய்வது முஸ்தஹப்பு.

கப்றுகளை மிதிக்கக் கூடாது. நின்று()காண்டு ஜியாரத்துச் செய்வது ஸுன்னத்து. நாயகம் (ஸல்) அவர்கள் ஜன்னத்துல் பக்கீஇல் ஜியாரத்திற்குச் சென்றால்.

اَلسَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِيْنَ وَاِنَّا اِنْ شَاءَ اللّٰهُ بِكُمْ لَاحِقُوْنَ اَسْئَلُ اللّٰهَ لِيْ وَلَكُمُ الْعَافِيَةَ

அஸ்ஸலாமு அலைக்கும் தார கௌமின் மூமினீன் வ இன்ன இன் ஷா அல்லாஹ பிக்கும் லாஹிக்கூன் இஸ் அலில்லாஹ லீ வலக்குமுல் ஆபியத்த.

(மூமின்களான ஜனங்களில் வீடே உங்களுக்கு ஈடேற்றமுண்டாவதாக. அல்லாஹ் நாடினால் உங்களுடன் நிச்சயமாக நாங்கள் சேர்ந்துகொள்வோம். எனக்கும் உங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும்படி அல்லாஹ்த் தஆலாவைக் கேள்" என்பது இதன் பொருள்.) என்று கூறுவது வழக்கம்.

"கப்றுஸ்தானுக்குச் சென்றவர் ஸிறத்து யாஸீனை ஓதினால் அன்றைய தினத்தில் அல்லாஹ் அவர்களுக்கு

(வேதனையை) இலேசாக்குகிறான். அதனை ஓதுபவருக்கு கப்றுஸ்தானிலுள்ளவர்களின் எண்ணிக்குத் தக்கவாறு நன்மைகளிருக்கின்றன" என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆதலால், ஸூறத்து யாஸீனை ஓதி அவர்களுக்கு ஈஸால் தவாபு செய்யவேண்டும்.

"அல்லாஹ்வின் தூதரே! எங்களில் மரித்தவருக்காக நாங்கள் தர்மம் செய்கிறோம், அவர்களுக்காக நாங்கள் ஹஜ்ஜுச் செய்கிறோம், அவர்களுக்காக நாங்கள் பிரார்த்தனை புரிகிறோம். இவைகள் அவர்களுக்குச் சேருகின்றனவா?" என்று ஹஜ்றத் அனஸ் (றலி) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வினவினார்கள்.

அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "ஆம், நிச்சயமாகச் சேரும். உங்களில் ஒருவருக்கு உணவு நிறைந்த பாத்திரம் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும்போது நீங்கள் சந்தோஷமடைவதுபோல அவர்கள் நன்மைகளை ஈஸால் செய்வதால் சந்தோஷமடைகிறார்கள் என்று பதில் கூறினார்கள்" என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

"கப்றுஸ்தான் பக்கமாகச் செல்பவர் குல்ஹுவல்லாஹு ஸூறத்தை பதினொருமுறை ஓதி, அதன் நன்மைப் பயனைக் கப்ராளிகளுக்குச் சேர்ப்பித்தால் மரித்தவர்களின் எண்ணிக்கையின் அளவிற்கு அவருக்குக் கூலி கொடுக்கப்படுகிறது" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஜ்றத் அலிகர்ரமல்லாஹு வஜ்ஹஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

எனவே, கப்றுஸ்தானுக்குச் சென்றால் மேற்கண்ட ஹதீதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கப்ராளிகளுக்கு

ஸலாம் சொன்னதுபோல, ஸலாம்சொல்லி நின்றுகொண்டே ஸூறத்து யாஸீனையாவது குல்ஹு வல்லாஹு ஸூறத்தையாவது மேற்கண்ட எண்ணிக்கைப்படி ஓதி மரித்தவர்களுக்கு ஈஸால் தவாபு செய்வதுடன் அவர்களுக்காக துஆச் செய்யவும்வேண்டும்.

திருகுர்ஆனை உட்கார்ந்துகொண்டு ஓதினால் சாவதானமாக நல்லவிதமாக ஓதமுடியும் என்றிருந்தால், உட்கார்ந்துகொண்டு ஓதவேண்டும். இதற்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காக கப்ரில் உட்காருதல், மிதித்தல், தூங்குதல், மலஜல உபாதைகளைக் கழித்தல், அதிலுள்ள பசும்புற்பூண்டுகளை விருக்ஷங்களை அப்புறப்படுத்தல் ஆகிய வைகள் மக்ரூஹு.

பசும்புற் பூண்டுகள் இறைவனை தஸ்பீஹு செய்கின்றன. இந்த தஸ்பீஹினால் மரித்தவருக்கு மருகுதலேற்படுகின்றது. காய்ந்த புற்பூண்டுகளை அகற்றுவது மக்ரூஹல்ல.

ஸ்திரீகள் கப்றுகளை ஜியாரத்துச் செய்யச்செல்வது ஜாயிஸா? இல்லையா? என்பதைக் குறித்துச் சாதகபாதகமான விவாதங்கள் அதிகமுண்டு. வயோதிக ஸ்திரீகள் ஜியாரத்துக்குச் செல்லலாம் என்பதும், வாலிப ஸ்திரீகள் ஜியாரத்துக்குச்செல்லக் கூடாது என்பதும் தான் இவ்விவாதங்களின் முடிபு. அதுவும் ஸாலிஹான பெரியோர்களின் கப்றுகளுக்கு பரக்கத்தையும், றஹ்மானின் கிருபையையும் நாடி, ஷரீஅத்திற்கு மாறான காரியங்களைச் செய்யாமலும் செல்லவேண்டும். பித்ன இல்லாதமுறையில் அவர்கள் ஜியாரத்திற்குச் செல்வது ஆகும். ஷரீஅத்திற்கு விரோத

மான அநேக அனாச்சாரங்களை ஸ்திரீகள் தாம் அதிகம் செய்வதாலும், அவர்களால் அநேக பித்னாக்கள் ஏற்படுவதாலுமே அவர்கள் ஜியாரத்துக்குச் செல்வதை மக்றூஹ் என்றும், சிற்சில சந்தர்ப்பங்களில் ஹறாம் என்றுங் கூடக் கூறப்பட்டது. இவ்விதமான காரியங்களில்லாதிருக்கின் அவர்கள் ஜியாரத்துச் செய்வதும் முஸ்தஹப்பு தான் என்பதே அஸஹ்ஹான சொல்.

கப்ராளிகளுக்கு ஓதும் துஆ

اَللّٰهُمَّ رَبَّ الْاَجْسَادِ الْبَالِيَةِ وَالْعِظَامِ النَّخِرَةِ الَّتِيْ خَرَجَتْ مِنَ الدُّنْيَا وَهِيَ بِكَ مُؤْمِنَةٌ اُدْخُلْ عَلَيْهَا رُوْحًا مِّنْكَ وَسَلَامًا مِّنِّيْ

அல்லாஹும்ம றப்பல் அஜ்ஸாதில் பாலிய்யா வல் இளாமின்னகிரா அல்லத்தீ கரஜத் மினத்துன்யா வஹிய பிக மூமினத்தன் அத்கில் அலைஹா ரௌஹன்மின்க வ ஸலாமன் மின்னீ.

("நாயனே! உன்மீது விசுவாசங் கொண்டவளாக இருக்கிற நிலையில் இவ்வுலகைவிட்டு வெளிப்பட்டுள்ள இத்துப்போன எலும்புகளுக்கும், உக்கிப்போன உடலங்களுக்கும் றப்பானவனே! உன்னில் நின்றும் ஒரு சுகத்தையும், என்னில் நின்று ஒரு ஸலாமையும் அவைகளுக்குப் பிரவேசிக்கச் செய்வாயாக" என்பது இதன் பொருள்.)

اَللّٰهُمَّ اٰنِسْ وَحْشَتَهُمْ وَنَوِّرْ ضَرَائِحَهُمْ وَتَقَبَّلْ حَسَنَاتِهِمْ
وَتَجَاوَزْ عَنْ سَيِّئَاتِهِمْ وَاجْمَعْ بَيْنَنَا وَبَيْنَهُمْ فِيْ جَنَّاتِ النَّعِيْمِ

அல்லாஹும்ம ஆனிஸ் வஹ்ஷத்தஹும் வ நவ்விர் லராஇஹஹும் வ தகப்பல் ஹஸனாத்திஹிம் வ தஜாவஸ் அன் ஸையியாத்திஹிம் வஜ்மஃ பைனனா வபைனஹும் பீ ஜன்னாத்தின் னயீம்.

(நாயனே! அவர்களது வெறுமையை நீ மருகுதலாக்குவாயாக, இன்னும் அவர்களது அடக்கஸ்தலங்களை நீ வெளிச்சமாக்குவாயாக, இன்னும் அவர்களது நன்மைகளை நீ அங்கீகரிப்பாயாக, இன்னும் அவர்களது தீமைகளை நீ க்ஷமிப்பாயாக நயீம். என்ற சுவர்க்கத்துச் சோலைகளில் எங்களையும் அவர்களையும் ஒன்று சேர்ப்பாயாக" என்பது இதன் பொருள்.)

اَللّٰهُمَّ اَوْصِلْ ثَوَابَ مَا قَرَأْنَاهُ مِنْ كَلَامِكَ الْعَزِيْزِ اِلٰى
رُوْحِ سَيِّدِنَا شَفِيْعِ الْمُذْنِبِيْنَ ثُمَّ اِلٰى رُوْحِ الْاَنْبِيَاءِ وَ
الشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ ثُمَّ اِلٰى رُوْحِ مَنْ نَوَيْنَاهُ ثُمَّ اِلٰى
اَرْوَاحِ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ
بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

அல்லாஹும்ம ஔஸில் தவாப மா கரஃனாஹு மின் கலாமிக்கல் அஜீஜ் இலா ரூஹி ஹபீபிக்க ஷபீஇல் முத்னீபீன. தும்ம இலா அர்வாஹில் அன்பியாஇ வஷ்ஷ

ஹதாஇ வஸ்ஸாஹீன. தும்மஇலா ரூஹி மன் நவைஞுஹு தும்ம இலா அர்வாஹில் மூமினீன வல்மூமினாத்தி வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத்தி பி றஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன்.

("நாயனே! கிருபையாளர்களுக் கெல்லாம் அதிகக் கிருபையுள்ளோனே, உனது மகத்தான திருகுர்ஆனி லிருந்து நாங்கள் ஓதியதின் நன்மைப் பயனை உனது ஹபீபான, பாபிகளின் ரக்ஷகருடைய ஆன்மாவிற்கும், ஏனைய நபிமார்களுக்கும், ஷஹீதுகளுக்கும், நல்லோர் களுக்கும், நாங்கள் நினைத்தவர்களுக்கும், மூமினான முஸ்லி மான ஸ்திரீ புருஷர் ஆகிய இருபாலர் யாவருடைய ஆன்மாக் களுக்கும் சேர்த்து வைப்பாயாக") என்பது இதன் பொருள்.

N. B. மேற்கண்ட மூவகைப் பிரார்த்தனைகளையும் கப்ராளி களுக்காக ஓதலாம். இதனைத் தவிர வேறுவிதமான துஆக்களையும் ஓதலாம். இம்மூன்று துஆக்களையுமே ஓதவேணும் என்ற அவசியமில்லை. இவைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டைமட் டிலுமோ வேண்டுமானாலும் ஓதலாம். இத்தகைய துஆக்களை அறபிப் பாஷையிலேயே ஓதவேண்டு மென்ற கட்டாயமுமில்லை. அறபியில் ஓதத்தெரிந்த வர்கள் அறபியில் ஓதலாம். அஃதல்லாதவர் தங்க ளுக்குத் தெரித்த எப்பாஷையிலும் ஓதலாம்.

N. B. பர்லு, வாஜிபு ஸுன்னத்து, நபில், முதலிய சகல தொழுகைகளிலும், ஜனாஸாத் தொழுகையிலும் தக் பீர் தஹ்ரீமா, தனா, கிரஅத், தக்பீர், தஸ்மீஃ, தஸ் பீஹ், அத்தஹிய்யாத்து, தரூதே இப்ராஹீம், துஆயே

மாதூரா, ஸலாம் முதலிய யாவையும் அறபிப் பாஷையிலேயே ஓதவேண்டும். நிய்யத்துச் சோல் வதை மட்டிலும் அறபியல்லாத பாஷையில் ஓதலாம். இந்நூலில் தொழுகையில் ஓதக் கூடியவைகள் யாவற் றிற்கும், பாங்கு இக்காமத்து முதலியவைகளுக்கும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இம் மொழி பெயர்ப்பை ஓதவேண்டும் என்ற நோக்க மில்லை. தொழுகை முதலியவைகளில் அறபியில் ஓதுபவைகளின் கருத்துகள் யாவை என்பதை நம் மவர் உணர்ந்துகொள்ளும் பொருட்டே அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறோம் என்பதை வாச கர்கள் உணருவார்களாக.

நோன்பு

இஸ்லாம் மதத்திலுள்ள ஐம்பெரும் முக்கிய கடமை களுள் நோன்பு மூன்றுவது கடமையாகும். இதனைக் குறித்து. இறைவன்.

உங்களுக்கு முன்னருள்ளவர்களுக்கு விதிக்கப்பட்டது போல் உங்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டிருக்கிறது என்று திருகுர்ஆனில் கூறி இருக்கிறான்.

நோன்பு என்னுடையது. அதற்கு நான் பிரதிபலன் அளிப்பேன் என்று இறைவன்கூறியதாக ஹதீது குதுஸியில் கூறி இருக்கிறான்.

ஒவ்வொரு வஸ்துவிற்கும் ஒரு ஜக்காத்து உண்டு. ஸ்தூலத்திற்கு ஜக்காத்து நோன்பு"

நோன்பானது நரகத்தின் வேதனைவராமற் றடுக்கும் கேடயமாகும்.

நோன்பு ஈமானின் கேடயமாகும்

என்பன போன்ற பல ஹதீதுகள் நோன்பைக் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றன. நோன்பினால் ஏற்படும் பயனைக் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டிய அவசிய மேற்படாமல் இறைவனே இதன் இம்மை மறுமைப் பயன் களைப் பற்றி விபரித்துக் கூறி இருக்கிறான். இதனைக் குறித்த ஆயத்துகளையும் ஹதீதுகளையும் ஈண்டு எடுத் தெழுதாமல் அவைகளின் கருத்துகளை மிகச் சுருக்கமாக விளக்குவம்.

நோன்பு நோற்கவேண்டுமென்ற கட்டளை திருகுர் ஆனில் மட்டுமில்லை. எல்லா வேதங்களிலுமே கூறப் பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் மட்டுமில்லாமல் முற்காலத் திலிருந்த நபிமார்களின் உம்மத்துகளும் நோன்பு நோற்கக் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனால், முற்காலத்து நபிமார் களது உம்மத்துகள் நோன்புவைக்கும் முறையிலும், அந்த நோன்புகளின் எண்ணிக்கையிலும் வித்தியாசமிருக்கிறது. காலத்திற்கும், மனிதரின் சுபாவத்திற்கும் ஏற்றவாறு இறைவன் அவ்வக் காலங்களில் இக்கட்டளையைப் பிறப்பித் திருக்கிறான்.

முற்காலத்திலிருந்த உம்மத்துகள் நோன்பு நோற்பதில் அனுஷ்டிக்கவேண்டிய சில கடினமான விதிகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்துமார்களுக்கு தளர்த்தப் பட்டிருக்கின்றன. முற்காலத்திலிருந்த நபிமார்களது உம் மத்துமார்கள் குணத்திலும் உணர்ச்சியிலும் செய்கை யிலும் வேறுபட்டிருந்ததே இத்தளர்வுக்கு முக்கியகாரணம்.

இறைவன் சம்மதமுள்ள மதஸ்தர்களது நோன்பிற் குள்ளிருந்த வித்தியாசங்கள் மேற்கண்டவை. இப்பூவுலகில்

முஸ்லிம் அல்லாதார்களிற் பல சமூகத்தினரும் அனுஷ்டிக்கும் நோன்பையும் சிறிது கவனிப்போம். சில துஷ்ட தேவதைகளைத் திருப்தி செய்விப்பதற்காகவோ அல்லது இறந்துபோனவரின் ஆவிக்குச் சாந்தியுண்டாகுவதற்காகவோ சில சமூகத்தார் நோன்பு நோற்கின்றனர். சில சமூகத்தார் மத தர்மத்திற்காக அல்லாமல் அரசனது ஆக்கினைக்குப் பயந்து நோன்பு வைப்பதை அனுஷ்டிக்கின்றனர்.

நோன்பை அனுஷ்டிக்கும் முறையிலும் கூட சிலர் அன்னம் தண்ணீர் முதலிய ஆகாரம் எதுவுமில்லாமல் இரவு பகல் இரண்டு வேளைகளிலும் தொடர்ந்து பல நாட்கள் பட்டினி இருக்கின்றனர். இதனால் உடல் வலிமை குறைந்து, நரம்பு தளன்று, நடக்க இருக்க இயலாமலாகி, மரணம் வந்துவிடுமோ? என்ற அச்சத்தால் சிகிச்சை செய்வதற்குப் பல டாக்டர்களும் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது. இவ்விதமான நோன்புகளை அனுஷ்டிப்பதால் பணச் செலவும், காபுராவும், பலருக்குக் கவலையும்தான் உண்டாகின்றன. ஆதலால், இது எல்லாராலும் அனுஷ்டிக்கக் கூடாததாக இருக்கிறது.

வேறு சிலர் தேயிலை, காப்பி, பலகாரங்கள் முதலியவைகளை வேண்டியமட்டும் அருந்துகின்றனர். சாதம் மட்டிலும் சாப்பிடுவதில்லை. இதனால் எவ்விதக் கஷ்டமோ சிரமமோ எவருக்கும் ஏற்படுவதில்லை. சாதாரண காலத்தில் எத்தனை முறை உணவருந்துவார்களோ அத்தனை முறைகளைக் காட்டினும் அதிகமாகவே வயிறுவாடாமல், பசி தோன்றுத முறையில் நோன்பை அனுஷ்டிக்கின்றனர். இதனால் எவ்விதப் பிரயோஜனமுமில்லை.

சிலர் சூரியப் பிரகாசமிருக்கும்போது மட்டிலும்தான் உணவருந்துவர் சூரியன் அஸ்தமிருத்திலிருந்து உதயமாகும்வரை உணவருந்துவதுமில்லை. வேறு எவ்விதமான ஆகாரதிகளையோ பானங்களையோ உட்கொள்வதுமில்லை. இவ்வாறு செய்வது நோன்பு என்று கூறுவதற்குத்தக்க அந்தஸ்திலில்லை என்பது வெளிப்படை.

முஸ்லிம்களது நோன்பு இவ்வாறான பல ஹிம்சைகளையும் பணச் செலவையும்விட்டு நீங்கி இருப்பதுடன் நோன்பின் பயனையும் அளிக்கவல்லதாக இருக்கிறது. இராக் காலங்களில் எதைவேண்டுமானாலும் சாப்பிடலாம். பகல் காலங்களில் ஒன்றையும் அருந்தக் கூடாது. பகல் காலம் மனிதர்கள் சம்பாதிக்கவும், உழைக்கவும், நித்திரை செய்யாமல் விழித்திருக்கவும்வேண்டிய சமயமாக இருப்பதால், உணவருந்தாமலும் தாகவிடாயைத் தீர்த்துக் கொள்ளாமலும் இருப்பதால், பசி தாகத்தின் சிரமத்தை மனிதன் உணருகிறான். உடம்பிலும் அற்ப சோர்வு ஏற்படுகிறது. பதார்த்தங்களை அருந்துவதற்கும், பதார்த்தங்கள் சுலபமாகக் கிடைப்பதற்கும் பகல் வேளை மிகச் சாதகமாக இருப்பதால், அந்நேரத்தில் பசி தாகத்தை அடக்குவதானது தனது உணர்ச்சிகளை அடக்குவதற்குள்ள பயற்சியை அளிக்கிறது.

பகல் காலத்தில் பட்டினியும் பசியுமாக இருந்ததால் ஏற்பட்ட சோர்வு இராக் காலங்களில் போஜனமருந்துவதால் மாறுகிறது. ஆனால், அக்காலங்களில் சில வணக்கங்களைப் புரியும்படி இஸ்லாமிய சட்டம் கூறுவதால் ஜனங்கள் உற்சாகமாக அவ்வணக்கங்களைப் புரிகின்றனர். உடம்பில் திமிரும் ஆங்காரமும் இல்லாதிருப்பதால், அவ்வணக்கத்தில்

பக்தியும் அந்தரங்க சுத்தியும் ஏற்படுகிறது. தேகத்தி லுள்ள புஷ்டியும் அகங்காரமும் மாறி நற்குண நல்லொழுக் கங்களைக் கடைப்பிடிக்க இஃதோர் நல்ல ஏற்பாடாக இருக்கிறது. பிறரது பசி தாகத்தை உணர்ந்து அவர் களுக்கு உதவிபுரியவும் இது தூண்டுகிறது. இதனால் பரோபகாரசிந்தையும், ஏழை எளியாரின் கஷ்ட சங்கடங் களை யுணர்ந்து அவர்களுக் குழைக்கும் உணர்ச்சியும் தோன்றுகிறது.

வருஷத்தில் பதினோரு மாதகாலம் நன்றாய் உண்டு உறங்குவதால் ஜீரணக் கருவிகளுக்கும், இதர ராஜகருவி களுக்கும் ஏற்பட்ட அதிக வேலை இவ்வொரு மாதத்தில் குறைந்து, அவைகளுக்கு ஓய்வேற்படுவதால் அடுத்த பதினோரு மாதத்தில் மனிதன் உட்கொள்கிற ஆகாரதிகளைச் சரியாக ஜீரணித்து, எந்தெந்த அவயவங்களில் அவை களைப் பிரித்து வைக்கவேண்டும்மோ, அந்தந்த அவயவங் களில் அவைகளைப் பிரித்துவைப்பதற்குரிய புதிய சக்திகள் அவைகளுக் கேற்படுகின்றன. இதனால் மனிதனுக்கு வருஷமெல்லாம் இடைவிடாமல் அதிகமாக உண்டு உறங்கு வதாலேற்படும் பலவித நோய்கள் வராமற்றடுக்கப்படுவ துடன், தேகத்திலுள்ள சிற்சில வியாதிகளும் அகலு கின்றன. ஆதலால், இவ்வுலக காரியங்களில் எக்காரியத் திற்கும் பாதகமேற்படாத முறையில் மறு உலக காரியங் களுக்காகவேண்டிய பல வசதிகளைத் தேடிக்கொள்ள ஸ்திரீ புருஷர் வாலிபர் வயோதிகர் ஏழை பணக்காரர் யாவருக்கும் சமசந்தர்ப்பம் முஹம்மதிய ஷரீ அத்திலுள்ள நோன்பில்தான் அளிக்கப்பட்டிருக்கிறது.

நோன்பின் வகைகள்

1. பர்லான நோன்பு :—வருஷந்தோறும் றமலான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் நோன்புவைப்பது.

அந்த மாதத்தில் நோன்புவைக்கத் தவறிவிட்டவர்கள் அந்த மாதத்து நோன்புகளை வேறு மாதங்களில் கலாச் செய்தல்.

தண்ட குற்றத்திற்குப் பரிகாரமாக நோன்பு நோற்றல்.

இம்மூன்றுவகை நோன்புகளும் பர்லுகளாகும்.

2. வாஜிபான நோன்புகள் :—நேர்ச்சை நோன்பு, நபில் நோன்பை ஆரம்பித்த பின்பு அதனை நிறப்பமாக்குதல். நேர்ச்சை செய்யப்பட்ட இஃதி காபின் நோன்பு. ஆகியவைகள் வாஜிபுகளாகும்.

3. முஸ்தஹப்பான நோன்பு அல்லது நபில் நோன்பு:— முஹர்ரம் மாதம் ஒன்பது அல்லது பதினொன்றும் நாளுடன் 10-ம் தேதியாகிய ஆஷுரா வும் நோன்பு நோற்றல்,

துல்ஹஜ்ஜுமீ 9-ம்உ யாகிய அரபா நாளில் ஹாஜி களல்லாதவர்கள் நோன்பு நோற்றல்,

பிரதி மாதந்தோறும் பதின்மூன்று, பதினொன்று, பதினைந்து ஆகிய இம்மூன்று தேதிகளில் நோன்பு நோற்றல். இவைகளுக்கு அய்யாமுல்பீல் என்று பெயர்.

ஷவ்வால் மாதத்தில் ஆறு நாள் நோன்பு நோற்றல். ஆனல், இம்மாதத்தின் முதல் தேதி பெருநாளாக இருப்ப தால் அன்றைய தினத்தில் நோன்பு நோற்க ஆகாது.

பிரதி வாரமும் திங்கள், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நோன்பு வைத்தல்.

ஷஅபான் மாதம் 15உபில் வரும் பராஅத்தின் தினத்தன்று நோன்பு வைத்தல்,

இந்நோன்புகளிற் சிலவற்றை ஸுன்னத்து என்றுங் கூறுவர். ஆனல், ஸுன்னத்து, முஸ்தஹப்பு ஆகிய எல்லா நோன்புகளுக்கும் நபில் என்ற பொதுப் பெயரிருப்பதால் அபபொதுப் பெயரையே இங்கு குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நோன்புவைக்கக் கடமைப்பட்டவர்கள்

ஆக்கிலாகவும் பாலிகாகவும் அதாவது யுக்தவயதை யடைந்தவராகவும், சித்த சுவாதீனமுள்ளவராகவும் உள்ள முஸ்லிம் ஸ்திரீ புருஷர் இருபாலர் மீதும் றமலான் நோன்பு வைப்பது கடமை (பர்லு). மாதாந்தருது, பிரசவருது ஆகியவைகளுள்ள ஸ்திரீகள் நோன்புவைக்கக் கூடாது. அவர்கள் நோன்பு வைத்தாலும் அந்த நோன்பு நிறை வேறுது.

நோன்பு வைப்பதற்கு இயலாத வியாதியஸ்தர்கள், பிரயாணிகள், பால் குடிக்கும் குழந்தைகளுள்ள தாய் மார்கள் றமலான் மாதத்திலேயே நோன்பு வைக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தமில்லை. ஆதலால், றமலான் மாதத்தில் நோன்பு வைக்காமலிருக்கலாம், அப்புறம் அவர்களது கடமைகள் நீங்கிய பிறகு அதனைக் கலாச்செய்து நிறை வேற்றவேண்டும். இக்கஷ்டங்களிருக்கும்போதே அவை களைப் பாராட்டாமல் நோன்புவைத்தால் அவர்களது நோன்பு நிறைவேறிவிடும்.

நோன்பின் ஷர்த்துகள்

1. யுக்தவயதை அடைந்திருக்கவேண்டும்.

2. சித்த சுவாதீனமிருக்கவேண்டும்.

3. மூஸ்லிமாக இருக்கவேண்டும்.

4. தாருல் ஹர்பில் இஸ்லாம் மதத்தை தழுவி இருந்தால், றமலான் நோன்பை நோற்பது கடமை என்றறிந்திருக்கவேண்டும். அல்லது, தாருல் இஸ்லாமில் குடி இருக்கவேண்டும். தாருல் இஸ்லாமில் குடி இருப்பவர் றமலான் நோன்பு கடமை என்பதை அறிந்திருக்க வேண்டும் என்பது ஷர்த்தல்ல.

நோன்பை நிறைவேற்றுவது கடமையாவதற்குரிய ஷர்த்துகள்

1. நோயில்லாமலிருக்க வேண்டும்.

2. மாதாந்தருது, பிரசவருது ஆகியவைகளில்லாமலிருக்கவேண்டும்.

3. உள்ளூரில் இருக்கவேண்டும்.

நோன்பு நிறைவேறுவதற்குள்ள ஷர்த்துகள்

1. நோன்புவைப்பதாக அதற்கு ஏற்பட்ட காலத்தில் நிய்யத்து (நிர்ணயம்) செய்யவேண்டும்.

2. ஹைலு நிபாஸ் ஆகிய மாதாந்தருது, பிரசவ ருது ஆகியவைகளில்லாதிருக்கவேண்டும்.

3. நோன்மை முறிக்கக் கூடியவைகள் இல்லாதிருக்க வேண்டும்.

ஜனபத்து இல்லாமல் அதாவது ஸ்னனம் செய்யக் கடமைப்படாமல் இருக்கவேண்டும் என்பது ஷர்த்தல்ல.

நோன்பின் ருக்னுகள்

1. வயிறு, அபம் ஆகிய இரண்டினுடைய இச்சைகளைவிட்டுத் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்.

2. இவ்விச்சைகளுக்குச் சம்பந்தப்பட்டவைகளையும் விட்டுத் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். இவைகளைப் பற்றிய விபரம் பின்னர் எழுதப்படும்.

நிய்யத்துச் செய்யவேண்டிய நேரங்கள்

ரமலான் மாதத்தின் அதாவான நோன்பு, ஒரு காலத்தைக் குறிப்பிட்டு அந்த நாளில் நோன்புவைப்பதாக நேரிச்சைசெய்த நோன்பு. அதாவான நபில் நோன்பு ஆகிய மூவகை நோன்புகளுக்கும் இராத்திரியிலிந்து மறு நாள் நடுப் பகலுக்குக் கொஞ்சம்முந்தி எந்த நேரத்திலும் நிய்யத்துச் செய்யலாம். ஆனல், இராத்திரியிலேயே நிய்யத்துச் செய்வது அப்ளல்.

றமலான் மாதத்தின் அதாவான நோன்பையும், நாள் குறிப்பிட்டு நேரிச்சை செய்திருந்த நோன்பையும், அதாவான நபில் நோன்பையும், இன்ன நோன்பென்று பெயர் குறிப்பிடாமல் நோன்பு நோற்கிறேன் என்று பொதுவாக நிய்யத்துச் செய்வதே போதுமானது. நபில் நோன்பு என்று நிய்யத்துச் செய்தாலும் போதுமானது. அதாவது றமலான் மாதத்தில் ஒருவர் நோன்பு நோற்கிறேன் என்று பொதுவாகவோ அல்லது நபில் நோன்பு நோற்கிறேன் என்று குறிப்பாகவோ நிய்யத்துச்செய்து நோன்பு வைத்

தால், அது றமலான் மாதத்தின் அதாவான நோன்பாகவே நிறைவேறும். ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் நோன்பு நோற்பதாக நேரிச்சை செய்திருந்தால், அன்றைய தினத்தில் மேற்கண்ட மாதிரி நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்தால், அந்த நோன்பு நேரிச்சை நோன்பாகவே நிறைவேறும். இவ்வாறு நிய்யத்துச் செய்தவர் நோயாளியாகவோ அல்லது பிரயாணியாகவோ இருந்தாலும் சரியே.

நோயில்லாமலும், உள்ளூரில் வசிப்பவருமான ஒருவர் றமலான் மாதத்தில், அந்த மாதத்து நோன்பை நோற்காமல் அவர் மீது கடமையான வேறு ஒரு நோன்பை நோற்பதாக நிய்யத்துச்செய்து நோன்பு நோற்றால், அதுவும் றமலான் மாதத்தின் அதாவான நோன்பாகவே நிறைவேறும். அவர் நிய்யத்துச்செய்த நோன்பாக நிறைவேறாது.

ஆனால், மார்க்கச் சட்டப்படி பிரயாணியாக இருக்கிற ஒருவர் றமலான் மாதத்தில் அந்த றமலானின் அதாவான நோன்பை நிய்யத்துச்செய்யாமல் வேறு நோன்பை நிய்யத்துச்செய்தால், அவர் நிய்யத்துச்செய்த நோன்புதான் நிறைவேறும்.

நோயாளியாக இருக்கிற ஒருவர் உள்ளூரில் இருந்து கொண்டு, றமலான் மாதத்தில் அந்த றமலானின் அதாவான நோன்பை நிய்யத்துச்செய்யாவிடில் அந்த நோன்பு றமலான் மாத நோன்பாகவே நிறைவேறுமா என்பதைக் குறித்து இமாம்களிடத்தில் அபிப்பிராய பேதமிருக்கிறது. அவர் நிய்யத்துச்செய்த நோன்புதான் நிறைவேறும் என்று இமாம் ஹஸன் (றஹ்) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்

கிறார்கள். றமலான் மாதத்தின் நோன்புதான் நிறை வேறுமென பக்றுல் இஸ்லாம் (றஹ்) அவர்களும், ஷம்ஸுல் இமாம் (றஹ்) அவர்களும் கூறி இருக்கிறார்கள். இதுதான் மிகவும் சரியான சொல்.

இன்ன நாளில் நான் நோன்பு வைக்கிறேன் என்று நேரிச்சைசெய்த நோன்பின் தினத்தன்று வேறு கடமையான நோன்பிற்கு நிய்யத்துச் செய்தால், நிய்யத்துச் செய்த நோன்புதான் நிறைவேறும். அவர் நேரிச்சை செய்த நோன்பு நிறைவேறாது.

றமலான் மாதத்தின் கலாவான நோன்பு, நபில் நோன்பு வைத்து முறித்த பிறகு அதனைக் கலாச்செய்யும் நோன்பு, தண்ட குற்றங்களுக்காக நோற்கும் நோன்புகள், இன்ன தேதி என்று குறிப்பிடாமல் பொதுவாக நேரிச்சை செய்த நோன்புகள் ஆகியவைகளுக்கு இன்ன நோன்பு என்று குறிப்பிட்டு நிய்யத்துச் செய்யவேண்டும். இரவிலேயே அதாவது பஜ்றுக்கு முன்னதாகவே நிய்யத்துச் செய்யவேண்டும்.

றமலான் பிறையும் சந்தேக நோன்பும்

றமலான் மாதப் பிறையைக் காண்பதாலும், ஷஅபான் மாதத்தின் 30-நாள் பூர்த்தியாவதாலும் றமலான் மாத நோன்பு கடமையாகும். ஷஅபான் மாதம் இருபத்தொன்பது தேதி முடிந்த மறு நாளுக்கு சந்தேக நாள் என்று பெயர். அம்மாதத்தின் 29உ முடிந்த மாலையில் மேகங்களின் காரணமாக பிறை பிறந்ததா? இல்லையா? என்பது தெரியாவிட்டால், அதற்கடுத்த நாள் அதாவது ஷஅபான் மாதத்தின் 29உக்குப் பின்னல் வருகிற நாள்

றமலான் மாதத்தின் முதல் தேதியா? ஷஅபான் மாதத்தின் 30-வது தேதியா? என்பதில் சந்தேகமேற்பட்டுவிடும்.

சந்தேகாஸ்பத நாளில் நபில் என்ற உறுதியுடன் நோன்பு நோற்பது ஒன்றைத் தவிர மற்றைய நோன்புகள் யாவும் மக்றூஹ் அதாவது சந்தேகாஸ்பத நாளில் றமலான் நோன்பு என்று நிய்யத்துச்செய்து நோன்பு வைப்பதும், தன்மீது விதியான வேறு ஒரு வாஜிபான நோன்பை நிய்யத்துச்செய்து நோன்பு வைப்பதும், நாளைய தினம் றமலானாக இருந்தால் அது றமலான் மாதத்தின் பர்லான நோன்புதான், அவ்வாறில்லாவிடில் அது நபில் என்று நிய்யத்துச்செய்து நோன்பு வைப்பதும் மக்றூஹ்.

நாளையதினம் றமலான் மாதமாக இருந்தால் நோன்பு வைக்கிறேன். றமலானாக இல்லாதிருந்தால் நோன்பு இல்லை என்று நோன்பு வைப்பதற்கும், நோன்பு வைக்காமலிருப்பதற்கு மிடையில் உறுதியற்ற விதமாக நிய்யத்துச் செய்திருந்தால், அந்த நிய்யத்தால் நோன்பு நிறைவேறாது.

ஷஅபான் மாதத்தின் கடைசியில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நோன்பு வைப்பது மக்றூஹ். ஆனால் இரண்டிற்கு அதிகமாக நோன்பு வைப்பது மக்றூஹல்ல. சந்தேகாஸ்பதமான நாளில் பொது ஜனங்கள் நோன்பை எதிர்பார்க்கவேண்டும். நிய்யத்துச் செய்வதற்குரிய நேரம் கழிவதற்குள் றமலான் மாதம் பிறந்ததாகத் தெரிந்தால் றமலான் மாத நோன்பை வைத்துவிடலாம். அந்த நேரம் கழியும்வரை றமலான் மாதம் பிறந்ததாகத் தெரியாவிடில் நோன்புவைப்பதை விட்டுவிடவேண்டும் என்பதாக முப்தியாக இருப்பவர் பொது ஜனங்களுக்கு கட்டளையிடவேண்டும்.

ஆனல், முப்தி, காஜீ, இதர முக்கியஸ்தர்கள் நபில் என்று நிய்யத்துச்செய்து இரகசியமாக நோன்பு நோற்க வேண்டும். ஒருவர் றமலான் மாதத்தின் பிறையை கண்டு, அதனை காஜி இடம் தெரிவிக்க, அவர் ஒரு சாக்ஷிதான் இருக்கிறது எனறு கூறி, அவரது அறிவிப்பை ஏற்க மறுத்துவிட்டால் றமலான் பிறையைக் கண்ட அந்த மனிதர் மட்டிலும் நோன்பு வைக்கவேண்டும். இது போலவே ஒருவர் மாத்திரம் ஷவ்வால் மாதப் பிறையைக் கண்டு காஜீ இடம் அறிவிக்க, அவர் அவ்வறிவிப்பை ஏற்றுக்கொள்ளாவிடில், எல்லாருடனும் சேர்ந்து பிறையைக் கண்ட அந்த மனிதரும் நோன்பு நோற்கவேண்டும். அவர் பிறையை நிச்சயமாகக் கண்டதனல், அவர் மட்டிலும் நோன்பு வைக்காமலிருப்பது ஜாயிஸ் இல்லை.

ஆனல், அவர் அவ்வாறு செய்யாமல் றமலான் மாதப் பிறையைக் கண்டுவிட்டு நோன்பு நோற்காதிருந்தாலும், ஷவ்வால் மாதப் பிறையைக் கண்டுவிட்டு நோன்பு நோற்காதிருந்தாலும் அவர் நோன்பைக் கலாச் செய்யவேண்டும். அவர் மீது கப்பாரு என்னும் பரிகார தண்டனை இல்லை.

பிறை கண்டதாக சாக்ஷியம் கூறல்

வானில் மேகம் அல்லது புகை அல்லது புளுதி போன்றவைகள் மூடி இருந்தால், நீதிவானை ஒருவரின் சொல்லை காஜீ அங்கீகரித்துக் கொள்ளலாம். நீதிவான் இல்லையா என்ற விபரம் அறியப்படாதவராக இருந்தாலும் ஒருவரது சாக்ஷியத்தை காஜீ அங்கீகரிக்கலாம். ஆனல், அவர் பிறைகண்ட அதே இரவில் அதிகாரியினிடத்தில் பிறைக் கண்ட செய்தியை அறிவிப்பது அவசியம்.

இவ்வாறு சாக்ஷியம் கூறுபவர் ஆக்கில், பாலிகாக அதாவது சித்த சுவாதீனமுள்ளவராகவும், யுக்தவயதை யடைந்தவராகவும், முஸ்லிமாகவும் இருக்கவேண்டும். நீதிவானனவர் என்பதற்கு "பாபத்தைப்பார்க்கினும் நன்மையை அதிகம் செய்பவர்" என்பது கருத்து. பெருந்தன்மை, தக்வா ஆகியவைகளைக் கவனிக்கவேண்டும்.

இவ்வாறு சாக்ஷியம் கூறுபவர் ஆடவராகவே இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஸ்திரீயாகவோ, அடிமையாகவோ இருந்தாலும் அங்கீகரிக்கலாம். பிறர்மீது படர் கூறியதற்காக ஹத்து அடிபட்டு தெளபாச் செய்திருந்தாலும் அங்கீகரிக்கலாம். இவ்விதி றமலான் மாதப் பிறைக்குத்தான்.

நோன்புப் பெருநாள் பிறையைப் பற்றி சாக்ஷியம் கூறுவதாயின் அடிமையல்லாத இரண்டு முஸ்லிம்கள் சாக்ஷியம் கூறவேண்டும். படர் கூறியதற்காக ஹத்து அடிபட்டிருக்கப்படாது. இது வானில் மந்தாரம் இருந்தால் தான் மேற்கண்ட விதி. வானில் மந்தாரம் இல்லாதிருப்பின் றமலான் மாதப் பிறையாக இருந்தாலும் சரி, அல்லது நோன்புப் பெருநாள் பிறையாக இருந்தாலும் சரி, ஒரு பெருங் கூட்டம் பிறை கண்டதாக சாக்ஷியங் கூறவேண்டும். பெரும் கூட்டம் என்பதை நிதானித்துக் கொள்வது ஸ்தலத்திலுள்ள இமாமின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதன் சாக்ஷியங் கூறியதை ஆதாரமாகக் கொண்டு றமலான் மாத நோன்புவைத்து, 30-முப்பது நாளும் பூர்த்தியாக நோன்புவைத்த பிறகு நோன்புப் பெருநாளில் பிறையைக் காணவிடில், வானமும் தெளிவாக

இருந்தால் நோன்பை விட்டுவிடக் கூடாது. வானில் மந்தாரமிருந்தால் நோன்பை விட்டுவிடலாம். இரண்டு பேருடைய சாக்ஷியத்தின் பேரில் றமலான் நோன்பை நோற்றிருந்து முப்பது நோன்புகளும் தீர்ந்த பிறகும் பெருநாளின் பிறை காணப்படாவிடில் அடுத்த நாளிலும் நோன்புவைக்கவேண்டுமா? அல்லதுவேண்டாமா? என்பதில் இமாம்களுக்குள் அபிப்பிராய பேதமிருக்கிறது.

நோன்பின் ஸுன்னத்துகள்

1. நோன்பு நோற்பதற்காக விடியற் காலத்தில் உணவருந்துபவர்கள், ஸஹருடைய அவ்வேளையின் கடைசி நேரத்தில் புசித்தல்.

2. நோன்பு திறப்பதற்கு ஏற்பட்ட சரியான வேளை வந்தவுடன், முதல் வேளையிலேயே நோன்பு திறத்தல் (தாமதம் செய்யாதிருத்தல்.)

3. பேரீத்தம் பழம்போன்ற கனிவர்க்கங்களால் நோன்பு திறத்தல். கனிவர்க்கங்களுங் கிடைக்காவிடில் ஜலத்தால் நோன்பு திறத்தல்.

4. நோன்பு திறக்கும் வேளையில் நிய்யத்துச்செய்தல்.

5. ஸுனனுஞ் செய்யக் கடமைப்பட்ட ஜமாஅத்துபாளிகள் கிழக்கு வெளுப்பதற்கு முன்னதாகவே ஸுனனுஞ் செய்தல்,

6. வாசனைப் பொருள்களை முகராமலிருத்தல்,

7. மார்க்கச் சட்டப்படி புசிக்க அனுமதிக்கப்பட்ட ஹலாலான பொருள்களைக் கொண்டு நோன்பு திறத்தல்,

8. நோன்பாளிகளுடன் சேர்ந்து நோன்பு திறத்தல்,

9. காம எண்ணங் கொள்ளாதிருத்தல்,

10. குர்ஆன் ஷரீபை ஓதுதல்,

நோன்பின் முஸ்தஹப்புகள்

1. தன் குடும்பத்தாருக்கு தாராளமாகச் செலவுக்குக் கொடுத்தல்,

2. மதசம்பந்தமான கிரந்தங்களை ஆராச்சி செய்தல்,

3. தானதர்மம் முதலிய நற்காரியங்களைச் செய்தல்,

நோன்பை முறிக்கும் காரிங்கள்

1. வாய் கொப்பளிக்கும்போது ஜலம் உள்ளே செல்லல்.

2. நித்திரையிலிருந்துகொண்டே ஜலமருந்தல்,

3. கிழக்கு வெளுக்கவில்லை என்று நினைத்து காம இச்சையை நிறைவேற்றல், புசித்தல்,

4. பகைவரின் நிர்ப்பந்தத்திற்காக நோன்பை விடுதல்,

5. மனைவியை முத்தமிட்டதால் அல்லது தீண்டியதால் இந்திரியஸ் கலிதமாதல்,

6. வாய் நிறம்ப வாந்தியெடுத்து அதனை விழுங்கிவிடல்,

7. பற்களுக் கிடையில் கடலைப் பிரமாணமுள்ள வஸ்துக்களிருந்து அதனை விழுங்கிவிடல்,

8. சூரியாஸ்தமனமாவதற்குள் நோன்பு திறத்தல்,

9. எள், கோதுமை, திராக்ஷை முதலிய வஸ்துக்களை வேண்டுமென்று விழுங்கிவிடல்,

10. நோன்பென்னும் ஞாபகமிருக்கும்போது வாய் கோப்பளித்த ஜலம் தொண்டைக்குள் சென்றுவிடல்,

11. பின் துவாரத்தின் வழியாக மருந்தை உள்ளுக்குச் செலுத்தல்,

12. திரவமான மருந்தை அல்லது ஜலத்தை மூக்கினுள் செலுத்தல்,

13. திரவமான மருந்தைக் காதினுட்டுளி துளியாகச் செலுத்தல்,

14. நோன்பென்னும் ஞாபகமில்லாமல் உணவருந்திக் கொண்டோ அல்லது பானகங்களை அருந்திக்கொண்டோ இருக்கும்போது, நோன்பின் ஞாபகம் வந்து, அப்புறமும் அதனை அருந்துதல்,

15. தன்னுடைய தன்றிப் பிறருடைய எச்சிலை விழுங்குதல்,

16. கண்ணீர் அல்லது வியர்வையின் ருசி வாய் முழுவதும் பரவுவதற்குத் தக்க அளவில் வாய்க்குள் செல்லல்,

17. ஸ்திரீகள் மர்மஸ்தானத்தில் ஜலத்தை அல்லது எண்ணெய்யைத் துளி துளியாகச் சொட்டவிடல்,

18. ஏதேனும் ஒரு குச்சி முழுவதையும் தொண்டையினுட் செலுத்துதல்,

19. மலஜல உபாதைகள் கழித்துத் துப்புவுர செய்யும்போது முன் துவாரம் அல்லது பின் துவாரத்தில் ஜலம் சென்றுவிடல்,

இக்காரியங்களைச் செய்வதால் நோன்பு முறிந்துவிடும். இதனைக் கலாச் செய்யவேண்டும்.

கப்பாரா என்னும் பரிகார தண்டனையை வாஜிபாக்கும் காரியங்கள்

1. றமலான் மாதத்தின் அதாவான நோன்பை வைத்திருப்பது ஞாபகமிருக்கும்போதே காம இச்சையை நிறைவேற்றல், புசித்தல், குடித்தல்,

2. நோன்பு ஞாபகமிருக்கும்போது வேண்டுமென்றே தன் நாயகியின் எச்சிலை விழுங்குதல்,

3. இரத்தங்குத்தி வாங்கியதால் நோன்பு முறிந்து விட்டதென நினைத்து உணவருந்தல்,

இக்காரியங்களால் நோன்பு முறிந்துவிடுவதுமட்டு மில்லாமல், அதற்குரிய பரிகார தண்டனையையும் செய்ய வேண்டியது கடமையாகிவிடும்.

நோன்பின் மக்றூஹ்கள்

நோன்பை மறந்து தண்ணீர் குடித்தல், புசித்தல், மலஜல உபாதைகளுக் கிருந்துவிட்டு ஜலத்தால் துப்பரவு செய்வதில் அளவிற்கதிகமாகச் செய்தல், ஒலுச் செய்யும் போது நாசிக்கு நீர் செலுத்துகையில் அளவிற்கதிகமாகச் செய்தல், வாயில் ஜலத்தை வைத்துக்கொண்டிருத்தல், உமிழ் நீரை ஒன்று சேர்த்து விழுங்குதல், ஸ்ஞனம்

செய்யும்போது ஜலத்தினுள்ளிருந்து காற்றைவிடல், ஆசையை அடக்கமுடியாதென்ற பயமுள்ளவர்கள் தமது இல்லாள முத்தமிடல், ஸ்ஞனம் செய்யம்போது ஜலத்தினுள் மூழ்குதல், ஜனபத்துக் காரர்கள் பகலெல்லாம் ஸ்ஞனம் செய்யாதிருத்தல், காதினுள் ஜலம் நுளைந்துவிடல், அவசியமின்றி வஸ்துக்களை மென்று ருசி பார்த்தல், பருப்புபோன்ற சிறிய வஸ்துவை வெறுமனே மெல்லுதல் முதலியவைகள் மக்றாஹ்களாகும்.

நோன்பை முறிக்காத காரியங்கள்

புறங்கூறல், பொய்யுரைத்தல் முதலிய காரியங்களால் நோன்பு முறியாது. ஆனல், நோன்பின் பயன் இல்லாதொழிந்துபோம். புழுதி, தூசு, காரம், புகை முதலியவைகள் தொண்டையினுட் செல்லல், சொர்ப்பன ஸ்கலிதமாகுதல், ஒலுச்செய்த பிறகு வாயில் எஞ்சியுள்ள ஈரத்தை உமிழ் நீருடன் சேர்ந்து விழுங்கிவிடல், நாசியிலுள்ள சளியை உரிஞ்சியதால் அது தொண்டைக்குட்சென்றுவிடல், எண்ணெய் ஸ்ஞனம் செய்தல் ஆகியவைகள் நோன்பை முறிக்கா. குழந்தைகள் புசிப்பதற்காக பண்டங்களை மென்றுகொடுக்க நோன்பல்லாதவர்கள் அகப்படாத சமயத்தில், நோன்பாளிகள் மென்றுகொடுக்கலாம். ஆனல், அதன் ரசத்தைத் துப்பிவிடவேண்டும்.

கோபக் குணமுள்ள புருஷர்களுக்குப் பயந்த ஸ்திரீகள் சாப்பாட்டை வைத்து ருசி பார்த்து விட்டு, துப்பிவிடலாம். தாடி மீசைகளுக்கு எண்ணெய் பூசிக்கொள்ளல், பற்குச்சியால் பற்றுலக்கல் ஆகியவைகள் நோன்பை முறிக்கவுமட்டா, மக்றாஹ்மல்ல.

நோன்பு நிறைவேறுவதற்குரிய ஷர்த்துகள்

1. பகல் முழுவதும் சித்த சுவாதினமிருப்பதுடன் முஸ்லிமாகவு மிருக்கவேண்டும்.

2. மேற்படி இரு காரியங்களுடன் பிரவச ருது, மாதாந்த ருது ஆகியவைகளும் வரக்கூடாது.

கப்பாரா என்னும் பரிகார தண்டனைகள்

றமலான் மாதத்தின் அதாவான நோன்பையோ அல்லது கலாவான நோன்பையோ வேண்டுமென்றே முறித்துவிட்டால் அவைகளைக் கலாச் செய்வதுடன் அடியிற்கண்ட பரிகார முறைகளில் ஒன்றைச் செய்ய வேண்டும்.

எவ்வித ஒச்சியமுமில்லாத ஒரு அடிமையை விடுதலை செய்யவேண்டும். அப்படிச் செய்ய இயலாவிட்டால் தொடர்ச்சியாக அறுபது நாட்கள் நோன்பு வைக்க வேண்டும். மாதாரம்பத்தில் நோன்பு நோற்றால் இரண்டு மாதம் பூர்த்தியாக நோன்பு வைக்கவேண்டும். இவ்விரண்டு மாதங்களிலும் மொத்தத்தில் 60-நோன்புகள் இல்லாவிட்டாலும குற்றமில்லை.

மாதாரம்பத்திலல்லாமல் இடையிலுள்ள காலங்களில் நோன்புவைத்த ஒருவர் தொடர்ச்சியாக 59 ஐம்பத்தொன்பது நோன்புகள் நோற்றுக் கடைசியாக ஒரு நோன்பை நோற்று 60 நோன்புகளாகப்பூர்த்தி செய்யத் தவறினாலும் அல்லது மாதாரம்பத்தில் நோன்பு வைத்தவர் இரண்டாவது மாதத்தின் இறுதியில் ஒரு நோன்பை மட்டிலும் தவறவிட்டு விட்டாலும் மறுபடியும் புதிதாக இரண்டு

யாதம் அல்லது அறுபது நாட்கள் நோன்புவைக்க வேண்டும்.

இல்லிதமான நோன்புகளை நோற்கும் ஸ்திரீ புருஷர் இரு பாலரும் துல்ஹஜ்ஜுமீ 10, 11, 12 13, ஆகிய தேதிகளும், ஷவ்வால்மீ 1 தேதியும் வருகிற நாட்களைக் கவனித்து, அவ்வாறுன நாட்கள் வராத காலத்தில் நோன்பு நோற்க வேண்டும். இந்த ஐந்து நாட்களும் நோன்பு நோற்க ஆகாத நாட்களாக இஸ்லாம் மதம் ஏற்படுத்தி இருப்பதால், இந்த நாட்களுக்கு மட்டிலும் விதி விலக்கு இருக்கும் என்று நம்பலாகாது. எவ்விதத்திலும் இரண்டு மாத நோன்பின் அல்லது அறுபது நோன்புகளின் தொடர்ச்சி விட்டுப்போகலாகாது.

இவ்வாறு அறுபது நோன்புகள் நோற்க இயலாதவர்கள் அறுபது ஏழைகளுக்கு இரண்டு வேளைகளிலும் திருப்திகரமாக அன்னமளிக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு நபர் ஒன்றுக்கு மணிக்கோதுமையானால் அரை மரக்கால் அதாவது பட்டணம் படியினால் ஒன்றே அரைக்கால்படி அல்லது தொலிக்கோதுமை, பேரீத்தம் பழம் ஆகியவைகளானால் ஒரு மரக்கால் அதாவது பட்டணம்படியினால் இரண்டேகால் படியும் கொடுக்க வேண்டும். இவைகளின் கிரயத்தைக் கொடுப்பதாக இருந்தாலும் கொடுக்கலாம்.

இம்மூவகைப் பரிகார முறைகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்துவிடலாம் என்று விதியில்லை. அடிமையைத்தான் விடுதலை செய்யவேண்டும். அடிமை இல்லாமற்போய் விட்டால் அல்லது அடிமையை விலைக்கு வாங்

கப் பொருள் இல்லாவிட்டால் நோன்பு நோற்க வேண்டும். தேகத்தில் நல்ல புஷ்டியுள்ளவர்கள் நோன்பைத்தான் நோற்கவேண்டும். நோன்புவைக்க இயலாதவர்கள்தான் அறுபது ஏழைகளுக்கு அன்னமளிக்கவேண்டும்.

தவிரவும், சித்த சுவாதீனமும், யுக்த வயதும் உள்ளவர்கள் அதாவது ஆக்கில் பாலிகு ஆகிய இரண்டு முள்ளவர்கள்தான் இப்பரிகார தண்டனையைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். பைத்தியக்காரர்களும், சிறு பிள்ளைகளும் நோன்பு நோற்கக் கடமைப்படாதிருப்பதால், அவர்கள் நோன்பை முறித்து விட்டால் பரிகார முறைகளைச் செய்யவேண்டியதில்லை. நபில் நோன்பை முறித்தாலும் இவ்விதப்பரிகார முறைகளில்லை.

நோன்பை முறித்த அதே தினத்தில் கடுமையான வியாதி போன்றவைகள் வந்து நோன்பு நோற்க வேண்டிய கடமை அவர்களுக்கு நீங்கி விட்டாலும், நோன்பு நோற்க இயலாதவிதமான வியாதி வந்து விட்டாலும் அவர்கள் கப்பாரா என்னும் பரிகார முறைகளைச் செய்யவேண்டியதில்லை. இதுபோலவே நோன்பை முறித்த அதே தினத்தில் மாதாந்த ருதுவோ, பிரசவ ருதுவோ வந்து விட்டால் அத்தகைய ஸ்திரீகளும் கப்பாராக் கொடுக்க வேண்டியதில்லை.

ஸ்திரீகள் மாதாந்த ருது வரும் காலத்தில் நோன்பு நோற்பதினின்றுந் தடுக்கப்பட்டிருப்பதால், இத்தகைய நோன்புகளைத் தொடர்ச்சியாக 60 அறுபது நாட்களுக்கு நோற்க இயலாது. ஆதலால், அவர்கள் மட்டிலும் அவ்வாறான ருது காலத்தைக் கழித்து விட்டு பாக்கியுள்ள காலங்களில் 60 நோன்புகளைத் தொடர்ச்சியாக வைக்கவேண்டும்.

மாதாந்த ருது சில ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் வராமல் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு வருவது முண்டு, வயோதிக ஸ்திரீகளுக்கு மாதாவிடாய் அடியுடன் வராமல் நின்று போவது வழக்கத்தில் இருந்து வருகிறது. இத்தகைய ஸ்திரீகள் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் அல்லது அறுபது நாட்கள் நோன்பு வைக்கவேண்டும்.

இஃதிகாப்

ஐந்து நேரத்துத் தொழுகைகளும் இமாம் ஜமாஅத்தாக நிகழுகிற மஸ்ஜிதில் இஃதிகாபிருக்கிறதாக நிய்யத்துச் செய்து தங்கி இருக்கவேண்டும். தொழுகைக்கு இமாம் ஜமாஅத்து நடைபெறுத மஸ்ஜிதில் இஃதிகாபிருக்கக் கூடாது. ஸ்திரீகள் தங்கள் வீடுகளிலுள்ள மஸ்ஜிதில் இஃதிகாபிருக்க வேண்டும்.

இஃதிகாபு மூன்று வகைப்படும்

1. நேரிச்சைக்காக இஃதிகாபிருப்பது வாஜிபு.

2. றமலான் மாதத்தின் கடைசி பத்தில் இஃதிகாபிருப்பது ஸுன்னத்து முஅக்கதா கிபாயா.

3. இவ்விரண்டையும் தவிரவுள்ள இஃதிகாபுகள் முஸ்தஹப்பு.

நேரிச்சையான இஃதிகாபுகளுக்கு நோன்பு நோற்பது ஷர்த்து. நபிலான இஃதிகாபுகள் ஒரு சொற்ப நேரமாக இருந்தாலும் ஆகும்.

ஜும்ஆத் தொழுகைகள், பெருநாள் தொழுகைகள் ஆகியவைகளை நிறைவேற்றுதல்போன்ற மத சம்பந்தமான

அவசியங்களை அல்லது மலஜல உபாதைகளைக் கழித்தல், சொற்பன ஸ்கலிதத்தால் ஏற்பட்ட பெருந்தொடக்கை நீக்கும் பொருட்டு ஸ்நானம் செய்தல், தேகம் அல்லது உடுத்தி இருக்கிற உடையில் பட்டுள்ள அசங்கிதத்தை நீக்குதல் போன்ற இயற்கையான காரியங்கள், மஸ்ஜித இடிந்து போதல் அல்லது அக்கிரமஸ்தர்கள் வேண்டுமென்றே அக்கிரமித்து வெளியேற்றல் போன்ற எதிர்பாராத அவசியங்கள் போன்ற காரியங்களுக்காக அல்லாமல் வேறு காரியங்களுக்காக மஸ்ஜிதை விட்டு வெளியேறக்கூடாது. அகாரணமாக ஒரு கூஷ நேரமேனும் வெளியேறினால் வாஜிபு தவறிவிடும். இஃதிகாபிருப்பவர் பல நாட்கள்வரை ஸ்மரணை தப்பிவிட்டாலும் பயித்தியம் பிடித்திருந்தாலும் வாஜிபு தவறிவிடும்.

இஃதிகாபிருப்பவர் மஸ்ஜிதில் உண்ணலாம், குடிக்கலாம், நித்திரை செய்யலாம். தனக்கும் தன் குடும்பத்தாருக்கு தேவையான வஸ்துக்களைக் கிரயத்திற்கு வாங்கவும் செய்யலாம். ஆனால், கிரயத்திற்குரிய சாமான மஸ்ஜிதிற்குக் கொண்டு வருவது மக்றூஹ. தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் சொந்த உபயோகத்திற்கல்லாமல் வியாபாரத்திற்காகவுள்ள சாமான்களை மஸ்ஜிதுக்குக்கொண்டு வராமல் அவைகளைப்பற்றி விலை பேசி முடிப்பது மக்றூஹ. நன்மையான காரியம் என்ற கொள்கையுடன் இஃதிகாபிருப்பவர் மௌனமாக இருப்பது மக்றூஹ. இவ்வாறு செய்வது வேதக்காரர்களது விரதம். இது மாற்றப்பட்டு விட்டது. ஆனால், பேசுவதால் வீணான பேச்சுக்களையும் பேச நேரிடும் என நாவைக்காக்கவேண்டும் என்ற கருத்துடன் மௌனமாக இருந்தால் குற்றமில்லை.

திருகுர்ஆன ஓதுதல், திக்று செய்தல், ஹதீது கூறல் அல்லது கேட்குதல், கல்வி பயிலுதல் அல்லது கற்பித்தல், ஸீரத்துன்னபி (ஸல்), கலைமகள் அன்பியா, ஸாலிஹான வர்களது ஹிக்காயத்துகள் ஆகியவைகளைப் படித்தல், மத சம்பந்தமான காரியங்களை எழுதுதல் ஆகியவைகள் நல்லது. இவ்விதமான காரியங்களையே இஃதிகாபிருப்பவர் கடைப்பிடிக்கவேண்டும்.

ஸம்ஸார்க்கம் செய்வதும், அதற்கான லீலைகளும் இஃதிகாபிருப்பவருக்கு ஹறாம். ஸம்ஸார்க்கம் செய்வதால் இஃதிகாப் முறிந்து விடும். அதனைத் தவிரவுள்ள இதர கலவிகளால் ஸ்கலிதமாகி விடும் பக்ஷத்தில் இஃதிகாபு முறிந்து விடும்.

பல நாட்கள் இஃதிகாபிருப்பதாக நேரிச்சை செய்திருந்தால் பகல் பொழுதுடன் இராக்காலத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். தொடர்ச்சியான பல இரவுகள் இஃதிகாபிருப்பதாக நேரிச்சை செய்தால் அவைகளின் பகல்களையும் அவைகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு நாள் இஃதிகாபிருப்பதாக நேரிச்சை செய்தால், அவைகளின் இரண்டு இரவுகளிலும் இஃதிகாபிருக்கவேண்டும். இரவுகளில்லாமல் பகல் காலங்களில் மட்டிலும் இஃதிகாபிருப்பதாக குறிப்பிட்டு நேரிச்சை செய்தால், பகல் காலங்களில் மட்டிலும் இஃதிகாபிருந்தால் போதுமானது.

இஃதிகாபின் மகத்துவம்

இஃதிகாப் இருக்கவேண்டும் என்று இஸ்லாமிய ஷரீ அத்தில் கடமையாக்கப்படா விட்டாலும், இது மத சம்மத

மானது என்ற விஷயம் திருகுர்ஆனின் மூலமாகவும், ஹதீதுகள் மூலமாகவும் ருஜூவாகிறது. இது அந்தரங்க சுத்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் இது எல்லா நற்கிரியைகளிலும் மிக உன்னதமானது.

இஃதிகாபுக்கென்று வந்து விடுபவர் உலக சம்பந்தமான காரியங்களை விட்டுத் தன்னை ஒதுக்கி வைத்தே வருகிறார். தன்னை எஜமானனிடம் ஒப்புக்கொடுத்து விடுகிறார். தன் எஜமானது வீட்டிலேயே இருந்து, அவனை வணங்குவதாகத் தன்னைக்கட்டுப் படுத்திக்கொள்கிறார்.

ஹஜ்றத் இமாம் அஃலம் அபூஹனீபா (றஹ்) அவர்களது ஷெய்குகளில் ஒருவரும், ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (றலி) அவர்களது சிஷ்யருமாக ஹஜ்றத் அத்தாஉ இப்னு அபீரபாஹ் (றஹ்) என்ற தாபிஇ இஃதிகாபிருப்பவரைக் குறித்துப் பின் வருமாறு கூறி இருக்கிறார்.

அரசன் அல்லது முதல் மந்திரி அல்லது ஒரு பெரிய அதிகாரியின் வீட்டில் தனது கோரிக்கையை சமர்ப்பிப்பதற்காக ஒரு மனிதன் செல்வதையும் அவனைக் காண்பதையும், அவனைக் காத்து நிற்பதையும்போலவே இஃதிகாபிருப்பவரின் நிலைமையுமிருக்கிறது. இஃதிகாபிருப்பவர் தன் எஜமானாகிய அல்லாஹ்த் தஆலாவின் சமூகத்தில் சென்று "எனக்கு அல்லாஹ்த் தஆலா பிழை பொறுக்கும்வரை நான் இதனை விட்டு நீங்காமலிருப்பேன்" என்று கூறுவதைப் போலிருக்கிறது. இஃதிகாபிருப்பவர்கள் இவ்வாக்கியத்தைத் தங்கள் நாவாலுரைக்காவிடினும் அவர்களது நிலை இதனைத்தான் விளக்குகிறது".

அல்லாஹுத் தஆலா இத்தகைய புனித நற்கிரியை களைப் புரிய நம் அனைவருக்கும் நல்லுதவி செய்வானாக ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஜக்காத்து

நோன்பு பர்லான அதே வருஷத்தில் அதாவது ஹிஜ்ரீ இரண்டாவது வருஷத்தில் ஜக்காத்து வேத விதியாகி விட்டது. பொருள் ஒருவரிடம் நிலையாகவே இருக்குமென்ற நிச்சயமில்லாததால், ஜக்காத்துப் பணத்தை உடனே நிறை வேற்றி விடவேண்டும். இதனைப் பிற்படுத்துபவர் பாவி யாவார். ஆனல், தக்க காரணமேற்பட்டுத் தாமதமாகி விட்டால் குற்றமில்லை. ஜக்காத்துக் கொடுக்காதவர் இஸ் லாமிய கோர்ட்டுகளில் சாக்ஷியங் கூறத் தகுதியற்றவராகி விடுவார்.

அல்லாஹுத் தஆலாவின் சமூகத்திலேயே நபிமார் களுக்கு சம்பந்தமிருப்பதால், அவர்களுக்கு இவ்வுலகத் தைய சொத்துக்கள் சொந்தமல்ல. ஆனல், அவர்களுக்கு இருந்து வரும் சொத்துக்கள் இறைவனல் கொடுத்துவைக் கப்பட்டவைகளாகும். அவைகளைச் செலவு செய்வதற் குரிய காலம் வரும்போது செலவு செய்வார்கள். தகுதி இல்லாதவர்களுக்குக் கொடுக்காமலுமிருப்பர். ஆதலால், அவர்களுக்கு ஜக்காத்து விதி இல்லை. இதனல்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது கடைசி நேரத்தில் கூட தங்களிடமிருந்த நாணயத்தை வாங்கி தர்மம் கொடுத்து விட்டது மல்லாமல் "நாங்கள் வாரிசுரிமைக்கு சொத்து விடுவதில்லை. நாங்கள் விட்டுச் செல்லும் சொத்துக்கள்

முஸ்லிம்களுக்கு தர்மம்" என்ற கருத்தில் கூறி விட்டார்கள்.

மேலும், பாபம் என்ற அழுக்கில் தோயக்கூடியவர் களை ஜக்காத்து சுத்தப்படுத்துகிறது. நபிமார்கள் பாபமற்ற வர்கள். பாபம் என்ற அழுக்கு அவர்களுக்கு இல்லை. ஆதலால், அவர்கள் ஜக்காத்துக் கொடுத்து பாபம் என்ற அழுக்கைக் கழுவவேண்டிய நிலைமையிலுமில்லை. ஆதலால், இவ்விதி நபிமார்களைக் கட்டுப்படுத்தாமல் ஏனைய எல்லாரை யும் கட்டுப்படுத்தி இருக்கிறது.

வணக்கங்கள் பல வகையாக இருக்கின்றன. ஸ்தூல வணக்கம் என்றும், பண வணக்கம் என்றும், ஸ்தூலமும் பணமும் சேர்ந்த வணக்கம் என்றும் பலவகையாக வகுக் பட்டிருக்கின்றது. ஜக்காத்து என்னும் விதி பணசம்பந்த மான வணக்கத்தைச் சேர்ந்தது. இதனற்றான் திருகுர் ஆனில் அக்கீ முஸ்ஸலாத்த வ ஆத்துஸ்ஸக்காத.

وَأَقِيمُوا الصَّلٰوةَ وَآتُوا الزَّكٰوةَ

"தொழுகையை நிலைநிறுத்துங்கள் இன்னும் ஜக்காதையும் கொடுங்கள்" என்று இறைவன் பல இடங்களிலும் மடக்கி மடக்கிக் கூறி இருக்கிறான்.

தவிரவும், உலகில் தோன்றும் பலவிதப் போராட்டங் களுக்கும், மாச்சரியங்களுக்கும் காரணங்கள் அனந்த மூண்டு. ஆயினும், அவைகளை நன்கு கவனித்துப் பார்த்தால் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை என்ற மூவகை ஆசைகளுள் ஏதேனும் ஒன்றுகத்தானிருக்கும். நபிமார்களும் வேதங்களும் இம்மூவகை ஆசைகளையும்

விடுத்து இறைவன்பால் ஆசைகொண்டு அவனுக்குக் கீழ்ப் படிந்து நடப்பதையே அதிகம் வற்புறுத்துகின்றன. என் றாலும், இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த பிறகு உணர்ச் சியும் பசியும் கூடவே இருப்பதால், அவைகளைத் தீர்ப்ப தற்காக இம்மூவகைச் சாதனங்களும் இயற்கையாகவே மனிதனுக்குத் தேவையாகவுமிருக்கின்றன. எனவே, இத் தேவைகளிருப்பதால் ஓரளவு அவைகளை மனிதன் தேடிக் கொள்ளவேண்டியதாகமிருக்கின்றது. ஆனால், அவைகள் பால் பற்றுமட்டும் வைக்கலாகாது.

இதனாற்றான் "உலகம் என்பது பொன்னும் பொரு ளும் பெண்ணுமல்ல. அல்லாஹ்வைத் தவ்லாவைத் மறக்கச் செய்வதுதான்" என்ற கருத்தில்.

چیست دنیا از خدا غافل شدن نے قماش و نقرہ و فرزندزن

என்று மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். திருகுர்ஆனிலும்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

நீங்கள் நேசிப்பவைகளிலிருந்து செலவு செய்யாதவரை யில் நீங்கள் சுவர்க்கத்தை அடைந்துகொள்ளவே மாட்டீர்கள் என்றும் கூறி இருக்கிறது.

மேலும், இம்மூவகை ஆசைகளையும் துறக்கவேண்டும் என்பதற்கு இவைகள் அடியுடன் கூடாது என்றுங் கூற வில்லை. இவைகளை அவ்வவைகளுக்குரிய ஸ்தானதில் வைக்க வேண்டும். இறைவனை மறக்கிற அளவிற்கு இவைகளை

நேசிக்கக் கூடாது. சமயம்வாய்ப்பின் இறைவனுக்காக, அவனது கட்டளைகளுக்காக இவைகளைச் செலவு செய்ய வேண்டும். இறைவன் இவைகளின்பால் தேவையற்றவன். ஆதலின், அவனது சிருஷ்டிப் பொருள்களது நன்மையின் பொருட்டுச் செலவு செய்யவேண்டும். இவ்விதமான செலவுகளில் தனது பொருள்களில் சொற்பமேனும் செலவு செய்யாமல், இவைகளையே பெரிதெனமதிப்பவரைத்தான் உலக மக்கள் உலுத்தன், கஞ்சன், உலோபி என்று கூறுகின்றனர். இவர்களை இஸ்லாம் மதம் பகில் என்றழைக்கிறது. சிலர் இப்பொருள்களைப் பிறருக்கு ஈயாவிட்டாலும் தன்மாட்டேனும் தக்கவாறு செலவு செய்வர். சிலர் தன் சொந்த உபயோகத்திற்கும் கூடச் செலவு செய்யார்கள். இத்தகையோர் வடிகட்டிய உலுத்தர்கள். இவர்களை இஸ்லாம் மதம் ஷுஹ்ஹான் என்று கூறுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இத்தகைய உலோபிகளைக் குறித்து.

اَلْبَخِيْلُ عَدُوُّ اللّٰهِ وَلَوْ كَانَ عَابِدًا

உலுத்தன் வணக்கஸ்தலுக இருந்தாலும் கூட, அவன் அல்லாஹ்வின் விரோதியே என்று கூறி இருக்கிறார்கள். இக்கருத்தை ஹஜ்ரத் ஸஅதி அலைஹிர் ரஹ்மா அவர்கள்.

بخیل اربود زاہد وبحر وبر بہشتی نہ باشد بحکم خبر

உலுத்தன் கடலிலும் கரையிலும் தறவு பூண்டாலும் ஹதீதின் கட்டளைப்படி அவன் சுவர்க்கவாதியாகான் என்று

கூறி இருக்கிறார்கள். எனவே, ஒருவனை உலுத்தன் என்றும், தர்மவான் என்றும் பாகுபாடு செய்வது இந்த ஜக்காத்துதான். ஜக்காத்துக்கொடுப்பவர் உலகோபகாரி என்ற நற் பெயருக்கு ஆளாகின்றார். அவருக்கு உலுத்தன் என்று சொல்லப்படமாட்டாது.

தவிர, சன்மார்க்கத்திற் சொல்லப்பட்ட இவ்விதி இனிது நிறைவேற்றப்படுமாயின் உலகில் பசியாலும் பட்டினியாலும் வருந்தும் மாந்தரைக் காண்பதரிது. எனவே, இஸ்லாமியச் சட்டம் ஜக்காத்துக் கொடுக்கக் கடமைப்பட்டவர் எவர்? ஜக்காத்துவாங்க யோக்கியதை யுள்ளவர் எவர்? எந்த அளவிற்கு ஜக்காத்துக் கொடுக்க வேண்டும். எந்தெந்தப் பொருள்களுக்கு ஜக்காத் விதி இல்லை என்ற விபரங்களை தெளிவாக விளக்கி இருக்கிறது. இவைகளைக் கூர்மையாக ஆராய்ந்து பார்ப்பவர் உலக உபகார விஷயத்தில் இஸ்லாம் மதம் முஸ்லிம்களை எவ்விதமாகப் பயிற்சி செய்கிறது என்பதை நன்குணர்வர்.

ஜக்காத்து என்பதென்ன?

ரொக்கம் அல்லது நகை அல்லது பாத்திரங்கள் முதலியவைகள் கடனுக்கு மேல் மிச்சமாகவும், இயற்கையான தேவைகளுக்கு அதிகமாகவும் இருந்தால், அதில் குறிப்பிட்ட அளவிற்கு ஒரு பாகத்தை குறிப்பிட்ட நபருக்குச் சொந்தமாகக் கொடுக்கவேண்டும்.

ஜக்காத்துக் கொடுக்க கடமைப்பட்டவர்

அடிமையாக இல்லாமல் சுதந்திரவானுகவும், முஸ்லிமாகவும், யுக்தவயதை அடைந்தவராகவும், சித்த சுவாதீன

முள்ளவராகவும் இருந்து, அவரிடம் நமது நாட்டிலுள்ள ரூபாய்களில் 52—8—0 இருக்குமாயின், அல்லது 52½, தோலா எடையுள்ள வெள்ளி இருக்குமாயின் அல்லது 200-திர்ஹம்கள் இருக்குமாயின் அல்லது 200-மிதுக்கால் அதாவது 20-இருபது களஞ்சி தங்கம் அல்லது இதன் அளவுள்ள பவுன், நகை, தங்கப்பாத்திரங்கள் இருக்குமாயின் இவைகளில் நாற்பதில் ஒரு பாகத்தை தர்மம் கொடுக்கவேண்டும் (பர்லு). ஆனல், இவைகள் ஒரு வருஷ காலத்திற்கிருக்கவேண்டும்.

ஜக்காத்து பர்லாவதற்கு ஷர்த்து

1. சித்த சுவாதீனமிருக்கவேண்டும்.

2. யுக்தவயதை அடைந்திருக்கவேண்டும்.

3. முஸ்லிமாக இருக்கவேண்டும்.

4. அடிமையாக இருக்கக் கூடாது.

5. கடன், குடி இருக்க வீடு, கட்டிக்கொள்ளத் துணிபோன்ற அத்தியாவசியமான காரியங்களுக்குப்போக அதிகமாக எஞ்சியுள்ள பணம் ஜக்காத்தின் விதத்தை அடைந்திருக்கவேண்டும்.

எனவே, முஸ்லிமாக இல்லாதவர், பைத்தியக்காரர், அடிமை ஆகியவர்கள் மீது ஜக்காத் விதி இல்லை. ஆயிரம் ரூபாய் கடனும் அதற்குத் தக்க சொத்துமிருப்பவர் மீது ஜக்காத்து விதி இல்லை. இவைகளை எல்லாம் நீக்கிப்பார்த்தால் 100-திர்ஹம் அல்லது இருநூறு மிதுக்கால் எடையுள்ள தங்கத்திற்குக் குறைந்த அளவிலுள்ளவர்

களுக்கும் ஜக்காத்து விதி இல்லை. சிறு பிள்ளைகள் மீதும் இது விதி இல்லை.

ஜக்காத்து நிறைவேறுவதற்குரிய ஷர்த்து

1. தொகை கிடைத்ததிலிருந்து ஒரு வருஷம் பூர்த்தியாகி இருக்கவேண்டும். அச்சொத்தைக்கொண்டு அவ் வருஷத்தில் அடைந்தலாபம், அனந்தரம் ஆகிய யாவையும் சேர்த்துக் கணக்கிடவேண்டும்.

2. ஜக்காத்தைக் கொடுக்கும்போது தன் மீதுள்ள விதியான ஜக்காத்தைக் கொடுப்பதாக நிய்யத்துச்செய்ய வேண்டும். அல்லது அப்பொருளைக் கணக்குப்பார்த்து ஒதுக்கி வைக்கும்போது ஜக்காத்துக் கொடுப்பதற்காக வென்று நிய்யத்துச் செய்யவேண்டும். இவ்வாறு நிய்யத் துச் செய்திருந்தால் அதனைக் கொடுக்கும்போது புதிதாக மறுபடியும் நிய்யத்துச் செய்யவேண்டியதில்லை.

இப்பணத்தை ஒரு ஏழைக்குக் கொடுக்கும்போது ஜக்காத்து என நிய்யத்துச் செய்யாமலிருந்து அப்பணம் அவ்வேழையினிடம் இருக்கும்போதே ஜக்காத்து என்று நிய்யத்துச் செய்துகொள்ளலாம். இப்பணத்தை வாங்கிய அவ்வேழை அந்த இடத்திலேயே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அப்பணம்செலவளிக்கப்படுவதற்கு முன்ன தாகவே நிய்யத்துச் செய்தால் போதுமானது.

இப்பணத்தை வாங்கிய ஏழைக்கு இது ஜக்காத்துப் பணம் என்று தெரிவிக்கவேண்டியதுமில்லை. அவ்வேழை இதனை அறிந்துகொள்ள வேண்டுமென்பதுமில்லை. நன் கொடை என்றோ கடன் என்றோ சொல்லி ஒரு ஏழை

யினிடம் இப்பணத்தைக் கொடுத்துவிட்டு இதனை ஜக்காத்து என்று நிய்யத்துச் செய்துகொள்ளலாம். ஆனால், கடன் என்று சொல்லிக்கொடுத்ததை திரும்ப வாங்கலகாது. தன்னிடமுள்ள எல்லாப் பணத்தையும் ஒருவர் தர்மங் கொடுத்துவிட்டால் அவர் மீது விதியாகி இருந்த ஜக்காத்துக் கடமையும் நீங்கிவிடும்.

ஜக்காத்தின் விகிதம்

இருபது களஞ்சி தங்கம் அல்லது இருநூறு திர்ஹம் வெள்ளி இருந்தால் ஜக்காத்தின் விகிதம் வந்துவிடும். இதற்குக் குறைந்ததற்கு ஜக்காத்து விதியில்லை. வியாபாரச் சரக்குகளாயிருந்தால் தங்கம் அல்லது வெள்ளியின் விலையை வைத்துக் கணிக்கவேண்டும். மேற்கண்ட விகிதத்திலோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருந்தால் நாற்பதில் ஒரு பங்கை ஜக்காத்துக் கொடுக்கவேண்டும்.

குடி இருப்பு வீடு, உடை, சொந்த உபயோகத்திலிருக்கிற வாகனம், யுத்தக் கருவிகள், தொழிற் கருவிகள், புத்தகங்கள், ரத்தினம், முத்து முதலியவைகளுக்கு ஜக்காத்து இல்லை. ஆனால், வியாபாரத்திற்காக வைத்திருக்கிற ரத்தினம முத்து முதலியவைகளுக்கு ஜக்காத்து உண்டு.

ஆடு, மாடு முதலியவைகளின் ஜக்காத்து விகிதம்

வருஷத்தில் அதிக நாள் கைத்தீவனமில்லாமல் காட்டில் மேய்ந்து ஜீவிக்கும்படியான ஆடு மாடு ஒட்டகம் ஆகியவைகளுக்கு ஜக்காத்துக் கொடுக்கவேண்டும். கைத்தீவனம் கொடுத்து வளர்க்கும் பிராணிகளுக்கும், சொந்த

உபயோகத்திற்கு வைத்திருக்கும் பிராணிகளுக்கும் ஜக்காத்து இல்லை.

காட்டில் மேய்ந்துவருகிற ஒட்டகங்களில் ஐந்துக்குக் குறைவாகவும், மாடுகளில் முப்பதுக்குக் குறைவாகவும், ஆடுகளில் நாற்பதுக்குக் குறைவாகவுமிருந்தால் அவைகளில் ஜக்காத்து விதி இல்லை.

நாற்பது முதல் நூற்று இருபதுவரையிலுமுள்ள ஆடுகளுக்கு ஒரு ஆடு,

நூற்று இருபது முதல் இருநூறுவரையிலுமுள்ள ஆடுகளுக்கு இரண்டு ஆடுகள்,

இருநூறிலிருந்து முன்னூற்றுத் தொண்ணூற்று ஒன்பது வரையில் மூன்று ஆடுகள்,

நானூறுக்கு நான்கு ஆடுகள்,

அப்புறம் நூற்றுக்கு ஒன்று வீதம் ஜக்காத்துக் கொடுக்கவேண்டும்.

எருமை, பசு, காளை, எருமைக்கிடா ஆகிய யாவும் மாட்டின் இனங்களே. இவைகளில் முப்பது உருப்படிக்கு ஒரு வயது நிறைந்த கன்று ஒன்று, நாற்பது உருப்படிக்கு இரண்டு வயது நிறைந்த ஒரு கன்று,

அறுபது உருப்படிக்கு ஒரு வயது நிறைந்த கன்று இரண்டு,

எழுபது உருப்படிக்கு ஒரு வயதுக் கன்று ஒன்று, இரண்டு வயதுக் கன்று ஒன்று.

என்பது உருப்படிக்கு இரண்டு வயதுக் கன்று இரண்டு தொண்ணூறு உருப்படிக்கு ஒரு வயதுக் கன்று மூன்று, நூறு உருப்படிக்கு ஒரு வயதுக் கன்று இரண்டும், இரண்டு வயதுக் கன்று ஒன்றும்.

இவ்விதமாக முப்பதுக்கும், நாற்பதுக்கும் கணக்குப் பார்த்துக் கொடுக்கவேண்டும்,

ஒட்டகங்கள் நமது நாட்டில் இல்லாததால் அவைகளைக் குறித்த விபரத்தை இங்கு எழுதவில்லை.

நன்செய் புஞ்செய்

நீர்ப் பாசனவசதி இருந்து, தண்ணீர் பாய்ச்சி விளையும் பூமிகளுக்கு இருபதிலொருபங்கும் மழையால் விளையும் புஞ்செய்களுக்கு வெள்ளாண்மையில் பத்திலொரு பங்குமுண்டு. இவைகளைக் குரிக்கப்பட்டிருக்கிறது. நம் முடைய நாட்டில் இவ்விதமான வரிவசூல் கிடையாது. ஆதலால், இவைகளைப் பற்றிய விரிவான விபரங்களைப் பெரிய நூல்களில் கண்டுகொள்க.

ஜக்காத்து வாங்க அருகதையுள்ளவர்கள்

1. ஜக்காத்துக் கொடுக்கவேண்டிய அளவிற்குச் சொத்தில்லா ஏழை (பக்கீர்).

2. எவ்விதச் சொத்துமே இல்லாதவர் (மிஸ்கீன்).

3. ஜக்காத்து வரியை வசூல்செய்யும் சர்க்கார் அதிகாரி (ஆமில்).

4. தன் கிரயத்தைக் கொடுத்துவிட்டு உரிமை பெற்றுவிடலாம் என்ற உரிமைச் சீட்டுப் பெற்ற அடிமை (முகாத்தபு).

5. கடன் பட்டவர்.
6. மார்க்க யுத்தத்திற்குச் செல்பவர்.
7. வழிப் போக்கர்.

மத சம்பந்தமான கல்வியை கற்கச் சென்றுள்ள மாணவர்கள் ஆறுவதுவகை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர்களை இவ்வினத்திலாவது ஏழை மிஸ்கீன்களின் இனங்களிலாவது சேர்க்கலாம். இவர்களுக்கு கித்தாபு முதலிய கிரந்தங்களை வாங்கிக் கொடுப்பதாலோ, இலம் ஸ்காலர் ஷிப்புகள் கொடுப்பதாலோ ஜக்காத்தைக் கொடுக்கலாம். இவ்விதமாகவே அனுதைகளின் நிலைமையுமிருக்கிறது. பணக்காரக் குடும்பத்தில் உள்ள சொத்துக்கார அனுதைகளை இதில் சேர்க்கக் கூடாது.

மத்ரஸாக்களுக்கும், யத்தீம் கானுக்களுக்கும் ஜக்காத்துப் பணத்தைக் கொடுக்கலாம். ஆனால், அதன் நிர்வாகிகள் இப்பணத்திற்கு "தம்லீக்" அதாவது சொந்தப்படுத்திக் கொடுப்பது ஷர்த்தாக இருப்பதைக் கவனித்து கித்தாபுகள் உடைகள் இவைகளை இலவசமாக வாங்கிக் கொடுத்தோ, பரீக்ஷைகளில் இலம் கொடுப்பதென்றோ பெயர் வைத்துக்கொடுக்கலாம். அல்லது அவர்களுக்குச் சாப்பாட்டிற்கென மாதந்தோறும் பணத்தைக் கொடுத்துவிடலாம்.

நமது தேசத்திலுள்ள மத்ரஸாக்களில் ஓதுகிற பிள்ளைகளுக்கு மத்ரஸாவிலேயே சாப்பாடு கொடுக்கிற வழக்கம் சில இடங்களிலிருக்கிறது. இச்சாப்பாடுகள் மாணவர்களுக்குச் சாப்பிடத்தான் அனுமதிக்கப்படுகின்றன. அவை

களை மாணவர்களுக்குச் சொந்தப்படுத்திச் கொடுப்பது மில்லை. சில சமயங்களில் வேறு சிலருக்கும் அச்சாப் பாட்டைக் கொடுக்கப்படுகிறது. ஆதலால், அவ்விதமான விநியோகத்திற்கு ஜக்காத்துப் பொருளை நேர் முகமாகக் கொடுக்கலாகாது. ஆதலால், ஜக்காத்துப் பொருள்களை ஸ்காலர்ஷிப்பு என்று பெயர் வைத்து மாணவர்களிடம் கொடுத்துவிட்டு, அப்புறம் அவர்களிடமிருந்து சாப்பாட் டிற்கென்று வசூல்செய்து மத்ரஸாவின் சட்டப்படி அவை களைச் செலவு செய்யலாம்.

சில இடங்களில் பொதுஜனசேவை செய்யும் சங்கங்கள் ஜக்காத்துப் பணத்தை வசூல்செய்து லௌகீகக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஸ்காலர் ஷிப்புகளைக் கொடுக் கின்றன. இந்த ஸ்காலர் ஷிப்புகள் சில இடங்களில் கடனுகவும் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு கடனுகக் கொடுப்பது முற்றிலும் ஜாயிஸ் இல்லை.

இனும் ஸ்காலர் ஷிப்புக் கொடுப்பதும் பீஸபீல் இனத்தைச் சேராது. பக்கீர், மிஸ்கீன் என்ற வகையையே சேரும். ஆதலால், அம்மாணவர்கள் இவ்விருவகைகளில் ஏதேனும் ஒருவகையில் வருகிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஜக்காத்து வாங்க அருகதையில்லாதவர்கள்

1. காபிர்களுக்கு ஜக்காத்துக்கொடுக்கலாகாது. இவர் கள் திமிக்காபிர் அதாவது முஸ்லிம் ராஜ்யத்தில் ஜிஸ்யா வரியைக் கொடுத்து, முஸ்லிம் அரசாங்கச் சட்டத்திற்கு உள்பட்டு நடப்பவர்களுக்கு ஜக்காத்தையும் கொடுக்க லாகாது, உஷ்று, கராஜ் ஆகிய ஜக்காத்துகளையும் கொடுக்க

லாகாது. மற்றவைகளைக் கொடுக்கலாம். ஹர்பிகாபிர் அதாவது முஸ்லிம் ராஜ்யத்திற்கு விரோதியாக இருக்கிற காபிர்களுக்கு எவ்விதமான ஜக்காத்து ஸதக்காக்களையும் கொடுக்கலாகாது.

2. ஜக்காத்து விதியாகக் கூடிய அளவிற்கு ரொக்க முள்ளவர் அல்லது அதற்குத் தக்கவாறு சொத்துள்ள வருக்கும் கொடுக்கலாகாது. இவர்கள் ஜக்காத்துக் கொடுக்கத் தக்கவராக இருப்பதால் இவர்கள் ஜக்காத்து வாங்க உரிமை பெறவில்லை.

3. சீமான்களது மக்கள் ஆண் இருந்தாலும் பெண் ணாக இருந்தாலும் கொடுக்கலாகாது. ஆனால், இவர்கள் பூக்தவயதை யடைந்திருந்தால் கொடுக்கலாம். ஏனெனில், சீமான்கள் தங்கள் இளம்பிராய மக்களைப் போஷிக்க வேண்டியதிருப்பதால் இவர்கள் சீமான்களது அந்தஸ் திலேயே இருக்கிறார்கள். சீமான்களது பெண் மக்கள் விவாகம்செய்து கொடுக்கப்பட்டு கணவனுடனிருப்பார் களாயின் அவர்களுக்குக் கொடுக்கலாமா? வேண்டாமா? என்பதில் ஒரு முகமான அபிப்பிராயமில்லை. ஆனால், இத்தகையோருக்குக் கொடுக்கலாம் என்பதுதான் அஸஹ் ஹான சொல்.

சீமான்தனமுள்ள ஸ்திரீயின் புதல்வர்களுக்கு ஜக்காத் துக் கொடுக்கலாம். தாய் சீமானாக இருப்பதால் அவளது மக்களையும் சீமான்களாகக் கனிக்கமுடியாது. சீமான் களது ஏழையான மனைவிக்கு ஜக்காத்துக் கொடுக்கலாம்.

3. ஹாஷிம் வமிசாருக்கு ஜக்காத்துக் கொடுக் கலாகாது. இவர்களுக்கு எக்காலத்திலும் கொடுக்கலாகாது.

இவர்கள் தங்களும் ஒருவருக் கொருவர் ஜக்காத்துக் கொடுக்கலாமா? என்பதிலும் கொடுக்கக் கூடாது என்பது தான் உறுதியான சொல். ஆனாலும், இமாம் அஃலம் (றஹ்) அவர்களைத் தொட்டும் இமாம் அபூயூஸுப் (றஹ்) அவர்கள் "அவர்கள் தங்களுள் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளலாம்" என்பதாக ரிவாயத்துச் செய்வதாக நஹ்ர் என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

4. ஜக்காத்துக் கொடுப்பவர் தனது பிச்சளங்களுக்கும் முன்னோர்களுக்கும் அதாவது தகப்பன், தாய் பாட்டன் போன்றவர்களுக்கும் கொடுக்கக்கூடாது.

தனது பிச்சளங்களில் சிறுவர்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்துப் போஷிப்பது தகப்பன் பொறுப்பாக இருக்கிறது. இதுபோல் தாய் தகப்பனையும் பாட்டனையும் இவர்களைப்போன்ற முன்னோர்களையும் போஷித்துக் காப்பது சீமான்களான அவர்களது மக்களின் பொறுப்பாக இருக்கிறது. மேலும், இவர்களுக்குக் கொடுக்கும் ஜக்காத்துப் பணத்தை ஜக்காத்துக் கொடுப்பவரே ஒருவகையில் அடைவராகவும் இருக்கிறார். ஆதலால், இவ்விரு வகைக் காரணங்களாலும் இவர்களுக்குக் கொடுக்கலாகாது.

5. ஜக்காத்துக் கொடுப்பவரின் மனைவி, அடிமை, மூரிச்சீட்டு எழுதி வாங்கிய அடிமை (முக்காத்தபு) ஆகியவர்களுக்கும் கொடுக்கலாகாது.

மனைவிக்குக் கொடுக்கும் பணம் வாரிசுப் பாத்தியத்தில் கணவனுக்கும் மக்களுக்கும் சேருவதாக இருக்கிறது. தவிரவும் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க புருஷன் கடமைப்பட்டிருக்கிறான். ஆதலால், அவள் தகுதி இல்லை. அடி

மைகளும், முரிச்சீட்டு வாங்கிய அடிமை (முக்காத்தபு களும் அடையும் ஜக்காத்துப்பணம் அவர்களது எஜமானு கிய தனக்கே பாத்தியப்படுகிறது. ஆதலால், தம்லீக் அதா வது ஜக்காத்துப்பணத்தில் தனக்கு எவ்விதப் பாத்தியமு மில்லாத விதத்தில் பிறருக்குச் சுதந்திரப் படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற அம்சம் இல்லாமலாகி விடுகிறது. ஆதலால், அவர்களுக்கு இப்பணத்தைக் கொடுக்கலாகாது.

தகப்பனுடன் பிறந்த ஸ்திரீ புருஷர், தாயுடன் பிறந்த ஸ்திரீ புருஷர் தன்னுடன பிறந்த ஸ்திரீ புருஷர் ஆகியவர்களும் இவர்களைப்போன்ற பந்துக்களும் ஏழை யாக இருந்தால் அவர்களுக்குக்கொடுப்பது ஜாயிஸ். மேலும் இவர்களுக்குக் கொடுப்பதால் பந்துக்களை ஆதரித்தல் என்ற புண்ணியமும் சேருகிறது. இவ்விதமான பந்துக்களுக்கு கொடுப்பது இரட்டைப் புண்ணியமாகும். இவ்விதமான பந்துக்களுக்குப் பிறகு, தனது தெருவிலுள்ள ஏழைகள், அப்புறம் தன் சுய ஊரிலுள்ள ஏழைகள், இவர்களுக்குப் பிறகு, தான் மற்றவர்கள் இவ்வித முறையில் கொடுப்பது தான் விசேஷமாகும்.

மேலும், ஒருவருக்குக்கொடுத்தால் அவருக்குத் திகை பும்படி கொடுக்கவேண்டும் (அப்லல்) சொற்பப்பணத்தைப் பலருக்குப் பங்குவைத்து ஒருவருக்குக் கூடப்போதாத முறையில் கொடுக்கலாகாது. இவ்வாறு கொடுப்பது ஸதக்கா விஷயத்தில் குறைவு செய்ததாகவே கருதப்படும். எனவே, ஜக்காத்துக் கொடுத்தாலும் ஏராளமான ஜனங்களுக்குப் பங்குவைத்து காலணு அரையணு என்று கொடுக்காமல் குறைந்த பக்ஷம் ஜக்காத்து வாங்குபவரின் குடும்பத்திற் குத் தக்கவாறு ஒரு ரூபாய்விற்குப்போதுமான அளவாக

அல்லது தணிமணிகள் தேவை இருந்தால் அத்தேவைக்கு தக்கவாறு பெருக்கமாகவே கொடுப்பதுதான் முஸ்தஹப்பு.

ஹஜ்ஜு

இது இஸ்லாம் மதத்தின் ஐம்பெருங்கடமைகளுள் ஒன்று. ஹஜ்ஜுக்குச் செல்ல வசதிகளும் இயல்புகளும் உள்ள ஒருவர்தன் மீதுள்ள இக்கடமையை நிறைவேற்றாமல் மரித்து விடுவாராயின், அவன் நாடினால் யூதனாகச் சாகட்டும் அல்லது கிறிஸ்துவனாகச் சாகட்டும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

யூதரும் கிறிஸ்துவரும் திருகஃபாவை கிப்லாவாக ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றனர். அவர்கள்தான் திருகஃபாவை ஜியாரத்துச் செய்ய இஷ்டப்படுவதில்லை. எனவே, இயல்பும் வசதியுமுள்ள முஸ்லிம் ஒருவர் ஹஜ்ஜுக்குச் செல்லாமலே இருந்து விட்டால், அவர் திருகஃபாவின் மீது தனக்கு வெறுப்பிருப்பதாக நாவாலுரைக்காவிடினும் செய்கையின் மூலம் அவ்வாறிருப்பது போலவே காட்டிக்கொள்வதால் மேற்கண்டவாறு கூறப்பட்டதுபோலும்.

ஒருவர் அல்லாஹ்த் தஆலாவிற்காக அவனை நாடி ஹஜ்ஜுக்குச் சென்று வந்தால், அவரது பாவங்கள் மன்னிக்கப்படும்; அவர் மற்றவருக்காகக் கேட்கும் துஆ இறைவனலங்கீகரிக்கப்படும்.

ஹஜ்ஜு கடமையாக்கப்படல்

وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا

மேலும், அல்லாஹவிற்காக இவ்வீட்டை ஹஜ்ஜுச் செய்வது மனிதர் மீது அங்கு செல்லச் சக்தியுள்ளவர் மீது கடமையாகும். என்ற இவ்வாயத்திற் சொல்லப்பட்ட கட்டளைப்படி ஹஜ்ஜுச் செய்வது முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டிருக்கிறது.

ஹஜ்ஜு என்ற பதத்திற்கு மகத்தான் ஒரு காரியத்தை நாடுதல் என்பது பொருள். குறிப்பிட்ட ஒரு செய்கையைக்கொண்டு குறிப்பிட்ட ஒன்றை அதற்குரிய மாதங்களில் ஜியாரத்துச் செய்தல் என்பது இஸ்லாமிய ஷரீஅத்தின்படி அர்த்தம். முஹம்மதிய ஷரீஅத்திலல்லாமல் இதற்கு முன்னரிருந்த நபிமார்களது உம்மத்துகள் மீதும் ஹஜ்ஜு கடமையாக இருந்ததா? என்பதைக் குறித்து மார்க்க அறிஞர்கள் ஒரு முகமாக அபிப்பிராயங் கூறவில்லை. ஆயினும், இதற்கு முன்னமுள்ள உம்மத்துகள் மீது இது கடமையாக்கப்பட்டில்லை என்பதுதான் சரியான சொல்.

ஹஜ்ஜு எப்பொழுது விதியாக்கப்பட்டது என்பதிலும் அபிப்பிராய ஒற்றுமை இல்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமக்காவை ஹிஜ்றத்துச் செய்து மதினு முனவ்வராவிற் குடியேறுவதற்கு முன்னதாகவே இது விதியாக்கப்பட்டது என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நம்பிக்கைக்கு வெகு தூரமானது. ஹிஜ்ரீ 5-ம் வஷத்தில் இது விதியாயிற்று என்பதாகவும் ஒரு சிலர் கூறி இருக்கின்றனர். ஹிஜ்ரீ 9-ம் வருஷத்தில் விதியாக்கப்பட்டது என்பதாக வேறு சிலர் கூறி இருக்கிறார்கள். இது சரியான அபிப்பிராயம் என்பது காஜி இயால் (றஹ்) அவர்களது கருத்து.

ஹிஜ்ரீ 6-ம் வருஷத்தில் இது விதியாயிற்று என்பதுதான் பிரதான விஷயம்- இதுதான் சரியான சொல்லுமாகும். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்றத்துக்குப் பிறகு ஒரே ஒரு முறைதான் ஹஜ்ஜுச் செய்திருக்கிறார்கள் என்பதாக ஸைதுப்னு அர்க்கம் (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மும்முறை ஹஜ்ஜுச் செய்திருப்பதாகவும், ஹிஜ்றத்துக்கு முன்னர் ஒரு முறையும், அப்புறம் உம்றாவுடன் சேர்த்து ஹஜ்ஜு ஒரு முறையும் நிறைவேற்றியதாகவும் அதுவும் ஹிஜ்ரீ 10-ம் வருஷத்தில் என்பதாக ஜாபிறுப்னு அப்தில்லாஹி (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் ஹஜ்ரீ 9-ம் வருஷத்தில் ஹஜ்ஜுச் செய்தார்கள். திருமக்காவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜெயித்த வருஷத்தில், அங்கு மேலதிகாரியாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட இத்தாபுப்னு அஸ்யத் (றலி) அவர்கள் ஹிஜ்ரீ 8-ம் வருஷத்தில் ஹஜ்ஜுச் செய்தார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்றத்துச் செய்வதற்கு முன் பலமுறை ஹஜ்ஜுச் செய்திருக்கிறார்கள். அவைகள் இத்தனை என்று திட்டமாகக் கூற முடியாது என முல்லா அலீ (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்றத்துச் செய்வதற்கு முன் ஒவ்வொரு வருஷமும் ஹஜ்ஜுச் செய்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு ஹஜ்ஜுச் செய்யத்தடையேற்பட்ட காலங்களைத் தவிர என்பதாக இப்னுல் அஸீர் (றஹ்) ரிவாயத்துச் செய்திருக்கிறார்.

எனவே ஹஜ்ஜுச் செய்வது வயதில் ஒருவருக்கு விதியாகும். அதுவும் அவசரமாக நிறைவேற்றிவிட வேண்டும் என்பதுதான் அஸஹ்ஹான சொல்.

விதியாகுவதற்குள்ள ஷர்த்துகள்

ஹஜ்ஜு விதியாகுவதற்கு எட்டு ஷர்த்துகளிருக்கின்றன. அவை வருமாறு :—

1. முஸ்லிமாக இருக்கவேண்டும்.

2. சித்த சுவாதின மிருக்கவேண்டும்.

3. பாலிகாகி அதாவது யுக்த வயதையடைய வேண்டும்.

4. சுதந்திரம்வேண்டும் அதாவது அடிமையாக இருக்கலாகாது.

5. ஹஜ்ஜுச் செய்வதற்குரிய காலம் வரவேண்டும்.

6. திருமக்காவில் குடியிருந்தபோதினும் நடுத்தரமான முறையில் செலவிடத்தகுந்த கட்டுச் சாதம் உண்டு பண்ணிக்கொள்ள இயல்பு இருக்கவேண்டும்.

7. தனக்குமட்டிலும் சொந்தமான வாகனத்தைச் சித்தம் செய்துகொள்ள இயல்பிருக்கவேண்டும். வாடகை மூலமாகவேனும் வாகனத்தைச் சித்தம்செய்ய இயல்பிருக்க வேண்டும்.

ஹஜ்ஜுச்செய்வதற்காக வாகனத்தை உபயோகித்துக் கொள்ள ஒருவர் அனுமதித்தால், அதற்காக ஹஜ்ஜு வாஜிபாகிவிடாது. உதாரணமாக, தந்தைக்கு மகன் தனது வாகனத்தில் ஒன்றை நன்கொடையாக அளித்தால் அதனை அவன் ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. தன்

செலவுக்கும் தன் குடும்பத்தாரின் செலவுக்கும்தான் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பவரும்வரை கொடுத்தது போக மேல் மிச்சமாக இருப்பதற்கும், வீடு, வீட்டுச் சாமான் கடனை நிறைவேற்றுதல் ஆகியவைகளையும் விட்டு மேல் மிச்சமாக இருப்பதற்கும்தான் இயல்பு உள்ளவர்கள் என்று சொல்லப்படும்.

8. தாருல் ஹர்பிலுள்ளவராக இருந்தால் ஹஜ்ஜு பர்லு என்பதை அறிந்திருக்கவேண்டும். அல்லது தாருல் இஸ்லாமில் குடி இருக்கவேண்டும்.

ஹஜ்ஜை நிறைவேற்றுவது கடமையாவதற்குரிய ஷர்த்துகள்

ஹஜ்ஜு பர்லான பிறகும் அதனை நிறைவேற்றுவது கடமையாவதற்கு ஐந்து ஷர்த்துகளிருக்கின்றன. அவை வருமாறு :—

1. தேகசுகம் இருக்கவேண்டும்.

2. ஹஜ்ஜுக்குச் செல்வதைத் தடைசெய்யுங் காரியங்கள் இல்லாதிருக்கவேண்டும்.

3. பாதையில் பயமில்லா திருக்கவேண்டும்.

4. ஸ்திரீகள் இத்தாவில் இல்லாதிருக்கவேண்டும்.

5. ஸ்திரீகளுக்குத் துணையாக மஹ்ரமான ஆடவர்கள் உடன் செல்லல். மஹ்ரமான ஆடவர்கள் முஸ்லிமாக இருப்பதுடன், யோக்கியராகவும், சித்த சுவாதினமுள்ள வராகவும் யுக்த வயதை அடைந்தவராகவும் இருக்க வேண்டும். சம்பந்தப்புறத்திலோ அல்லது பால் குடி யிலோ மஹ்ரமாக இருந்தாலும் சரியே.

பர்லான ஹஜ்ஜு நிறைவேறுவதற்குரிய காரியங்கள்

ஹஜ்ஜு நிறைவேறுவதற்கு நான்கு காரியங்கள் இருக்கவேண்டியது அவசியம். அவை வருமாறு :—

1. அடிமையல்லாத சுதந்திரனாக இருந்தால் இஹ்ராம் கட்டி இருக்கவேண்டும்.

2. முஸ்லிமாக இருக்கவேண்டும்.

இவை இரண்டும் ஷர்த்துகள். அப்புறம் இரண்டு ருக்னுகளையும் நிறைவேற்றவேண்டும். அவை வருமாறு :—

3. இஹ்ரும் கட்டியவனாக துல்ஹஜ்ஜுமீ 9உ அடிச்சாய்ந்ததிலிருந்து 10உபஜ்றுக்குள்ளாக ஒரு விநாடி நேரமேனும் அறபாத்தில் தங்கவேண்டும். அதற்கு முன் இஹ்ரும் கட்டியவனாக இருக்கிற நிலைமையில் ஸம்ஸார்க்கம் செய்திருக்கக் கூடாது.

4. துல் ஹஜ்ஜுமீ 10உ சூரியோதயத்திற்குப் பிறகு தவாபுல் இபாலாவில் பெரும்பாலான ஷௌத்துகளை நிறைவேற்றி விடவேண்டும்.

ஹஜ்ஜின் வாஜிபுகள்

1. இஹ்ரும் கட்டிக்கொள்வதற்கென்று குறிப்பிடப் பட்டுள்ள ஸ்தலங்களாகிய மீக்காத்துகளில் இஹ்ரும் கட்டிக் கொள்ளல்.

2. அறபாத்தில் சூரியாஸ்தமானம் வரையில் தாமதித்தல்,

3. தல் ஹஜ்ஜுடீ 10ஆ கிழக்கு வெளுத்ததி லிருந்து சூரியோதயத்திற்குள் முஸ்தலிபா என்னும் ஸ்தல தில் தாமதித்தல்.

4. ஜம்ரூக்களில் பொடிக்கற்களெறிதல்.

5. ஹஜ்ஜு உம்ரு ஆகிய இரண்டிற்கும் சேர்த்து இஹ்ரும் கட்டிய காரினும், உம்ரூச் செய்த பிறகு ஹஜ் ஜுக்கு இஹ்ரும் கட்டிய முத்தமத்திஉம் குர்பானி செய்தல்

6. தலைகூவரம் செய்தல் அல்லது முடியைமட்டிலும் வெட்டிக் கொள்ளல்,

7. தலைகூவரம் செய்தல் அல்லது முடியை வெட்டிக் கொள்ளல் ஆகியவைகளுக்கு முன்னதாக ஜம்ரூவில் கல் லெறிவதை முற்படுத்துதல்,

8. தலைகூவரம் செய்வதை அல்லது முடியை வெட்டிக் கொள்வதை அய்யாமுன்னஹ்ரில் அதாவது குர்பானி கொடுக்கும் நாளில் நிறைவேற்றுதல்,

9. ஹஜ்ஜு உம்ரு ஆகிய இரண்டிற்குமாக இஹ்ரும் கட்டிக் கொண்டவர்களான காரின்களும், உம்ரூச்செய்த பின் ஹஜ்ஜுச் செய்வதற்காக வெவ்வேறு இஹ்ரும் கட்டியவர்களான முத்தமத்திஉகளும் ஜம்ரூக்களில் கல் லெறிவதற்கும், தலைகூவரம் செய்துகொள்வதற்கு மிடையில் குர்பானி செய்தல்,

10. அய்யாமுன் நஹ்ராகிய குர்பானியின் நாட்களில் தவாபுஸ்ஸியாராவை நிறைவேற்றல்,

11. ஹஜ்ஜுடைய நாட்களில் ஸபா, மர்வா ஆகியவைகளுக் கிடையில் ஸயீ செய்தல் அதாவது தொங் கோட்டம் ஓடல்,

12. தவாபு செய்த பிறகு ஸயீ செய்தல்,

13. தங்கடமில்லாதவர்கள் நடந்துபோதல்,

14. ஸயீ செய்வதை ஸபா என்ற ஸ்தலத்திலிருந்து ஆரம்பித்தல்.

15. தவாபுல்விதாஇ நிறைவேற்றல்,

16. சகலவிதமான தவாபுகளையும் ஹஜ்றுல் அஸ்வதி லிருந்து ஆரம்பித்தல்,

17. ஹஜ்றுல் அஸ்வதிலிருந்து வலப்புறமாக தவாபு செய்தல்,

18. தங்கடமில்லாதவர்கள் தவாபு செய்யும்போது கால் நடையாகவே தவாபு செய்தல்,

19. இரண்டு விதமான அசுத்தங்களை அதாவது சிறு தொடக்கு பெருந் தொடக்கு ஆகிய இரண்டையும் விட்டுச் சுத்தமாக இருத்தல்,

20. தேகத்தில் மறைக்க வேண்டிய இடத்தை மறைத்தல்,

21. தவாபு ஜியாராவில் சிறு பான்மையான ஷௌத்துகளைச் செய்தல். அதாவது திருகஃபாவை ஏழு முறை சுற்றிவரவேண்டும். இதில் நான்குமுறை சுற்றுவது ருக்னு. பாக்கியுள்ள மூன்றுமுறை சுற்றுவது வாஜிபு,

22. இஹ்ரும் கட்டியவர் விலக்கி இருக்கவேண்டிய காரியங்களைச் செய்யாமல் விலகி இருத்தல்,

ஹஜ்ஜுடைய ஸுன்னத்துகள்

1. இஹ்ரும் கட்டும்போது ஸ்னானம் செய்து கொள்ளல் அல்லது ஒலுச் செய்துகொள்ளல்,

2. புதிதாகவுள்ள அல்லது வெளுத்த இஹ்ரும் உடையை அணிதல். அதாவது அறையில் ஒரு துணியைக் கட்டிக்கொண்டு ஒரு அங்கவஸ்த்திரத்தைப் போர்த்திக் கொள்ளல்.

3. இஹ்ரும் கட்டுவதற்கு முன் வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்ளல்,

4. இஹ்ரும் கட்டும்போது இரண்டு ரக்அத்துத் தொழுதல்,

5. இஹ்ரும் கட்டியதிலிருந்து மேட்டின் மீதேறும் போதும், மேட்டிலிருந்து கீழிறங்கும்போதும், வாகனங்களைச் சந்திக்கும்போதும் தல்பியா ஓதுதல்,

6. தல்பியா ஓதும்போதெல்லாம் அதனை மடக்கி மடக்கி ஓதுதல்,

7. ஸலவாத்துகளை அதிகம் ஓதுதல்,

8. சுவர்க்கலோகத்தைக் குறித்து இறைவனிடம் துஆச் செய்தல்,

9. நரகத்தைவிட்டு அவனிடம் காவல் தேடுதல்,

10. மக்கமா நகரினுள் பிரவேசிப்பதற்காக ஸ்னானஞ் செய்தல்,

11. திருமக்காவில் பிரவேசிக்கும்போது மேல் புறத்து வாசல் வழியாகப் பிரவேசித்தல்,

12. திருகஃபாவை தரிசிக்குந்தோறெல்லாம் தக்பீர், தஹ்லீல், ஸலவாத்து முதலியவைகளை ஓதுதல்,

13. தனக்குத் தேவையானவைகளைக் குறித்து இறைவனிடம் துஆக் கேட்குதல்,

14. தவாபுல் குதூம் என்னும் தவாபைச் செய்தல்,

15. தவாபு செய்யுந்தோறெல்லாம் ஹஜ்றுல் அஸ்வதுக்கு எதிரில் தக்பீர் சொல்லி அதனை முத்தமிடல்,

16. ஹஜ்றுல் அஸ்வதிற்குப் பக்கத்தில் சென்று அதில் முகத்தை வைத்து முத்தமிட இயலாவிட்டால் கையில் தொட்டு முத்தமிடல் அதற்கும் இயலாவிடில் அதன்பால் கையை நீட்டி சமிக்ஞை செய்து தக்பீர் தஹ்லீல் ஸலவாத்து ஆகியவைகளை ஓதுதல்,

17. துல் ஹஜ்ஜு மீ 7உ லுஹர் தொழுத பிறகு இமாம் குத்பா ஓதுதல்.

18. ஸயீ செய்யும்போது மீனனில் அஃலைனிக் கிடையில் தோட்களை அசைத்து விரைந்து தொங்கோட்டம் ஓடுதல்.

19. துல் ஹஜ்ஜு மீ 8உ சூரியோதயத்திற்குப் பிறகு மினாவிற்குப் புறப்படல்,

20. ஷை மீ 9உ இரவை மினாவில் கழித்தல்,

21. ஷை மீ 9உ காலை சூரியோதயத்திற்குப் பிறகு மினாவிலிருந்து அறபாவிற்குச் செல்லல்,

22. அறபாவில் அடித்திரும்பிய பிறகு லுஹர் வேளையில் இமாம் குத்பா ஓதுதல்,

23. அங்கு லுஹரையும் அஸரையும் ஒன்றுகச் சேர்த்துத் தொழுத பிறகு ஜனங்கள் யாவரும் மௌத்தினில் (தங்குமிடத்தில்) தங்கள் பாவங்களைக் குறித்து வருந்திக் கண்ணீர் வடித்தல்,

24. தனக்கும் தன் பெற்றோர்களுக்கும் இரு உலக நன்மையை அருளவேண்டி துஆச் செய்தல்,

25. சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு அறபாவைவிட்டுப் புறப்பட்டு முஸ்தலிபா என்னுமிடம் வருதல்,

26. முஸ்தலிபாவில் இரவில் தங்குதல்,

27. மினாவில் தங்கி இருக்கும் காலங்களில் இரவில் தனது சாமான்களுடன் தங்கி இருத்தல்,

28. ஹஜ்ஜுச் செய்வதற்காக மட்டிலும் இற்றும் கட்டியவர்கள் குர்பானி கொடுத்தல்,

29. குர்பானியின் மாமிசத்தில் கொஞ்சமேனும் புசித்தல்,

30. துல் ஹஜ்ஜுடைய 10வ இமாம் குத்பா ஓதுதல்,

31. மினாவிலிருந்து செல்லும்போது ஒரு ஸாஅத்து நேரமேனும் மக்காவின் முற்ற வெளியில் தாமதித்தல்,

32. ஜம்ஜம் கிணற்று ஜலமருந்துதல்,

33. அதனை வயிறுநிறம்ப அருந்துதல்,

34. அதனை அருந்தும்போது கைத்துல்லாவை நோக்கி நின்று கொள்ளல்,

35. அந்த ஜலத்தை தலையிலும் சரீரத்திலும் தெளித்துக்கொள்ளல்,

36. கஃபாவை வகீலாவாக வைத்து இறைவனைப் பிரார்த்திப்பதுபோல, ஹஜ்றுல் அஸ்வதிற்கும் கஃபத்துல்லாவின் வாசற்படிக்கு மிடையிலுள்ள முல்தஜிமாவில் முகத்தையும் நெஞ்சையும் வைத்து கஃபாவின் திரையைப் பிடித்துக்கொள்ளல்,

37. அப்பொழுது ஸலவாத்து தக்பீர் தஹ்லீல் முதலியவைகளை ஒதி மிகுதி சஞ்சலத்துடன் துஆச் செய்தல்,

38. மஸ்ஜிதுல் ஹறாமைவிட்டு வெளியேறும்போது திருகஃபாவைக் கடைக் கண்ணால் பார்த்த வண்ணம், அதன்பால் முதுகைத்திருப்பாமல் அழுகையும் கண்ணீருமாக வெளியேறுதல். அழுகைவராவிட்டாலும் அழுவது போலேனும் நடித்தல்.

ஹஜ்ஜுல் அக்பர்

துல்ஹஜ்ஜுமீ 9-தேதியாகிய அறபா நாள் வெள்ளிக் கிழமையாக அறப் நாட்டிலிருந்தால் அவ்வருஷத்தைய ஹஜ்ஜை ஹஜ்ஜுல் அக்பர் என்றழைக்கின்றனர். வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் நாளாக இருப்பதுடன், ஹஜ்ஜும் சேர்ந்துகொள்வதால் அதற்கு பெரிய ஹஜ்ஜு என்ற பெயர் வந்தது. அது இதர ஹஜ்ஜுகளைப் பார்க்கினும் எழுபது மடங்கு அதிக விசேஷமுள்ளதென ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஹஜ்ஜு கிரான்

உம்ரைச் செய்துவிட்டு அப்புறம் ஹஜ்ஜுச் செய்வதாக நிய்யத்துச் செய்து, இரண்டிற்கும் ஒரே இஹ்ரும் கட்டி இருந்தால், அதற்கு ஹஜ்ஜு கிரான் என்று பெயர். இவர்கள் இஹ்ரும் கட்டியவர்களாக திருமாக்காசென்று தவாப் ஸயீ முதலியன செய்துவிட்டு இஹ்ரும மை முறிக்காமல் இருந்து, ஹஜ்ஜை நிறைவேற்றவேண்டும். இவர்களுக்கு காரின் என்று பெயர்.

ஹஜ்ஜு தமத்துஃ

திருமக்காவில் உம்ரூச் செய்துவிட்டு ஹஜ்ஜுச் செய்வதற்கும், இரண்டிற்கும் வெவ்வேறு இஹ்ரும் கட்டுவதற்கும் ஹஜ்ஜு தமத்துஃ என்று பெயர். இவர்கள் இஹ்ரும் கட்டியவர்களாக திருமக்காவில் சென்று தவாபு ஸயீகளைச் செய்து இஹ்ரூமை முறித்துவிட்டு, சாமான்ய உடையில் இருப்பார்கள். அப்புறம் ஹஜ்ஜுக்காக புதிய இஹ்ராம் கட்டி அதனை நிறைவேற்றுவார்கள்.

ஹஜ்ஜு முப்ரித்

ஹஜ்ஜைமட்டும் நிறைவேற்றுவதற்கு ஹஜ்ஜு முப்ரித் என்று பெயர்.

உம்ரூச் செய்தல்

உம்ரூச் செய்வது ஸுன்னத்து முஅக்கதா. உம்ரூச் செய்ய விரும்புவோர் ஹஜ்ஜுக்கு இஹ்ரும் கட்டுவது போல இஹ்ரும் கட்டவேண்டும். திருகஃபாவை தவாபு செய்வதும், ஸபா மர்வாவிற்குமிடையில் ஸயீ செய்வதும் இதன் முக்கிய விதிகள். இவ்விரண்டையும் நிறைவேற்றி விட்டு தலைமுடிவரம் செய்து அல்லது முடியைவெட்டி இஹ்ரூமை முறித்து விடவேண்டும்.

துல் ஹஜ்ஜுமீ 9, 10, 11, 12, 13ஆ ஆகிய அய்யாமுத்தஷ்ரீக் எனும் நாட்களில் உம்ரூச் செய்வது மக்றூஹு. இக்காலத்தில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுபவர்களுக்கு உம்ரூச் செய்பவர்களால் இடைஞ்சலேற்படும் என்பது காரணம்போலும். இந்நாட்களைத் தவிர ஏனைய எல்லாக் காலத்திலும் உம்ரூச் செய்யலாம்.

றமலான் மாதத்தில் உம்றுச் செய்வது முஸ்தஹப்பு. திரு மக்காவிலுள்ளவர்கள் உம்றுச் செய்வதற்காக ஹறமுக்கு வெளியில் சென்று இஹ்றும் கட்டிவரவேண்டும்.

குற்றப் பரிகாரங்கள்

ஹஜ்ஜுச் செய்வதற்காக இஹ்றும் கட்டியவர் சில காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். விலக்க வேண்டிய அச்சில காரியங்களை இஹ்றும் கட்டியவர் தவறுதலாகச் செய்துவிட்டால், அதற்குச் சில பரிகார முறைகளிருக்கின்றன. இதுபோல ஹறம் எல்லைக்குள் செய்யக் கூடாத சில காரியங்களுண்டு. அவைகளை இஹ்றும் கட்டியவரோ அல்லது இஹ்றும் கட்டாமல் இருப்பவரோ, எவர் செய்தாலும் அதற்குரிய சில பரிகாரமுறைகளிருக்கின்றன. ஆகவே, அவ்விரு பரிகாரமுறைகளும் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

இஹ்றும் கட்டியவர் செய்யவேண்டிய பரிகார முறைகள் பலவகையுண்டு அவை வருமாறு :—

1. தம் கொடுப்பதை அதாவது ஆடு அறுப்பதை வாஜிபாக்கி வைக்கக் கூடிய காரியங்கள்.

2. ஸதக்காக் கொடுப்பதை அதாவது அரை மரக்கால் அல்லது பட்டணம் படிக்கு ஒன்றேகால் படி மணிக் கோதுமையை தர்மம் கொடுப்பதை வாஜிபாக்கி வைக்கக் கூடிய காரியங்கள்.

3. இந்த அளவிற்கும் குறைவானதை வாஜிபாக்கி வைக்கக் கூடிய காரியங்கள்.

4. கிரயத்தை வாஜிபாக்கி வைக்கக்கூடிய காரியங்கள்.

தம்கொடுப்பதை வாஜிபாக்கி வைக்கும் காரியங்கள்

பாலிகான அதாவது யுக்த வயதையடைந்த ஒருவர் இஹ்ரும் கட்டியவராக இருக்கும்போது தனது அவயவங்களில் ஒரு உறுப்புக்குப் பூரணமாக மணம் பூசினாலும், மருதோன்றியைக் கொண்டு தனது தலைக்குச் சாயமிட்டாலும், ஜைத்தூன் எண்ணெய் முதலியவைகளைத் தலையில் பூசினாலும், ஆடவர்கள் வழக்கமாகதைத்து அணியும் தூணியை தைத்து அணிந்தாலும், தலையை ஒரு நாள் முழுவதும் மூடி இருந்தாலும், தலையில் நாலிலொரு பாகத்தைச் சிறைத்தாலும், ரத்தகுத்திவாங்கக் கூடிய இடத்தைச் சிறைத்து ரத்தங்குத்தி வாங்கினாலும், இரண்டு கம்முகட்டுகளில் ஒன்றை அல்லது வெட்கஸ்தலத்தை அல்லது பிடரியைச் சிறைத்தாலும், தனது இருகைகளிலுமுள்ள நகங்களை அல்லது இரு கால்களின் நகங்களை ஒரே மஜ்லிசில் வெட்டினாலும், ஒரு கையிலும் ஒரு காலிலுமுள்ள நகங்களை வெட்டினாலும், மேலே கூறப்பட்ட வாஜிபான காரியங்களில் ஒன்றைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் ஒரு தம் கொடுக்கவேண்டும்.

ஒன்றேகால்படி மணிக்கோதுமை ஸதக்காத் கொடுப்பதை வாஜிபாக்கும் காரியங்கள்

ஒரு உறுப்புக்குக் குறைவாகவுள்ள இடத்தை மணம் பூசினாலும், பூர்த்தியான ஒரு நாளுக்குக் குறைவாக தையல் உடை அணிந்தாலும் அல்லது தலையை மூடினாலும், நாலிலொரு பங்குக்குக் குறைந்த அளவில் தலைகூவரம் செய்து

கொண்டாலும், ஒரு நகத்தை வெட்டினாலும், தவாபுல் குதூமை அல்லது தவாபுஸ்ஸத்ரை ஒலுவில்லாமல் நிறை வேற்றினாலும், (இவைகளை ஜுனுபாளியாக இருந்து கொண்டு நிறைவேற்றினால் ஒரு ஆட்டை அறுக்க வேண்டும்), தவாபுஸ்ஸத்ரில் ஒரு ஷௌத்தைக் குறைத் தாலும், ஜம்ரூக்களில் ஒன்றில் ஒரு கல்லெறிவதைவிட்டு விட்டாலும், வேறொருவருடைய தலையைச் சிறைத்தாலும், வேறொருவருடைய நகங்களை வெட்டினாலும் ஒன்றே கால்படி மணிக்கோதுமை ஸதக்காக் கொடுப்பது வாஜி பாகும்.

ஒன்றேகால்படி மணிக்கோதுமையைப் பார்க்கினும் குறைவானதை தர்மங்கொடுப்பதை வாஜிபாக்கும் காரியங்கள்

பேன் அல்லது வெட்டுக் கிளியைக் கொன்றால் தனக்கு இஷ்டமான அளவிற்கு ஏதேனும் தர்மம்கொடுக்க வேண்டும்.

கிரயத்தை வாஜிபாக்கும் காரியங்கள்

ஒரு வேட்டை மிருகத்தைக் கொன்றால், அது கொல்லப்பட்ட இடத்திலோ, அதற்குப் பக்கத்திலுள்ள இடத்திலோ உள்ள விலையை இரண்டு நீதிவான்கள் நிதானிக்கவேண்டும். இவ்வாறு நிதானிக்கப்படும் கிரயம் ஒரு ஹதீயின் கிரயத்திற்குத் தக்க அளவிலிருக்குமாயின் அக்கிரயத்திற்கு ஒரு ஹதியை விலைக்கு வாங்கி அறுக் கலாம். அல்லது அத்தொகைக்கு உணவுப் பொருளை வாங்கி, நபர் ஒன்றுக்கு அரை மரக்கால் அதாவது ஒன்றே

கால்படி வீதம் ஏழைகளுக்குப் பங்கு வைத்துக்கொடுக்க வேண்டும். அல்லது எத்தனை ஏழைகளுக்கு அவைகளைக் கொடுக்கமுடியுமோ அத்தனை நாட்கள் ஒரு ஏழைக்கு ஒரு நாள் விகிதம் நோன்பு வைக்கவேண்டும்.

பறக்கக் கூடியதாக இருந்தால் அது பறக்கமுடியாத விதமாக அதன் இறக்கையில் மயிர்களைப் பிடுங்கிவிட்டால், அதன் குறைவுக்குத் தக்கவாறு கிரயம் கொடுக்கவேண்டும். மிருகங்களின் கால்களில் ஒன்றை வெட்டிவிட்டாலும் கிரயங் கொடுக்கவேண்டும்.

ஹறமிலுள்ள வேட்டை மிருகத்தை அதாவது ஹலாலான பிராணியைக் கொன்றதற்கு நோன்பு வைப்பது போதாது.

ஹறமில்தானுக முளைத்த மரத்தை அல்லது ஹறமிலுள்ள புல் ஆகியவைகளை வெட்டினால், அவைகளுக்கு கிரயம் வாஜிபாகும். ஹறமிலுள்ள புல்லை மேய்வதும் அதனை வெட்டுவதும் ஹறாம்.

காக்கை, பருந்து, தேள், எலி, பாம்பு, கடி நாய், கொசு, எரும்பு, செள், குரங்கு இவைபோன்ற வேட்டை மிருகங்களாக இல்லாத-வைகளைக் கொன்றால் குற்றமில்லை.

இஹ்ரும் கட்டியவர் விலக்கவேண்டிய காரியங்கள்

ஆடவர்கள் தையல் உடையணியலாகாது. தலையை மூடலாகாது, முகத்தை மூடலாகாது, ஸ்திரீகள் தலையை மூடலாம். தையலுடை அணியலாம். ஆனால், முகத்தை மூடலாகாது. ஸம் ஸர்க்கம் சம்பந்தமான பேச்சுக்களை ஸ்திரீகளிடத்தில் பேசுதல், பாவிக்தனத்தை உண்டு

பண்ணும் காரியங்களைச் செய்தல், சண்டை சச்சரவு செய்தல், வேட்டை மிருகங்களைக் கொல்லல், வேட்டை யாடுபவர்களுக்கு அதனைக் காட்டிக்கொடுத்தல், அதன் பால் சமிக்ஞைசெய்தல் ஆகியவைகள் இஹ்ராம் கட்டிய ஸ்திரீ புருஷர் இரு பாலரும் செய்யக் கூடாது. ஏசுதல், திட்டுதல், கெட்டபேச்சுப் பேசுதல் ஆகியவைகளும் கூடாது.

இஹ்ராம் கட்டவேண்டிய மீக்காத்து இடங்கள்

திருமக்காவிற்குச் செல்லும் வெளியூர் வாசிகள் இஹ் ரும் கட்டாமல் அங்கு செல்லக்கூடாது. எனவே, இஹ் ரும் கட்டிக்கொள்வதற்கென்று சில இடங்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்விடங்களுக்கோ அதற்கு நேராகவோ வருபவர்கள், அவ்வவ்விடங்களில் இஹ்ரும் கட்டிக்கொள்ளவேண்டும். அவை வருமாறு :—

1. வடக்கே மதீனாவிலிருந்து வருபவர்கள் துல்ஹு லைபா,

2. வடமேற்கே எகிப்து, ஷாம், பலஸ்தீன் ஐரோப்பா ஆப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருந்து கடல் மார்க்கமாக வருபவர்கள் ராபிக் துறை முகத்தையடுத்த ஹுஜ்பா என்ற ஸ்தலத்தில்,

3. தென் ஆப்பிரிக்கா, இந்தியா, சிங்கப்பூர், சீனா முதலிய நாடுகளிலிருந்து செங்கடல் வழியாக வருபவர்கள் ஸஅதிய்யா என்ற மலைத்தொடரின் அடிவாரத்திலுள்ள லம் என்ற ஸ்தலத்தில்,

4. கிழக்கே நஜ்த், பஹ்ரைன், அம்மான் முதலிய நாடுகளிலிருந்து வருபவர்கள் கர்ன் என்னும் ஸ்தலத்தில்,

5. வடகிழக்கே இராக், மெஸப்பொடோமியா, ஈரான், மத்திய ஆசியா முதலிய நாடுகளிலிருந்து இராக் வழியாக வருபவர்கள் தூத்துல் இர்க் என்னும் ஸ்தலத்தில்,

6. இவ்விஸ்தலங்களுக்கும் ஹறமுக்கும் இடையிலுள்ள ஊர்களிலுள்ளவர்கள் ஹில்லில் இஹ்ராம் கட்ட வேண்டும். ஹில் என்பது ஹறம் அல்லாத இடம்.

ஹஜ்ஜுச் செய்யும் விதம்

ஒருவர் ஹஜ்ஜுக்குச் சொல்ல விரும்புவாராயின் தனது பாவங்களைவிட்டுத் தௌபாச் செய்து இறைவனிடம் பாபமன்னிப்புக் கோரிக் கொள்வதுடன், கொடுக்க வேண்டிய கடன் முதலியவைகளை கொடுத்து நிறைவேற்ற வேண்டும். பிறரிடம் மனஸ்தாபங்களிருந்தால் அவைகளையும் ராஜிசெய்து கொள்ளவேண்டும். பின்னர் தான் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பவரும்வரை தனது குடும்பத்தாருக்குக் கொடுக்கவேண்டிய அன்னவஸ்திரம் முதலிய போஷணைக்காக ஏற்பாடுகளைச் செய்து விடவேண்டும். அப்பால், தனது வழிச் செலவுக்கும் இதர செலவுகளுக்கும் போதுமான அளவு பணத்தைச் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இப்பணம நியாயமற்ற வழியில் இறைவனது இஸ்லாமிய ஷரீஅத்துச் சட்டங்களுக்கு முரணான முறையில் சம்பாதித்ததாக இருக்கலாகாது. நியாயமான முறையில் சம்பாதித்ததா? என்று சந்தேகாஸ்பதமான சொத்துக்களையும் கூட இதில் ஈடுபடுத்தலாகாது. ஏனெனில், இவ்வாறான பொருள்களைச் செலவுசெய்து ஹஜ்ஜுச் செய்தால் அது இறைவனால் அங்கீகரிக்கப்படுவதில் பல

தடைகளிருக்கின்றன என்பதாக மார்க்க அறிஞர்கள் கூறி இருக்கிறார்கள். ஆதலால், நியாயமான முறையில் சம்பாதித்ததாகவும் ஹலாலானதாகவும் இருக்கவேண்டும் அப்பொருள்.

இக்காலத்தில் நம் தேசங்களில் சிலரிடம் நல்ல முறையில் சம்பாதித்த பொருள்களிருக்கலாம். சிலரிடம் சந்தேகாஸ்பதமான சொத்துக்களிருக்கலாம். சிலரிடம் ஹராமான பொருட்களே இருக்கலாம். சிலரிடம் இவைகள் யாவும் கலந்ததே இருக்கலாம். எனவே, சுத்தமான ஹலால் என்று நன்கு அறியப்பட்ட பொருள்களுள்ளவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு மனச்சங்கோஜனில்லாமல் ஹஜ்ஜுச் செய்வது முடியாதகாரியம். இத்தகையோர், ஹஜ்ஜுக்கு என்று வேறொருவரிடம் போதியளவு பொருளைக் கடனுகப் பெற்றுக்கொண்டு, அதனைப் பிரத்தியேகப் படுத்திக் கொள்ளவேண்டும். தன்னிடமுள்ள சொந்தப் பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக்கொள்ளலாம். கடன் கொடுப்பவர் எம்முறையில் அப்பணத்தைச் சம்பாதித்திருந்தாலும் கடன் வாங்கியவருக்கு அப்பணம் ஹலால் தான். இதில் சந்தேகமே இல்லை. இதுபோல, வாங்கிய கடனை திரும்பக்கொடுப்பவர் எம்முறையில் சம்பாதித்திருந்தாலும் கடன்காரர்களுக்கு அம்முதல் ஹலால் தான். ஆதலால், பிறரிடமிருந்து கடன் வாங்கிக் கொள்வதால் ஹலாலான முதலைத் தேடிக்கொள்ளலாம் என விரிவான கிரந்தங்கள் கூறுகின்றன. எனவே, இக்காலத்திலும் கூட ஹலாலான சொத்துக்களை உண்டுபண்ணிக் கொள்வது அத்துணை கஷ்டமான காரியமல்ல வாதலின் இம்முறைகளை அன்பர்கள் கவனித்துக் கொள்வார்களாக.

மேலும், ஹராமான முதல்களை வைத்திருப்போர் இவ்விதமான யுக்திகளைச் செய்வது உசிதமில்லை. சந்தேகாஸ்பதமான பொருள்களுள்ளவர்கள் இவ்வாறு செய்வது நல்லது.

இவ்வாறு பொருள்களைத் தேடிய பிறகு புறப்படும் தினத்தில் மஸ்ஜிதுக்குச் சென்று பிரயாண நபில் தொழுகையை நிறைவேற்றிவிட்டு, யாவரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு திருமக்காவை நோக்கிச் செல்லவேண்டும். வாகனத்திலோ, கால் நடையாகவோ, ரயில் கப்பல் முதலியவைகளின் மூலமாகவோ செல்லலாம். ஆனால், திருமக்கா புண்ணிய பூமியாக இருப்பதால், அதில் மிக மரியாதையாகச் செல்லவேண்டும். ஆதலின், அங்கு செல்பவர்கள் இஹ்ரும கட்டிக் கொள்ளவேண்டும்.

திருமக்காவின் நான்கு திசைகளிலும் இஹ்ரும் கட்டிக் கொள்வதற்கென குறிப்பிட்ட இடமுண்டு. அவ்விடங்களில் இஹ்ரும் கட்டவேண்டும். யமன் தேசவாசிகளும், அத்தேசத்தை அடுத்தவர்களும், அத்தேசத்திற்கு நேராகக் கடல் மார்க்கமாக வருபவர்களும் யலம்லம் என்ற ஸ்தலத்தில் இஹ்ரும் கட்டுவார்கள். இது திருமக்காவிற்குத் தென்மேற்கில் இருக்கிறது. இந்தியா, சிலோன், மலேயா நாடுகளிலிருந்து ஏடனைச் சுற்றிக் கடல்மார்க்கமாகச் செல்பவர்கள் யலம்லமுக்கு நேராக வரும்போது இஹ்ரும் கட்டுவார்கள். இஹ்ராம் கட்டுமிடத்திற்கு வரும்போது கப்பலில் பிகில் ஊதப்படும். ஆதலால், அவ்விடத்தை அறிந்துகொள்வது சிரமமல்ல.

இஹ்ரும் கட்டுவதற்கு முதலில் ஸ்னானம் செய்வது நல்லது. ஸ்னானம்செய்ய இயலாவிடில் ஒலுச் செய்து

கொள்ளலாம். மாதாந்த ருது, பிரசவ ருது ஆகியவை களுள்ளவர்கள் ஸ்னானம் செய்வது நீங்கு செய்யாது என்றிருந்தால், அவர்களும் ஸ்னானம் செய்துகொள்ளலாம். தலைகூஷவரம் செய்துகொள்ளல், முககூஷவரம் செய்யல், நகங்களை வெட்டல், கம்முகட்டுகள். வெட்க ஸ்தலம் ஆகியவைகளிலுள்ள ரோமங்களை அகற்றிவிடுதல் முதலி யவைகளும் நல்லது தான். இவைகளுக்கு முன்னதாகவே தன் மனைவியுமிருந்தால் ஸம் ஸர்க்கத்தில் அதிகப் பிரிய முள்ளவர்கள் அதனையும் நிறைவேற்றிக்கொண்டு ஸ்னானம் முதலியவைகளைச் செய்துகொண்டு, இஹ்ரும்முக்கெனத் தயார் செய்துள்ள உடைகளை அணிந்துகொண்டு மணம் பூசி இரண்டு ரக்கஅத்துத் தொழுது, இஹ்ராமை நிய்யத் துச் செய்து தல்பியாவை ஓதவேண்டும்.

ஹஜ்ஜில் கிரான்செய்ய நிய்யத்துச் செய்வதாக இருந் தால் அந்த நிய்யத்தைச் செய்யவேண்டும். அவ்வாறில்லா விடில் உம்ராவை நிய்யத்துச் செய்யலாம். நிய்யத்துச் செய்யும்விதம், தல்பியாவை ஓதுதல் முதலியவைகள் அனு பந்தத்தில் குறிப்பிடப்படும்.

இஹ்ரும் கட்டிய பிறகு தூஷணம் செய்யலாகாது கெட்ட பேச்சுகளைப் பேசலாகாது. இதுபோல இதர விலக்கலான காரியங்களில் எதையும் செய்யலாகாது. இவைகளைப் பற்றிய விபரம் இஹ்ராம் கட்டியவர் விலக்க வேண்டிய காரியங்கள் என்ற தலைப்பின் கீழ் விபரிக்கப் பட்டிருக்கின்றது. இவைகளைவிட்டு விலகுவதுடன் ஸல வாத்து, தஸ்பீஹ், தஹ்லீல் முதலியவைகளையும், திருகுர் ஆனையும், அதிகமாக ஓதிக் கொண்டும், தொழுகைகளை

நிறைவேற்றிக் கொண்டும் செல்லவேண்டும். இவ்வாறு இஹ்ரும் கட்டாமல் திருமக்காவினுள் பிரவேசித்தால் ஒரு ஆடு தம் செய்யவேண்டும்.

இவ்வாறுக திருமக்காவின் பிரவேசரஸ்தாவின் வழியாகச் சென்று மஸ்ஜிதுல் ஹரும் என்னும் திருகஃபாவில் பிரவேசிக்கும்போது பாபுஸ்ஸலாம் என்ற தலை வாசல் வழியாகச் சென்று உம்ரு விற்குரிய தவாபைச் செய்து, ஸஈயையும் செய்யவேண்டும். தவாபு செய்யும்போதும், ஸயீ செய்யும்போதும் ஓதவேண்டிய துஆக்கள் அனுபந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ஸஈ செய்து முடித்தவுடன் தலைகூஷவரம் செய்து அல்லது மயிரை வெட்டி இஹ்ரும மை முடித்துக்கொண்டு, வழக்கமான உடைகளை அணிந்து திருமக்காவில் இருந்து கொள்ளலாம். ஹஜ்ஜுல் கிரானை நிய்யத்துச் செய்திருந்தால் இஹ்ரும மை முறிக்காமல் இருந்து வரவேண்டும். அப்புறம் ஹஜ்ஜுடைய காலம் வந்தால் துல்ஹஜ்ஜுமீ 8உ ஹறமுக்குள் மேற்கண்ட விதமாக இஹ்ரும் கட்டிக் கொண்டு தவாபுல் குதூமை நிறைவேற்றிவிட்டு மினாவிற்குச் சென்று 9உ இரவை அங்கு கழிக்கவேண்டும். அப்புறம் அங்கிருந்து அறபாத்தை நோக்கி மறுநாட் காலையில் சென்று, அன்று பகல் முழுவதும் தங்கி இருக்கவேண்டும். அறபாத்தில் இமாம் ஜமாஅத்தாக மஸ்ஜிதில் தொழுதால் லுஹரையும் அஸரையும் ஒன்று சேர்த்து நிறைவேற்ற வேண்டும். பின்னர், மஃரிபுத் தொழுகையை அங்கு நிறைவேற்றாமல் முஸ்தலிபா என்ற இடம் வந்து மஃரிபையும் இஷாவையும் ஒன்று சேர்த்துத் தொழுதுவிட்டு அவ்

விரவை அங்கேயே கழித்து, பஜ்றுக்கு நேரம் வந்த பின் நன்றாய் நிலம் தெளிவதற்குள் முதல் வேளையிலேயே பஜ்று தொழுதுவிட்டு மினாவிற்குப் புறப்படவேண்டும். அறபாத், முஸ்தலிபா ஆகிய இடங்களில் ஒதவேண்டிய துஆக்களைப் பற்றிய விபரம் அனுபந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

துல்ஹஜ்ஜு 10ல் மினாவில் வந்தவுடன் ஜம்ரத்துல் அக்பாவில் ஏழு பொடிக் கற்களை எறியவேண்டும், இங்கு கல்லெறிவதற்கென்றே முஸ்தலிபாவில் பொடிக் கற்களை பொறுக்கி எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். முதல் நாளில் இவ்வொரு இடத்தில்மட்டும் எறியவேண்டும். மறுநாளும் அதற்கடுத்த நாளிலும் அங்குள்ள மூன்று ஜம்ருகளிலும் எவ்வேழு கற்களை எறியவேண்டும். அப்புறம் குர்பானி செய்துவிட்டு தலைகூஷவரம் செய்யவேண்டும் அல்லது தலைமுடியை வெட்டிக்கொள்ளவேண்டும். இனி இஹ்ராம் உடையை மாற்றி வழக்கம்போலணியும் உடைகளை அணிந்து கொள்ளலாம். ஸ்திரீபோகம் ஒன்றைத் தவிர மற்றவைகளெல்லாம் ஹலால்.

இவைகளுக்குப் பிறகு அப்பொழுதே திருமக்காவிற்கு வந்து தவாபு ஜியாராவைச் செய்யலாம். அதற்கியலாவிடில் மறுநாள் வரலாம். 10-1-1 12ஆகளில் எந்த நாளிலாவது இதனை நிறைவேற்றலாம் குர்பானியும் செய்யலாம். தவாபு ஜியாராவை நிறைவேற்றிய பிறகு திருமக்காவில் தங்காமல் மினாவிற்கு வந்து விடவேண்டும். மினாவில் 12ல் கல்லெறிந்த பிறகு திருமக்காவிற்கு வரலாம். மக்காவினுள் பிரவேசிப்பதற்கு முன்னதாக அதன் முற்ற வெளியில் ஒரு ஸாஅத்து நேரம் தங்கி இருந்துவிட்டு அப்புறம் அவரவரிருப்பிடம் வந்து சேரலாம்.

துல்ஹஜ்ஜ¯மீ 8ஆ மினாவிற்குச் செல்வதற்கு முன் ஸஈ செய்திருந்தால் அங்கிருந்து திரும்பவந்த பிறகு ஸஈ செய்யவேண்டியதில்லை. அப்பொழுது ஸஈ செய்யாமலிருந்தால் தவாபு ஜியாரை முடித்துக்கொண்டு ஸஈயையும் செய்யவேண்டும். பிறகு, சொந்த ஊருக்குப் புறப்பட்டால் சாமான்களை எல்லாம் மோட்டாரில் அல்லது ஒட்டகையில் ஏற்றிவிட்டு, வீட்டைவிட்டுப் புறப்பட்டு, நேராக மஸ்ஜிதுல் ஹறாமுக்கு வந்து தவாபுல் விதாஇ நிறைவேற்றவேண்டும். இதனை நிறைவேற்றிவிட்டு திருகஃபாவின் பக்கம் முதுகைத் திருப்பாமல் அதனைப்பார்த்த வண்ணம் பாபுல் விதாஉ வழியாக மஸ்ஜிதைவிட்டு வெளியில் வந்து நேரடியாக மக்காவை விட்டு வெளியேறி விடவேண்டும்.

ஹஜ்ஜ¯டைய காரியங்கள் இத்துடன் முடிந்து விட்டது, நபி நாயகம் (ஸல்) அவர்களை ஜியாரத்துச் செய்வதற்காக திருமதீனு செல்லக் கூடியவர்கள் மதீனு முனவ்வராவிற்குச் சென்று ஜியாரத்தை முடித்துக்கொள்ளலாம். கப்பல்கள் ஜித்தாவில் தயாராக இருந்து கொண்டிருக்கும். அங்கிருந்து வந்தவுடன் ஜித்தாவில் கப்பலேறி தன் சுய ஊருக்கு வரலாம் அல்லது தங்களுக்கு இஷ்டமான வேறிடங்களுக்குச் செல்லலாம். திருமக்காவில் ஜன்னத்துல் முஅல்லா, அபூகுபைஸ்மலை, ஹிராமலை, தெளர்மலை முதலிய இடங்களுக்கும், உள்ளூரிலுள்ள சில மஸ்ஜிதுகளுக்கும் சென்று ஜியாரத்துச் செய்துகொள்ளவேண்டும். திருமதீனுவில் நாயகம் (ஸல்) அவர்களது மஸ்ஜிது நபவி தவிர வேறு பல மஸ்ஜிதுகளும், ஜன்னத்துல் பக்கிஉம் இருக்கின்றன. அங்கெல்லாம் ஜியாரத்துகளைச் செய்து கொள்ளலாம். இவ்விபரங்களை ஆங்காங்குள்ள முஅல்லிம்

களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அல்லது மக்கா, மதீனு ஆகிய நகரங்களின் சரித்திரங்களிலும், அங்குள்ள முக்கிய இடங்களைக் குறித்த விபரங்களிலும் தெரிந்து கொள்ளலாம். எம்மால் எழுதப்பட்ட ஸபர் நாமாவிலும் கூட இவைகளின் விசேஷங்களையும் சரித்திர விபரங்களையும் தெரிந்துகொள்ள முடியும்.

திருமக்காவில் தங்கி இருந்தால் அய்யாமுத் தஷ்ரீக் குக்குப் பிறகு உம்ராச் செய்யலாம். உம்ரூச் செய்யவிரும்பு பவர்கள் மஸ்ஜித ஆயிஷாவிற்குச் சென்று இஹ்ரும் கட்டிக்கொண்டு வரவேண்டும். அவ்விடம் மக்காவின் ஹறம் எல்லையில் இருக்கிறது. உம்ரூச் செய்யவிரும்பு பவர்கள் ஹில்லில் அதாவது ஹறமுக்கு வெளியில் இஹ்ரும் கட்டவேண்டும். ஆதலால், ஹில்லில் எங்கு வேண்டுமானாலும் இஹ்ரும் கட்டலாம். மேற்கண்ட மஸ்ஜித ஆயிஷா என்பது ஹறமில் மிகவும் குறைந்த எல்லையில் இருப்பதால் அந்த இடத்தைக் குறிப்பிடப் பட்டது. அங்கு இஹ்ரும் கட்டுபவர்கள் ஸ்னானம் செய் யவும், ஒலுச் செய்யவும், தொழுகவும வேண்டியவசதி களெல்லாம் இருக்கின்றன.

ஸ்திரீகள் ஆடவர்களைப்போலவே சகல காரியங்களையும் செய்வர். ஆனல், இஹ்ரும் கட்டினல் அவர்கள் தையல் உடையணியலாம். தலையை மூடிக்கொள்ளலாம். இவைகளை மறைத்தே இருக்கவேண்டும். முகத்தை மூடக் கூடாது. மாதாந்த ருது, பிரசவ ருது இருக்கும்போது தவாபு செய்யக் கூடாது. ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய் யும்போது மீலனில் அக்கரைனிக் கிடையில் ஆடவர்களைப் போல் தோள்புஜங்களை அசைத்துச் செல்லக் கூடாது.



حرم بيت الله

தவாபு செய்யும் விதம்

தவாபு என்பது திருகஃபாவை ஏழுமுறை சுற்றிவரு வதற்குப் பெயர். ஒருமுறை சுற்றிவருவதற்கு ஒரு ஷௌத் என்று கூறுவார். கஃபாவை தவாபு செய்ய நாடினால், கஃபாஷரீபிற்குத் தென்கிழக்கு மூலையில் வைக்கப்பட்டி ருக்கிற ஹஜ்றுல் அஸ்வதிற்கு நேராக நின்று தவாபு செய்யும் எண்ணத்துடன், தக்பீர் தஹ்லீல் சொல்லி, தொழுகைக்குக் கையை உயர்த்துவதுபோல இரு கைகளை யும் உயர்த்தி, ஹஜ்றுல் அஸ்வதில் முகத்தைவைத்து முத்தமிட்டு திருகஃபாவின் வாசற்படி, ருக்னே இராக், ருக்னே ஷாம், ருக்னே யமானி ஆகியவைகள் வழியாக ஹஜ்றுல் அஸ்வதிற்கு வரவேண்டும். இப்படி வரும்போது கஃபாஷரீப் இடப்புறமாக இருக்கும்.

இவ்வாறு ஒருமுறை சுற்றி வந்தவுடன் ஹஜ்றுல் அஸ்வதை முத்தமிடவேண்டும். அப்புறம் இரண்டாம் முறையும் சுற்றவேண்டும். இவ்வாறு ஏழுமுறை சுற்றி வந்தால் ஒரு தவாபு முற்றுப்பெறும். ஒவ்வொரு முறை யும் சுற்றிவரும்போதும் ருக்னே யமானியைக் கையால் தொடுவது முஸ்தஹப்பு. இவ்வாறு தவாபு செய்யும்போது தக்பீர் தஹ்லீல், ஸலவாத்து முதலியவைகளை ஓதலாம். இதற்கென சில குறிப்பிட்ட துஆக்களும் இருக்கின்றன. அவைகளையும் ஓதலாம். இச்சமயத்தில் ஓதவேண்டிய துஆக்கள் அனுபந்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

வெளியூரிலிருந்துவரும் ஹாஜிகள் இவ்ரும் கட்டிய வர்களாக தவாபுல் குதூமைச் செய்தால் முதல் மூன்று ஷௌத்துகளுக்கு தோள் புஜங்களை அசைத்து வேகமாக

ஓடுகிற பாவனையாகச் சுற்றவேண்டும். அப்புறம் நான்கு ஷௌத்துகளைச் சாதாரணமாகச் சுற்றவேண்டும். இவ்ரும் கட்டியவர்கள் தங்கள் அங்கவஸ்திரத்தை இடப்புறம் புஜத்தின் மீது போட்டு வலப்புறத்து கம்மு கட்டிற்குக் கீழில் அதன் இரு மருங்குகளையும் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டும். நபிலான தவாபு செய்பவர்கள் இவ்ரும் கட்டிக் கொள்ளவேண்டிய அவசியமுமில்லை. முதல் மூன்று ஷௌத்துகளில் தொங்கோட்டம் ஓடுவதுபோலப் பாவனை செய்யவேண்டியதுமில்லை.

தவிர, கஃபாஷரீபின் வடக்குப் புறத்தில் ருக்னே இராக்குக்கும், ருக்னே ஷாமுக்கும் சேர்ந்தாற்போல் ஹத்தீம் என்று ஒரு இடமிருக்கிறது. தவாபு செய்பவர்கள் அந்த ஹத்தீமையும் சேர்த்து தவாபு செய்யவேண்டும். அதனை விலக்கிவிட்டு தவாபு செய்யக்கூடாது. ஹத்தீம் என்பதற்கு அடையாளமாக அதனைச் சுற்றிலும் மூன்று பக்கமும் சுமார் 3-முழ உயரத்திற்கு கைபிடி சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. கஃபாஷரீபைச் சேர்ந்த பாகத்தில் மட்டிலும் சுவர் இல்லை.

இவ்வாறு தவாப் செய்த பிறகு மக்காமுல் இப்ராஹீமிலாவது வேறு இடங்களிலாவது இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். இவ்வாறு தொழுவது வாஜிபு.

ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய்யும் விதம்

திருகஃபாவிற்குத் தென்கிழக்குப் பக்கத்தில் மஸ்ஜிதுல் ஹரமை ஒட்டி ஸபா என்ற ஸ்தலம் இருக்கிறது. வடகிழக்குப் பக்கத்தில் மர்வா என்ற ஸ்தலம் மிருக்கிறது. இவ்விரு ஸ்தலங்களும் முற்காலத்தில் இரு மலைக்குன்று

களாக இருந்தன. இப்பொழுது நகரம் விசாலமானதால் இதனைச் சுற்றிலும் கட்டிடங்கள் ஏற்பட்டு விட்டதால் இப்பொழுது இவைகள் பார்வைக்கு மலைக்குன்றுகளாகத் தோன்றுது. இவ்விரு இடங்களிலும் படிகள் கட்டி மேலே தளமிடப்பட்டு இருக்கின்றன. இத்தளத்தின் மீதேறி கஃபாவை முன்னேக்கி நின்று, தொழுகைக்கு கையை உயர்த்துவதுபோல இரு கரங்களையும் உயர்த்தி தக்பீர் தஹ்லீல் துஆக்களை ஓதிய வண்ணம் மர்வாவை நோக்கிச் செல்லவேண்டும்.

வழியில் மஸ்ஜிதுல் ஹரமின் சுவரில் பச்சை வர்ணத்தில் தூண்போல இரண்டு அடையாளங்களிருக்கின்றன. அவ்வடையாளங்களுக் கிடையில் தொங்கோட்டம் ஓட வேண்டும். ஒருமுறை ஸபாவிலிருந்து மர்வாவிற்கு வந்தால் ஒரு ஷௌத்தாகும். மர்வாவிலும் ஸபாவில் செய்தது போலவே செய்து ஸபாவை நோக்கிவரவேண்டும். இடையிலுள்ள மீலனில் அக்லரைனிக் கிடையில் தொங்கோட்டம் ஓடவேண்டும். இப்படி ஒருமுறை வந்தால் ஒரு ஷௌத் இவ்விதமாக ஏழு ஷௌத்துகளை நிறைவேற்ற வேண்டும் அதாவது ஸபாவில் முதாவது ஷௌத்து, ஆரம்பமாகும். மர்வாவில் ஏழாவது ஷௌத்து முற்றுப்பெறும்.

ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய்வதை ஹஜ்ஜு உம்ராச் செய்பவர்கள்தான் நிறைவேற்றுவார்கள். நபிலான தவாபு செய்வதுபோல நபிலான ஸயீ செய்வதில்லை.

அறபாவில் தங்குதல்

துல்ஹஜ்ஜுமீ 9ஆ சூரியன் அடிச்சாய்ந்தது முதல் 10ஆ பற்றுவரையில் ஒரு ஸாஅத்து நேரமாவது அறபா

வில் தங்கவேண்டும். அவ்வாறு தங்கதவறிவிட்டால் ஹஜ்ஜு நிறைவேறுது. அறபாவில் தங்கும்போது நித்திரை செய்துவிட்டாலும், மயங்கி இருந்தாலும் குற்றமில்லை.

அறபாத் மைதானம் முழுவதும் மௌக்கிப் (தங்குமிடம்) தான். ஆனால், அங்குள்ள பத்னு உர்னு என்ற ஸ்தலம் மட்டிலும் மௌக்கிப் இல்லை. அவ்விடத்தில் மட்டிலும் தங்கக் கூடாது. பாக்கியுள்ள எந்த இடத்திலும் எப்படி வேண்டுமானாலும் தங்கலாம்.

அங்கு ஸ்னானம் செய்து தக்பீர், தஹ்லீல், ஸலவாத்து, திக்ரு முதலியவைகளை ஓதிக்கொண்டு துஆச் செய்துகொண்டு இருக்கவேண்டும். இவைகளில் எதையும் செய்யாமல் வெறுமனே அங்குபோயிருந்து விட்டாலும் பர்லு நிறைவேறிவிடும்.

இங்கு ஓதவேண்டிய துஆக்களைக் குறித்துத்த விபரம் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முஸ்தலிபாவில் தங்குதல்

முஸ்தலிபாவில் எல்லா இடங்களும் மௌக்கிப்தான். ஆனால், அங்குள்ள வாதியே முஹஸ்ஸர் என்பது மட்டிலும் மௌக்கிப் இல்லை. இதனைத் தவிர பாக்கியுள்ள எல்லா இடங்களிலும் தங்கலாம். ஆனால், ஜபலே குஸஹ் என்ற மலைக்குப் பக்கத்தில் தங்கவேண்டும். பஜ்றுடைய வேளையிலிருந்து சூரியோதயத்திற்குள்ளாக இங்கு தங்குவதுதான் ஹஜ்ஜுடைய கிரியைகளில் சேரும். ஒரு நிமிஷ நேரம் தங்கினாலும் போதுமானது. இங்கு ஓதவேண்டிய துஆக்கள் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஹஜ்ஜின் தத்துவம்

இவ்வுலகில் மனிதர் கௌரவமான முறையில் க்ஷேம மாக ஜீவித்திருப்பதுடன் மறு உலகிலும் க்ஷேமமாக வாழ்ந்து இறைவனின் திருப்திக்கு மக்களை ஆளாக்குவதே இஸ்லாம் மதத்தின் முக்கிய நோக்கம். இந்நோக்கத்தைத் தான் இஸ்லாம் மதம் பற்பல கடமைகள் என்ற பெயரால் சட்டமாக இயற்றி மனிதன் உய்வதற்கான வழியினைக் காண்பித்திருக்கிறது. இஸ்லாம் மதத்தின் ஐம்பெருங் கடமைகளை ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு இவ்வுண்மை நன்கு புலப்படும்.

படைத்து ரட்க்ஷித்துக் காத்துவரும் நாயனது கட் டளையை மீறுமலும், அவனுக்கு இணையாக வேறொன்றைக் கருதாமலும், இணைவைத்து வணங்காமலும் இருப்பதுதான் அவனது திருப்தியை உண்டுபண்ணும். மனிதனது உண வினும், உடையிலும் அகம்புறம் ஆகிய இருவகையான சுத்தங்களு மிருந்தால் தான் தேக சுகமும் மனக்கவலை யின்மையும் இருந்துவரும். இவ்விஷயங்களை இஸ்லாம் மதத் தின் முதலாவது இரண்டாவது கடமைகளில் காணலாம்.

உலகில் தன்னைப்போல பிறரையும் கவனித்து தனது கஷ்டங்களைப்போல பிறரது கஷ்டங்களை உணர்ந்தால் தான் மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதித்து, உற்ற சமயத்தில் உருப்படியான உதவிகளைச் செய்யமுடியும். இவ்வாறான உதவிகளைச் செய்யாதவர் மனிதத் தன்மையற்றவரே யாவர். இவ்வாறான உதவியினாலும் ஒத்துழைப்பினாலுமே மனிதர் உள்ளங்களைக் கவர்ந்து, ஒருவருக் கொருவர் அபிமானத் துடன் சேர்ந்து வாழமுடியும். இவ்விதமான வாழ்க் கைக்குப் பயிற்சியளிக்கும் முறையில்தான் நோன்பும் ஜக் காத்தும் விதிக்கப்பட்டிருக்கிறது.

தரித்திரத்தால் பீடிக்கப்பட்டுப் பட்டினியும் பசியுமாக இருப்பவர்களது கஷ்டத்தை நோன்பு உணரச் செய்கிறது. ஜக்காத்து அத்தகையோருக்கு உதவி புரிந்து அவர்களது கஷ்டத்தை நிவர்த்தி செய்ய உதவி புரிகிறது. இவ்வித முறையில் உதவி புரிவது எளியார் மெலியார் என்ற பாகுபாட்டையுண்டாக்கி விடக் கூடும். இதனல் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசம் தோன்றி அடிமைத்தனத்திற்கு அஸ்திபாரத்தை ஏற்படுத்தி விடலாம். இத்தகைய தூர் அதிர்ஷ்ட நிலையுண்டாகக் கூடாது. படைத்தவனிடத்தில் யாவரும் சமம். அவன் தனப் பெருக்கையும், ஜனமுறுக்கையும் கவனிப்பவனல்லன். சற்குண நன்னடக்கையுள்ளவர்களே இறைவனிடம் கண்ணியம் பெறத் தகுந்தவர்கள் என்ற உணர்ச்சியை உண்டுபண்ண தொழுகையில் இமாம் ஜமாஅத்தை ஏற்படுத்தி இமாமாக இருப்பதற்கு அருகதையுள்ளவர்கள் எத்தகைய லக்ஷணங்களுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற வரையரைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாருன உணர்ச்சிக்குப் பிறகு இச்சகோதரத்துவத்தைக் கிரியாம்சையில், செய்கையின் மூலம் செய்து பழகவும் அனுஷ்டித்துப் பிறருக்குக் காட்டவும் வேண்டியே ஹஜ்ஜுக் கடமையை இஸ்லாம் இல்லாமல் நிறைவேற்றக் கூடாது என்னும் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்லாமின் தத்துவம்

இஸ்லாம் ஏழை பணக்காரர், படித்தவன் பாமரன், முதலாளி கூலிக்காரன், அரசன் ஆண்டி, வெள்ளையன் கருப்பன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி யாவருக்கும் ஒரே விதமான உடையை அணியவேண்டுமென்று போதிக்கிறது. இவ்வுடையை அணிந்த பிறகு

வெளிப்பார்வைக்கு எவ்வித வித்தியாசமுமில்லாமலே காணப்படுகிறார்கள். இவ்வுடையின் மூலமாக உணர்ச்சியிலுங் கூட வித்தியாசமேற்படுகிறது. ஆதலால், இஹ்ரும் கட்டி இருப்பவர்களுள் இவ்வித வித்தியாச உணர்ச்சி இருப்பதாகவும் தெரியவில்லை. ஆதலால், இஹ்ரும் கட்டி இருக்கும் நிலைமையில் தொழுகையிலும் சரி, தவாபு செய்யும்போதும் சரி, மினு, அரபா, முஸ்லிதபா ஆகிய இடங்களில் தங்கி இருக்கும்போதும் சரி யாவரும் சம உணர்ச்சியுடனும், சகோதரப் பான்மையுடனும் நடந்து கொள்கிறார்கள்.

தவிர, மனிதருள் வேற்றுமை யுணர்ச்சியையும் விரோதத்தையும் வளர்ப்பதற்கு ஹேதுவான தூஷணை செய்யல், கெட்டவார்த்தைகள் கூறல், வேட்டையாடல், முதலிய பல காரியங்கள் விலக்கப்பட்டிருப்பதால், யாவரும் ஒருவரை ஒருவர் அன்பான அழுத மொழிகளிலேயே அழைத்துப் பேசவும், சாந்தம் பொறுமை ஆகியவைகளைக் கடைப்பிடிக்கவும் செய்கின்றனர். இவ்வாறு செய்வதால் இந்தியாவிலுள்ளவர்களுக்கு மொரோக்கோபோன்ற தேசங்களிலுள்ளவர்களுடனும், எகிப்திலுள்ளவர்களுக்கு அப்கானிஸ்தான்போன்ற தேசங்களிலுள்ளவர்களுடனும் அதாவது முற்றிலும் வெகு தூரத்திற்கப்பால் வாழும் தேசத்தினரும் நாட்டினரும் மிக ஆசார உபசரிப்புடன் வார்த்தையாடி ஒருவருக் கொருவர் உதவி செய்துகொள்கின்றனர். இவ்வித உதவியைச் செய்யச் சந்தர்ப்பம் வாய்க்காதவர் இக்காட்சிகளைக் கண்களால் பார்க்கின்றனர்.

மேலும், உலகில் ஜாதி இரண்டொழிய வேறில்லை என்று ஒருவர் கூறியதுபோல ஆண்ஜாதி, பெண்ஜாதி

என்ற பாகுபாட்டைத் தவிர வேறெவ்விதமான பாகுபாட்டிற்கும் இடமில்லை. இவர்களிலும் கூட இற்றும் உடையில் யாவரும் சேர்ந்திருக்கும்போது ஸ்திரீ புருஷ உணர்ச்சிகளும் இல்லாதொழிந்துவிடுகிறது. எந்த ஸ்திரீயானாலும் அவரவருடைய வயதிற்கேற்றவாறு தாயைப்போலும், சகோதரியைப்போலும், புதல்வியைப்போலுமே கவனிக்கப்படுகிறார்கள். இதுபோல ஸ்திரீகளும் ஆடவர்களை தந்தை, சகோதரன், புதல்வனுகவே கவனிக்கின்றனர். ஆதலால், இற்றும் கட்டிக்கொள்வது உலகிலுள்ள சகல துர்க்கிருத்தியங்களையும் தீர் உணர்ச்சிகளையும் போக்கி உலக சகோதரத்துவத்தையும் ஜனபிமானத்தையும் பயிலச் செய்கிறது.

ஹஜ்ஜுக் கிரியைகளின் தத்துவம்

மேலெழுந்த வாரியாகப் பார்க்குமிடத்து திருகஃபா ஷரீபை தவாப் செய்வதும், ஸபா மர்வாவிற் கிடையில ஸயீ செய்வதும், அறபாத், முஸ்தலிபா, மினு ஆகிய இடங்களிற் சென்று தங்கி இருப்பதும் பிறமதத்தார் கவனித்தால் உபயோகமற்ற வீணான செய்கை என்றும், வெறும் மௌட்டீகமென்றுங் கூடக் கருதுவர். ஆனல், மெய்யறிவுடையவரும் தீர்க்கதிருஷ்டியுள்ளவரும் ஒருபோதும் அவ்வாறு கருதவே மாட்டார்.

நாம் வணங்குகிற வணக்கம் நமது சிற்றறிவிற்கு எட்டாமலிருக்கலாம், நாம் அவைகளைப் பிரயோஜனமற்ற வீண் வேலை எனக் கருதலாம். என்றாலும் அந்த இடத்திற்குச் சென்று வந்தவர்களுள்ளத்தில் அதன் அருமை இவ்வளவு தூரத்திற்குப் பதிந்திருக்கிறதென்பதை நாவா

யுரைக்கவோ எழுதுகோலால் வரையவோ முடியாது. இவ்வுண்மையை அனுபவித்துப் பார்ப்பவர்தான் நன்கு தெரிந்து கொள்ளமுடியும்.

திருகஃபாவினுள் ஒன்றுமில்லை. வெறும் கட்டிடங்கள் தாம். அதனைச் சுற்றிவருவது புத்திக்குப் பிடிக்காத காரியமாகவே தோன்றலாம். என்றாலும், ஒரு தந்தைக்கு மகன் கீழ்ப்படிவது என்பதற்கு தகப்பனிட்ட கட்டளைக்கு எவ்விதத் தாமதமுமில்லாமல் பணிவதுதான் சரியான முறையில் தந்தைக்கு தனயன் கீழ்ப்படிவதாகும். தகப்பன் கூறும் கட்டளையில் என்ன இரகசியமிருக்கிறது? அதில் நன்மையுண்டா? என்பனபோன்ற காரியங்களைச் சிந்தித்துப்பார்த்து, அவர் கூறிய கட்டளையில் நன்மையுண்டு எனத் தெரிந்த பிறகு அதனைச் செய்யத் தொடங்கினால் அது உண்மையில் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்ததாகாது. தனது புத்தி தனக்குக் கூறிய யோசனையின்படியே செய்ததாகத்தான் அச்செய்கையைக் கருதமுடியும். இவ்வாறு யோசித்துச் செய்கிற பிள்ளையின் மீது தந்தைக்கும் கூட அதிக அன்பு இருக்கும் என்று கூறுவதற்கில்லை.

உதாரணத்திற்காக ஒரு சிறு சம்பவத்தைச் சுருக்கமாகக் கூறுவம். நமது இந்திய நாட்டில் பிரபலம் வாய்ந்த ஒரு அரசர் தனது பணிவிடைக்காரர்களில் ஒருவர் மீது அதிக அபிமானம் கொண்டிருந்தார். அப்பணியாளைச் சிறிது நேரம் காணுதிருந்தாலும் அவரால் சகிக்கமுடியாது. என்னேரமும் தன்னிடமே வைத்திருப்பார். அப்பணியாள் ஒரு காரியத்தைக் குறித்துக் கூறினால் உடனே அவ்வரசர் அதனை ஏற்றுக்கொள்வார். அப்பணியாளன் படித்தவனுமல்லன், ஆளில் அழகனுமல்லன், செல்வம் படைத்தவனுமல்லன்.

அவ்வரசனது மந்திரி பிரதானிகளுக்கு அப்பணியாளன் மீது பொறுமை ஏற்பட்டது. அரசாங்கக் காரியங்களை நிர்வகிக்கும் விஷயத்தில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை எல்லாம் நாம் அனுபவிக்கிறோம். படிப்பிலும், பனத்திலும் அப்பணியாளனைப் பார்க்கினும் எத்தனையோ மடங்கு அதிகமுள்ள நாம், அரசரிடம் நிர்ப்பயமாக எதையும் கூறுவதற்கில்லை. நாம் கோரும் காரியங்களை அரசரிடம் நிறைவேற்ற அப்பணியாளனைச் சிபாரிஷுக்கு அழைக்கவேண்டியதிருக்கிறது. இவ்வித நிலைமை வெகு காலத்திற்கு நீடித்தால் அப்பணியாளனது இஷ்டத்திற்கு நாமெல்லோரும் அடங்கி நடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். அரசருக்கிருக்கிற அபிமானம் இன்னமும் நீடித்தால் உண்மை அதிகாரம் முழுவதும் பணியாளனிடம் வந்துவிடும் என்று கருதினர்.

தனது மந்திரி பிரதானிகளது இவ்வெண்ணம் அரசனுக்கு நடைமுறையில் கொஞ்சங் கொஞ்சமாக வெளியாயிற்று. அரசர் நல்ல அறிவாளி, தீர்க்கதிருஷ்டியுள்ளவர். மந்திரி பிரதானிகளது கருத்தைக் கண்டு கோபமடையவில்லை. பணியாளன் மீது தனக்கேற்பட்டுள்ள அபிமானத்திற்குக் காரணம் யாதென்பதை விளக்க நாடினர். அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஒரு நாள் அவ்வரசர் பல இலட்சம் பொன்பெறுமானமுள்ள ஒரு ரத்தினத்தை எடுத்துத் தன் முன்னிலையில் வைத்து, மந்திரியை அழைத்து இதனை உடைத்துவிடு என்று கட்டளையிட்டார். லக்ஷக் கணக்கான பொன் விலையுள்ளதை உடைத் தெரிந்தால் அப்பொருள் வீணாகிவிடுமே என்று அவர் அரசருக்குச் சமாதானம் கூறி, அவ்வாறு

செய்வது அனுசிதம் என யோசனை கூறினர். இதுபோல இதர மந்திரிகளும் பிரதானிகளும் தங்களுக்குத் தெரிந்ததைக் கூறினரே யன்றி, ஒருவரும் முன் பின் யோசியாமல் அதனைச் செய்யத் துணியவில்லை.

இறுதியாக அப்பணியாளனை அழைத்து அதனை உடைத்துவிடும்படி அரசன் கட்டளையிட்டான். அரச ஆக்கினை பிறந்த அந்த க்ஷணத்திலேயே அவ்விரத்தினம் சுக்கு நூறுயிற்று. உடனே, மந்திரியானவர் அப்பணியாளனை நோக்கி நீர் செய்த இக்காரியத்தால் பல இலக்ஷம் பொன் வீணுயிற்று. இப்பணத்தை ஒரு நன்மையான காரியத்தில் ஈடு படுத்தி இருக்கலாம். அதனை நீர் கெடுத்து விட்டனை என்றியம்பினர். அதற்கு அப்பணியாளன், ரத்தினக்கல் பல லக்ஷம் பொன் பெறும் என்பது எனக்கும் தெரியும். ஆனல், அரச ஆக்கினை பிறந்தது. அவ்வாக்கினை இவ்விரத்தினத்தைக் காணப்பெரிது. இரத்தினத்தை உடைக்காதிருந்தால் அரசாக்கினையை நிறைவேற்றுத குற்றத்தைச்செய்தவனுவேன். ஒருகல்போலல் அதனைப்பார்க்கினும் சிறந்த வேறொரு கல்லைச் சம்பாதிக்கலாம். அரசாக்கினையைத் தவரவிட்டால் அப்புறம் அது கிடைக்காது. ஆதலால்தான், அரசாக்கினையை அக்கல்லைப் பார்க்கினும் பெரியதன மதித்தேன் என்றுன்.

அது போழ்து அரசர் தமது மந்திரி பிரதானிகளை நோக்கி நான் அப்பணியாளன் மீது அதிக அன்பு கொண்டிருப்பதைக் குறித்து நீங்கள் கொண்டுள்ள உணர்ச்சியை அறிவேன். உங்களது உணர்ச்சி நியாயமானதா? அல்லது என் செய்கை நியாயமானதா? என்பதை வெளியிடத்தான் இன்று இக்கட்டளையைப் பிறப்பித்தேன். நீங்கள் அதனை

உடைக்கும் விஷயத்தில் நிதானித்தது குற்றமல்ல. நீங்கள் நல்லெண்ணங்கொண்டே அப்படிச் செய்தீர்கள். ஆயினும், எனக்குக் கீழ்ப்படிந்தவன், என்னை அதிகம் மதித்தவன் இப்பணியாளன்தான். இதனுற்றுன் இவன்மீது எனக்கு அதிகப் பிரியம் என்று சமாதானம் கூறினர்.

இதற்கேற்ப இறைவன் கட்டளை வந்தது. அக்கட்டளை எதுவாயிருந்தாலும் அதனை உடனே நிறைவேற்றுவதுதான் அடியான் கடமை. இறைவன் கட்டளையிட்டதிலுள்ள நன்மை இறைவனுக்குத்தான் தெரியும். அதனை நாம் உணரவில்லை. நமக்கு காரியத்திலுள்ள நன்மை நன்கு புரியாவிட்டால் அதனைப்பற்றிக் குறை கூறுவதோ, அற்பமாக மதிப்பதோ அறிவுடையோர் செய்கையன்று.

மேலும், நமக்கு ஒரு பெரிய மனிதரிடம் ஒரு காரியம் நிறைவேற வேண்டியிருந்தால் அம்மனிதரிடம் நாம் அவரிடம் கூறுவிடினும், அடிக்கடி அவர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தால், அப்பெரியாருக்கு நம்மைக் குறித்த ஒரு கவனமேற்படுகிறது. தமது நண்பர்களிடமோ மற்றவர்களிடமோ நம்மைக் குறித்து அவர் "இன்ன மனிதர் நம் வீட்டிற்கு வந்து வட்ட மிட்டுக் கொண்டிருக்கிறாரே, என்ன விசேஷம்? என்று வினவுகிறார். அப்புறம் நம்மையே அழைத்து நமக்கு வேண்டிய காரியத்தை அவராலியன்ற மட்டிலும் செய்கிறார். இது உலகில் சகஜமாக நடைபெறும்காரியம். தம்முடைய வீட்டிற்கு தம்மைத்தேடி வந்தவரை நிராகரித்துவிட எவரும் இஷ்டப்படுவதில்லை.

இதுபோன்ற நிலைமைதான் திருகஃபாவை தவாபு செய்வதிலும் இருந்து வருகிறது. திருகஃபாவிற்கு பைத்துல்லாஹ் என ஒரு பெயருண்டு. அல்லாஹ்வுத் தஆலா

வின் ஆலயம் என்பது அதன் பொருள். அவனது வீட்டிற்குச் சென்று, அவனை நாடி அவ்வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பவர்களை அவன் நிராகரித்து விடுவதில்லை. அவர்களது பாவங்களை மன்னிப்பதுடன், அவர்கள் கேட்கும் பிரார்த்தனைகளையும் அங்கீகரிக்கிறான்.

அல்லாஹ்த் தஆலா எங்கும் நிறைந்தவன். அவனுக்கெனப் பிரத்தியேகமான ஒரு ஸ்தலம் இல்லை. அவ்வாறு இருப்பதாகக் கருதுவது இஸ்லாமிய சட்டப்படி கூடாத காரியம். என்றாலும், அவனை வணக்குவதற்காக நிர்மாணிக்கப்படும் மஸ்ஜிதுகள் யாவையும் பைத்துல்லாஹ் என்றே உலகம் கூறுகிறது. இம்முறையில் திருகஃபாவிற்கும் பைத்துல்லாஹ் என்ற பெயர் வந்தது.

தவிரவும், திருகஃபா இறைவனை வணங்குவதற்காக உலகில் முதல் முதலாக நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதாக இருப்பதால், இதற்கு இப்பெயர் முதல் முதலாக ஏற்பட்டது. இதனால்தான் ஏனைய மஸ்ஜிதுகளும் பைத்துல்லாக்களாக, இருந்தாலும் திருகஃபாவிற்கு மட்டிலும் இப்பெயர் விசேஷமாகக் கூறப்படுகிறது. ஏனைய வீடுகளையும் சுற்றிச் சுற்றி வரலாம் என்பதை விவாதத்திற்காக ஒத்துக்கொள்ளலாமாயினும், உலகிலேயே முதல் முதலாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டை தவாபு செய்வதிலுள்ள மகத்துவம் வேறெங்கும் இல்லை. ஆதலால்தான் கஃபாவைமட்டிலும் தவாபு செய்யும்படி இஸ்லாமிய சன்மார்க்கம் விதியாக ஏற்படுத்தி இருக்கிறது.

அறபாத் மைதானத்தில் தங்குவதன் கருத்து

இவ்வுலகின் ஆதி மனிதரான ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் இவ்வுலகிற்கு எடுத்தெரியபபட்ட பிறகு, முதல்

முதலாக இவ்விடத்தில்தான் தமது மனையாள் ஹஜ்றத் ஹவ்வா உம்மா அவர்களைச் சந்தித்து ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டார்கள். இதனால், இந்த இடத்திற்கு அறபா அதாவது அறியப்பட்ட இடம் என்ற பெயர் வந்தது.

இக்காலத்திலும் கூட நம்மவர்கள் ஒரு விசேஷ காரியம் நிகழ்ந்த இடத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர். மகத்தான ஒரு வெற்றி கிடைத்த இடத்தை அரசாங்கத்தினர் கௌரவித்து, அவ்வெற்றியின் ஞாபகார்த்தத்தை அவ்விடத்தில் ஸ்தாபித்து, வருஷந்தோறும் அங்கு செல்கின்றனர். இதுபோல இதரர்களும் தங்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஒரு வெற்றி கிடைத்த இடத்தை மறப்பதில்லை. இவ்வழக்கத்திற்கேற்ப, மனிதர்களாகிய நம்மின் ஆதிமாதா பிதா இருவரும், இவ்வுலக வாழ்க்கையை முதல் முதலாக ஆரம்பித்த இடம் இதுவாக இருக்கிறது. இங்கிருந்துதான் அவர்களது குடும்ப வாழ்க்கை ஆரம்பமாகிறது. இவ்விடத்தில்தான் அவ்விருவரும் தங்கள் கவலையை மாற்றிச் சந்தோஷத்தை அடைந்தனர். இந்த இடத்தில்தான் அவர்களது நோக்கத்தை இறைவன் ஈடேற்றுவித்தான். ஆதலால், நாம் அவ்விடத்தை அடைந்து, பூர்வ காலத்தில் நமது மூலப்பிதா வெற்றியடைந்ததை நினைவு கூறுகிறோம். இறைவனுக்கு அவன் செய்த அனுக்கிரகத்திற்கு நன்றி செலுத்துகிறோம். அவன் நமது நன்றியை ஏற்று நமக்கு வேண்டிய இன்னும் பல அனுக்கிரகங்களைப்புரிகிறான். இது போலவே சரித்திரப் பூர்வமான சில விசேஷங்கள் முஸ்தலிபா, மினு ஆகிய இடங்களிலும் நிகழ்ந்திருப்பதுடன், மனித சமூகத்தின் அபிவிருத்திக்கும், அவர்களுக்கிருந்த

தூர்பாக்கிய நிலைமாறுவதற்குமான பல அனுக்கிரகங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்நிகழ்ச்சிகளை நாம் நினைவு கூர்ந்து, அவன்பால் நாம் பக்தியைச் செலுத்துகிறோம்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்று நாயனார் கூறியபடி நாம் இறைவன் பால் பற்றுக் கொள்ளவேண்டும். இவ்வுலகத்தைய செல்வம் பொருள், மனைவி, மக்கள், தொழில், முதலியவைகளில் பற்றுவைத் துக்கொண்டு, இறைவன் பால் பற்றுக்கொண்டுளோம் என்று கூறுவது வெறும் வாய்க்கூற்றே பன்றிக் காரியக் கூற்றல்ல. இறைவன்பால் முஸ்லிம்கள் கொண்டுள்ள பக்தி இத்தகைய பக்தியல்ல வென்பதை எண்பிப்பதற்காகவே, இத்தகைய பக்தியைத்தான் முஸ்லிம்கள் கொள்ளவேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே, அவர்களுக்கு ஹஜ்ஜ கடமையாக ஏற்படுத்தப்பட்டது. இவ்வுலகம் மாய்கை யுலகம். பொன்னையும், மண்ணையும், மனையையும், மனை வியையும், தனத்தையும், தனயர்களையும் காண்கின்ற ஒரு வருக்கு இவைகள்பால் பற்றுண்டாகி, அப்பற்று நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்வது சகஜம். இதனைத் தடுக்காமல் விட்டு விட்டால் அப்புறம் தெய்வ பற்று கூனிக்குறுகி, மனிதன் தனது பிறவியின் லக்ஷியத்தை அடி யுடன் மறந்துவிட ஹேதுக்கள் பல இருக்கின்றன. இவ்வு லகத்தைய பற்றேனும நிலையுள்ளதா? அதுவும் நிலையில்லா தது. இவ்வுலகமும் நிலையற்றது. இவ்வுலகத்தைய செல் வமும் நிலையற்றது. இச்செல்வத்தின் பால் பற்றுக் கொண்டுள்ளவர்களும் நிலையற்றவர்கள். ஆதலால், நிலையற் றதின்பால் பற்றுக் கொண்டு, அது நிலையாமல்போன பிறகு

மனம் வெதும்புவதும், சுயபுத்தியை அடைந்து, நிலையற்ற தின்பால் பற்றுக்கொண்டு, அது நிலைக்கவில்லையே என்று ஏங்குவதும் அறிவுடைமையல்ல. ஆதலால்தான், மாய்கையாகிய இவ்வுலகத்தின்பால் கொண்டுள்ள பற்று நீங்குவதற்காக, விருப்பு வெறுப்பு இல்லாத ஏகப்பரம் பொருளாகிய அலலாஹுத் தஆலாவின்பால் பற்றுக்கொள் என்பதாகப் பேரறிஞர்கள் கூறினர்கள்.

ஹஜ்ஜு யாத்திரைக்குப் புறப்படுகிற ஒருவர் தனது மனைவிமக்களையும், சுற்றத்தாரையும், பந்துமித்திரர்களையும் நிரந்தரமாக இல்லாவிட்டாலும் ஒரு சில நாட்களுக்கேனும் விட்டுப் பிரிய நேரிடுகிறது. தொழில்களையும் வியாபாரங்களையும் கைவிட வேண்டியதாக இருக்கிறது. அல்லும் பகலும் அருமையாகத் தேடிச் சம்பாதித்த தனத்தில் ஒரு சிறிய பாகத்தைச் செலவு செய்ய வேண்டியது மிருக்கிறது. இறுதியாக இஹ்ரும் கட்டிய பிறகு, தேக இச்சை சம்மந்தமான பேச்சுக்களைப் பேசுவதற்கும் கூட இடமில்லாமலாகி விடுகிறது. சில நாட்களுக்கு இவைகளைக் கண்ணால் கூடப் பார்க்க முடிவதில்லை.

நாம்தான் பொருளையும் பொன்னையும் தேடுகிறோம். மனைவி மக்களைக் காப்பாற்றுகிறோம். மண்ணையும் மனையையுந் தேடுகிறோம் என்ற நினைப்பில் இரவு பகலாக இருந்த நாம், சில காலத்திற்கு இவைகளை விட்டுப்பிரிந்து, அப்புறம் இவைகளைத் திரும்பவும் சந்திக்கும்போது, "நாம் தான் சகலத்தையும் செய்கிறோம். நாம் இல்லாவிட்டால் எல்லாம் தவறிவிடும்" என்று எண்ணி இருந்த எண்ணங்களெல்லாம் வெறும் மனக்கோட்டை என்பதை உணருகிறார்.

கூடார நகரம்—மக்க முகாமை

ஹஜ்ஜுக்குச் சென்ற விடத்திலும் திருகஃபா, ஸபா, மர்வா, மினு, அறபாத் முதலிய இடங்களில் நிறைவேற்றும் கிரியைகளிலிருந்து பற்று விட்டவர்களது செய்கைகளையும், பற்று விட்டவர்கள் அடைந்த மேன்மையையும் குறித்து ஏட்டுப்பாடமாகப் படித்ததை கண்காக்ஷியாகப் பார்ப்பதால் இவ்வுலகம் வெறும் மாயை இதனைப் பற்றுக் கொள்வது தகாது. பற்றுக் கொள்ளவேண்டிய இடத்தில் பற்றுக் கொள்ளவேண்டும். பற்றில்லாதவன் பாழ் என்ற எண்ணமும் நம்பிக்கையு முள்ளவனுகத் திரும்புகிறான். இறைவன் பால் முன்னிலும் பன்மடங்கு அதிகப் பற்றுள்ளவனுக மாறுகிறான். புதிய மனிதனுகின்றான். புதிய மனிதனுகும் விதத்தைக் கற்றுக்கொள்கிறான். அப்புறம் இப்பொய்யுலகை மெய்யென நம்பி இருப்பதில்லை. இவ்வுண்மைகளை யுணரத் தான் இறைவன் திருமக்காவிற்கு வந்து ஹஜ்ஜுச் செய்யுமாறு மாந்தர்க்குக் கட்டளையிட்டான். ஹஜ்ஜின் தத்துவங்கள் இன்னும் அனேகமுள. அவையாவையும் இச்சின்னூலில் ஒருங்கே எழுதிவிட முடியாது, அன்பர்கள் ஒருவாறு உணர்ந்து கொள்ளும் பொருட்டு இவ்விபரங்களைச் சுருக்கமாக எழுதினம்.

சில சமாதானங்கள்

இஸ்லாம் மதம் விக்கிரக ஆராதனையை ஆதரிப்பதில்லை கிறிஸ்து மதத்தைச் சேர்ந்த சில பிரிவார் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களை கர்த்தர் என்று கூறுவதையும், மற்றொரு சாரார், கடவுள் குமாரர் என்று கூறுவதையும், சிலர் திரியேகதத்துவக் கொள்கையை விசுவாசிப்பதையும், யூதமதத்தார் ஹஜ்றத் உஜைர் (அலை) அவர்களைக் கடவுளது குமாரர் என்று நம்புவதையும் மறுத்து, இவைகளால் ஷிர்க்கு அதா

வது கடவுளுக்கு இணைவைத்தல் என்ற தோஷம் உண்டாகுவதாகக் கூறுகிறது. இதனால் முஸ்லிம்கள் யூத, கிறிஸ்துவ மதங்களையும், விக்கிரகத் தொழும்பர்களையும் விட்டு விலகி இருக்கிறார்கள்.

இதனைக்கண்ட அம்மத சகோதரர்களிற் சிலர் இஸ்லாம் மதம் விக்கிரக ஆராதனையை இகழ்ந்து கூறுகிறது, இணைவைப்பவர்களைத் தூஷிக்கிறது. ஆயினும், அம்மதத்திலும் கூட விக்கிரக வணக்கம் இல்லாமலில்லை. அவர்கள் திருமக்காசென்று ஹஜ்ஜை நிறைவேற்றுவதாகக் கூறி கருங்கல்லை வணங்குகிறார்கள் என்று கூறுகின்றனர். மேலெழுந்த வாரியாகக் கவனிப்போரும் இஸ்லாம் மதத்தின் கொள்கைகளைக் கடுகளவு கூட உணராதவர்களும் இவ்வாட்சேபனையை மெய்யெனவே நம்பக்கூடும். மற்றவர்கள் இதனை ஒருபோதும் நம்பமாட்டார்கள். ஆயினும், இவ்வாட்சேனைக்கு சமாதானம் கூற வேண்டியது நியாயமேயாம். ஏனெனில், முஸ்லிம் எனத்தன்னைக் கருதும் எவரும் இஸ்லாம் மதத்தைக் குறித்து தான் அறிந்துள்ள உண்மைகளை மறைக்காமல் பிறரிடம் கூறக்கடமைப் பட்டுள்ளான். இம்முறையில் இச்சந்தேக ஆட்சேபனைக்கு நமக்குத் தெரிந்த மட்டில் சமாதானம் கூறுவது நமது கடமையாகும்.

திருமக்காவிலுள்ள கஃபா என்ற தேவாலயத்தில் ஹஜ்றுல் அஸ்வத் என்ற பெயரால் ஒரு கல் இருக்கிறது. திருகஃபாவை தவாபு செய்பவர்கள் அக்கல்லை, முத்தமிடுகிறார்கள் என்பது உண்மை. என்றாலும், இக்கல்லை முத்தமிடவேண்டும் என்பது இஸ்லாம் மதத்திலுள்ள பல்லான கடமைகளுள் ஒன்றல்ல. அல்லது ஹஜ்ஜுக்

கடமைகளிலும் சேர்ந்ததில்லை. ஆனால், அது ஸுன்னத்தான ஒரு காரியம். அதிலும் ஜன நெருக்கம் அதிகமாக இருந்தால் ஜனங்களை விலக்கிக்கொண்டு அக்கல்லின் அண்டையில் சென்று அதில் முகத்தை வைத்து முத்தமிடவேண்டும் என்ற அவசியமுமில்லை. தூரவிலகி நின்றுகொண்டே அதனைச் சமிக்ஞையால் முத்தமிட்டால் போதுமானது. ஆயினும், ஒருவர் இதனை முத்தமிடாமலே இருந்துவிட்டாலும் அவர் குற்றவாளியாக மாட்டார். அவரது ஹஜ்ஜுக் கடமை நிறைவேறிவிடும். ஆயினும், தவாபு செய்வதிலுள்ள ஒரு ஸுன்னத்தை அவர் நிறைவேற்றவில்லை என்று மட்டிலும்தான் அவர் கருதப்படுவார்.

இக்கல்லை முஸ்லிம்களில் எவரும் தெய்வமாகப் பாவிப்பதுமில்லை. அவ்வாறான எண்ணத்தில் அதனை முத்தமிடுவதுமில்லை. அக்கல்லால் எவருக்கும் எத்தகைய தீங்கையும் செய்யமுடியாது. எவரது கோரிக்கையையும் அக்கல் நிறைவேற்றச் சக்தி பெறவில்லை என்பதை முஸ்லிம்கள் நன்குணர்ந்திருக்கின்றனர். என்றாலும், பிற்காலத்தில் தோன்றக் கூட மக்களில் சிலர் கல்வி அறிவில்லாக் குறையால் அக்கல்லிற்கு தெய்வாம்சமிருப்பதாகவும் நினைத்துவிடக் கூடும் என்ற எண்ணத்தால் இதனைக் குறித்து ஹஜ்றத் உமர் பாரூக் (றலி) அவர்கள் தெளிவுரக் கூறியுமிருக்கிறார்கள்.

அப்பெரியார் கலீபா பதவியை வகித்திலிருந்த காலத்தில் ஒரு முறை ஹஜ்ஜுக்கு வந்து, திருகஃபாவை தவாபு செய்தபோது, அக்கல்லையும் முத்தமிட்டார்கள். அப்பொழுது, அக்கல்லினண்டையில் சென்று நின்றுகொண்டு "நீ ஒரு கருங்கல்தானென்று நான் நிச்சயமாகவே நான்

அறிந்திருக்கிறேன். நீ இவ்வுலகில் நல்லதும் செய்வதில்லை. கெட்டதும் செய்வதில்லை. ஆயினும், முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உன்னை முத்தி செய்ததை நான் கண்டிராவிடின், உன்னை நான் முத்தி செய்யவே மாட்டேன் என்று கூறி அதனை முத்தமிட்டதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஹஜ்றத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் எதற்காக அக் கல்லை முத்தியிடவேண்டும் என்ற ஐயம் சிலருள்ளத்தில் தோன்றலாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட அக்கல்லுக்கு தெய்வாம்சமிருப்பதாகக் கருதவுமில்லை, சொல்லவுமில்லை. என்றாலும், அக்கல் பூர்வீகமானது. ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் காலத்திலிருந்து இருந்து வருகிறது. அக்கல்லை ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்களும், அவர்களது புத்திர பௌத்திரர்களிலுள்ள நபிமார்களும், ஹஜ்றத் இப்ராஹீம், இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களும் தங்கள் திருகரத்தால் தொட்டிருக்கிறார்கள், இவர்களது இப்பரக்கத்தால் இக்கல்லுக்கு மற்றைய கற்களைக் காட்டினும் சிறிது விசேஷத்துவமிருக்கிறது.

இக்காலத்தில் அரசாங்கத்தார் கூட முற்காலத்தி லிருந்த மன்னர்கள் வீரர்கள் உபயோகித்து வந்த ஆயுதங் களையும், அவர்கள் கைப்பட எழுதிய கையெழுத்துகளை ஞாபகச் சின்னங்களாக மதித்து அவைகளை வெகு ஜாக் கிரதையாகப் பத்திரப்படுத்துகிறார்கள், இவைகளுக்கென அரசாங்கத்தில் பிரத்தியேகமான ஒரு இலாக்காவை ஏற் படுத்தி ஏராளமான தனத்தை அவைகளைக் காப்பதில் செலவிட்டு வருகிறார்கள். சில வற்றை அரசாங்கத்தின்

இரகசிய பொக்ஷங்களில் கூடச் சேர்த்திருக்கிறார்கள். எனவே, முற்காலத்திலிருந்தவர்களது உடமைகளை மதித்துக் கண்ணியப்படுத்தும் வழக்கம் மனித சமூகத்தில் இயற்கையாகவே தொன்று தொட்டு இருந்துவருகிறது.

ஹஜ்றத் இப்ராஹீம் கலீலுல்லாஹ் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூதாதையரில் ஒருவர். அவர்களது செல்வப் புதல்வராஜ ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் வம்சத்தில்தான் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். இவ்விருவரும் நபிமார்களாக இருந்தார்கள் என்பதை இஸ்லாம் மதம்மட்டு மில்லாமம் யூத கிறிஸ்துவ மதத்தினரும் கூட அங்கீகரிக்கின்றனர். அல்லாமலும், இவர்களை அவர்கள் கொண்டாடவும் செய்கின்றனர். இவர்களது காரியங்களைக் குறித்த விபரம் அவர்கள் வேத கிரந்தமாக மதிக்கிற புத்தகங்களிலுமிருக்கின்றது. திருகுர்ஆனும் கூட இவர்களது தெய்வ பக்தியைச் சிறப்பித்துக் கூறுகிறது. இதனை அல்லாமல், யூத கிறிஸ்துவர்கள் போற்றிவரும் ஹஜ்றத் மூஸா (அலை), ஹஜ்றத் ஈஸா (அலை) ஆகிய நபிமார்களும் கூட ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களது சந்ததியினரேயாவர். ஆதலால் இவர்களது உடமைகளைக் கண்ணால் பார்க்கவும், அவ்வுடமைகள் மூலமாக அப்பெரியார்களது தெய்வ பக்தியை நினைவு கூறவும் விரும்பாத மக்கள் இருக்கமுடியாது. சுமார் 5-ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் வாழ்ந்த இப்பெரியார்களது உடமைகள் பத்திரமாக இருப்பது வெகு சிரமம். ஆனலும், ஹஜ்றுல் அஸ்வத் என்ற அக்கருங்கல் திருகஃபாவை தவாபு செய்பவர்கள் தங்களது தவாபை ஆரம்பிக்கும் இடத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு ஹஜ்றத்

இப்ராஹீம் (அலை) ஹாஜறத் இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவராலும் நடப்பட்டது என்பதில் சந்தேகத்திற்கிட மில்லாத முறையில் அக்காலத்திலிருந்து இக்காலம்வரை இருந்து வருகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னர் பல முறைகளிலும் திருகஃபா கட்டப்பட்டாலும் அக்கல் மாத்திரம் அந்த இடத்திலேயே அக்காலத்திலுள்ளவர் களால் எடுத்து வைக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே, அவ்விரு நபிமார்களது கரங்கள் பட்டது என்பதையும், அந்நபிமார்களால் நடப்பட்ட கல் என்பதையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்திருந்ததால், தங்கள் மூதாதையர்பாலுள்ள அன்பையும், அவர்கள் மாட்டுத் தமதுள்ளத்திலுள்ள கனமான மதிப்பையும் தெரிவித்துக் கொள்ளும் முறையில் அக்கல்லை நாயகம் (ஸல்) அவர்கள் முத்தியிட்டார்கள்.

அவர்களுக்குப் பிறகு தோன்றிய நமக்கு அந்த நபிமார்கள் மதிக்கவும் போற்றவும் தக்கவர்களாக இருப்ப தடன், அக்கல் நமது நாயகம் (ஸல்) அவர்களாலும் அவ்விடத்தில் எடுத்து நாட்டப்பட்டது என்ற விபரமும் கிடைத்திருப்பதால் பாக்கத்தை நாடி நாமும் அக்கல்லைத் தொடுகிறோம். நமது முகங்களை அக்கல்லின் மீது வைத்து அதனை முத்தி இடுகிறோம். இதனைத் தவிர அக்கல்லுக்கு தெய்வாம்ச மிருப்பதாக முஸ்லிம்கள் கருது வதுமில்லை. அதனை முஸ்லிம்கள் பூஜிப்பதுமில்லை.

கிப்லாவை குறித்து

உலகில் எத்தேசத்தில் வாழும் முஸ்லிம்களும் தங்கள் தொழுகைக்கு திருகஃபாவையே கிப்லாவாகக் கொண்டி

ருக்கின்றனர். அது இருக்கும் திசையை நோக்கியே முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றுகின்றனர். ஹஜ் ஜுக்குச் செல்பவர்களும் திருமக்காசென்று அதனை தவாபு செய்கின்றனர். ஆதலால், கஃபாவிற்குள் அல்லாஹுத் தஆலாவினது உருவச் சிலைகளிருக்கலாம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிலை இருக்கலாம், அவ்வாறிருப்பதால்தான் அதனை நோக்கி முஸ்லிம்கள் தொழுகின்றனர். அவைகளை தரிசிப்பதற்காகத்தான் முஸ்லிம்கள் திருமக்கா செல்கின்றனர் என்று சிலர் சந்தேகிக்கின்றனர். மேலைட்டிலுள்ளவர்கள் இவ்விதமாகவே தங்களது சிற்சில கிரந்தங்களில் கூறியுமிருக்கின்றனர். இவ்விதமான கருத்துக் கொள்வதும் கூட அறியாமையே யாகும்.

இறைவன் எங்கும் நிறைந்தவன். அவனை எத் திசையையும் நோக்கித் தொழலாம். என்றாலும், சமூகம் என்ற முறையில் முஸ்லிம்களிடம் ஒரு கட்டுப்பாடு வேண்டும். அக்கட்டுப்பாட்டினை அனுசரித்து முஸ்லிம்கள் நடக்கவேண்டும் என்ற முறையில் இறைவன் திருகஃபாவை நோக்கித் தொழும்படியாக முஸ்லிம்களுக்குக் கட்டளை யிட்டான். இக்கட்டளையின் மூலம் இறைவன் எங்கும நிறைந்தவன் என்ற கொள்கை இன்னும் அதிகமாகவே வெளியாகிறது. எவ்வாறெனில், இந்தியாபோன்ற கீழ் திசையிலுள்ள நாட்டினர் மேற்கு முகமாகத் தொழுதால், எகிப்து, திரிப்போலி, டுனிஸ், அல்ஜீரியா போன்ற நாடுகளிலுள்ளவர்கள் கிழக்கு முகமாகத் தொழுகின்றனர். பலஸ்தீனம், சிரியா, துருக்கி போன்ற நாடுகளிலும் அவைகளுக்கு வடக்கிலுள்ள ஐரோப்பிய நாடுகளிலுமுள்ளவர்கள் தெற்கு முகமாகவும், தென்னப்பிரிக்கா முதலிய நாடுகளி

லுள்ளவர்கள் வடக்கு முகமாகவும் தொழுகையை நிறை வேற்றுகின்றனர்.

இதனை அல்லாமல் மக்காவாசிகள் திருகஃபாவைச் சுற்றிலும் வட்டமாக நின்று அதனை நோக்கியவண்ணம் நான்கு திசைகளிலும் எட்டுக்கோணங்களிலும் தொழுகின் றனர். ஆதலால், அவன் எங்கும் நிறைந்தவன் என்ற கொள் கையை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதற்கு, அவனை வணங்க ஒரு குறிப்பிட்ட திசையை ஏற்படுத்தாமல் திரு கஃபாவை நோக்கித் தொழும்படி நிர்ணயித்தது விசேஷ மேயாகும்.

உலகில் எத்தனையோ மஸ்ஜிதுகளிருக்க திருகஃபாவை மட்டிலும் குறிப்பாய் நியமித்ததற்கு யாது காரணம் எனச் சிலர் சம்சயிக்கலாம். உலகிலுள்ள எல்லா மஸ்ஜிதுகளும் இறைவனின் வணக்கத்திற் கென்றே நிர்மாணிக்கப்பட் டவை. அவைகள் யாவும் தேவாலயங்கள் என்பதில் சந் தேகமுமில்லை. அவைகளிற் சில நபிமார்களாலுங் கூட நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், திருகஃபா உலகிலுள்ள சகல தேவாலயங்களிலும் முதன்மையானது. இறைவனை வணங்குவதற்கென்று இப் பூமண்டலத்தில் கட்டப்பட்ட தேவாலயங்கள் யாவற்றிலும் திருகஃபாதான் முதலாவதாகக்கட்டப்பட்டது. இது முதன்மையானது என்பதை திருகுர்ஆனும் அங்கீகரிக்கிறது. மனிதர்களின் மூல பிதாவான ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் இதனை நிர்மாணித்ததாக ஹதீது ஷரீபுகளில் காணப்படுகிறது. இம்முறையில் இறைவனை வணங்குவதற்கென முஸ்லிம் கள் கட்டிய மஸ்ஜிதுகளில் இது முதன்மை ஸ்தானத்தை வகிப்பது மட்டுமில்லாமல், முஸ்லிம் அல்லாதார்கள் தங்கள்

கொள்கைக் கேற்றவாறு தெய்வத்தை வணங்குவதற்காகக் கட்டிய தேவாலயங்களிலும்கூட திருகஃபாதான் முதன்மையாக இருந்து வருகிறது. இதற்குறிய முதன்மைப் பதவியின் காரணமாகத்தான் இது கிப்லாவாக அமைக்கப்பட்டது.

திருகஃபாவிற்குள்ளிலும் கூட ஒன்றுமில்லை. அங்கு எவ்விதச் சிலைகளுமில்லை. அது பகிரங்கமாக யாவரும் செல்வதற்குத் திறந்து விடப்படுகிறது. திருமக்கா செல்வோர் அவ்வாலயத்திற்கு வெளியில் மட்டுமில்லாமல், அதற்கு உள்ளிலும் சென்று இறைவனை வணங்குகின்றனர். அவ்வாலயத்தினுள் செல்வோரும்கூட குறிப்பிட்ட ஒரு திசையில் மட்டிலும் வணங்குவதில்லை. நாலு திசைகளிலும் திரும்பித்திரும்பித் தொழுகின்றனர். ஆதலால், விக்கிரகங்களோ சிலைகளோ அங்கிருக்கின்றன என்று எவரும் சந்தேகம் கூடக் கொள்ளவேண்டியதில்லை. அங்கு ஒன்றுமே இல்லை. ஏனைய மஸ்ஜிதுகள் இருப்பதுபோலவே அதுவும் ஒரு மஸ்ஜிதாக இருக்கிறது என்பதை எச்சமயத்திலும் அங்கு சென்று நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஜீவகாருண்ய மதம்

وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

மேலும், (நபியே) உம்மை அகிலத்தாருக்குக் கருணையாக அல்லாமல் நாம் அனுப்பவில்லை. என்று திருகுர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்துக் கூறுகிறது. முஸ்லிம்களும் தங்கள் நபியை உலக தயாளர், காருண்ய

சிலர் என்றெல்லாம் கூறுகின்றனர். அவ்வாறிருந்து அவர் போதித்த இஸ்லாம் மதத்தில் அதன் அம்சங்களைக் காணவில்லை. குர்பானி கொடுக்குமாறு இஸ்லாம் மதம் கட்டளை பிட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட மிருகங்களைத்தவிர மற்றைய மிருகங்களின் மாம்சங்களைப் புசிக்க இஸ்லாம் மதம் அனுமதிக்கிறது. ஆதலால், இஸ்லாம் மதம் ஜீவ காருண்ய மதமல்ல. வருஷந்தோறும் இயல்புள்ளவர்கள் கோடிக்கணக்கான ஆடுமாடு ஒட்டகங்களை அறுத்துப் பலியிடுகின்றனர். உயிருள்ள பிராணிகளை இவ்விதம் கட்டுப்பாடாகக் கொலை செய்வது பெரும்பாவமாகும். கொடுமையினும் கொடுமையாகும், படுபழியுமாகும் என்று நம் நாட்டிலுள்ள சிலர் கூறுகின்றனர். இவர்களுக்கு ஜீவ காருண்ய சங்கத்தார் என்றும், சைவர்கள் என்றும், மாம்ச போஜன மருந்தாதவர்களென்றும் பெயர்.

ஜீவ ஹிம்சை செய்யலாகாது என்ற பொதுக்கொள்கையில் இஸ்லாம் மதமும்கூட இவர்களுடன் அனுதாபம் காட்டுகிறது. முஸ்லிம்களும் இவ்விஷயத்தில் இவர்களை ஆதரிக்கின்றனர். ஆனால், இக்கொள்கையை விவரித்துக் கூறி இக்கொள்கையை அமல் நடத்தும் விஷயத்தில் இவர்களை விட்டு இஸ்லாம் மதமும் விலகிக்கொள்கிறது. முஸ்லிம்களும் இவர்களை ஒதுக்கி விடுகின்றனர். இக்கொள்கையை விபரிக்கும் முறையிலும், விளங்கிக் கொள்ளும் தன்மையிலும்தான் அபிப்பிராய வித்தியாசமிருக்கிறது.

இக்காலத்தில் நமது நாட்டிலுள்ள ஜீவகாருண்ய வர்க்கத்தார் மாமிசத்தை உட்கொள்ளாதிருப்பது தான் ஜீவ காருண்யமென நினைத்து மாமிசத்தை உட்கொள்வதில்லை. மாமிசம் புசிக்க வேண்டுமாயின் தங்களைப்போல் ஜீவனுள்ள

பிராணிகளான ஆடு, மாடு, புறு, கோழி போன்றவைகளைக் கொலை செய்ய வேண்டியதிருக்கிறது என்று கூறுகின்றனர். இவ்விதமான உணர்ச்சியுடன் அவர்கள் இருந்து விட்டால், அதனைக்குறித்து நாமொன்றுங் கூறுவதற்கில்லை. தங்களது கொள்கையும் செய்கையும்தான் சிறந்தவை. முஸ்லிம்களது செய்கை ஜீவகாருண்ய மற்றவை. அவர்களது மதம் ஜீவவதை செய்யக் கட்டளை யிடுகிறது என்று கூறி இஸ்லாம் மதத்தையும் முஸ்லிம்களையும் ஏளனம் செய்ய வாரம்பிக்கின்றனர். மாம்சங்களைப் புசிக்கும் இதர மதவாதிகளும் இவர்களுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களைப் பரிகசிக்கவும், முரடர்களெனக் கூறுவதும் இக்காலத்தில் மலிந்து விட்டது. இவர்களது பிரசாரத்தின் வேகத்தால் கல்வியறிவில்லாத சில முஸ்லிம்களும் கூட அவர்கள் கூறுகிற அதே வார்த்தைகளைக் கூறி மாமிச போஜனத்தை மறுத்து வருகின்றனர். ஆதலால், பிரமதவாதிகளுக்கோ ஜீவகாருண்யக் கூட்டத்தாருக்கோ நாம் மறுபடிச் செய்ய விரும்பாவிடினும், இங்கு அதனைக் குறித்தெழுதும் சில வார்த்தைகள் முஸ்லிம்களிலுள்ள அச்சிறு கூட்டத்தினரது மயக்கத்தைபேனும் தெளிவு படுத்துமெனக் கருதுகிறோம்.

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் ஜீவன் உண்டு என்பது இஸ்லாம் மதத்தின் சித்தாந்தம். சிறு செடி கொடிகளும் கூட உயிருள்ளவைகள்தான். ஆதலால், அவைகளையும் கூட அலுவசியமாகப் பிடுங்கவோ வெட்டிவிடவோ கூடாது என்பது இஸ்லாம் மதச் சித்தாந்தம். பசுமையாக அதாவது உலராமல் இருக்கிற மரக்கிளைகளும் கூட உயிருள்ளனவே. இவைகள் ஜீவனுள்ளனவாக இருப்பது

மட்டுமல்லாமல் இறைவனைத் தஸ்பீஹ் செய்கின்றன என்றும் கூட வந்திருக்கிறது. இதனைக் கருதித்தான் முஸ்லிம்களை கப்றுகளில் அடக்கியவுடன் அவர்களது தலைமாட்டிலும் கால்மாட்டிலும் இரு பச்சைக் குச்சிகளை ஊன்றி வைக்கிறார்கள்.

இக்குச்சிகள் இறைவனை தஸ்பீஹ் செய்வதால் இவைகளின் பொருட்டு அக்கப்ரில் அடக்கம் செய்யப்பட்டவரது கப்று வேதனை ஒரு குறைந்த அளவிற்கு இலேசாக இருக்கும் என்பதும், இக்குச்சிகள் அப்படியே துளிர்த்து விடலாம். அல்லது இவைகள் உலர்ந்து போவதற்குள் அக்கப்ரின் மீது வேறு புற்பூண்டுகள் முளைத்துவிடும் என்பது முஸ்லிம்கள் எண்ணம். இதனுற்றுன் கப்றுஸ் தானிலுள்ள விருக்ஷங்களையும்; கப்றுகளிலுள்ள செடிகளையும் அகற்றவேண்டாம் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

இதனை அல்லாமல் ஞானமார்கத்திற் செல்லும் ஸாலிக்குகளாகிய பெரியோர்கள் மரம் செடி கொடிகளிலுள்ள பசுமையான இலைகளையும் கூடப் பரிக்கமாட்டார்கள். இறைவனை தஸ்பீஹ் செய்துகொண்டிருக்கிற அவைகளைப் பரித்துக் கொலைசெய்வது நியாயமில்லை என்பது அவர்களது எண்ணம். இம்மட்டுடன் நில்லாது கல், மண் முதலியவாவும் கூட உயிருள்ளவை, ஜீவனுள்ளவை, அவைகளும் இறைவனை தஸ்பீஹ் செய்கின்றன என்பதாகப் பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மரக்கட்டைகள் பேசியதாகவும், கற்களும் கூட அவர்கள் உண்மை நபி யென்பதற்கு சாக்ஷியம் கூறியதாகவும் வந்திருக்கிறது. ஹஜ்றத் தாவூத் (அலை)

அவர்கள் ஜாலூத் என்ற அரசனை எதிர்த்து யுத்தம் செய்யச் சென்ற காலத்தில் மலையிலும் ரஸ்தாக்களிலு முள்ள அனேக கற்கள் தங்களையும் எடுத்துக்கொண்டு செல்லும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டன என்றும் கூட சரித்திர நூல்கள் கூறுகின்றன.

ஞானமார்க்கத்தில் சென்று ஓரளவு ஆத்மார்த்த முன்னேற்றமடைந்து தவக்கலுடைய அந்தஸ்திற்கு வந்த பெரியார்களுக்கு தாதுவர்க்கம் தாவரவர்க்கங்களின் இரக சியங்கள் எடுத்துக் காட்டப்படும். அவைகள் தங்களி லுள்ள பிரயோஜனங்களையும் உபயோகங்களையும் அப்பெரி யார்களிடம் கூறும் என்றும் மேதை அந்தஸ்தை அடைந்த ஒலிமார்கள் தங்கள் கிரந்தங்களில் கூறி இருக்கிறார்கள். ஆதலால், மனிதர்கள் தங்களுக்கு அத்தியாவசியமான காரியங்களுக்கு உலகிலுள்ள எப்பொருளையும் உபயோ கித்துக் கொள்ளலாம். அலுவசியமாக, வீணாக அவைகளை ஹிம்சிக்கலாகாது என்று இஸ்லாம் மதம் போதிக்கிறது.

இம்முறையில்தான் முஸ்லிம்கள் தங்களுக்கனுமதிக் கப்பட்ட பிராணிகளின் மாம்சங்களை அவைகளுக்குரிய முறையில் பக்குவப்படுத்திப் புசிக்கின்றனர். இதுபோலவே கற்களும் உலோகங்களும் கூட புசிக்க அனுமதிக்கப் பட்டிருக்கின்றனவானாலும் அவைகளை உரிய முறையில் பக்குவப்படுத்த வேண்டும். பக்குவமில்லாவிடில் புசிக் கலாகாது.

தவிர, இக்காலத்திலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளும் கூட மரம் செடி கொடிகளுக்கும் உயிர் இருப்பதாகவும், அவைகளுக்கு இரத்த ஓட்டமிருப்பதாகவும், அவைகளும் இன்ப துன்பங்களை ரசிக்கின்றன வென்பதாகவும் கூறு

கின்றனர். சில வருஷங்களுக்கு முன்னுல் வங்காளத்தி லிருந்த போஸ் என்ற ஒரு மேதாவி ஐரோப்பிய தேசங் களுக்குச் சென்று, ஆங்குள்ள விஞ்ஞானிகளின் மகா நாட்டில் மரம் செடி கொடிகளுக்கும் இன்ப துன்பங்களை அறியும் சக்தி இருப்பதையும், ரத்த ஓட்டம் இருப்பதை யும் இன்னும் சில விபரங்களையும் கருவிகளின் உதவியால் ருஜுப்பித்துக் காட்டினுர். அவரது வாதத்தை அவர் களும் ஏற்றுக் கொண்டனர்.

இதனை அல்லாமல் சில விருக்ஷங்களும் செடிகளும் கூட மாமிச பக்ஷிணிகளாக இருக்கின்றனவென்றும் இப் பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு டம் பளரில் ஜலத்தை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் அதில் இலட்சக் கணக்கான கிருமிகள் இருக்கின்றன. அவைகள் யாவும் உயிருள்ள ஜந்துக்களே. இவைகளையும் மனித வர்க்கத்தைச் சேர்ந்த நாம் தினசரி உட்கொண்டு வரு கிறோம். நாம் அருந்தும் மரக்கரிகளான கத்தரிக்காய், வெண்டைக்காய், முதலிய தர்காரிகளிலும் கூட உயிர் இருப்பதுடன் லட்சக்கணக்கில் கிருமிகள் இருக்கின்றன. இறுதியாகக் கவனிக்குமிடத்து நாம் உட்கொள்ளும் சுவாசத்திலும் கூட கிருமிகள் இருக்கின்றன. எனவே, நம்மைப்போல் உயிருள்ள ஜந்துக்களை நாம் ஆகாரத்தின் பொருட்டு உட்கொள்வது ஜீவஹிம்சை, ஜீவகாருண்ய மற்ற செய்கை என்ற முடிவில் நாம் இருந்தால் நாம் ஆகாரங்களை உட்கொள்ளுவதும், சுவாசம் வாங்குவதும் கூட ஜீவகாருண்ய மற்ற செய்கை என்ற முடிவில் நாம் இருந்தால், நாம் ஆகாரங்களை உட்கொள்ளுவதும், சுவாசம் வாங்குவதும்கூட ஜீவகாருண்ய மற்ற செய்கைகளாக ஏற்

பட்டுவிடும். ஆதலால், ஜீவகாருண்யக் கூட்டத்தார்களும் சைவர்களும் கொண்டுள்ள கருத்து மனித சமூகத்திற்கே கஷ்டத்தை விளைவிக்கும் காரியங்களாக இருக்கின்றன.

தவிர, உலகிலுள்ள சகல மதங்களையும் சன்மார்க்கங்களெனக் கூறுவதற்கில்லை. இஸ்லாம் மத தர்மப்படி இறைவனுலங்கீகரிக்கப்பட்ட மதம் இஸ்லாம் மதம் ஒன்றே யாகும். ஏனைய மதங்களெல்லாம் மனிதர்கள் தாமாகச் சுயமாக இட்டுக்கட்டிக் கொண்டவைகளாகவோ அல்லது மனிதர்கள் தங்கள் இஷ்டத்திற்குக் கூடக் குறைய மாற்றியும் திருத்தியும் எழுதி வைக்கப்பட்டதாகவோ இருக்கின்றன வென்பதாக இருந்தபோதினும் மாமிசத்தைப் புசிப்பது ஆகுமா ஆகாதா என்ற விஷயத்தில் எந்த வேதமும் மனிதனைத் தடை செய்பவில்லை. இந்தியாவிலுள்ள ஹிந்து சாஸ்திரங்களும் கூட யக்ஞம் செய்து சாப்பிடவும், யாகம் செய்து மாமிசம் சாப்பிடவும் கூறுகிறது.

மனிதனது இயற்கை அமைப்பையும் நாம் நோட்டமிடுவோமாயினும் மனிதன் இயற்கையிலேயே மாமிச பக்ஷிணியாகவே இருந்து வருகிறான் என்பது தெளிவு. எவ்வாறெனில், மிருகங்களில் மாமிச பக்ஷிணி என்றும், சாக பக்ஷிணி என்றும் இருவகை இருக்கின்றன. மாமிச பக்ஷிணிகளின் பற்களின் அமைப்பு வேறுகவும், சாக பக்ஷிணிகளின் பற்களின் அமைப்பு வேறுகவுமிருக்கின்றன. மாமிச பக்ஷிணிகளுக்கு சிங்கப்பல் என ஒருவகைக் கூர்மையான பற்களிருக்கின்றன. அவ்வாறான பற்கள் சாக பக்ஷிணிகளுக்கு இல்லை. மனிதனுக்கு அமைந்திருக்கும் பற்களை நாம் நோட்டமிட்டுப் பார்த்தாலும் மனிதனுக்கும் மாமிச பக்ஷிணிகளுக்கிருக்கிற சிங்கப்பற்களிருப்பது தெரிய வரு

கிறது. எனவே, மனிதனும் மாமிச பக்ஷிணியானவைகளைச் சேர்ந்தவன் என்பது அவனது இயற்கை அமைப்பிலேயே இருந்து வருகிறது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

இப்பூவுலகமெங்கும் மனிதன் பரவி வசித்து வருகிறான். உஷ்ணப் பிரதேசம், மத்திய குளிர்ச்சிப் பிரதேசம், குளிர்ச்சிப்பிரதேசம் என வகுக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலெல்லாம் மனிதன் பரவி இருந்து வருகிறான். குளிர்ச்சிப் பிரதேசங்களான வட துருவத்திலும் தென் துருவத்திலும் மரம் மட்டைகள்கூடக்கிடையாது. பனிக்கட்டிகள் உரைந்த நாடு. அங்கு வசிப்பவர்கள் பனிக் கட்டிகளையே வீடாக அமைத்துக்கொண்டு வசிக்கிறார்கள். அங்குள்ளவர்களுக்கு பச்சை மாமிசம்தான் சாதாரணமான உணவு என்பதாகப் பூமி சாஸ்திர கிரந்தங்களில் இருக்கின்றன. வேத கிரந்தம் மாமிசம் சாப்பிடுவதை விலக்குவதாக இருந்தால் அங்குள்ள ஜனங்களுக்கு அவ்வேத கிரந்தத்தைத் தழுவி நடக்க இயலாமற் போய்விடும்.

ஒரு வேதம் உண்மையான வேதமாக இருப்பின் அவ்வேதத்திலுள்ள சட்ட திட்டங்கள் எல்லா மனிதர்களாலும் எக்காலத்திலும் பின்பற்றத் தகுந்ததாக இருக்க வேண்டும். அதிலுள்ள சில விதிகள் மனிதவர்க்கத்தில் சில குறிப்பிட்டவைகளால் அசாத்தியமான காரியங்களைச் செய்யும்படி ஏவினாலும், அல்லது மனிதனுக்கு இன்றியமையாததைச் செய்ய வேண்டாமென விலக்கினாலும் அது உண்மை வேதமாக இருக்க முடியாது. அதனை உண்மை வேதமென விரபிதத்திற்காக வைத்துக் கொண்டாலும் அது உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் பொது வேதமாக இருக்க முடியாது. இஸ்லாம் மதம் உலகிலுள்ள

சில குறிப்பிட்ட ஜனங்களுக்கு மட்டிலுமோ அல்லது தேசத்திற்கு மட்டிலுமோ சொந்தமான மதமல்ல. மனித வர்க்கம் அனைத்திற்குமே பொதுவான வேதம். பொது வேதத்தில் யாவருக்கும் கிரியைகளைச் செய்வதற்குத் தக்க விதி விலக்குகள் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இஸ்லாம் மதம் மாமிச போஜனத்தை விலக்கவில்லை. என்பது உண்மை. ஆயினும், எல்லாரும் மாமிச போஜனம் செய்யவேண்டும் என நிர்ப்பந்திக்கவில்லை. இஸ்லாம் மதம் மாமிசங்களிலும் கூட சில குறிப்பிட்ட மாமிசங்களையே புசிக்க அனுமதித்திருக்கிறது. சகலவிதமான மாமிசங்களையும் புசிக்க அனுமதி கொடுக்கவுமில்லை. இதன் விதி விலக்குகளைக் கவனிக்கு மிடத்து இஸ்லாம் மதம் புகிக்க அனுமதித்துள்ள மாமிசங்களில் மனிதனது புற ஒழுக்கங்களையோ அக ஒழுக்கங்களையோ பாதிக்கத்தக்க அம்சங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மனிதனது எண்ணங்களையோ குணங்களையோ ஒழுக்கங்களையோ கெடுக்கக்கூடிய அம்சங்கள் நிறைந்துள்ள மாமிசங்களையும், மனிதனை நோய்க்கு உட் படுத்தக்கூடிய மாமிசங்களையும் புசிக்கவேண்டாம் என இஸ்லாம் மதம் விலக்கி இருப்பது அதன் சட்ட திட்டங்களிலிருந்து நன்கு தெரியதரும்.

எனவே, இஸ்லாம் மதம் அனுமதித்துள்ள ஒவ்வொரு மாமிசத்தையும் முஸ்லிம்கள் அருந்துவதில்லை. நம்முடைய இந்நாட்டிலும் கூட முஸ்லிம்கள் சில குறிப்பிட்ட பிராணிகளை மட்டிலுமே புசிக்கிறார்களேயன்றி இஸ்லாம் மதம் அனுமதித்துள்ள எல்லா மாமிசங்களையும் அவர்கள் தவறாமல் அருந்துவதாகத் தெரியவில்லை. ஆனால், இஸ்லாம் மதம் அனுமதித்துள்ளதை அருவருப்பாக எண்ணவும்

கூடாது, அவ்வாறான மாமிசங்களை உண்பவர்களைக் கேவலமாக நடத்தவும் கூடாது என்பதுதான் இஸ்லாம் மதச் சட்டம்.

மேலும், இந்நாட்டிலுள்ள ஹிந்து மதம் யக்ஞம் செய்து மாமிசத்தை அருந்த அனுமதித்திருப்பதுபோல இஸ்லாம் மதமும் மாமிசத்தை அருந்துவதற்குச் சிற்சில விதிவிலக்குகளை ஏற்படுத்தி இருக்கிறது. மாமிசத்தை அருந்த அனுமதித்த இஸ்லாம் மதம் அதன் எலும்புகளையோ பட்டை நரம்புகளையோ, உதிரத்தையோ அருந்த இடமளிக்கவில்லை. அதிலுள்ள கழலைகள் நகங்கள் முதலியவைகளையும் விலக்கி இருக்கிறது. ஆண் குறியை அருந்த வேண்டாமெனத் தடுத்திருக்கிறது. தானாகச்செத்த பிராணி, குறல்வளை நெறிந்து செத்தது, ஒன்றுக் கொன்று முட்டிக்கொண்டு செத்தது, அடிபட்டுச் செத்தது முதலிய பிராணிகளை இஸ்லாம் மதம் புசிக்க அனுமதிக்கவில்லை. ஏனெனில், இவைகளின் உடம்பிலுள்ள உதிரங்கள் வெளியேற்றப்படவில்லை. எனவே, உதிரத்தை வெளியேற்றுவதற்கு அதினும், உடம்பிலுள்ள உதிரம் முழுவதும் பூரணமாக வெளியேறுவதற்காகச் சில குறிப்பிட்ட நரம்புகள் சில குறிப்பிட்ட முறையில் தண்டிக்கப்படவேண்டும். அவ்வாறு தண்டிக்கப்பட்டால்தான் உதிரம் முழுவதும் வெளியேறும். இவ்வாறு தண்டிக்கப்படும் போது சில குறிப்பிட்ட பதங்களைக் கூறவேண்டும். இவ்விதம் செய்வதிலும் கூட தெய்வ பக்தியையும், தெய்வ ஆராதனையையும் முக்கியமாகக் கொள்ளவேண்டிய திருக்கிறது. இவ்விதமான விதி விலக்குகளைப் பூரணமாக அனுஷ்டித்த பிறகு அம்மாமிசங்களில் மனித தேகத்

திற்கு நன்மை செய்யக் கூடிய பாகங்கள் மட்டிலுமே மாமிசத்தில் எஞ்சி இருக்கின்றன. ஆதலால், முஸ்லிம்கள் அருந்தும் மாமிசங்களில் சாஸ்திர ரீதிப்படி, தற்காலமுள்ள நவீன லயின்ஸ் சட்டப்படி மனிதனுக்கு தீமை செய்யும் பாகங்கள் நீக்கப்பட்டு நன்மை செய்யக் கூடியவைகள் மட்டிலுமே அடங்கி இருக்கின்றன என்பதை ஜீவகாருண்ய வர்க்கத்தார் உணருவார்களாக.

மேலும், இஸ்லாம் மதம் ஏழை பணக்காரர் ஆகிய யாவருக்கும் இதமே செய்வதால் இவ்விதமான மாமிசங்களை அருந்த ஏழைகளுக்கும் சந்தர்ப்பமளித்திருக்கின்றது. எவ்வாறெனில், வருஷந்தோறும் இயல்புள்ளவர் குர்பானி கொடுப்பதால், அக்குர்பானியின் மாமிசத்தில் ஒரு பாகத்தை ஏழை எளியாருக்கும், மற்றொரு பாகத்தை பந்துக்களுக்கும், இன்னொரு பாகத்தை சொந்த உபயோகத்திற்கும் வைத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறது. உண்மையில் குர்பானி கொடுக்கும் முஸ்லிம்கள் ஏழை எளியாருக்கு அதன் மாமிசத்தைப் பங்கு வைத்துக் கொடுக்காமல் இருப்பதில்லை. சில முஸ்லிம்கள் தங்கள் மீது விதியாயுள்ள குர்பானியுடன், அதிகப்படியாக நபிலான குர்பானிகளையும், ஏழைகளுக்கு விநியோகம் செய்வதற்கென்றே அறுக்கின்றனர். இவ்விதமுறையில் முஸ்லிம்கள் குறைந்த பக்ஷம் வருஷத்தில் ஒரு முறையேனும் மாமிசத்தை அருந்துகின்றனர் என்றுங் கூறலாம். ஏனெனில், உலகத்திலுள்ள உணவுப்பொருள்களில் ருசியிலும் சத்திலும் மாமிசம் முதல்தரமானதாகவும், சாக பக்ஷணத்தையே புசிக்கிற சில குறிப்பிட்ட ஜனங்களைத் தவிர, ஏனைய எல்லா மனிதர்களாலும் பெரிதும் விரும்பத்தக்க

உணவுப் பொருளாகவுமிருப்பதால் அதற்கு மற்றைய பொருள்களைப் பார்க்கினும் சிறிது அதிக விலையுமிருப்பதால் எல்லாருக்கும் அதனை எளிதில் அருந்தச் சாத்தியப்படாது. ஆதலால், அதனை ஏழைகளும் எளிதில் அருந்த வசதி இருக்கும் பொருட்டு இஸ்லாம் மதம் குர்பானியின் மூலம் அதனை அருந்த ஏழைகளுக்கும் சந்தர்ப்பமளித்திருக்கிறது.

திருமக்காவின் சரித்திரம்

முஸ்லிம்களுக்கு புண்ய க்ஷேத்திரமாக உள்ள இடங்கள் இவ்வுலகில் மூன்று இடங்கள் தாம். ஒருவர் க்ஷேத்திர யாத்திரைக்கெனப் புறப்படுவதாயின் இம்மூன்று இடங்களுக்குத்தான் இஸ்லாம் மத தர்மப்படி செல்லலாம். அதிலும், இம்மூன்று இடங்களிலும் டவுனைப் பார்க்க வேண்டுமென்ற நிர்ணயமிருக்கக்கூடாது. இங்குள்ள மஸ்ஜிதுகளைத் தரிசிக்க வேண்டும் என்ற நிர்ணயமிருக்க வேண்டும். ஹஜ்ஜுக் கடமையில் திருமக்கா சென்று, அங்குள்ள மஸ்ஜிதை தரிசிக்க வேண்டிய கடமை இருப்பதால் அப்புண்ணிய க்ஷேத்திரத்தைக் குறித்துச் சிறிது விபரிப்பது அவசியமாகும்.

திருமக்கா என்பது இஸ்லாம் மதத்தின் திருநபியாகிய முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிறந்த ஸ்தலம். சுமார் 53 வயது வரையில் அந்த ஸ்தலம்தான் அம்மாமசரின் வாசஸ்தலமாகவுமிருந்தது. அல்லாமலும், அவர்களது மூல பிதாவான ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களும், அவர்களது அன்னை பீபீ ஹாஜரா அவர்களும் இறைவனது கட்டளைப்

படி இப்ராஹீம் (அலை) அவர்களால் இங்கு குடியேற்றப்பட்டார்கள். இதன் விபரம் வருமாறு :—

ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களது குடியேறுகை

ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைவனது சித்தத்திற்கு இம்மியளவும் மாறுக நடக்காத பெரியார். அவனது முர்ஸலான நபிமார்களில் ஒருவர். உலுல்அள்ம் என்ற நபிமார்களில் இவர்களும் சேர்ந்தவர்கள். இறைவனுக்காக சகலவிதமான தியாகங்களையும் செய்யத் தயங்காதவர்கள். தமது ஜன்ம பூமியான பாபில் பிரதேசத்தை விட்டு, சன்மார்க்கத்திற்காக குடும்ப சகிதமாக வெளி நாடு சென்றவர்கள். ஆனால், இவர்களுக்கு வெகு காலம்வரை சந்தான விருத்தி இல்லாதிருந்தது. தமக்கு பின்னைய சந்ததி வேண்டும் என இறைவனிடம் இவர்கள் பல முறை பிரார்த்தனைகளைச் செய்ததுண்டு. வானத்திலுள்ள நக்ஷத்திரங்களை எண்ணுவதானாலும் எண்ணி முடித்து விடலாம், உமது சந்ததியினரை எண்ணி முடித்துவிட முடியாது. அந்த அளவிற்கு ஏராளமான ஜனங்கள் உமது சந்ததியினராக இருப்பார்கள். உமக்கும் புத்திரப்பேறு உண்டு. வருந்தேல் என்பதாக இறைவன் அப்பெரியாருக்கு அறிவிப்பது வழக்கம். ஆயினும், வெகு காலம்வரை புத்திரப் பேறு இல்லாமலே இருந்தார்கள்.

இவ்வித நிலைமையில் இப்ராஹீம் (அலை) அவர்கள் எகிப்து தேசம் சென்றார்கள். அங்குள்ள அரசன் இப்ராஹீம் நபி அவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் மேன்மையையும் உணர்ந்து தக்க மரியாதை செய்ததுடன், அவரு

டைய மனைவியான பீபீ ஸாராவிடம் இருந்து வளரவும் நற்குண நல்லொழுக்கத்தைப் பழகவும், வேண்டுமென்ற எண்ணத்தில் அவருக்குப் பணிப்பெண்ணாக இருக்கட்டும் என்று கூறி தனது புதல்வியை அளித்ததுடன், அவ்வம்மையார் இஷ்டப்பட்டவருக்கு இப்பெண்ணை மணம் செய்விக்கவும் அனுமதி கொடுத்து, அவர்களுடன் அனுப்பினர். தமது கணவர் புத்திரப் பேறில்லாததால் கவலையடைவதை யுணர்ந்த பீபீ ஸாரா அவர்கள் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட ஹாஜராவை தமது மனுளருக்கே விவாகம் செய்வித்து ஏக குடும்பமாக இருந்து வந்தனர். சின்னாட்கள் சென்ற பிறகு, பீபீ ஹாஜரா அவர்கள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். தமது பிரார்த்தனையை இறைவன் செவியேற்றான் என்ற கருத்தில் இஸ்மாயீல்" என்பதாக ஹஜ்றத் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் அம்மகவுக்குத் திருநாமமிட்டுச் சந்தோஷமாக இருந்தார்கள்.

இதற்குள்ளாக இறைவன் ஹஜ்றத் இப்ராஹீம (அலை) அவர்களைச் சோதிக்க விரும்பி அவருடைய மைந்தரையும், அம்மைந்தரை ஈன்ற பீபீ ஹாஜராவையும் பாரான் என்ற வனத்தில் விட்டு விடும்படியாகக் கட்டளை யிட்டார். தமது 86 எண்பத்தாறுவது வயதில் பிறந்த புத்திரர்மீதும், தமக்கு புத்திர சந்தானமில்லாதிருந்த கவலையை மாற்றிப் புத்திரனைப் பெற்றெடுத்த தமது மனைவி ஹாஜராமீதும் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அதிக அன்பிருந்தபோதினும், இறைவனுக்காக சகல தியாகங்களையும் புரிந்த இவர்கள் அவனது கட்டளைக்கு இணங்க இவ்விருவரையும் பாரன் வனத்திற்கழைத்து வந்து விட்டுச் சென்

ரூர்கள். இறைவனது கட்டளைப்படி தன்னையும் தன் மைந்தரையும் தனது மனைவர் இவ்வனத்தில் விட்டுச்செல்ல முடிவு செய்ததை யுணர்ந்த பீபீ ஹாஜரா (றலி) அவர்களும் மிகச்சந்தோஷமாக வன வாசத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவ்விதமாக ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் பாரான் வனத்தில் குடியேற்றப்பட்டார்கள்.

திருமக்காவின் உற்பத்தி

பாரான் வனம் என்பது விவசாயத்திற்குத் தகுதி இல்லாத மலைப்பிரதேசம். கற்களுள்ள மலைகள் அடர்ந்ததும், மலைக் கணவாய்கள் உள்ளதும், மலையின் ஓடைகள் நிறைந்ததுமான நாடு. அங்கு விருக்ஷங்களோ, நீரோடைகளோ இல்லை. மனித சஞ்சார மற்ற இடமாக இருந்ததால் அங்கு கொடிய காட்டு மிருகங்கள் வசித்து வந்தன. இவ்வனத்தில் ஹஜ்றத் பீபீஹாஜரா (றலி) அவர்கள் தமது ஏகப் புதல்வரான குழந்தை இஸ்மாயீல் (அலை) அவர்களை வளர்த்து வந்தார்கள், சின்னட் சென்ற பின் தமது கணவர் தம்மிடம் கொடுத்துச் சென்ற சொற்ப உணவும் ஜலமும் தீர்ந்தன. சாப்பாட்டிற்கு வழியில்லை. பயிரின் கொடுமையால் அமுதண்ணும் கைக்குழந்தைக்கு அமுதூட்ட தமது ஸ்தனபாரத்தில் அமுதமில்லை. என்செய்வது, இறைவனிஷ்டத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்த அன்னை ஹாஜரா அவ்விடத்தை விட்டுச் செல்லவும் இஷ்டப்படவில்லை. ஆதலால், ஆங்கு ஓரிடத்தில் தமது பாலகனைப் படுக்க வைத்து விடடு, ஜலம் அகப்படுமா என்று பார்க்க பக்கத்திலுள்ள ஒரு குன்றுக்குச் சென்றார்கள். அதற்குள் புலிச் சப்தம் கேட்டது. பாலகனைப் பார்க்கத்

திரும்பி வேகமாக வந்தார்கள். புலியைக் காணவில்லை. மறுபடியும் வேறொரு குன்றிற்குச் சென்றார்கள். அப் பொழுதும் புலிச்சப்தம் கேட்டது. திரும்ப வேகமாக வந்தார்கள். இவ்விதமாக அன்னை ஹாஜரா (றலி) அவர் அவ்விரு குன்றுகளுக்கு மிடையில் ஏழு முறை சென்று வந்தார்கள்.

தமது அருமைக் குழந்தை பசிதாகவிடாயால் துடித் ததின்பேரில் பூமியில் கால் உராய்ந்தது. அந்த இடத்தி லிருந்து இறைவன் ஒரு ஊற்றை உற்பத்தி செய்தான். தமது புதல்வரின் கால்மாட்டில் தோன்றிய ஊற்று ஜலம் ஓடிவிடாதபடி அதனைச் சுற்றிலும் அணைகட்டி ஜம்ஜம் என்பதாக அதனை நோக்கிக் கூறினார்கள். இந்த ஜலத் தைத்தான் ஹஜ்றத் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களும், அன்னை ஹாஜரா (றலி) அவர்களும் உணவாகவும், பான மாகவும், மருந்தாகவும் உபயோகித்து வாழ்ந்து வந்தார் கள். இந்த ஊற்று ஜலத்தில் இம்மூவகைத் தன்மைகளையும் இறைவன் அமைத்துளான்.

இங்கு ஜல ஊற்று உண்டானதால் புறுக்களும் இதர பட்சிக் கூட்டங்களும் இப்பிரதேசத்தில் வசிக்க வாரம்பித் தன. எமன் தேசத்திலிருந்து ஷாம் தேசத்திற்கும், ஷாம் தேசத்திலிருந்து எமன் தேசத்திற்கும் செல்லும் வியாபாரத் தாவளக்காரர்கள் பக்ஷிக் கூட்டங்கள் வாழ்வதை யுணர்ந்து இங்கு சமீபத்தில் ஜலமிருக்கலாம் என நினைத்து இப்பிர தேசத்தில் பல இடங்களையும் தேடிப் பார்த்து இறுதியாக ஜம்ஜம் ஜலம் இருக்கு மிடத்தைக் கண்டு பிடித்து இங்கு வந்து தங்கவாரம்பித்தனர். அன்னை ஹாஜரா (றலி) அவர்கள் அங்கு தங்க விரும்புபவர்களுக்கு தங்க இட

மளித்ததுடன், அந்த ஜலத்தை உபயோகிக்கவும் அனுமதி கொடுத்தார்கள். ஆனால், அந்த நீர் ஊற்றின் சுதந்திரப்பாத்தியதையை மட்டிலும் விட்டுக் கொடுக்கவில்லை. இவ்விதமாக ஜனங்கள் இடத்தில் ஒருவருக்குப் பின் ஒருவராகக் குடியேறத் தலைப்பட்டனர். இவ்வூருக்கு ஆரம்பத்தில் பக்கத் என்ற பெயர் ஏற்பட்டு, இப்பால் மக்கா என்ற பெயராக அமைந்தது.

அன்று அன்னை ஹாஜரா (றலி) அவர்கள் தமது சுதனுக்கு ஜலம்தேடிச் சென்ற குன்றுகள் தாம் இன்று ஸபா மர்வா என்ற பெயரால் இருந்து வருகின்றன. அன்று அவர்கள் ஏழு முறை அவைகளைச் சுற்றி வந்ததன் ஞாபகார்த்த மாகத்தான் இன்று ஹாஜிகள் ஸபா, மர்வாவிற் கிடையில் ஏழு முறை ஸஈ செய்து, ஒரு பெண்பால் ஆண்டவனின் திருப்திக்காக, அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டதை நினைவு கூர்ந்து, இறைவனுக்காக தியாகம் செய்வோர் எவ்விதமாக இருக்க வேண்டும் என்ற உண்மையைக்கற்றுக் கொள்கின்றனர்.

திருகஃபாவின் வரலாறு

ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் இந்த ஜலத்தை அருந்தி வளர்ந்து வரும் தருவாயில் இங்குள்ள தமது ஆலயத்தைக் கட்டும்படியாக இறைவன் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கட்டளையிட்டான். அவன் கட்டளை யிட்டுள்ள ஆலயம் இந்த ஊற்றுக்குப் பக்கத்தில் தானிருந்தது. இவர்கள் குடியேறிய காலத்தில்

இங்கு ஒரு ஆலயம் இருந்தது என்பதற்குரிய அடையாளங்களிருந்ததை இவர்கள் கவனிக்கவில்லை. அச்சமயம் அவ்வூற்றுக்குப் பக்கத்தில் குறிப்பிட்ட ஓரளவிற்குச் சிறிதுமேடாக இருந்தது. ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டு அவ்வாலயத்தைக் கட்டுவதற்காக அவ்விடத்திற்கு இப்ராஹீம் (அலை) அவர்கள் வந்தபோதுதான் அது ஒரு வணக்க ஸ்தலமாக இருந்தது என்பதை உணர்ந்தனர். எனவே, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அம்மேட்டின்மீது இறைவன் குறிப்பிட்ட இடத்தில் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினர்கள். ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தமது தந்தைக்கு உதவியாக இருந்து கற்களையும் இதர சாமான்களையும் எடுத்துக் கொடுத்து வந்தார்கள். அதாவது இக்கட்டிட வேலையில் சித்து ஆள் வேலையை ஹஜ்றத் இஸ்மாயில் (அலை) அவர்களும், கொத்து வேலையை ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களும் செய்து முடித்தார்கள்.

இதற்கு முன் இதே இடத்தில்தான் ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்கள் இறைவனை வணங்குவதற்காக ஒரு ஆலயத்தை நிர்மாணித்தார்கள். அப்புறம் ஹஜ்றத் நூஹ் (அலை) அவர்கள் காலத்தில் தோன்றிய மகா பிரளயத்தில் அவ்வாலயத்தின் கட்டிடம் இடிந்து தரை மட்டமாகி விட்டது. மனித சஞ்சாரமில்லாமலாகி விட்டதால் அக்கட்டிடம் மறுபடியும் கட்டப்படாமல் வெகு காலம் வரை இருந்தது. இவ்விடத்திய ஆலயம் மறுபடியும் கட்டப்பட வேண்டும், இங்கு மறுபடியும் ஜனங்கள் கூட வேண்டும் என்ற நாட்டம் இறைவனுக்கேற்பட்டதால், ஹஜ்றத் இப்

ராஹீம் (அலை) அவர்களது சந்ததியினரை இங்கு குடியேற்றவும், அச்சந்ததியினர் மூலமாக இவ்வாலயம் நிர்வகிக்கப்படவும் வேண்டும் என்ற நோக்கத்தில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு, அவரது புதல்வரையும், அப்புதல்வரை ஈன்றெடுத்த அன்னை ஹாஜரா (றலி) அவர்களையும் இங்கு குடியேற்றி விடும்படி கட்டளை யிட்டான்.

இக்கட்டளை வெளித் தோற்றத்திற்கு மிகப் பெரிய சோதனையாகவே இருந்தது. இதன் உட்கருத்து ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் கூடத் தெரியாமலிருந்திருக்கலாம். அதனால் அவர்கள் இதனைப் பெருஞ் சோதனையாகக் கருதியும் இருக்கக் கூடும், ஆயினும், இறைவன் கட்டளைக்கு முற்றிலும் தலை சாய்க்கும் இக்குடும்பத்தினர் இச்சோதனைக்குக் கீழ்ப் படிந்தனர். ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களும் தமது குடும்பத்தினரை இங்கு குடியேற்றிச் சென்றபோது "நாயனே! என் சந்ததியினரில் இங்கு குடியேற்றி இருக்கிறேன். இவ்விடம் விவசாயத்திற்குத் தகுதி இல்லாத ஒரு பள்ளத்தாக்கு, இங்கு உனது ஆலயம் மட்டிலுமிருக்கிறது. இதனை ஒரு பட்டணமாக ஆக்குவாயாக. இங்கு வசிப்பவர்களுக்கு கனிவர்க்கங்களை அளிப்பாயாக. எங்களுடைய இவ்வணக்கத்தை அங்கீகரித்து, உனக்குக்கீழ்ப்படிந்த அடியார்களாக முஸ்லிம்களாக எங்களை ஏற்றுக்கொள்வாயாக. இங்குள்ளவர்களுக்கு உனது வேதக் கட்டளைகளை ஓதிக் காண்பித்து, இவர்களுக்கு வேதத்தையும் விவேகத்தையும் கற்பித்து, இவர்களைச் சுத்தப் படுத்தக் கூடிய உனது தீர்க்கதரிசியை இவர்களிலிருந்து உற்பத்தி செய்வாயாக" என்பதுபோன்ற பல பிராத்

தனைகளைப் புரிந்தார்கள். இவ்வாறு செய்வது இறைவனது நோக்கமாகவு மிருந்தது. இப்ராஹீம் (அலை) அவர்களது மேற்கண்ட பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்பட்டன.

இவ்வாறு இவ்விரு நபிமார்களாலும் புதுப்பித்துக் கட்டப்பட்ட இவ்வாலயம் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களாலும் அவர்களது சந்ததியினராலும் இன்றுவரை மேற் பார்க்கப்பட்டும் நிர்வகிக்கப்பட்டு மிருக்கிறது. இடையில் சில காலம் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர் களுக்குப் பெண் கொடுத்த கோத்திரத்தைச் சேர்ந்த வர்கள் இதனை நிர்வகித்து வந்தனர். இவர்களது நிர்வாக காலத்தில்தான் இவ்வாலயத்தில் விக்கிரகங்கள் வைக்கப் பட்டன. இக்கோத்திரத்தைச் சேர்ந்த அம்றுப்னுல் லுஹ்யி என்பவர்தான் இதில் முதல் முதலாக விக்கிர கத்தை வைத்தார்.

இவர் ஒரு காரியார்த்தமாக திருமக்காவிலிருந்து ஷாம் தேசம் சென்றிருந்தபோது, அங்குள்ள சில வகுப்பினர் உருவச் சிலையை வைத்து வணங்குவதைப் பார்த்தார். இவ்வணக்கம் இவருக்குப் புதுமையாகத் தோன்றிற்று. இதனைக் குறித்து அவர்களை விசாரித்ததில் அவர்கள் சகல விபரங்களையும கூறினர். மழை இல்லாத காலத்தில் இச்சிலைகளிடம் வந்து வணங்கி மழைக்காகப் பிராத்தனை செய்தால் உடனே மழை பொழியும், பகைவர்கள் பயமேற் படும் காலத்தில் இச்சிலைகளை வணங்கிப் பிராத்தித்தால் உடனே வெற்றிகிடைக்கும் என்று அவர்களது பிரார்த் தனை முறைகளைக் கூறினர். திருமக்கா மழை இல்லாத

பிரதேசமாக இருந்தது. அத்துடன் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களது சந்ததியினருக்கும், அவரது கோத்திரத்தாருக்கும் இவ்வாலய நிர்வாக உரிமை சம்பந்தமாக மனஸ்தாபமுமிருந்தது. ஆதலால், இவ்வுருவச் சிலைகளை அங்கு கொண்டுபோய் வைத்து வணங்கினால் தங்களுக்கு வெற்றி கிடைப்பதற்கு மிக ஹேதுவாயிற்று என்றெண்ணி, அங்குள்ள ஹுபல் என்ற சிலையை விலைக்கு வாங்கி திருகஃபாவினுள் இடது பாரிசத்தில் வைத்தார். இதனை வணங்குவதால் ஏற்படும் லாபங்களை அங்குள்ளவர்களுக்குக் கூறி யாவரும் அதனை வணங்கவேண்டும் என்றும் திட்டம் செய்தார். அங்குள்ள ஜனங்கள் தங்கள் தலைவரது கட்டளைக்குக் கீழ்ப் படிந்து அவ்விக்கிரகத்தை வணங்கத் தொடங்கினர். இவ்விதமான ஏக நாயனை வணங்குவதற்கென்று மனித வர்க்கத்தின் மூலபிதாவான ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தில் விக்கிரகம் வைக்கப்பட்டு, விக்கிர ஆராதனை செய்யப்பட ஆரம்பமாயிற்று.

அப்புறம் சில தலை முறைகள்வரை இதே கோத்திரத்தார் இவ்வாலயத்தை நிர்வகித்து வந்ததால் இங்கு விக்கிரக ஆராதனை சிறுகச் சிறுகப் பெருகிற்று. பல விக்கிரகங்களும் நாளடைவில் புதிதாக வைக்கப்பட்டன. இறுதியாக கஃபாவைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கான விக்கிரகங்கள் வைக்கப்பட்டன. திருமக்காவிலும், அதனைச் சார்ந்த இடங்களிலும், அறப் நாட்டிலும் விக்கிரக ஆராதனை பெருகிற்று. அப்புறம் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களது சந்ததியினர் இக்கோத்திரத்தார் மீது யுத்தம்

செய்து இவர்களைத் கோற்கடித்து திருமக்காவின் அதி காரத்தையும், கஃபாவின் நிர்வாக உரிமையையும் கைப் பற்றினர். ஆயினும், ஜனங்களிடம் விக்கிரக ஆராதனை உணர்ச்சி வேரூன்றிவிட்டது.

அத்தேவாலயம் நிர்வாகப் பொருப்பு மட்டிலும் ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) அவர்களது வம்சத்தில் குறைஷிக் கோத்திரத்தினிடமிருந்தாலும், அவ்வம்சத்தைச் சேர்ந்த இதர கோத்திரங்களுக் கெல்லாம் பொதுவானதாக இருந்தமையானும், அவர்களிடம் விக்கிரக ஆராதனை உணர்ச்சி வலுத்திருந்ததாலும் குறைஷியர் விக்கிரக ஆராதனையை எதிர்க்கவோ தடுக்கவோ இல்லை. ஆதலால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலும் கூட திருகஃபாவில் விக்கிரக ஆராதனை நடைபெற்று வந்தது.

அப்புறம் அவர்களுக்கு நபிப் பதவி கிடைத்த பிறகு விக்கிரக ஆராதனையைக் கண்டித்து சன்மார்க்கப் பிரசாரம் செய்து வந்தார்கள். அங்குள்ள முஷ்ரிக்குகள் இப்பிரசாரத்தைப் பலமாக எதிர்த்தனர். இறுதியாகப் பல யுத்தங்களும் செய்யவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. முடிவாக ஹிஜ்ரீ 8-ம் வருஷத்தில் திருமக்கா நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கைப்பற்றப்பட்டது. முஷ்ரிக்குகள் அடக்கப்பட்டனர். திருகஃபாவில் இருந்த நூற்றுக் கணக்கான விக்கிரகங்கள் அகற்றப்பட்டன. ஹஜ்றத் ஆதம் (அலை), ஹஜ்றத் இப்ராஹீம் (அலை), ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை) ஆகியவர்களால் ஏக நாயன வணங்குவதற்கெனக் கட்டப்பட்ட இத்தேவாலயம் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களால் சுத்தப்படுத்தப்பட்டு, மறுபடி ஏக தெய்வ வணக்கத்திற்கென்று ஒதுக்கப்பட்டது.

அம்றுப்னு லுஹய்யியின் காலத்தில் திருமக்காவில் தோன்றிய விக்கிரஹ ஆராதனை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அறுபது பிராயத்திற்குப் பிறகு நாயகம் (ஸல்) அவர்களால் ஒழிக்கப்பட்டது. அன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் சுத்தமடைந்த இத் தேவாலயம் இன்றுங் கூட அதன் பரிசுத்தத் தன்மை குலையாமல் புனிதமாக இருந்து வருகிறது. அன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் இதனை நிர்வகிக்கும் பொறுப்பு எவரிடம் ஒப்புவிக்கப் பட்டதோ அவரது வம்சத்தினர்தான் இன்றும் அதனை நிர்வகித்து வருகின்றனர். இன்ஷா அல்லாஹ் இனி கியாமத்து நாள்வரை இதன் நிர்வாகம் அவ்வம்சத்தினரிடமே இருந்துவரும்.

உலகில் ஏற்பட்ட பல மாறுதல்களின் பயனாக முஸ்லிம்களிடமும் கிலாபத் ஆட்சிமாறி, முடியாட்சி ஏற்பட்டது. முஸ்லிம் அரசர்களும் பல காலத்தில் மாறி மாறி வந்தனர். எத்தனையோ புரட்சிகளும் சதிகளும் நிகழ்ந்தன. பெயருக்கு மாத்திரம் கிலாபத் பதவி இருந்து வந்தது. இதுவும் கூட சில சமயங்களில் இல்லாமலாயிற்று. ஆயினும், திருமக்காவிலுள்ள இத்தேவாலயத்தின் நிர்வாகப் பொருப்புமட்டிலும் அவ்வம்சத்தினரைவிட்டு மாறவில்லை. அதன் நிர்வாக விஷயத்தில் எம் முஸ்லிம் மன்னரும் தலையிடவுமில்லை.

ஆனல், அவ்வாலயத்தின் கட்டிடம் மட்டிலும் அப் புறம் பலமுறை புதுப்பித்துக் கட்டப்பட்டது. அவ்வால யத்தைச் சுற்றிலுமிருந்த பல இடங்கள் அவ்வப்போது ஜனசவுகரியத்திற்குத் தக்கவாறு அவ்வாலயத்தின் கம் பௌண்டுக்குள் சேர்க்கப்பட்டன. மார்க்க பக்தி நிறைந்த மக்கள் இக்கட்டிடத்திற்கும் இதர செலவுகளுக்கும் லக்ஷக் கணக்கான திரவியங்களைக் கொடுத்து இதனை விசால மானதாக ஆக்கி இருக்கின்றனர். தற்போது இவ்வால யத்தின் கம்பௌண்டு கட்டிடத்தில் மட்டிலும் சுமார் அறுபத்து மூன்று தலைவாசல்களிருந்து வருகிறது. ஏக காலத்தில் பல லக்ஷம் புண்ணியஸ்தர்கள் இங்கு தொழுவ தற்குத் தக்கவாறு அவ்வளவு விசாலமாக இவ்வாலயத்தின் கம்பௌண்டு கட்டிடம் இருந்து வருகிறது.

தஃலீமுல் இஸ்லாம் ஹனபிய்யா

மூற்றுப்பெற்றது.

லக்நௌ மௌலானு அப்துல்ஹை மர்ஹூம் (றஹ்) அவர்கள்

குத்பா தர்ஜமா

உத்தமபாளையம் ஹாஜி மௌலவி
S. S. முஹம்மது அப்துல் காதர் சாஹிபு பாக்கவீ
அவர்களால் தமிழில மொழிபெயர்க்கப்பட்டது.

இதன் விலை ரூ. 3 0 0

ஹாஜி மீரான் பிரஸ் & புக் டிபோ,
15, பள்ளப்பன் தெரு, திருவல்லிக்கேணி, மதரஸ்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

தஃலீமுல் இஸ்லாம்



அனுபந்தம் நெ. 1

ஹஜ்ஜில் ஓத வேண்டிய துஆக்கள்

اَللّٰهُمَّ اجْعَلْ لِيْ بِهَا قَرَارًا وَارْزُقْنِيْ فِيْهَا رِزْقًا حَلَالًا

வெளியிலிருந்து வரும் ஹாஜிகள் திருமக்காவின் வீடுகளைக் கண்டவுடன்,

அல்லாஹும்மஜ்அல்லீ பிஹா கருறன், வர்ஜுக்னீ பீஹா ரிஜ்கன் ஹலாலன் என்று ஓத வேண்டும்.

"நாயனே, இங்கு எனக்கு நிலையை ஏற்படுத்துவாயாக! இன்னும் ஹலாலான உணவை எனக்கு அதில் தந்தருளுவாயாக" என்பது இதன் பொருள்.

திருமக்காவினுள் பிரவேசிக்கும்போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا الْحَرَمَ حَرَمُكَ وَالْبَلَدَ بَلَدُكَ وَالْاَمْنَ
اَمْنُكَ وَالْعَبْدَ عَبْدُكَ جِئْتُكَ مِنْ بِلَادٍ بَعِيْدَةٍ بِذُنُوْبٍ
كَثِيْرَةٍ وَاَعْمَالٍ سَيِّئَةٍ وَاَسْاَلُكَ مَسْاَلَةَ الْمُضْطَرِّيْنَ اِلَيْكَ
الْمُشْفِقِيْنَ مِنْ عَذَابِكَ اَنْ تُسْتَقْبِلَنِيْ بِمَحْضِ عَفْوِكَ وَاَنْ
تُدْخِلَنِيْ فِيْ فَسِيْحِ جَنَّتِكَ جَنَّتِ النَّعِيْمِ اَللّٰهُمَّ اِنَّ هٰذَا حَرَمُكَ
وَحَرَمُ رَسُوْلِكَ فَحَرِّمْ لَحْمِيْ وَدَمِيْ وَعَظْمِيْ عَلَى النَّارِ اَللّٰهُمَّ
اٰمِنِّيْ مِنْ عَذَابِكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ اَسْاَلُكَ بِاَنَّكَ اَنْتَ الَّذِيْ
لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ اَنْ تُصَلِّيَ وَتُسَلِّمَ عَلٰى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّمَ تَسْلِيْمًا كَثِيْرًا اَبَدًا

அல்லாஹும்ம இன்ன ஹாதல் ஹறம ஹறமுக. வல் பலத பலதுக்க. வல்அம்ன அம்னுக. வல்அப்த அப்துக. ஜிஉதுக மின் பிலாதின் பாஇதத்தின் பிதுனூபின் கதீரத்தின் வ அஃமா லின் ஸெய்யிஅத்தின். வ அஸ்அலுக்க மஸ்அலத்தல் முல்தர்ரீன இலைக்க அல்முஷ்பிக்கீன மின்அதாபிக்க அன் தஸ்தக்பிலனீ பிமஹ்லி அப்விக்க வ அன்துத் கிலனீ பீ பஸீஹி ஜன்னத்திக ஜன்னத்தின்னஈம். அல்லாஹும்ம இன்னஹாதா ஹறமுக வஹறமு றஸூலிக பஹர்ரிம் லஹ்மீ வதமீ வ அல்மீ அலன்னர். அல்லாஹும்ம ஆமின்னீ மின் அதாபிக்க

யேள்ம தப்அது இபாதக. அஸ்அலுக பிஅன்னக அன்தல் லதீ லா இலாஹ இல்லா அன்தர் ரஹ்மானுர் ரஹீம். அன் துஸல்லிய வ துஸல்லிம அலா ஸெய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லம தஸ்லீமன் கதீரன் அபதா.

நாயனே! இந்த ஹறம் உனது ஹறம். இந்த நகரம் உனது நகரம். இந்த அமைதி உனது அமைதி. இந்த அடியான் உனது அடிமை. தூரமான ஊர்களிலிருந்து அதிகமான பாவங்களுடனும் தீய செய்கைகளுடனும் உன்னிடம் வந்திருக்கிறேன். உன்னிடத்தில் கெஞ்சிக் கேட்போரின் கேள்வியாகவும், உனது வேதனையைப் பயப்படுபவர்களின் கேள்வியாகவும், உனது மன்னிப்பிலும் மாத்திரம் என்னை ஏற்றுக்கொண்டு ஜன்னத்துன்னயீம் என்ற உனது மேலான சுவர்க்கத்தில் என்னைப் பிரவேசிக்கச் செய்வதை உன்னிடம் கேட்கின்றேன்.

நாயனே! இது உனது ஹறம். உனது றஸூலுடைய ஹறம். எனவே, எனது தசையையும் எனது உதிரத்தையும் எனது எலும்பையும் நரக நெருப்புக்கு ஹறுமாக்கிவை.

நாயனே! உனது அடியார்களை நீ எழுப்புகிற நாளில் உனது வேதனையை விட்டு எனக்கு அபயமளிப்பாயாக. நீதான் றஹ்மானுகவும் றஹீமாகவும் இருக்கின்றாய். வணக்கத்திற்குரியவன் உன்னையல்லாது வேறுயாரும் இல்லை என்பதை வலீலாவாகக்கொண்டு, எங்கள் நாயகம் முஹம்மது அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் ஸஹாபிகள் மீதும் நீ ஸலாத்தும் ஸலாமும் ஏராளமாக எப்பொழுதும் சொல்லுவதை உன்னிடம் கேட்கின்றேன்.

கஃபா ஷரீபைக் கண்ணால் காணும்போது ஓதும் துஆ

திருகஃபாவை கண்ணால் கண்டவுடன் மூன்று முறை

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

அல்லாஹ் அக்பர் என்ற தக்பீரை மூன்று முறை ஓத வேண்டும். அப்புறம் அடியிற் கண்ட துஆவை ஓத வேண்டும்.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝ اَعُوْذُ بِرَبِّ الْبَيْتِ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ
وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَضِيْقِ الصَّدْرِ وَصَلَّى اللّٰهُ عَلٰى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّمَ اَللّٰهُمَّ زِدْ بَيْتَكَ تَشْرِيْفًا
وَتَكْرِيْمًا وَتَعْظِيْمًا وَمَهَابَةً وَّرِفْعَةً وَّبِرًّا وَزِدْ يَا رَبِّ
مَنْ شَرَّفَهٗ وَعَظَّمَهٗ مِمَّنْ حَجَّهٗ وَاعْتَمَرَهٗ تَشْرِيْفًا وَّتَكْرِيْمًا
وَتَعْظِيْمًا وَمَهَابَةً وَّرِفْعَةً وَّبِرًّا

லா இலாஹ இல்லல்லாஹ் வஹ்தஹ் லா ஷரீகலஹ் லஹ்ல்முல்கு வலஹ்ல் ஹம்து வஹ்வ அலா குல்லி

ஷைஇன் கதீர். அஊது பிறப்பில்பைத்தி மினல்குப்ரி வல் பக்ரீ வமின் அதாபில்கப்ரீ வலீக்கிஸ்ஸத்ரீ வ ஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ அலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வஸல்லம அல்லாஹும்ம ஜித்பைத்தக்க தஷ்ரீபன் வ தக்ரீமன் வ தஃலீமன் வ மஹாபத்தன் வ ரிப்அத்தன் வ பிர்ரன் வஜித் யாறப்ப மன் ஷர்ரபஹு வ அள்ளமஹு மிம்மன் ஹஜ்ஜஹு வஃதமரஹு தஷ்ரீபன் வதக்ரீமன் வ தஃளீமன் வ மஹாபத்தன் வரிப்அத்தன் வ பிர்ரன்.

வனைக்கத்திற்குரியவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறுயாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை இல்லை. அவனுக்குத்தான் அரசாங்கம் உரியது. இன்னும் அவனுக்குத்தான் எல்லாப்புகழும் தகும். அவன் எல்லா வஸ்துவின் மீதும் ஆற்றலுள்ளவன். குப்ரையும் தரித்திரத்தையும் கப்றுடைய வேதனையையும், நெஞ்சின் நெருக்கத்தையும்விட்டு இவ்வீட்டின் எஜமானனிடம் காவல் தேடுகிறேன். எங்கள் நாயகம் முஹம்மது அவர்கள் மீதும் அவர்களது கிளையார் தோழர்கள்மீதும் அல்லாஹ் ஸலாத்தும் ஸலாமும் சொல்வானாக.

நாயனே! உனது வீட்டிற்கு சிறப்பையும் சங்கையையும், மகத்துவத்தையும், கம்பீரத்தையும், உயர்வையும், நன்மையையும் அதிகப்படுத்துவாயாக. இதனை ஹஜ்ஜுச் செய்து அல்லது உம்ராச் செய்து இதனைச் சிறப்பித்து சங்கை செய்து கண்ணியப்படுத்தியவருக்கு சிறப்பையும் சங்கையையும் கண்ணியத்தையும் பயங்கரத்தையும் நன்மையையும் அதிகப்படுத்துவாயாக.

தவாபு செய்வதன் நிய்யத்து

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ طَوَافَ بَيْتِكَ الْحَرَامِ فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ سَبْعَةَ اَشْوَاطٍ طَوَافَ الْحَجِّ

அல்லாஹும்ம இன்னீ உரீது தவாப பைத்திக்கல் ஹறமி. பயஸ்ஸிர்ஹுலீ வ தகப்பல்ஹு மின்னீ ஸப்அத்த அஷ்வாத்தின் தவாபல் ஹஜ்ஜி.

"நாயனே! உனது சங்கையான வீட்டை ஹஜ்ஜுடைய தவாபான ஏழு சுற்றுகளைச் செய்து தவாபு செய்ய நாடுகிறேன். அதனை எனக்குச் சுலபமாக்கிவைத்து என்னில் நின்றும் அங்கீகரிப்பாயாக" என்று நிய்யத்துச் சொல்லி ஹஜ்றுல் அஸ்வதை முத்தமிட்டு, தனது கையை உயர்த்தி

بِسْمِ اللّٰهِ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து (அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு ஆரம்பம் செய்கிறேன். அல்லாஹ் பெரியவன். அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் தகும்) என்று கூறி தவாபு செய்யவேண்டும். ஹஜ்ஜுக்கு தவாபு செய்தால் மேற் கண்ட மாதிரி சொல்லவேண்டும். உம்ரூவிற்கு தவாபு செய்வதாக இருந்தால், தவாபல் ஹஜ்ஜி என்பதற்கு பதிலாக தவாபல் உம்ரத்தி என்று கூற வேண்டும். ஊருக்குப் பயணமாகுவதாக இருந்தால், தவாபல்விதாஇ என்று கூறவேண்டும். நபிலான தவாபாக இருந்தால், தவாபன்னப்லி என்று கூற வேண்டும்.

முதலாவது ஷௌத்தில் ஒதும் துஆ

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللّٰهُمَّ اِيْمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ وَاِتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ وَحَبِيْبِكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ الدَّائِمَةَ فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வ லாஇலா ஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹௌல வலா குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அளீம். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். அல்லாஹும்ம ஈமானன் பிக்க, வதஸ்தீக்கன் பி கித்தாபிக்க, வ வபாஅன் பி அஹ்திக்க, வ இத்திபாஅன் லிஸுன்னத்தி நபிய்யிக்க வஹபீபிக்க முஹம்மதின் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம். அல்லாஹும்ம இன்னீ அஸ் அலுக்கல் அப்வ வல்ஆபியத்த வல் முஆபாத்தத் தாயிமத்த பித்தீனி வத்துன்யா வல்ஆகிரத்த வல்பௌஜ பில் ஜன்னத்தி வன்னஜாத்தி மினன்னார்.

அல்லாஹ் தூயவன் எல்லாப்புகழும் அல்லாஹ்விற்கே தகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை. அல்லாஹ் பெரியவன். உயர்வுள்ளவனும்

மகத்துவமுள்ளவனுமான அல்லாஹ்வின் உதவி இல்லாமல் பாபத்தைவிட்டுத் திரும்புவதுமில்லை. நன்மையைச்செய்யச் சக்தியுமில்லை. றஸூலில் (ஸல்) அவர்கள்மீது அல்லாஹுத் தஆலா ஸலாத்தும் ஸலாமும் சொல்வானாக.

நாயனே! உன்னை விசுவாசித்தவனாக, உனது வேதத்தை உண்மைப் படுத்திவைத்தவனாக, உன்னிடத்தில் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றியவனாக உனது நபியும் உனது ஹபீபுமான முஹம்மது (ஸல்) அவர்களது ஸுன்னத்தைப் பின்பற்றியவனாக இங்கு வந்திருக்கிறேன்.

நாயனே! சன்மார்க்கத்திலும் இம்மையிலும் மறுமையிலும் உன்னிடம் மன்னிப்பையும், சவுக்கியத்தையும், நிரந்தரமான கூமிப்பையும், சுவர்க்கத்தை வெற்றிக்கொள்வதையும் நரகத்தைவிட்டு விடுதலையடைவதையும் உன்னிடம் கேட்கின்றேன்.

ருக்னேயமானிக்கும் ஹஜ்றுல் அஸ்வதுக்கும் அதாவது தென்கிழக்கு மூலைக்கும் தென்மேற்கு மூலைக்கும் இடையில் வரும்போது ஒவ்வொரு சுற்றிலும்

رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ
وَاَدْخِلْنَا الْجَنَّةَ مَعَ الْاَبْرَارِ يَا عَزِيْزُ يَا غَفَّارُ يَا رَبَّ الْعَالَمِيْنَ،

றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார். வ அத்கில்னல் ஜன்னத்த மஅல் அப்ரார். யாஅஜீஸ், யாகப்பார். யாறப்பல் ஆலமீன்.

எங்கள் றப்பே எங்களுக்கு இம்மையிலும் நன்மையை நல்குவாயாக. இன்னும் மறுமையிலும் நன்மையை நல்குவாயாக. இன்னும் நல்லோர்களுடன் எங்களைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக. வல்லோனே, மன்னிப்போனே, அகிலத்தாரைப் பரிபக்குவப்படுத்துவோனே.

இரண்டாவது ஷௌத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا الْبَيْتَ بَيْتُكَ وَالْحَرَمَ حَرَمُكَ وَالْاَمْنَ اَمْنُكَ
وَالْعَبْدَ عَبْدُكَ وَاَنَا عَبْدُكَ وَابْنُ عَبْدِكَ وَهٰذَا مَقَامُ الْعَائِذِ
بِكَ مِنَ النَّارِ فَحَرِّمْ لُحُوْمَنَا وَبَشَرَتَنَا عَلَى النَّارِ اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيْنَا
الْاِيْمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ اِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَ
الْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ اَللّٰهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ
تَبْعَثُ عِبَادَكَ اَللّٰهُمَّ ارْزُقْنِيْ الْجَنَّةَ بِغَيْرِ حِسَابٍ

அல்லாஹும்ம இன்ன ஹாதல்பைத்த பைத்துக, வல்ஹறம ஹறமுக, வல்அம்ன அம்னுக, வல்அப்த அப்துக, வஅனஅப்துக வப்னுஅப்திக்க வ ஹாதா மக்காமுல் ஆயிதி பிக்க மினன்னர். பஹர்ரிம் லுஹூமனா வ பஷரத்தனா அலன்னர். அல்லா ஹும்ம ஹப்பிப் இலைனல் ஈமான வ ஜய்யின்ஹு பீ குலூபினா வகர்ரிஹ் இலைனல் குப்ர வல்புஸூக்க வல் இஸ் யான். வஜ்அல்னா மினர்ராஷிதீன. அல்லாஹும்ம கினீ அதா பக்க யௌம தப்அது இபாதக்க அல்லாஹும்மர் ஜுக்னீயல் ஜன்னத்த பிகைரிஹிஸாப்.

நாயனே! இந்த வீடு உனது வீடு; இந்த ஹறம் உனது ஹறம்; இந்த அமைதி உனது அமைதி; இந்த அடிமை உனது அடிமை. நான் உன்னடிமையின் பிள்ளை. இது நரகத்தை விட்டு உன்னைக்கொண்டு காவல் தேடுபவனின் இடம். எனவே, எங்களது தசைகளையும், எங்களது மேனிகளையும் நரகத்திற்கு ஹறாமாக்குவாயாக.

நாயனே! எங்களுக்கு ஈமானைப் பிரியமாக்கிவை. எங்கள் இருதயங்களில் அதனை அழகாக்கிவை. எங்களுக்கு குப்ரையும், பாவிக்தனத்தையும, மாறு செய்வதையும் வெறுப்பாக்கிவை. இன்னும் எங்களை நேர் வழியிற் சேர்ந்தவர்களுடன் சேர்த்துவை.

நாயனே! உனது அடியார்களை நீ எழுப்பும் நாளில் உனது வேதனையைவிட்டு என்னைக்காப்பாற்றுவாயாக.

நாயனே! கேள்வி கணக்கு இல்லாமலே எனக்குச் சுவர்க்கத்தைத் தந்தருளுவாயாக.

மூன்றுவது ஷௌத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الشَّكِّ وَالشِّرْكِ وَالشِّقَاقِ وَالنِّفَاقِ
وَسُوْءِ الْاَخْلَاقِ وَسُوْءِ الْمَنْظَرِ وَالْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالْاَهْلِ
وَالْوَلَدِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ رِضَاكَ وَالْجَنَّةَ وَاَعُوْذُبِكَ
مِنْ سَخَطِكَ وَالنَّارِ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْقَبْرِ وَ
اَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மினஷ்ஷக்கி, வஷ்ஷிர்க்கி, வஷ்ஷிக்காக்கி, வன்னிபாக்கி, வஸ்ஸிதில் அக்

லாக்கி, வஸ்ஜில்மன்லரி, வல் முன்கலபி, பில்மாலி, வல் அஹ்லி வல்வலதி, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க ரிலாக்க வல்ஜன்னத, வ அஊதுபிக்கமின் ஸகத்திக வன்னூர். அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் பித்னத்தில் கப்ரி வ அஊது பிக பின்பித்னதில் மஹ்யாவல்மமாத்தி.

நாயனே! சந்தேகம், பிளவுபடல், இணைவைத்தல், நய வஞ்சகம், கெட்ட குணம், கெட்ட தோற்றம், பொருளிலும், குடும்பத்திலும் பிள்ளையிலும் கெட்டமாறுதலேற்படல் ஆகியவைகளைவிட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன்.

நாயனே! உனது திருப்தியையும் சுவர்த்தத்தையும் கேட்கிறேன். இன்னும் உமது கோபக்தையும் நரகத்தையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். நாயனே, கப்றுடைய பித்னைவையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன், இந்த ஜீவியம் மரணம் ஆகியவைகளின் பித்னைவையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன்.

ஹான்காவது ஷௌத்தில் ஒதும் துஆ

اَللّٰهُمَّ اجْعَلْهُ حَجًّا مَّبْرُوْرًا وَسَعْيًا مَّشْكُوْرًا وَذَنْبًا مَّغْفُوْرًا
وَعَمَلًا صَالِحًا وَتِجَارَةً لَّنْ تَبُوْرَ يَا عَالِمَ مَا فِي الصُّدُوْرِ اَخْرِجْنِيْ
يَا اَللّٰهُ مِنَ الظُّلُمَاتِ اِلَى النُّوْرِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْاَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ
وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالسَّلَامَةَ مِنْ كُلِّ اِثْمٍ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ
وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ رَبِّ قَنِّعْنِيْ بِمَا رَزَقْتَنِيْ
وَبَارِكْ لِيْ فِيْمَا اَعْطَيْتَنِيْ وَاخْلُفْ عَلَيَّ كُلَّ غَائِبَةٍ لِيْ مِنْكَ
بِالْخَيْرِ

அல்லாஹும்மஜ்அல்ஹு ஹஜ்ஜன் மப்றூறன், வ ஸஃயன் மஷ்கூறன், வ தன்பன் மஃபூறன். வ அமலன் ஸாலிஹன், வ திஜாரத்தன் லன் தபூர. யா ஆலிமமா பிஸ்ஸு தூரி, அக்ரிஜ்னீ யா அல்லாஹ் மினல்லுலுமாத்தி இலன்னூரி. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க முஜீபாத்தி றஹ்மத்திக்க வ அஜாயிமி மஃபிரத்திக வஸ்ஸலாமத்த மின் குல்லி இத்மின் வல் கனீமத்த மின்குல்லி பிர்ரின். வல் பௌஜ பில் ஜன்னத்தி வன்னஜாத்த மினன்னார். றப்பி கன்னிஃனீ பிமா ரஜக்தனீ வ பாரிக்லீ பீமா அஃதைத்தனி, வக்லுப் அலய்ய குல்லு காயிபத்தின் லீ மின்க பில்கைர்.

நாயனே! இதனை நன்மையுள்ள ஹஜ்ஜாகவும், நன்றியுள்ள முயற்சியாகவும், மன்னிக்கப்பட்ட பாபமாகவும், இனைக்கமான நற்கிரியையாகவும், நஷ்டமில்லாத வியாபாரமாகவும் ஆக்குவாயாக. இருதயங்களிலுள்ளதை அறிபவனே! அல்லாஹ்வே, இருள்களிலிருந்து பிரகாசத்தின் பால் என்னை வெளியேற்றுவாயாக

நாயனே! உனது கிருபையை வாஜிபாக்கும் காரியங்களையும், உனது மன்னிப்புக்கு உறுதியான காரியங்களையும், சகலவிதமான பாபத்தை விட்டு ஈடேற்றத்தையும், சகலவிதமான நன்மையையும் செய்வதற்குள்ள பாக்கியத்தையும், சுவர்க்கத்தைக் கொண்டு வெற்றி பெறுவதையும், நரகத்தை விட்டு ஈடேற்றம் பெறுவதையும் உன்னிடம் நான் கேட்கிறேன். எனது றப்பே! எனக்கு நீ கொடுத்ததைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ள எனக்கருள்புரிவாயாக. எனக்கு நீ தந்ததில் எனக்கு நீ விருத்தியையருள்வாயாக.

உன்னிடமிருந்து எனக்காகவுள்ள மறைவான ஒவ்வொன்றையும் நன்மையைக் கொண்டு எனக்குப் பகரமாக்கி வைத்தருள்வாயாக.

ஐந்தாவது ஷௌத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اَظِلَّنِيْ تَحْتَ ظِلِّ عَرْشِكَ يَوْمَ لَا ظِلَّ اِلَّا ظِلُّكَ وَلَا بَاقِيَ اِلَّا وَجْهُكَ وَاسْقِنِيْ مِنْ حَوْضِ نَبِيِّكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ شَرْبَةً هَنِيْئَةً مَرِيْئَةً لَا اَظْمَأُ بَعْدَهَا اَبَدًا اَللّٰهُمَّ اِنِّيْ اَسْاَلُكَ مِنْ خَيْرِ مَا سَاَلَكَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْاَلُكَ الْجَنَّةَ وَنَعِيْمَهَا وَمَا يُقَرِّبُنِيْ اِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْ فِعْلٍ اَوْ عَمَلٍ وَاَعُوْذُ بِكَ مِنَ النَّارِ وَمَا يُقَرِّبُنِيْ اِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْ فِعْلٍ اَوْ عَمَلٍ

அல்லாஹும்ம அளில்லனீ தஹ்த ளில்லிஅர்ஷிக்க யௌமலா ளில்ல இல்லா ளில்லுக்க வ லாபாக்கிய இல்லாவஜ் ஹக்க வஸ்கினீ மின் ஹௌலி நபிய்யிக்க ஸெய்யிதினு முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம ஷர்பத்தன் ஹனீஅத்தன் மரீஅத்தன் லா நல்மாஉ பஃதஹா அபதா,

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் கைரி மா ஸஅலக்க மின்ஹு நபிய்யுக்க ஸெய்யிதுனு முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வ அஊதுபிக மின்ஷர்ரி

மஸ்தஆதக மின்ஹு நபிய்யுக்க ஸெய்யிதினு முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம,

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் ஜன்னத்த வ நயீமஹா வ மா யுகர்ரிபுனீ இலைஹா மின் கௌலின் ஔபிஃலின் ஔஅமலின் வஅஊது பிக்க மினன்னரி வமாயுகர்ரிபுனீ இலைஹா மின் கௌலின் ஔபிஃலின் ஔஅமலின்.

நாயனே! உனது நிழலைத்தவிர்த்து வேறு எந்த நிழலு மில்லாததும், உனது முகத்தைத்தவிர்த்து வேறு எதுவும் பாக்கியாக இல்லாததுமான நாளில் உனது அர்ஷின் நிள லுக்குக் கீழில் எனக்கு நிளல் தந்தருள்வாளாக. இன்னும் உனது நபி எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹௌலிலிருந்து எங்களுக்கு ஷர்பத்தைக் குடிக்கச் செய்வாயாக. அப்புறம் நாங்கள் தாகத்தை யடையாதவாறு ஏராளமான தாராளமான ஷர்பத் தாக இருக்கவேண்டும்.

நாயனே! உனது நபி எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் உன்னிடத்தில் கேட்ட நன்மையான காரி யத்தை நான் உன்னிடம் கேட்கிறேன். இன்னும், உனது நபி எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் உன்னிடம் காவல் தேடுகிறேன்.

நாயனே! உன்னிடத்தில் நான் சுவர்க்கத்தையும் அதன் பாக்கியங்களையும், அவைகளின் பால் என்னை நெருங் கச் செய்யும் சொல், செயல், கிரியை ஆகியவைகளையும் கேட்கிறேன். இன்னும், நரகத்தையும், அதன்பால் நெருங் கச் செய்யும் சொல், செயல், கிரியை ஆகியவைகளையும் விட்டுக் காவல் தேடுகிறேன்.

ஆறுவது ஷௌளத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّ لَكَ عَلَيَّ حُقُوْقًا كَثِيْرَةً فِيْمَا بَيْنِيْ وَبَيْنَكَ وَحُقُوْقًا
كَثِيْرَةً فِيْمَا بَيْنِيْ وَبَيْنَ خَلْقِكَ اَللّٰهُمَّ مَا كَانَ لَكَ مِنْهَا
فَاغْفِرْهُ لِيْ وَمَا كَانَ لِخَلْقِكَ فَتَحَمَّلْهُ عَنِّيْ وَاغْنِنِيْ بِحَلَالِكَ
عَنْ حَرَامِكَ وَبِطَاعَتِكَ عَنْ مَعْصِيَتِكَ وَبِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ
يَا وَاسِعَ الْمَغْفِرَةِ اَللّٰهُمَّ اِنَّ بَيْتَكَ عَظِيْمٌ وَوَجْهَكَ كَرِيْمٌ
وَاَنْتَ يَا اَللّٰهُ حَلِيْمٌ كَرِيْمٌ عَظِيْمٌ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ

அல்லாஹும்ம இன்ன லக்க அலய்ய ஹக்கூக்கன் கதீரத்தன் பீமா பைனி வபைனக்க வ ஹக்கூக்கன் கதீரத்தன் பீமா பைனி வபைன கல்கிக்க. அல்லாஹும்ம மாகான லக்க மின்ஹா பம்பிர்ஹலி வமாகான லிகல்கிக்க பதஹம்மல்ஹ அன்னீ வம்னினி பிஹலாலிக்க அன் ஹரூமிக்க வ பிதாஅத்திக்க அன் மம்ஸியத்திக்க வ பிபலுலிக்க அம்மன் ஸிவாக்க யா வாஸிஅல் மம்பிரத்தி. அல்லாஹும்ம இன்ன பைதக்க அளீமுன் வ வஜ்ஹக கரீமுன் வ அன்த யா அல்லாஹ ஹலீமுன் கரீமுன் அளீமுன் துஹிப்புல் அப்வ பம்பு அன்னீ.

நாயனே! உனக்கும் எனக்கு மட்டிலும் சம்பந்தமுள்ள அநேக கடமைகள் நான் உனக்கு ஆற்றுமல் என்மீது கடமையாக இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோல உனது சிருஷ்டிகளுக்கும் எனக்கும் சம்பந்தமுள்ள ஏராளமான கட

மைகள் நான் ஆற்றுமல் என்மீது பாக்கியாக இருந்துகொண் டிருக்கின்றன. எனவே, அவைகளில் உனக்கும் எனக்கும் மட்டிலும் சம்பந்தப்பட்டவைகளை நீ மன்னித்தருள்வாயாக.

உன் சிருஷ்டிகளுக்கும் எனக்கும் சம்பந்தப்பட்ட கட மைகளின் பளுவை என்னை விட்டகற்றுவாயாக. இன்னும் உனது ஹலாலான உணவைக்கொண்டு உன்னால் ஹறாமாக் கப்பட்டதையும், உனக்கு வழிபாடு செய்வதைக்கொண்டு உனக்கு மாறு செய்வதையும், உனது கடாக்ஷத்தைக்கொண்டு உன்னையல்லாதவரையும் விட்டு என்னைத் தேவையற்றவ னாக்குவாயாக.

விசாலமான மன்னிப்பையுடையவனே! நாயனே! உனது வீடு மகத்துவமுள்ளது. உனது முகம் இரக்க முள் ளது. இன்னும் நாயனே! நீ க்ஷமிப்பவன், இரக்கமுள்ள வன், மகத்துவமுள்ளவன், நீ மன்னிப்பதை நேசிப்பவன், என்னை மன்னிப்பாயாக.

ஏழாவது ஷௌத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْئَلُكَ اِيْمَانًا كَامِلًا وَّيَقِيْنًا صَادِقًا وَّرِزْقًا
وَّاسِعًا وَّقَلْبًا خَاشِعًا وَّلِسَانًا ذَاكِرًا وَّحَلَالًا طَيِّبًا وَّتَوْبَةً
نَصُوْحًا وَّتَوْبَةً قَبْلَ الْمَوْتِ وَّرَاحَةً عِنْدَ الْمَوْتِ وَّمَغْفِرَةً
وَّرَحْمَةً بَعْدَ الْمَوْتِ وَّالْعَفْوَ عِنْدَ الْحِسَابِ وَالْفَوْزَ بِالْجَنَّةِ
وَالنَّجَاةَ مِنَ النَّارِ بِرَحْمَتِكَ يَا عَزِيْزُ يَا غَفَّارُ رَبِّ زِدْنِيْ عِلْمًا
وَّاَلْحِقْنِيْ بِالصَّالِحِيْنَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க ஈமானன் காமி லன், வ யக்கீனன் ஸாதிக்கன், வரிஜ்கன் வாஸிஅன், வகல் பன் காஷிஅன், வலிஸானன் தாக்கிரன், வஹலாலன் தையிபன், வ தேளபத்தன் நஸூஹன், வதேளபத்தன் கப்லல் மௌத்தி, வராஹத்தன் இன்தல் மௌத்தி, வ மஃபிரத்தன் வறஹ்மத்தன் பஃதல்மௌத்தி, வல்அப்வ இன்தல் ஹிஸாப், வல்பௌஜபில் ஜன்னத்தி, வன்னஜாத்த மினன்னர். பிறஹ் மத்திக்க யா அஜீஸ், யாகப்பார். றப்பிஜித்னீ இல்மன் வஅல் ஹிக்னி பிஸ்ஸாலிஹீன்.

(நாயனே! பரிபூரணமான ஈமானையும், உண்மையான உறுதியையும், விசாலமான சம்பத்தையும், பணிவான இரு தயத்தையும், ஜபிக்கும்படியான நாவையும், மணமான ஹலா லையும், அந்தரங்க சுத்தியான தௌபாவையும், மரணத்திற்கு முன் தௌபாவையும், மரணத்தின்போது சுகத்தையும், மரணத்திற்குப்பின் மன்னிப்பையும் கருணையையும், கேள்வி கணக்குக் கேட்கும்போது மன்னிப்பையும், சுவர்க் கத்தைக்கொண்டு வெற்றிபெறுவதையும், நரகத்தை விட்டு விடுதலை பெறுவதையும், உனது கிருபையைக்கொண்டு உல் லோனே, மன்னிப்புச் செய்வோனே! உன்னிடத்தில் யான் கேட்கிறேன். எனது றப்பே! கல்வியை எனக்கு அதிகப் படுத்துவாயாக. இன்னும் நல்லோர்களுடன் என்னைச் சேர்ப்பாயாக.)

மக்காமு இப்ராஹீமில் தவாபுடைய தொழு கையை நிறைவேற்றிவிட்டு ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنَّكَ تَعْلَمُ سِرِّيْ وَعَلَانِيَتِيْ فَاقْبَلْ مَعْذِرَتِيْ وَتَعْلَمُ حَاجَتِيْ فَاَعْطِنِيْ سُؤْلِيْ وَتَعْلَمُ مَافِيْ نَفْسِيْ فَاغْفِرْلِيْ ذُنُوْبِيْ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ اِيْمَانًا يُبَاشِرُ قَلْبِيْ وَيَقِيْنًا صَادِقًا حَتّٰى اَعْلَمَ اَنَّهٗ لَا يُصِيْبُنِيْ اِلَّا مَا كَتَبْتَ لِيْ رِضًا مِنْكَ بِمَا قَسَمْتَ لِيْ اَنْتَ وَلِيِّيْ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ تَوَفَّنِيْ مُسْلِمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ اَللّٰهُمَّ لَا تَدَعْ لَنَا فِيْ مَقَامِنَا هٰذَا ذَنْبًا اِلَّا غَفَرْتَهٗ وَلَا غَمًّا اِلَّا فَرَّجْتَهٗ وَلَا حَاجَةً اِلَّا قَضَيْتَهَا وَيَسَّرْتَهَا فَيَسِّرْ اُمُوْرَنَا وَاشْرَحْ صُدُوْرَنَا وَنَوِّرْ قُلُوْبَنَا وَاخْتِمْ بِالصَّالِحَاتِ اَعْمَالَنَا اَللّٰهُمَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ وَاَحْيِنَا مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ غَيْرَ خَزَايَا مَفْتُوْنِيْنَ

அல்லாஹும்ம இன்னக்க தஃலமு ஸிர்ரீ வ அலா னிய்யத்தீ பக்பல் மஃதிரத்தி; வதஃலமு ஹாஜத்தீ பஃதினீ ஸுலீ; வ தஃலமு மா பீ நப்ஸீ பஃபிர்லீ துனூபீ; அல்லா ஹும்ம இன்னீ அஸ்அலுக்க ஈமானன் யுபாஷிரு கல்பீ; வ யக்கீனன் ஸாதிக்கன், ஹத்தா அஃலம அன்னஹு லா யுஸீபுனீ இல்லா மா கத்தப்த லீ ரிலன் மின்க பிமா கஸம்த லீ அன்த வலிய்யீ பித்துன்யா வல்ஆகிரா. தவப்பனீ முஸ்லிமன் வ அல்ஹிக்னீ பிஸ்ஸாலிஹீன். அல்லாஹும்ம

லா ததஃலனு பீ மக்காமீனு ஹாதா தன்பன் இல்லா கபர்த்தஹு; வ லா தும்மன் இல்லா பர்ரஜ்தஹு; வ லாஹாஜத்தன் இல்லா களைத்தஹா வ யஸ்ஸர்த்தஹா ப யஸ்ஸிர் உமுரனு வஷ்ரஹ் ஸ்தூரனு வ நவ்விர் குலூபனு வக்திம் பிஸ்ஸாலிஹாத்தி அஃமாலனு; அல்லாஹும்ம தவப்பனு முஸ்லிமீன வ அஹ்யினு முஸ்லிமீன. வ அல்ஹிக்னு பிஸ்ஸாலிஹீன கைர கஜ்யா மப்தூனீன.

(நாயனே! எனது இரகசியத்தையும் பகிரங்கத்தையும் நிச்சயமாக நீ அறிவாய். எனது புகல் கூறுகையை நீ அங்கீகரிப்பாயாக. இன்னும் எனது நப்ஸிலுள்ளதை நீ எனது பாபத்தை மன்னித்தருள்வாயாக.)

நாயனே! நிச்சயமாக நான் எனது இருதயத்தைப்பற்றிப் பிடித்துக் கொள்ளும்படியான ஈமானையும், எனக்கு நீ பங்கு வைத்ததைக்கொண்டு, உன்னில் நின்றும் திருப்தியை எனக்கு நீ எழுதியதல்லாமல் எனக்கு எதுவும் சம்பவிக்காது என்பதை நான் அறிந்து கொள்ள, உண்மையான உறுதியையும் நான் கேட்கிறேன். எனக்கு நீ இவ்வுலகிலும் அவ்வுலகிலும் காரியஸ்தனாக இருக்கின்றாய். முஸ்லிமாக என்னை நீ மரிக்கச்செய்து நல்லோர்களுடன் என்னைச் சேர்ப்பாயாக.

நாயனே! எங்களுடைய இந்த மக்காமில் எந்தப் பாபத்தையும் நீ மன்னிக்காமலும், எந்தக் கவலையையும் நீ அகற்றாமலும், எந்த நாட்டத்தையும் நீ நிறைவேற்றி, அதனை இலேசாக்காமலும் எங்களை விட்டு விடாதிருப்பாயாக. எங்களது இருதயங்களைத் திறக்கச் செய்வாயாக. இன்னும் எங்கள் இருதயங்களைப் பிரகாசிக்

செய்வாயாக. இன்னும் எங்கள் கிரியைகளை சன்மார்க்கத் திற்கு இணக்கமானவைகளை கொண்டு முடிவு செய்வாயாக.

(நாயனே! முஸ்லிம்களாக எங்களை மரிக்கச்செய்து, முஸ்லிம்களாகவே எங்களை ஜீவிக்கச் செய்து நல்லோர் களுடன் எங்களைச் சேர்ப்பாயாக.

ஜம்ஜம் ஜலத்தை அருந்தும்போது குடிக்கும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا وَاسِعًا وَشِفَاءً مِنْ كُلِّ دَاءٍ

وَسَقَمٍ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க இல்மன் நாபிஅன், வ ரிஜ்கன் வாசிஅன், வ ஷிபாஅன் மின்குல்லிதாஇன் வஸக் மின்; பிறஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன்.

(நாயனே! பிரயோஜனமுள்ள் கல்வியையும் விசால மான சம்பத்தையும, சகலவிதமான நோய் பிணி ஆகியவை களை விட்டுச் சவுக்கியத்தையும், கிருபையாளர்களுக்கெல் லாம் கிருபையுள்ளவனே! உனது கிருபையைக்கொண்டு உன்னிடம் நான் கேட்கிறேன்.)

ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய்யும்போது ஓதுகிற துஆக்களும் திக்ருகளும் ஸபாவில் ஓதும் துஆ

اَبْدَأُ بِمَا بَدَءَ اللّٰهُ وَرَسُوْلُهٗ اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللّٰهِ

فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ

تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ

அப்தஉபிமா பிமா பதஅல்லாஹு வறஸூலுஹு இன்னஸ் ஸபா வல்மர்வத்த மின் ஷஆரில்லாஹி பமன் ஹஜ்ஜல் பைத்த அவிஃ தமர பலாஜுனாஹ அலைஹி அன்யயத்தவ்வப பிஹிமா வ மன் ததவ்வஅ கைரன் ப இன்னல்லாஹ ஷாக் சிறுன் அலீம்.

(அல்லாஹ்வும் அவனது றஸூலும் ஆரம்பித்ததைக் கொண்டு நான் ஆரம்பிக்கிறேன். நிச்சயமாக ஸபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளங்களிலுள்ளவை. இந்த பைத்தை ஹஜ்ஜு அல்லது உம்ரூச் செய்தவர் இவ்விரண்டிலும் தவாபு செய்வது அவர்மீது குற்றமில்லை, இன்னும் மேல் மிச்சமாக நன்மையை எவர் செய்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் நன்றியுள்ளவன் மிகவும் அறிந்தவன்.)

ஸயீ செய்யும்போது ஓதும் நிய்யத்து

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ اَنْ اَسْعٰى بَيْنَ الصَّفَا وَالْمَرْوَةِ سَبْعَةَ اَشْوَاطٍ سَعْيَ الْحَجِّ لِلّٰهِ عَزَّوَجَلَّ

அல்லாஹும்ம இன்னீ உரீது அன் அஸ்ஆ பைனஸ்ஸ பாவமர்வத்தி ஸப்அத்த அஷ்வாத்தின் ஸஃயல்ஹஜ்ஜிலில் லாஹி அஸ்ஸ வ ஜல்ல.

(நாயனே! ஸபாமர்வாவிற் கிடையில் ஹஜ்ஜுடைய ஸயீயாக ஏழு ஷௌத்துகளைச் செய்து ஸயீ செய்ய நாடுகிறேன். மிகைத்தவனை மகத்தானவனை அல்லாஹ்வுக்காக)

என்று கூறி ஸயீ செய்ய நிய்யத்துச் செய்து, ஸபா மலைப்படிகளின் மீது ஏறி, கிப்லாவை முன்னோக்கி இரண்டு கைகளையுப் உயர்த்தி,

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வ லில்லாஹில் ஹம்து என்று கூறி அப்படிகளை விட்டு இறங்கி மர்வாவை நோக்கிச்செல்லவேண்டும். உம்ராச் செய்வதாக நிய்யத்திருந்தால் سعي الحجّ ஸஃயல் ஹஜ்ஜி என்பதற்கு பதிலாக سعي العمرة ஸஃயல் உம்ரத்தி (உம்ராவின் ஸயீ) என்று கூறவேண்டும்.

ஸயியுடைய துஆ

اَللّٰهُ اَكْبَرُ كَبِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا وَسُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ وَ
بِحَمْدِهِ الْكَرِيْمِ بُكْرَةً وَّاَصِيْلًا وَمِنَ اللَّيْلِ فَاسْجُدْ لَهٗ وَسَبِّحْهُ
لَيْلًا طَوِيْلًا لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ اَنْجَزَ وَعْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ
وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ لَا شَيْءَ قَبْلَهٗ وَلَا بَعْدَهٗ يُحْيِيْ وَيُمِيْتُ
وَهُوَ حَيٌّ دَائِمٌ لَا يَمُوْتُ بِيَدِهِ الْخَيْرُ وَاِلَيْهِ الْمَصِيْرُ وَهُوَ عَلٰى
كُلِّ شَيْءٍ قَدِيْرٌ رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا
تَعْلَمُ اِنَّكَ تَعْلَمُ مَا لَا نَعْلَمُ اِنَّكَ اَنْتَ اللّٰهُ اَعَزُّ الْاَكْرَمُ رَبِّ
نَجِّنَا مِنَ النَّارِ سَالِمِيْنَ غَانِمِيْنَ فَرِحِيْنَ مُسْتَبْشِرِيْنَ مَعَ عِبَادِكَ
الصَّالِحِيْنَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّيْنَ وَالصِّدِّيْقِيْنَ
وَالشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا ذٰلِكَ الْفَضْلُ
مِنَ اللّٰهِ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ حَقًّا حَقًّا لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

تَعَبُّدًا وَرِقًّا لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَلَا نَعْبُدُ اِلَّا اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ
الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ الْوَاحِدُ الْاَحَدُ
الْفَرْدُ الصَّمَدُ الَّذِيْ لَمْ يَتَّخِذْ صَاحِبَةً وَّلَا وَلَدًا وَّلَمْ يَكُنْ
لَّهٗ شَرِيْكٌ فِي الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَّهٗ وَلِيٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا
اَللّٰهُمَّ اِنَّكَ قُلْتَ فِيْ كِتَابِكَ الْمُنْزَلِ اُدْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ
دَعَوْنَاكَ رَبَّنَا فَاغْفِرْ لَنَا كَمَا اَمَرْتَنَا اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ
رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ
فَاٰمَنَّا رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ
الْاَبْرَارِ رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ
اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَاِلَيْكَ اَنَبْنَا
وَاِلَيْكَ الْمَصِيْرُ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا
بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَا
اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ رَبَّنَا اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا اِنَّكَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ اَللّٰهُمَّ اِنِّيْٓ اَسْاَلُكَ الْخَيْرَ كُلَّهٗ عَاجِلَهٗ
وَاٰجِلَهٗ وَاَعُوْذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّهٖ عَاجِلِهٖ وَاٰجِلِهٖ اَسْتَغْفِرُكَ
لِذَنْبِيْ وَاَسْاَلُكَ رَحْمَتَكَ اَللّٰهُمَّ رَبِّ زِدْنِيْ عِلْمًا وَّلَا تُزِغْ قَلْبِيْ

بَعْدَاِذْ هَدَيْتَنِيْ وَهَبْ لِيْ مِنْ لَدُنْكَ رَحْمَةً اِنَّكَ اَنْتَ
الْوَهَّابُ اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ بَصَرِيْ لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ
اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ لَآ اِلٰهَ اِلَّا اَنْتَ
سُبْحَانَكَ اِنِّيْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الْكُفْرِ
وَالْفَقْرِ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ
مِنْ عُقُوْبَتِكَ وَاَعُوْذُبِكَ مِنْكَ لَآ اُحْصِيْ ثَنَاءً عَلَيْكَ اَنْتَ
كَمَا اَثْنَيْتَ عَلٰى نَفْسِكَ فَلَكَ الْحَمْدُ حَتّٰى تَرْضٰى اَللّٰهُمَّ اِنِّيْ
اَسْئَلُكَ مِنْ خَيْرِ مَا تَعْلَمُ وَاَسْتَغْفِرُكَ مِنْ كُلِّ مَا تَعْلَمُ اِنَّكَ
اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ الْمَلِكُ الْحَقُّ الْمُبِيْنُ
مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ صَادِقُ الْوَعْدِ الْاَمِيْنِ اَللّٰهُمَّ اِنِّيْ
اَسْئَلُكَ كَمَا هَدَيْتَنِيْ لِلْاِسْلَامِ اَنْ لَّا تَنْزِعَهٗ مِنِّيْ حَتّٰى
تَتَوَفَّانِيْ عَلَيْهِ وَاَنَا مُسْلِمٌ اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا
وَفِيْ سَمْعِيْ نُوْرًا وَفِيْ بَصَرِيْ نُوْرًا اَللّٰهُمَّ رَبِّ اشْرَحْ
لِيْ صَدْرِيْ وَيَسِّرْ لِيْ اَمْرِيْ وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّ وَسَاوِسِ
الصَّدْرِ وَشَتَاتِ الْاَمْرِ وَفِتْنَةِ الْقَبْرِ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ
مِنْ شَرِّ مَا يَلِجُ فِي اللَّيْلِ وَمِنْ شَرِّ مَا يَلِجُ فِي النَّهَارِ وَمِنْ شَرِّ
مَا تَهُبُّ بِهِ الرِّيَاحُ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

سُبْحَانَكَ مَاعَبَدْنَاكَ

حَقَّ عِبَادَتِكَ يَا اللّٰهُ سُبْحَانَكَ مَاذَكَرْنَاكَ حَقَّ ذِكْرِكَ يَا اللّٰهُ
سُبْحَانَكَ مَاشَكَرْنَاكَ حَقَّ شُكْرِكَ يَا اللّٰهُ سُبْحَانَكَ مَا
قَصَدْنَاكَ حَقَّ قَصْدِكَ يَا اللّٰهُ اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيْنَا الْاِيْمَانَ
وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ اِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ
وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ اَللّٰهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ
عِبَادَكَ اَللّٰهُمَّ اهْدِنِيْ بِالْهُدٰى وَنَقِّنِيْ بِالتَّقْوٰى وَاغْفِرْ
لِيْ فِي الْاٰخِرَةِ وَالْاُوْلٰى اَللّٰهُمَّ ابْسُطْ عَلَيْنَا مِنْ بَرَكَاتِكَ وَ
رَحْمَتِكَ وَفَضْلِكَ وَرِزْقِكَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ النَّعِيْمَ
الْمُقِيْمَ الَّذِيْ لَا يَحُوْلُ وَلَا يَزُوْلُ اَبَدًا اَللّٰهُمَّ اِنِّيْ عَائِذٌ
بِكَ مِنْ شَرِّ مَا اَعْطَيْتَنَا وَمِنْ شَرِّ مَا مَنَعْتَنَا اَللّٰهُمَّ تَوَفَّنَا
مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ غَيْرَ خَزَايَا وَلَا مَفْتُوْنِيْنَ
رَبِّ يَسِّرْ وَلَا تُعَسِّرْ رَبِّ تَمِّمْ بِالْخَيْرِ اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ
شَعَائِرِ اللّٰهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ
يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ

அல்லாஹு அக்பர் கபீரா வல்ஹம்து லில்லாஹி கதீரா
வ ஸுப்ஹானல்லாஹில் அளீம். வ பிஹம் திஹில்கரீம் புக்

ரத்தன் வ அஸீலா வ மினல்லெலி பஸ்ஜூத் லஹூ வ ஸப்பிஹ்ஹூ லெலன்தவீலா. லாஇலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ அன்ஜஸ வஃ்தஹ், வ நஸரஅப்தஹ்ற வ ஹஜமல் அஹ்ஜாப வஹ்தஹ் லா ஷைய கப்லஹூ வ லா பஃ்தஹூ. யுஹ்யீ வயுமீத்து வஹூவ அலா குல்லி ஷைஇன் கதீர். றப்பிஃபிர்லீ வர்ஹம் வஃ்பு வ தகர்ரம் வதஜாவஸ் அம்மா தஃ்லம் இன்னக தஃ்லமு மாலாநஃ்லம்; இன்னக்க அன்தல் லாஹூல் அஅஜ்ஜூல் அக்ரம்; றப்பி நஜ்ஜினு மினன்னுர்; ஸாலிமீன கானிமீன பரிஹீன முஸதப்ஷிரீன மஅ இபாதிக் கஸ் ஸாலிஹீன. மஅல்லதீன அன்அமல்லாஹூ அலைஹிம் மினன்னபிய்யீன வஸ்ஸித்தீக்கீன வஷ்ஷூஹதாஇ வஸ்ஸாலிஹீன வ ஹஸூன உலாயிக்க ரபீக்கா; தாலிக்கல் பலுலு மினல்லாஹி வ கபா பில்லாஹி அலீமா.

லாஇலாஹ இல்லாஹூ ஹக்கன் ஹக்கா. லாஇலாஹ இல்லல்லாஹூ தஅப்புதன் வரிக்கா. லாஇலாஹ இல்லல் லாஹூ வலா நஃ்புது இல்லா இய்யாஹூ முக்லிஸீன லஹூத்தீன வலெளகரிஹல் காபிறூன். லாஇலாஹ இல்லல் லாஹூல் வாஹிதுல் அஹத்துல் பர்துஸ்ஸமதுல்லதீலம்யத் தகித் ஸாஹிபத்தன் வலா வலதா. வலம் யக்குன் லஹூ வலிய்யுன் மினத்துல்லி வகப்பிர்ஹூ தக்பீரா.

அல்லாஹூம்ம இன்னக்க குல்த பீகித்தாபிக்கல்முனஸ் ஸலி உத்ஊனி அஸ்தஜிப் லக்கும் தஒளனுக்க றப்பனு பஃ பிர்லனு கமா அமர்த்தனு இன்னக்க லா துக்லிபுல் மீஆத். றப்பனு இன்னனு ஸமிஃ்னு முனதிய்யன் யுனு தீ லில் ஈமானி அன் ஆமினு பிறப்பிக்கும் பஆமன்னு றப்பனு பஃபிர்லனு துனுபனு வகப்பிர அன்னு வஸப்யிஆத்தினு வதவப்பனு மஅல் அப்ரார். றப்பனு வஆத்தினு மாவஅத்தனு அலா ருஸூலிக்க

வலா துக்ஜிஞ யௌமல் கியாமா இன்னக்க லா துக்லிபுல் மீஆத். றப்பனு அலைக்க தவக்கல்னு வ இலைக்க அனப்னு வ இலைக்கல் மஸீர். றப்பனஃபிர்லனு வலி இக்வானினல் லதீன ஸபக்கூனு பில்ஈமானி வலா தஜ்அல் பீ குலூபினு கில்லன் லில்லதீன ஆமனு றப்பனு இன்னக ரஊபுர்ரஹீம். றப்பனு அத்மிம் லனு நூரனு வஃபிர்லனு இன்னக்க அலா குல்லி ஷைஇன் கதீர்.

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் கைர குல்லஹு ஆஜிலஹு வ ஆஜிலஹு. வ அஊது பிக்க மினஷ்ஷர்ரி குல்லிஹி ஆஜிலிஹி வ ஆஜிலிஹி. அஸ்தஃபிருக்க லிதன்பீ வ அஸ்அலுக்க றஹ்மத்தக்க. அல்லாஹும்ம றப்பி ஜித்னீ இல்மன்; வலாதுஜிஃ கல்பீ பஃத இத் ஹதைத்தனீ; வ ஹப்லீ மின்லதுன்க றஹ்மத்தன் இன்னக்க அன்தல் வஹ்ஹாப். அல்லாஹும்ம ஆபினீ பீ ஸம்ஈ வபஸரீ. லாஇலாஹ இல்லா அன்த. அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் அதாபில் கப்ரீ. லாஇலாஹ இல்லா அன்த ஸுப்ஹானக்க இன்னீ குன்து மினல்லாலிமீன்.

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மினல்குப்ரீ வல் பக்ரீ. அல்லாஹும்ம இன்னீ அஊது பிரிலாக்க மின்ஸகத் திக்க; வபிமுஆபாத்திக்க மின்உக்கூபத்திக்க. வஅஊதுபிக்க மின்க லா உஹ்ஸீ தனுஅன் அலைக்க அன்த கமா அத்னைத்த நப்ஸிக்க. பலக்கல் ஹம்து ஹத்தா தர்லா. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் கைரி மா தஃலமு வ அஸ்தஃபிறுக்க மின்குல்லி மாதஃலமு இன்னக்க அன்த அல்லாமுல் குயூப். லாஇலாஹ இல்லல்லாஹுல் மலிக்குல் ஹக்குல் முபீன். முஹம்மதுர் ரஸூலுல்லாஹிஸ்ஸாதிக்கில் வஃதில் அமீன்.

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கமா ஹறைத்தனீ லில்இஸ்லாமி அன்லாதன்ஜிஅஹா மின்னீ; தத்தவப்பானீ அலஹி வ அனு முஸ்லிமுன். அல்லாஹும்மஜ்அல் பீ கல்பீ நூறன், வபீஸம்ஈ நூறன், வபீ பஸரீ நூறன். அல்லாஹும்ம றப்பிஷ்ரஹ் லீ ஸத்ரீ வ யஸ்ஸிர் லீ அம்ரீ வ அஊது பிக்க மின் ஷர்ரீ வ ஸாவிஸிஸ் ஸத்ரீ வ ஷத்தாத்தில் அம்ரி வ பித் னத்தில் கப்ரீ. அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் ஷர்ரி மா யலிஜ பில்லெலி வ மின்ஷர்ரி மாயலிஜ பின்ன ஹாரி வமின்ஷர்ரி மா தஹுப்பு பிஹிர்ரியாஹ யாஅர்ஹமர் ராஹிமீன்.

ஸுப்ஹானக்க மா அபத்னுக்க ஹக்க இபாதத்திக்க யா அல்லாஹு. ஸுப்ஹானக்க மா தக்கர்னுக்க ஹக்க திக்ரிக்க யா அல்லாஹு. ஸுப்ஹானக்க மா ஷகர்னுக்க ஹக்க ஷுக்ரிக்க யா அல்லாஹு ஸுப்ஹானக்க மா கஸத்னுக்க ஹக்க கஸ்திக்க யா அல்லாஹு. அல்லாஹும்ம ஹப்பிப் இலைனல் ஈமான. வ ஜய்யின்ஹு பீ குலூபினு வ கர்ரிஹ் இலைனல் குப்ர, வல் புஸூக்க, வல் இஸ்யான்; வஜ்அல்னு மினர்ராஷிதீன்.

அல்லாஹும்ம கினீ அதாபக்க யௌம தப்அது இபா தக்க. அல்லாஹும்மஹ்தினீ பில்ஹுதா, வநக்கினி பித் தக்வா, வஃபிர்லீ பில்ஆகிரா வல்ஊலா. அல்லாஹும்ம மப்ஸுத் அலைனு மின் பரகாத்திக்க, வ றஹ்மத்திக்க, வ பலு லிக்க, வரிஜ்கிக்க. அல்லாஹும்ம இன்னீ அஸ்லுக்கன்ன யீமல்முக்கீமல்லதீ லா யஹூலு வ லா யஜூலு அபதா. அல்லாஹும்ம இன்னீ ஆயிதுன் பிக்க மின்ஷர்ரி மா அஃ தைத்தனு வ மின் ஷர்ரி மா மனஃதனு. அல்லாஹும்ம தவப்பனு முஸ்லிமீன வ அல்ஹிக்னு பிஸ்ஸாலிஹீன கைர

கஜாயா வ லா மத்தூனீன. றப்பி யஸ்ஸிர் வ லார் துஅஸ்ஸிர் றப்பி தம்மிம் பி ல் கை ரி இன்னஸ்ஸாவல்மத்வத மின் ஷஆரில்லாஹ் பமன் ஹஜ்ஜல் பைத்த அவிஃதமர பலா ஜுனூஹ அலைஹி அன்ய்யத்தவ்வப பிஹிமா வமன் ததவ்வஅ கைரன் பஇன்னல்லாஹ ஷாக்கிறுன் தலீம்.

(அல்லாஹுத்தஆலா மிகப்பெரியவனுக இருக்கிற நிலை மையில் பெரியவன். எல்லாப் புகழும் ஏராளமாக அல் லாஹ்விற்கே தகும். இன்னும் மகத்துவமுள்ள அல்லாஹ் தூயவன். இரக்கமுள்ள அவனது புகழைக்கொண்டு அந்தி யிலும் சந்தியிலும் துதிக்கிறேன். இன்னம் இரவில் நின்றும் சொற்ப நேரம் அவனுக்கு ஸுஜூது செய்வாயாக. இன் னும் இரவில் அதிக நேரம் அவனைத் துதிப்பாயாக. வணக் கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. அவன் தனித்தவன். தனது வாக்குறுதியை நிறைவேற்றியவன். தனது அடியாருக்கு உதவி புரிந்தவன். அவன் படைகளைத் தன்னந்தனியாகத் தோற்கடித்தான். அவன் தனித்தவன் அவனுக்கு முன்னர் எப்பொருளும் இருக்கப்போவதில்லை.

அவன் ஜீவிக்கக் செய்கிறுன். இன்னும் மரிக்கச் செய்கிறுன். அவன் ஜீவியன், நித்தியன், மரிக்காதவன், அவன் னகயில்தான் சகலவிதமான நன்மைகளுமிருக்கின் றன. இன்னும் அவன் பாலிலேயே மீளுகையிருக்கிறது. அவன் எல்லா வஸ்துவிலும் பேராற்றலுள்ளவன். எனது றப்பே! மன்னிப்புச் செய்வாயாக, கிருபை செய்வாயாக, கூமிப்பாயாக, இரக்கம் காட்டுவாயாக. நீ அறிந்திருப்பதைப் புரக்கணிப்பாயாக. நிச்சயமாக நாங்களறியாததை நீ அறி கிறுய்.

நீதான் மிகவும் மிகைத்தவனும் மிக இரக்க முள்ள வனுமான அல்லாஹ். எனது றப்பே! உனது நல்லடியார் களுடன் ஈடேற்றம் பெற்றவர்களாக, பாக்கியவான்களாக, நரகை விட்டு எங்களை ரட்சிப்பாயாக. ஸாலிஹான அந்த நல்லடியார்கள் நபிமார்கள், ஸித்திக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்களில் நின்று முள்ளவர்கள். இன்னும் அவர்கள் துணையாயிருப்பது அழகாயிற்று. இதுதான் அல்லாஹ் வில் நின்றுமுள்ள கடாக்ஷம். இன்னும் அல்லாஹ் மிக அறிந்தவனாக இருப்பது போதுமானது.

வணக்கத்திற்குரியவன் மெய்யாகவே அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. வணக்கத்தாலும், சுதந்திரத்தா லும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிரவேறு யாருமில்லை. மார்க்கத்தை அவனுக்கே அந்தரங்க சுத்தி யாக்கி வைத்தவர்களாக அவனையே யல்லாமல் வேறுயாரை யும் வணங்கமாட்டோம். காபிர்கள் இதற்காக அதிருப்தி யடைந்தாலும் சரியே. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத்தவிர வேறுயாருமில்லை. அவன் ஏகன், ஒருவன், ஒற்றையானவன், தேவையற்றவன், அவன் மனைவியையோ சந்ததியையோ தனக்கேற்படுத்திக் கொள்ளாதவன். அர சாங்கத்தில் அவனுக்கு யாரும் கூட்டாளி இல்லை. அவ னுக்கு யாரும் காரியஸ்தன் இல்லை. இன்னும் அவனைத் தக்பீர் சொல்லி பெருமைப்படுத்து.

"என்னை நீங்கள் பிரார்த்தியுங்கள் உங்கள் பிரார்த்த னையை அங்கீகரித்து உங்களுக்காவன செய்கிறேன்" என்று அருளப்பட்ட உனது வேதத்தில் நீ கூறி இருக்கிறாய். ஆண் டவனே! உன்னை நாங்கள் பிரார்த்தித்தோம். எங்கள் றப்பே! நீ எங்களுக்குக் கட்டளையிட்டதுபோல எங்களுக்கு நீ

பிழை பொறுப்பாயாக, நிச்சயமாக நீ வாக்குறுதிக்குமாறு செய்யமாட்டாய். எங்கள் றப்பே! உங்களது றப்பை நீங்கள் விசுவாசங் கொள்ளவேண்டும் என ஈமானின்பால் அழைப்பவர் அழைத்த சப்தத்தை நாங்கள் செவியேற்றோம். எனவே, நாங்கள் விசுவாசங்கொண்டோம். எங்கள் றப்பே! எனவே, எங்களது பாவங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக. எங்களது தீமைகளை எங்களுக்குப் பரிகரிப்பாயாக. நல்லோர்களுடன் எங்களை மரிக்கச் செய்வாயாக.

எங்கள் றப்பே! இன்னும் உனது றஸூல்மார்களிடம் எங்களுக்கு வாக்களித்ததை எங்களுக்குத் தந்தருள்வாயாக. இன்னும் கியாமத்து நாளில் எங்களுக்கு இழுக்கையுண்டாக்காதே. நிச்சயமாக நீ வாக்குறுதிக்குமாறு செய்யமாட்டாய். எங்கள் றப்பே! உன்மீதே நாங்கள் தவக்குல் வைத்தோம்; இன்னும் உன்பாலிலேயே நாங்கள் மீண்டோம். உன்பாலிலேயே மீளுகையுமிருக்கிறது.

எங்கள் றப்பே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களை முந்திக்கொண்ட எங்கள் சகோதரர்களுக்கும் பிழை பொறுப்பாயாக. இன்னும் ஈமான் கொண்டவர்கள் பால் எங்கள் இருதயங்களில் நெருக்கடியை உண்டாக்காதே; நிச்சயமாக நீ இரக்கமுள்ளவன் அன்புள்ளவன்.

எங்கள் றப்பே! எங்களது பிரகாசத்தை எங்களுக்கு நிறப்பமாக்கித்தந்தருள். இன்னும் எங்களுக்குப் பிழை பொறுப்பாயாக. நிச்சயமாக நீ சகல வஸ்துவின் பேரிலும் ஆற்றலுள்ளவன். நாயனே! உன்னிடத்தில் இம்மையிலும் மறுமையிலுமுள்ள சகலவிதமான நன்மையையும் நான் கேட்கிறேன். இன்னும் இம்மையிலும் மறுமையிலுமுள்ள

சகலவிதமான தீமைகளையும் விட்டுக் காவல் தேடுகிறேன். எனது பாவத்திற்காக உன்னிடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன். உனது கிருபையை உன்னிடம் கேட்கிறேன்.

ஆண்டவனே! எனது றப்பே! கல்வியை எனக்கு அதிகமாக்குவாயாக. எனக்கு நீ நேர் வழியைக் காட்டிய பிறகு, எனது இருதயத்தைச் சருகச் செய்யாதே. உன்னிடமிருந்து எனக்கு றஹ்மத்தை அளிப்பாயாக. நிச்சயமாக நீதான் நன்கொடையளிப்பவன். அல்லாஹ்வே! எனது பார்வையிலும், செவியிலும் எனக்குச் சவுக்கியத்தைத் தந்தருளுவாயாக. வணக்கத்திற்குரியவன் உன்னைத்தவிர வேறுயாருமில்லை. நீ தூயவன் நிச்சயமாக நான் அக்கிரமஸ்தர்களில் நின்று மிருக்கிறேன். நாயனே! குப்ரையும் தரித்திரத்தையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். நாயனே! உனது திருப்தியைக்கொண்டு உன் கோபத்தை விட்டுக் காவல் தேடுகிறேன். உனது மன்னிப்பைக்கொண்டு உனது வேதனையைவிட்டுக் காவல் தேடுகிறேன். இன்னும் உன்னைக்கொண்டு உன்னை விட்டுக் காவல் தேடுகிறேன். நீ உனது நப்ஸைப் புகழ்ந்து கொண்டதுபோல உன்னைப் புகழ்ந்து முடித்துவிட என்னால் இயலாது. நீ பொருந்திக் கொள்ளும் மட்டும் உனக்கே சர்வ புகழும் தகும்.

நாயனே! நீ அறிந்துள்ள நன்மையில் நின்றும் உன்னை நான் கேட்கிறேன். இன்னும் நீ அறிந்திருக்கிற யாவற்றையும் விட்டு உன்னிடம் மன்னிப்புத் தேடுகிறேன். நிச்சயமாக நீதான் மறைவானவற்றை மிக அறிந்தவன், வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிரவேறு யாருமில்லை. அவன் அரசன், உண்மையானவன், தெளிவாக்குபவன்.

நாயனே! கப்றுடைய வேதனையை விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது அல்லாஹ்வின் றஸூல், வாக்குறுதியில் உண்மையாளர். ஆமீன்.

நாயனே! இஸ்லாத்தில் சேர எனக்கு வழிகாட்டியது போல, நான் அதிலேயே மரிக்கும்படி செய்வாயாக. என்னை விட்டு அதனை நீ அகற்றிவிட வேண்டாம் என்று நான் உன்னைக்கேட்கிறேன். நாயனே! எனது இருதயத்தில் பிரகாசத்தை, எனது செவியில் பிரகாசத்தை, எனது பார்வையில் பிரகாசத்தை ஏற்படுத்துவாயாக. நாயனே! எனது இருதயத்தை எனக்கு விரிவாக்கிவைப்பாயாக. எனது காரியத்தை எனக்கு இலேசாக்கி வைப்பாயாக. இன்னும் இருதயத்தின் ஊசாட்டங்களின் நீமையையும், காரியம் சிதறிப் போவதையும், கப்றுடைய பித்னாவையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன்.

நாயனே! இரவில் நுளைவதன் தீங்கையும், பகலில் நுளைவதன் தீங்கையும், காற்றுகள் வீசிக்கொண்டு வருவதன் தீங்கையும் விட்டு நான் காவல் தேடுகிறேன். கிருபை செய்பவர்களுக்கெல்லாம் மகா கிருபையாளனே. நீ தூயவன். உன்னை வணங்கவேண்டிய அளவிற்கு உன்னை நாங்கள் வணங்கவில்லை- யா அல்லாஹ்! நீ தூயவன் உன்னை ஜபிக்க வேண்டிய அளவிற்கு நாங்கள் உன்னை ஜபிக்கவில்லை. யா அல்லாஹ்! நீ தூயவன். உனக்கு நன்றி செலுத்த வேண்டிய அளவிற்கு நாங்கள் உனக்கு நன்றி செலுத்தவில்லை. யா அல்லாஹ்! நீ தூயவன். உன்னை நாட வேண்டிய அளவிற்கு நாங்கள் உன்னை நாடவில்லை யா அல்லாஹ்.

நாயனே! எங்களுக்கு ஈமானில் அன்பை யுண்டாக்கு வாயாக. எங்கள் இருதயங்களில் அதனை அழகாக்குவா யாக. இன்னும் எங்களுக்கு குப்ரையும், பாவிக்தனத்தை யும், பாபத்தையும் வெறுப்பாக்கி வைப்பாயாக. நேர் வழியை அடைந்தவர்களில் எங்களை ஆக்குவாயாக. நாயனே! உனது அடியார்களை நீ எழுப்பும் நாளில், உனது வேதனையை என்னை விட்டுக் காத்தருள்வாயாக.

நாயனே! நேர்வழியைக்கொண்டு எனக்கு வழி காட்டு வாயாக. தக்வாவைக்கொண்டு என்னைச் சுத்தப்படுத்து வாயாக. எனக்கு மறுமையிலும் இம்மையிலும் பிழை பொறுப்பாயாக. நாயனே! உனது பரக்கத்துகளிலும் உனது கிருபையிலும், கடாக்ஷத்திலும் சம்பத்திலும் மிருந்து எங்களுக்கு விரிவாக்குவாயாக. நாயனே! ஒரு போதும் நீங்காததும் அசைபாததுமான நிலையுள்ள பாக்கி யத்தை உன்னிடம் நான் கேட்கிறேன். நாயனே! எங்க ளுக்கு நீ கொடுத்திருப்பதிலுண்டான தீமையையும், எங்க ளுக்குக் கொடுக்காமல் விலக்கி வைத்திருப்பதிலுள்ள தீமையையும்விட்டு உன்னைக்கொண்டு நான் காவல் தேடு பவனாக இருக்கிறேன். நாயனே! முஸ்லிம்களாக எங்களை மரிக்கச் செய்து நல்லோர்களுடன் எங்களைச் சேர்ப்பாயாக. நாயனே! நப்பே! சுலபமாக்குவாயாக. சிரமமுண்டாக் காதிருப்பாயாக. நப்பே! நன்மைபைக்கொண்டு நிறப்ப மாக்குவாயாக.!

நிச்சயமாக ஸபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அடை யாளங்களில் நின்று முள்ளவை. எனவே, எவர் அவ் வீட்டை ஹஜ்ஜுச் செய்தாலும் அல்லது உம்ரூச் செய்தாலும் இவ்விரண்டிலும் தவாபு செய்வது அவர்

மீது குற்றமில்லை. இன்னும் எவர் நன்மையை மேலதிக மாகச் செய்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் நன்றியறிதலை ஏற்றுக் கொள்பவன். மிகவும் அறிபவன்.

ஸா செய்து முடிந்தவுடன் ஓதும் துஆ

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا وَعَافِنَا وَاعْفُ عَنَّا وَعَلَى طَاعَتِكَ وَشُكْرِكَ
أَعِنَّا وَعَلَى غَيْرِكَ لَا تَكِلْنَا وَعَلَى الْإِيمَانِ وَالْإِسْلَامِ أَكْرِمْنَا
جَمِيعًا تَوَفَّنَا وَأَنْتَ رَاضٍ عَنَّا اللَّهُمَّ ارْحَمْنِي بِتَرْكِ الْمَعَاصِي
أَبَدًا مَا أَبْقَيْتَنِي وَارْحَمْنِي أَنْ أَتَكَلَّفَ مَا لَا يَعْنِينِي
وَارْزُقْنِي حُسْنَ النَّظَرِ فِيمَا يُرْضِيكَ عَنِّي يَا أَرْحَمَ الرَّاحِمِينَ

றப்பனா தகப்பல் மின்னா வஆபினா வஃபு அன்னா வ அலா தாஅத்திக வ ஷுக்ரிக்க அஇன்னா வஅலா கைரிக்க லா தகில்னா வ அலல்ஈமானி வல் இஸ்லாமில் காமிலி ஜம் அன் தவப்டனா வ அன்த ராலின் அன்னா. அல்லாஹும்மர் ஹம்னீ பிதர்க்கில் ம ஆஸீ அபதன் மா அப்கைத்தனீ வர் ஹம்னீ அன்அத்த கல்லப மாலா யுஃனீனி வர்ஜுக்னீ ஹுஸ்னன்னல்ரி பீ மா யுர்லீக்க அன்னீ யா அர்ஹமர்ராஹி மீன்.

எங்கள் றப்பே! எங்களில் நின்றும் அங்கீகரிப்பா யாக. இன்னும் எங்களுக்கு சௌக்கியத்தைக் கொடுப்பா யாக. இன்னும் எங்களை மன்னிப்பாயாக. இன்னும் உனது வழிப்பாட்டிலும் நன்றி செலுத்துவதிலும் எங்களுக்கு உதவி புரிவாயாக. இன்னும் உன்னல்லாதவரிடம் எங்களைச்

சேரவிடாதே பரிபூரணமான ஈமான் இஸ்லாத்தின்மீது, எங்கள்மீது நீ திருப்தியாக இருக்கிற நிலைமையில் எங்களை மரிக்கச் செய்வாயாக.

நாயனே! என்னை நீ ஜீவித்திருக்கச் செய்யும் காலமெல்லாம் எப்பொழுதும் பாவத்தை விட்டு விடுவதற்கு எனக்குக் கிருபை செய்வாயாக. எனக்கு அவசியமற்ற காரியத்தில் நான் ஈடுபடாமலிருக்க எனக்கருள் புரிவாயாக. இன்னும் என்னைப்பற்றி உனக்குத் திருப்தியளிக்கக் கூடிய காரியத்தில் எனக்கு நல்ல பார்வையைத் தந்தருள்வாயாக. கிருபை செய்வோர்க்கெல்லாம் மிகக் கிருபையுள்ளோனே.

உம்ரவின் நிய்யத்து

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ الْعُمْرَةَ فَيَسِّرْهَا لِيْ وَتَقَبَّلْهَا مِنِّيْ

அல்லாஹும்ம இன்னீ உரீதுல் உம்ரத்த பயஸ்ஸிர்ஹாலீ வதகப்பல்ஹா மின்னீ.

"நாயனே! நான் உம்ராச் செய்ய நாடுகிறேன். அதனைச் செய்ய எனக்குச் சுலபமாக்கியருள்வதுடன், என்னிலிருந்து அதனை அங்கீகரிப்பாயாக.

ஹஜ்ஜுக்கு நிய்யத்துச் செய்தல்

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ الْحَجَّ فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ

அல்லாஹும்ம இன்னீ உரீதுல் ஹஜ்ஜ பயஸ்ஸிர்ஹுலீ வதகப்பல்ஹு மின்னீ.

நாயனே! நான் ஹஜ்ஜுச் செய்ய நாடுகிறேன். அதனை எனக்கு இலேசாக்கி வைத்து, என்னிலிருந்து அதனை அங்கீகரிப்பாயாக.

ஹஜ்ஜு உம்ரா ஆகிய இரண்டிற்கும் நிய்யத்து

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ الْحَجَّ وَالْعُمْرَةَ فَيَسِّرْهُمَا لِيْ وَتَقَبَّلْهُمَا مِنِّيْ

அல்லாஹும்ம இன்னீ உரீதுல் ஹஜ்ஜ வல்உம்ரத்த பயஸ்ஸிர்ஹுமா லீ வதகப்பல்ஹுமா மின்னீ.

நாயனே! நான் ஹஜ்ஜையும் உம்ராவையும் நாடுகிறேன். அவை இரண்டையும் நீ இலேசாக்கி வைத்து அவையிரண்டையும் என்னிலிருந்து அங்கீகரிப்பாயாக.

தல்பியா ஒதி இஹ்ராம் கட்டுவதன் நிய்யத்து

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ لَا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ
وَالْمُلْكَ لَا شَرِيْكَ لَكَ اَللّٰهُمَّ اَحْرَمَ لَكَ شَعْرِيْ وَبَشَرِيْ وَجِلْدِيْ
وَجَمِيْعَ جَوَارِحِيْ مِنَ الطِّيْبِ وَالنِّسَاءِ وَكُلُّ شَيْءٍ حَرَّمْتَهُ عَلَى
الْمُحْرِمِ اِبْتِغَيْ بِذَالِكَ وَجْهَكَ الْكَرِيْمَ يَا رَبَّ الْعَالَمِيْنَ

லப்பைக். அல்லாஹும்ம லப்பைக். லாஷரீக்க லக்க லப்பைக். இன்னல் ஹம்த வன்னிஃமத்த லக வல்முல்க லாஷரீக்க லக்க. அல்லாஹும்ம உஹ்ரிமு லக்க ஷஃரீ வ பஷரீ வஜஸதீ வ ஜமீஅ ஜவாரிஹீ மினத்தீபி வன்னிஸாஇ வகுல்ல ஷையின் ஹர்ரம்தஹு அலல்முஹ்ரிமி அப்தகீ பிதாலிக்க வஜ்ஹக்கல் கரீம யா றப்பல் ஆலமீன்.

அடிபணிந்தேன் நாயனே! அடிபணிந்தேன். அடிபணிந்தேன். உனக்கு இணையானவன் இல்லை. அடிபணிந்தேன். நிச்சயமாகச் சர்வ புகழும் அருட்கொடையும் உனக்கே இருக்கின்றன. இன்னும் அரசுரிமையும்,

நாயனே! எனது உரோமத்தையும் எனது தேகத்தை யும் எனது மேனியையும், எனது அவயவங்கள் யாவையும் வாசனை, ஸ்திரீ இஹ்ராம் கட்டியவருக்கு நீவிலக்கி இருக்கிற எல்லாக் காரியங்களையும் விட்டு நான் எனக்கு விலக்கலாக்கிக் கொண்டேன். உனது கருணையான முகத்தை இதனைக் கொண்டு நான் தேடுகிறேன். கிருபையாளர்களுக்கெல்லாம் மகா கிருபையுள்ளவனே.

மதீனாவின் ஜியாரத்து

திருமதீனாவில் மஸ்ஜித் நபவியில் பிரவேசித்தவுடன் தஹிய்யத்துல் மஸ்ஜித் என்று நிய்யத்துச் செய்து இரண்டு ரக்அத்துத் தொழுதுவிட்டு அப்புறம், திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பூத உடலம் மறைக்கப்பட்டுள்ள ரௌலா ஷரீபிற்கு வந்து நாயகம் (ஸல்) அவர்களது முகத்திற்கு நேராக மிகவும் அமைதியாகவும் மரியாதையாகவும் ஒழுக்கமாகவும் நின்று பயபக்தியுடனும் பணிவுடனும் மன ஒர்மையுடன் கண்களை மூடிக்கொண்டு நின்று அடியிற்கண்டவாறு ஸலாம் சொல்லவேண்டும்.

اَلسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللّٰهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا نَبِيَّ اللّٰهِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا خِيْرَةَ خَلْقِ اللّٰهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا صَفْوَةَ
اللّٰهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدَ الْمُرْسَلِيْنَ وَخَاتَمَ النَّبِيِّيْنَ وَقَائِدَ
الْغُرِّ الْمُحَجَّلِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى اَهْلِ بَيْتِكَ الطَّيِّبِيْنَ
الطَّاهِرِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى اَزْوَاجِكَ الطَّاهِرَاتِ اُمَّهَاتِ

اَلْمُؤْمِنِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى اَصْحَابِكَ اَجْمَعِيْنَ وَعَلٰى
سَائِرِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ جَزَاكَ
اللّٰهُ عَنَّا مَا جَزٰى نَبِيًّا عَنْ اُمَّتِهٖ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ
اِنَّكَ عَبْدُهٗ وَرَسُوْلُهٗ وَاَمِيْنُهٗ عَلٰى وَحْيِهٖ وَخَيْرُ خَلْقِهٖ وَاَشْهَدُ
اَنَّكَ قَدْ بَلَّغْتَ الرِّسَالَةَ وَاَدَّيْتَ الْاَمَانَةَ وَنَصَحْتَ الْاُمَّةَ
وَجَاهَدْتَ فِى اللّٰهِ حَقَّ جِهَادِهٖ

اَللّٰهُمَّ اٰتِهِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ
وَالدَّرَجَةَ الْعَالِيَةَ الرَّفِيْعَةَ وَابْعَثْهُ الْمَقَامَ الْمَحْمُوْدَ الَّذِيْ
وَعَدْتَهٗ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى
اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ وَبَارِكْ
عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

அல்ஸலாமு அலைக்க யா றஸூலல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யா நபியல்லாஹ. அஸ்ஸலாமு அலைக்க யா கீரத்த கல்கில்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யா ஸட்வத்தல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யா ஸெய்யிதல் முர்ஸலீன் வகாத்த மன்னபிய்யீன். வகாயிதல் குர்ரில் முஹஜ்ஜலீன். அஸ்ஸலாமு அலைக்க வ அலா அஹ்லி பைத்திக்கத் தையிபீனத் தாஹிரீன். அஸ்ஸலாமு அலைக்க வஅலா அஜ்வாஜிக்கத் தாஹிராத்தி உம்மஹாத்தில்மூமினீன். அஸ்ஸலாமு அலைக்க


வ அலா அஸ்ஹாபிக்க அஜ்மஈன். வ அலாஸாயிரில் அன்பி யாஇ வல்முர்ஸலீன வ இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் ஜஸாக் கல்லாஹு அன்னு மாஜஸா நபிய்யன் அன் உம்மத்திஹி அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்னக்க அப்துஹு வ றஸூலுஹு வ அமீனுஹு அலா வஹ்யிஹி வசைரு கல்கிஹி வ அஷ்ஹது அன்னக்க கது பல்லஃதர்ரிஸாலத்தி வ அத்தைத்தல் அமானத்த வ நஸஹ்தல் உம்மத வஜாஹத்த பில்லாஹி. ஹக்க ஜிஹாதிஹி.

அல்லாஹும்ம ஆத்திஹில் வஸீலத்த வல்பஸீலத்த வத்தரஜத்தல் ஆலியத்தர் ரபீஅத்த வப்அத்ஹுல் மக்காமல் மஹ்மூதல்லதீ வஅத்தஹு இன்னக்க லாதுக்லிபுல் மீஆத்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலிமுஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம இன் னக ஹமீதுன் மஜீது வ பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் கமா பாரக்த அலா ஆலி இப்ராஹீம இன் னக்க ஹமீதுன் மஜீத்.

அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு ஸலாம். அல் லாஹ்வின் நபியே! தங்களுக்கு ஸலாம். அல்லாஹ்வின் சிருஷ்டியின் மேலானவரே தங்களுக்கு ஸலாம். அல்லாஹ் வால் தெளித்து வடித்தெடுக்கப்பட்டவரே! தங்களுக்கு ஸலாம். முர்ஸலான நபிமார்களின் தலைவரே! நபிமார்களின் முத்திரையானவரே! வெள்ளைக் குதிரை வீரர்களின் தளகர்த் தரே! தங்களுக்கு ஸலாம். தங்களுக்கும், நல்லோர்களும் பரிசுத்தர்களுமான தங்கள் குடும்பஸ்தர்களுக்கும் ஸலாம். தங்களுக்கும், பரிசுத்தர்களும் மூமின்களின் தாய்மார்களு மான தங்கள் வாழ்க்கைத் துணைவிகளுக்கும் ஸலாம். தங்

மஸ்ஜித் நபவீ — மதினு முனவ்வரா



கள் வாழ்க்கைத் துணைவிகளுக்கும் ஸலாம். தங்களுக்கும் தங்களது எல்லா ஸஹாபிகளுக்கும், ஏனைய நபிமார்கள் மூர்ஸல்கள், அல்லாஹ்வின் ஸாலிஹான அடியார்களுக்கும் ஸலாம்.

ஒரு நபிக்கு அவரது உம்மத்துமார்கள் சார்பாக அல்லாஹ் அளித்துள்ள நற்கூலியைப் பார்க்கிலும் அதிகமேன்மையான நற்கூலியை தங்களுக்கு அல்லாஹுத் தஆலா கொடுப்பானாக. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சாக்ஷி கூறுகிறேன். தாங்கள் அவனது அடியாராகவும் தூதராகவும் இருக்கிறீர்கள். அவனது வஹியை அடைந்து அறிவிக்கும் விஷயத்தில் அமீனாக இருக்கிறீர்கள், அவனது சிருஷ்டியில் சிறந்தவர்கள் என்று நான் சாக்ஷி கூறுகிறேன். தாங்கள் றஸூலில் பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றி விட்டீர்கள், அமானிதத்தைக் கொடுத்து விட்டீர்கள், உம்மத்துமார்களுக்கு உபதேசித்து விட்டீர்கள், அல்லாஹ்வில் ஜிஹாது செய்ய வேண்டிய அளவிற்கு ஜிஹாது செய்தீர்கள் என்று நான் சாக்ஷி கூறுகிறேன்.

துஆ

நாயனே! அவருக்கு வஸீலாவையும் உயர்ந்த மேன்மையான அந்தஸ்தையும் கொடுப்பாயாக. அவருக்கு நீ வாக்களித்திருக்கிற மக்காமூல் மஹ்மூதில் அவரை அனுப்புவாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதிக்கு மாறு செய்யாதவன்.

நாயனே! இப்ராஹீமுக்கு நீ கருணை செய்ததுபோல முஹம்மதுக்கும் முஹம்மதுடைய குடும்பத்தாருக்கும் நீ

கருணை செய்வாயாக. நிச்சயமாக நீ புகழப்பட்டவன் தலைமைத்தனமுள்ளவன். இப்ராஹீமுடைய குடும்பத்தாருக்கு நீ பரக்கத்துச் செய்ததுபோல முஹம்மதுக்கும் முஹம்மதுடைய குடும்பத்தாருக்கும் நீ பரக்கத்துச் செய்வாயாக. நிச்சயமாக நீ புகழப்பட்டவன் தலைமைத்தனமுள்ளவன்.

ஸலாம் சொல்லும்போது நாயகம் (ஸல்) அவர்களுக்கு நேராக நின்று ஸலாம் சொல்லவேண்டும். துஆச்செய்யும் போது கிப்லாவின் பக்கமாக திரும்பிக் கொள்ளவேண்டும்.

ஸித்தீக் (றலி) அவர்களுக்கு ஸலாம்

அப்புறம் வலப்புறமாக ஒரு முழம தள்ளி ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்களது முகத்திற்கு நேராக நின்று பின்வருமாறு ஸலாம் சொல்லவேண்டும்.

اَلسَّلَامُ عَلَيْكَ يَا خَلِيْفَةَ سَيِّدِ الْمُرْسَلِيْنَ جَزَاكَ اللّٰهُ عَنِ الْاِسْلَامِ وَالْمُسْلِمِيْنَ خَيْرًا اَللّٰهُمَّ ارْضَ عَنْهُ

அஸ்ஸலாமு அலைக்க யா கலீபத்த ஸெய்யிதில் முர்ஸலீன் ஜஸாக்கல்லாஹு அனில் இஸ்லாமி வல்முஸ்லிமீன கைரன் அல்லாஹும்ம இர்ல அன்ஹு.

முர்ஸல்களுக்கு நாயகமானவர்களின் கலீபாவே தங்களுக்கு ஸலாம். இஸ்லாமின் சார்பாகவும் முஸ்லிம்களது சார்பாகவும் நன்மையை அல்லாஹ் தங்களுக்குக் கூலி கொடுப்பானாக. நாயனே! அவரைப் பொருந்திக் கொள்வாயாக.

பாறூக் (றலி) அவர்களுக்கு ஸலாம்

அப்புறம் வலப்புறமாக ஒரு முழம் தள்ளி ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்களுடைய முகத்திற்கு நேராக நின்று பின் வருமாறு ஸலாம் சொல்ல வேண்டும்.

اَلسَّلَامُ عَلَيْكَ يَا اَمِيْرَ الْمُؤْمِنِيْنَ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ
جَزَاكَ اللّٰهُ عَنِ الْاِسْلَامِ وَالْمُسْلِمِيْنَ خَيْرًا اَللّٰهُمَّ اَرْضَ عَنْهُ

அஸ்ஸலாமு அலைக்க யா அமீரல் மூமினீன வறஹ்மத் துல்லாஹி வ பரகாத்துஹு. ஜஸாக்கல்லாஹு அனில் இஸ்லாமி வல் முஸ்லிமீன கைரன். அல்லாஹும்ம இர்ல அன்ஹு.

மூமின்களின் அமீரே தங்களுக்கு அல்லாஹ்வின் கிருபையும் அவனது பரக்கத்துகளும் ஸலாமும் உண்டாவ தாக. இஸ்லாம் சார்பாகவும், முஸ்லிம்கள் சார்பாகவும் அல்லாஹ் தங்களுக்கு நன்மையைக் கூலிக் கொடுப்பானாக. நாயனே! அவரைப் பொருந்திக் கொள்வாயாக.



அனுபந்தம் 2

சில ஸூறத்துகள்

மக்கியா ❁ ஸூறத்துல் பாத்திஹா ❁ ஏழு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பஞ் செய்கிறேன்.)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۝

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

1. அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் தகும்.

اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

அர்ரஹ்மா னிர்ரஹீம்.

2. (இவ்வுலகில் நல்லோர் தீயோர் யாவருக்கும் சம மாக) பெருங்கருணை புரிபவன். (மறுமையில் தன் பக்தர் களுக்கு மட்டிலும்) அருள் பாலிப்பவன்.

مَالِكِ يَوْمِ الدِّيْنِ ۝

மாலிகி யவ்மித்தீன்.

3. நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி.

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝

இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தஈன்.

4. உன்னையே (நாங்கள்) வணங்குகிறோம். இன்னும் உன்னிடத்திலேயே (நாங்கள்) உதவி தேடுகிறோம்.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

இஹ்தினஸ்ஸிராதல் முஸ்தகீம்

5. நேரான வழியில் எங்களை ஸ்திரமாகவைப்பாயாக.

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம்.

6. எவருக்கு நீ அருட்கொடையளித்திருக்கிறாயோ அவருடைய வழியில்.

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝

கய்ரில் மக்லூபி அலைஹிம் வலல்லால்லீன்.


7. கோபத்திற்குள்ளானவர்களி(ன் வழியி)லும், வழி தவறி விட்டவர்களி(ன் வழியி)லும் அன்று. (ஆமீன்)

இந்த ஸூறத்து தொழுகையில் ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஓதப்படுவது. இமாம் ஜமாஅத்தாகத் தொழுதால் மட்டிலும் ஹனபி மதுஹபுக்காரர்களில் முக்கதீகள் ஓதமாட்டார்கள். இதில் அல்லாஹுத் தஆலாவின் நான்கு தன்மைகளைக் கூறி முதலாவதாக அவனைப்புகழ்ந்துரைக்கப்பட்டிருக்கிறது. அப்புறம் அடியார்கள் அவனிடத்தில் தான் உதவி தேட வேண்டும் அவனைத்தான் வணங்க வேண்டும் என்ற கொள்கை, அவனிடம் விண்ணப்பம் செய்கிற தோரணையில் விபரிக்கப்பட்டிருக்கிறது. இறுதியாக மனிதன் முக்கியமாகக் கேட்க வேண்டிய பிரார்த்தனை யாது என்ற விபரம் கூறப்பட்டிருக்கிறது.

நேரான பாதை என்பது இஸ்லாம் மதம். இஸ்லாமிய சன்மார்க்க பக்தியின் காரணமாக மனிதர்கள் தொழுவதற்குச் சென்றாலும், அப்பக்தி இறுதிவரை நிலைத்திருக்கு மென்ற நிச்சயமில்லாததால், இஸ்லாம் மத பக்தியை இறுதிவரை ஸ்திரமாக வைக்கும்படியும், இஸ்லாம் மத பக்தியில் அளவுக்கு அதிகமாகச் சென்று தங்களது நபிமார்களை மீறி, சன்மார்க்கத்திற்கு விரோதம் செய்ததால் யஹூதிகள் அல்லாஹுத் தஆலாவின் கோபத்திற்கு ஆளாகிவிட்டனர். கிறிஸ்துவர்கள் தங்கள்

நபியின்பால் அளவுக்கு மீறிய பக்தி செலுத்தி அல்லாஹுத் தஆலாவின் புதல்வர் என்றும், தெய்வாம்சத்தில் அல்லாஹுத் தஆலாவிற்குச் சமம் என்றும் பலவாறு நம்பி மார்க்கத்தை விட்டு வழி தவறிவிட்டனர். இவ்விரு வகையினரை இவ்வத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிட்டு கூறி இவர்கள் சென்ற வழியில் அல்லாமல் நேரான சன் மார்க்கத்தில் ஸ்திரமாக இருக்கவேண்டும் என்று பிரார்த் திக்க வேண்டுமென்பது இதன் கருத்து.

மதனிய்யா ❁ ஸூறத்துன்னஸ் ❁ ஆறு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ۝

குல்அவூது பிரப் பின்னஸ்.

1. மனிதர்களுக்கு றப்பானவனிடத்தில் (நான்) காவல் தேடுகிறேன்" என்று (நபியே) நீர் கூறுவீராக.

مَلِكِ النَّاسِ ۝

மலிக்கின்னஸ்.

2. மனிதாகளுக்கு அரச டத்தில்,

اِلٰهِ النَّاسِ ۝

இலா ஹின்னஸ்.

3. மனிதர்களுக்கு நாயனிடத்தில்,

مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۝

மின்ஷர்ரில் வஸ்வா ஸில் கன்னஸ்.

4. (மனதில் தோன்றும்) ஊ ட்டத்தின் தீங்கை வடடு. கன்னஸ் என்பவனின் (தீங்கை விட்டு),

الَّذِيْ يُوَسْوِسُ فِيْ صُدُوْرِ النَّاسِ ۝

அல்லதீ யுவஸ்விஸு பீஸு தூரின்னஸ்.

5. அவன் மனிதர்களின் இருதயங்களில் ஊசாட்டங் களை உ ண்டு பண்ணுகிறான்.

مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۝

மினல் ஜின்னதி வன்னுஸ்.

6. ஜின்களிலும் மனிதரிலும் உள்ளவன்.

கன்னுஸ் என்னும் ஷைத்தான் பதுங்கி இருந்து கொண்டு, மனிதர்களது இருதயங்களில் தவறான பல ஊசாட்டங்களை யுண்டு பண்ணி மத விஷயத்திலும் மற்றைய விஷயங்களிலும் தப்பெண்ணங் கொள்ளும்படிச் செய்கிறான். இதனால் மனிதர்களுக்கு இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் பலவிதமான கேடுகள் உண்டாக இடமேற்படுகிறது. இவ்விதமான கேடுகளை உண்டு பண்ணுகிற ஷைத்தானை விட்டு நாம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக இறைவனிடம் துஆக்கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும். என்பது இவ்வத்தியாயத்தின் கருத்து.

மதனிய்யா ❁ ஸிறத்துல் பலக் ❁ ஐந்து ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்கட்கு மட்டிலும் அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۝

குல் அஊது பிரப்பில் பலக்.

1. பூப்பிளக்குங்காலத்திற்கு றப்பானவனிடம் காவல் தேடுகிறேன் என்று (நபியே) நீர் கூறுவீராக.

مِنْ شَرِّ مَا خَلَقَ ۝

மின் ஷர்ரி மாகலக்.

2. அவன் சிருஷ்டித்ததன் தீமையைவிட்டு,

وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَ ۝

வமின் ஷர்ரி காஸிகின் இதா வகப்.

3. இன்னும் இருளின் - அது அடர்ந்த நேரத்தின்- தீமையை விட்டு,

وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ ۝

வமின் ஷர்ரின் னப்பா தாதி பில் உகதி.

4. இன்னும் முடிச்சில் ஊதுகிறவர்களின் தீமையை விட்டு,

وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ۝

வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்.

5. பொறுமைக்காரனின் - அவன் பொறுமை கொள்ளும்போது (ஏற்படும்) - தீமையைவிட்டு (நான் காவல் தேகிறேன். என்று கூறுவீராக.)

இராக் காலங்களில் இருள் சூழும்போது மனிதருக்கு அநேக தீமைகள் ஏற்படுகின்றன. நன்றாய் இருட்டிய பிறகுதான் கள்வர்கள் கொள்ளைக்காரர்கள் முதலியவர்கள் மனிதருக்குத் தீங்கு செய்கிறார்கள். துஷ்ட மிருகங்களின் தீங்குகளும்கூட அக்காலத்தில்தான் அதிகமாக ஏற்படுகிறது. சூனியம் செய்பவர்களாலும் பொறுமைக்காரர்களாலும் மனிதருக்குப் பலவித தீமைகள் உண்டாகின்றன. எனவே, மனிதருக்கு அவனது சிருஷ்டிப் பொருள்களால் பலவிதத்திலும் தீமைகள் நிகழுகின்றன. இவ்வாறுண்டாகும் தீமைகளை விட்டு இறைவனிடம் தான் காவல் தேட வேண்டும். வேறுயாரிடமும் காவல் தேடக்கூடாது. அவன் தான் இத்தகைய தீமைகளைவிட்டுப் பாதுகாக்கக் கூடியவன் என்ற விபரம் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மக்கியா ❀ ஸிறுத்துல் இக்லாஸ் ❀ நான்கு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(தன்யாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (தன்பக்தர்களுக்கு மட்டிலும் மறுமையில்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝

குல் ஹுவல்லாஹு அஹத்.

1. அல்லாஹ் ஒருவன் என்று (நபியே நீர்) கூறுவீராக.

اَللّٰهُ الصَّمَدُ ۝

அல்லாஹுஸ் ஸமத்

2. அல்லாஹ் தேவையற்றவன்.

لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۝

லம்யலித் வலம்யூலத்.

3. அவன் (மக்களைப்) பெறவில்லை. இன்னும் (பிறருக்குப் புத்திரனுகப்) பிறக்கவுமில்லை.

وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۝

வலம்யகுன் லஹுகுபுவன் அஹத்.

4. இன்னும், அவனுக்கு ஒருவரும் நிகராக இல்லை.

இந்த ஸூறத்தில் அல்லாஹுத் தஆலாவின் தன்மைகள் விளக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாம் மதத்திற்கும் வேறு மதத்திற்கு மிடையிலுள்ள கொள்கையில் அடிப்படையான வித்தியாசம் இதிலிருந்தே உண்டாகுவதால், இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நன்முகக் கவனிக்கவேண்டும்.

விக்கிரக ஆராதனை செய்வோர்களாகிய முஷ்ரிக்குகள் அல்லாஹ¤த் தஆலாவிற்கு இணைகள் இருப்பதாகவும், கூட்டாளிகளிருப்பதாகவும், அவனுக்கு மனைவி மக்களிருப்பதாகவும், ஜனங்களை ரட்சிக்க அவன் மனித உருவமாகப் பிறப்பதாகவும் கூறி, அவனுக்கு மாதா பிதாக்களும் சகோதர சகோதரிகளிருப்பதாகவும் கூட நம்பி வருகின்றனர். யூதரும் கிறிஸ்துவரும் அவனுக்கு மக்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இவவாறான கொள்கைகள் யாவும் தப்பான வைகள் என்பது இவ்வாயத்திலிருந்து விளங்கும்.

அவன் ஒருவன். அவனுக்கு இணை துணை இல்லை. அவனுக்கு எதுவும் தேவையில்லை. அவனிடம் தான் யாவரும் தேவையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவனுக்கு மக்களில்லை. அவன் யாருக்கும் புதல்வனல்ல என்ற விபரம் இங்கு தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மக்கிய்யா ❀ ஸ¤றத்துல் லஹப் ❀ ஐந்து ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பம் செய்கிறேன்.)

تَبَّتْ يَدَآ أَبِي لَهَبٍ وَّتَبَّ ۝

தப்பத்யதா அபீலஹபின்வ் வதப்ப.

1. அபூலஹபின் இருகைகளும் நாசமாகக் கடவது இன்னும் அவன் நாசமாகிவிட்டான்.

مَآ أَغْنَىٰ عَنْهُ مَالُهُۥ وَمَا كَسَبَ ۝

மாஅக்ன அன்ஹுமாலுஹு வமா கஸப்.

2. அவனது பொருளும், அவன் சம்பாதித்ததும் அவனுக்குப் பிரயோஜனப்படவில்லை.

سَيَصْلَىٰ نَارًا ذَاتَ لَهَبٍ ۝

ஸயஸ்லா நாரன் தாதலஹபின்வ்.

3. கொளுந்து விட்டெரியும் நெருப்பில் அவன் சீக்கிரம் புகுவான்.

وَٱمْرَأَتُهُۥ حَمَّالَةَ ٱلْحَطَبِ ۝

வம்ரஅதுஹு ஹம்மாலதல்ஹதப்.

4. இன்னும் விறகு சுமப்பவளாகிய அவனது மனைவியும்.

فِي جِيدِهَا حَبْلٌ مِّن مَّسَدٍ ۝

பீஜீதிஹா ஹப்லும் மிம்மஸத்.

5. அவளது கழுத்தில் நாறுகளிலான கயிறு இருக்கிறது.

இந்த ஸ்திறத்தில் அபூல ஹபுடையவும், அவனது மனைவியினுடையவும் அறிவைக்குறித்துக் கூறப்படுகிறது. இவ்விருவரும் இஸ்லாம் மதத்திற்குக் கொடிய விரோதிகள். இஸ்லாம் மதத்திற்குக் கொடிய விரோதம் செய்ததால் அவர்களுக்கு இவ்வுலகில் கிடைத்த தண்டனைகள் இங்கு கூறப்பட்டிருக்கின்றன. இவ்வத்தியாயம் அருளப்பட்ட பிறகு, இதில் கூறிய வண்ணம் அவ்விருவரும் அழிந்தனர். இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தந்தையும் அவரது மனைவியுமாவார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த செய்தியைக்கேட்டு, அச்சந்தோஷத்திற்காக தம்மிடம் வந்து இச்சுபச் செய்தியை அறிவித்த அடிமைப் பெண்ணையும் கூட உரிமை விட்டவர். இவ்விதமாக இவர் நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு நெருங்கிய பந்துவாகவும், அதிகப் பிரீதியாகவும் இருந்துங்கூட இஸ்லாம் மதத்தை எதிர்த்ததால் அல்லாஹ¤த் தஆலாவின் தண்டனையை விட்டுத் தப்ப முடியவில்லை. இவர்கள் பணக்காரர்களாகவும், சந்ததியுள்ளவர்களாகவும் இருந்தும், தங்களுக்குத் தண்டனை வந்தபோது, அவைகளின் மூலமாக அத் தண்டனை வராமல் தங்களைக் காத்துக் கொள்ள முடியவில்லை.

ஆதலால், பணமும், மக்களும் குலமும், பந்தத்துவமும், பிரியமும் மனிதனைக் காப்பாற்றாது. சன்மார்க்கத்தை மனப்பூர்வமாகத் தழுவி, அவனது கட்டளைகளுக்குப் பணிந்து நடந்தால்தான் அவனது கருணைக்கு ஆளாகி மறுமையில் மேன்மையை அடைய முடியும் என்ற உண்மை இவ்வத்தியாயத்தின் மூலம் அறிவிக்கப்படுகிறது.

——o——

மதனிய்யா ❁ ஸ-ிறத்தன்னஸர் ❁ மூன்று ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

إِذَا جَاءَ نَصْرُ اللَّهِ وَالْفَتْحُ ۝

இதாஜாஅ நல்ருல்லாஹி வல்பத்ஹு.

1. அல்லாஹ்வின் உதவியும் வேற்றியும் வந்தால்,

وَرَأَيْتَ النَّاسَ يَدْخُلُونَ فِي دِينِ اللَّهِ أَفْوَاجًا

வரஅய்தன்னஸ யத்குலூன பீ தீனில்லாஹி அப்வாஜன்.

2. இன்னும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் சேருவதை நீர் பார்த்தீராஞல்.

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ إِنَّهُ كَانَ تَوَّابًا ۝

பஸப்பிஹ் பிஹம்தி ரப்பிக வஸ்தக் பிர்ஹு
இன்னஹு கான தவ்வாபா.

3. உம்முடைய றப்பின் புகழைக்கொண்டு (அவனை) ஸ்தோத்திரம் செய்து, அவனிடம் பிழை பொறுக்கத்தேடு வீராக. நிச்சயமாக அவன் தௌபாவை அங்கீகரிப்பவனாக இருக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் ஜனங்களைச் சன்மார்க்கத்தில் அழைத்து அவர்களைச் சன்மார்க்கர்களாக்குவதற்காகவே வந்தார்கள். எனவே, அவர்கள் பிறந்ததன் முக்கிய வேலை நிறைவேறி விட்டால், இவ்வுலகத்தை விட்டு மறைவதற்கான காரியங்களில் ஈடுபடவேண்டும். ஆதலால், தங்களது வேலையை நிறைவேற்றிய விஷயத்தில் ஏதேனும் தவறிருந்தால் மன்னிப்புக்கேட்டுக் கொள்வதுடன் அவனை ஸ்தோத்திரம் செய்து மறு உலக யாத்திரைக்குத் தயாராகிக் கொள்ளும்படி இவ்வத்தியாயத்தில் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஒருவருக்கு அவர் பிறந்ததன் நோக்கம் நிறைவேறி, அவரது காரியங்கள் வெற்றியடைந்தால் அப்புறம் அவர் இவ்வுலகைவிட்டு மாறவேண்டிய ஸ்திதிக்கு வந்து விடுகிறார் என்பதும், இவ்வுலகை விட்டுப் பிரியக்கூடியவர்கள் எவராயிருந்தாலும் சமயம் வருவதற்கு முன்னதாகவே தௌபா இஸ்திஃபார் செய்தும், நற்கிரியைகளைச் செய்தும் மறு உலக யாத்திரைக்குத் தயாராகிவிட வேண்டும் என்பது இவ்வத்தியாயத்தின் மூலம் ஜன சமூகத்தாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

—0—

மக்கிய்யா ❀ ஸூறத்துல் காபிரூன் ❀ ஆறு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு). நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

قُلْ يَا أَيُّهَا الْكَافِرُونَ ۝١

குல்யா அய்யுஹல் காபிரூன.

1. காபிரானவர்களே! என்று (நபியே) நீர் கூறுவீராக.

لَا أَعْبُدُ مَا تَعْبُدُونَ ۝٢

லா அஃபுது மாதஃபுதூன.

2. நீங்கள் வணங்குவதை நான் வணங்க மாட்டேன்.

وَلَا أَنْتُمْ عَابِدُونَ مَا أَعْبُدُ ۝٣

வலா அன்தும் ஆபிதூன மா அஃபுத்.

3. நான் வணங்குவதை நீங்கள் வணங்குபவர்களல்ல.

وَلَآ أَنَا۠ عَابِدٌ مَّا عَبَدْتُمْ ۝

வலா அனு ஆபிதும் மா அபத்தும்.

4. நீங்கள் வணங்கியதை நான் வணங்குபவனு மல்லன்.

وَلَآ أَنتُمْ عَٰبِدُونَ مَآ أَعْبُدُ ۝

வலா அன்துப் ஆபிதூன மா அஃ புது.

5. நான் வணங்குவதை நீங்கள் வணங்குகிறவர்களு மல்லர்.

لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِينِ ۝

லகும் தீனுக்கும் வலிய தின்.

6. உங்களுக்கு உங்களது கூலி இருக்கிறது. இன் னும் எனக்கு எனது கூலி இருக்கிறது.

மார்க்க விஷயத்தில் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதாருக்குமிடையில் எவ்விதமான ஒற்றுமையுமில்லை. அவ்விஷயத்தில் சமரசமோ சமாதானமோ இல்லை. இவ் விஷயத்தில் சமாதானம் செய்து கொள்ள விரும்புபவர்களு டன் சமாதானம் செய்ய வேண்டியதில்லை என்பது இவ்வத் தியாயத்திலிருந்து தெரியவருகிறது.

நாயகம் (ஸல்) அவர்களை முஷ்ரிக்குகள் இவ்விதமான ஒரு சமரசத்திற்கு அழைத்தனர். "முஷ்ரிக்குகளும் அல் லாஹ்வைத் தஆலாவை வணங்குவர். முஸ்லிம்கள் அதற்கு

பதிலாக விக்கிரகங்களை வணங்கவேண்டும். இவ்வாறு செய்தால் இஸ்லாம் மதத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்யாமலும் முஸ்லிம்களைத் தொந்தரை செய்யாமலும் இருப்போம்'' என்று முஷ்ரிக்குகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றனர். இவ்விதமான உடன்படிக்கை செய்து கொள்ளக்கூடாதென்றும், முஷ்ரிக்குகள் வணங்குவதை முஸ்லிம்கள் எக்காலத்திலும் வணங்க முடியாது என்றும் இறைவன் இவ்வாயத்துகளின் மூலம் கண்டிப்பாக அறிவித்துள்ளான்.

மக்கிய்யா ❁ ஸூறத்துல் கௌதர் ❁ மூன்று ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தாகளுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

إِنَّا أَعْطَيْنَاكَ الْكَوْثَرَ

இன்ன அஃதய்ன கல்கவ்தர்

1. (நபியே) நிச்சயமாக நாம் உமக்கு மிகுதியை அளித்துள்ளோம்.

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ۝

பஸல்லி லிரப்பிக வன்ஹர்.

2. எனவே, உமது றப்பை நீர் தொழது குர்பானி செய்வீராக.

إِنَّ شَانِئَكَ هُوَ الْأَبْتَرُ ۝

இன்ன ஷானிஅக ஹுவல் அப்தர்.

3. நிச்சயமாக உமது விரோதிதான் (சகல விதமான நன்மையினின்றும்) அறுபட்டவன்.

நாயகம் (ஸல்) அவர்களது ஆண் மக்கள் மரித்த போது இஸ்லாம் மதத்தின் விரோதிகள் "இனி முஹம்மது தனக்கும் பெயர் சொல்லக்கூட ஆள் இல்லாதவாறு சந்ததி யற்றவரானர் என்று கூறிச் சந்தோஷ மடைந்தனர். இதனைக் குறித்து இறைவன் இவ்வத்தியாயத்தை அருளினான்.

மனிதன் பிற்காலத்திலும் மற்றவர்களால் ஞாபகிக்கப் படவேண்டுமானல் அல்லது தனது அந்தியத்திற்குப் பிறகும் தனது பெயர் கூறப்பட வேண்டுமானல் அதற்காக ஆண் சந்ததி அவசியம் இருக்கவேண்டும் என்பதில்லை. ஆண் சந்ததி இருந்தாலும்கூட அவர்களால் அவன் ஞாபகிக்கப்படுவான் என்பதுமில்லை. அவன் ஞாபகிக்கப்படுவதற்குரிய காரிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளின் மூலம் அவன் ஞாபகிக்கப்படுவான் என்பது இவ்வத்தியாயத்தின் கருத்து.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறிப்பிட்டு முஷ்ரிக்குகள் கூறியதற்கு பதில் கூறும் முறையில் நாயகம்(ஸல்) அவர்களுக்கு மிகுதியை அளித்திருப்பதாக இறைவன் கூறியுள்ளான். நாயகம் (ஸல்) அவர்களது ஸ்தூல சம்பந்தமான ஆண் மக்கள் இவ்வுலகில் வெகு காலம்வரை ஜீவித்திருக்க முடியாவிட்டாலும், அவர்களது ஆத்மார்த்தப் புதல்வர்களான முஸ்லிம்கள் ஏராளமாக இருக்கின்றனர். அவர்கள், நாயகம் (ஸல்) அவர்களை ஞாபகிப்பார்கள். குறிப்பிட்ட சில மக்கள் மட்டிலும் இருந்து ஞாபகிப்பதைப் பார்க்கினும் லக்ஷக்கணக்கான ஆத்மார்த்த மக்கள் இருந்து ஞாபகிப்பது மிகுதியல்லவா? இவ்வாறான மிகுதியை அளித்த நாயனுக்கு நன்றி செலுத்தும் முறையில் அவனைத் தொழுது குர்பானியும் கொடுக்கவேண்டும். ஆனால், ஆண் சந்ததியினரை வைத்துள்ள சன்மார்க்க விரோதிகள் பிற்காலத்தில் அவர்களை ஞாபகம் செய்து, அவர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கத்தக்க சந்ததியாரை இழந்து விடுவார்கள் என்று இவ்வத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி இஸ்லாம் மதத்திற்கு விரோதிகளாக இருந்தவர்களது மக்கள் யாவரும் பிற்காலத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவி நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆத்மார்த்த புதல்வர்களாக ஆகிவிட்டனர். தங்கள் மூதாதையர் இஸ்லாம் மதத்திற்குமாறு செய்ததாலும், நாயகம் (ஸல்) அவர்களைப் பகைத்ததாலும் அவர்களது பெயர்களை அவர்கள் நாவால் கூட உச்சரிக்க விரும்புவதில்லை. இவ்விதமாக இஸ்லாத்தின் விரோதிகள் இப்பொழுது உலக மக்களால் போற்றுதல் என்ற முறையில் பிரஸ்தாபிக்கப்படாமல் வேரற்றுப் போயினர். நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களாலும் மற்றவர்களாலும் போற்றப்பட்டுக் கொண்டாடப் படுகிறார்

கள். எனவே, இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயம் இனிது நிறைவேறிவிட்டது. தவிர, இவ்வத்தியாயத்திற்கு வேறு பல கருத்துகளும் உள. அவைகளை இங்கு கூற இட மில்லாததால் இத்துடன் நிறுத்தப்பட்டது.

மக்கியா ❀ ஸூறத்துல் மாஊன் ❀ ஏழு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

أَرَءَيْتَ ٱلَّذِى يُكَذِّبُ بِٱلدِّينِ ۝١

அரஅய்தல்லதீ யுகத்திபு பித்தீனி?

1. நியாயத் தீர்ப்பு நாளைப் பொய்ப்பிப்பவனை நீர் பார்த்தீரா?

فَذَٰلِكَ ٱلَّذِى يَدُعُّ ٱلْيَتِيمَ ۝٢

பதாலிகல்லதீ யதுஃஉல் யதீம.

2. அவன் தான் அனுதையை வருத்துகிறான்.

وَلَا يَحُضُّ عَلَىٰ طَعَامِ الْمِسْكِينِ ﴿٣﴾

வலாயஹுல்லு அலா தஆமில் மிஸ்கீன்.

3. இன்னும் ஏழைக்கு அன்னமிடத் தூண்டுகிறானில்லை.

فَوَيْلٌ لِّلْمُصَلِّينَ ﴿٤﴾

பவய்லுல் லில்முஸல்லீன்.

4. எனவே, தொழுகையாளிகளுக்கு வைல் என்னும் நரக மிருக்கிறது.

الَّذِينَ هُمْ عَن صَلَاتِهِمْ سَاهُونَ ﴿٥﴾

அல்லதீனஹும் அன்ஸலா திஹிம் ஸாஹூன்.

5. (தொழுயாளிகளான) அவர்கள் தங்களது தொழுகையில் மறந்தவர்களாக இருக்கிறார்கள்.

الَّذِينَ هُمْ يُرَاءُونَ ﴿٦﴾

அல்லதீன ஹும் யுராஊன.

6. அவர்கள் பிறர் மெய்க்கச் செய்கிறார்கள்.

وَيَمْنَعُونَ الْمَاعُونَ ﴿٧﴾

வயம்னஊனல் மாஊன்.

7. இன்னும் (சாமான்யமாகக் கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளக் கூடிய) சாமான்யத்தை (யுங்கூடக் கொடுக்காமல்) விலக்குகிறார்கள்.

மனிதன் இவ்வுலகில் நன்மையான காரியங்களைச் செய்யவேண்டுமாயின், மரித்த பிறகு உயிர்ப்பிக்கப்பட்டு இவ்வுலகில் செய்த நன்மை தீமையான காரியங்களுக்கு இறைவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய தேற்படும், அக்காலத்தில் எவரும் உதவி செய்யமாட்டார்கள். ஆதலால், இவ்வுலகிலேயே இயன்றவரை நற்கிரியைகளைச்செய்து கொள்ளவேண்டும் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். இந்த நம்பிக்கை இருந்தால்தான் மனிதன் பாவம் பழிகளுக்கு அஞ்சுவதுடன் தனது ஒழுக்கங்களையும் திருத்திக் கொள்வான். இவ்வாறு செய்யாதவர்கள் மறுமையைப் பற்றிய பயமற்றவர்களாகவே இருப்பார்கள். அனைதைக் குழந்தைகள் ஆதரிப்பாரற்றவர்களாதலால் சாமான்யமாக எவரும் அக்குழந்தைகள்பால் இரக்கம் காண்பிப்பது இயற்கை. இதனையும் கூடச் சிலர் செய்யாமல் இருந்தனர். சிலர் தங்கள் தொழுகையை அசட்டையுடன் நிறைவேற்றினர். மறுமையில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற கொள்கை ஒருவருக்கு உறுதியாக இருந்தால் அவர் தொழுகை விஷயத்தில் அசட்டையாக இருக்கமாட்டார். அக்கம் பக்கம் சுற்றத்தார் ஆகியவர்கள் ஒருவருக்கொருவர் சில பொருள்களைச் சாமான்யமாகக் கொடுத்து வாங்கிக் கொள்வார்கள் இவ்வுலகம் சதம். இவ்வுலகில் பணமிருந்தால்தான் கண்ணியமாக வாழலாம். நமது சுய முயற்சியிலேயே செல்வத்தைத் தேடிக் கொண்டோம் என்ற எண்ணமுள்ளவர்கள் பணவிஷயத்தில் உலோபிகளாக இருப்பார்கள். மறுமையில் நன்மைப்பயனை அடைய வேண்டும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் தான் அதனை தர்மமாகக் கொடுப்பர். தர்மம் கொடுக்கவேண்டிய அளவிற்குச் சொத்து இல்லாதவர்கள் சாமான்யமாக கொடுக்கல் வாங்

கல் செய்து கொள்ளக்கூடிய வஸ்துக்களேனும் ஒருவருக் கொருவர் கொடுத்துதவிக் கொள்வர். எனவே, இவ்வாயத் தில் உலோபிகள், தொழுகையில் அசட்டை செய்பவர்கள், பகித்தோருக்கு அன்ன மிடாதவர்கள், அனுதைகளைத் துக் கப்படுத்துவோர் ஆகியவர்களுக்கு மரணத்திற்குப் பிறகு உள்ள வாழ்க்கையைக் குறித்த நம்பிக்கை இல்லை. அவ்வித நம்பிக்கை யுள்ளவர்கள் இவ்விதக் காரியங்களைச் செய்ய மனந்துணியார் என்ற விபரம் இவ்வத்தியாயத்தில் கூறப் பட்டிருக்கிறது.

மக்கியா ❁ ஸிறத்துல் குறைஷ் ❁ நான்கு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறு மையில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனு மாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக் கிறேன்.)

لِإِيلَٰفِ قُرَيْشٍ ①

லிஈலாபி குறைஷின்.

1. குறைஷிகளின் மகிழ்ச்சிக்காக

إِلٰفِهِمْ رِحْلَةَ الشِّتَآءِ وَالصَّيْفِ ۝

ஈலாபிஹிம் ரிஹ்ல தஷ்ஷிதாயி வஸ்ஸய்ப்.

2. மாரிகாலத்திலும் கோடைகாலத்திலுமுள்ள பிரயாணத்தில் அவர்களுச்கு மகிழ்ச்சி இருப்பதற்காக (யானைப் படையினரை அழித்தோம்).

فَلْيَعْبُدُوا رَبَّ هٰذَا الْبَيْتِ ۝

பல்யஃ்புதூ ரப்ப ஹாதல் பய்த்.

3. எனவே, இந்த வீட்டின் றப்பை அவர்கள் வணங்க வேண்டும்.

الَّذِيْٓ اَطْعَمَهُمْ مِّنْ جُوْعٍ وَّاٰمَنَهُمْ مِّنْ خَوْفٍ ۝

அல்லதீ அத்அமஹும் மின் ஜூஇன்; வஆமனஹும் மின் கவ்ப்.

4. (அந்த வீட்டின் றப்பாகிய) அவன் பசியினின்றும் அவர்களுச்கு உணவளித்தான். இன்னும், பயத்தினின்றும் அவர்களுக்கு அபயமளித்தான்.

திரு மக்காவில் குறைஷிக்குலத்தார் குடி இருக்கின்றனர். அந்த ஊர் விவசாயம் செய்வதற்குத் தகுதியில்லாத இடம். அங்கு அவர்கள் சந்தோஷமாகக் காலங்கழிக்க வேண்டுமானால் அவர்களது கால க்ஷேமத்திற்கு வேறு தொழில்கள் இருக்கவேண்டும். ஆதலால், அவர்கள் மாரி

காலத்திலும் கோடை காலத்திலும் வியாபார அலுவலாக வெளிபிடங்களுக்கு யாத்திரை செய்வது வழக்கம். இவ் வியாபார யாத்திரைக்குச் செல்வதில் அவர்களுக்கு மகிழ்ச் சியு மிருந்தது. இதனை இறைவன் இவ்வத்தியாயத்தில் சுட் டிக்காட்டி திருமக்காவில் குறைஷியர் சந்தோஷமாக வாழும் பொருட்டும், அவர்களுக்கு வியாபார யாத்திரையில் சந்தோஷ மிருப்பதாலும் விரோதிகளது படையை நாம் அழித்து, அவர்கள் நிர்ப்பயமாக வியாபாரத்திற்குச் சென்று வர வசதியளித்தோம். அவர்களுக்குப் பகைவர் பயத்தை அகற்றியதுடன் பசியில்லாமல் உண்ணவும் வசதியளித்தோம். இவ்விதமாக அவர்களுக்கு உபகாரம் செய்த தன்னையே அவர்கள் வணங்க வேண்டும் என அறிவித்துள்ளான்.

தவிர, மனிதருக்கு உணவை அளித்து, அவர்களுக்கு அபயமளிக்கிறவன் அல்லாஹ்த் தஆலாதான். அவனை யன்றி இக்காரியங்களை வேறுயாரும் செய்ய முடியாது. ஆதலின், அவனைத்தான் மனிதர் வணங்க வேண்டும் என் பது இவ்வத்தியாயத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருக் கிறது.

மக்கிய்யா ❀ ஸிறுத்துல் பீல் ❀ ஐந்து ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (மறுமை யில்) (தன் பக்தர்களுக்குமட்டிலும் அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَٰبِ ٱلْفِيلِ ۝١

அலம்தர கய்ப பஅல ரப்புக பி அஸ்ஹாபில் பீல்

1. யானையையுடையவர்களை உமது றப்பு எவ்வாறு செய்தானென்பதை நீர் பார்க்கவில்லையா?

أَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِى تَضْلِيلٍ ۝٢

அலம் யஜ்அல் கய்தஹும் பீ தல்லீலின்.

2. அவர்களது சதியை தடுமாற்றத்தில் அவன் ஆக்கவில்லையா?

وَأَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا أَبَابِيلَ ۝٣

வஅர்ஸல அலைஹிம் தய்ரன் அபாபீல.

3. இன்னும் அபாபீல் என்ற பறவையை அவர்கள் மீது அனுப்பினான் (அல்லவா?).

تَرْمِيهِم بِحِجَارَةٍ مِّن سِجِّيلٍ ۝٤

தர்மீஹிம் பிஹிஜாரதிம் மின் ஸிஜ்ஜீல்.

4. நரகில் நின்றும் கற்களைக்கொண்டு அவர்களை எறியும் விதமாக.

فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّأْكُولٍ ۝٥

பஜஅலஹும் கஅஸ்பிம்மஅகூல்

5. எனவே, மெல்லப்பட்ட வைக்கோலைப்போல் அவர்களை (அவன்) ஆக்கிவிட்டான்.

திருமக்கா வாசிகளுக்கு இறைவன் செய்துள்ள ஒரு பேருபகாரம் இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யமன் தேசத்தில் அப்ரஹா என ஒரு அரசப் பிரதிநிதி திருமக்காவின்மீது யானைப்படைகளைத் திரட்டிக்கொண்டு வந்தான். மக்கமா நகரிலுள்ள கஃபா ஷரீபை இடித்துப் போடவேண்டும் என்பது அவன் கருத்து. இவனை எதிர்த்துப்போர் செய்ய மக்கா வாசிகள் துணியவில்லை. அல்லாஹுத் தஆலா தன்னுடைய ஆலயத்தைக் காப்பாற்றிக் கொள்வான் என்று அவர்களை சும்மா இருந்து விட்டார்கள். அவன் குறித்த இடத்திலிருந்து புறப்பட்டு ஹறம் எல்லையைத் தாண்ட எத்தனித்தபோது அபாபீல் என்ற பறவைக் கூட்டங்கள் ஆகாயத்தில் வந்து அப்படையாளரின் மீது பொடிக்கற்களைப்போட்டன. அக்கல் பட்ட வீரர்களும் யானைகளும் அந்த இடத்திலேயே கொப்புளங்களால் அவதிப்பட்டு மரித்தனர்.

இவ்விபரத்தை இறைவன் கூறி இஸ்லாம் மதத்தை எதிர்க்கிற உங்களைச் சுலபமாக அழித்திவிட என்னால் முடியும். ஆயினும், நீங்கள் மனந்திரும்பட்டும் என்பதற்காகவே நாம் விட்டு வைத்திருக்கிறோம். ஆதலால், அவ்வாறான சந்தர்ப்பம் வருவதற்கு முன்னதாகவே நீங்கள் சன்மார்க்கர்களாகி விடுங்கள் என எச்சரிக்கை செய்துள்ளான்.

தவிர, எல்வளவு பெரிய வலிமையுடையவராலும் அல்லாஹுத் தஆலாவின் விஷயத்தில் முரட்டுத்தனமாக நடந்து கொள்வானுயின் அவன் இறுதியில் அழிவது திண்ணம். இவனை எதிர்த்தவர் எவரும் காரியசித்தியடையவில்லை. ஆதலால், தனது பணத்தையும் செல்வாக்கையும் கண்டு பெருமை கொள்ளாமல் இறைவனது கட்டளைக்கு எல்லாம் கீழ்ப்படிய வேண்டும்" என்பது இவ்வத்தியாயத்திலிருந்து தெரிய வருகிறது.

மக்கிய்யா ❁ ஸூறத்துல் ஹுமஜத் ❁ ஒன்பது ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (மறுமை யில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு)நாமத்தால் (இதனை ஆரம்பம்செய்கிறேன்)

وَيْلٌ لِّكُلِّ هُمَزَةٍ لُّمَزَةٍ ۝١

வைலுன்லிகுல்லி ஹுமஜதின்ல் லுமஜதி.

1. குற்றஞ் சொல்லிப் பழி சுமத்துகிற ஒவ்வொருவருக் கும் வைல் என்னும் நரக மிருக்கிறது.

الَّذِي جَمَعَ مَالًا وَعَدَّدَهُ ۝٢

நில்லதீ ஜமஅ மாலன்வ அத்ததஹு.

2. அவன் தனத்தைச் சேகரித்து அதனை(க் கணக் கிட்டு) எண்ணி எண்ணிப் பார்த்தான்.

يَحْسَبُ أَنَّ مَالَهُ أَخْلَدَهُ ۝٣

யஹ்ஸபு அன்ன மாலஹு அக்லதஹ்.

3. நிச்சயமாக தன்னுடைய தனம் தன்னை நிரந்தரமாக் கிவிடும் என்றெண்ணிக் கொண்டான்.

كَلَّا لَيُنۢبَذَنَّ فِي الْحُطَمَةِ ۝٤

கல்லா லயும்ப தன்ன பில்ஹுதமதி.

4. (காரியம்) அவ்வாறில்லை. (ஹுத்தமா என்னும்) நரகில் அவன் நிச்சயமாய் எறியப்படுவான்.

وَمَآ أَدْرَىٰكَ مَا الْحُطَمَةُ ۝٥

வமா அத்ராக்க மல்ஹுதமஹ்.

5. இன்னும் ஹுத்தமா என்பது என்ன என்பதை உனக்கறிவித்தது எது?

نَارُ اللَّهِ الْمُوقَدَةُ ۝٦

நாருல்லாஹில் மூகதது.

6. அல்லாஹ்வால் மூட்டப்பட்ட நெருப்பு (அது).

الَّتِي تَطَّلِعُ عَلَى الْأَفْـِٔدَةِ ۝٧

அல்லதீ தத்தலிஉ அலல் அப்இதஹ்.

7. அது இருதயங்களின்மீது எழும்பும்.

إِنَّهَا عَلَيْهِم مُّؤْصَدَةٌ ۝٨

இன்னஹா அலைஹிம் மூஉஸததுன்.

8. நிச்சயமாக அது அவர்கள் மீது மூடப்பட்டதாக யிருக்கிறது.

فِي عَمَلٍ مُمَدَّدَةٍ ②

பீ அமதின்ம் முமத்ததஹ்.

9. ரீண்ட ஸ்தம்பங்களில்.

சில மனிதர் ஜனங்கள் மீது குண தோஷங் கூறிக் கொண்டே இருப்பர். சிலர் நேரில் கூறுமல் மறைவான இடத்தில் பிறரிடம் கூறுவர். சிலர் தங்கள் செய்கைகளின் மூலம் அல்லது அபிநயத்தின் மூலம் பிறரது குறைனயைக் கூறிக் கேவலப்படுத்த முயல்வர். கோள் சொல்வர், இல்லாத அவதூறுகளைச் சொல்வர். ஒருவரைத்திருத்த வேண்டும் என்ற நோக்கத்திலல்லாமல் அவரை அற்பமாக மதித்து நேரிலும் கூடப் பலர் முன்னிலையில் இல்லாத பொல்லாத காரியங்களைக் கூறுவர். இவ்வாறு கூறுவதை இறைவன் இவ்வத்தியாயத்தில் கண்டித்து, மனிதர்களது ஒழுக்கத்தைத் திருத்தி இருக்கிறான்.

இவ்விதமான ஒழுங்கினங்களைச் செய்பவர் நரகில்வேதனையை அடைவார். அந்நரக நெருப்பு அவர்களது இருதயங்களைக் கவர்ந்துகொள்ளும். இவ்வாறுனவர்கள் பெரும்பாலும் தனவந்தர்களே. தரித்திரத்தால் வாடும் ஜனங்களுச்கு இவ்விதக் காரியங்களில் ஈடுட நேரம் இருக்காது. தங்களது பசிப்பிணியை நீக்க முயல்வதிலேயே அதிகம் ஈடுபடுவர். பணக்காரர்களிலும் நல்லவர்களுண்டு: என்றாலும், பணக்காரர்களில் உலோபியாக இருப்பவர்களிடம் இப்படிப்பட்ட கெட்ட குணங்கள் மிகுதமாக இருக்கும். பணம் தங்களை காப்பாற்றி விடும் என அவர்கள் நினைத்துக் கொண்டு இவ்வாறுன ஒழுங்கினங்களைச் செய்கிறார்கள். என்பது இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பணம் தன்னைக் காப்பாற்றி விடும் என நினைத்து தான தர்மங்களைச் செய்யாமல் அதனைச் சேமித்து வைப்பதும், பிறர்மீது குற்றங்குறை சொல்வதும், கோள் சொல்லல், அவதூறு செய்தல் முதலிய காரியங்கள் கூடா. இவைகளைச் செய்பவர் நரகத்தில் பிரவேசிக்க வேண்டியவராக இருக்கிறார் என்பது இவ்வத்தியாயத்தின் கருத்து.

மக்கியா ❀ ஸுறத்துல் அஸர் ❀ மூன்று ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பம் செய்கிறேன்.)

وَالْعَصْرِ ۝

வல் அஸ்ரி.

1. காலத்தின்மீது பிரமாணமாக.

إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ۝

இன்னல் இன்ஸான லபீகுஸர்.

2. நிச்சயமாக மனிதன் (பெரிய) நஷ்டத்திலிருக்கிறான்.

إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا
بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ۝

இல்லல்லதீன ஆமனூ வ அமிலுஸ் ஸாலிஹாதி.
வதவாஸவ் பில்ஹக்கி வதவாஸவ் பிஸ்ஸப்ர்.

3. (ஆனல்,) விசுவாசங்கொண்டு (சன்மார்க்கத்திற்கு) இணக்கமானவைகளைச் செய்து, உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசித்து, பொறுமையைக்கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசித்தவர்களைத் தவிர,

தனத்தைச் சேகரிப்பதும், தானும் தன் குடும்பமும் க்ஷேமமாகவும் கவலையில்லாமல் வாழவும் வேண்டிய வசதிகளைச் செய்து கொள்வதும்தான் இவ்வுலகில் மனிதன் பிறந்ததன் நோக்கம் எனச் சிலர் கருதி இருக்கின்றனர். உலகிலுள்ள பெரும்பாலான மக்களும் கூட இதே காரியத்தைத் தான் செய்ய முனைந்திருக்கின்றனர். இவ்வாறு முனையாதிருப்பர்களை அவர்கள் "வீனர்கள், தன் வயதை வீணுகக் கழிப்பவர்கள்" என்று கூறுவதும் உண்டு. இக்கூற்று சரியல்ல. அல்லாஹ்த் தஆலாவை விசுவாசித்து, அவனுக்கு இணக்கமான காரியங்களைச் செய்து பிறருக்கும் சன்மார்க்கத்தை உபதேசிப்பவர்தான் நஷ்டமடையாதவர். இதனைத் தவிர வேறு காரியங்களைச் செய்பவர்கள் மறுமையில் பெரும் நஷ்டவாளிகளாக இருப்பார்கள என்று இவ்வசனத்தியாயத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

தவிர, அபுல் அஸத் என்பவர் ஹஜ்றத் அபூபக்கர் ஷிப்லீ (றலி) அவர்களது முற்கால நண்பர். இஸ்லாம்

மதம் பிரசங்கிக்கப்படுவதற்கு முன் இவ்விருவரும் உற்ற நண்பர்களாக இருந்தனர். ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி, முஸ்லிம்களுக்கு உதவி புரியும் காரியங்களில் தமது செல்வத்தைச் செலவு செய்திருந்த காலத்தில் இவ்விருவரும் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அபுல் அஸத் என்பவர் ஸித்தீக் (றலி) அவர்களைப் பார்த்து "நீர் வியாபாரத்தில் ரொம்பக் கெட்டிக்காரராக இருந்தீர். வியாபாரத்தில் ஒரு போதும் நஷ்டமடைந்ததே இல்லை. அப்படி இருக்க இப்பொழுதும் உமக்கென்ன மதியீனம் வந்தது! உம்மிடமுள்ள பொருள்களை எல்லாம் செலவு செய்து ஒருவர்மீது நம்பிக்கைகொண்டு, பழைய மதத்தையும் கூட விட்டு விட்டுப் புதிய மதத்தில் சேர்ந்து கொண்டீர்" எனக் கூறினாராம். அச்சமயத்தில் இறைவன் இவ்வத்தியாயத்தை அருளி அபுல் அஸதுடைய எண்ணம் சரியில்லை. அவர் பெருத்த நஷ்டத்தில் இருக்கிறார் என்பதை அறிவித்துள்ளான் என்பதாகச் சிலர் இவ்வத்தியாயம் அருளப்பட்டதன் காரணத்தைக் குறித்துக் கூறி இருக்கிறார்கள்.

மக்கிய்யா ❁ ஸிறத்துத் தகாதுர் ❁ எட்டு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்பாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

اَلْهٰىكُمُ التَّكَاثُرُ ۙ

அல்ஹாக்கு முத்தக் காதுர்.

1. (செல்வம்-மக்கள் ஆகியவைகளிலுள்ள) பெருச்சம் உங்களை மறக்கடித்து விட்டது.

حَتّٰى زُرْتُمُ الْمَقَابِرَ ۝

ஹத்தா ஜுர்த்து முல்மகாபிர்.

2. புதை குழிகளை நீங்கள் சந்திக்கும் வரையில்.

كَلَّا سَوْفَ تَعْلَمُوْنَ ۝

கல்லா ஸவ்ப தஃலமூன்.

3. (காரியம்) அவ்வாறில்லை. சீக்கிரம் நீங்களறிந்து கொள்வீர்கள்.

ثُمَّ كَلَّا سَوْفَ تَعْلَمُوْنَ ۝

தும்ம கல்லா ஸவ்பதஃலமூன்.

4. பின்னர் (காரியம்) அவ்வாறில்லை. சீக்கிரம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

كَلَّا لَوْ تَعْلَمُوْنَ عِلْمَ الْيَقِيْنِ ۝

கல்லா லவ்தஃலமூன இல்மல் யகீன்.

5. (காரியம்) அவ்வாறில்லை. நிச்சயமான அறிவாக நீங்கள் அறிந்திருப்பீர்களாயின் (நீங்கள் மறக்க மாட்டீர்கள்.)

لَتَرَوُنَّ الْجَحِيمَ ۝

லதரவுன்னல் ஜஹீம.

6. (ஜஹீம் என்னும்) நரகை நீங்கள் திட்டமாகக் காண்பீர்கள்.

ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ الْيَقِينِ ۝

தும்ம லதரவுன்னஹா ஐனல்யகீன்.

7. பின்னர், நிச்சயமான கண்ணால் அதனை நீங்கள் திட்டமாகப் பார்ப்பீர்கள்.

ثُمَّ لَتُسْأَلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيمِ ۝

தும்ம லதுஸ் அலுன்ன யௌமஇதின் அனின்னஈம்.

8. பின்னர், அன்னாளில் அருட் கொடையைக் குறித்து நீங்கள் திட்டமாக வினவப்படுவீர்கள்.

மனிதன் இவ்வுலகில் எதற்காக வந்தான்? அவன் செய்யவேண்டிய காரியம் என்ன? என்பன போன்ற விஷயங்களை தனத்தைப் பெருக்குவதும், ஜனத்தைச் சேர்ப்பதும் மறக்கடிக்கக் கூடியவைகளாகும். இவ்விரு வகைக் காரியங்களும் மனிதப் பிறவியின் நோக்கங்களல்ல. எனவே இவ்விதமான காரியங்களில் ஈடுபடுவது புத்திசாலிகளின் காரியமல்ல. இவ்வுலகில் எதைச் செய்தாலும் ஒரு காலத்

தில் மனிதன் மரிக்க வேண்டியவன்தான். அங்கு இறைவன் அளித்துள்ள அருட் கொடைகளைக்குறித்து விசாரிப்பான். அப்பொழுது நீங்கள் நரகத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு கொள்ள வேண்டியதிருக்கும் என்பது இந்த ஸூறத்தின் கருத்து.

இந்த அத்தியாயம் அருளப்பட்டபோது நபி நாயகம் (ஸல்) அவர்கள் இதனை ஓதிக்காண்பித்து விட்டு "மனிதன் என் பொருள் என் பொருள் என்று கூறுகிறான். நீ உண்டதும் உடுத்தியதும் தர்மம் செய்ததும் தான் உன் பொருள்" என்று கூறினார்கள் என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

மக்கிய்யா ❁ ஸூறத்துல் காரிஆ ❁ பதினேரு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (மறுமையில் தன்பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

اَلْقَارِعَةُ ۝

அல்காரிஅத்து.

1. (கதவைத்) தட்டும் படியானது.

مَا الْقَارِعَةُ ۝

மல்காரிஅஹ்.

2. (கதவைத்) தட்டும்படியானது என்பது என்ன?

وَمَا أَدْرٰىكَ مَا الْقَارِعَةُ ۝

வமா அத்ராக்க மல் காரிஅஹ்.

3. (கதவைத்) தட்டும்படியானது என்பது என்ன? என்று உனக்குத் தெரியுமா?

يَوْمَ يَكُونُ النَّاسُ كَالْفَرَاشِ الْمَبْثُوثِ ۝

யௌமயக்கூனுன்னாஸு கல்பராஷில் மப்தூதி.

4. சிதறடிக்கப்பட்ட விளக்குப் பூச்சியைப்போல் ஜனங்கள் ஆகிவிடும் நாளில் (அது நிகழும்).

وَتَكُونُ الْجِبَالُ كَالْعِهْنِ الْمَنْفُوشِ ۝

வதகூனுல் ஜிபாலு கல்இஹ்னில் மன்பூஷ்.

5. இன்னும் மலைகள் பன்னிய பஞ்சைப்போலாகி விடும்.

فَأَمَّا مَنْ ثَقُلَتْ مَوَازِينُهُ ۝

பஅம்மாமன் தகுலத் மவாஜீனுஹு.

6. பின்னர், எவருடைய நிறுவை பளுவாயிருக்கிறதோ.

فَهُوَ فِي عِيشَةٍ رَّاضِيَةٍ ۝

பஹுவ பீஈஷதிர்ராலியஹ்.

7. அவர் திருப்தியான வாழ்க்கையிலிருப்பார்.

وَأَمَّا مَنْ خَفَّتْ مَوَازِينُهُ ۝

வ அம்மாமன் கப்பத் மவாஜீனுஹு.

8. இன்னம் எவருடைய நிறுவை இலேசாகி விட்டதோ.

فَأُمُّهُ هَاوِيَةٌ ۝

பஉம்முஹு ஹாவியஹ்.

9. அவரது தங்குமிடம் (ஆழ மறியாக்) கெபியாக இருக்கிறது.

وَمَا أَدْرَاكَ مَا هِيَهْ ۝

வமா அத்ராக்க மாஹியஹ்?

10. மேலும், அஃது என்ன வென்று நீ அறிந்தாயா?

نَارٌ حَامِيَةٌ ۝

நாருன் ஹாமியஹ்.

11. எரியும்படியான நெருப்பு.

இவ்வுலகத்திலுள்ள மலை, கடல், பாதாளம், சந்திரன். சூரியன் ஆகியவைகள் வெகு காலமாக இருந்து கொண்டிருப்பதைப் பார்த்துச் சிலர் இவ்வுலகம் பூர்வீகமானது, அனுதியானது என்றெல்லாம் எண்ணிக்கொண்டு பூமா தேவியென்றும், வேறுவிதமாகவும் பல பெயர்களைக் கூறி வணங்கத் தொடங்கி விட்டனர். இவை நிலையில்லாதவை. இவை அழிந்து போகக் கூடியவை. ஒரு காலத்தில் இந்த மலைகளெல்லாம் பஞ்சு பஞ்சாய்ப் பறக்கும். உலகம் முடிந்து விடும். அப்புறம் உலகிலுள்ளவர்கள் அல்லாஹ்த் தஆலாவின் சமூகத்தில் நிறுத்தப்பட்டு அவரவருடைய நன்மை தீமைகள் நிறுக்கப்படும். நன்மையின் நிறுவை குறைவாகவுள்ளவர்கள் நரகம் புகுவர். நன்மை அதிகமாகவுள்ளவர் சுவர்க்கம் புகுவர் என்ற விபரம் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மக்கியா | ஸிறத்துல் ஆதியாத் | பதினேரு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (மறுமையில் தன் பக்தர்களுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்).

وَالْعٰدِيٰتِ ضَبْحًا ۝

வல் ஆதியாத்தி லப்ஹன்!

1. (மூச்சுத் திணறிக்கொண்டு ஓடுகிற) யுத்த புரவிகளின்மீது பிரமாணமாக.

فَالْمُورِيَاتِ قَدْحًا

பல் மூரியாத்தி கத்ஹன்.

2. (குளம்பு அடியினுல்) நெருப்புப் பொறி பறக்கச் செய்கிற (யுத்தப்) புரவிகளின் மீது

فَالْمُغِيرَاتِ صُبْحًا

பல்முகீராத்தி ஸுப்ஹன்.

3. பிறகு, அதிகாலையில் தாக்குகிற புரவிகளின்மீது

فَأَثَرْنَ بِهِ نَقْعًا

பஅதர் நபிஹி நக்அன்.

4. அப்பொழுது புழுதியைக் கிளப்புகிற புரவிகளின்மீது

فَوَسَطْنَ بِهِ جَمْعًا

பவஸத்நபிஹி ஜம்ஆ!

5. அப்புறம் (விரோதிகளின்) கூட்டத்தின் மத்தியில் நுழைந்து செல்கின்ற புரவிகளின்மீது (பிரமாணமாக)

إِنَّ الْإِنسَانَ لِرَبِّهِ لَكَنُودٌ

இன்னல் இன்ஸான லிரப்பிஹி லக்கனூத்.

6. நிச்சயமாக மனிதன் தனது றப்புக்கு நன்றி கெட்டவனுயிருக்கிறன்.

وَإِنَّهُ عَلَىٰ ذَٰلِكَ لَشَهِيدٌ ۝

வஇன்னஹு அலா தாலிக்க லஷஹீத்.

7. நிச்சயமாக அவன் இதற்கு சாக்ஷியாகவுமிருக்கிறான்.

وَإِنَّهُ لِحُبِّ الْخَيْرِ لَشَدِيدٌ ۝

வஇன்னஹு லிஹுப்பில் கைரி லஷதீத்.

8. இன்னம், நிச்சயமாக அவன் பொருளாசையில் அழுத்தமாக இருக்கிறான்.

أَفَلَا يَعْلَمُ إِذَا بُعْثِرَ مَا فِي الْقُبُورِ ۝

அபலா யஃலமு இதா புஃதிர மாபில் குபூர்.

9. அவன் அறிய மாட்டானா? புதை குழியிலுள்ளது வெளியில் எடுக்கப்படும்போது.

وَحُصِّلَ مَا فِي الصُّدُورِ ۝

வஹுஸ்ஸில மாபிஸ்ஸுதூர்.

10. இன்னம் இருதயங்களிலுள்ளது வெளியாக்கப் படும் (போது).

إِنَّ رَبَّهُم بِهِمْ يَوْمَئِذٍ لَّخَبِيرٌ ۝

இன்னரப்பஹும் பிஹிம் யௌமஇதின்லகபீர்

11. நிச்சயமாக அவர்களது றப்பு அந்நாளில் அவர்களை நன்கறிபவனாயிருக்கிறான்.

மனிதனுக்கும் குதிரைக்கு முள்ள பாகு பாட்டை இறைவன் இவ்வத்தியாயத்தில் குறிப்பிட்டு மனிதனின் சுபாவ குணத்தை எடுத்துக்காட்டி இருக்கிறான். அதாவது பட்டாளத்திலுள்ள குதிரைகளுக்கு தீவனம் போடுகிற ஒரு உபகாரத்தைத்தான் மனிதன் செய்கிறான். அதனை அவன் சிருஷ்டிக்கவுமில்லை. அதற்குச் சுகத்தைக் கொடுக்கவு மில்லை. வேறு எக்காரியத்தைச் செய்யவுமில்லை. தீவனம் போடுகிற ஒரு காரியத்திற்குப் பதிலாக அதனைப் பகைவர் கள் இருக்கிற இடத்திற்குக் கொண்டு போகிறான். எவ்வா றெனில் பகைவர்கள் இராக்காலத்தில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்னதாகவே அவர்களை வளைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக, இரவிலேயே அதனை வேகமாக விரட்டுகிறார்கள். அது இருளில் மேடு பள்ளத் தைக் கவனியாமல் வேகமாக ஓடுவதனால் அதன் காலடி யிலிருந்து சப்தம் கிளம்புவதுமட்டுமில்லாமல் அக்குளம்பு வேகமாகக் கெட்டிப்பாறைகளில் படும்போது நெருப்புப் பொறி கிளம்புகிறது. அதன் நெஞ்சிலிருந்து மூச்சு அதிக மாகக் கிளம்புவதால் அதன் மூக்கு வழியாக சர் சர் என்ற ஒருவகைச் சப்தம் வருகிறது. கெட்டித் தரையில் வேக மாக ஓடுவதால அதிலிருந்து செந்தூள் பறக்கிறது. இவ்வ ளவு வேகமாக ஓடி, பகைவர்களது கூட்டத்தின் நடுவில் வேகமாகப் பாய்ந்து அவர்களது கூட்டத்தை சின்னபின் னப் படுத்திச் சிதறும்படிச் செய்கிறது. பகைவர்களது ஆயுதங்களால் காயமுமடைந்து சிற்சில சமயங்களில் உயி ரையும் கொடுத்து விடுகிறது. வெறும் தீவனத்திற்கு பதி லாக இவ்விதமான காரியங்களைச் செய்கிற குதிரையையும் தீவனம்போடுவதற்கு பதிலாக இவ்வாறான வேலைகளை வாங்குகிற மனிதன் தன்னையும் கவனித்துப் பார்க்கட்டும்.

அற்பமான மனிதனுக்கு வேண்டிய சகல அங்கங்களையும் கொடுத்து அவனுக்கு வேண்டிய சகல பாக்கியங்களையும் தந்த அல்லாஹுத் தஆலாவிற்கு இவன் செய்ய வேண்டிய கடமை என்ன? இவன் நன்றியறிதலுள்ளவனாக இருந்தால் அவன் இறைவனை விட்டு விட்டு இணைவைப்பானா? அவனது கட்டளைக்கு மாறு செய்வானா? என்பதை அவனே யோசிக்கட்டும். அவனது நன்றி கெட்ட தன்மையை அவனது அவயவங்களே சாக்ஷி கூறும். அவன் பொருளில் மீது அழுத்தமான பிரீதியைக் கொண்டிருக்கிறான். மரித்த பிறகு எழுப்பும்போது அவனுக்கு உண்மை புலனாகும். மனிதனது போக்கை அல்லாஹுத் தஆலா அறிந்தே இருக்கிறான் என்ற விபரம் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மதனிய்யா ❀ ஸூறத்து ஸில்ஸால் ❀ எட்டு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபைசெய்பவனும் (மறுமையில் தன் பக்தகளுக்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

إِذَا زُلْزِلَتِ الْأَرْضُ زِلْزَالَهَا ۝

இதாஜுல் ஜிலத்தில் அர்லு ஜில்ஜாலஹா.

1. பூமி அது ஆட்டப்படுவதாக ஆட்டப்படும்போது,

وَأَخْرَجَتِ الْأَرْضُ أَثْقَالَهَا ۝

வஅக்ரஜத்தில் அர்லு அத்காலஹா.

2. இன்னும் பூமி தனது சுமைகளை வெளிப்படுத்தி விடும் (போது).

وَقَالَ الْإِنسَانُ مَا لَهَا ۚ

வகாலல் இன்ஸானு மாலஹா ?

3. இன்னும் மனிதன் "அதற்கு நேர்ந்தது என்ன ?" என்று கூறும் (போது).

يَوْمَئِذٍ تُحَدِّثُ أَخْبَارَهَا ۚ

யவ்மஇதின் துஹத்திது அக்பாரஹா.

4. அந்நாளில் தனது செய்திகளை (பூமியாகிய) அது அறிவிக்கும்.

بِأَنَّ رَبَّكَ أَوْحَىٰ لَهَا ۚ

பிஅன்ன ரப்பக்க அவ் ஹாலஹா.

5. (ஏனெனில்) நிச்சயமாக உனது றப்பு அதற்குக் கட்டளை யிட்டதனால்,

يَوْمَئِذٍ يَصْدُرُ النَّاسُ أَشْتَاتًا لِّيُرَوْا أَعْمَالَهُمْ ۝

யவ்மஇதின்ய் யஸ்துருன் னாஸு அஷ்தாதன்ல் லியுரவ் அஃமாலஹும்.

6. அந்நாளில் மனிதர்கள் - தங்களது கிரியைகளைக் காண்பிக்கப்படுவதற்காக-தனித்தனியே திரும்ப வருவார்கள்.

فَمَن يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ ۝

பமன்ய்யஃமல் மித்காலதர்ரத்தின்கைரன்ய்யரஹ்.

7. எனவே, எவரேனும் அணுப்பிரமாணம் நன்மையைச் செய்வாராயின் அதனைக்கண்டு கொள்வார்.

وَمَن يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ ۝

வமன்ய்யஃமல்மித் கால தர்ரத்தி ன்ஷர்ரன்ய் யரஹ்.

8. இன்னும், எவரேனும் அணுப்பிரமாணம் தீமையைச் செய்வாராயின் அதனை அவர் கண்டு கொள்வார்.

கியாமத்து நாள் உண்டாகுவதையும், பூமிக்குள் அடக்கப்பட்ட மனிதர்கள் முதலிய சகலமும் எழுப்பப்படுவதையும், பூமியின்மீது மனிதர்கள் செய்த சகல காரியங்களையும் குறித்து அது சாக்ஷி கூறுவதையும், அந்த நாளில் நல்லோர் தீயோர், கா ர், முஸ்லிம், முஷ்ரிக், முவஹ்ஹிதுஆகிய பலப்பலவிதமான னிதர்கள் தண்டு தண்டாகப்

பிரிந்து தங்கள் கிரியைகளுக்குரிய கேள்வி கணக்குகளை ஒப்புவிக்க வருவதையும் இவ்வத்தியாயம் குறிப்பிடுகிறது. அந்த நாளில் ஒரு அணுப்பிரமாணம் நன்மை செய்தாலும், அல்லது தீமையைச் செய்தாலும் அதனை அவர்கள் பார்த்துக்கொள்வதுடன் தக்கவாறு நன்மை தீமைப்பயனை அடைவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

கியாமத்து நாளில் ஒவ்வொருவரும் தங்கள் நன்மை தீமைக்குரிய பலாபலனைக் குறைவறப் பெற்றுக்கொள்வார்கள். தங்கள் கிரியைகளை எவரும் மறைத்துவிட முடியாது. ஆதலால், இவ்வுலகில் வாழும் ஜனங்கள் மறு உலக வாழ்வு விஷயத்தில் வேண்டிய கட்டுச் சாதங்களைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

—o—

மக்கிய்யா ❀ ஸூறத்துல் பய்யினு ❀ ஒன்பது ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் யாவருக்கும்) கிருபைசெய்பவனும் (ஆகிரத்தில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள் பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு)நாமத்தால் (இதனை ஆரம்பம்செய்கிறேன்.)

لَمْ يَكُنِ الَّذِينَ كَفَرُوا مِنْ أَهْلِ الْكِتٰبِ
وَالْمُشْرِكِينَ مُنفَكِّينَ حَتّٰى تَأْتِيَهُمُ الْبَيِّنَةُ ۝

லம்யகு நில்லதீன கபரு மின் அஹ்லில் கிதாபி வல்முஷ்ரிகீன முன்வ்பக்கீன ஹத்தா தஅதிய ஹுமுல் பய்யின.

1. வேதக்காரர்களும் இணை வைப்போர்களுமாகிய காபிர்கள் நீங்கியவர்களாக இருக்கவில்லை. அவர்களிடம் அத்தாட்சி வரும்வரை.

رَسُوْلٌ مِّنَ اللّٰهِ يَتْلُوْا صُحُفًا مُّطَهَّرَةً ۝

றசூலுன்ம்மினல்லாஹியத்லூ சுஹுபன்ம் முதஹ்ஹறதன்.

2. அல்லாஹ்வில் நின்றுமுள்ள தூதர், பரிசுத்தமான ஸுஹுபை ஓதியவராக.

فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ ۝

பீஹா குதுபுன் கய்யிமஹ்.

3. அதில் நேரிய எழுத்துகள் (கட்டளைகள்) இருக்கின்றன.

وَمَا تَفَرَّقَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ اِلَّا مِنْۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنَةُ ۝

வமாதபர்ர கல்லதீன ஊதுல் கிதாப இல்லாமின்ம் பஅதி மாஜாஅத்ஹுமுல்பய்யினஹ்.

4. இன்னும், வேதத்தை கொடுக்கப்பட்டவர்களே அவர்கள் தங்களிடம் அந்த அத்தாட்சி வந்த பின்னர் அல்லாமல் பிணங்கிக் கொள்ளவில்லை.

وَمَآ أُمِرُوٓا۟ إِلَّا لِيَعْبُدُوا۟ ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ

வமாஉமிரு இல்லா லியஅபுதுல்லாஹ முக்லிஸீன லஹுத்தீன.

5. இன்னும் அல்லாஹ்வை - அவனுக்கு சன்மார்க்கத்தை - அந்தரங்க சுத்தியாக்கி வைத்தவர்களாக அவர்கள் வணங்க வேண்டும் என்றல்லாமல் அவர்கள் ஏவப்படவில்லை.

حُنَفَآءَ وَيُقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُوا۟ ٱلزَّكَوٰةَ ۚ وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ ۝

ஹுனபாஅ வயுகீமுஸ்ஸலாத வயுஉதுஸ்ஸகாத வதால்லிக தீனுல்கையிமஹ்.

6. நேரானவர்களாக இன்னும் தொழுகையை நிலை நிறுத்த வேண்டும், இன்னும் ஜக்காத்தைக் கொடுக்க வேண்டும் (என்றல்லாமல் ஏவப்படவில்லை). இன்னும், அது நேரான மார்க்கம்.

إِنَّ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِنْ أَهْلِ ٱلْكِتَٰبِ وَٱلْمُشْرِكِينَ فِى نَارِ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ

இன்னல்லதீன கபரு மின் அஹ்லில் கிதாபி
வல்முஷ்ரிக்கீன பீனாரி ஜஹன்னம காலிதீன பீஹா

7. நிச்சயமாக வேதக்காரர்களும் இணைவைப்போர் களுமாகிய காபிர்கள் நரக நெருப்பில் அதில் நிரந்தரமானவர்க ளாக இருப்பார்கள்.

أُولَٰئِكَ هُمْ شَرُّ الْبَرِيَّةِ ۝

உலாயிக்க ஹும்ஷர்ருல் பரிய்யஹ்.

8. அவர்கள்தான் சிருஷ்டிகளில் தீயவர்கள்.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ
أُولَٰئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ ۝

இன்னல்லதீன ஆமனூ வ அமிலுஸ்ஸாலி ஹாத்தி
உலாயிக்க ஹும் கைருல் பரிய்யஹ்.

9. நிச்சயமாக விசுவாசங்கொண்டு, இணக்கமான வைகளைச் செய்தவர்களே அவர்கள்.அவர்கள்தான்-சிருஷ்டி களில் நல்லவர்கள்.

جَزَاؤُهُمْ عِندَ رَبِّهِمْ جَنَّاتُ عَدْنٍ تَجْرِي
مِن تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا

ஜதாஉஹும் இந்தரப்பிஹிம் ஜன்னாத்து அத்னின் தஜ்ரீ மின் தஹ்திஹல் அன்ஹாரு காலிதீன பீஹா அபதா.

10. அவர்களுடைய நற்கூலி அவர்களுடைய றப்பி னிடத்தில் அதன் என்னும் சுவர்க்கங்களாகும். அவைகளுக் குக்கீழில் அருவிகள் ஓடுகின்றன. அவைகளில் எந்நாளும் நிரந்தரமானவர்களாக (இருப்பார்கள்.)

رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ ذٰلِكَ لِمَنْ خَشِيَ رَبَّهٗ ۝

ரலியல்லாஹு அன்ஹும் வரலூ அன்ஹு தால்லிக லிமன் கஷிய ரப்பஹ்.

11. அவர்களை அல்லாஹ் பொருந்திக்கொள்வான். இன்னும், அவனை அவர்கள் பொருந்திக்கொள்வார்கள். இது தன்னுடைய றப்பை பயந்தவருக்குத்தான்.

காபிர்களும் முஷ்ரிக்குகளும் தங்களிடம் திருநபி (ஸல்) வந்து, திருகுர்ஆனை ஓதிக் காண்பித்து, அதன்படி நடக்கவேண்டுமெனக் கட்டளை வருவதற்கு முன் ஐக்கிய மாகவே இருந்தனர். திருநபி (ஸல்) அவர்களும் திருகுர் ஆனும் வந்த பின்னர் தான் அவர்கள் ஒருவருக் கொருவர் பிணங்கிக் கொண்டனர். சன்மார்க்கத்தை மெய் யென் றேற்றுக் கொண்டவர் ஒரு கக்ஷியும் அதனை ஏற்றுக் கொள்ளாதவர் வேறு கக்ஷியுமாகப் பிரிந்தனர். அல்லா ஹுத் தஆலாவை நிஷ்களங்கமான பக்தியுடன் வணங்க வேண்டும், தொழுகையை விடாமல் நிறைவேற்றவேண்டும், ஜக்காத் என்னும் மார்க்க வரியைக் கொடுக்கவேண்டும் என்றே ஏவப்பட்டனர். இவைதான் நேரான மார்க்கம். ஆகவே, இம்மார்க்கத்தை ஏற்று, நடக்காதவர்களான

வேதக் காரரிலுள்ள காபிர்களும் முஷ்ரிக்குகளும் நரகம் புகுவர். அவ்வேதனையை அனுபவிப்பர். அவர்கள் மனிதரில் பொல்லாதவர்கள்.

சன்மார்க்கத்தை ஏற்று தெய்வ விசுவாசங்கொண்டு, நற்கிரியைகளைச் செய்தவர்கள் மனிதரில் நல்லவர்கள். இவர்களுக்கு இறைவனிடமுள்ள நற் கூலி சுவர்க்கம்தான். இறைவன் இவர்கள் பாலும், இவர்கள் இறைவன் பாலும் திருப்தியுடன் இருப்பார்கள்.

மக்கியா அல்லது மதனியா

ஸூறத்துல் கத்ர்

ஐந்து அல்லது ஆறு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கருணை செய்பவனும், ஆகிறத்தில் தன் பக்தர்கட்கு மட்டிலும்) அருள் பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

إِنَّا أَنزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ ۝

இன்ன அன்தல் நாஹு பீ லைலதில் கத்ர்.

1. நிச்சயமாக நாம் அதனை மகத்துவமுடைய இரவில் அருளினோம்.

وَمَآ أَدْرَىٰكَ مَا لَيْلَةُ ٱلْقَدْرِ ۝

வமா அத்ராக்க மாலைலத்தில் கத்ர்.

2. இன்னும், மகத்துவமுடைய இரவு எதுவென்று உமக்கு அறிவித்தது எது ?

لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ ۝

லைலத்துல் கத்ரி கைருன்ம் மின் அல்பி. ஷஹர்.

3. மகத்துவமுடைய இரவு ஆயிரம் மாதத்தைப் பார்க்கினும் நல்லது.

تَنَزَّلُ ٱلْمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِم

தனஸ்ஸலுல் மலாயிக்கத்து வர்ரூஹு பீஹா பிஇத்னி ரப்பிஹிம்

4. மலக்குகளும், ஆன்மாவும் தங்கள் றப்பின் கட்டளைப்படி அதில் இறங்குவார்கள்.

مِن كُلِّ أَمْرٍ ۝

மின்குல்லி அம்ரின்.

5. சகல (விதமான) காரியத்தையுங்கொண்டு.

سَلَٰمٌ هِىَ حَتَّىٰ مَطْلَعِ ٱلْفَجْرِ ۝

ஸலாம். ஹியஹத்தா மத்லஇல் பஜ்ர்.

6. ஈடேற்றம் அது பஜ்று உதயமாகும் வரையில்.

திருகுர்ஆன் ஒரு இரவில் முதன் முதலாக இறைவன் அருளினான். அதனால் அவ்விரவு மகத்துவமுள்ளதாகி விட்டது. வருடந்தோறும் அவ்விரவில் மலக்குகள், ஜிப்ரயீல் (அலை) ஆகியவர்கள் இவ்வுலகுக்கு வந்து சன்மார்க்கர்களை தரிசித்து சலாம் சொல்கிறார்கள். அவ்விரவில் வணங்குவது ஆயிரம் மாத காலம் வணங்குவதைப் பார்க்கினும் சிறந்தது. இந்த இரவுதான் றமலான் மாதத்திலுள்ள லைலத்துல் கத்ர் என்னும் இரவு. திருகுர்ஆன் அந்த இரவில்தான் முதன் முதலாக லௌஹுல் மஹ்பூளிலிருந்து அருளப்பட்டது. அப்புறம் ரபீஉல் அவ்வல் மாதத்திலிருந்து நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொஞ்சங் கொஞ்சமாக சேர்ப்பிக்கப்பட்டது. எனவே, றமலான் மாதத்தில் லைலத்துல் கத்ரில் திருகுர்ஆன் அருளப்பட்டது என்பதற்கும், ரபீஉல் அவ்வல் மாதத்தில் திருநபி (ஸல்) அவர்களுக்கு நபி தத்துவம் கிடைத்தது என்பதற்கும் முரண்பாடு இல்லை.

மக்கிய்யா ❀ ஸுறத்து இக்ரஉ ❀ பத்தொன்பது ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(தன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும், ஆகிறத்தில் தன்பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

اِقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِيْ خَلَقَ ۝

இக்ரஉ பிஸ்மி ரப்பிகல்லதீ கலக்.

1. சிருஷ்டித்தானே அவனுகிய உமது றப்பின் (திரு) நாமத்தைக் கோண்டு ஓதுவீராக.

خَلَقَ الْاِنْسَانَ مِنْ عَلَقٍ ۝

கலகல இன்ஸான மின் அலக்.

2. மனிதனை உதிரக்கட்டியினுல் சிருஷ்டித்தான்.

اِقْرَأْ وَرَبُّكَ الْاَكْرَمُ ۝

இக்ர வரப்புகல் அக்ரமு.

3. ஓதுவீராக. இன்னும் உமது றப்புதான் மிகவும் சங்கையானவன்.

الَّذِيْ عَلَّمَ بِالْقَلَمِ ۝

அல்லதீ அல்லம பில்கலமி.

4. அவன் எழுதுகோலைக்கொண்டு கற்பித்தான்.

عَلَّمَ الْاِنْسَانَ مَا لَمْ يَعْلَمْ ۝

அல்லமல் இன்ஸான மாலம் யஅலம்.

5. மனிதனுக்கு அவன் அறியாதிருந்ததை கற்பித்தான்.

كَلَّآ إِنَّ الْإِنسَانَ لَيَطْغَىٰٓ ۝

கல்லா இன்னல் இன்ஸான லயத்கா.

6. திட்டமாக மனிதன் நிச்சயமாக மீறுகிறான்.

أَن رَّآهُ اسْتَغْنَىٰٓ ۝

அன்ரஆ ஹுஸ்தஃனா.

7. அவன் தன்னை சீமானாக பார்த்ததால்.

إِنَّ إِلَىٰ رَبِّكَ الرُّجْعَىٰٓ ۝

இன்ன இலா ரப்பி கர்ருஜ்ஆ.

8. நிச்சயமாக உமது றப்பின் பாலிலேயே மீளுகை இருக்கிறது.

أَرَءَيْتَ الَّذِى يَنْهَىٰ ۝

அரஐதல்லதீ யன்ஹா.

9. விலக்குகிறானேயன்றி அவனை நீர் பார்த்தீரா?

عَبْدًا إِذَا صَلَّىٰٓ ۝

அப்தன் இதா தல்லா.

10. அடியாரை அவர் தொழும்போழுது.

أَرَءَيْتَ إِن كَانَ عَلَى ٱلْهُدَىٰٓ ﴿١١﴾

அரஐத்த இன்கான அலல் ஹுதா.

11. கவனித்தீரா? அவர் நேர்வழியின் மீதிருக்கிறார்.

أَوْ أَمَرَ بِٱلتَّقْوَىٰٓ ﴿١٢﴾

ஔஅமர பித்தக்வா.

12. அல்லது டயபக்தினயக்கொண்டு அவன் ஏவுகிறான்.

أَرَءَيْتَ إِن كَذَّبَ وَتَوَلَّىٰٓ ﴿١٣﴾

அரஐத்த இன்கத்தப வதவல்லா.

13. கவனித்தீரா அவன் பொய்ப்பித்து புறக்கணிக்கிறான்.

أَلَمْ يَعْلَم بِأَنَّ ٱللَّهَ يَرَىٰ

அலம் யஅலம் பிஅன்னல்லாஹ யரா.

14. நிச்சயமாக அல்லாஹ் பார்க்கிறான் என்பதை அவன் அறியவில்லையா?

كَلَّا لَئِن لَّمْ يَنتَهِ لَنَسْفَعًۢا بِٱلنَّاصِيَةِ ﴿١٥﴾

கல்லா லயின்லம் யன்தஹி லனஸ்பஅம் பின்னுஹியத்தி.

15. அவ்வாறல்ல அவன் விலகிக்கொள்ள வில்லை ஆனால், நெற்றி ரோமத்தைக்கொண்டு திட்டமாக நாம் பிடித்திழுப்போம்.

نَاصِيَةٍ كَاذِبَةٍ خَاطِئَةٍ ۝

ஞலிப்பத்தின் காதிபத்தின் காத்திஅத்தின்.

16. பொய்புரைக்கிற குற்றம் புரிகிற நெற்றி ரோமத்தை.

فَلْيَدْعُ نَادِيَهُ ۝

பல்யத்உாதியஹு.

17. ஆகவே, தன்னுடைய சபையை அவன் கூப்பிடட்டும்.

سَنَدْعُ الزَّبَانِيَةَ ۝

ஸனத் உத்தபானியத.

18. ஜபானியாக்களை நாம் அழைப்போம்.

كَلَّا لَا تُطِعْهُ وَاسْجُدْ وَاقْتَرِبْ ۝

கல்லா லாதுதிஇஹு வஸ்ஜுத் வக்தரிப்.

19. அவ்வாறல்ல. அவனுக்குக் கீழ்ப்படியாதவர். இன்னும், (எனக்கு) ஸுஜூது செய்து, (என்னிடம்) நெருங்குவீராக.

மனிதனை அல்லாஹு தஆலா கேவலமான, அருவருக்கத் தகுந்த உதிரக் கட்டியினால் சிருஷ்டித்து அவனது அறிவை விருத்தி செய்துகொள்ள பேனுவையும் அவனுக்குக் கொடுத்துதவி இருக்கிறான். இவ்வனுக்கிரஹத்தை

சிந்தித்து பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்தாமல், தன்னைச் சீமானாகக் கருதிக்கொண்டு, இறைவன் கட்டளைக்கு மாறு செய்கிறான். அதுமட்டுமல்ல. இறைவனை வணங்கும் நல்லடியாரை, வணங்கவேண்டாமெனத் தடுத்து நிறுத்துகிறான். சன்மார்க்கத்தை போதிக்கவேண்டாமென தடுக்கிறான். இவை அத்தனையையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் இவ்வக்கிரமத்தைவிட்டு வைப்பான் என்று நினைக்கவேண்டாம். ஒரு தினத்தில் இதற்கு தக்க தண்டனை விதிப்பான். ஆகவே, சன்மார்க்கர்கள் இவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை. இறைவனுக்கு தொழுது வணங்கி அவனது திருப்தியை அடைவார்களாக.

மக்கிய்யா ❁ ஸூறத்து வத்தீன் ❁ எட்டு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும், ஆகிறத்தில் தன்பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.

وَالتِّيْنِ وَالزَّيْتُوْنِ ۝

வத்தீனி வஸ்ஸைதூனி.

1. அத்திப்பழத்தின்மீது பிரமாணமாக; ஒலிவ் பழத்தின் மீது பிரமாணமாக.

وَطُوْرِ سِيْنِيْنَ ۙ

வதூரீஸீனீன.

2. ஸீனுப் பர்வதத்தின்மீது பிரமாணமாக.

وَهٰذَا الْبَلَدِ الْاَمِيْنِ ۙ

வஹாதல் பலதில் அமீன்.

3. அபயமுள்ள இப்பட்டணத்தின்மீது பிரமாணமாக.

لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِيْٓ اَحْسَنِ تَقْوِيْمٍ ۙ

லகதுகலக்னல் இன்ஸான பீ அஹ்ஸனி தக்வீம்.

4. திட்டமாக மனிதனை மிக அழகான வடிவத்தில் சிருஷ்டித்திருக்கிறோம்.

ثُمَّ رَدَدْنٰهُ اَسْفَلَ سَافِلِيْنَ ۙ

தும்மரத்தனாஹு அஸ்பல ஸாபிலீன்.

4. பின்னர், அவனைக்கீழானவர்களிலும் கீழானவனாக மடச்கிறோம்.

اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَلَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ۙ

இல்லல்லதீன ஆமனூ வ அமிலுஸ்ஸாலி ஹாத்தி பலஹும் அஜ்றுன் கைருமம் னூன்.

6. விசுவாசங்கொண்டு, இணக்கமானவைகளைச் செய்தவர்களைத் தவிர எனவே, அவர்களுக்கு தரிபடாத நற்கூலியுண்டு.

فَمَا يُكَذِّبُكَ بَعْدُ بِالدِّيْنِ ۝

பமாயுகத்திபுக்க பஅது பித்தீன்.

7. ஆகவே, (இவ்விஷயங்களை உணர்ந்த) பின்னரும், நியாயத்தீர்ப்பைக்கொண்டு உம்மை போய்ப்பிக்கச் செய்வது எது?

اَلَيْسَ اللّٰهُ بِاَحْكَمِ الْحٰكِمِيْنَ ۝

அலை ஸல்லாஹு பிஅஹ்கமில்ஹாக்கிமீன்.

8. அல்லாஹ் நியாயாதிபதிகளில் மிகவும் நியாயாதிபதியாக இல்லையா?

மனிதன் மிக அழகான ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அவன் தன்னையுணர்ந்து, தன் கடமையை அறிந்து சன்மார்க்கனாக இருந்தால் தான் அவனது அழகான இந்த ரூபத்துக்கு அகத்திலும் அழகேற்படும். அவ்வாறில்லாவிடில் மிருகங்களிலும் கடையனாகிவிடுவான். விசுவாசங்கொண்டு நற்கிரியைகளைப் புரிந்தோருக்கு நிரந்தரமான நற் கூலியுண்டு. அல்லாஹுத் தஆலா நியாயாதிபதிகள் அத்தனை பேரிலும் மிகவும் நியாயம் வழங்கும் சர்வ நியாயாதிபதி.

மக்கிய்யா ஸ்ரிறத்து அலம் நஷ்ரஹ் எட்டு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும், (ஆகி ரத்தில் தன்பக்தர்கட்கு மட்டிலும்) அருள்பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

اَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ ۝

அலம்நஷ்ரஹ் லக்க ஸத்ரக்க.

1. உமது இருதயத்தை உமக்கு நாம் திறக்க வில்லையா?

وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ ۝

வவளஃஅனு அன்க விஸ்ரக.

2. இன்னும் உம்மைவிட்டு உமது பளுவை நாம் இறக்கவில்லையா?

الَّذِيْٓ اَنْقَضَ ظَهْرَكَ ۝

அல்லதீ அன்கள லஹ்ரக்க.

3. அது உமது முதுகுக் கனத்துக்கொண்டிருந்தது.

وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ۝

வரபஃனு லக்க திக்ரக்.

4. இன்னும் உமது கீர்த்தியை உமகு உயர்த்தினோம்.

فَإِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۝

பஇன்னமஅல் உஸ்ரி யுஸ்ரன்.

5. ஆகவே, நிச்சயமாக கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.

إِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ۝

இன்னமஅல் உஸ்ரியுஸ்ரா.

6. நிச்சயமாக கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.

فَإِذَا فَرَغْتَ فَانْصَبْ ۝

ப இதா பரஃத பன்ஸப்.

7. ஆகவே, (தொழுகையிலிருந்து) நீர் ஓய்வு பேற்றீ ராயின் நீர் முனைவீராக.

وَإِلَىٰ رَبِّكَ فَارْغَبْ ۝

வ யிலா ரப்பிக பர்கப்.

8. இன்னும் உமது றப்பின்பால் அவிழ்க்கைவைப்பீராக.

இதில் நபிள் பெருமானர் (ஸல்) அவர்களுக்கு இறைவன் அளித்த அனுக்கிரஹங்கள் கூறப்படுகின்றன.

நபிகள் பெருமானர் (ஸல்) அவர்களுக்கு "ஷக்கு ஸத்ர்" ஏற்பட்டது. அதாவது இருதயம் பிளக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது. இதனல் அவர்கள் குழந்தைகள் வாலிபர்கள் சேஷ்டைகள் தர்க்கிருத்தியங்கள் செய்வது போல இளமைப் பருவத்திலும் வாலிபப் பருவத்திலும் சேஷ்டைகள் செய்யாமல் பரோபகாரியாகவும், தபசியாக வும் குணசீலராகவும் ஒழுக்கமுள்ளவராகவு மிருந்தார்.

அப்புறம் நபித்துவ இரகசிய நுட்பங்களை ஏற்று அதன்படி செய்பவராயினர். அவர்களுக்கு இருந்த பொறுப்புகளை அவர் நிறைவேற்ற இறைவன் உதவி புரிந்தான். அவரது கீர்த்தி பெருகும்படி செய்தான். என்றாலும், அவருக்கு கஷ்டங்களும் வந்தன. இது பெரிதல்ல. கஷ்டம் வந்தால் அதனைத் தொடர்ந்து சுலபமும் வரும். அது வராமற் போகாது. ஆதலால், இறைவனை வணங்கி அவனது சமூகத்தை நண்ணுவீராக.

மக்கிய்யா ஸூறத்து வல்லுஹா பதினொரு ஆயத்துகள்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

(துன்யாவில் சகலருக்கும்) கிருபை செய்பவனும் (ஆகிரத்தில் பக்தர்சட்கு மட்டிலும்) அருள் பாலிப்பவனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

وَالضُّحٰى ۝

வல்லுஹா.

1. முற்பகலின்மீது பிரமாணமாக.

وَالَّيْلِ اِذَا سَجٰى ۝

வல்லைலி இதா ஸஜா.

2. இரவின்மீது-(இருள்) சூழ்ந்து கொண்டபோழுது-பிரமாணமாக.

مَاوَدَّعَكَ رَبُّكَ وَمَاقَلَىٰ ۝

மாவத்த அக ரப்புக வமா கலா.

3. உமது றப்பு உம்மை (கை)விட்டு விடவுமில்லை கோபித்துக் கொள்ளவுமில்லை.

وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُولٰىٰ ۝

வலல் ஆகிரத்து கைருல்லக்க மினல் ஊலா.

4. இன்னும் திட்டமாக பிந்தியது முந்தியதைப் பார்க்கினும் உமக்கு நல்லதாக இருக்கிறது.

وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضٰىٰ ۝

வல ஸௌப யுஉதீக்க ரப்புக்க பத்தர்ளா.

5. இன்னும், உமது றப்பு மேலேக்கு உமக்குக் கொடுப்பான். அப்போழுது நீர் திருப்தியடைவீர்.

اَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَاٰوٰى ۝

அலம் எஜித்க யத்தீமன் பஆவா.

6. உம்மை அனாதையாக அவன் அறிந்து, (உம்மை) அரவணைத்துக்கொள்ள வில்லையா?

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى ۝

வவஜதக ளால்லன் பஹதா.

7. இன்னும் (வழி) தவறியவராக உம்மை அவன் கண்டு, (உம்மை) நேர்வழியிற் சேர்க்க வில்லையா?

وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ۝

வவஜதக ஆயிலன் பஅஃனா.

8. இன்னும், உம்மை ஏழையாக அவன் கண்டு, சீமானாக்க வில்லையா?

فَأَمَّا الْيَتِيمَ فَلَا تَقْهَرْ ۝

பஅம்மல் எத்தீம பலாதக்ஹர்.

9. ஆகவே, அனுதையை நீர் சோபிக்க வேண்டாம்.

وَأَمَّا السَّائِلَ فَلَا تَنْهَرْ ۝

வஅம்மஸ்ஸாயில பலாத்தன்ஹர்.

10. இன்னும், (யாசகம்) கேட்போரை நீர் வேறுட்ட வேண்டாம்.

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ۝

வஅம்மாபினியிமத்தி ரப்பிக்க பஹத்திஸ்.

11. இன்னும், உமது றப்பின் அருட் கோடையை நீர் சோல்லிக் காட்டுவீராக.

இதில் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆறு தல் தேருதல் சொல்லப்படுகிறது.

நீர் அனுதையாக இருக்கவில்லையா? அக்காலத்தில் உம்மை போஷிக்கத்தக்க பொறுப்பு வாய்ந்தவரை ஏற்படுத் தவில்லையா? ஏழைபாக நீர் இருந்தீர். உம்மைப் பணக்கார ராக்கவில்லையா? சன்மார்க்கத்தை உணராதவராக இருந்தீர். உமக்கு அதனை உணர்த்தவில்லையா? இவ்வண்ணம் உம்மை ஆதரித்துவந்த உமது றப்பு உம்மைக்கைவிட மாட்டான். இனிமேலும் உமக்கு பல அனுக்கிரஹங்களை அளிப்பான். அதனை நீர் பொருந்திக் கொள்வீர். உமது பிற்காலம் உமது முற்காலத்தைப் பார்க்கினும் உமக்கு நல்லதாகவே இருக்கும்.

அனுபந்தம் முற்றிற்று.

7B
6-131

PRINTED AT
THE HAJEE MEERAN PRESS
TRIPLICANE. MADRAS.